தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

VOL : 11 1989 NO : 1

வெளியீடு 8-9-1989 Issued 8-9-1989

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
### OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 20, 1989–தொகுதி 11–எண் 1
Thursday, the 20th April, 1989–Volume 11–No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00 [Price Rs. 3.00

## உள்ளடக்கம்

**20-4-1989**

**பக்கங்கள்**


தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் — i–iii

Personnel of the Government of Tamil Nadu — iv–vi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் — iiiv–ix

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) — x–xix

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள் — 1–28

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—

அரியலூர் நிர்மலா காந்தி நடுநிலைப் பள்ளி வளாகத்தில் அப்பள்ளிப் பணிப்பெண் ஒருவர் கொலை செய்யப் பெற்று தூக்கிலிடப் பெற்றுள்ளதாகக் கூறப்படுவது குறித்து .. 28–31

3. அறிவிப்புகள்—

(அ) கேள்வி நேரம் முடிவுற்றவுடன் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள் .. .. 32

(ஆ) மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தே தல் .. 35

(இ) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல் .. 35

(ஈ) சென்னைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல் .. .. 35

(உ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்லைக்ககழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல் .. 35–36

(ஊ) சென்னை அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல் .. .. 36

(எ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல் .. .. 36

(ஏ) காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல் .. 37

(ஐ) கோவை பாரதியார் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல் .. 36

(ஒ) பொதுக் கணக்குக் குழு உறுரபினர்கள் .. 164–1[illegible]5

4. தகவல் கோரல்—

(அ) வறட்சி நிவாரணம் குறித்து அரசின் நடவடிக்கைகள் .. .. 32–33

(ஆ) தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று திருவாடானையில் நடைபெற்ற இலவச அரிசி வழங்கும் விழா ஏற்பாடுகள் குறித்து .. 33–34

பக்கங்கள்

5. கவன ஈர்ப்பு—

(அ) காமராசர் மாவட்டம் உருவாக்கப் பட்ட பிறகு அதற்கென மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தனியாக இயங்காதது .. .. .. 37–40

(ஆ) மீன் ஒப்பந்தக்காரர்களிடம் 'ஒயர்மேன்' வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான தேர்வு நடைபெறாதது .. .. .. 41–44

6. ஒழுங்குப் பிரச்சினை—

மானியக் கோரிக்கைகள் தொடர்பான கொள்கை விளக்கக் குறிப்புகள் முன் கூட்டியே உறுப்பினர்களுக்குக் கிடைக்காதது குறித்து. .. .. .. 44

7. மானியக் கோரிக்கைகள், 1989–90–விவாதமும்–வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 29 — தொழிலாளர் நலனும் தொழிற் சாலைகளும்.

(ஆ) கோரிக்கை எண் 44—எழுதுபொருள்–அச்சுத் துறை.

(இ) கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். 44–164
165–182

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம். | 44,45,80, 131–163 |
| மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி .. | 46, 166–180 |
| திரு. ஆர். அண்ணாநம்பி .. .. | 47–52 |
| திரு. ஆர் நடராசன் .. .. | 52–59 |
| திரு. பி. எச். பாண்டியன் .. .. | 79–64 |
| திரு. பொ. முருகேசன் .. .. | 64–68 |
| திரு. குமரி அனந்தன் .. .. | 68–86 |
| திரு. யூ . கே. வெள்ளிங்கிரி .. .. | 86–94 |
| திருமதி பி. லட்சுமி .. .. | 95–97 |
| திரு. ராம நாராயணன் .. .. | 97–101 |
| திரு. கே. ஏ. மணி .. .. | 101–104 |
| திரு. கொ. மாதப்பன் .. .. | 104–109 |
| திரு. சு. குருநாதன் .. .. | 110–115 |
| திரு. பா. அப்துல்சமத் .. .. | 115–118 |
| திரு. எஸ். ஆர். இராதா .. .. | 118–131 |

பக்கங்கள்

(ஈ) கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்.

(உ) கோரிக்கை எண். 25—சின்கோனா.

(ஊ) கோரிக்கை எண். 33—வீட்டு வசதி.

(எ) கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை.

(ஏ) கோரிக்கை எண். 56—காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. .. 181-275

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி .. | 181, 182, 183 184, 247, 274 |
| திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் .. | 185-197 |
| திரு. வி. கே. இராசு .. .. | 198-202 |
| திரு. ஆர். நடேசன் .. .. | 204-206 |
| திரு. ஆர். எட்டியப்பன் .. .. | 207-208 |
| திரு. பி. வி. இராஜேந்திரன் .. .. | 209-217 |
| திரு. வி. இராமசாமி .. .. | 219-221 |
| திரு. செ. இராமலிங்கம் .. .. | 221-225 |
| திரு. நா. இராமகிருஷ்ணன் .. .. | 227-229 |
| திரு. வே. பெரியசாமி .. .. | 231-232 |
| திரு. அ. லெ. சுப்பிரமணியன் .. .. | 232-233 |
| திரு. மா. சுந்தரதாஸ் .. | 183, 236, 240 |
| திரு. எம். அப்துல் லத்தீப் .. .. | 240-247 |

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 276-277

144362

D
V211,3 89
M89.11.1

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

## ஆளுநர்—டாக்டர் பி.சி. அலெக்சாண்டர்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1 முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :— பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மது விலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத் துறை.

2. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்ட மன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றிய சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைபற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப்.

4. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

| | |
|---|---|
| 5. போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள். |
| 6. அறநிலையத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அறநிலையத் துறை, வீட்டு வசதி, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள், மற்றும் சின்கோனா. |
| 7. வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கோ. சி. மணி : வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி. |
| 8. உணவு அமைச்சர்... | மாண்புமிகு ஆற்காடு நா. வீராசாமி : உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள். |
| 9. செய்தி—தொழிலாளர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. பொன்முத்துராமலிங்கம்: செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 10. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை. |



| | |
|---|---|
| 11. பொதுப்பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப்பணிகள். |
| 12. சமூக நலம்—ஊரகத் தொழிற்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: சமூகநலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமி தானம் மற்றும் கிராம தானம். |
| 13. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| 14. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், நகர அமைப்பு, குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல். |
| 15. மின்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. என். நேரு : மின்சாரம் மற்றும் பால். |
| 16. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம். |
| 17. கைத்தறித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. எஸ். தங்கவேலு : கைத்தறி, நெசவாலைகள், நகர்ப்புற மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு. |
| முதலமைச்சரின் பேரவைச் செயலர். | திரு. எல். கணேசன் |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

GOVERNOR OF TAMIL NADU—Dr. P. C. ALEXANDER

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Chief Minister .. .. **The Hon. Dr. M. KARUNANIDHI :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise.

2. Minister for Education .. **The Hon. Prof. K. ANBAZHAGAN :** Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology.

3. Minister for Law .. .. **The Hon. Thiru S. J. SADIQ PASHA:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money-lending and Legislation on Chits and Wakf.

4. Minister for Revenue .. **The Hon. Thiru NANJIL K. MANOHARAN :** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act.

5. Minister for Transport .. **The Hon. Thiru M. KANNAPPAN :** Transport , Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

5. Minister for Hindu Religious and Charitable Endowments. **The Hon. Thiru K. P. KANDASAMY:** Hindu Religious and Charitable Endowments, Housing, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona.



7. Minister for Agriculture .. **The Hon. Thiru KO. SI. MANI :** Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex level including the Federation and Food Production.

8. Minister for Food .. .. **The Hon. Thiru Arcot N. VEERASAMY :** Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics.

9. Minister for Information and Labour. **The Hon. Thiru Pon. MUTHURAMALINGAM :** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

10. Minister for Rural Development and Local Administration. **The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM :** Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

11. Minister for Public Works .. **The Hon. Thiru DURAIMURUGAN:** Public Works, Minor Irrigation including Special Minor Irrigation, Programme Works.

12. Minister for Social Welfare and Rural Industries. **The Hon. Thirumathi SUBBULAKSHMI JAGADISAN : Social Welfare including Children and Women's Welfare, Beggers, Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan.**

| | | |
|---|---|---|
| 13. Minister for Adi-Dravidar Welfare. | .. | The Hon. Dr. E. RAMAKRISHNAN: Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 14. Minister for Public Health | .. | The Hon. Dr. K. PONMUDI *alias* DEIVASIGAMANI: Public Health, Medicines, Town Planning, Water Board and Environmental Pollution Control. |
| 15. Minister for Electricity | .. | The Hon. Thiru K. N. NEHRU: Electricity and Milk. |
| 16. Minister for Animal Husbandry. | | The Hon. Dr. K. CHANDRASEKARAN: Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation. |
| 17. Minister for Handlooms | .. | The Hon. Thiru S. THANGAVELU: Handlooms, Textiles, Urban Development, Slum Clearance Board and Accommodation Control. |
| Parliamentary Secretary to Chief Minister. | | Thrru L. GANESAN |



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன்.

பேரவைத் துணைத் தலைவர்

திரு. பி. துரைசாமி.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மு. இராமநாதன்.

திரு. என். கணபதி.

திரு. பெ. சீனிவாசன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திரு. சி. கோவிந்தராஜன்.

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

(அகர வரிசைப்படி.)

| | |
|---|---|
| சீனிவாசன், திரு. சா., பி.எஸ்ஸி., .. | முதுநிலை குழு அலுவலர். |
| சாமிநாதன், திரு. பொ. க. .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல்., | துணைச் செயலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல்., | துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல்., | துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. கு.அ., பி.ஏ., .. | குழு அலுவலர். |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| கேசவராம், திரு. சு., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி., பி.எஸ்ஸி., | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ. சா., பி.ஏ., ... | சார்புச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |



| | |
|---|---|
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ., .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., | தலைமை நிருபர் (பேரவை). |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ., | தலைமை நிருபர் (குழுக்கள்). |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் அகர வரிசைப்படி.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| **'அ'** | | |
| 1 | அங்கமுத்து, திரு. கே. .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.) |
| 2 | அசேன், திரு. ஜெ. .. | இராணிப்பேட்டை |
| 3 | அண்ணாதுரை, திரு. கே. .. | பட்டுக்கோட்டை |
| 4 | அண்ணாதுரை, டாக்டர் கே. .. | வரகூர் (செ.வ.) |
| 5 | அண்ணாநம்பி, திரு. ஆர். .. | அவிநாசி (செ.வ.) |
| 6 | அண்ணாமலை, திரு. எம். .. | அரூர் (செ.வ.) |
| 7 | அதியமான், திரு. ஆ. .. | சேடப்பட்டி |
| 8 | அப்துல்சமத், திரு. பா. .. | வாணியம்பாடி |
| 9 | அப்துல் லத்தீப், திரு. எம். .. | சேப்பாக்கம் |
| 10 | அர்ஜுனன், திரு. கே. .. | தாரமங்கலம் |
| 11 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி |
| 12 | அழகுவேலு, திரு. ச. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13 | அறிவழகன், திரு. ஆ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 14 | அன்பழகன், பேராசிரியர் க... | அண்ணாநகர் |
| 15 | அன்பழகன், திரு. வ. .. | செய்யாறு |
| 16 | அன்பில் பொய்யாமொழி, திரு. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| **'ஆ'** | | |
| 17 | ஆசையன், திரு. பெ. .. | ஆண்டிப்பட்டி |
| 18 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம் |
| 19 | ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 20 | ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. .. | சேலம்-2 |
| **'இ'** | | |
| 21 | இரகுமான்கான், திரு. அ. .. | பூங்காநகர் |
| 22 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| **'இ'—தொடர்ச்சி.** | | |
| 23 | இராசமாணிக்கம், திரு க.வெ.வீ. | மேலூர். |
| 24 | இராசன், திரு. வி.பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 25 | இராசு, திரு. வி.கே. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 26 | இராசு, திரு. வெ. .. | குளத்தூர் (செ.வ.) |
| 27 | இராசேந்திரன், திரு. அ. .. | போளூர் |
| 28 | இராதா, திரு. எஸ். ஆர். .. | மதுரை கிழக்கு |
| 29 | இராதாகிருஷ்ணன், திரு. டி. .. | சோழவந்தான் |
| 30 | இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 31 | இராமகிருஷ்ணன், திரு. நா. .. | கம்பம் |
| 32 | இராமச்சந்திரன், திரு. எம். .. | திருவோணம் |
| 33 | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. | விளாத்திகுளம் |
| 34 | இராமச்சந்திரன், திரு. ந. .. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. ஏ.எம். .. | ஆத்தூர் |
| 36 | இராமசாமி, திரு. கே.வி. .. | கரூர் |
| 37 | இராமசாமி, திரு. வி. .. | திருச்செங்கோடு |
| 38 | இராமசாமி, திரு. கே. ஆர். .. | திருவாடானை |
| 39 | இராமநாதன், திரு. மு. .. | கோவை (மேற்கு) |
| 40 | இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜேந்திரன், திரு. கே. ஆர். | பர்கூர் |
| 42 | இராஜேந்திரன், திரு. பி.வி. | வேதாரண்யம் |
| 43 | இளம்வழுதி, திரு. .. | எழும்பூர் (செ.வ.) |
| **'ஈ'** | | |
| 44 | ஈஸ்வரன், திரு. ஆர். .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| **'உ'** | | |
| 45 | உகம்சந்த், திரு. எஸ். டி. .. | மதுராந்தகம் |
| 46 | உதயசூரியன், திரு. தா. .. | சின்னசேலம் |
| 47 | உபயதுல்லா, திரு. எஸ். என். எம். | தஞ்சாவூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'எ' | |
| 48 எட்டியப்பன், திரு. ஆர். .. | பெரணமல்லூர் |
| 'ஏ' | |
| 49 ஏகாம்பர ரெட்டி, திரு. எ. .. | பள்ளிபட்டு |
| 'க' | |
| 50 கண்ணப்பன், திரு. மு. .. | பல்லடம் |
| 51 கண்ணன், திரு. எஸ்.பி. .. | அணைக்கட்டு |
| 52 கணபதி, திரு. என். .. | குறிஞ்சிப்பாடி |
| 53 கணேசமூர்த்தி, திரு. என் .. | மயிலாப்பூர் |
| 54 கணேசமூர்த்தி, திரு. ஏ. .. | மொடக்குறிச்சி |
| 55 கணேசன், திரு. எல். .. | ஒரத்தநாடு |
| 56 கணேசன், திரு. க.சொ. .. | ஜெயங்கொண்டம் |
| 57 கணேசன், திரு. சா. .. | தியாகராயநகர் |
| 58 கணேசன், திரு. வே. .. | மங்களூர் (செ.வ.) |
| 59 கந்தசாமி, திரு. கே. .. | கிணத்துக்கடவு |
| 60 கந்தசாமி, திரு. கே.பி. .. | திருச்செந்தூர் |
| 61 கரீம், திரு. எம்.கே. .. | கூடலூர் |
| 62 கருணாநிதி, டாக்டர் மு. .. | துறைமுகம் |
| 63 கருப்பசாமி, திரு. எஸ்.எஸ். | சாத்தூர் |
| 64 கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபனாசம் |
| 65 கன்னையன், திரு. க. .. | தொட்டியம் |
| 66 கஜபதி, திரு. டி.ஆர். .. | ஆற்காடு |
| 67 காஞ்சனா, டாக்டர் க. .. | கிருஷ்ணகிரி |
| 68 காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர் |
| 69 காளியப்பன், திரு. பி. .. | ஒட்டன்சத்திரம் |
| 70 கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | சிதம்பரம் |
| 71 கிருஷ்ணன், திரு. சி. .. | ஓமலூர் |
| 72 குணசேகரன், திரு. எஸ். .. | தலைவாசல் (செ.வ.) |
| 73 குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம் |
| 74 குருநாதன், திரு. சு. .. | பாளையங்கோட்டை |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'க'—தொடர்ச்சி. | |
| 75 குருமூர்த்தி, திரு. ஜி.ஜி. .. | பவானி |
| 76 கோதண்டம், திரு. ஏ. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 77 கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம் |
| 78 கோவிந்தசாமி, திரு. சி. .. | திருப்பூர் |
| 79 கோவிந்தசாமி, திரு. வி.சி. .. | காவேரிப்பட்டினம் |
| 80 கோவிந்தராஜன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம் |
| 81 கோவிந்தன், திரு. வெ. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 'ச' | |
| 82 சண்முகம், திரு. சி. .. | ஆலந்தூர் |
| 83 சந்திரசேகர், திரு. வி.பி. .. | பொள்ளாச்சி |
| 84 சந்திரசேகரன், டாக்டர் க. .. | ஆலங்குடி |
| 85 சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர் |
| 86 சம்பத், திரு. ஏ.ஜி. .. | முகையூர் |
| 87 சற்குணம், திருமதி எஸ்.பி. .. | இராதாகிருஷ்ணன் நகர் |
| 88 சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன், டாக்டர் மு. | இளையான்குடி |
| 89 சாதிக்பாட்சா, திரு. எஸ்.ஜே. | உடுமலைப்பேட்டை |
| 90 சாந்தகுமாரி, டாக்டர் த. .. | தாராபுரம் (செ.வ.) |
| 91 சாமிநாதன், திரு. ஆர். .. | திருமங்கலம் |
| 92 சிங்காரம், திரு. ஆர். .. | பேராவூரணி |
| 93 சிவசுப்பிரமணியன், திரு. சா. | ஆண்டிமடம் |
| 94 சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. | பனைமரத்துப்பட்டி |
| 95 சிவலோகம், திரு. எஸ். .. | புவனகிரி |
| 96 சின்னசாமி, திரு. கே. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 97 சின்னசாமி, திரு. ரா. .. | தர்மபுரி |
| 98 சின்னசாமி, திரு. வி.கே. .. | பவானிசாகர் |
| 99 சிரங்கன், திரு. எம். .. | மேட்டூர் |
| 100 சீனிவாசன், திரு. பெ. .. | சிவகாசி |
| 101 சுந்தர், திரு. கே. .. | உத்திரமேரூர் |
| 102 சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு |
| 103 சுந்தரம், திரு. க. .. | பொன்னேரி (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| ச—தொடர்ச்சி. | |
| 104 சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம். |
| 105 சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர். |
| 106 சுந்தரராஜ், டாக்டர் எஸ். . | பரமக்குடி (செ.வ.). |
| 107 சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி. |
| 108 சுப்பிரமணியம், திரு. தூ.க. | சத்தியமங்கலம். |
| 109 சுப்பிரமணியன், திரு. அ.லெ. | திருநெல்வேலி. |
| 110 சுப்பிரமணியன், திரு. வே.நா. | பெருந்துறை. |
| 111 சுப்பு, திரு. ஏ. .. | ராசிபுரம். |
| 112 சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | ஈரோடு... |
| 113 சுப்பையா, திரு. வ. .. | திருமயம். |
| 114 செங்குட்டுவன், திரு. ஏ. .. | மயிலாடுதுறை. |
| 115 செங்கை சிவம் திரு. | பெரம்பூர் (செ.வ.). |
| 116 செங்கோட்டையன், திரு. கே.ஏ. | கோபிச்செட்டிபாளையம். |
| 117 சேட்டு, திரு. எம். .. | செங்கம் (செ.வ.). |
| 118 சொக்கர், திரு. ரா. .. | விருதுநகர். |
| 119 சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர் (செ.வ.). |
| ‘ ட ’ | |
| 120 டேனியல் ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம். |
| ‘ த ’ | |
| 121 தங்கபாண்டியன், திரு. வே. | அருப்புக்கோட்டை. |
| 122 தங்கம், திரு. அ. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 123 தங்கராஜன், திரு. எஸ். ஏ. .. | திண்டுக்கல். |
| 124 தங்கராஜு, திரு. ஏ. .. | காட்டுமன்னார் கோயில் (செ.வ.). |
| 125 தங்கவேல், திரு. எம். .. | முசிறி. |
| 126 தங்கவேல், திரு. என். .. | குன்னூர் (செ.வ.). |
| 127 தங்கவேலு, திரு. ச. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.). |
| 128 தம்புசாமி, திரு. வி. .. | திருவாரூர் (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| த—தொடர்ச்சி. | |
| 129 தமிழ்மணி, திரு. வீ. .. | செங்கல்பட்டு. |
| 130 தயாளன், திரு. ஏ. சி. .. | ஆரணி. |
| 131 தனபாலன், திரு. கே. ஆர். ஜி. | சேலம்-1. |
| 132 தனராஜ், திரு. வி. .. .. | வந்தவாசி (செ.வ.). |
| 133 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 134 திருமூர்த்தி, டாக்டர் து. | திருப்போரூர் (செ.வ.). |
| 135 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 136 துரை சந்திரசேகரன், திரு. | திருவையாறு. |
| 137 துரைசாமி, திரு. பீ. .. | நாமக்கல் (செ.வ.). |
| 138 துரைபாண்டி, திரு. பெ. .. | மானாமதுரை (செ.வ.). |
| 139 துரைமுருகன், திரு. .. | காட்பாடி. |
| 140 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 141 தென்னரசு, திரு. எஸ். எஸ். | திருப்பத்தூர். |
| 142 தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| ‘ ந ’ | |
| 143 நஞ்சப்பன், திரு. ந. .. | பெண்ணாகரம். |
| 144 நடராசன், திரு. ஆ. .. | பேரூர். |
| 145 நடராசன், திரு. பொ. .. | திருத்தணி. |
| 146 நடேச உடையார், திரு. எகால் மு. .. | ரிஷிவந்தியம். |
| 147 நடேசன், திரு. ஆர். .. | திருவட்டாறு. |
| 148 நந்தகோபால கிருட்டிணன், டாக்டர் கோ. | பண்ருட்டி. |
| 149 நாராயணன், திரு. ராம. .. | காரைக்குடி. |
| 150 நூர்முகமது, திரு. செ. .. | பத்மநாபபுரம். |
| 151 நேரு, திரு. கே. என். .. | லால்குடி. |
| ‘ ப ’ | |
| 152 பஞ்சாட்சரம், திரு. ஆர். | மேல்மலையனூர். |
| 153 பழனிச்சாமி, திரு. டி. கே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | ப—தொடர்ச்சி. | |
| 154 | பழனிச்சாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 155 | பழனிசுவாமி, திரு. க. .. | எடப்பாடி. |
| 156 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 157 | பன்னீர்செல்வம், திரு. மா. .. | சீர்காழி (செ.வ.). |
| 158 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 159 | பாப்பா உமாநாத், திருமதி | திருவரம்பூர். |
| 160 | பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 161 | பால்ராஜ், திரு. எஸ். .. | மதுரை (மத்திய). |
| 162 | பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | திருநாவலூர். |
| 163 | பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 164 | பாலையா, திரு. ஆ. .. | கொளச்சல். |
| 165 | பிச்சாண்டி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 166 | பிச்சைமுத்து, திரு. ரெ. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 167 | பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி. |
| 168 | புகழேந்தி, திரு. இ. .. | கடலூர். |
| 169 | பூவராகன், திரு. கோ. .. | விருத்தாசலம். |
| 170 | பெரியசாமி, திரு. என். .. | தூத்துக்குடி. |
| 171 | பெரியசாமி, திரு. ஐ. .. | ஆத்தூர். |
| 172 | பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.). |
| 173 | பெரியண்ணன், திரு. அ. .. | புதுக்கோட்டை. |
| 174 | பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 175 | பொன்முடி, திரு. டி. .. | தண்டராம்பட்டு. |
| 176 | பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க. | விழுப்புரம். |
| 177 | பொன். முத்துராமலிங்கம் | மதுரை (மேற்கு). |
| 178 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 179 | பொன்னுசாமி, பேராசிரியர், கே. | மருங்காபுரி. |
| 180 | பொன்னுபிள்ளை, திரு. ஜி. .. | தேனி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | "ம" | |
| 181 | மகேந்திரன், திரு. ஆர். .. | நாட்றாம்பள்ளி |
| 182 | மணி, திரு. ஆச்சியூர் எம். .. | நாங்குநேரி |
| 183 | மணி, திரு. கே. ஏ. .. | கபிலர்மலை |
| 184 | மணி, திரு. கோ. சி. .. | கும்பகோணம் |
| 185 | மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.) |
| 186 | மதிவாணன், திரு. இரா. .. | ராயபுரம் |
| 187 | மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 188 | மனோகரன், திரு. நாஞ்சில் கி. | திருவல்லிக்கேணி. |
| 189 | மனோகரன், திரு. ப. .. | சிவகங்கை |
| 190 | மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | திண்டிவனம் |
| 191 | மாசிலாமணி, திரு. தி. ரா. .. | பூந்தமல்லி. |
| 192 | மாதப்பன், திரு. கொ. .. | பாலக்கோடு |
| 193 | மாரப்பன், திரு. பி. .. | காங்கேயம் |
| 194 | மாரிமுத்து, திரு. அ. .. | வானூர் (செ.வ.) |
| 195 | முகமது சித்திக், திரு. எம். .. | பூம்புகார் |
| 196 | முத்துசாமி, திரு. ப. .. | வேடசந்தூர் |
| 197 | முத்தையன், திரு. எம். .. | சங்கராபுரம் |
| 198 | முத்தையா, திரு. எம். .. | ஒட்டப்பிடாரம் (செ.வ). |
| 199 | முருகேசன், திரு. பொ. .. | காஞ்சிபுரம் |
| 200 | முல்லைவேந்தன், திரு. வ. .. | மொரப்பூர் |
| 201 | முனிரத்தினம், திரு. ஆ. மு. .. | சோளிங்கர் |
| 202 | முனிரத்தினம், திரு. எஸ். ஆர். | திருவள்ளூர் |
| 203 | மூக்கன், திரு. ஆர். .. .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 204 | மூக்கையா, திரு. எல். .. | பெரியகுளம் |
| 205 | மோகன், திரு. இரா. .. | சிங்காநல்லூர் |
| 206 | மோசஸ், திரு. எம். .. | நாகர்கோவில் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| " ய " | |
| 207 யசோதா செல்லப்பா, திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| " ர " | |
| 208 ரமணி, திரு. கே. .. .. | கோவை (கிழக்கு). |
| 209 ரமணி நல்லதம்பி, திருமதி. .. | ராதாபுரம் |
| 210 ரவி அருணன், திரு. .. | அம்பாசமுத்திரம் |
| 211 ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஓசூர் |
| 212 ராமச்சந்திரன், திரு. கே. .. | மன்னார்குடி |
| 213 ராமச்சந்திரன், திரு. சி. .. | திருப்பரங்குன்றம் |
| 214 ராமசாமி, திரு. மொஞ்சனூர் ப. | அரவக்குறிச்சி. |
| 215 ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. | ஆலங்குளம் |
| 216 ராஜு, திரு. எச். எம். .. | உதகமண்டலம் |
| 217 ராஜேந்திரன் திரு., எம்.எஸ்.கே. | இராமநாதபுரம். |
| " ல " | |
| 218 லட்சுமி, திருமதி பி. .. | வால்பாறை (செ.வ.) |
| " வ " | |
| 219 வரதராசன், திரு. ஆர். .. | சங்கரி (செ.வ.) |
| 220 வரதராசன், திரு. உ. ரா. .. | வில்லிவாக்கம் |
| 221 வல்லரசு, திரு. பி. என். .. | உசிலம்பட்டி |
| 222 விஜயராகவன், திரு. பொன்... | கிள்ளியூர் |
| 223 விஜயேந்திரையா, திரு. டி. சி. | தளி |
| 224 வீராசாமி, திரு. ஆற்காடு நா. | புரசைவாக்கம் |
| 225 வீரையன், திரு. கோ. .. | நாகப்பட்டினம் |
| 226 வெங்கடாசலம், திரு. பெ. .. | வீரபாண்டி |
| 227 வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். | ஸ்ரீரங்கம் |
| 228 வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. .. | தொண்டாமுத்தூர் |
| 229 வேணு, திரு. கி. .. .. | கும்மிடிப்பூண்டி |
| 230 வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | தாம்பரம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| " ஸ " | |
| 231 ஸ்டாலின், திரு. மு. க. .. | ஆயிரம் விளக்கு |
| " ஜ " | |
| 232 ஜெயலலிதா, செல்வி ஜெ. | போடிநாயக்கனூர் |
| " ஹ " | |
| 233 ஹமீது இப்ராகிம், திரு. அ. மு. | கடலாடி |
| " ஸ்ரீ " | |
| 234 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். .. | சைதாப்பேட்டை |
| 235 ஆஸ்கார் சி. நிக்லி, திரு. .. | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்!

திரு. கு. அழகிரிசாமி,
தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989 ஏப்ரல் 20, வியாழக்கிழமை

சித்திரை 7, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு—2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல.''

அறநெறியில் வாழ்வதின் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை; புகழும் இல்லாதவை.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நரிமணம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு நிலம் கையகப் படுத்துதல்.

83—(*வினா எண். 87) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் நரிமணம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு நிலம் கையகப்படுத்தும் வேலை எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், பனங்குடி கிராமத்துக் கருகில் கச்சா பெட்ரோலியம் வடித்தெடுக்கும் ஆலைப்பிரிவு (Petroleum crude distillation unit) ஒன்று நிறுவிட சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உத்தேசித்துள்ளது. இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி பூர்வாங்க நிலையில் உள்ளது.

[1989 ஏப்ரல் 20

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அங்கு நிலம் கையகப்படுத்துகின்ற பணியை மேற்கொண்டு, நிலம் கையகப்படுத்தியதற்கு பின்னாலே இழப்பீடுகள் வழங்கப்படுவது அந்த நிலத்தின் சொந்தக்காரர்களுக்குத்தான். ஆனால் அந்த நிலத்தை உழுதுகொண்டிருந்த விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை. அதை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த நிலத்தை உழுது கொண்டிருந்த விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பிலாவது முன்னுரிமை வழங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மத்திய அரசினுடைய பொது நிறுவனங்களுடைய துறை எண் 15/13/84, நாள் 3–2–1986ல் வெளியிட்டுள்ள ஆணையின்படி நில உடைமையாளர்களுக்கு அந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்படுவதில் சற்று சுணக்கம் இந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ளது. எனினும், இந்த ஆணை, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கும் பொருந்தும். இந்தப் பிரச்சினை குறித்து தொழில் துறை செயலாளர், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரிடம் விவாதித்து வருகிறார்; விரைவிலே நல்ல முடிவு ஏற்படும்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு வேலைக்கு ஆள் எடுக்கும் நேரத்தில் தமிழகத்தில் இருக்கிற அனைத்து வேலை வாய்ப்பத் திட்ட நிறுவனங்களிலிருந்தும் அழைக்கிறார்கள். ஆனால், குறிப்பாக தஞ்சை மாவட்டம், தஞ்சை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களிலுள்ள எம்பிளாய்மென்ட் எக்சேன்ஜிலிருந்து அழைக்கும் போது மற்றவர்களையும் கூட அழைத்து விடுகிறார்கள். எனவே தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற பட்டதாரிகள், டிப்ளமா ஹோல்டர்ஸ், என்ஜினியர்கள் எல்லாம் வேலை கிடைக்காமல் இருக்கும் நிலையில், வெளி மாவட்டங்களிலிருந்து அழைக்கிறார்கள். எனவே தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற படித்தவர்களுக்கு, பட்டம் பெற்றவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, உறுப்பினர் தந்த கருத்து தகுதி அடிப்படையில் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த இடத்தில் எண்ணெய் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன? அந்த எண்ணெய் கிடைப்பதன் மூலமாக சுத்திகரிப்பு ஆலை அந்தப் பகுதியில் ஏற்படுமேயானால் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நரிமணம், நன்னிலம், கோவில்களப்பால் மற்றும் அதையொட்டி தென் ஆற்காடு மாவட்டத்தில் புவனகிரி, பரங்கிப் பேட்டை மற்றும் சில பகுதிகளிலே எண்ணெய் வளம் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றது.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நரிமணம், நன்னிலம் போன்ற இடங்களில் எண்ணெய் சுத்திகரிப்பாலை உருவாவதால் எடுக்கப்படும் பெட்ரோல், டீசல் ஆயிலிலிருந்து, அந்த நரிமணம் திட்டத்திற்கு கிடைக்கக்கூடிய லாபத்தில் மாநில அரசுக்கு ஏதேனும் பங்கு உண்டா? அப்படி பங்கு ஏதேனும் கொடுப்பதாகத் திட்டம் இல்லையென்றால், மத்திய அரசிடமிருந்து, மாநில அரசுக்கு சேர்ந்த நிதியை லாபத்தில் பங்கு கேட்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே இந்த கச்சா பெட்ரோலியம் எடுக்க டன் ஒன்றுக்கு ரூ. 192 வீதம் எண்ணெய் எரிவாயுக் குழு, ராயல்டி வழங்கி வருகிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்குக காவிரி நீர் இல்லாததால தொழில் வளர்ச்சியை மட்டுமே நம்பியிருக்கின்ற அந்தப் பகுதியில் நரிமணத்திலும், களப்பாலிலும் கிடைத்திருக்கின்ற எண்ணெய் எரிவாயு நனகு பயன்படுத்தப்பட வேண்டும். அதிலே வருகின்ற எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து கிடைக்கிற 'by-products'-லிருந்து பல்வேறு தொழில்கள் வர வேண்டுமென்று இந்திய அரசும், தமிழக அரசும் ஆர்வம் காட்டுகிற இந்த நேரத்தில், அங்கே வரவிருப்பது உண்மையிலேயே 'Refinery'தானா ? அல்லது Des lla ion என்று ஆங்கிலப் பத்திரிகையில்கூட நான் பார்த்தேன். Full fledged Refinery ஆக வருவதில்லை. இது ஒரு 'Distilla ion plant' என்று சொல்லியிருந்தார்கள். அதனால் எது அங்கே வர இருக்கிறது ? Whether it is Dis illation Plant or Refinery என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு முதல்வரவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே 'Ref nery' ஆக இருக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய எண்ணம். மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கேள்வியைத் துணையாகக் கொண்டு வேறு சில விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன். இந்த வாயுக்களைக் கொண்டு உறுப்பினரவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல, துணைத் தொழில்களாகப் பலவற்றை உருவாக்க முடியும். மின் உற்பத்தி, உர உற்பத்தி 'Poly propylene', 'Plastic' போன்ற பெட்ரோலிய இரசாயனப் பொருள் தயாரிக்கப்படும் C–2, C–3 பிரிவுகள் பெறப்படுகின்றன. இதர இரசாயனத் தொழிற்சாலைகளுக்குத்

[1989 ஏப்ரல் 20

தேவைப்படும் 'Methinol' என்ற இரசாயனப் பொருளும் இதன் மூலம் கிடைக்கிறது. சமையல் எரி வாயுவுக்குப் பயன்படும் L.P.G. என்ற திரவ நிலை பெட்ரோலிய வாயு தயாரிக்கப் பயன்படும், பெயின்ட் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் 'Acetylene' என்ற பொருளும் தயாரிக்கப் பயன்படும். எனவே, இந்த வாயுவைக் கொண்டு பெரிய தொழில்களை, துணைத் தொழில்களைப் பரவலாக உருவாக்குவதற்கு நம்மால் இயலும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, நரிமணத்தில் எடுக்கப்பட இருக்கின்ற எண்ணெயினுடைய தரம் எப்படி உள்ளது என்பதை அரசு அறிந்துள்ளதா? அதை அறிவிக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தின் தரம் எப்பொழுதும் நன்றாகவே இருக்கும். (சிரிப்பு).

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப தொழில்கள் என்ன உருவாக்க வாய்ப்பு உள்ளது? அதிலிருந்து மின்சாரம் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, உப தொழில்களாக, காது கேட்கும் கருவி தயாரிக்கப்படுகிறது. (சிரிப்பு).

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நரிமணம் பெட்ரோலிய உற்பத்தியில் அதனுடைய வருமானத்தில் மத்திய அரசிலிருந்து தமிழக அரசுக்கு எவ்வளவு ஊக்கத் தொகை, அதாவது ராயல்டி கிடைக்கும் என்பதைத் தமிழக முதல்வரவர்கள் தங்கள் மூலமாக அறிவிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, முதலிலேயே தெரிவித்தேன். டன் ஒன்றுக்கு 192 ரூபாய் ராயல்டி. 1990 ஆம் ஆண்டு வாக்கில் 1,500 டன் கிடைக்கக் கூடும் என்றும், அதன் மூலமாக எட்டு கோடி ரூபாய் ராயல்டி நமக்குக் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் அந்த இராயல்டி விவகாரத்தைச் சொன்னார்கள். ஆனால், நெய்வேலி நிலக்கரி சுரங்கத்திற்கு இதுவரை மத்திய அரசு ராயல்டி கொடுத்திருக்கிறதா? அல்லது அதைப் பற்றித் தமிழக அரசு வற்புறுத்துமா? (மணியடிக்கப்பெற்றது).



1989 ஏப்ரல் 20]

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நரிமணம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக மொத்தம் எவ்வளவு நிலம் தேவைப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்பொழுது உருவாக இருக்கின்ற இந்தத் தொழிற்சாலைக்காக 500 ஏக்கரா நிலம் தேவைப்படும் என்று அறியப்படுகிறது.

## தென்காசி பஸ் நிலைய விரிவாக்கப் பணியில் கால தாமதம்.

84—(*வினா எண் 209) திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி பஸ் நிலைய விரிவாக்கப் பணிகளில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை விரைவாகச் செயல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தற்போதுள்ள பேருந்து நிலையம் போதுமானதாக இல்லாததாலும், அதை விரிவுபடுத்த அருகில் உள்ள நிலத்தை கையகப்படுத்த இயலாததாலும், தென்காசி—மதுரை சாலையிலுள்ள வேறு ஒரு இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகராட்சி மன்றம் முடிவு செய்துள்ளது. இதற்கான நிலத்தைக் கையகப்படுத்த நகராட்சியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9—10)

## தென்னடார் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் வேலை.

85—(*வினா எண். 2106) திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரணியம் தொகுதி தென்னடார் கிராமத்தில் ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் வேலை முடிக்கப்படாததால் ஆதி திராவிட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

[1989 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): வேதாரணியம் தொகுதி, தென்னடார் கிராமத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டு வேலைகள் துரிதமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆதி திராவிட மக்கள் பாதிக்கப்பட்டதாக கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை, இருப்பினும் வீடுகள் கட்டி முடிப்பதில் காலதாமதம் ஏற்படுவதாக புகார்கள், திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர் அவர்களுக்கு கிடைக்கப் பட்டுள்ளன. இவ்வேலை தற்போது துறை மூலமாக செயற் படுத்தப்பட்டு, விரைவில் முடிக்கத்தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய பட்டா நிலங்களில்தான் அவர்களுக்கு குடியிருப்புகள் கட்டவேண்டுமென்பதால் அவரவர்கள் இருந்த குடிசைகளைப் பிரித்துவிட்டு அந்த இடத்தை வீடுகள் கட்டுவதற் காக ஒப்படைத்து இருக்கிறார்கள், குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடிக்கவேண்டுமென்று வரம்புகள் இருந்தும், அதை யெல்லாம் தாண்டி, குறைந்தது நான்கு மாதங்களுக்கு மேலாக இன்றைக்கு அவர்கள் வீடுகள் பிரிக்கப்பட்ட நிலையில், வேறு ஒரு மாற்று ஏற்பாடாக வெளியே சென்றிருக்கிறார்கள். அது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? இன்னும் எத்தனை தினங்களுக்குள் அந்த வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்? வருகிற மாரி காலத்திற் குள்ளாவது அவற்றைக் கட்டிக் கொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், (என்.ஆர்.இ.பி.) 30 வீடுகள் கட்ட எடுத்துக்கொள்ளப்பட்டது. இதிலே 10 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுவிட்டன. 10 வீடுகள் கூரை அளவிற்கும், மீதமுள்ள 10 வீடுகள் ஜன்னல் அளவிற்கும் வந்திருக்கின்றன. இந்தத் தாமதத் திற்குக் காரணம் இந்த வேலைகள் முதலில் தென்னடார் ஊராட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் வேலை களைத் தாமதப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், வீடுகளின் கூரைக்கு மிகவும் தரக்குறைவான பொருட்களை உபயோகப் படுத்தியதாக பயனாளிகளிடமிருந்து புகார் வந்ததால் அந்த ஊராட்சி தலைவருக்கு ஒப்படைக்கப்பட்ட வேலை ரத்து செய்யப் பட்டு, ஒரு மாதத்திற்கு முன்னால் தான் வேதாரணியம் வட்டார வளர்ச்சி அலுவலர் இந்த வேலைகளை துறை மூலமாக நிறை வேற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். இன்னும் 10 நாட்களில் இந்த வீடுகள் கட்டி முடிக்கப்படும்.



1989 ஏப்ரல் 20]

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டம் பெரும்பாலும் ஊராட்சி மன்றங்களில் ஒப்படைக்கப்படுவதன் மூலம், ஊராட்சி மன்றத் தலைவர் வேலை செய்யும்போது அங்கேயிருக்கிற பொறியாளர்கள் மெஷர்மெண்ட், செக் மெஷர்மெண்ட் செய்வதில் முறையாக நடந்து கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டது அரசுக்குத் தெரியுமா? இவையெல்லாம் படித்த பட்டதாரிகள், வேலையில்லாத என்ஜினியரிங் கிராஜு வேட்ஸ், டிப்ளமா ஹோல்டர்ஸ் ஆகியவர்களிடம் கொடுக்கப் படுமா? ஆர்.எல்.இ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.இ.பி. ஆகிய இரண்டு திட்டங்களிலும் சேர்த்து இந்த ஆண்டு எத்தனை வீடுகள் கட்டப்பட இருக்கின்றன? அதில் கான்கிரிட் வீடுகள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்பவர் ஒரு கேள்வி கேட்கலாம். தொடர்ந்து கேள்விகளைக் கேட்டால் அடுத்து கேள்வி கேட்கிற வாய்ப்பே இல்லாமல் ஆக்கிவிட வேண்டியிருக்கும்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பிய வினா அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் ஏழைகளுக்குப் பயன்படாத வகையில் கட்டியிருக் கிறார்கள். நல்ல கிராதிகள் இல்லை, நல்ல ஓடுகள் இல்லை. அதை இந்த அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் மத்திய சர்க்காரின் ஆலோசனை அடிப்படையில், 6,200 ரூபாய்க்கு கட்டடப் பணி களும், 1,200 ரூபாய்க்கு டாய்லெட் அதாவது கழிப்பிட வசதி களும், 3,000 ரூபாய்க்கு பாதை போன்ற மற்ற வசதிகளும் செய்து கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இதில் தரமில்லாத வீடுகள் தான் கடந்த காலத்தில் கட்டப்பட்டன என்பது இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நல்ல தரமுள்ள வீடுகளைக் கட்டு வதற்கு முடிவு எடுக்கப்பட்டு, அதுவும் தாரிசு வீடாக கட்ட வேண்டுமென்று இப்போது துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. பி. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகுப்பு வீடுகளினுடைய கட்டிடத்தின் தரம் மிகவும் மோசமாக இருக் கிறது. இந்தக் கட்டிடங்களினுடைய தன்மையை அறிய, கட்டிடங்

களினுடைய தன்மை நல்லமுறையில் இருக்க, பொதுப்பணித் துறையில் பணியாற்றுகின்ற பொறியாளர்களுடைய மேற்பார்வையில் இந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா? அதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கட்டிடப் பணிகளையெல்லாம், அரசாங்கக் கட்டிடங்களை எல்லாம், பொதுப்பணித்துறை கட்டி வருகிறது. அதிலே நீண்ட காலதாமதம் ஏற்படுகிறது என்ற குறைபாடு இருந்து வருகிறது. எனவே பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கின்ற உத்தேசம் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வீடு கட்டிக்கொடுக்கின்ற திட்டம் வருவதற்கு முன்னால், ஆதி திராவிடர்களுடைய நிலப்பட்டாவை வாங்கிக் கொண்டு கிராம வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அவர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டது. 3 ஆயிரம் ரூபாய் தான் கடன் உதவி வழங்கப்பட்டது. இந்த ? ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு, அவர்களால் வீடுகளைக் கட்ட முடியவில்லை. அந்த வீடுகள் பாதியிலே நின்று கொண்டு இருக்கின்றன. ஆகவே அந்தக் கடனை ரத்து செய்துவிட்டு அவர்களையும் இந்த இலவச வீடு கட்டுகின்ற திட்டத்திலே இணைத்து பாதியிலே நிற்கின்ற வீடுகளை முழுவதுமாகக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி கேட்கவும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே, Rural Labour Employment Guarantee Programme என்று சொல்லப்படுகின்ற திட்டத்தில் அரிசியும் கோதுமையும் சம்பளமாக வழங்கப்படுகின்றது. ஆனால் இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற அரிசியும் கோதுமையும் இடையிலே இருக்கின்ற இடைத்தரகர்கள் எடுத்துக்கொண்டு விடுவதால் அந்த மக்களுக்கு இந்தத் திட்டத்தினுடைய பலன் போய்ச் சேருவதில்லை. ஆகவே இந்த அரிசி மற்றும் கோதுமையை கூப்பன்கள் மூலமாகக் கொடுத்து, அதை நியாய விலைக்கடைகளில் மக்கள் பெற்றுக் கொள்வதற்கு வழி வகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகாரும் வந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டு, தவறு நடக்கக்கூடிய இடத்தை சுட்டிக்காட்டுவார்களானால், இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



டாக்டர் எஸ். சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, கிராமங்களில் ஆதி திராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கும் காலனி வீடுகளில் கழிப்பறைகள் கட்டப்படுகின்றன. அந்தக் கழிப்பறைகளை மக்கள் பயன்படுத்துகிறார்களா, பயன்படுத்தவில்லையா? அப்படி பயன்படுத்தவில்லை என்றால், அதற்கு மின்சார சப்ளை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஆர்.எல்.இ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.இ.பி. திட்டங்களின் கீழ் கட்டப்படுகின்ற இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வீடுகளுக்கு மின்சாரம் உடனடியாக வழங்கப்படவேண்டும் என்றும், அதற்கு முன்னுரிமை தரப்படவேண்டும் என்றும் இந்த அரசு தெரிவித்து இருக்கிறது. மேலும் அவர்கள் இங்கே சொன்னதைப் போல, இந்தத் தொகுப்பு வீடுகளில் தனியாக ஒவ்வொரு வீட்டுக்கும் கழிப்பிட வசதிகள் கட்டப்படுகின்றன. அதைப் பயன்படுத்துவோர் பயன்படுத்துகிறார்கள். சில பேர்கள் பயன்படுத்தாமல் வேறு உபயோகத்திற்கும் அதைப் பயன்படுத்துகிறார்கள். அதுவும் அரசின் கவனத்திலே இருந்துகொண்டிருக்கிறது.

திரு. தி. இரா. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்குக் கட்டிக் கொடுக்கின்ற தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில், 20 வீடுகள்தான் என்று அளவு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலேயும், அரிசன குடியிருப்புகள், 5 அல்லது 6 பகுதிகளாக இருக்கின்றன. ஆகவே என்னைப்போன்ற ஒன்றியப் பெருந்தலைவராக இருப்பவர்களுக்கு அந்த வீடுகளை எங்கே கட்டுவது என்ற பிரச்சினை அந்தக் கிராமத்திலே எழுகிறது. ஆகவே 20 வீடுகளுக்குப் பதிலாக 100 வீடுகள் என்ற அளவிலே கட்டிக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அதாவது 20 வீடுகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. 20-க்கு மேலே இருந்தாலும் கட்டலாம்.

திரு. வி. தம்புசாமி : தலைவர் அவர்களே, இதற்கு முன்பு வீடு கட்டிக்கொள்வதற்காக அரிசனங்களுக்கு கடன் வழங்கப்பட்டது. தொகுப்பு வீடுகள் என்ற பெயரால் அந்தக் கடன் இப்போது ரத்து செய்யப்பட்டு இருக்கிறது. அந்தக் கடனை மீண்டும் வழங்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரம் என்னிடம் தற்போது இல்லை.

[1989 ஏப்ரல் 20

(முற்பகல் 9-20)

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆதிதிராவிடர்களுக்கு என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. மூலமாகக் கட்டிக் கொடுக்கக் கூடிய வீடுகள் காண்ட்ராக்ட் முறையிலே விடுவதன் காரணமாக போலியான மரங்கள், ஓடுகள் போட்டு சீராகக் கட்டுப்படுவதில்லை. ஆகவே அந்தந்த இடங்களில் சம்பந்தப்பட்டவர்கள் யார் யார் குடியிருக்கிறார்களோ, யார் யாருக்கு வீடு சொந்தமாகிறதோ, அவர்களிடத்திலேயிருந்து, ஸ்டேஜ் பை ஸ்டேஜாக, வேலை நடக்க நடக்க, அங்குள்ள கிராம சேவக்குகள், பீ.டி.ஓ. மூலமாக, அதாவது ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக பணத்தை வழங்கி, அவர்களாகவே செய்யச் சொன்னால், மேற்கொண்டு கையிலிருந்து வேலையையும், உழைப்பையும் கொடுத்து, அதிகமான பணத்தை செலவழித்து நன்றாக வீடு கட்டுவார்களே, அதைச் செய்வதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்ற வீடுகள் ஊராட்சி மன்றங்களின் தலைவர்களிடம் தான் ஒப்படைக்கப்படவேண்டுமென்ற முறை இப்போது இருந்து வருகிறது. அவர்கள் இங்கு குறிப்பிட்டதைப் போன்று ரூ. 6,500 கட்டுமான பணிக்கும், ரூ. 1,200 கழிப்பிட வசதிக்கும், ரூ. 3,000 பாதை, டிச் போன்ற வசதிகளுக்கும் செலவிடப்படவேண்டுமென்று இருக்கின்ற காரணத்தினால் அந்தக் கட்டுமானப் பணிக்கு செங்கல் வாங்குகிறபோது பச்சைக் கல்லை வாங்கி வைத்து கட்டுகிறார்கள். மோசமான மரத்தைப் பயன் படுத்துகிறார்கள். அதனால் தான் இப்போது கட்டப்பட்டிருக் கின்ற வீடுகள் எல்லாம் கனமான மழையோ, காற்றோ அடித் தாலும்கூட விழக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. சில இடங் களில் அப்படியே விழுந்தும் இருக்கிறது. இதையெல்லாம் இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து, தாரிசு வீடுகளே கட்டித் தரப்படவேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ் மத்திய சர்க்கார் ஏற்கனவே மாநில சர்க்கார் கொடுக்கின்ற தொகையோடு கூடுதலாக ரூ. 4,000 சேர்த்தாவது தாரிசு வீடுகளாகக் கட்டித் தர வேண்டுமென்று கொள்கை அளவில் இப்போது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தரமான வீடுகளே இனி மேல் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் ஊராட்சி, டவுன் பஞ்சாயத்து இவைகள் எல்லாவற்றிலும் ஹரிஜனங்கள் குடியிருக்கிறார்கள். ஆனால் சட்டதிட்டம் எப்படியிருக்கிறது என்றால்; ஊராட்சிக்குத் தான், கிராமப் பஞ்சாயத்துக்குத்தான் இது செல்லுபடியாகின்றது. இதே ஹரிஜனங்கள் பக்கத்திலே டவுன் பஞ்சாயத்தில் இருந்தாலும் அவர்களுக்கு கிடைக்காத அளவில் சட்டதிட்டம் கட்டுப்படுத்து கிறது. அதைத் திருத்துவதற்கான வகையில், செயல்படக்கூடிய முறையில், ஏதாவது ஆலோசனை கொடுக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரியம் மூலம் அவர் களுக்குக் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்கெனவே வாய்ப்பு இருக் கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை கட்டிக்கொடுக்கப் படுகின்ற முறை இல்லை. மத்திய சர்க்காரும் அதற்கான அனுமதியை நமக்குத் தரவில்லை. ஆனால் இப்போது அப்படிப் பட்ட பேரூராட்சிகளிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்தத் திட்டத்தின்கீழ் வீடுகட்டிக் கொடுக்க அனுமதிக்கலாம் என்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. திட்டத்தின்கீழ் கட்டப்படுகின்ற வீடுகளின் மதிப்பீட்டுத் தொகை போதாத காரணத்தினால் மேற்கொண்டு தொகையைப் போட்டு கட்ட தமிழ்நாடு அரசு திட்டமிட்டு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதன்படி எவ்வளவு தொகையில், எந்த அளவிற்கு எஸ்டிமேட் போட்டு செய்தால் நன்றாக இருக்கும் என்று அரசு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அதற்காக பொறியாளரிடத்தில் பிளான் போட்டு, என்ன மதிப்பீட்டில் தாரிசு வீடுகள் கட்டலாம் என்று கேட்கப் பட்டு, அவர்கள் ரூ. 11,000, ரூ. 12,000 செலவில், ஏற்கனவே கழக ஆட்சி இருந்த காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர் களால் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்பட்டது போன்று இப்போதும் கட்டலாம் என்று ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அது அரசாங் கத்தினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. மூலமாக வீடுகள் கட்டித் தருவதிலே ஆதிதிராவிட மக்களுக்கு, ஆதிதிராவிட நலத் துறை மூலமாக வழங்கப்பட்டிருக்கின்ற பட்டாக்களுக்கு மட்டும் தான் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. நத்தம் புறம்போக்கு, சேரிப் புறம்போக்கு மற்றும் ஆதிதிராவிட மக்கள் தாங்களாகவே வாங்கி இருக்கின்ற அந்த இடங்களில் வீடுகள் கட்டித் தருவதில்லை என்ற ஒரு குறை இருக்கிறது. அதை அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அவர்களே நிலம் வாங்கியிருந்தாலும் அவர்களுக்கு சொந்த உரிமையான நிலமாக அது ஆகிறது. அதிலே கட்டு வதில் ஒரு ஆட்சேபனையும் இல்லை. ஆனால் ஊர் நத்தமாக இருக்குமேயானாலும் அல்லது அரசாங்க புறம்போக்கு நிலத்திலே குடியிருப்பவர்களானாலும் *உடனடியாக அவர்களுக்கு பட்டா கொடுத்தே வீடும் கட்டித் தரப்படுகிறது.

[1989 ஏப்ரல் 20

களத்தூர் ஏரிக்கு வரும் கால்வாயைச் சீரமைத்தல்.

69—(*வினா எண் 98) திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு பாலாற்றில் இருந்து களத்தூர் ஏரிக்கு வரும் கால்வாயை சீரமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, (அ) ஆம் (ஆ) திட்டம் தலைமைப் பொறியாளரின் (பாசனம்) ஆய்வில் உள்ளது. அறிக்கை பெறப்பட்டவுடன் பரிசீலிக்கப் பட்டு முடிவு எடுக்கப்படும்.

திரு வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஆய்வில் உள்ளது என்று அமைச்சர் அவர் அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஆண்டுகளாக அந்த ஏரிக்கு தண்ணீர் வருகிற கடந்த 25 சீரமைக்காத காரணத்தால் மூன்று போகம் கால்வாயை களத்தூர் பகுதி—சுமார் 2 ஆயிரம் ஏக்கர் விளையக்கூடிய போக சாகுபடிக்கு கூட வசதி இல்லாத நிலப்பரப்பு—ஒரு 25 ஆண்டுகளாக அந்தப் பகுதியிலே காரணத்தால் கடந்த இல்லாத் திண்டாட்டத்தில் இருக்கிற மக்கள் வேலை கள். அதைப் போக்குகின்ற அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார் ஊக்குவிக்கின்ற இந்த அரசு முறையில் பசுமைப் புரட்சிக்கு சீரமைக்க ஏற்பாடு செய்யுமா உடனடியாக அந்தக் கால்வாயை என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அந்தக் களத்தூர் ஏரிக்கு பாலாற்றிலிருந்து தண்ணீர் வருவதில்லை. அதைக் கொண்டு வரலாமா என்று தான் அரசு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. மீஞ்சல் மடு அணையிலிருந்துதான் அந்த ஏரிக்கு தண்ணீர் வருகிறது. 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பொழிந்த மழையில் அந்த அணை பாதிக்கப் பட்டது மட்டுமல்லாமல் அந்த எரிக்கு வருகிற வரத்துக் கால் வாயும் தூர்ந்து போய்விட்டது. எனவே ஏரிக்கு தண்ணீர் கிட்டுவது இல்லை. எனவே தான் ஏரிக்கு மீஞ்சல் மடு அணையிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் பொருட்டு அணையை சீரமைக்கவும் கால்வாயின் தலை மடுவை சீரமைக்கவும் அரசு உத்தேசித்து இருக்கிறது.



1989 ஏப்ரல் 20]

திரு வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசு ஏற்கெனவே இரண்டு முறை அந்த மீஞ்சல்மடுவில் அணை கட்டப்பட்டு அது உடைந்து போய் விட்டதாக அறிகிறேன். அதற்காக எவ்வளவு ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது? இப்போது எப்படி வெள்ளம் வந்தாலும் உடையாத அளவுக்கு ஒரு நிரந்தரமான தடுப்பு அணையைக் கட்டி அந்தக் கால்வாயை சீர் செய்து களத்தூர் ஏரிக்கு மட்டும் அல்லாமல் அந்தக் கால்வாயின் அருகாமையில் அமைந் திருக்கிற மேலும் 7 ஏரிகளுக்கும் அந்தக் கால்வாயினால் நீர் வரத்து ஏற்படுகிறது. எனவே இந்தத் திட்டத்தை உடனடி யாக செயல்படுத்தினால் சுமார் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேற் பட்ட நிலம் 3 போக சாகுபடிக்கு ஏற்றதாக அமையும். எனவே அந்தத் திட்டத்தை நிரந்தரமாக ஒரு தீர்வு காணுகிற அடிப்படையில் செயல்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மீஞ்சல் மடு அணையும் அதனுடைய வரத்துக் கால்வாயும் சீரமைக்கிற போது உறுப்பினர் அவர்களுடைய யோசனை கருத்தில் கொள்ளப்படும்.

திரு. வ. முல்லைவேந்தன் : தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறையின் மூலம் கால்வாய்களை வெட்டுவதற்கும் ஏரிகள் வெட்டுவதற்கும் அணைகள் கட்டுவதற்கும் விவசாயிகளுடைய நிலத்தை கையகப்படுத்துகிற நேரத்தில் நிலத்தை இழந்திருக்கிற அந்த விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பில் முன் உரிமை தரப் படுமா என்பதையும் இதற்கு முன்னால் அப்படி தரப்பட்டிருக் கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நல்ல யோசனை, அதை அரசு தன் கவனத்தில் கொள்ளும்.

(முற்பகல் 9.30)

திரு. எல். மூக்கையா ; தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் ஏரிகளுக்குச் செல்லுகின்ற கால்வாய்கள் சரிவர இல்லாததால் தான் மழைக் காலங்களில் அந்தக் கால்வாய் வழியாகத் தண்ணீர் சென்று ஏரி நிரம்பாமல் போய் விடுகின்ற காரணத்தினால் வறட்சி ஏற்படுகிறது. ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு எரிக்குச் செல்லுகின்ற கால்வாய்கள் அனைத்தையும் சீர்படுத்த வேண்டும் என்ற திட்டம் அரசிடம் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, அதைத்தான் நேற்றே நான் தெரிவித்தேன். அப்படி வரத்துக் கால்வாய்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்படும்.

[1989 ஏப்ரல் 20

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, பாலாற்றிலிருந்து பல ஏரிகளுக்கு இதே போன்று ஸ்பிரிங் சேனல் மூலமாக தண்ணீர் செல்லுகிறது. அவைகள் எல்லாம் காலப் போக்கிலே அழிந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஸ்பிரிங் சேனல்களை மீண்டும் புதுப்பிப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அது மட்டுமல்ல, பாலாற்றிலிருந்து மணல் அதிகமாக எடுப்பதன் காரணமாக இந்த நீர் ஊற்றானது பாதிக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதைத் தடை செய்கின்ற திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வரத்துக் கால்வாயை மராமத்து செய்யக் கூடாது என்ற விதி ஏற்கனவே இருக்கிறது. ஒவ்வொரு ஃபீடிங் சேனலும் மராமத்து செய்யப்படாத காரணத்தினாலே எந்த ஏரிக்கும் தண்ணீர் வரத்து தடைபட்டிருக்கிறது. ஆகவே, அனைத்து நீர்ப்பாசன குளங்களுக்கும் வரத்துக் கால்வாயை மராமத்து செய்கின்ற திட்டத்தை அரசு அமல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அது இந்த வறட்சி நிவாரணத்திலே எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : தலைவர் அவர்களே, திருவள்ளூர் தொகுதியில் உள்ளடங்கிய பூண்டி ஒன்றியத்தில் கடந்த கழக ஆட்சிக் காலத்தில்......(மணியடிக்கப்பெற்றது.)

புல்லூரில் நீர்த்தேக்கம்.

70—(*வினா எண் 499) திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, புல்லூரில் நீர்த் தேக்கம் கட்டும் திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி வட்டம் புல்லூர் கிராமத்திற்கருகே பாலாற்றின் குறுக்கே நீர்ப்பரப்பு நீர்த் தேக்கம்



1989 ஏப்ரல் 20]

அமைக்கும் திட்டம் அரசினால் பரிசீலனை செய்யப்பட்டு, இத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் பாலாற்றின் கரையிலே பல இடங்களில் செயல்பட்டு வரும் குடிநீர்த் திட்டங்கள் செயலற்றுப் போகும் என்ற காரணத்தினாலும். பொருளாதார அடிப்படையில் இத்திட்டம் ஏற்புடையதாக இல்லாத காரணத்தினாலும் கைவிடப்பட்டது. எனவே மேற்கண்ட கேள்விக்கு இடமில்லை.

(திரு. எம். அப்துல் லத்தீப் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்துல் லத்தீப் அவர்களே, புல்லூருக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புல்லூர் அணைக்கட்டுத் திட்டம் என்பது ஏறக்குறைய 30 ஆண்டுகளாக முறையாக ஆய்வு செய்யப்பட்டது. இது அந்தப் பகுதிக்கு மட்டும் அல்லாமல் வட ஆற்காடு மாவட்டத் திற்கே இன்றியமையாத ஒரு திட்டம் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு திட்டமாகும். ஆனால் ஆந்திரா வினுடைய ஒரு பகுதி இதிலே நீரில் மூழ்குகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அந்த ஆந்திர அரசாங்கத்தினுடைய முறையான ஒப்புதல் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் தள்ளிப் போட்டுக்கொண்டே வரப்பட்டது என்று சொல்லப் பட்டது. இப்பொழுது அமைச்சர் சொல்வதைப் பார்த்தால் வேறு விதமாக இருக்கிறது. அவர்கள் வேறு காரணங்களைச் சொல் கிறார்கள். எனவே, எல்லோரும் ஏற்றுக்கொண்ட இந்தத் திட்டத்தை, இதை அமல்படுத்துவதிலே அரசு முனைப்புக் காட்ட வேண்டும். அப்படி காட்டுமா என்று அறிய விரும்புகிறேன். அமைச்சர் சொன்ன காரணம் சரியான காரணம் இல்லை என்பதை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வினாவா? விவாதமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது வட ஆற்காடு மாவட்டத்திற்கு எல்லோரும் எதிர்பார்க்கின்ற ஒரு திட்டம் அல்ல. இரண்டாவது இந்தப் புல்லூர் அணைக் கட்டினால் பாசனத்திற்கும் வாய்ப்பு இல்லை. இதனுடைய முக்கிய நோக்கமே புல்லூர் அணைக்கட்டில் தண்ணீர் இல்லாத காலங்களில் பாலாற்றில் வருகின்றத் தண்ணீரைத் தேக்கி விடுவது; அவ்வளவு தான். ஆனால் அதனுடைய விளைவு என்ன ஆகும் என்று கேட்டால் புல்லூர் அணைக்கு கீழே கிட்டத்தட்ட பாலாற்று அணைக்கட்டு வரையில் இருக்கின்ற 30,000 பம்பு செட்டுகள் — அங்கே தண்ணீர் தேக்கப்படுவதால் இங்கே கிணற்றுக்கு நீர்வரத்து இல்லாமல் வறண்டு போய்விடும். எனவே விவசாயம் பாதிக்கப்படும். இரண்டாவது வழக்கமாக பாலாற்றிலே தண்ணீர் அங்கேயே அதனுடைய புல்லூரிலேயே தேக்கப்பட்டுவிட்டால் அதற்குக் கீழே இருக்கின்ற கிட்டத்தட்ட நம்முடைய காஞ்சிபுரம், செங்கற்பட்டு வரையில் இருக்கின்ற எல்லா ஊர்களும் குடிநீருக்கு பாலாற்றிலிருந்துதான் தண்ணீர் எடுக்கிறார்கள். எனவே, அந்தக் குடிநீருக்கே தண்ணீர் இல்லாமல் போய்விடும். மூன்றாவதாக, பொருளாதார

விதத்திலேயும் இந்தத் திட்டம் சரிப்பட்டு வராது என்று அரசு கணித்திருக்கிறது. இவற்றையெல்லாம் விட மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னதைப் போல, இந்த அணையைக் கட்டுகிறபோது 192 ஏக்கர் ஆந்திரப் பகுதியிலே இருக்கிறது, அந்த ஆந்திரப் பகுதியிலே நம்முடைய நிலத்தடி நீர் போய், அங்கே ஆராய்ச்சி செய்யவும் முடியவில்லை. அந்த அரசிற்கு இரண்டு, மூன்று தடவை எழுதிப் பார்த்தோம். ஆனால் அவர்கள் சொன்னார்கள், வேண்டுமானால் உங்களுடைய ஊருக்குள்ளே அணை கட்டிக் கொள்ளுங்கள் என்று. எங்கள் ஏரியாவிலே காட்ச்மெண்ட் ஏரியா இருக்கக்கூடாது என்று தெரிவித்து விட்டார்கள். அதையும் தள்ளி, ராமநாயக்கன் பாளையம் பக்கத்தில் நம் தமிழ்நாட்டு எல்லைக்குள் கட்டலாம் என்று பார்த்தால், அதனுடைய மதிப்பீடு மிக அதிகம். ஆனால் அதனாலே வருகிற பயன் மிகக் குறைவு. எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு தான் இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

சென்னை சாக்கடை வடிகால் அமைப்பைச் சீரமைக்கும் திட்டம்.

86—(*வினா எண். 346) திரு. பொன் விஜயராகவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் மிகப் பழமையான சாக்கடை வடிகால் அமைப்பை நவீன முறையில் சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. பொன். விஜயராகவன் :** தலைவர் அவர்களே, எந்த முறையில் சீரமைப்பதற்கான திட்டத்தை வகுத்திருக்கின்றார்கள் எப்போது அது நடைமுறைக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. பழைய கழிவுநீர் அகற்று நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டு, அவைகளின் திறன் அதிகப்படுத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி பாதாளச் சாக்கடை பராமரிப்பதில் நவீன முறைகள் கையாள வாரியம் ஈடுபட்டு வருகிறது. வெகுகாலமாகவே பாதாளச் சாக்கடை நுழைவழிகளில் தொழிலாளர்கள் இறங்கி சாக்கடைக் குழாய்களைச் சுத்தம் செய்து வருகிறார்கள். இதனை மாற்றி, இப்பணி சிறிது சிறிதாக இயந்திர மயமாக்கப்பட்டு வருகிறது. இப்பணிக்காக இராட்சத இயந்திரம் இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்டு, பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இருந்தாலும் பாதாளச் சாக்கடைகளில் படியும் வண்டலை நீக்கும் பொருட்டு கணிசமான அளவில் உள்நாட்டு இயந்திரங்களும் பயன்படுத்தப்



பட்டு வருகின்றன. கால்நடைக் கழிவுகளான சாணம், வைக்கோல் போன்றவைகள் அடைத்துக் கொள்ளாமல் இருக்கும் பொருட்டு அவைகளை நீக்குவதற்காகவும் இயந்திரங்கள் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் ஆற்றுக் கரையோரங்களில் தாழ்வான குடிசைப் பகுதிகளுக்குப் பாதாளச் சாக்கடை வசதிகளை மேம்படுத்த பெருமளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேளச்சேரி, அமைந்தகரை, கிண்டி, அரும்பாக்கம், மேல்பட்டாடை, திருவான்மியூர் ஆகிய பகுதிகளுக்கு இது போன்ற வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் பெரியார் நகர், கோட்டூர்புரம், பள்ளிப்பட்டு, வில்லிவாக்கம், அரும்பாக்கம் மேற்கு ஆகிய பகுதிகளில் சாக்கடைக் குழாய்களைப் பதிக்கும் பணியும் இப்போது நடைபெற்று வருகிறது.

**திரு. பொன். விஜயராகவன்:** தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினால் வருகின்ற கழிவுப் பொருட்கள் அனைத்தும் கூவம் நதியிலேயே கொண்டு விடப்படுகின்றன. கூவம் நதி என்று சொல்வது ஒரு பெரிய ஒப்பன் சாக்கடை. ஒரு திறந்த சாக்கடையாகவே இன்றைக்கு சென்னை நகரத்திற்கு, அதனுடைய சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதிக்கின்ற அளவில் இருக்கக்கூடிய காரணத்தால், இவைகள் எல்லாம் குழாய்களின் மூலமாக நதியிலே வந்து கொட்டுவதை விட அதை நேரடியாகவே கடலிலே கொண்டு வந்து கொட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா? கூவம் நதி அதன்மூலம் அசுத்தம் அடைந்து சென்னை நகரின் சுற்றுப்புறச் சூழலுக்கே ஒரு மிக மோசமான நிலை இருப்பதைக் கருத்திற்கொண்டு, அதை நேரடியாகக் குழாய்களின் மூலம் அந்த நதியில் விடுவதற்குப் பதிலாக கடலிலே கொண்டு சேர்ப்பதற்கானத் திட்டம் ஏதேனும் அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்கள் இந்த அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன. இங்கிலாந்திலிருந்து வந்த ஒரு குழுவினர், எக்ஸ்பெர்ட் கமிட்டி போன்றவர்களுடன் இதுகுறித்து ஆலோசனை நடத்தி, அவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளில் இந்த அரசாங்கம் இறங்கியிருக்கிறது. இவைகள் எல்லாம் விரைவில் நடைபெறும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கணபதி:** பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்தை வரவேற்கின்ற அதே நேரத்தில் இடைக்கால நிவாரணமாக, குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், கார்ப்பரேஷன் மூன்றும் ஒருங்கிணைந்து பணியாற்றாததால் பல இடங்களில் கழிவு நீர் அகற்றுவது பெரும் சிக்கலுக்கு ஆளாகி இருக்கிறது, சென்னை நகரில். இதைத் தவிர்க்க ஏதாவது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1989 ஏப்ரல் 2

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை கருத்தில் கொள்ளப் படும்.

திரு. . க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் குறிப்பாக என்னுடைய ஆயிரம் விளக்குத் தொகுதியில் பல்வேறு இடங்களில் சாக்கடை நீர் குடிநீரோடு கலந்து விடுகின்ற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கின்றது. அந்த நிலைமை அரசிற்குத் தெரியுமா? அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கின்றது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறிப்பிட்ட இடங்களில் நடைபெறுகின்ற குற்றங்களைப்பற்றி அரசிற்கு அவ்வப்போது விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருக் கின்றன. அவைகளை உடனடியாக இந்த நிர்வாகம் கவனித்து பணிகளைச் செய்து நிவாரணங்களை அளித்து இருக்கிறது. அதைப்போல குறிப்பிட்டப் பகுதிகளில் ஏதேனும் இருப்பதாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் உடனடி யாக அந்த இடத்திலேயே நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழிவுநீர் குழாய்களை சீர் அமைப்பதற் கானத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் இந்தக் கழிவு நீர் களை உடனடியாக உறிஞ்சி அவைகளைப் அப்புறப்படுத்துவதற் காக ஆங்காங்கு பம்ப்பிங் ஸ்டேஷன்கள் என்று கட்டப்பட்டிருக் கின்றன. அவைகளும் நீண்ட நாட்களுக்கு முன்னாலே கட்டப் பட்ட பம்ப்பிங் ஸ்டைஷன்களாகும். அவைகளை புதுப்பிக்கவும் அதே நேரத்திலே என்னுடைய தொகுதியில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொகுதியான துறைமுகத்தை ஒட்டி யிருக்கிற என்னுடைய பகுதியான வாஷர்மென்பேட் பகுதியில் இருக்கிற கிருஷ்ணா தியேட்டர் அருகில் ஆர்.எஸ். நெம்பர் 1796/170-ல் 6 கிரவுண்ட் நிலத்தை பம்ப்பிங் ஸ்டேஷன் கட்டுவதற்காக கலெக்டரேட்டிடமிருந்து பெறுவதற்கு மெட்ரோ விண்ணப்பித்து இருக்கிறது. அதை உடனடியாக பெற்று அந்த பம்ப்பிங் ஸ்டேஷனைக் கட்டினால் துறைமுகம் பகுதி மற்றும் பெரம்பூர் பகுதி கழிவு நீர்களை உடனடியாகப் அகற்றவும், கழிவுநீர் தேங்கி நிற்காமல்.... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தொடுப்பது வினாவா அல்லது வழங்குவது ஆலோசனையா?



1989 ஏப்ரல் 20]

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு தேங்கி நிற்காமல் இருப்பதற்கு, அரசினுடைய பரிசீலனையில் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறிப்பிட்ட ஆலோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுப்பார் என்று சொன்னால், அது துறைக்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் முழுமையாக மறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இப்போது இருக்கிற இந்தப் பாதாளச் சாக்கடைகளையெல்லாம் சீர்படுத்துவதோடு புதிய திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒரு திட்டம் அமைக்கப்படுமா? அதே நேரத்திலே, 200 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக, 'எக்ஸ்பர்ட் கமிட்டி' ஒன்று ஆலோசனையாக வழங்கி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது எப்போது நடைமுறைக்கு வரும் இப்போது சென்னை நகரத்திலே இருக்கின்ற பாதாளச் சாக்கடைகளெல்லாம் யானைப் பிடிக் கின்ற பள்ளங்களாக மாறி இருக்கின்றன. அதிலே இருக்கக் கூடிய அந்த இரும்பு மூடிகள் எல்லாம் பல இடங்களிலே திருட்டுப் போகின்றனவோ அல்லது எடுத்துச் சென்று விடுகிறார்களோ, தெரியவில்லை. ஒவ்வொரு தெருவிலும் இந்தப் பாதாளச் சாக்கடை இப்படி யானைப் பிடிக்கின்ற பள்ளங் களாக இருக்கின்றன. சிறு குழந்தைகள் அங்கே போனால் அதிலே விழுந்து விடுகிறார்கள். பல விபத்துக்கள் இதனால் ஏற்படுகின்றன. ஆகவே, இது குறித்து உடனடியாக ஆய்வு செய்து அப்பேற்பட்ட இடங்களிலே தடுப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கான பதிலை முன்பே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனித்தாரா என்று எனக்குத் தெரியவில்லை. இது போன்ற சந்துகளில் மக்கள் இறங்கி சீர் செய்வதற்குப் பதிலாக இயந்திரங்களின் மூலமாக அவைகளைச் சீர் செய்வதற்குச் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டி இருக்கிறேன்.

அவினாசி நகர மருத்துவமனையை விரிவுபடுத்துதல்:

*27.—(*வினா எண் 524) திரு. ஆர். அண்ணாநம்பி., மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1989 ஏப்ரல் 20

கோவை மாவட்டம், அவினாசி நகர மருத்துவமனையின் படுக்கை வசதியை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அது குறித்த நடவடிக்கை எதுவும் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆர். அண்ணாநம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி நகரம் என்பது ஒரு மிகப்பெரிய நகர மாகும். அதிலே மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. அங்கே தற்போது 15 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை தான் செயல்பட்டு வருகிறது. இதனால் மக்களுக்குப் போதுமான சிகிச்சை அளிக்க முடியவில்லை. பக்கத்திலே இருக்கிற, மிக குட்டி நகரங்களாக இருக்கிற சேவூர், தெக்கலூர் போன்றப் பகுதிகளிலேயிருந்தும் மக்கள் இங்குதான் சிகிச்சைக்கு வர வேண்டும். எனவே இந்த மருத்துவமனையை விரிவு படுத்துவதற் கானத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனி மேலாவது வகுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலையைக் கணக்கிலே கொண்டு இது போன்ற முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

**திரு. ஆர். அண்ணாநம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப் படும் என்று சொன்னார்கள். நிச்சயமாக அந்தப் பகுதியில் மிக விரைந்து அந்த நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தவேண்டு மென்று நீண்ட நாட்களாக கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எனவே அவிநாசி நகரத்தில் இயங்கி வருகின்ற அந்த மருத்துவமனையிலுள்ள 15 படுக்கைகளை 30 படுக்கைகளாக மாற்றி அங்கே ஒரு அறுவை சிகிச்சைப் பகுதியையும் இணைத்து செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாகத் தேங்கிக் கிடக்கின்ற கோரிக்கைகளெல்லாம்.... (மணியடிக்கப் பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உங்களை விடை சொல்லச் சொல்லவில்லை; கேட்டுக்கொண்டார், அவ்வளவுதான்.



1989 ஏப்ரல் 20]

**திரு. கே. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தாலுக்காவின் தலைமை மருத்துமனையாக அந்த அவி நாசி மருத்துவமனை உள்ளது. இதற்குத் தேவையான ஏற்பாடு களும் படுக்கை வசதிகளும் இல்லையென்பதுபற்றித்தான் மாண்பு மிகு உறுப்பினர் அண்ணாநம்பி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு மேல் இப்போது அங்கு புதிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று எதிர்ப் பார்க்கிறேன். அவிநாசி தாலுக்கா ஒரு பிற்படுத்தப்பட்டப் பிரதேசம் என்று அரசால் 'டிக்ளேர்டு, பண்ணப்பட்டி அங்கே பல தொழிற்சாலைகள் உருவாகி இருக்கின்றன. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் அமைச்சர் அவர்கள் விசேஷக் கவனம் செலுத்தி இதுவரைக்கும் போதிய கவனம் செலுத்தாவிட்டாலும் இப்போ தாவது விசேஷக் கவனம் செலுத்தி தாலுக்கா மருத்துவமனையை தலைமை மருத்துவமனையாக ஆக்கி, ஜெனரேட்டர், அறுவை சிகிச்சைக்கூடங்களிலிருந்து, அதிகப்படியான படுக்கை வசதி யிலிருந்து, டாக்டர்கள் மற்றும் சகல வசதிகளையும் செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா அதற்கான ஆலோசனைகளை உடனே துவக்குவார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதற்கானச் செயற் குறிப்புகளைக் குறித்து, கோயம்புத்தூர் மாவட்ட சுகாதார அலுவலரை அரசு கேட்டிருக்கிறது. அதுகுறித்து அவரிடமிருந்து அறிக்கைகள் வரப்பெற்றவுடன் இதுகுறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி பகுதியில் ஏற்படுகின்ற கடுமையான விபத்து களினால் பாதிக்கப்படக் கூடியவர்களை அருகிலே இருக்கக்கூடிய திருப்பூரிலே உள்ள மாவட்ட அரசு மருத்துவமனைக்குத்தான் கொண்டு வருகிறார்கள். குறிப்பாக, பொங்கலூர், பல்லடம், திருப்பூர் இதுபோன்ற பகுதிகளிலே ஏற்படுகின்ற விபத்துக்களில் பாதிக்கப்படக்கூடியவர்களை மாவட்ட மருத்துவமனை இருக்கிற திருப்பூருக்கு எடுத்து வந்தால் அங்கே கவனிப்பதற்காகப் போதுமான கருவிகளும் வேண்டிய வசதிகளும் இல்லாத காரணத் தினாலே அவர்களை மீண்டும் அங்கேயிருந்து கோவைக்கு எடுத்துச் செல்கின்ற நிலைமை இருக்கிறது. இதனால் பல உயிர் கள் வழியிலேயே போகிற நிலைமை இருக்கிற காரணத்தினாலே அந்த மாவட்ட மருத்துவமனையில் முறையானக் கருவிகளைக் கொண்டு, முறையான வைத்தியத்தைச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' கேள்வி அவிநாசியைப் பற்றியது. திருப்பூருக்கு இப்போது தாவ வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 20

அந்தியூர் அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம்.

88—(*வினா எண். 991) திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அந்தியூர் அரசு மருத்துவமனைக்குப் புதியக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு தொகுதி என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவார்கள். அந்தப்பகுதியிலே நீண்ட நெடுநாட்களாக ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட அந்த மருத்துவமனை இப்போது ஒரு பாழடைந்த ஒரு இடமாகக் காட்சி அளிப்பதை அங்கே வந்த கடந்தகால அமைச்சர்கள் எல்லாம் அறிவார்கள். அதே மருத்துவமனை சம்பந்தமாக ஏறத்தாழ 100 விண்ணப்பங்கள் வரை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்டத் துறைக்கும் இதுவரை அனுப்பியிருக்கிறோம். ஆகவே, அருள்கூர்ந்து இந்த மருத்துவமனைக்கு ஒரு கட்டிடத்தை ஏற்படுத்தித் தருவதுடன், அந்தப் பகுதி ஒரு மலைப் பிரதேசமாக இருக்கிற காரணத்தினாலே, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழுகின்ற காரணத்தினாலே ..... (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைச் சுருக்கமாக கேட்க வேண்டும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய நலன் கருதி, சுகாதாரத் துறையின் மூலமாக நல்ல பல காரியங்களை அந்த மருத்துவமனைக்கு செய்து உடனடியாகக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கவும் மற்றும் சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்கவும் இந்த அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாகச் செய்யப்படாதவைகளெல்லாம் இந்த அரசு செய்யவேண்டுமென்று செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. 89–90-ஆம் ஆண்டிற்கான



1989 ஏப்ரல் 20]

செயல்திட்டத்திலேயே இது கொண்டு வரப்பட்டது. நிதி நிலையின் காரணமாக இது இந்த ஆண்டு தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது. இவருடைய கருத்துக்களை அடுத்த நிதிநிலை அறிக்கையின்போது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அரசாங்க மருத்துவமனைகளில், குறிப்பாக மலைவாழ் மக்கள் வாழ்கின்ற மலை சூழ்ந்திருக்கின்ற மருத்துவமனைகளைச் சுற்றி காம்பௌண்ட் சுவர்கள் இல்லாமல் இருக்கின்றன. அதைக் கட்டுவதற்கு இந்தச் சர்க்கார் முனையுமா (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே கேள்வி இதே அவையில் ஏற்கெனவே கேட்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-50)

கோவில்பட்டி மின் கோட்டத்தில் மின் இணைப்பு வழங்குவற்குத் தடை.

89—(*வினா எண். 2060) திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி மின் கோட்டத்தைச் சேர்ந்த கிராமங்களுக்கும், பம்பு செட்டுகளுக்கும், வீடுகளுக்கும் புதிதாக மின் இணைப்பு கொடுக்கக்கூடாது என தடை விதிக்கபட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தடையை நீக்கி மின் இணைப்பு, தகுதியுள்ளவர்களுக்குக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கோவில்பட்டி மின் கோட்டத்தின் பல பிரிவுகளில் உள்ள கிராமங்களில் விவசாய மின்நுகர்வோர் தங்களுடைய மின் கட்டண நிலுவையை 1977ல் ஏற்பட்ட கிளர்ச்சி காலத்திலிருந்தே செலுத்தாமல் இருந்து வருகிறார்க்ள். எனவே, புது மின் இணைப்பு கொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் நிலுவை வசூலில் கணிசமான முறையில் முன்னேற்றம் ஏற்படும் பிரிவுகளில் புதிய மின் இணைப்பினைக் கொடுப்பது உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டுக் கொடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, 1977-ஆம் ஆண்டு முதல் பல்வேறு காரணங்களால் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றவர்களும் பம்புசெட் விவசாயிகளும் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டார்கள். பின்னால் அவர்கள் 1 பிளஸ் 1 என்ற அடிப்படையில் கட்டியிருக்கிறார்கள். சில விவசாயிகள் கட்டாமல் இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் கிணற்றிலே தண்ணீர் இல்லாமல் மோட்டார், பம்புசெட்டுகளை விற்றுவிட்டு ஊரைவிட்டே சென்றுவிட்டார்கள். இன்னும் சிலர் கட்டுவதற்கு சக்தி இல்லாமல் இருக்கிறார்கள், வேண்டுமென்றே கட்டாமல் இருக்கவில்லை. இன்னொரு முக்கியமான காரணம், 100 ரூபாய் பாக்கி என்றால் 1000 ரூபாய் பாக்கியிருக்கிறது. உடனடியாகக் கட்டவேண்டுமென்று நோட்டீஸ் அனுப்புகிறார்கள். அதனாலும் பாக்கி இருக்கிறது. ஒரு சில இடங்களில் இப்படி பாக்கி இருக்கிறது என்பதற்காக தகுதி உள்ளவர்களுக்கும் மின் இணைப்பு வழங்காமல் இருப்பது நியாயமல்ல. தகுதி இருந்து, மனு செய்து, பணமும் கட்டியிருந்தால் அவர்களுக்கு மின் இணைப்பு உடனடியாக வழங்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் கட்ட சக்தி இல்லாமல் இருப்பவர்களுக்கு அந்தப் பாக்கியைத் தள்ளுபடி செய்து அவர்களுக்கும் மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா? அதைப்போன்று புதிய பம்புசெட்டுகளுக்கும் புதிய வீடுகளுக்கும் மின் இணைப்பு கேட்டால் அவர்களுக்கும் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று நான் அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவரவர்களே, 1979-ஆம் ஆண்டு கட்டாத விவசாயிகளுக்கு ஒரு சலுகையாக 1 பிளஸ் 1 கட்டினால் வட்டி முழுவதும் தள்ளுபடி என்று அறிவிக்கப்பட்டது. அதையொட்டி கட்டாதிருந்த விவசாயிகள் பலர் கட்டியிருக்கிறார்கள். அதைப்போல 31-3-1979 வரை ஆரம்பத்திலிருந்தே இதுவரையில் கட்டாமல் இருக்கிற விவசாயிகள் 7530 பேர்கள். அவர்களுடமிருந்து வசூலாக வேண்டிய தொகை சுமார் 71 இலட்சம் ரூபாய். அதற்கு வட்டியாக வர வேண்டிய தொகை சுமார் 1 கோடி ரூபாய். மின்சார வாரியத்திற்கு இந்தப் பாக்கி இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து, இதையும் தள்ளுபடி செய்வதற்குப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. புதிதாக அந்தப் பகுதியிலே மின்இணைப்பு வழங்கினால் ஏற்கெனவே கட்டாமல் இருக்கிறார்கள் புதிதாக இணைப்பு பெற்றவர்களையும் கட்டாமல் இருக்க நிர்ப்பந்திப்பார்கள் என்பதால் மின் இணைப்பு வழங்கப்படவில்லை. இது பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற மாதிரி புதிதாக மின் இணைப்புப் பெற்றால் அவர்களும் தரமாட்டேன் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இல்லை; தொடர்ந்து கட்டுகிறார்கள். 1 பிளஸ் 1



என்ற அடிப்படையில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். கட்ட முடியாத, சக்தி இல்லாத சிலர் பாக்கி வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் இங்கே ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். அகாவில்பட்டியிலே திரு. ரங்கநாதன் என்பவருடைய தகப்பனார் 30 ஆண்டுக்கு முன்னால் மின் கட்டணம் கட்டாமல் பாக்கி வைத்திருக்கிறார் என்று சொல்லி அவருக்கு நேற்று வரையில் 'சர்வீஸ்' கொடுக்கவில்லை. அவர் பணம் கட்டியதற்கு எல்லாம் ரசீது இருக்கிறது. ஆனால் அவருடைய மகனுக்கு 862 ரூபாய் பாக்கி இருக்கிறது; 3 அல்லது 4 தினங்களுக்குள் கட்டவில்லை என்றால் மின்சாரம் துண்டிக்கப்படும் என்று நோட்டீஸ் வந்திருக்கிறது. இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களினாலும் பாக்கி இருக்கிறது. விவசாயிகள் கட்டமாட்டோம் என்று எப்போதும் சொல்லவில்லை. தங்களுடைய சக்தியை மீறி, கட்டமுடியாத நிலைமை இருப்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து பேசி, அந்தப் பாக்கியை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவரவர்களே, இதைப் போன்ற தவறுகளைச் சுட்டிக் காட்டினால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, சரி செய்யப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் பேசி பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு டி. சி. விஜயேந்திரையா: தலைவரவர்களே, சிறு விவசாயிகளுக்கு இதற்கு முன்பு கரண்டு விஷயத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் இப்போது அந்த விவசாயிகளை மீண்டும் பணம் கட்ட வேண்டுமென்று சொல்லி, வசூல் செய்ய கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அவர்களுக்கு என்ன பரிகாரம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என் நேரு: தலைவரவர்களே, இதைப் போன்ற நிகழ்ச்சி அரசின் கவனத்திற்கு வரவில்லை; வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க இத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று ஏதாவது வரையறை இருக்கிறதா? 1984 ஆம் ஆண்டு மனு செய்து, கிணற்றுப் பாசனத்தை மட்டும் நம்பி இருக்கிறவர்களுக்கு இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை. குறிப்பாக, என்னுடைய தொகுதியில் வாரியூர் என்ற கிராமத்தில் இன்னும் கொடுக்கவில்லை. ஆகவே, பம்புசெட்டுகளுக்கு மின்சார இணைப்பு கேட்டால், இத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமென்று தகுதி வைத்திருக்கிறதா? அப்படி இல்லை என்றால் அந்த மின்சார இணைப்பை வழங்குவார்களா?

[1989 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் திருச்சி மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் வரும்போது அங்கே கூட இதைக் கேட்டுக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தமிழ்நாட்டில் மொத்தம் 4½ இலட்சம் விவசாயிகள் பம்ப்செட் இணைப்பு கேட்டு மனு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 50,000 என்ற அளவில் விவசாயிகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 79 ஆம் ஆண்டு 80 ஆம் ஆண்டு வரையில் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் நிச்சயமாக விரைவாக மின்னிணைப்பு தருவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** தலைவர் அவர்களே, இந்த மின்சாரத்திற்குப் பணம் கட்டுவதில் ஒரு சிரமம் இருக்கிறது. ஏற்கெனவே தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். 5 ஏக்கருக்குக் கீழே உள்ளவர்கள் மின்சாரக் கட்டணம் கட்டத் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். அது போகட்டும். ஆனால் கிணற்றிலே தண்ணீர் இல்லாமல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருப்பதால் இந்தக் கேள்வியை நான் கேட்கிறேன். 4, 5 ஆண்டுகளுக்கு முன்பே பம்ப்செட்டை வீட்டிலே கொண்டுபோய் போட்ட பிறகும் கூட இலாக்காவினர் ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்று வசூல் செய்து இருக்கிறார்கள். இந்தக் கொடுமையை.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பொன்னம்மாள் அவர்கள் கவனிக்க வேண்டும். இதே கேள்வி இதே அவையில் எழுப்பப்பட்டு விடை சொல்லப்பட்டிருக்கிறது. எனவே மீண்டும் அவைக் குறிப்புகளைத் திருப்பிப் பார்க்கவேண்டும்.

**மங்கலம் கிராமத்தில் மின்நிலையம்.**

90 (*வினா எண். 2103) **திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள மங்கலம் கிராமத்தில் மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** தலைவர் அவர்களே,



1989 ஏப்ரல் 20]

(அ) ஆம்

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டத்தில் உள்ள மங்கலம் கிராமத்தில் ஒரு 110/33-11 கேவி (KV) துணை மின்நிலையத்தை நிறுவுவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது. இத்துணை மின்நிலையத்தில் 16 மெகா வோல்ட் ஆம்பியர், 110/33 கிலோ வோல்ட் திறன் கொண்ட ஒரு மின்மாற்றியும், 16 மெகா வோல்ட் ஆம்பியர், 110/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட ஒரு மின்மாற்றியும் நிறுவப்பட உள்ளன. இதற்குத் தேவையான நிலத்தை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே அந்த மின் நிலையம் அமைக்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். நன்றி. எங்களுடைய பகுதியில் இப்போது கடுமையான மின்தட்டுப்பாடு இருக்கிறது. பயிர்கள் எல்லாம் காய்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையிலே இப்படிப்பட்ட மின் நிலையங்கள் அமைத்தால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். எனவே இதை விரைவுபடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை வட்டத்தில் உள்ள மங்கலம் என்ற கிராமத்தில் சர்வே எண். 173-ல் உள்ள அரசுப் புறம்போக்கு நிலமான 6.02 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. அரசுப் புறம்போக்கு நிலங்களை நிலவுடைமை மாற்றம் செய்து தர இயலாது என்றும் அதனைக் குத்தகை அடிப்படையில் தர இயலும் என்றும் வருவாய்த் துறையினரால் கூறப்பட்டதால் இந்த நிலத்தைப் பெற ஆகஸ்ட் 1987-ல் செயற்குறிப்பு வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டது. இத்தகைய துணை மின் நிலையங்களில் நிரந்தரமான கட்டமைப்புக்களும், கட்டடங்களும் மின்சார வாரியத்தால் அமைக்க வேண்டி இருப்பதால் துணை மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் அரசுப் புறம்போக்கு நிலத்தைக் குத்தகை அடிப்படையில் நில உடைமை மாற்றம் செய்து தரும்படி மின்சார வாரியம் அரசைக் கேட்டுக்கொண்டது அரசுத் துறை நிறுவனங்களுக்குத் தேவைப்படும் அரசுப் புறம்போக்கு நிலங்களை நிலவுடமை மாற்றம் செய்து தரலாம் என்று அரசு தெரிவித்திருக்கிற காரணத்தால் விரைவாக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு இதை நிறுவுவதற்குண்டான அனைத்து முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி தொடர்பாக உங்களுடைய அனுமதியோடு மின்சாரத்தைப் பற்றி நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எங்களுடைய பகுதியிலே மின்சாரம் ஒரு வார காலமாக வரவில்லை.... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கலசப்பாக்கம் வரையில் வரலாம். (சிரிப்பு) வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்

**அரியலூர் நிர்மலா காந்தி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அப்பள்ளி பணிப்பெண் ஒருவர் கொலை செய்யப்பெற்று தூக்கிலிடப் பெற்றுள்ளதாகக் கூறப்படுவது குறித்து**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் '12.4.89 அன்று திருச்சிமாவட்டம் அரியலூரில் நிர்மலா காந்தி நடுநிலைப் பள்ளியில் சத்துணவு அமைப்பாளரான நிர்மலா ராணி என்ற 16 வயது இளம்பெண் பள்ளி அறையிலேயே தூக்கில் தொங்கும் நிலையிலும், தரையில் கால்கள் ஊன்றிய நிலையிலும் இருந்தது பற்றிய சம்பவத்தால் அந்தப் பகுதியில் ஏற்பட்ட நிலை குறித்து விவாதிக்கப்பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'. என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அவமானங்கள், கொடுமைகள் சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி தான் இது. அந்த இளம்பெண் 16வயது பெண். அப்படி தூக்கிட்ட நிலையில் இருந்திருக்கின்றாள். நம்முடைய மருத்துவ நிபுணர்கள் சோதனையிட்டபோது அந்தப்பெண் கருக்கலைக்கப்பட்டு ரத்தப்போக்கினால், ரத்தப் போக்கு அதிகரித்திருக்கலாம் என்றும் பிறகு அவர்கள் கொண்டு போய் தூக்கு மாட்டியிருக்கலாம் என்றும் கருத்து நிலவுகிறது.

அதுபோலவே இந்தப் பகுதியில் இந்தச் சம்பவம் மட்டுமல்ல, 3 மாதங்களுக்கு முன்னால் இதைப்போல் இரண்டு பெண்கள் ரெயில்வே கேட்டின் அருகில், இதே மாதிரி கால் ஊன்றிய நிலையில் சாகடிக்கப்பட்டு தூக்கு மாட்டப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். அதுபோலவே, இளம்பெண்கள் இளம் விதவைகள் இது போன்று வறுமையின் காரணமாகப் பணிகளில் அமரும்போது அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க இன்றைய அரசாங்கமாவது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அதோடுகூட சென்ற ஆட்சிக்காலத்தில் சத்துணவு சம்பந்தப்பட்ட ஒரு உயர் நபர், குற்றாலத்திற்கு நான் சென்று இருந்தபோது சொன்னார்கள். அங்கே இருக்கக்கூடிய பெரிய மரங்கள் சூழ்ந்திருக்கக்கூடிய ஒரு பங்களாவை தனக்கு என வைத்து அங்கே இளம்பெண்களை வரச்சொல்லி அவர்களிடம் தனது இச்சையை தனித்து கொண்டு இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இரண்டு பெண்கள் கண்ணீருடன் சொன்னார்கள். ஆகவே ஒரு பெண் திறமையாக, யோக்கியமாக வேலை செய்தால் மட்டும் போதாது. அங்கே இருக்கக்கூடிய சில பிரமுகர்களுடைய அதிகாரிகளுடைய இச்சைக்கும் இணங்க வேண்டும் என்ற நிலை இருப்பதை மாற்றி இதுபோன்ற பெண்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க நடவடிக்கையை நம்முடைய தமிழக அரசு எடுக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கூட இந்த 3 கொலைகள் ஒன்றன்பின் ஒன்றாக அந்த அரியலூர் பகுதியில் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. அச்சமும் பதட்டமும் இருக்கக்கூடிய சூழ்நிலையில் இன்றைக்கு இந்த அவை அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் திருச்சி மாவட்டத்தில் அரியலூரில் நிகழ்ந்துள்ள ஒரு பயங்கரமான சம்பவத்தைப் பற்றி இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரவும், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரவும். ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை தந்திருக்கிறார்கள். பொதுவாக, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் என்பது அவையை ஒத்திவைத்துவிட்டு, மற்ற அலுவல்களை எல்லாம் நடத்தக்கூடாது என்ற நோக்கத்தோடு கொண்டு வரப்படுவதல்ல. ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவைத் தலைவர் அனுமதி அளிக்கவில்லை என்று வெளிவருகின்ற செய்திகளின் காரணமாக, அந்தத் தீர்மானத்திற்கு தரப்படவேண்டிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்கின்ற கூற்றும் பொருத்தமானதல்ல ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக, அரசின் கவனத்தை ஈர்க்கவும், அரசு மேலும் இந்தப் பிரச்சினைகளில் விரைவான நடவடிக்கைகளை நல்ல முறையிலே எடுக்கவும், இந்தத் தீர்மானங்கள் பயன்படுகின்றன என்ற காரணத்தால், இது குறித்து சில விளக்கங்களை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

காவல் துறை துணைத் தலைவர் (நிர்வாகம்) அவர்களிடமிருந்து இச்சம்பவம் குறித்து பெறப்பட்ட அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் குறித்துக் குறிப்பிட விரும்புகிறேன்.

11-4-1989 ஆம் தேதி அன்று காலை 7 மணிக்கு அரியலூர் ஆர். சி. நிர்மலா காந்தி நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியை மில்கீசா மேமா அவர்கள் அரியலூர் காவல்நிலையம் வந்து தங்கள் பள்ளியின் கன்னியர் விடுதியில் சமையல் வேலை பார்த்துத் கொண்டிருந்த நிர்மலாராணி என்ற பெண்ணை 10-4-1989ஆம் தேதி இரவு 9 மணியிலிருந்து காணவில்லை என்றும், பிறகு தேடிப் பார்த்தபோது 11-4-1989 அன்று காலை 6.15 மணிக்கு தங்கள் பள்ளி வளாகத்தில் உள்ள ஒரு கூரைக் கொட்டகையில் அந்தப் பெண் தூக்கிலே தொங்கிக் கொண்டிருப்பதாகவும் கொடுத்த புகாரின் பேரில், அரியலூர் காவல் நிலைய குற்ற எண் 300/89 பிரிவு 174-ன்படி உதவி ஆய்வாளர் வழக்கு ஒன்றைப் பதிவுச் செய்துகொண்டு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, பிரேத விசாரணையும் நடத்தியுள்ளார்.

இறந்து போன நிர்மலா ராணியின் பிரேதம் பரிசோதனைக்காக அரியலூர் அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டு மருத்துவர்கள் சிவகுமார், திருநாவுக்கரசு மற்றும் விஜயலட்சுமி ஆகியோர் 11-4-1989 ஆம் தேதி அன்று 13.45 மணிக்கு பிரேத பரிசோதனை நடத்தியுள்ளார்கள்.

இந்த வழக்கின் விசாரணையை அரியலூர் சட்டம்— ஒழுங்கு ஆய்வாளர் திருஞானசம்பந்தம் எடுத்துக் கொண்டுள்ளார். விசாரணையில் இறந்து போன நிர்மலா ராணி, வயது 18 உடையவர், அவருடைய தந்தையார் அந்தோணி இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர் என்றும், கிருத்துவ உடையார் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது.

நிர்மலா ராணி, ராஜாஜி நகர் ஆர். சி. நிர்மலா காந்தி நடுநிலைப் பள்ளி கன்னியர் விடுதியில் சமையல் வேலை செய்து வந்ததாகவும், அங்கேயே பள்ளி இல்லத்தில் தங்கி வந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

நிர்மலா ராணிக்கும், அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 வகுப்பு மாணவன் ஆரோக்கியசாமி என்பவருக்கும் காதல் இருந்து வந்திருப்பதாகத் தெரிய வருகிறது. அடிக்கடி இருவரும் சந்திப்பதும், கடித பரிமாற்றம் செய்து கொள்வதும், திரைப்படங்களுக்குச் செல்வதுமாக இருந்துள்ளார்கள். இந்த நிகழ்ச்சியானது இவர்களுடைய குடும்பத்தினருக்கும், பள்ளித் தலைமைக்கும் தெரியவந்து, இவர்கள் கண்டிக்கப்பட்ட போதிலும், இவர்கள் தங்கள் தொடர்பை நிறுத்தவில்லை. நிர்மலா ராணிக்கு கர்ப்ப கோளாறு ஏற்பட்டு மருந்து சாப்பிட்டு வந்ததாகவும் தெரிகிறது. 10-4-1989 ஆம் தேதி இரவு 10 மணி அளவில் அந்தப் பள்ளி வளாகத்தில் புதிதாகக் கட்டிடம் எழுப்பப்படும் இடத்தில் இருவரும் ஒன்றாக இருந்திருக்



கிறார்கள். அப்போது நிர்மலா ராணி ஆரோக்கியசாமியிடம், அவருடைய வீட்டிற்கு தன்னை அழைத்துச் செல்ல வேண்டுமென வற்புறுத்தியிருக்கிறார். அதற்கு ஆரோக்கியசாமி மறுத்துள்ளார். இதனால் இருவரிடையே வாய்த் தகராறு ஏற்பட்டு நிர்மலா ராணி ஆரோக்கியசாமியை கண்டபடி திட்டியுள்ளார். கோபம் அடைந்த ஆரோக்கியசாமி, நிர்மலா ராணி அணிந்திருந்த தாவணியை எடுத்து நிர்மலா ராணியின் கழுத்தில் போட்டு இறுக்கியுள்ளார். இதனால் மூச்சுத் திணறி நிர்மலா ராணி அதே இடத்தில் இறந்துள்ளார். பின்னர் ஆரோக்கியசாமி அவருடைய அண்ணன் பன்னீர்செல்வம் என்பவரை அழைத்து வந்து அவருடைய உதவியுடன் அதே பள்ளி வளாகத்திலுள்ள ஒரு கூரைக் கொட்டகையில் நிர்மலா ராணியை அவருடைய தாவணியினால் கழுத்தில் சுருக்கு மாட்டி கொட்டகையின் மூங்கிலில் தொங்க விட்டுள்ளனர். கால்கள் தரையில் தொட்ட நிலையில் இருந்தன.

விசாரணைக்குப் பிறகு அரியலூர் சட்டம்-ஒழுங்கு ஆய்வாளர் இந்த வழக்கின் சட்டப் பிரிவை 302 இந்திய தண்டனைச் சட்டமாக 12-4-1989 அன்று மாற்றம் செய்துள்ளார். மருத்துவப் பரிசோதனை செய்த மருத்துவர்கள் இறந்துபோன நிர்மலா ராணி மூச்சுத் திணறி இறந்திருக்கலாம் என்றும் கொலையாக இருக்கலாம் என்றும் கருத்து அறிவித்திருக்கின்றனர்.

குற்றவாளி ஆரோக்கியசாமி 13-4-1989 அன்று கைது செய்யப்பட்டுள்ளார். தலைமறைவாக இருந்த பன்னீர் செல்வமும் 14-4-1989 அன்று கைது செய்யப்பட்டு, இருவரும் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். வழக்கு விசாரணையில் உள்ளது. இதனால் அரியலூரில் எந்தவித பதட்ட நிலையும் இல்லை. அம்மையார் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியது போல இதுபோன்று வேறு சில சம்பவங்களும் அந்த வட்டாரத்தில் நிகழ்ந்திருக்கின்றன. இதுகுறித்தும் போலீசார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக மகளிர் நலன் காக்கவும், அவர்களுடைய உரிமையைக் காக்கவும் இப்பொழுது நம்முடைய அரசின் சார்பிலே பல்வேறு சட்டங்கள், திட்டங்கள் எல்லாம் கொண்டுவரப்பட்டு இருப்பதை நான் இங்கே நினைவூட்டுகின்றேன். ஆனாலும் கூட இது முழுக்க முழுக்க ஒரு காதல் விவகாரத்திலே நடைபெற்றிருக்கின்ற ஒரு சம்பவம் ஆகும். எனவே இதனை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று சொல்கிற நேரத்தில் இதுபோன்ற நிர்மலா ராணிகள் இது போன்ற ஏமாற்றுகிற ஆடவர்களிடத்தில் ஏமாந்துவிடாமல் இருக்க வேண்டும் என்பது இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக சுட்டிக்காட்டப்படுகிறது என்பதையும் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்திற்கு பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 3. அறிவிப்புகள்.

### (அ) கேள்வி நேரம் முடிவுற்றவுடன் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. வினா நேரம் முடிந்ததும் பல உறுப்பினர்கள் சில செய்திகளை எழுந்து பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள், முனைகிறார்கள். இது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுகுறித்து ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவை நான் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். நேற்று அவை முடிந்த பிறகு, இன்று அவை தொடங்குவதற்குள் ஏதேனும் உடனடியாக உணர்த்தப்படக் கூடியவை அல்லது உணர்த்தித்தான் ஆக வேண்டும் என்பது போன்ற இன்றியமையாத செய்திகள் மட்டும் என்னுடைய இசைவைக் கேட்காமல் எழுப்பப்பட்டால் கூட உடனடியாக அதற்கு அனுமதி வழங்கப்படும். ஆனால் முன்கூட்டியே சிலபேர் சில செய்திகளைச் சொல்லி அனுமதி கேட்கும் மரபும் இருக்கிறது. இரண்டுக்கும் அனுமதி வழங்கப்படும். அது இல்லாமல் ''சீரோ அவர் (Zero-hour)'' முடிந்த உடனேயே ஏதாவது சில பிரச்சினைகளை ஓய்வாகப் பேசிக்கொண்டு இருக்கலாம் என்ற உணர்வு தோன்றி விடுமானால் இன்றைய அலுவல்கள் மட்டுமல்லாமல் என்றைய அலுவல்களையும் முழுமையாக முடிக்க முடியாது என்பது மட்டுமல்லாமல் மொத்தத்தில் பல பேச்சாளர்கள் பேச விரும்புவதால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி முடிகிறபோது கிட்டத்தட்ட 2½ மணிக்கு மேலே தாண்டி விடுகிறது. பிற்பகல் மறுபடியும் அவைக்கு வருகிறபோது இடைவெளி நேரக் குறைவு ஏற்பட்டு விடுகிறது. எனவே இவற்றையும் கவனத்தில் கொண்டு இன்றைக்கு செய்தித் துறை, தொழிலாளர் நலத் துறை போன்ற மானியக் கோரிக்கைகள் வருவதால் அதில் அதிகம் பேர் பங்கு கொண்டு தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற வாய்ப்பினை நீங்கள் உருவாக்க வேண்டும். இதுபோல நேரத்தை ஒவ்வொருவரும் இறுக்கமாகக் கடைப்பிடித்தால் அவையைச் சிறப்பாக நடத்திச் செல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

## 4. தகவல் கோரல்.

### (அ) வறட்சி நிவாரணம் குறித்து அரசின் நடவடிக்கைகள்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலவிக் கொண்டு வருகிறது. குடிநீர்த் தட்டுப்பாடும், வேலை வாய்ப்பு



இல்லாத நிலைமையும் இருக்கிறது. சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, பல்வேறு தீர்மானங்களைப் போட்டிருப்பதாக அறிகிறோம். அது இந்த அவையிலே ஓர் அறிக்கையாகத் தாக்கல் செய்யப்படுமா? மக்களுக்கு என்ன செய்ய இருக்கிறோம் என்பதை இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கின்ற அளவுக்கு ஒரு நல்ல அறிக்கையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, வறட்சி ஆங்காங்கு தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறதென்ற உடனே தமிழக அரசின் சார்பாக 23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, ஆங்காங்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் குறிப்பிட்டவாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டை அண்மையிலே கூட்டி, அந்த மாநாட்டிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் மத்திய அரசின் உதவியை நாம் எதிர்பார்த்தாலும்கூட, அந்த உதவிக்காகக் காத்திராமல், ஆனால் வருமென்று எதிர்பார்த்து, மேலும் ஒரு 15 கோடி ரூபாயை மாவட்டங்களிலே வறட்சிப் பணிகளுக்காகச் செலவிட, அவர்களுக்கெல்லாம் அந்தப் பணம் ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் உடனடியாக நடைபெற வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு நானும், மற்ற அமைச்சர்களும், மற்றும் முக்கிய அதிகாரிகளும் வறட்சிப் பகுதியாக உள்ள இடங்களுக்கு எல்லாம் சுற்றுப்பயணம் செய்து, வறட்சிப் பணிகளைத் தீவிரமாக முடுக்கிவிட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இதைவிட மேலும் ஆதாரங்கள் இருக்குமானால், நண்பர் உகம்சந்த் போன்றவர்கள் உதவுவார் களேயானால், அந்த ஆதாரங்களின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.

### (ஆ). தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று திருவாடானையில் நடைபெற்ற இலவச அரிசி வழங்கும் விழா ஏற்பாடுகள் குறித்து.

திரு. கே. ஆர். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இலவச அரிசி வழங்கும் விழா திருவாடானையில் 14-4-1989 அன்று நடைபெற்றது. இந்த விழாவிற்கு அரசுத் துறையான கூட்டுறவுத் துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். வரவேற்பு இதழில், தலைவராக கே. ஆர். இராமசாமியாகிய என்னையும், முன்னிலை என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களையும், அரிசி வழங்குவதற்கு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவருமான திரு. எஸ். முருகப்பன் அவர் களையும் போட்டு, அழைப்பிதழை வெளியிட்டிருக்கிறார்கள்,

சட்டமன்ற உறுப்பினராகிய நானும், மத்திய அமைச்சர் அவர்களும் இந்த விழாவில் கலந்துகொள்வதாக இருந்தது. பெருந் தலைவர் அரிசி வழங்குவது குறித்து அதிகாரிகளிடம் கேட்டதற்கு இது மேலிடத்து உத்தரவு என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இதை நான் இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இது கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு உரியதே தவிர, வேறல்ல. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிற கருத்தை ஒட்டி ஒரு விடை அளிக்க வேண்டுமானால், கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே தான் சொல்ல முடியும். பேரவைத் தலைவர் அவர்கள் இதை அனுமதித்தாலும்கூட, அமைச்சரவையினால் உடனடியாகப் பதில் சொல்லக்கூடிய ஒன்றல்ல. எனவே இப்படிப்பட்ட பிரச்சினையை இந்த நேரத்தில் எழுப்புவதைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். இதிலே ஒழுங்குப் பிரச்சினையில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். நான் பதில் சொல்லப் போகிறேன் திரு. கே. ஆர். இராமசாமி அவர்கள் இது பற்றி என்னிடத்திலே தெரிவித்து, அவையினுடைய கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய அவை முன்னவர் அவர்கள் முறைப்படி அதை எழுதிக் கொடுத்து, கவன ஈர்ப்பாகக் கொடுத்தால் முறையான விடை தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல், இது போன்ற செயல்களுக்கு அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை அவர்கள் தெரிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இடையிலே நானும் ஒரு செய்தியைச் சேர்த்துச் சொல்லவேண்டும். ''Protocol'' என்ற வரிசை முறை இருக்கிறது. அந்த மதிப்பு முறையைப் பின் பற்ற வேண்டுமென்று அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஒன்றைப் பேரவைத் தலைவரோடு தொடர்புடையது என்பதால், நினைவூட்ட வேண்டும். பேரவைத் தலைவர் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பெயர் போடப்பட்டும், அவர் கலந்துகொள்ளவில்லை என்பதை நினைவுபடுத்த வேண்டும். இது போன்ற குறைபாடுகள் ஏராளமாக இருப்பதால், அனைத்தையும் கவன ஈர்பபாகக் கொடுந்து, அமைச்சருடைய பதிலைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, ஏழை எளிய மக்களுக்கு-அதிலும் 300 ரூபாய்க்கும் குறைவாக வருவாய் உள்ளவர்களுக்கு இலவச அரிசியும், துணிமணியும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பழைய பிரச்சினை. நேற்று மாலையிலிருந்து இன்று காலைக்குள் எதுவும் நடக்கவில்லை. தயவுசெய்து உட்காருங்கள்.



3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பேரவைக்கு (செனட்) ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் நால்வரைத் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பதவிக் காலம் 16-8-1990 அன்று முடிவுறும்.

(இ) அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (செனட்) ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் மூவரைத் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பதவிக் காலம் 5-12-1989 அன்று முடிவுறும்.

(ஈ) சென்னைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னைப் பல்கலைக்கழகப் பேரவைக்கு (செனட்) ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் அறுவரைத் தங்களிலிருந்து தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவர்களின் பதவிக்காலம், தேர்ந்தெடுக்கப் பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

(உ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகப் பேரவையில் (செனட்) ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங் களுக்குத் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்

தெடுக்கப்படுபவரின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும். பல்கலைக் கழகத்தின் விதி முறைப்படி, பகுதிவாரி அடிப்படையில் (propoitional Representation) இத்தேர்வு நடைபெறுவதில்லை.

**(ஊ) சென்னை அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சென்னை, அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (சிண்டிகேட்) இச்சட்டமன்றப்பேரவைஉறுப்பினர்கள் தங்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப் படுபவரின் பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 24-4-1989 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 25-4-1989 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 26.4.1989 புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 28-4-1989 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

**(எ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு (செனட்) எட்டாவது சட்டமன்றப் பேரவையின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பெற்ற திருவாளர்கள் க. பாலசுப்பிரமணியன், கி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரது பதவிக் காலம் முடிவடைந்துள்ளதால், அப்பல்கலைக் கழகம் தனது ஆட்சிக் குழுவிற்கு (செனட்) மூன்றாண்டுக் காலம் பணியாற்ற இப்பேரவை உறுப்பினர்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளது. இரு உறுப்பினர்கள் தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந் தெடுக்கப் பெற வேண்டும்.





**(ஏ) காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகப் பேரவைக்கு (செனட்) ஒன்பதாவது சட்ட மன்றப் பேரவையின் சார்பில் பணியாற்ற இப்பேரவை உறுப் பினர்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளது. ஓர் உறுப்பினர், தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டும்.

**(ஐ) கோவை பாரதியார் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கோவை, பாரதியார் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு (செனட்) 20-11-1989 வரை பணியாற்ற இப்பேரவை உறுப்பினர்களிலிருந்து இருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அப்பல்கலைக் கழகம் கோரியுள்ளது. இரு உறுப்பினர்கள் தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பெறவேண்டும்.

இதற்கான தீர்மானங்கள் 24-4-1989 முற்பகல் 11.00 மணிக்குள் செயலாளரிடம் கொடுக்கப் பெற வேண்டும்.

**5. கவன ஈர்ப்பு,**

**(அ) காமராசர் மாவட்டம் உருவாக்கப்பட்ட பிறகு அதற்கென மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தனியாக இயங்காதது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வே. தங்கபாண்டியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ் வினைக் குறித்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்தைஈர்க்க முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார். தற் போது திரு. வே. தங்கபாண்டியன் அவர்களின் சார்பில் திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி உணவு அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

***திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பின திரு. வே. தங்கபாண்டியன் அவர்கள் பெயரால் கொடுக்க பட்டிருக்கிற இக்கவனஈர்ப்புத் தீர்மானத்தைத் தங்கள் சார்பி பன்னிக்கவும்—தங்கள் மூலமாக மாண்புமிகு உணவு அமைச்

[திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி] [1989 ஏப்ரல் 20

அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது ''இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து காமராசர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும்கூட, மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து அம்மாவட்டத்திற்குரிய பகுதி தனியாகப் பிரிக்கப்படாததாலும், தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி செயல்படாததாலும் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10-20)

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

1984-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாக பின்வருமாறு பிரிக்க அரசு ஆணையிட்டது;—

| மாவட்டம். | தலைமையிடம். |
|---|---|
| 1. இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| 2 பசும்பொன் தேவர் திருமகன் | சிவகெங்கை |
| 3. காமராஜர் | விருதுநகர் |

இதனையடுத்து, பிரிக்கப்பட்ட புது மாவட்டங்களில் அதற்கென தனிப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளை அமைப்பதற்கான கருத்துரு கோரப்பட்டது. இராமநாதபுர மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இருப்பு மற்றும் பொறுப்புகளை புதிதாக அமைக்கப்படவுள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு பிரித்து கொடுப்பதற்கான வழிமுறைகளை இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலருடன் கலந்தாலோசித்து பரிந்துரை செய்வதற்காக ஒரு கூட்டுறவுத் துணைப் பதிவாளர் நியமிக்கப்பட்டார். இவர் இது பற்றிய தமது கருத்துருவை சமர்ப்பித்துள்ளார். இருப்பினும், இக்கருத்துரு குறிப்பாக புதிதாக அமைக்கப்படவுள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டின் அடிப்படையில் முழுமையாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும், வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD) புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்ட மத்திய



1989 ஏப்ரல் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

கூட்டுறவு வங்கியை ஒரு நலிவுற்ற வங்கியாக வகைப்படுத்தி யிருந்தது என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். ஆனால், தற்சமயம்தான், 30.6.88 அன்றைய நிலவரத்தின் அடிப்படையில் மேற்படி வங்கியை வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி தனது நலிவுற்ற வங்கியின் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது. மேற்கூறிய நிலையில் முன்னிருந்த இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரித்து அமைக்கப்பட்டுள்ள மூன்று புதிய மாவட்டங்களில் அமைக்கப்படவுள்ள மத்திய கூட்டுறவு வங்கிகள் தனித்தன்மையே நிலைத்து இயங்கக் கூடிய செயல்திறன் பற்றி உறுதி செய்வது அவசியமாகிறது. எனவே, பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர் மற்றும் இராமநாதபுரம் மண்டல இணைப்பதிவாளர்களை இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலரை கலந்து ஆலோசித்து, புதிய மாவட்டங்களில் தனி மத்திய கூட்டுறவு வங்கிகள் அமைப்பது பற்றி ஆராய்ந்து அவரது கருத்துக்களை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்கள். அவர்களது அறிக்கைகள் பெறப்பட்டவுடன் புதிய மத்திய கூட்டுறவு வங்கிகள் அமைப்பது பற்றி முடிவு செய்யப்படும்.

2. தற்போது இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேற்குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களில் 41 கிளைகளுடன் இயங்கி வருகிறது. இவற்றில் காமராஜர் மாவட்டத்தில் 16 கிளைகளும், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் 9 கிளைகளும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 16 கிளைகளும் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள கிளைகள் அம்மாவட்டத்திலுள்ள மக்களின் மற்றும் வேறுபட்ட கூட்டுறவு சங்கங்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. எனவே புதிய மாவட்டங்களில் தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் அமைப்பது பற்றி முடிவெடுக்காத நிலையிலும், மேற்கூறிய மூன்று மாவட்டங்களிலும் பொதுமக்களின் நலனை குறிப்பாக விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி செயல்பட்டு வருகிறது.

*திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு முன்னாள் இராமநாதபுரம் மாவட்டம் 3 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டும் அங்கே மதுரையில் செயல்படும் மத்திய கூட்டுறவு வங்கி அந்த 3 மாவட்டங்களுக்கும் சேர்த்து இருந்துகொண்டிருக் கிறது. அதனால் அந்த மூன்று மாவட்டங்களை சேர்ந்த மக்கள் கூட்டுறவு கடன்களை பெறுவதற்கும், விவசாய கடன்களை பெறுவதற்கும் மதுரை வந்து போக வேண்டிய கஷ்டங்கள் இருக்கின்றன. எனவே உடனடியாக அந்த 3 மாவட்டங் களுக்கும் தனித் தனியாக மத்திய வங்கியை பிரித்து கொடுக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிட மிருந்து எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, இதுசம்பந்தமாக கூட்டுறவு துணைப் பதிவாளர் ஒருவர் இந்தப் பிரச்சினையை ஆராயும்படி ஏற்கெனவே நியமிக்கப்பட்டார். அவர் அரசுக்கு ஒரு கருத்துருவும் அனுப்பியுள்ளார். ஆனால் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி புனரமைப்புத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கியை ஒரு நலிவுற்ற வங்கியாக வகைப்படுத்தி இருந்தது என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலையிலிருந்து 30-6-88லிருந்து தான் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி இதை தனது நலிவுற்ற வங்கிகளின் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது. அது மட்டுமல்ல, இராமநாதபுரம் மாவட்டத்தில் 41 கிளைகள்தான் இப்போது இருக்கின்றன. பிரிக்கப்பட்ட மாவட்டங்களின் அடிப்படையில், காமராசர் மாவட்டத்தில் 16 கிளைகளும், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் 9 கிளைகளும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 16 கிளைகளும் இன்றையதினம் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. இவைகளை எல்லாம் 3 புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களுடைய தனி அதிகாரிகளோடு கலந்து பேசி அரசுக்கு பரிந்துரை அனுப்ப வேண்டுமென்று இந்த அரசு தெரிவித்து இருக்கிறது. அந்த அறிக்கை அரசுக்கு கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கிளைகள் குறைவாக இருக்கின்ற காரணத்தால், பிரிப்பது சற்றுக் கடினம் போலத் தெரிவித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளாக உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்வது எல்லாம், மத்திய வங்கியை 3 ஆக பிரிக்காவிட்டாலும், காமராசர் மாவட்டத்தை தனியாகப் பிரித்துவிட்டு பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்தாவது ஒரு மத்திய வங்கியை பிரித்துக் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய பகுதிக்கு மட்டும் தனியாகக் கேட்பது முறையல்ல. இந்த அரசு, பிரிக்கப்பட்ட மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்துத்தான் புதிய வங்கிகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு சிறு குறிப்பு. நம்முடைய உறுப்பினரவர்கள் முதலில் பேசும்போது, ''பேரவைத் தலைவரவர்களே, உங்கள் சார்பிலும் இதைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார். அது மிகவும் பொருத்தமானதுதான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், நான் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவன்.



(ஆ) மின் ஒப்பந்தக்காரர்களிடம் ஒயர் மேன் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான தேர்வு நடைபெறாதது.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் மின் ஒப்பந்தக்காரர்களிடம் ஒயர் மேன் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான தேர்வு நடத்தாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்

அறிக்கை.

1975-க்கு முன்பு, தொழிற்கூடங்களில் பயிலாத கம்பியாளர்களுக்கான தேர்வு (Examination for private candidates) நடத்தப்பட்டது. இது கல்வித்தகுதியின்றி அனுபவத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ள மின்பணியாளர்களுக்காக நடத்தப்பட்ட தேர்வாகும்.

1975 ஆம் ஆண்டு வரை சுமார் 29,300 நபர்களுக்கு மின் கம்பியாள் உரிமம் வழங்கப்பட்டிருந்தது. இதுவன்றி ஆண்டொன்றிற்கு சுமார் 1500 பேர் வீதம் மாநிலத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி கூடங்கள் (சுமார் 80) மூலம் பயிற்சி பெற்று உரிமம் பெற்று வருகிறார்கள். இவர்கள் அனைவரும் அனுபவத்துடன், உரிய கல்வித்தகுதியையும் பெற்று பயிற்சி பெற்றவர்கள். மேலும் நமது மாநில தொழிற்பயிற்சி கூடங்களில் இடம் கிடைக்காது பிற மாநிலங்களில் பயிற்சி பெற்று வருகிறவர்களும் உள்ளனர். இவர்கள் அனைவரும் பூரண கல்வித்தகுதியும் முறையான பயிற்சியும் அனுபவமும் உள்ளவர்கள் இவர்களின் வேலை வாய்ப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டு மேற்கூறிய அனுபவத்தின் அடிப்படையிலான தேர்வுமுறை (Examination for private candidates) கைவிடப்பட்டது. தற்பொழுது மாநிலம் முழுவதற்கும் உரிமம் பெற்ற மின் ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை சுமார் 12,000 ஆகும். இவர்களிடம் வேலை பார்க்கும் உரிமம் பெற்ற மின் தொழிலாளர்கள் சுமார் 15,000 பேர். இவர்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய உரிமம் பெறாத தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 20,000 இருக்கக்கூடும்.

மின் ஒப்பந்தக்காரரிடம் வேலை பார்ப்பவர்கள் அல்லாமல் சுமார் 32,000 பேர் உரிமம் பெற்று மாநிலத்திலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் வேலை செய்து வருகின்றனர்.

[திரு. கே. என். நேரு] [1989 ஏப்ரல் 20

இருப்பினும் மேற்கண்ட தேர்வை மீண்டும் நடத்தக்கோரி அரசுக்கும், மின்உரிமம் வழங்கும் வாரியத்திற்கும் விண்ணப்பங்கள் பெருமளவில் வந்து கொண்டிருப்பதால் அவை கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க கருதி, தொழிற்பயிற்சி கூடங்களில் மின் கம்பியாளராக தேறிவரும் கம்பி யாட்களுக்கு வழங்கப்படும் உரிமத்திற்கு சற்று குறைந்த தகுதி யுடன் கூடிய உதவியாளர் (Helper) தகுதியில் உரிமம் வழங்க அனுபவத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவர்களுக்கு தேர்வு நடத்த அரசுக்கு அரசு தலைமை மின் ஆய்வாளர் பரிந் துரை செய்துள்ளார். இச்செயற்குறிப்பிற்கு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குனரும் இணக்கம் தெரிவித்துள்ளார். இந்தத் தேர்வை நடத்துவதற்கான செலவினம், வழிமுறை பற்றிய விவரங்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரிட மிருந்து பெறப்பட்டவுடன் இது தொடர்பான அரசு ஆணை விரைவில் வெளியிடப்படும்.

இப்பிரச்சினை அரசின் தீவிர கவனத்தில் இருக்கிறது.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு தலைவரவர்களே, விவர அறிக்கையின்படி 1975ம் ஆண்டுக்கு முன்னதாக மின் ஒப்பந் தக்காரர்களிடம் பணியாற்றுகின்ற மின் உரிமம் பெறாதவர்களுக்கு அனுபவத்தின் அடிப்படையில் அவர்களுக்கு தேர்வு நடத்தப் பட்டது. அதற்குபின் இதுவரையில் எந்தவித தேர்வும் நடத்தப் படவில்லை. விவர அறிக்கையில் 20 ஆயிரம் பேர்கள் மின் ஒப்பந்தக்காரர்களிடம் மின் உரிமம் பெறாமல் வேலை பார்ப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் என்னிடத்தில் கிடைத் திருக்கிற தகவல்களின் அடிப்படையில் கிட்டத்தட்ட 1 லட்சத்து 75 ஆயிரம் பேர் மின் ஒப்பந்தக்காரர்களிடம் மின் உரிமம் பெறாமல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் நீண்ட காலமாக இந்த கோரிக்கையை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள் ஏனென்றால் மின் ஒப்பந்தக்காரர்களிடம் பணி ஆற்றுகின்ற மின் உரிமம் பெறாதவர்களிடத்திலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி. நான் சுருக்கிச் சொல்லட்டுமா உங்களுக்கு? எப்படிச் சொல்வது என்று சொல்ல வேண்டுமா ?

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** உரிமம் பெறாத அவர்களை மின் வாரியத்தினுடைய அதிகாரிகள் உரிமம் பெற்றுத்தான் வேலை செய்ய வேண்டுமென்று சொல்வதன் காரணமாக அந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அரசு கூட இதைக் கனிவோடு ஏற்று, இப்பொழுது உரிமம் வழங்குவதற்கு நடத்துவ தற்குரிய தேர்வை நடத்துவதற்காக ஆணை பிறப்பிப்பது பற்றி அறிவித்திருக்கிறீர்கள். இருந்தாலும்கூட ஒருசில விதிகளைத் தளர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன். கல்வி, வயது வரம்பு இல்லாமல் அனுபவத்தின் அடிப் படையிலே தேர்வு நடத்தப்பட வேண்டும்.



1989 ஏப்ரல் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி. என்ன கேள்வி கேட்க விரும்புகிறீர்கள் ?

**திரு. எஸ். டேனியல்ராஜ்:** கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்றால், கேள்வியைக் கேளுங்கள். கவனத்திற் கெல்லாம் கொண்டு வந்து, உங்களுக்கு அறிக்கையெல்லாம் கொடுத்தாகிவிட்டது, இதிலேயிருந்து இன்னும் உங்களுக்கு எழுகிற ஐயம் என்ன ?

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** கல்வி, வயது வரம்பு இவைகளைத் தளர்த்த வேண்டும். அதுபோன்று. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "தளர்த்துவீர்களா ?" அதோடு இப்பொழுது நீங்கள் உட்காருங்கள். அவர் பதில் சொல்வார்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதில் குறிப் பிட்டுக் கேட்கும்பொழுது 2 லட்சம் பேர் மின் உரிமம் பெறாமல் இருக்கிறார்கள் என்றும், ஆனால் இங்கு அவையில் பேசும்பொழுது 1,75,000 பேர் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவர் களுக்குத் தெரிந்த வரையில் 1,75,000 பேர் என்று குறிப்பிட்டி ருக்கிறார்கள். எங்களுக்குத் தெரிந்த கணக்குவரை 20,000 பேர் தான் மின் உரிமம் பெறாமல் இருக்கின்றார்கள் என்ற ஒரு கணக்கு இருக்கிறது. இருப்பினும் உறுப்பினர் அவர்களுடைய கருத்தை மேற்கொண்டு ஆய்வு செய்ததில், 1975 ஆம் ஆண்டுக்கு முன்பு எட்டாவது வரை படித்தவர்களுக்கோ அல்லது படிக்காத வர்களுக்கோ அனுபவத்தின் முறைப்படி அவர்களுக்கு மின் உரிமம் வழங்கப்பட்டு வந்தது. அதன் பிறகு ஐ. டி. ஐ. படித்தவர்கள் வருடத்திற்கு 1,500 பேர் வரை படித்துத் தேர்வு பெறுவதால் அவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தரும் பொருட்டு, அவர்கள்தான் அதற்கு உடையவர்கள் என்று அறிவித்தார்கள். அதன்பிறகு அவர்களுக்குத்தான் அந்த உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. இருப் பினும் அவர்களுக்குக் கீழ் ஹெல்ப்பர்களாக தகுதியுடையவர்களாக ஆக்கி, அதேபோல, 1975 ஆம் ஆண்டுக்கு முன்பு வழங்கப்பட்டது போல, படிப்பை தளர்த்தி அனுபவத்தின் முறைப்படி அவர்களுக்கு மின் உரிமம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே. விவர அறிக்கையிலே ஐ. டி. ஐ. படித்தவர்களுக்கு இணையாக உரிமம் இல்லாமல் அதற்குத் தகுதி குறைந்த உரிமம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, 1972 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட, 29,000 பேர்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்திற்குச் சமமான தகுதியின் அடிப்படையிலே உரிமம் வழங்கு வதற்கு இந்தத் தேர்வு நடத்தப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்களுக்கு உதவியாளர்களாக இருப்பதற்குத்தான் தேர்வு நடத்தப்படும்.

## 6. ஒழுங்குப் பிரச்சினை.

**மானியக் கோரிக்கைகள் தொடர்பான கொள்கை விளக்கக் குறிப்புகள் முன்கூட்டியே உறுப்பினர்களுக்குக் கிடைக்காதது குறித்து.**

**திரு. உ. ரா. வரதராசன் :** பாய்ன்ட் ஆப் ஆர்டர். அலுவல் சம்பந்தப்பட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதே மன்றத்திலே நான் எழுப்பி, மானியக் கோரிக்கைகள் மீதான விளக்கக் குறிப்புகள் எங்களுக்கு இரண்டு தினங்களுக்கு முன்பாக தர வேண்டுமென்று சொன்னேன். நீங்களும் அப்படி சேர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்தீர்கள். நேற்றையதினம்கூட மதிப்பிற்குரிய உறுப்பினர் தீட்சிதர் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். ஆனாலும், இன்றைக்கு விவாதத்திற்கான கோரிக்கைகள் சட்டமன்ற அலுவலகத்திலே இருக்கின்ற எம். எல். ஏ.க்களுக்கு இரவு ஒன்பது மணிக்குத்தான் வந்திருக்கின்றன. காலையும், மாலையும் தொடர்ச்சியாக அவையினுடைய அலுவல் நடைபெறுகின்ற காரணத்தினாலே இவற்றைப் படிப்பதற்கு ஏதுவாகக் கட்டாயமாக இரண்டு நாட்களுக்கு முன்பாகக் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று மீண்டும் உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கண்டிப்பாக ஏற்பாடு செய்யப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7, மானியக் கோரிக்கைகள்—1989-90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,03,84,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



**திரு. பொன். விஜயராகவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்— என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 30,03,84,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(முற்பகல் 10-30)

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூரில் உள்ள ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் தொழிற்சாலையின் சட்ட விரோத மூடல் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது பற்றியும் மீண்டும் திறக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது பற்றியும் விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 30,03,84,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

**திரு. சி. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் சட்டங்களைப் பல தொழிற்சாலைகளில் அமுல் நடத்தப்படாமல் உள்ளவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 30,03,84,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

### (ஆ) கோரிக்கை எண் 44—எழுதுபொருள்—அச்சுத்துறை.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள்—அச்சுத் துறை—என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,70,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

**திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 44— எழுதுபொருள்—அச்சுத்துறை — என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 20,70,52,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் அச்சகத்தில் அச்சடித்து வரும் லாட்டரிச் சீட்டை அரசு அச்சகத்தில் அச்சடிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 44—எழுது பொருள்—அச்சுத் துறை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 20,70,52,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

### (இ) கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்,

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் த்லைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 47–செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,07,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. பொன். விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,07,30,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,07,30,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.



திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி நகரை சுற்றுலா ஸ்தலமாக அறிவிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,07,30,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் இறுதியில் அனைத்து கருத் துக்களுக்கும் விளக்கம் தருகிறேன். அவையின் முன் வைக்கப் பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை* நான் படித்த தாகக் குறிப்பேட்டில் ஏற்றிக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் விவாதத்தைத் துவங்கி வைப்பவர் திரு. அண்ணா நம்பி.

திரு. ஆர். அண்ணா நம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நாட்டின் முதுகெலும் பாக விளங்குவது தொழில் துறை ஆகும். அந்தத் தொழில் துறையைப் பொறுத்தவரையில், தொழிலாளர் நலனை பொறுத்த வரையில் இங்கே நாம் சிந்திப்பது சாலச் சிறந்ததாகும். இன்றையதினம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் மிக அதிகமாக இருப்பதன் காரணமாக மக்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருப்பதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக இன்றைக்கு தமிழக அரசு நல்ல திட்டங்களை உருவாக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருந்ததைப் போல இந்த வேலை யில்லாத் திண்டாட்டத்தை ஒடுக்குவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தமிழகத்தில் பல்வேறு பிரிவுகளில் நிரந்தரம் இல்லாதவர்களாக தற்காலிக ஊழியர்களாக பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்

* அறிக்கைகள் இணைப்புகளாக அச்சிடப்பெற்றுள்ளன.

கள் என்பதையும் நான் இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். எனவே அப்படிப்பட்ட அன்றாடக் கூலிகளாக இருக்கின்ற அந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்பதையும், அதற்கு நம்முடைய தமிழக அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசனில் பணியாற்றுகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமிழகத்திலே வேலை நிரந்தரம் இல்லாமல் இன்றும் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அதேபோல் கூட்டுறவு சொசைட்டிகளில் பணியாற்றுகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிரந்தரம் இல்லாமல் இருந்து கொண்டு, அல்லல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், பல்வேறு நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் இப்படிப்பட்ட நிலைமையிருக்கிறது. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், மின்சாரப் பிரிவில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் இன்றைக்கும் 90 நாட்கள் கூலிகளாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த அரசு புரிந்து கொள்ள வேண்டும். 90 நாட்கள் ஆனதும் அவர்களுக்குக் கூலி கொடுப்பதை நிறுத்திவிட்டு, இனி உங்களுக்கு வேலை இல்லை, போய் வாருங்கள் என்று சொல்லி அவர்களுக்கு வழியனுப்பு விழாவையும் நடத்துகிறார்கள். அதற்குப் பின்னாலே கெஞ்சிக் கூத்தாடி மீண்டும் அவர்கள் மாநகராட்சியிலே மின்சார ஊழியர்களாக வந்து அன்றாடக் கூலிகளாக வேலை செய்கின்ற ஒரு அவலமான நிலைமை இன்றைக்கு சென்னை மாநகராட்சியிலே இருந்து கொண்டிருக்கிறது. அப்படி இருக்கின்ற நிலைமையை நாம் இன்றைக்குப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அதற்கு அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு வேலையை நிரந்தரம் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாற்றுத் தலைவர் தலைமை)

அதேபோல் பல்வேறு தொழிலாளர்கள் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், பாதாளச் சாக்கடைப் பணியில் ஈடுபட்டு இருக்கின்ற மிகச் சாதாரணத் தொழிலாளர்கள், அந்தப் பணியில் ஈடுபடுகின்றபோது, அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்களுடைய தேக ஆரோக்கியம் மிகவும் கெடுகிறது என்பதை அரசு தெரிந்து கொள்ள வேண்டும். எனவே அத்தகைய தொழிலாளர்களுக்கு பல்வேறு நோய்கள் வருகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், வாரம் ஒரு முறை அந்தத்



தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும் அல்லது அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்று அந்த ஏழைத் தொழிலாளர்களின் சார்பாக நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் ஆலயங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் இந்த அரசுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். 1971-ஆம் ஆண்டு இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு முதல்வராக இருந்தபோது, இந்த ஆலய ஊழியர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்பட்டது என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்தப் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே 1971-ஆம் ஆண்டிலேயிருந்து இதுவரையிலும் அந்தத் தொழிலாளர்கள் கூலியாட்களாக பணியாற்றுகின்ற அவலமான சூழ்நிலையை இந்த அரசு போக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே இந்த ஆலயத் தொழிலாளர்களையும் அரசுத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டும் என்ற அவர்களுடைய உன்னதமான கோரிக்கையை நான் இந்த மாமன்றத்திலே வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, அந்த ஆலயத் தொழிலாளர்களையும் அரசுத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுத் தொழிலாளர்களுக்கு கொடுப்பதைப் போல, இந்த ஆலயத் தொழிலாளர்களும் பணியில் இருக்கும் போது மாண்டு விட்டால் இறந்துவிட்ட தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கும் 20 ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் ஆலயத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஓதுவார்களுக்கு ஓய்வு ஊதியம் தரப்படுவதைப் போல, மற்ற ஆலயத் தொழிலாளர்களுக்கும் ஓய்வு ஊதியம் வழங்கப்படுகிற வகையில், சட்டத்தைத் திருத்தி, அந்தத் தொழிலாளர்களுக்கும் ஓய்வு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு என்னுடைய தொகுதியைப் பொறுத்த வகையில் அவிநாசி தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கே தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும். கோவை மாவட்டத்திலே அவிநாசி தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி என்று அரசால் அறிவிக்கப்பட்டதற்குப் பின்னாலே, இன்றைக்கு கடுமையான வறட்சியின் காரணமாக, விவசாயத்தையே நம்பி வாழ்ந்து கொண்டு இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள், வறட்சியின் காரணமாகவும் மழை இல்லாததன் காரணமாகவும் அவர்கள் தொழிலைச் செய்ய முடியாமல், விவசாயம் செய்ய முடியாமல் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

அவர்களுக்கு துணைத் தொழில்கள் கூட கிடையாது. அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிலையில் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டும். விவசாயிகளுக்கு விவசாயத்திலே பாதிக்கப்படுகிறபோது துணைத் தொழில்களில் அவர்கள் பங்கு பெறுகின்ற வகையில், வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற வகையில், அந்த விவசாயத் தொழிலாளர்களுக்குப் பயன்படுகின்ற வகையில், விவசாயத்தையே தங்களுடைய வாழ்க்கையின் நாடியாக நம்பிக் கொண்டிருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு, அந்தப் பகுதி மக்களுக்கு அரசு சிறு சிறு தொழிற்சாலைகளையாவது என்னுடைய அவிநாசி தொகுதியில் உருவாக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக அவிநாசி பகுதியில் படித்த பெண்கள் நிரம்ப இருக்கிறார்கள். அதே போன்று படித்த வாலிபர்களும் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக நான் மக்களின் குறைகளைக் கேட்கச் சென்றபோது, அங்கேயிருக்கின்ற தாய்மார்கள் எங்களுக்கு வேலையில்லை, ஏதாவது வேலை வாங்கித் தாருங்கள் என்று கேட்கின்றார்கள். எனவே அந்த படித்த தாய்மார்களுக்கு தையல் பயிற்சிக் கூடங்களை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தையல் பயிற்சிக் கூடங்களை உருவாக்குவதன் மூலம் அங்கேயிருக்கின்ற ஆயிரக்கணக்கான, படித்து வேலையில்லாமல் இருக்கின்ற அந்த இளம் பெண்களுக்கும், தாய்மார்களுக்கும் பயன்படும்போது அந்தக் குடும்பங்களே பயன் அடையும் என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று இன்றைக்கு கோவை மாவட்டத்தில் பல்வேறு பஞ்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. அந்த பஞ்சாலைகள் இன்னும் திறக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, நான் நாடாளுமன்றத்திலே சில ஆண்டுக்காலமாக எடுத்துச் சொன்னதற்குப் பிறகும், இங்கே சட்டமன்ற உறுப்பினராக எடுத்தியம்பியதற்குப் பிறகும், அந்த மூடப்பட்டிருக்கின்ற பஞ்சாலைகள் இன்னும் திறக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் மூலம் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஏற்கனவே அரசு 4 பஞ்சாலைகளை திறப்பதற்கு உத்தரவிட்டு, திறந்தாயிற்று என்ற செய்தி வந்ததேயொழிய அந்த 4 பஞ்சாலைகளும் திறக்கப்படவில்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இறுதியாக ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கதவடைப்புகள் நாட்டிலே உருவாவதன் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர் தோழர்கள், பாட்டாளி வர்க்கம் அதன் மூலம் பாதிக்கப்படுவதன் விளைவாக, பொருளாதார முடக்கம் ஏற்படுகிறது. நாம் பொருளாதாரத்திலே முன்னேற முடியவில்லை. மனித வாழ்க்கைக்குத் தேவையான தொழிலாளர் நலனைக் காக்க முடியவில்லை. தொழிலாளர் நலனை நாம் பேணிக் காக்க வேண்டும். கதவடைப்புகள் ஒழிக்கப்பட்டாக வேண்டும். அந்த கதவடைப்புகளை நாம் ஒழித்துக் கட்டுவதற்கு அரசு அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவும், அதுபோன்று அந்தக் குழுவில் அரசியல்வாதிகளைக் கொண்ட, தொண்டர்களையும் சேர்த்து உருவாக்கிட வேண்டும். அந்தக் குழுவின்மூலம் தீர்வு கண்டால் அவ்வப்போது கதவடைப்புகளை தீர்த்து, நாம் தொழிலாளர் நலனைக் காக்கலாம் என்று சொல்லி, தொழிலாளர் நலன் ஓங்குக என்று கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஆ. நடராசன்: தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் மானியத்தில் பேசுகிற வாய்ப்பையும் 9-வது சட்டமன்றத்தில் என்னைத் தேர்ந்தெடுத்த நம்முடைய தமிழக முதல்வர் தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மூன்றாவது முறையாகவும் நம்பிக்கையோடு என்னை இங்கே அனுப்பி வைத்த பேரூர் தொகுதி வாக்காளர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தொழிலாளர் மானியத்தைப் பொறுத்த அளவில் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை குறிப்பில் வாழ்க தொழிலாளர்-வளர்க தொழில் என்ற கோட்பாட்டின் மூலம் அரசு தொழிலாளர் நலம் பேணி அதன் மூலம் தொழில் வளர்த்து நாட்டின் நலன் காக்கும் அரசு என பிரகடனப்படுத்தியுள்ளது. இது தமிழ்நாட்டு தொழிலாளர் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கியுள்ளது என்பதை முரசறைந்து அறிவிப்பதாக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்பார்கள். ஆனால் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், நிதியமைச்சராக பொறுப்பேற்றிருக்கிற முதல்வர் அவர்கள், 1986-87 ஆம் ஆண்டு $14\frac{1}{2}$ கோடி ரூபாய் மாத்திரமே இந்தத் துறைக்கு வழங்கிய நிலையை மாற்றி, 1989-90 ஆம் ஆண்டு 59 கோடி ரூபாயை வழங்கியிருப்பதை உள்ளபடியே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, தட்டாமலேயே கேட்காமலேயே மாதவரம் பால் பண்ணை தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்து, அவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றிய முதல்வர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூடிக் கிடக்கின்ற ஆலைகளைத் திறக்கவேண்டுமென்ற முயற்சியை எடுத்து அதன் மூலம் மிகக் குறுகிய காலத்தில், 3 மாத காலம்கூட ஆகாத நிலையில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், வாசுதேவா டெக்ஸ்டைல்ஸ், கே.ஜி.எஸ். ஸ்பின்னர்ஸ் என்ற 3 ஆலைகள் மார்ச் மாதத்திற்குள் திறக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்த அருமை உறுப்பினர் இன்னும் அது ஓடவில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். (குறுக்கீடு) சொல்லி விடுகிறேன். அந்த ஆலைகள் திறப்பதற்கான சலுகைகளை அளித்து......

திரு. ஆர். அண்ணா நம்பி: தலைவர் அவர்களே, 4 பஞ்சு ஆலைகள் திறக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதேஒழிய இதுவரையில் அந்தப் பஞ்சாலைகள் கோவை மாவட்டத்தில் திறக்கப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆ. நடராசன்: ஏற்கெனவே அதைத்தான் அவர்கள் சொன்னார்கள், இப்போது கிளீனிங் வேலை நடந்து கொண்டு இருக்கிறது. விரைவில் அவைகள் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு உங்களுடைய ஆட்சிக் காலத்தில் எத்தனை ஆலைகள் மூடப்பட்டு மாதக் கணக்கில் அல்ல வருடக் கணக்கிலே கேட்பாரற்று கிடந்த நிலைமைகளையும், 6 தலைவர்கள் அதற்காக உண்ணாவிரதம் இருந்தும் அதைப்பற்றி கேளாத காதினராக இருந்த நிலைமைகளையும் அவர்களுக்கு நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். எனவே மார்ச் மாதத்திலேயே இவைகளை திறப்பதற்கான முயற்சிகளைச் செய்ததையும், அதைப்போல திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது டி. என். டி. சி. தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் என்கிற அமைப்பை உருவாக்கி 13 ஆலைகளைத் திறந்தோம். அதைப்போல டெக்ஸ்டூல் தொழிற்சாலையில் 4 ஆயிரம் தொழிலாளர்கள் மிகுந்த வேதனையோடு இருந்த நிலைமையினை எல்லாம் மாற்றி அவர்களுக்கெல்லாம் வாழ்வு அளிப்பதற்காக அந்த ஆலை திறக்கப்பட்டது.

என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய அகூரா வெல்டிங் கம்பெனி என்கிற நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய அந்தத் தொழிற்சாலை கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தான் திறக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி பஞ்சாலைகள் மூடப்பட்டிருப்பதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய தவறான ஜவுளிக் கொள்கைதான் காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும் ஐ. என். டி. யு. சி. யினுடைய தலைவராகவும் தொழிற்சங்க மேதை என்று ஐ.என்.டி.யு.சி. யினால் பாராட்டப்படுகிற மதிப்பிற்குரிய திரு. ஜி. ராமானுஜம் அவர்கள் பாராளுமன்றத்தின் முன்னால் சென்ற ஆண்டு தர்ணா செய்து மத்திய அரசாங்கத்தினுடைய ஜவுளிக் கொள்கையை மாற்ற வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள்.



மூடப்பட்டிருக்கிற ஆலைகள் திறக்கப்பட வேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனை இன்றைய தினம் மத்திய அரசாங்கம் எடுத்து நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் என்கிற ஒரு அமைப்பின் மூலம், லாபம் அடைந்த ஆலைகளை எல்லாம் அவர்களே எடுத்துக் கொண்ட நிலைமைகளையும் நாம் அறிவோம். எனவே மத்திய அரசாங்கம் ஜவுளிக் கொள்கையிலே ஒரு மாறுதலை உருவாக்கினால்தான் எதிர்காலத்திலே மூடப்பட்டிருக்கிற ஆலைகளைத் திறக்க முடியும். கோவையிலே மாத்திரம் அல்ல தமிழ்நாடு முழுவதும் மூடப்பட்டிருக்கிற ஆலைகள் மூலம் ஏறத்தாழ 15 ஆயிரம் தொழிலாளர்கள் இன்றையதினம் பட்டினியோடு இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலேகூட பவானி மில் என்கிற தொழிற்சாலையில் 700 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதிலே இலங்கையிலே இருந்து அகதிகளாக வந்த 100 பேர்களும் பணியாற்றி வருகிறார்கள். 3 மாத கால சம்பளத்தைக்கூட கொடுக்காமல் அரசாங்கத்தினுடைய சலுகைகளை பெற்ற அந்த ஆலை இன்னும் திறக்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக அந்த ஆலையை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு ஏறத்தாழ 9,000 தொழிலாளிகளுக்கு நம்முடைய அரசாங்கம் ரூ. 250 வழங்கியதற்காக நான் நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–50)

இன்னும் ஜனார்த்தனா, வசந்தா, விஷ்ணுப்ரியா, வடலூர் கங்கப்பா மில்ஸ், தமிழ்நாடு செராமிக்ஸ் விருத்தாசலத்தைச் சேர்ந்த ஒவ்வொன்றிலும் 600 தொழிலாளிகள் வீதம் பணியாற்றக் கூடியவர்கள் ஏறத்தாழ 3000 தொழிலாளிகளுக்கு இன்னும் 250 ரூபாய் வழங்கப்படவில்லை. காரணம் ஏற்கனவே 3 ஆண்டுகளுக்கு முன்னால் ரூ. 50 தரப்பட்ட காரணத்தினாலே அவைகள் வழங்கப்படவில்லை என்று தெரிகிறது. அதை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கக் கூடிய எவரெஸ்ட் என்ஜினியரிங் தொழிற் சாலை, நியூசிட்டி, ஆட்டோ ஸ்மித், அழகர் இண்டஸ்ட்ரீஸ், பீளமேடு பகுதியில் ஸ்ரீ ராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் ஆகிய என்ஜினியரிங் தொழிற் சாலைகள் மூடப்பட்டு ஆண்டுக் கணக்கிலே அவைகள் கவனிக்கப் படாமல் இருக்கிறது. அவைகளையும் இந்த அரசாங்கம் உடனடியாக தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. ஆ. நடராசன்) [1989 ஏப்ரல் 20

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வு ஊதியம் தர நம்முடைய அரசாங்கம் அறிவித்திருப்பதை இந்த நேரத்திலே நன்றி உணர்வோடு நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போன்று பனை மரம் ஏறுவோர், சைக்கிள் ரிக்ஷா, கார், லாரி, ஆட்டோ ஓட்டுனர், கட்டிடத் தொழிலாளிகள் விபத்தில் இறந்தால் 10,000 ரூபாய் வழங்குகின்ற இந்தத் திட்டத்தை அறிவித்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய கிணறு வெட்டுகின்ற தொழிலாளர்களுக்கும் அவர்கள் கிணறு வெட்டுகின்றபோது இறந்தால் அவர்களுக்கும் ரூ. 10,000 வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவு ஊழியர்கள் இரண்டு இலட்சம் பேரை பகுதி நேர உள்ளாட்சி பணியாளர்களாக மாற்றியதற்காக இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதிப்பற்றாக்குறை ஏராளமாக இருக்கின்றது என்றுசொன்னாலும் எதிர்காலத்திலே அவர்களுக்கு ஊதிய உயர்வை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை ஹரிஜன மக்கள், கூலி தொழிலாளர்களுக்கு 45,000 வீடுகள் கட்டுவதற்கு 49 கோடி ரூபாய் இந்த அரசாங்கம் அறிவித்திருப்பதைப் பாராட்டி அந்த தொழிலாளிகளுக்கு கான்கிரீட் வீடுகளாக—இடிந்து விழுகின்ற வீடுகளாக இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கட்டியதைப் போன்று கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களுக்கு 3,000 வீடுகள் கட்டுவதை நான் பாராட்டு கிறேன்.

இந்த கொள்கை குறிப்பிலே சொல்லியிருப்பதைப்போல், நம்முடைய தொழிலாளர் துறை ஆய்வாளர்கள் நல்ல நண்பர் களாகவும், ஆலோசகர்களாகவும், வழிகாட்டிகளாகவும், செயல் பட வேண்டும் என்று அறிவித்திருக்கிறீர்கள். அப்படி அறிவிக்கப் பட்டிருக்கின்ற அந்த ஆய்வாளர்கள், அதிகாரிகள் அதிகாரம் அற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் முதலாளிகளை, நிர்வாகிகளை கட்டுப்படுத்தக்கூடிய நிலைமையிலே இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்த அரசாங்கம் அவர்களுக்கு உரிய அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அதைப்போலவே தொழிலாளர் நலச் சட்டங்கள், உடன் படிக்கைகள், நீதிமன்றத் தீர்ப்புகள் செயல்படுத்துவதில் அரசு தீவிரமாகவும், உறுதியாகவும் இருக்கும் என கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன்.



1989 ஏப்ரல் 20] (திரு. ஆ. நடராசன்)

480 நாட்கள் பணிபுரிந்தால் நிரந்தரம் என்ற ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் கொண்டுவரப்பட்ட சட்டம் 1981 ஆம் ஆண்டிலிருந்து அது செயல்படாமல் இருக்கின்ற காரணத்தினால் அது ஒரு உண்மையான சட்டமாக—இந்தக் கொள்கைக் குறிப்பிலே சட்ட சிக்கல்கள் இருக்கின்றன, விதி முறைகளை நடத்துவதில் உள்ள இடையூறுகளை நீக்கி தக்க திருத்தங்கள் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப் பதை நான் வரவேற்க கடமைப்பட்டிருககிறேன். நடப்பு ஆண்டிலே 10,000 தொழிலாளிகள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு மகிழ்ச்சியுடையதாக இருக்கிறது. கோவையிலே மாத்திரமல்ல. தமிழ்நாட்டிலே பல்வேறு பகுதிகளில் தொழிலாளர் நலத்துறை அலுவலகங்கள் மூலை முடுக்குகளில் உள்ளன. அவை ஒரே இடத்தில் அதுவும் சொந்தக் கட்டி டத்திலே அமைக்கப்படுமேயானால் மிகவும் வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக கோவையைப் பொறுத்தவரையில் ஜெயில் காம்பவுண்டிலே ஏராளமான இடம் இருக்கிறது. அங்கே ஒரே இடத்திலே அதற்கான கட்டிடத்தை வழங்க வேண்டும். அந்த அலுவலகங்களில் அமர்வதற்குக்கூட நாற்காலி இல்லாத நிலைமை இருந்து வருவதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழிலாளர் துறை உதவி ஆணையாளர் (சமரசம்) 1,2, 3 என்று 3 அதிகாரிகள் தொழிலாளர் அலுவலா ஒருவரும் தொழிலாளர் சம்பந்தப்பட்ட வழக்குகளை கோவையிலே கவனித்து வருகிறார்கள். 1986 ஆம் ஆண்டு முதல் தொழிலாளர் துறை உதவி ஆணையாளர் (சமரசம்) 1, 2 ஆகிய அதிகாரிகள் நியமிக்கப்படாமல் அந்த இடங்கள் காலியாக இருக்கின்ற காரணத்தினாலே ஏராளமான தொழி லாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமையை நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்காட்டி எதிர் காலத்தில் அந்த காலி இடங்களை நிரப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே ஈ, எஸ். ஐ. மருத்துவமனை என்னுடைய தொகுதியிலே 4 இடங்களிலே கட்டுவதற்கு பல ஆண்டுகளாக அதற்கான நடவடிக்கைகள் எடுத்து, அவைகள் இன்னும் கட்டப் படவில்லை. சுந்திராபுரம், குனியமுத்தூர், ஒத்தக்கால் மண்டபம், மதுக்கரை ஆகிய இடங்களில் உடனடியாக மருத்துவ மனைகளை கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெண் தொழிலாளர்களைப் பொறுத்த அளவில், மாலை ஆறு மணிக்கு மேல் வேலையில் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற விதிமுறையை நாம் கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும். ஆறு மணிக்கு மேல் 10 மணி வரை அனுமதி பெறறு வேலைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்திலே சொன்னார்கள். அதன்மூலம், நிர்வாகிகள் இரவு முழுவதும் வேலைக்குப் பணி அமர்த்துகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர் போராட்டத்திலே வன்முறை இல்லாத இடங்களிலே போலீஸ் தலையிடக்கூடாது. வேலை நிறுத்தம் போன்ற இடங்களில் அப்ரெண்டிஸ் என்ற பெயராலே கருங்காலிகளையும் அதைப்போல, டிரெயினிங் பயிற்சியாளர்கள் என்ற பெயராலே வேலை நிறுத்தத்தை உடைப்பதற்கான நடவடிக்கைகளை நிர்வாகம் எடுத்துக் கொண்டு இருக்கிறபோது, போலீஸ் அங்கே அனுமதிக்கப்படக்கூடாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசியல் ரீதியான வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்படும் என்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் அவையிலே அறிவித்தார்கள். அதைப்போல, தொழிலாளர்கள் மீது நியாய மற்ற முறையில் கடந்த கால அரசாங்கத்தாலே போடப்பட்ட வழக்குகள் ஏராளமாக இன்றையதினம் வழக்கு மன்றத்தில் நடந்து கொண்டு இருக்கிற நிலைமை இருக்கிறது. 15 நாட்களுக்கு ஒரு முறை வழக்கு மன்றம் சென்று கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, பஞ்சாலைகளைத் திறக்க வேண்டும் என்று ஆறு சங்கத் தலைவர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது, ஏராளமான தொழிலாளர்கள் மீது..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஆ. நடராஜன்: ஆறு தலைவர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது வேண்டுமென்றே பல வழக்குகளைப் போட்டு, தொழிலாளர்களை நசுக்குவதற்காக, கடந்த கால அரசாங்கத்திலே செய்த காரியத்தை உடனடியாக அந்த வழக்குகளை வாபஸ் பெறவேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களிடம் ஏராளமான இ. பி. எஃப். பணம் பிடிக்கப்பட்டு, ஏறத்தாழ 352 இலட்சம் ரூபாயை முதலாளிகள் தங்கள் கையிலே வைத்துக் கொண்டு, அந்தத் தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதியிலே போடாமல் இருக்கிறார்கள். அந்த நிர்வாகங்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா வழக்குகளையும் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று முந்தைய அரசாங்கத்திலே மிகப் பெரிய சாதனையாகச் சொல்லப்பட்டதே தவிர, அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், மாதவரத்திலே இருக்கிற சதர்ன் அலாய் பவுண்டரீஸ்-இலே வேலை செய்த 270 தொழிலாளர்களுக்காக, எங்களுடைய தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைச் செயலாளர் மீதே நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதனை வழக்குமன்றத்திற்கு இந்த அரசாங்கம் அனுப்பவில்லை. உடனடியாக அவைகளை, இதுபோன்ற நிலைமைகளை மாற்றி, எல்லா வழக்குகளையும் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





கூட்டுறவுத் தொழிலாளர் ஊதியம் ஒரே சீராக இல்லை ஒவ்வொரு கூட்டுறவு அமைப்பிற்கும் தனித்தனிச் சம்பளம் என்ற நிலைமை இருக்கிறது. அவைகளை மாற்றி ஒரே அமைப்பான சம்பள விகிதத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் சட்டம், அதைப்போல, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் வேலைகள் மற்றும் பணி நிலைமைகள் (முறைப்படுத்துதல்) சட்டம், 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர்கள் சட்டம், இதுவரை இவைகள் எல்லாம் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி இவைகளையெல்லாம் நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பஸ்களிலே, லாரிகளிலே பணியாற்றுகிற தொழிலாளர்கள் மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்று வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நம்முடைய, அரசாங்கப் போக்குவரத்து ஊழியர்களின் சம்பளத்திற்கு ஒத்த சம்பளமாகத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதுகாப்புத் தொழிலாளர்கள் ஏஜென்சி மூலம் பாதுகாப்புத் தொழிலாளர்கள் நியமிக்கப்படுவதைத் தடுத்து, அதற்கான உரிய சட்டம் இயற்ற இருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தத் தொழிலாளிகள் 300 ரூபாய் சமபளத்திலேதான் இன்றைய தினம் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல, தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தை மாற்றியமைக்க உள்ளதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கோவையிலே இருக்கிற என்ஜினியரிங் தொழிற்சாலைகளில் கோக், பிக்-அயர்ன் போன்றவைகள் மத்திய அரசாங்கத்தினாலே முறையாகத் தரப்படாத காரணத்தினால் ஏற்பட்டிருக்கிற தட்டுப்பாட்டின் காரணமாக 10,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்கு வரவேண்டிய கோக்கும், பிக்-அயர்னும் பெற்றுத்தர நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், பாரம் தூக்கும் தொழிலாளர்கள் போன்ற பல்வேறு தரப்பட்ட தொழிலாளர்களுக்கு நம்முடைய அரசாங்கம் குறைந்தபட்ச சம்பளத்தை அவ்வப்போது மாற்றி அமைப்பது தினச் சம்பளம் 15 ரூபாய்க்குக் குறையாமல்

நிர்ணயிப்பது, எல்லாத் தொழிலுக்கும் அகவிலைப்படி நிர்ணயிப்பது, அகவிலைப்படியை விலைவாசிப் புள்ளியுடன் இணைப்பது போன்ற நல்ல நடவடிக்கைகள் மேற்கொள்வதை நான் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1983–84 ஆம் ஆண்டு சிம்சன் தொழிற்சாலையிலே 92 நாட்கள் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில், அப்போதைய முதல்வர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி, நிர்வாகத்தால் பழிவாங்கப்பட்டு வேலையிழந்த 15 தொழிலாளர்கள் பிரச்சினையை முதல்வர் முடிவிற்கு விடவேண்டும் என்று முடிவு செய்து அந்தப் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த முதல்வர் அவர்கள் மூன்று மாத காலத்திற்குள் தன் முடிவை அறிவிக்கவில்லை. அதனால் முதல்வர் அவர்களு டைய முடிவு அறிவிக்கப்படாத காரணத்தால் 15 தொழி லாளர்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ஆ. நடராசன்;** பாதிக்கப்பட்ட 9 தொழிலாளிகள் செட்டில்மென்ட் செய்து கொண்டார்கள். தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் சார்பில் ஆறு பேர் வழக்கு நடத்தி, 5½ ஆண்டுக் காலத்திற்கு முழுச் சம்பளமும், வேலையும் கொடுக்க வேண்டும் என்ற தீர்ப்பைத் தந்து இருக்கிறார்கள். உடனடியாக அரசு அவர்களை வேலைக்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், காரணம் 1971 இல் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 400 சிம்சன் தொழிலாளர்களுக்கு முழுச் சம்பளத்தை 1½ ஆண்டு காலத்திற்குப் பின்னாலே தந்து வேலையையும் பெற்றுத் தந்தார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள் கிறேன்.

(முற்பகல் 11-00)

வீட்டுவசதி வாரியம் தொழிற்சாலை சட்டத்தின் கீழ் வருவதால் அவர்களுக்கு போனஸ் 8.33 சதவீத அளவில் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், வாரியம் தொழிற் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மீது கடந்த காலத்திலே எடுக்கப்பட்ட பழி வாங்கும் நடவடிக்கையை உடன் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாரிய பணியாளர்கள் நியமனம், பணி உயர்வில் முறை கேடுகளை களைந்து 'பணி முதுநிலை பட்டியல்' தயாரித்து வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் மாவட்ட செய்தி அலுவலராக பணியாற்றிய திரு. பார்த்தசாரதி என்ற அதிகாரியை அவசர காலத்தில் 1976 ஆம் ஆண்டு வேண்டுமென்றே பணி நீக்கம் செய்தார்கள். இவர் ஒரு விடுதலைப் போராட்டத் தியாகி



யினுடைய மகன் என்ற காரணத்தால் வழக்கு மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த அனைவருக்கும் மீண்டும் வேலை தரப்பட்டு விட்டது. ஆனால் இவரால் வழக்கு தொடர முடியவில்லை. எனவே மனிதாபிமான அடிப்படையில் அவருக்கு மீண்டும் வேலை தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒரு செய்தி. கோவையில் இருக்கக்கூடிய ஐ.டி.ஐ. தொழிற் பயிற்சி நிலையத்திலே பணியாற்றக்கூடிய பணிமனை உதவியாளர்கள், பண்டக பணிமனை உதவியாளர்களுக்கு கொடுக்கக்கூடிய அடிப்படை ஊதியத்திலே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை களைய வேண்டும் என்று கேட்டுக்கோள்கிறேன். சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் இளநிலை பயிற்சியாளர்கள் கிரேடு ஒன்று, இரண்டு என்ற முறைகளை உடனடியாக ரத்து செய்து ஊழியர்களிடையே சுமுகமான நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு 150 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளில் ஏராளமானவைகளில் தொழில் கருவிகள் இல்லாமல் இருக்கிறது. அவைகள் மீது தக்க நடவடிக்கை எடுத்து முறைகேடுகளை களைய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு உழைக்கும் மக்களுக்காக அவர்களுடைய உரிமைகளை பாதுசாக்கக்கூடிய ஒப்பற்ற அரசாக திகழ்கின்ற இந்த அரசினுடைய மானியக் கோரிக்கைகளை வரவேற்று இதற்காக நிதி ஒதுக்கீடு செய்வதைப் பாராட்டி. என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தித் துறை, சுற்றுலாத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களை விளக்குவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய துறையிலே தொழில்நுட்ப கலை பிரிவு, செய்தித்துறை பிரிவு ஆகிய இரண்டும் 'மாஸ் மீடியா' என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் நாள்தோறும் பாமர மக்களால், அறிஞர்களால் தொடர்பு கொள்ளக்கூடிய துறைகள் ஆகும். கலைத் துறையை திரைப்பட நுட்பவியல் துறையின் கீழ் முழுமையாக நாம் கொண்டுவராவிட்டாலும் திரைப்படங் கள் வெளியிடுவதை மட்டும் சினிமாட்டோகிராப் ஆக்ட்-ன்கீழ் நாம் வகைப்படுத்திக்கொண்டு இருக்கிறோம். எல்லாத் தொழிலாளர்களுக்கும் அமைப்பு உண்டு; எல்லாத் தொழி லாளர்களுக்கும் சட்டம் உண்டு; எல்லாத் தொழிலுக்கும் வரை முறை உண்டு. வக்கீலாக இருந்தாலும், மருத்துவர்களாக இருந்தாலும், சார்ட்டர்ட் அக்கவுண்டென்ட் ஆக இருந்தாலும் அதை முறைப்படுத்துவதற்கு,, ஒழுங்குப்படுத்துவதற்கு—ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு சட்டம் வழிவகை செய்கிறது. ஆனால் பாமர மக்களால் நாள்தோறும் பல கோடி ரூபாய் அள்ளிக் கொடுத்து தயாரிக்கும், வளர்க்கும் ஒரு துறைதான் கலைத்துறை ஆகும். அந்தத் துறையில் இருக்கக்கூடிய

யாராக இருந்தாலும் நடிகராக இருந்தாலும் நடிப்புத் துறையில் என்ன பணி ஆற்றினாலும் அதற்கென்று இதுவரை ஒரு சட்ட விதியும் நம்முடைய 'சினிமாட்டோகிராப் ஆக்ட்'-ன் கீழ் கொண்டுவரப்படவில்லை என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதை ஒரு தொழிலாக இன்னும் நாம் அறிவிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் பஸ்களை தேசியமயம் ஆக்கியிருக்கிறோம், குதிரைப் பந்தயத்தை நடத்தக் கூடியவர்களின் சொத்துக்களைக்கூட ஒரு சட்டத்தைப்போட்டு நாம் கையகப்படுத்தியிருக்கிறோம். சாதாரண மனிதனால் இன்னும் சொல்லப்போனால் எல்லா மக்களாலும் தொடர்பு கொள்ளக்கூடிய துறை எந்தத் துறையாக இருந்தாலும் அதை நாம் தேசியமயம் ஆக்கிவிடுகிறோம். இந்தத் திரைப்பட நுட்பத் துறையைப் பொறுத்த வரையில் அதை தொழிலாகவோ வியாபாரமாகவோ இல்லாவிட்டால் ஒரு துறையாகவோ மத்திய அரசாங்கமும் அறிவிக்கவில்லை, மாநில அரசாங்கமும் அறிவிக்கவில்லை, வகைப்படுத்தவில்லை என்பதை முதலில் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய இந்திய அரசியல் சட்டத்தில். யாரும் எந்தத் தொழிலையும் செய்யலாம், எந்த வியாபாரத்தையும் செய்யலாம். "All citizens shall have the right to practise any profession or to carry on any occupation trade or business" என்று அரசியல் சட்டத்தின் பிரிவு 19 (ஜி)-ல் இருக்கிறது. அதில் உட்பிரிவு, கிளாஸ் 2 இருக்கிறது. மாநில அரசாங்கம் நினைத்தால் ஒரு ரீசனபிள் ரெஸ்ட்ரிக்‌ஷனை அதில் போட்டு வகைப்படுத்துவதற்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. என்ன காரணமோ தெரியவில்லை பல ஆண்டுக்காலமாக இதை யாராவது பார்த்தார்களா? இல்லாவிட்டால் நமக்கு ஏன் இந்த வம்பு என்று விட்டு விட்டார்களா என்று எனக்குத் தெரியாது. இந்தத் துறையில் எல்லோரும் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காகவோ என்னவோ ஒரு விதிவிலக்கு அளித்திருக்கிறார்களோ என்று எனக்குத் தெரியவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்களும் கலைத் துறையில் தொடர்பு கொண்டவர் என்ற காரணத்தினால் இந்தச் சட்டப் பிரிவை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்! இங்கே அதிகமான வருமானம் ஈட்டக்கூடியவர்கள் அரசாங்கத்திற்கு அல்ல, இருக்கிறார்கள். அதிகமான வருமானத்தை தனி நபர் ஈட்டக்கூடிய ஒரே ஒரு தொழில் இது. பெரிய பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ் தவிர. இது ஒரு பெரிய தொழில் ஆகும், இந்தத் தொழிலில் ஈடுபடக்கூடியவர்களை ஏன் அரசாங்கத்தின் மூலமாக ஈடுபடுத்தக் கூடாது. நீங்கள் திரைப்பட நுட்பக் கல்லூரியை வைத்திருக்கிறீர்கள். அந்தக் கல்லூரியிலிருந்து வெளியே வரும்போது அந்தக் கல்லூரியில் பயின்ற நடிகர்கள், நடிகைகளை வைத்து ஏன் அரசாங்கமே படத்தை எடுக்கக் கூடாது என்று ஒரு ஆலோசனையை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் இந்தத் துறைக்கு வரக்கூடியவர்கள், நான் எல்லோரையும் சொல்லவில்லை. ஒரு சிலரைத் தவிர பலபேர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். "Survival of the fittest" என்று சொல்லு



வோமே, அதைப்போலத்தான். எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்கக்கூடிய ஒரு துறையாக அது இல்லை. ஆகவே எப்படி அமெரிக்க நாட்டில் ஹாலிவுட்டில் நேரடியாக அவர்களைத் தேர்ந்தெடுத்து இந்தப் படத்திற்கு நீங்கள் நடிக்க வேண்டும்; இந்தப் படத்திற்கு நீங்கள் நடிக்க வேண்டுமென்று சொல்லி அவர்கள் மேற்பார்வையிட்டு அந்தத் துறையை எப்படி இயக்குகின்றார்களோ அதுபோல ஏன் நாம் அதை இயக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும்.

இன்னொன்று, இங்கே பலபேருக்கு அனுபவம் இருக்கின்ற காரணத்தினால் சொல்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அனுபவம் உண்டு. ஒருவரே கதை எழுதி, ஒருவரே அந்தப் படத்திலே நடித்து; ஒருவரே அந்தப் படத்தை வெளியிட்டு, ஒருவரே அந்தப் படத்தை திரையரங்குகளில் காட்டினால் MRTP Act – Monopolies and Restrictive Trade Practices Act இருக்கிறது உங்களுக்கு எல்லோருக்கும் தெரியும். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்தான் அதற்குத் தலைவராக இருக்கிறார். யாராவது அங்கே எடுத்துச் சென்றிருக்கிறார்களா காரணம் இதுவரையில் அந்தத் துறை சாதாரண மனிதனுடைய துறை. அதுவே ஒரு தொழிலதிபர் தானே கச்சா பொருளை உருவாக்கித் தானே ஒரு ஃபினிஷிங் புராடக்டை உருவாக்கினால் MRTP Act வந்துவிடும். ஆனால் இங்கே அப்படி அல்ல. இவரே கதை எழுதலாம்; இவரே படம் எடுக்கலாம்; இவரே நடிக்கலாம்; இவரே திரையரங்குகளில் வெளியிடலாம். இன்னும் சொல்லப்போனால் அவர்களே விளம்பரமும் செய்யலாம். இத்தனைத் தொழிலையும் ஒருங்கிணைத்து செய்யக்கூடிய அந்தத் துறைக்கு இந்தச் சட்டம் இதுவரையில் யாராலும் பயன்படுத்தப் படவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்,

இன்னொன்று "மாஸ்மீடியா" என்ற உடன், இந்தத் துறையில் சிறந்து விளங்கிய ஒரிருவர் அரசியல் கட்சிகளில் தொடர்பு கொண்டவர்கள். நம்முடைய மறைந்த முதலமைச்சர் அவர்களும், சிவாஜி கணேசன் அவர்களும் அந்தத் துறையில் இருந்து நெடிய காலமாக அந்தத் துறையை வளர்த்து இருக்கிறார்கள். அவர்கள் நாடகத்திலே நடித்து பிறகு திரைப்படத் துறைக்கு வந்து இந்தத் துறையை நன்கு வளர்த்தார்கள். அவர்களால் தான் இந்தத் துறைக்கே ஒரு அந்தஸ்து கிடைத்தது. ஒரு காலத்தில் இந்தத் துறைக்கு அந்தஸ்தே கிடையாது. இன்றைக்கு வரக்கூடியவர்கள் அப்படியல்ல. இன்றைக்கு வரக்கூடியவர்கள் ஒரு வியாபார நோக்கோடு எந்தெந்தப்படங்களை வெளியிட்டால் மக்களுக்கு ஏற்புடைமை இருக்கிறதோ அதைத் தான் வெளியிடுகிறார்கள். மக்களைத் திருத்தக்கூடிய அளவிற்கு எல்லாப் படங்களும் வெளிவருகிறதா என்பதை ஒரு கேள்வியாக நான் இங்கே கேட்க கடமைப்பட்டிருக்கிறேன். யாரோ ஒருவர் ஒரு தவறைச் செய்யலாம். ஊசி போட்டு ஒருவரைக் கொல்லுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள், அந்த நிகழ்வையே படமாக எடுக்கும் போது, தமிழ்நாட்டிலுள்ள எல்லோருக்கும் இதுபோன்ற எண்ணங்கள் தோன்றாதா என்பதுதான். காரணம் Man is easily

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 ஏப்ரல் 20
(முற்பகல் 11–10)

susceptible to crime. அதாவது ஒரு சூழ்நிலை உருவானால் அதை தவிர்க்க முடியாது. ஆகவே இதுபோன்ற படங்களை சென்சார் அனுமதித்தாலும் நம்முடைய தமிழகத்தில் பல பட நிறுவனர்களை அரசாங்கம் அழைத்தே கூட உடனே பேசலாம். காரணம் நீங்கள் சட்டத்தைக் கொண்டுவருவீர்களோ கொண்டு வரமாட்டீர்களோ எனக்குத் தெரியாது.

இன்னொன்று, விளம்பரம். அதிகமான விளம்பரம் பெறக் கூடியவர்கள் திரைப்படக் கலைஞர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இது ஒரு கலை; தொழில் அல்ல. It is an art. இந்தக் கலை மூலமாக வரக்கூடியவர்கள் கொஞ்சம் வந்து பின்னால் அரசியலுக்கு வந்துவிடுகிறார்கள். கொஞ்சம் பணம் சேர்ந்து விட்டால் அரசியலில் அந்தஸ்து பெறலாமே என்ற அவா தான். அந்த அவாவில் எனக்கு ஒன்றும் இறுப்பு கிடையாது. ஆனால் அவர்களுடைய கடந்த கால எண்ணங்கள், கடந்த கால வாழ்க்கையை நாட்டு மக்கள் புரிந்துகொள்வது கிடையாது. ஒரு அரசியல் கட்சித் தலைவர் தவறு செய்தால் உடனே பத்திரிகையில் வந்துவிடுகிறது. ஆனால் இப்படிப்பட்டவர்கள் விளம்பர, பிரச்சார செயலாளர்களாக ஆங்காங்கே மாறி விடுகிறார்கள். தியாகம் இல்லாமல், உழைப்பு இல்லாமல் வரக்கூடியவர்களை நம்முடைய கட்சிகளும் பயன்படுத்துகின்றன. மக்களால் விளம்பரம். பொருளுக்கு விளம்பரம் கொடுத்தவர்கள் எல்லாம் வாக்குகளைப் பெறுவதற்கு விளம்பரக் கருவிகளாகப் பயன்படுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஒரு பனியனுக்கு 'அட்வர்டைஸ்மென்டாக' இருந்து, மக்களை அணுகி வாக்குகளைக் கேட்பது மக்கள் பனியன்கள் வாங்குவதற்கு வேண்டுமானால் அவர்களைப் பயன்படுத்தலாமே ஒழிய மக்களுடைய வாக்குகளைப் பெறுவதற்கு, மனப்பக்குவம் இல்லாத மக்களை ஏமாளிகளாக மாற்றிவிடக் கூடாது என்பது எனக்கிருக்கிற ஆதங்கமாகும். ஆகவே அதை மறந்துவிடக் கூடாது.

இன்னொன்று. அந்தத் துறையில்தான் அதிகமாகப் பட்டங்கள் வழங்குகிறார்கள். ஏற்கெனவே அதைப்பற்றி பேசினேன்; அதையும் பார்த்தேன். ஸ்டேட்டாக இல்லாவிட்டாலும் மத்திய மாநில அமைச்சர்கள் கலந்துகொள்ளக்கூடிய நிகழ்ச்சிகளில் இதைப்போன்ற பட்டங்கள் பெரிய பெரிய பட்டங்களாக அளித்துவிடுவது—உண்மையிலேயே நாம் இன்றைக்கு பட்டங்களை எல்லாம் அளித்து விட்டோம். நாம் முதலிலே அளித்துவிட்டோம்: மறைத்துவிட்டோம்; லாசாகி எடுத்து விட்டோம்.

புதிதாக ஏதோ மக்களிடம் அவர்கள்தான் தொடர்புகொள்ள உரிமை படைத்தவர்களைப் போல விளம்பரம் காட்டுவதை ஓரளவுக்கு கட்டுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பத்திரிகையில் வரக்கூடிய விளம்பரங்கள் அப்படித்தான். ஒரு பக்கம் விளம்பரம். பக்கத்திலே ஒரு அடைமொழி அவர்களுடைய பெயரைப்போட்டு, பத்திரிகையில், வாரப்பத்திரிகைகள்



1989 ஏப்ரல் 20] [திரு. பி. எச். பாண்டியன்]

ஆனாலும் அட்டைகளில் படத்தைப் போட்டால் கூட, அவர்களைப் போடாவிட்டால் விலை போகாது என்ற சந்தேகத்தோடு அப்படிப்பட்டவர்களை விளம்பரப்படுத்துகிறார்கள் என்பது என்னுடைய வேதனையாகும். நல்ல அறிஞர்கள் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் பொது வாழ்க்கைக்கு வந்திருக்கக் கூடிய ஜனாதிபதி இருக்கிறார், பிரதமர் இருக்கிறார், அமைச்சர்கள் இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் நாட்டில் அடையாளம் காட்டினால்தான் ஒரு நாடு ஒழுங்காக வளரமுடியும் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு காலத்திலே உங்களுடைய படத்தையும் எல்லாப் பத்திரிகைகளிலும் போட்டார்களே;

**திரு. பி. எச். பாண்டியன்:** அதுவும் வியாபாரம் தான். சில பத்திரிகைகள் நல்ல எண்ணத்தோடு போட்டார்கள். சில பத்திரிகைகள், அவர்களுக்கு ஏற்பப் போட்டார்கள். குறை சொல்வதற்காக கூட போட்டிருக்கலாம்.

செய்தித் துறையைப் பொறுத்தவரையில் இந்திய அரசாங்கம் பத்திரிகை விளம்பரத்திற்காகச் செலவழித்த தொகை 700 கோடி ரூபாய் இந்த ஆண்டு. நம்முடைய அமைச்சரைக் கேட்டேன். தமிழக அரசு எவ்வளவு ரூபாய் செலவழித்தது என்று கேட்டேன். ஓராண்டுக்கு விளம்பரமாக 6 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு விளம்பரத்தை நாம் கொடுக்கும்போது எந்த அளவுக்கு மக்களுடைய எதிர்பார்ப்புகள் இருக்கும் என்பதுதான். பத்திரிகைகளிலிருந்து என்னென்ன செய்தி வர வேண்டும், என்னென்ன விவகாரங்கள் நாட்டு மக்களுக்கு நல்லது என்பதை த்தர வேண்டும் என்பதே இது போன்ற செலவுகள் நமக்கு குறிப்பிட்டுக் காட்டுகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இதுதான் அக்கவுன்டபிளிட்டி. நான் அன்றைக்கே சொன்னேனே 700 கோடி ரூபாய் வரை அரசாங்கம் செலவழித்தால்இவ்வளவு பணமும் மக்கள் பணம்; மக்களுடைய வரிப்பணம்; ஆகவேதான் மக்களுக்கு கணக்குச் சொல்லவேண்டிய பொறுப்பு எல்லாத் துறைக்கும் உண்டு. பத்திரிகையையும்சேர்த்துதான் சொல்கிறேன். இதில் விதிவிலக்கு யாருக்கும் கிடையாது. யாராக இருந்தாலும், ஜனாதிபதியாக இருந்தாலும் மக்களுடைய வரிப்பணத்தைப் பெறக்கூடியவர்கள் மக்களுக்கு கணக்குச் சொல்லக்கூடிய பொறுப்பிலே இருக்கிறார்கள் என்பதை மறக்கக்கூடாது. செய்தித்துறை அமைச்சர் என்பதால் நான் சொல்கிறேன். டி. வி.யி-ன் போக்கை ஏற்கெனவே நாம் கண்டித்திருக்கிறோம். அது பல்வேறு நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுகிறது. அதை அரசியல் காரணங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.

ஒரு கட்சியில் ஊர்வலத்தை, அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அதைக் காட்டுவதற்காக நாம் அதைப் பயன்படுத்தக் கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணமாகும். அப்படி

என்றால் எல்லா கட்சிகளின் ஊர்வலங்களையும் காட்ட வேண்டும். ஒரு கட்சியின் கொள்கைகளை, ஒரு கட்சியின் செயலாளர் அளிக்கக்கூடிய பேட்டிகளை நாம் டி.வி. யில் காட்டினால், தமிழ்நாட்டில் பல்வேறு கட்சிகள் இருக்கின்றன. அத்தனை கட்சிகளுக்கும் நேரம் இருக்காது என்பதுதான் என்னுடைய எண்ணமாகும். இங்கே நேற்றையதினம் கூட பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதம் குறித்து டி.வி. யில் சொல்லப்படவில்லை. நான் இரவிலே டி.வி. பார்த்த காரணத்தால் இதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவைக்கு வராதவர்கள் பற்றிய செய்தி மட்டுமே சொல்லப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த மானியக் கோரிக்கை, அந்த விவாதத்தில் பங்குகொண்ட உறுப்பினர்களின் பெயர்கள், அவர்களுடைய விவாதங்கள் பற்றிய விவரங்கள் எல்லாம் அங்கே சொல்லப்படவில்லை இதை எங்கே போய்ச் சொல்வது? ஒரு நம்பிக்கையோடுதான் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே செய்தித் துறை அமைச்சர் அவர்கள் - செய்தித் துறை என்றால் டி.வி. க்கும் சேர்த்துத்தான் நீங்கள் அமைச்சர் என்று வைத்துக்கொள்ள வேண்டும். காரணம் இங்கே நாம்தான் —நேரடியாக அமைச்சரோடு பேசி இப்படி, இப்படி தமிழகத்தில் செய்திகளை நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துகொள்ள விரும்புகிறேன்.

ஆகவே இந்த அவையிற்கு என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நான் நன்றி சொல்லி அமைகிறேன், நன்றி.

*திரு. பொ. முருகேசன்: மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19 ஆம் நூற்றாண்டின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து வரும், சீர்கெட்டுக் கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பி அவர்களிடம் பெரும் மாறுதலைக் கண்ட வெண்தாடி வேந்தன் தந்தை பெரியாரைத் தலைவராக ஏற்று அவரின் கொள்கைகளைத் தமிழகம் எங்கும் தன்னுடைய சிங்காரத் தமிழில் கூறி புது மறுமலர்ச்சியை உண்டாக்கிய தமிழ் அன்னையின் தலைமகன் பெரியாரின் முதல் தொண்டன், இன்று எங்களை வழி நடத்திச் செல்கிற தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இரவலாக உன் இதயத்தைத் தா என்று கேட்கப்பட்ட அன்பு அண்ணன், எல்லோராலும் அண்ணா அண்ணா என்று அன்போடு அழைக்கப்பட்ட தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் காஞ்சித் தொகுதியின் சார்பாக இந்த அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்ததற்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



(முற்பகல் 11-20)

இன்றைய தினம் தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்கின்ற மானியக் கோரிக்கையின் கீழ் எனக்கு பேசுகிற வாய்ப்பு தந்தமைக்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிலாளர் நலன் பற்றிப் பேசுகிற நேரத்தில் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு அவர்களுடைய நலனில் அக்கறை கொண்ட அரசு என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு பொருளாகும். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மூடப்பட்ட ஆலைகள் எல்லாம் திறக்கப்பட்டு வேலைவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த நடவடிக்கையின் காரணமாக கோவை தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், கோவை வாசுதேவா டெக்ஸ்டைல்ஸ், கோவை கே.ஜி.எஸ். ஸ்பின்னிங் மில்ஸ் என்ற மூன்று ஆலைகள் சென்ற மார்ச் மாதத்தில் திறக்கப்பட்டு இன்றைக்கு பல்லாயிரம் தொழிலாளர்களின் குடும்பங்கள் கலைஞரை வாழ்த்துகிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மூடப்பட்டிருக்கின்ற ஆலைகளையும் திறக்கின்ற அந்த வாய்ப்பை இன்றைக்கு இந்த அரசு உருவாக்கிக்கொண்டிருக்கிறது. எனவே இந்த அரசைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியான காஞ்சிபுரத்தில் நீண்டகாலமாக விடப்பட்ட கோரிக்கை, ஒரு இரண்டாயிரம் தொழிலாளர்களுக்காவது வேலைவாய்ப்பு பெறக்கூடிய ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி அண்ணாவின் பெயராலே அது இயங்கவேண்டும் என்ற கோரிக்கையை இந்த அரசு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், காஞ்சிபுரம் தாலுக்காவை பின்தங்கிய தாலுக்காவாக அறிவித்து தொழில் வளர்ச்சி ஏற்பட அரசு நடவடிக்கை எடுக்குமாறும் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுவுமின்றி, காஞ்சிபுரம் வட்டாரத்தில் கரும்பு பயிர் அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால் காஞ்சிபுரத்திலிருந்து சுமார் 70 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால்தான், படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையும், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையும் உள்ளது. எனவே காஞ்சிபுரத்திலே ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைத்துக் கொடுத்தால் விவசாயிகளுக்கு அது நன்மையாகும். அந்த பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற சூழ்நிலை ஏற்படும். எனவே அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறு இந்த அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சுற்றுலாவைப் பொறுத்தவரையில், இந்திய அரசு நடத்திய ஆய்விலிருந்து 58 இடங்கள் மிகச்சிறந்த சுற்றுலாத் தலங்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதில் தமிழ்நாட்டில் முக்கிய தலங்களாக 11 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, குறிப்பாக, சென்னை, மதுரை, இராமேஸ்வரம், திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம், மாமல்லபுரம், கன்னியாகுமரி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், நாகப்பட்டிணம், கொடைக்கானல் ஆகிய 11 இடங்களையும் இன்றைக்கு சுற்றுலாத் தலங்களாக அறிவிக்கப் பட்டிருக்கின்றன. என்ன காரணத்தினாலோ, தொன்மை வாய்ந்த சரித்திர பிரசித்தி பெற்ற காஞ்சி மாநகரம் இதில் சேர்க்கப் படாமல் இருப்பது வருந்தத்தக்கது ஆகும். எனவே அறிவிக்கப் பட்ட இந்த 11 இடங்களோடு காஞ்சி மாநகரம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இது சுற்றுலா நகரமாக இருக்கின்ற காரணமாகத்தான் சுற்றுலா பயணிகள் தங்குவதற்காக ரூ. 40 லட்சம் செலவில் சுற்றுலா இல்லம் மத்திய அரசு நிதியோடு இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட சிறப்புப் பெற்ற காஞ்சிபுரம் நகரத்தையும் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக அறிவித்து அந்த 11 இடங்களோடு இதையும் சேர்த்து 12—வது நகரமாக அறிவித்து, வெளிநாட்டினரை கவரும் சுற்றுலா தலமாக அறிவித்து, காஞ்சி மாநகரை அழகிய நகரமாக் உருவாக்கித் தருமாறு இந்த அரசை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சுற்றுலா பயணிகளை கவர்கின்ற இந்த காஞ்சிமாநகரம் இன்றைக்கு குடிநீர் பிரச்சினையாலே பல ஆண்டுகளாக தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கின்றது. குடிநீர் பிரச்சினை இருந்தாலும்கூட, இந்த ஆண்டு தொடர்ந்து மழையின்மை காரணமாக குடிநீர் பிரச்சினையால் பெரும் ஆபத்தை காஞ்சி மாநகரம் எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறது. குடிநீர் பிரச்சினையால் சுற்றுலா பயணிகள் இந்நகரத்திற்கு சுற்றுலா வரவே அஞ்சுகின்ற நிலைமைகள் ஏற்படும். எனவே இந்த அரசு குடிநீர் பிரச்சினையை உடனடியாக கவனித்து, சுற்றுலா பயணிகளை கவர்கின்ற வகையில், குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில், நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா பிறந்த ஊர் என்கிற பிரசித்தி பெற்றது. அதுதான் என்னுடைய தொகுதியும் கூட, ஆனால் அங்குள்ள மக்கள் அடிப்படை வசதிகளை கூட பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லவில்லையென்றால் என்னுடைய கடமையிலிருந்து நான் தவறியவனாவேன். அங்கே பல ஆண்டுகளாக குடிதண்ணீர் பிரச்சினை மிகக் கடுமையாக உள்ளதால் 1976 ஆம் ஆண்டில், கலைக்கப்பட்ட நகராட்சியின் எதிர்கால தேவையை உணர்ந்து



குடிதண்ணீர் திட்டம் ஒன்று பெரிய அளவில் போடப்பட்டது. அதை 4½ கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற அன்றைக்கு இருந்த அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டது. அதற்கு பின்னால் உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்ட போது, நகராட்சி தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றதால் அன்றைக்கு ஆட்சி பொறுப்பில் இருந்தவர்களால் அத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இன்றைக்கு குடிநீர் மேற்பார்வையாளர் அலுவலகத்தில் அந்தத் திட்டம் தூங்கிக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக பரிசீலனைக்கு எடுத்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தவகையில் காஞ்சி மாநகர மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். இருக்கின்ற குடிதண்ணீரை இன்றைக்கு நகர மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்றால்கூட அதற்கு போதுமான அளவுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. எனவே அங்கே நல்ல முறையில் மின்சாரம் கிடைக்க, நெய்வேலியிலிருந்து செல்லும் லைனிலிருந்து நேரடியாக பெற்று, அதாவது சிங்கபெருமான் கோவிலில் இருந்து நேரடியாக பெற்று, பாலாற்று குடிநீர் வழங்குகின்ற பம்பிங் ஸ்டேசனுக்கு அந்த இணைப்பை தந்து இதற்கு ஆவன செய்ய வேண்டும்,

அப்படி நேரடியாக மின் இணைப்பு கிடைப்பதன் மூலம் இருக்கின்ற தண்ணீரை முழு அளவில் நகர மக்கள் பயன்படுத்த முடியும். அந்த அடிப்படையில் அங்குள்ள மக்களின் அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காஞ்சி நகராட்சியிலுள்ள தெருக்கள் எல்லாம் மேடு பள்ளமாக காட்சியளிக்கின்றன. இதனால் போக்குவரத்துக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, தெருக்களை எல்லாம் சீர்படுத்த வேண்டும். அதற்கு வேண்டிய நிதி உதவிகளை அரசு செய்து தர வேண்டும். அதன் அடிப்படையில் காஞ்சி மாநகர் சிறந்த சுற்றுலா ஸ்தலம் என்பதை நிரூபிக்க வேண்டும்.

அடுத்து, குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க ஒரு திட்டத்தை இங்கே நான் சொல்கிறேன். என்னுடைய தொகுதியில் நீர் பாசன வசதி அளிக்கின்ற மிகப் பெரிய தாமல் என்கின்ற ஏரி இருக்கிறது. எப்போதும் அந்த ஏரியில் தண்ணீர் இருப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அங்கே எப்போதும் தண்ணீர் இருந்தால்தான் வேகவதி ஆற்றிலே தண்ணீர் வரும். அதன் அடிப்படையில் அங்குள்ள கிணறுகளில் எல்லாம் ஊற்று வரும். அதுமட்டுமல்லாமல வேகவதி ஆறு காஞ்சிபுரத்தில் ஓடுவதால் காஞ்சி மாநகர மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையும் தீரும். மேலும் இந்த ஏரிக்கு பாலாற்றிலிருந்து வரவு கால்வாய் உள்ளது. அதையும் செப்பனிட்டு இரு பக்கங்களிலும் சிமென்டால் கரை கட்ட வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இந்தத் திட்டத்தை ஆய்வு செய்த பொறியாளர், அலுவலக வசதி, பியூன் போன்றவற்றுக்கு எல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதுமட்டுமல்ல,

அன்றைக்கு விவசாய அமைச்சராக இருந்த திரு. கோவிந்தசாமி அவர்கள் கூட இது குறித்து நேரடியாக முயற்சித்து பார்த்தார்கள். அதுபற்றிய முக்கிய விபரங்களை எல்லாம் சமர்ப்பித்துள்ளேன். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் செம்பரம்பாக்கம் ஏரி வரை இந்தத் தண்ணீர் பாயும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகேசன் அவர்கள் நேற்றைக்கு பேசுவதற்கு முடியாத குறை இருந்ததை இன்றைக்குத் தீர்த்துக்கொண்டிருக்கிறார். இந்தக் கோரிக்கைகளை எல்லாம் என்னிடத்தில் உறுப்பினர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். அவைகள் எல்லாம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. விரைந்து இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் பேசுவது கன்னிப் பேச்சு என்பதால் நான் தடை செய்யவில்லை. பல்வேறு மானியங்களைப் பற்றி (சிரிப்பு) அவர் இன்றைக்கு முழுமையாகப் பேசிவிட்டார்.

(முற்பகல் 11.30)

**திரு. பொ. முருகேசன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் உறுதி அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீர்ப் பாசனத்தை விட்டு, வேறு ஏதாவது பேசுங்கள்.

**திரு. பொ. முருகேசன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு நீண்டகாலமாக மழையில்லாத காரணத்தாலேயும், மின் தட்டுப்பாட்டாலேயும் இன்றைக்கு விவசாயிகள் பெரும் நஷ்டத்தில் இருந்து கொண்டிருக்கிற காரணத்தாலே, காஞ்சிபுரம் தாலூக்காவை வறட்சித் தாலூக்காவாக அறிவித்து, அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகின்ற வழி வகைகளை இந்த அரசு செய்து தர வேண்டுமென்று கூறிக்கொண்டு, இன்னும் பல பிரச்சினைகளைப் பேசவேண்டி இருக்கிறது. அடுத்து ஒரு வாய்ப்புத் தருமாறு கேட்டுக்கொண்டு, வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வாய்ப்பு நிச்சயமாக உண்டு.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, தொழில் துறையைப் பொறுத்தவரையில் ஆர்கனைஸ்டு லேபர், அன் ஆர்கனைஸ்டு லேபர் என்று இரு வகையாக இருக்கிற காரணத்தாலே, ஒழுங்குபடுத்தப்பட்டு, சீர் அமைக்கப்பட்டிருக்கிற அந்தத் தொழிற் சங்கங்களினுடைய கண்காணிப்பின்கீழ் இயங்கிக் கொண்டிருக்கிற தொழிலாளர்களுக்கு



மேலும் மேலும் நலம் பயக்கும் திட்டங்களை அரசாங்கம் கொண்டு வர வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். அப்படி பணி புரிந்து கொண்டிருக்கிற தொழிலாளர்கள் ஓய்வு எடுக்கின்ற ஒரு வயதை அடைவதற்கு முன்னாலே, அவர்கள் பெறப் போகின்ற ஓய்வு ஊதியத்தை வைத்து அவர்கள் என்ன செய்யக் கூடும் என்று சொல்லுகின்ற, ஆலோசனை வழங்குகின்ற அமைப்பை தொழில் நிர்வாகமும், தொழிற் சங்கமும் அரசாங்கத்தினுடைய உதவியோடு ஒவ்வொரு தொழிற்கூடத்திலும் ஏற்படுத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன். தொழிலாளர்கள் ரிடையர்மெண்ட் என்று சொல்லுகிறார்கள் அல்லவா, அதற்குப் பிறகு அவர்கள் பெறுகின்ற அந்தப் பணத்தை எல்லாம் எப்படிப் பயனுள்ள வகையிலே அவர்கள் பயன்படுத்தலாம் என்பதற்கு ஓர் ஆலோசனை வழங்குவதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்.

அன்ஆர்கனைஸ்டு செக்டார் என்று சொல்கிற வகையிலே, பீடி சுற்றுபவர்கள், அன்றாடம் கூலி வேலைக்குப் போகிறவர்கள் இவர்களுக்கெல்லாம் ஊதிய உயர்வு கொடுப்பதோடு, அவர்கள் பெறுகின்ற ஊதியத்தையும் பயனுள்ள வகையிலே செலவழிப்பதற்குரிய திட்டங்களை அவர்களுக்குக் கொடுப்பது நல்லது.

மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளை எல்லாம். ஸ்டேன்டர்ட் மோட்டார் கம்பெனி உட்பட, ஆலைகள் உட்பட, அத்தனையும் உடனடியாகத் திறப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே நான் இங்கே கூறியிருக்கிறேன். எனக்குப் பின்னாலே என் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசும்போது அவைகளைச் சொல்லுவார்கள். எனவே அடுத்த செய்திக்கு நான் போகிறேன்.

இங்கே மகிழ்ச்சிகரமான விஷயம் என்னவென்றால், தொழிற் துறையிலே, தொழிலாளர் நலனைப் பராமரிக்க. பிட்டுக்கு மண் சுமந்த மதுரையிலிருந்து வருகிறவர் அமைச்சராக இருக்கிறார். இறைவன் ஆனாலும் உழைத்தால்தான் ஊதியம் என்பதையும், ஊதியம் இருந்தால்தான் உழைப்பதற்கு முடியும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற ஒரு தத்துவத்தின் அடிப்படையிலே வந்த காரணத்தாலே, இந்த இரண்டையும் பொருத்திப் பார்த்து, பொருத்தமான நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அடுத்து வருகின்ற பெருமகனாரோ, செய்தி, சுற்றுலா அறநிலையம் இந்த மூன்றிலும் அவரே தொடர்புடையவர் என்பது உங்களுக்குத் தெரியும். . . .

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** செய்தித் துறையா, அல்லது செய்தி உலகமா?

**திரு. குமரி அனந்தன்:** அமைச்சர் என்ற முறையிலே செய்தித் துறையிலும். .

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** அவரைப்பற்றி சொல்லியாகிவிட்டது;

திரு. குமரி அனந்தன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரைப் பொறுத்தவரையில் செய்தித்தாள் நிறுவனர் என்ற முறையிலும், செய்தித் தாளை நடத்தும் ஒரு குடும்பத்திலே முக்கிய நபர் என்ற முறையிலும். திருச்செந்தூர் கோவில், குலசேகரம் முத்தாரம்மன் கோவில் போன்றவைகளில் நெருங்கிய தொடர்புடையவர் என்ற முறையிலும், உலகையெல்லாம் சுற்றுகின்ற ஒரு பழக்கத்தில், பல நாடுகளுக்குச் சென்று வந்த அனுபவத்தைப் பெற்றுள்ள முறையிலும், எல்லாவற்றையும் இணைத்து, கொஞ்சம் அதைப் பற்றி நினைத்து, இங்கே சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் பிரபந்தங்களிலேகூட உலா பிரபந்தம் என்று உண்டு. இறைவன், உற்சவ மூர்த்தி என்ற முறையிலே உலா வருவது உண்டு. எனவே சுற்றுலா பற்றி கொஞ்சம் கூற வேண்டுமென்று விரும்புகிற காரணத்தாலே இந்த முன்னுரை. நமது நாட்டிலே சுற்றுலா எந்த அளவுக்கு இருக்கிறது என்பதையும், உலக நாடுகளிலே நாம் நல்ல கவர்ச்சிகரமான, கண்ணுக்கு அழகான எழில்மிக்க இடங்களைக் கொண்டிருந்தாலும்கூட, உலகச் சுற்உலாப் பயணிகளைக் கணக்கெடுத்துப் பார்த்தால் 33 சதவிகிதம் மட்டுமே இங்கே சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள்.

அதிலே 25 சதவீதம் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள். என்றும் அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சுற்றுலாவைப் பொறுத்த வரையில், பல்வேறு பிரிவுகளாக அதைப் பிரிக்க வேண்டும். வரலாற்றுப் பெருமைகளைக் காட்டும் சுற்றுலா; கலைகளைக் காட்டும் சுற்றுலா; பழக்க வழக்கங்களைக் காட்டும் சுற்றுலா; இறை உணர்வை வளர்க்கிற சுற்றுலா என்று பல்வேறு வகைகளாக அதைப் பிரிக்கவும் செய்யலாம். அப்படி தனித் தனியாகப் பார்க்க விரும்புகிறவர்களைத் தனியாக அழைத்துச் செல்லலாம். எல்லாவற்றையும் ஒருங்கிணைந்து பார்க்க வேண்டும் என்ற உள்ளமுடையோர்களை அந்த வகையிலேயே அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். சான்றாக, வெளிநாட்டுக்காரர்கள் இங்கே வந்தார்கள் என்றால் நாம் குற்றால அருவியை அவர்களுக்கு காட்டுவதோடு நின்றுவிடக் கூடாது. குற்றால அருவியிலே மூலிகைச் சத்துக்கள் எல்லாம் இருக்கின்றன என்று சொல்வதற்கும் மேலாக ஒரு படி சென்று, ஒரு காலத்திலே இந்தக் குற்றால அருவியிலே குளிக்க வந்த மகாத்மா காந்தி அவர்களோடு பேசிக் கொண்டிருந்த ஒரு ஹரிஜனை அந்த அருவியிலே குளிக்கத் தன்னோடு வாருங்கள் என்று சொன்ன நேரத்தில் அவர் வர முடியாது என்று மறுக்க; அதற்குக் காரணத்தை மகாத்மா காந்தி அடிகள் கேட்க, 'என்னைப் போன்ற தாழ்த்தப்பட்டவர்கள் அதிலே குளிப்பதற்குச் சட்டம் தடை விதிக்கிறது' என்று இவர் பதில் சொல்ல, நீங்கள் குளிக்காத அருவியிலே நானும் குளிக்கமாட்டேன் என்று காந்தி மகானும் திரும்பிப்போன அந்தச்சரித்திரச் சம்பவத்தைக்கூட அவர்களுக்குச் சொல்ல வேண்டும். காந்தி மகானோடு உரையாடினாரே அந்தப் பெருமகனார் திரு. குமாரவேலு என்பவர் இன்றைக்கும் உயிரோடு இருந்து கொண்டிருக்கிறார். ஆகவே சரித்திர சம்பவங்களையும்



அதிலே கொஞ்சம் இணைத்துச் சொல்ல வேண்டும். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலும் இதைப் போலவே நடந்தது. காமராஜர், கக்கன் போன்றவர்கள் உள்ளே வரமுடியாத மீனாட்சியம்மன் கோயிலுக்குள் நானும் சென்று தரிசிக்க மாட்டேன் என்று காந்திமகான் வெளியே வந்தார்கள் என்று சொல்லப்படுகிற நேரத்தில், சமுதாயத்தில் எத்தனை புரட்சிகளை நாம் செய்திருக்க வேண்டும் என்று வெளிநாட்டுக்காரர்கள் புரிந்து கொள்கிற வகையில்—அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதற்காகவே இவைகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னேன்.

இன்னும் சொல்லப் போனால், தமிழ்நாட்டில்—அவர்கள் நாட்டில் இல்லாததைத்தான்—இங்கே காட்டுவது மிகமுக்கியமான அம்சமாகும். சுற்றுலா என்கிறபோது பல்வேறு இடங்கள் இருக்கின்றன. இருந்தாலும், கோயில்களை அதிகமாக நாம் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால் எகிப்து நாட்டுக்குப் போனால் அங்கே 'பிரமிட்ஸ்'தான் முக்கியம். அதைப்போல நம் நாட்டிலே கோயில்கள்தான் முக்கியம். கோயில்களைப்பற்றி கூட பக்தர்களுக்குச் சொல்லப்படுகிற செய்திகளோடு நின்றுவிடக் கூடாது.

உதாரணமாக வெளிநாட்டுப் பயணிகள் வருகிறார்கள் என்றால் காஞ்சியில் இருக்கிற வரதராஜ பெருமாள் கோயிலில் அவர் கழுத்தில் கிடக்கிற மிக உயர்ந்த பதக்கம் ராபர்ட்கிளைவ் அவர்களாலே கொடுக்கப்பட்டது என்றும், ஏரிகாத்த பெருமாள் கோயில் என்று மதுராந்தகத்திலே இருக்கிறதே அந்தக் கோயிலுக்கு வருகிறபோது அந்தக் கோயிலுக்கு எந்த எந்த வகையிலே வெள்ளைக்காரன் துணை புரிந்தான் என்று எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் இருக்கிறபகுதியில் இருக்கிற குரங்கனி என்கிற இடத்தில்பட்டாணி சாயபு என்பவருடைய சிலையும் கோயிலிலே வைக்கப்பட்டிருக்கிறதே—அது அங்கே ஏன் வைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் சேர்த்துச் சொல்ல வேண்டும். அப்படி வெளிநாட்டுக்காரர்களுக்கு புதிய புதிய செய்திகளைச் சொல்லுகிற அளவுக்கு, வரலாற்றுச் செய்திகளை, சமுதாயத்திலே புரட்சி ஏற்படுத்திய செய்திகளை சேர்த்துச் சொல்ல வேண்டும். அதற்குப் புராண, இதிகாசங்கள் மற்றும் சரித்திரம் பூகோளம் இவைகளையெல்லாம் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட வழிகாட்டிகள் நமக்கு இருக்கிறார்களா? சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லுகிறவர்கள் இந்த விவரங்களைத் தெரிந்தவர்களாக இருக்கிறார்களா என்றால் இல்லை. எனவே முதலில் நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான பணி இப்படி விஷயம் தெரிந்த வழிகாட்டிகளை உருவாக்கவேண்டும். வழிகாட்டிகள் என்று சொல்லப்படுகிற 'கைட்ஸ்' களைப் பயிற்றுவிக்கிற ஒரு கல்லூரியை—ஒரு கல்வி நிறுவனத்தை—ஒரு இன்ஸ்டிடியூட்டை— உருவாக்க வேண்டும், வருஷாவருஷம் அப்படிப்பட்ட கைடுகளாகப் பணி புரிய வருகிற—விருப்பமுள்ள மாணவ மாணவியர்களைச் சேர்த்து பயிற்சி அளிக்க இப்படிக்கப்பட்ட ஒரு கல்லூரியை அல்லது ஒரு இன்ஸ்டிடியூட்டை அல்லது ஒரு காலேஜை—எந்தப் பெயரிலாவது—உருவாக்க வேண்டும். அவர்கள் பன்மொழியில் பேசுகிற ஆற்றல் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

[திரு. குமரி அனந்தன்] [1989 ஏப்ரல் 20

தற்போது மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் கூட வழிகாட்டிகள் இருக்கிறார்கள் இல்லை என்று சொல்லமுடியாது. ஆனால் அவர்கள் போதுமான அளவுக்கு விவரம் தெரிந்தவர்களாக இல்லை. அதன் காரணமாக அங்கே படம் விற்றுக் கொண்டிருக்கிறவர்களே வழிகாட்டிகளாகிவிடுகிறார்கள். அதாவது 'போட்டோ—செல்லர்களே' வழிகாட்டிகளாக மாறி விடுகிறார்கள். அதன் காரணமாக ஒரு இன்கியுட்டிவ் ஃபாரினர் இது என்ன என்று கேட்கிறபோது அவர்களுக்கெல்லாம் சரியான விளக்கம் சொல்ல அவர்களாலே முடிவதில்லை. அரைகுறை விளக்கத்தோடு வெளிநாட்டுக்காரர்கள் இங்கே இருந்து போகிறார்கள். இனி அப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது. அதற்கு உடனடியாக இப்படிப்பட்ட ஒரு கல்லூரியை நீங்கள் தொடங்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், சற்று வித்தியாசமாக இருந்தால்தான் வெளி நாட்டைச் சார்ந்தவர்கள் பார்ப்பார்கள். வரலாற்று சான்று என்று பார்க்கிறபோது—திருவனந்தபுரத்திலிருந்து நாகர்கோயில் வருகிறபோது 'அம்மச்சி பலா' என்று ஒரு இடம் இருக்கிறது. அங்கே பழைய பலா இருக்கிறது. அதை அம்மச்சிபலா என்று சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், மார்த்தாண்ட வர்ம ராஜா அவர்களை எட்டுவீட்டுப் பிள்ளைமார் என்பவர்கள் துரத்திக்கொண்டு வருகிறபோது, தப்பித்துக்கொள்ள முடியாமல் போய் ஒரு பலா மரத்தின் பொந்தில்போய் இருந்தாராம். அம்மச்சிபலா என்று ஏன பெயர் வந்தது என்றால் அம்மச்சிபலா என்பதற்கு தாய் வயிறு என்று பொருள். அந்தப் பலா மரப் பொந்து தாய் வயிற்றைப்போல் இருந்து அவரைப் பாதுகாத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைப்போலவே சிவகங்கைக் காட்டிலே பெரியமருதுவும், சின்னமருதுவும் வெள்ளைக்காரனை எதிர்த்து போராடியபோது, துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகாமல் மறைந்திருந்த ஒரு மரம் இருக்கிறது. பல காலமாக மற்றவர்களால் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. ஆனால் கூட்டாஞ்சோறு பொங்குகிறவர்கள், அதற்கு பக்கத்திலே இருந்து பொங்கி, அந்த மரம் எரிந்துபோயிற்று. நாம் மதுரையிலே அந்த ஸ்தல விருஷத்தை எவ்வளவு பெரிதாகப் போற்றுகின்றோமோ அதைப்போலவே வரலாற்றுச் சான்றுடைய எந்த மரங்களாக இருந்தாலும், இடங்களாக இருந்தாலும் போற்றி பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றவைகளையும் பயணிகளுக்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

(முற்பகல் 11.40)

காளையார் கோவில் மிகப் பெரிய கோவிலாக இருக்கிறது. அந்தக் கோவிலிலே நின்று பார்த்தால் மதுரை மீனாட்சியம்மன் கோவில் நமக்கு தெரிகிறது என்று நாட்டுப்பாடல்கள் எல்லாம் அந்தப் பக்கத்தேச உண்டு. ஆனால் காளையார் கோவில் கட்டுவதற்கு கல் எடுத்து வந்தது மானா மதுரை பக்கத்திலே இருந்து. மானாமதுரை பக்கத்திலே இருந்து ஆயிரம் கல் எடுத்து வந்தால் ஒரு கல்லை மானா மதுரையிலே போடுவார்களாம்.



1989 ஏப்ரல் 20] [திரு. குமரி அனந்தன்]

அப்படி ஒரு கல்லாற் எழுப்பப்பட்டது மானாமதுரை கோவில் என்றால், அந்த ஆயிரம் கற்களால் எழுப்பப்பட்ட அந்த காளையார் கோவில் எப்படி இருக்கும் என்பது எல்லாம் அவர்களுக்குச் சொல்லப்பட்டால்தான் அவர்களுக்கு உற்சாகம் வரும். சும்மா கோவில் என்று காட்டிக் கொண்டிருப்பதிலே பயன் இல்லை, சுற்றுலாப் பயணிகளுக்கு.

நீங்கள் எகிப்துக்குப் போனால் அங்கே பிரமிட்டை பார்க்கும் போது, போகின்ற வழியில் எல்லாம் செடி, கொடிகளைக் கூட பிரமிட்டை போலவே வெட்டிவிட்டு இருக்கிறார்கள். செடி, கொடிகள் அப்படி வெட்டி விடப்பட்டு இருக்கும். செம்மைப் படுத்தப்பட்டு, வளர்க்கப்பட்டு இருக்கும். மதுரை, மீனாட்சியம்மன் கோவிலுக்கு போகிற வழியில், கோபுரம் போல வளர்ப்பதிலே சங்கடம் இல்லை நமக்கு; தஞ்சையிலே நந்தி போல வளர்க்க சங்கடம் இல்லை நமக்கு; குற்றால அருவியைப் பார்க்கப் போகின்ற இடத்திலே, கீழே பச்சைப் பசேலென்று செடிகளை வளர்த்து, மேலே வெள்ளைப் பூ போல பூக்கின்ற கொடிகளைப் படர விட்டால், அதை அருவி போல பாய்வது போல்வைக்கப்படுவதில் சங்கடம் இல்லை நமக்கு. ஆக புதிய புதிய சிந்தனைகளாக, வெளிநாட்டவர்களைக் கவருகின்ற வகையிலே நமது சுற்றுலாத் திட்டங்கள் வர வேண்டுமென்பதற்காக நான் சொல்கிறேன்.

இனி தஞ்சையிலே பெரியகோவிலை எடுத்துக் கொண்டோமென்று சொன்னால், அங்கு இருக்கிற நந்தி, இந்தியாவிலயே இரண்டாவது பெரிய நந்தியாக இருக்கிறது. முதல் பெரிய நந்தி ஆந்திர மாநிலத்தில் அனந்தபூர் ஜில்லாவிலே லெபாக்ஷி கோவிலில் இருக்கிறது. தஞ்சையிலே இருப்பது இரண்டாவது பெரிய நந்தி. அது 20 அடி நீளம், 12 அடி உயரம், 8 அடி சுற்றளவு, 25 டன் எடை கொண்டதாக இவ்வளவு பெரிய நந்தியாக இருக்கிறது. அதைப்போலவே அங்கு இருக்கிற லிங்கத்தின் சுற்றளவு 54 அடி, உயரம் 24 அடி; ஏணி வைத்து தான் அதற்கு அபிஷேகம் செய்கிறார்கள். இவ்வளவு பெரிதாக அது இருக்கிறது.

அதே நேரத்தில் கும்பகோணத்திற்கு பக்கத்தில் இருக்கிற தாராசுரத்தில் ஒரு அங்குல சிவனை காணலாம்; ஒரு அங்குல பார்வதியை காணலாம்; the bigges and the smallest. அப்படி இரண்டும் தஞ்சை ஜில்லாவிலே இருக்கின்றன. அவர்களுக்கு இந்தப் பாணியில், சொல்கிற நேரத்தில்தான், இதனைப் பார்த்துவிட்டு, இதனைப் பார் என்று சொல்லுகிற நேரத்திலே தான் இந்த இரண்டினுடைய முக்கியத்துவமும் தெரியும். சுற்றுலா வகையிலே நமது பயணிகளைக் கவர வேண்டுமென்பதற்காக இவைகளைச் சொல்கிறேன்.

கும்பகோணத்திலேயே நாகேஸ்வரர் கோவில் இருக்கிறது. இன்று, சித்தரை 6. 10-ம் தேதி பார்ப்பீர்கள் என்று சொன்னால், நாகேஸ்வரர் கோவிலில் இருக்கிற லிங்கத்தின் மீது இதுவரை வெயிலே படாது; ஒளியே படாது. ஆனால் 10-ம் தேதி சூரிய ஒளிக் கதிர் உள்ளே வந்து தொடும். கிழக்கு கோபுர வாசலின் வழியாக அந்த சூரிய ஒளிக் கதிர் வந்து, சித்திரை மாதம் 10 11, 2, ஆகிய இந்த மூன்று நாட்களுக்கும் அந்த ஒளி நீரால், அபிஷேகம் செய்வதைப் போல, ஒளியால் அபிஷேகம் செய்யப் படுவதைப் போன்ற ஒரு அற்புதமான காட்சி யப் பார்ககலாம். 13-ம் தேதி வந்து பார்த்தால் அந்தக் காட்சிக் கிடைக்காது. 9-ம் தேதி வந்தாலும் அந்த காட்சி கிடைக்காது. இது வெளிநாட்டுக் காரர்களுக்கு சொல்லப்பட வேண்டும். பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு எங்களுடையகட்டிடக் கலையில்நாங்கள் எவ்வளவுவல்லுன ராக இருந்தோம்;எவ்வளவுசிறந்தவர்களாகஇருந்தோம் என்கின்ற செய்திகள் அங்கே சொல்லப்பட வேண்டுமே தவிர—ஏனென்று சொன்னால், அண்மையிலே ஒரு பத்திரிகையிலே செய்தி வந்திருந்தது. சுற்றுலாத் துறையிலே ஒவ்வொரு மாநிலமும் ஒரு வெளியீட்டை வெளியிட்டு இருக்கிறது. ஒரிசா மாநிலத்திலே அங்கே இருக்கின்ற கலைச் சிறப்பு; குஜராத் மாநிலத்திலே அங்கே இருக்கின்ற கலைச் சிறப்பு; ஆனால் நமது மாநிலத்திலே இரண்டு சினிமா நடிகர்களுடைய படங்களை மட்டும் போட்டு, இதுதான் நம்முடைய சிறப்பு என்று போட்டு இருப்போமேயானால், நாம் நமது கலையை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று பொருள். திரைப்பட நடிகர்களை மட்டும் போட்டு, இதுதான் தமிழ்நாடு என்று அட்டைப் படத்திலே காட்டுவோமேயானால், அது சிறப்புடையதாகாது என்பதற்காக நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். எத்தனை எத்தனையோ அழகான, எழில் வண்ணமிக்க, கலையழகுடைய சிற்பங்கள், சிலைகள் இருக்கின்றன; கட்டிடக் கலைகள் இருக்கின்றன; இவைகளை எல்லாம் நாம் பார்க்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து சில ஊர்களில் இருக்கின்ற பழக்கவழக்கங்கள். நான் ஓமலூர் போய் இருந்தபோது, சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக் கொண்டு போயிருந்த பேருந்து ஒரு இடத்தில் நின்று, "இங்கே, பாருங்கள்" என்றார். நான், என்ன பார்க்கவேண்டுமென்று கேட்டேன். ஃப்ளவர் வீவிங் என்றார்கள். அது என்ன ஃப்ளவர் வீவிங் என்று அங்கே பார்த்தல், பூ தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பூ எப்படி தொடுக்கிறார்கள் என்பதை, பூ கட்டுவதை, ஃப்ளவர் வீவிங் என்ற பெயரிலே சுற்றுலாப் பயணிகளை அங்கே கொண்டு வருகிறார்கள். அங்கே பூ தொடுக்கும் பெண்களுக்கு பக்கத்திலே நெருங்கமுடியாது. அங்கே பூதொடுக்கும் பெண்கள் நாரைஎடுத்து, அந்த பூவை தொடுத்து, அப்படி சுற்றி வைத்து கொடுக்கின்ற விதம், — ஒரு முழம் அளந்து, இன்னும் கொசுறும் போட்டு ஒரு வாழை இலையிலே பத்து பூ வெளியேயும் 40 பூ உள்ளேயும் தலையை நீட்டி, காசை வாங்கிவிட்டு, வெற்றிலை சாறை வெளியே துப்பிவிட்டு இருப்பது—அந்தப் பெண்கள் பூ தொடுக் கின்ற லாவகம், இவர்களுக்கு வரவில்லை. இருந்தால் கூட



அவர்கள் அதை flower-weaving என்று காட்டுகிறார்கள். எனவே, இந்த ஊரிலே அந்தப் பயணிகள் வந்து பார்த்தால் வியந்து போவார்கள் அல்லவா? ஒரு ஊரிலே இல்லாதது இன்னொரு ஊரிலே இருந்தால்தானே புதுமை! அதைப்போலே, இங்கேயும் எந்தக் காட்சியைக் காட்டுவதாக இருந்தாலும், சுற்றுலாப் பயணிகளைக் கவருவதாக இருந்தால், செய்முறை, கண்காட்சி, விற்பனை d monstrat on...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 14 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. குமரி அனந்தன்: எனவே, அவைகளையெல்லாம்— எவை களையெல்லாம் (சிரிப்பு) demonstration, exhibition-cum-sales வெளிநாட்டிலே அவைகளைப் பார்ப்பதனாலே மட்டுமல்ல, வெளிநாட்டுக்காரர்கள் இதைப் பார்ப்பார்கள்; நமது மண்ணைப் பிசைந்து சட்டி, பானை செய்வதைக்கூடக் காட்டினால் பார்ப் பதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். அதற்காகச் சொல்கிறேன். சட்டி, பானை செய்வதைக்கூடப் பார்ப்பதற்கு ஆட்கள் இருக் கிறார்கள்.

அமெரிக்காவிலே, நியூயார்க்கிலே நமது கைத்தறி நெசவாளர் கள் போயிருந்தார்கள்; காஞ்சிபுரம் நெசவாளர்கள். ஒரு கைத்தறியை வைத்து நெய்து கொண்டிருந்தார்கள். பக்கத்தில் இருந்த ஒரு சீமாட்டி "Wha a wonde ful hing it is! How it grows!" இது எப்படி வளர்கிறது பார், இந்த நூலைச் சேர்க்க சேர்க்க சேர்க்க துணி வளர்ந்து கொண்டு போவதைப் பார்க்க பார்க்க பார்க்க இது எப்படி வளர்கிறது பார் என்று மூக்கிலே விரலை வைத்து வியந்து கொண்டிருந்த காட்சியினைக் கண்டேன். இங்கே கைத்தறி நெசவிலே நாம் கண்காட்சி நடத்துகிறபொழுது, நெய்வது எப்படி, அதிலே பூ போடுவது எப்படி என்பதை யெல்லாம் காட்டுவது நன்றாக இருக்கும் என்பதற்காகச் சொன்னேன்.

நான் விரைந்து செல்ல வேண்டுமென்று கருதுகிறேன். இன்னொரு செய்தி. இந்த "நாள் ஏர்" பூட்டுகின்ற பழக்கத்தை நாம் மேற்கொள்ளலாம். சித்திரை மாதம் ஒன்றாம் தேதி வந்தது என்றால், அதிகாலை சூரியன் எழுவதற்கு முன்பு, அதிகாலை, சொட்டு நீரத்தில் சுண்ணாம்பைக் கலந்த கலப்பட இருள் தன் கட்டுக் குலைகின்ற அதிகாலை நேரத்திலே, ஏரை எடுத்து, தோளிலே வைத்துக்கொண்டு, ஊரில் இருக்கின்றவர் களெல்லாம் ஓரிடத்திலே ஏர் பிடிப்பது. நாள் ஏர் என்று அதற்குப் பெயர். ஒரு காலத்திலே மன்னனே அந்த ஏரைப் பிடித்தான். பொன் ஏர் பூட்டி, உழுகின்ற பழக்கத்தை அவனே எடுத்து வைத்தான். நமது அரசாங்கத்திலே கூட, அமைச்சர் பெருமக்கள், முதலமைச்சரவர்கள் இதனைத் தொடங்கி வைக்கலாம். அதிலே தப்பு இல்லை. சித்திரை மாதம் 1 ஆம் தேதி ஊரில் இருக்கின்ற உழவர்கள் அத்தனைபேர்களையும் சேர்த்து, காளைகளுக்கெல்லாம் வண்ணம் பூசி, பொங்கலிட்டு

அந்த ஊர் எல்லையைக் கடந்து, அந்தப் பணியினை முடித்து வருகின்ற நேரத்திலே அந்தப் பெண்கள் எல்லாம் மஞ்சள் தண்ணீரை அந்த ஆண்கள் மீதும், காளை மீதும் – ஆண்கள் மீதும், காளை மீதும் என்று சொல்வதற்குக் காரணம், பெண்கள் இரண்டையும் பொருத்திப் பார்க்கின்றவர்கள். ஒரு காலத்திலே ஏறு தழுவினால்தான் பெண்ணையே திருமணம் செய்து கொள்ள முடியும் என்று சொல்லுகின்ற பழக்கம் இருந்தது.

நீங்கள் ஸ்பெயின் நாட்டுக்குப் போனீர்கள் என்று சொன்னால் அங்கே மேட்ரிட்டிலே, காளைகளோடு சண்டையிடுவது இருக்கிறது. அவர்கள் சண்டையிடுவதற்கும், நமக்கும் இருக்கிற வேறுபாடு இருக்கிறது. அவன் bull-fighting என்று சொல்லுகிறான். Bullfight என்று சொல்லுகிறான். நாம் ஏறு தழுவுதல் என்று சொல்லுகிறோம். அவன் அங்கே கொல்லுகிறான், நாம் வெல்லுகிறோம். கொல்லாமலேயே வெல்லுகின்ற ஒரு பழக்கம், அந்த ஏறக் கொம்பைப் பிடித்து அந்தக் காளையை அடக்குகின்ற ஜல்லிக்கட்டு, அது எப்பொழுது எப்பொழுது நடக்கிறது என்று வெளி உலகத்திற்கு நாம் விளம்பரப்படுத்த வேண்டும். முத்து தூத்துக்குடியிலே எப்பொழுது எடுக்கிறோம் என்பதனை வெளி உலகத்திற்கு விளம்பரப்படுத்த வேண்டும். அந்த நேரத்திலே அவர்கள் வருவார்கள்.

ஏனென்றால், கொற்கை – அந்தப் பழங்காலத்துத் துறைமுகத்தைச் சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்று நான் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தேன். அமைச்சர் பெருமகனார் தமது சுற்றுப்பயணத்திலே சொல்லியிருந்தார்கள். கொற்கைத் துறைமுகம் சுற்றுலாத் தலமாக ஆக்கப்படும்; அதோடு இல்லாமல் அவர்கள் வேறொன்றையும் சொல்லியிருந்தார்கள். அது என்ன என்று சொன்னால், குலசேகரப் பட்டணத்திலே ஒரு 60 ஏக்கரா நிலத்தில், முத்தாரம்மன் கலைக்கூடம் ஒன்றை வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சியான ஒரு செய்தி. அந்த முத்தாரம்மன் கலைக்கூடத்திலே, என்னுடைய வேண்டுகோளாக ஒன்றை வைக்கிறேன். சிறு தேவதை வழிபாடுகள் என் வந்தன, எப்படி வந்தன என்பதை விளக்குகின்ற வகையில், சிறு தேவதை கோயில்களையெல்லாம் அங்கே சிறு சிறு மாதிரிகளாக வைத்து, இன்னின்ன காரணங்களுக்காக இவையிவை வந்தன என்று விளக்கிச் சொல்வது பொருத்தமாக இருக்கும். மற்றவைகளோடு இதையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்பதுதானே தவிர வேறொன்றுமில்லை.

அடுத்து, சில இடங்களிலே நீங்கள் பார்த்தீர்கள் என்று சொன்னால், சுற்றுலாவுக்கு வருகின்றவர்களெல்லாம், இரயில் நிலையத்தை விட்டு இறங்குகின்ற நேரத்திலே நமது மதிப்பும் அவர்களுடைய மனத்திலே இறங்கி விடுகிறது. காரணம், அங்கேயிருக்கின்ற டாக்சிக்காரர்கள், ரிக்ஷாக்காரர்கள் கேட்கின்ற அதிகக் கூலி, பிச்சைக்காரர்கள் கொடுக்கின்ற தொல்லை,



அவர்கள் தங்குவதற்குச் சரியான இடம் இல்லாத காரணத்தினாலே, அவர்களுடைய பொருள்கள் களவு போய் விடுவது, இவைகளையெல்லாம் நாம் கண்காணிப்பது மட்டுமல்ல; அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையிலே ஒரு பெரிய திருமலை நாயக்கர் மகால் இருக்கிறது. அந்த மகாலில் ஒலி–ஒளிக் காட்சியை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதிலே நமது தமிழ்க் கலைகளையெல்லாம் காட்டலாம். கனியான் ஆட்டம், களறி ஆட்டம், அழகு சிலம்பம், பொய்க்கால் குதிரை ஆட்டம் இவைகளையெல்லாம் நாள்தோறும் நடத்த வேண்டும்.

பேங்காக் என்று சொல்லுகிற இடத்திலே, தாய்நாட்டினுடைய தலைநகரத்திலே, என்னைக் கூட்டிப்போய், பல டாலர் செலவு செய்ய வைத்து, என்ன காட்டினார்கள் தெரியுமா? சேவல் சண்டை. சேவல் சண்டையைப் பார் என்று சொல்கிறார்கள். இதுதான் ஐயா பார் என்று சொல்கிறார்கள். நமது ஊரிலே எத்தனையோ விதமான அழகுக் கலைகள் இருக்கின்ற காரணத்தால், அவைகளையெல்லாம் காட்ட வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலாத் தலத்தைப்பற்றி மிக அதிகமாக்க வேண்டுமென்று நான் சொன்னாலும், நேரத்தை எடுத்துக் கொள்ளாமல், மாவட்ட சுற்றுலா மையங்கள் ஏற்பாடு செய்யப் போவதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள்.

(முற்பகல் 11-50)

அந்த ஏற்பாட்டைச் செய்யுங்கள். இன்று பிற்பகல் புறப்பட்டு போனால் அந்த மாவட்டத்தில் இருக்கிற நல்ல இடங்களைப் பார்த்து, இரவிலே ஒரு இடத்திலே எளிய செலவிலே தங்கிவிட்டு மறுநாள் பிற்பகல் வந்து சேர்கிற அளவிற்கு 'உள்ளூர் பொடன்ஷியாலிட்டி' என்று சொல்கிறோம் அல்லவா, 'லோக்கல் பொடன்ஷியாலிட்டி' அந்த வகையில் 'இன்டர்னல் டூர்' அவைகளை நீங்கள் ஊக்கப்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வட்டகோட்டையை நீங்கள் சுற்றுலா மையமாக ஆக்கப் போவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கென்று நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை என்று கருதுகிறேன். அதற்கு நிதி ஒதுக்கி ஆவன செய்யவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் புராதன சின்னமாக இருக்கிற மனோகராவை மீண்டும் பராமரித்து, அழகுபடுத்தி, சுற்றுலா மையம் ஆக்குங்கள். அதேபோல் வேதாரண்யம், கோடியக்கரை

பறவைகள், மான்கள் சரணாலயத்தை சிறந்த முறையில் செம்மைப் படுத்தி வையுங்கள் என்று கேட்டு, திரைப்படத் துறை பற்றி மட்டும் சொல்லிவிட்டு முடித்துக் கொள்கிறேன். திரைப் படத் துறைக்கு இந்தியாவில் 75 வருடங்களும், தமிழ்நாட்டில் 50 வருடங்களும் ஆகிவிட்டன. பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்து, பாமர மக்களுடைய பொழுதுபோக்காக இருப்பது இந்தத் திரைப்படத் துறை. தமிழ்நாட்டில் ஒரு வருடத்திற்கு 100 படங்கள் வெளிவருகின்றன. இந்த 100 படங்களில் 0 படங்கள் ஒரு கோடி ரூபாய்க்கு மேலே விற்பனையாவதாகச் சொல்கிறார்கள். அடுத்து பத்து படங்கள் முக்கால் கோடியிலிருந்து ஒரு கோடி வரையில் அதாவது 75 லட்சத்திலிருந்து ஒரு கோடி வரையில் விற்பனையாகிறது என்று சொல்கிறார்கள். அடுத்து மீதியிலிருக்கிற 80-ல் 70 படங்கள் 45 லட்சத்திலிருந்து 80 லட்சங்களுக்கு விற்பனையாகிறதாம். மீதியிருக்கிற 10 படங்கள் 20 லட்சங்களுக்குத்தான் போகிறதாம். இதிலிருந்து என்ன கணக்குப் போடுகிறார்கள் என்று சொன்னால் 100 படங்களில் 75 படங்கள் தோல்வி அடைவதாகச் சொல்கிறார்கள், ஆக பெரிய தொழிலாக இருந்தாலும் 100 படங்களில் 75 படங்கள் தோல்வி அடைகின்றன. 10 படங்கள் சின்ன இலாபத்தைப் பெறுகின்றன. 5 படங்கள் அதிக லாபத்தைப் பெறுகின்றன. 10 படங்கள் போட்ட முதலை எடுக்கின்றன. மீதி இருப்பவர்கள் எல்லாம் போட்ட முதலை எப்படி எடுப்பது என்று தெருவில் தேடுகிறார்கள். ஆகவே 75 படங்கள் தோல்வி அடைகின்றன. இதற்கு என்ன காரணம் என்று பார்க்கிறபோது இந்த 'காம்பவுண்டிங்' என்பது ஒரு காரணம் என்று சொல்கிறார்கள். இவ்வளவு நாட்கள் யார் படம் பார்த்தார்களோ, எத்தனைபேர் படம் பார்த்தார்களோ, எவ்வளவு வசூல் ஆயிற்றோ, அதிலே இத்தனை சதவீதம், விழுக்காடு, புரோபோஷனேட்டாக. விகிதாச்சாரப்படி அந்த வருமானம் அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருந்தது. இப்போது என்னவென்று சொன்னால், உனக்கு வசூல் ஆகிறதோ, இல்லையோ, அது குறைத்து வருகிறதோ, கூடுதலாக வருகிறதோ, நீ எனக்கு இத்தனை ரூபாய் கட்டிவிடு என்று சொல்கிற காரணத்தால் என்ன ஆகிறது என்று சொன்னால் பெரிய நடிகர்கள் நடித்த' பிரபலங்கள் நடித்த அல்லது டைரக்ட் செய்த படங்கள் தான் அதிகமாகப் போகின்றன. அப்படி அதிகமாகப் போகிற காரணத்தால், அவர்கள் என்ன செய்கிறார்கள்? 5 ரூபாய் அங்கே டிக்கட் என்றால் 10 ரூபாய் என்று வைத்து விடுகிறார்கள். 1½ ரூபாய் டிக்கட் கிடையாது. 3 ரூபாய் டிக்கட் கிடையாது. 10 ரூபாய் டிக்கட் வாங்கிக்கொண்டு எங்கே வேண்டுமானாலும் உட்கார்ந்து கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே, 700 பேர் உட்காருகிற தியேட்டரில் 1,400 பேர்கள் உட்காருகிறார்கள். அதனால் சுகாதார கேடு ஏற்படுகிறது. பண வசூல் அதிகமாகிறது. சுகாதார கேடு ஏற்படுவது மட்டுமல்லாமல், கழிப்பிட வசதிகளும் போதுமானதாக இல்லாமல் இருக்கிறது. மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் பெரிய



படங்கள் என்று சொல்வது எல்லாம் வசூலை அதிகமாகக் கொடுக்க, அவர்கள் விநியோகஸ்தர்களுக்கு பணம் கொடுக்க, ஒரு ஓட்டம் என்று சொல்கிறார்களே, 'சிங்கிள் ரன்' அந்த ஒரு ஓட்டத்தில் 2½ லட்சம் ரூபாய் நான் தந்து விடுகிறேன், என்று விநியோகஸ்தரிடம் பேசினால், 10 தியேட்டர்காரர்கள் பேசி விட்டால் விநியோகஸ்தரர்களுக்கு பணம் வந்து விடுகிறது. ஆனால் பார்க்கப் போகிறவர்களுக்கு, அதைத் தயாரித்த முதலாளிகளுக்கு என்ன லாபம் வருகிறது என்றால் அது போதுமானதாக இல்லை. இந்த நிலையில் நடிகர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். நாம் நடிப்பதை வைத்து தானே இவ்வளவு தூரம் வசூலாகிறது. எனவே என்னுடைய ரேட்டை, என்னுடைய ஊதியத்தை நான் கூட்டிவிடுகிறேன் என்று சொல்கிறார்கள். உதாரணமாகச் சொல்லப்போனால் நான் இந்தத் துறையில் விசாரித்தபோது சொல்கிறார்கள். நம்முடைய முன்னாள் முதலமைச்சராக இருந்த மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் புகழின் உச்சக்கட்டத்தில் இருந்த போது ஒன்பது லட்சம் ரூபாய் வாங்கினாராம். இப்போது அதை விட ஐந்து மடங்கு அதிகம் வாங்குகிறவர்கள் சிலர் இருக்கிறார்களாம். அண்மையில் ஒருவர் 50 லட்சம் ரூபாய் கூட பெறுகிற ஒரு நிலை உருவாயிற்றாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாட்டில் அப்படி ஒரு நடிகரா? 45 லட்சம்.. உங்கள் கணக்குப்படி..

திரு. குமரி அனந்தன்: தமிழ்நாட்டில்தான், என்னுடைய கணக்குப்படி, ஆனால் இன்கம்-டாக்ஸ் கணக்குப்படி என்ன என்று தெரியாது, எனக்கு அவர்கள் சொன்ன கணக்குப்படி 45 லட்சம். அவர்கள் வாங்குகிற ஆட்கள் கூட இங்கே இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய படத்தை மட்டுமே போட்டுக்கொண்டு இருப்பது என்பது, 100 படத்திலே அவர்கள் நடிக்க முடியாது. ஒரு தனி மனிதன் புகழ் பெறுவதை நான் மறுக்கவில்லை. ஆனால் பொதுமக்களிடத்திலேயிருந்து பணத்தை வாங்கி வாங்கி, ஒரு தனி மனிதனுடைய பொருளாதாரத்தை, எதுவும் கணக்கில் வராத பொருளாதாரத்தை அதிகப்படுத்திக் கொண்டு போவது என்பது எந்த வகையிலே சரியாக இருக்கும் என்பதனை, இந்தத் துறையில் இருப்பவர்கள் சிந்திக்கவேண்டும். எப்படி இருந்தும் இந்தத் துறைக்கு ஏன் வருகிறார்கள் என்றால், அதில் இருக்கிற மிகப் பெரிய கவர்ச்சி, மிகச் சீக்கிரமாக பணக்காரர்களாக ஆகலாம் என்ற.....

திரு. பெ. சீனிவாசன்: துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் குமரிஅனந்தன் அவர்கள் சொன்ன புள்ளிவிவரங்கள் ஏறக்குறைய சரியாக இருக்கலாம். ஆனால், சட்டத்தின் பார்வையில் அது வராது. அதைச் சட்டத்தின் பார்வையில், பிடியில் கொண்டு வருகிற அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறது. இன்கம்டாக்ஸ் டிபார்ட்மென்ட் ஒழுங்காக இருந்தால், இந்தக் குறைகள் இருக்காது.

[1989 ஏப்ரல் 20

**திரு. குமரி அனந்தன்:** இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்டுக்கு முன்னாலே, இந்த காம்பவுன்டிங் என்பதைப் போடாமல் இருந்தால் ஒவ்வொருவரும் எவ்வளவு படத்தை எத்தனை பேர்கள் பார்க்கிறார்கள் என்று சொல்கிற கணக்கு வருகிறபோது, இவ்வளவு பேர்கள் பார்க்கின்ற இந்தப் படத்திற்கு இவ்வளவு வருவாய் வருகிறது என்றால், அவர் எவ்வளவு பெற்றிருப்பார் என்று சொல்கிற ஒரு கணக்குக்கும் வசதியாக இருக்கும்.

இரண்டாவது இன்கம்-டாக்ஸ் டிபார்ட்மென்டுக்குச் சரியான தகவலை குமரி அனந்தனோ, சீனிவாசனோ கொடுத்தால், அவர்களுக்கு பரிசு உண்டு. எனவே, நாமும் அதிலே பங்கு கொள்ளலாம். ஒரு அரசாங்கத்தின் மேலே மட்டும் பொறுப்பைப் போட்டுவிடாமல் நாமும் அதிலே பங்கு கொள்ளலாம். நான் விசாரித்த காரணத்தாலே தெரிந்து கொண்ட ஒன்றை நான் இங்கே சொன்னேன். ஆதலாலே எல்லோரும் சேர்ந்து அப்படிப்பட்ட நிலையைத் தடுக்கவேண்டும் என்பதுதான்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, இங்கே பல விவரங்களைச் சொல்லி, மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு நானும் சீனிவாசனுமே வருமான வரித்துறைக்கு விவரங்களைத் தெரிவித்தால் நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரிவித்தார்கள். சமீபத்திலே காங்கிரஸ் துணைத் தலைவர் அவர்கள் தெரிவித்த நடிகர் 9 மடங்கு அதிகமாக வாங்குகிறார்கள் என்கிற விவரத்தை வருமான வரித்துறைக்குத் தெரிவித்திருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** நான் சொன்னது, நான் விசாரித்து அறிந்தேன் என்பதுதான். இன்னும் சொல்லப்போனால் பலருடைய வருமான வரி பாக்கி பத்திரிகையிலே வருகிறது. நமது முதல்வர் அவர்களுடைய வருமான வரி கூட பத்திரிகையிலே வந்தது, இவ்வளவு பாக்கி இருக்கிறது என்று. நான், இது எப்படியடா இருக்க முடியும் என்று சிந்தித்துப் பார்த்ததுண்டு. எனவே சில நேரங்களில் வருகின்ற கணக்கை நாம் சொல்ல முடியாது என்றாலும், உண்மையிலேயே......

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:** வருமானவரி இலாக்கா ஒருவரியை விதிக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் இவ்வளவு பாக்கி என்று சொல்கிறார்களே தவிர, வரவேண்டிய பணத்தைக் கொடுக்கவேண்டும் என்று சொல்வதல்ல. அப்பலட் சோர்ட் எல்லாம் இருக்கிறது. அப்பலட் சோர்ட்டில் அப்பீல் செய்யும் போது, இவ்வளவு டாக்கி இருக்கிறது, என்று அப்போதுதான் இந்த கணக்கு சொல்லப்படுகிறது.



1989 ஏப்ரல் 20]

**திரு. குமரி அனந்தன்:** குறையாகச் சொல்லவில்லை. சில நேரங்களிலே பத்திரிகையில் அப்படி வருகிறது என்று சொன்னேன். அதைப்போல எனக்கு வந்த தகவலின்படி, பழைய முதலமைச்சர் 9 லட்சம் ரூபாய் வாங்கினார் கடைசி உச்சக்கட்டத்திலே, அதைக்கூட வாங்கினார் என்று சொல்கிற அளவிற்கு என்னால் உறுதியாகச் சொல்லமுடியாது. தகவல் சொல்லப்படுகிறது. அதைவிட இப்போது 5 மடங்கு அதிகமாக வாங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஒருவேளை எனக்குச் சரியான தகவல் கிடைக்குமானால், நீங்களும் சேர்ந்து, ஏன் என்றால், அரசாங்கம் உங்களிடம் இருக்கிறது. அரசாங்க மெசினரி உங்களிடம் இருக்கிற காரணத்தால், என்னைவிட அதிகமான அளவில் துப்பு கண்டு பிடிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஒரு கோரிக்கை வைத்தேன். இப்போது உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள், நம்முடைய மரியாதைக்குரிய....

***திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு வட இந்திய நடிகர், காங்கிரஸ் கட்சி எம்.பி.யாக இருந்தவர் 45 லட்சம் ரூபாய் 50 லட்சம் ரூபாய் ஒரு படத்திற்காக வாங்கியதாகவும், அவர்கள் மீது அன்றைக்கு ஊழல் குற்றச்சாட்டு வந்ததற்குப் பிறகு, தன்னுடைய பதவியை ராஜினாமா செய்ததை காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அறிவாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல், அவர் மீது சில குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டன. சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள், இல்லை என்றுகூட அவரால் நிரூபித்து இருக்க முடியும். ஆயினும், குற்றம் சாட்டப்பட்ட நேரத்திலேயே ராஜினாமா செய்துவிட்ட அளவிற்கு அவர் மானஸ்தராக இருந்தார்கள். எனவே, இங்கேயும் பலர் அப்படி இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அவ்வளவுதான், அவர் மானஸ்தராக இருந்தார். தன்னுடைய பாராளுமன்ற பதவியை உதறித் தள்ளுகின்ற அளவிற்கு, அந்த மாசுபடக்கூடாது என்று நினைத்ததை நாம் பாராட்டலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எம். அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல ஜனநாயக மரபைப் பற்றி நம்முடைய மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். தன் மீது குற்றம் சொன்ன உடனே, நல்ல ஜனநாயக உணர்வோடு நல்ல மானஸ்தராக அவர்கள் ராஜினாமா செய்தார் என்பதை அவர்கள் சொல்லியதன் வாயிலாக, ஏதோ நடந்திருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் இப்படி குற்றம் புரிந்த காரணத்தினால் குற்ற

(நண்பகல் 12-00)

உணர்வோடு ராஜினாமா செய்து நல்ல மரபை ஏற்படுத்தியிருக்கிறார். அந்தக் கட்சியைச் சார்ந்த அந்த தலைமை அதற்கு பொறுப்பேற்று, ஏன் ராஜினாமா செய்யவில்லை என்பதை அவர் விளக்குவாரா?

**திரு. குமரி அனந்தன்:** ஒரு நிமிடம் அதிக நேரம் போய்விடும் என்பதால் சொல்கிறேன். அதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். முதலில் உங்களிடம் சொல்லிவிடுகிறேன்.

குற்றச்சாட்டுச் சொல்லப்பட்ட உடனேயே அது ஊழல் அல்ல என்று நிருபிக்க முடியும். ஆயினும் என்று நான் சொன்னேன். நிருபிக்கமுடியும். ஆயினும் என்று சொல்லப்பட்டதை என்னுடைய பேச்சுக் குறிப்புகளை பின்னர் நீங்கள் எடுத்துப்பாருங்கள். அவர் உடனேயே இப்படிப்பட்டவர்கள் மத்தியிலே நம் இருக்க வேண்டாம் என்று சொல்லி, அவர் ராஜினாமா செய்தார் என்று நான் சொன்னேன். இன்னும் ஒரு இடத்திலே நீங்கள் சொல்கிறபோது குற்றச்சாட்டு சொல்லப்பட்டபோது, அதனுடைய தலைவர் என்று நீங்கள் சொல்கிறீர்கள். நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆளுங்கட்சி என்று சொல்கின்றபோது, அந்தப் பெரிய கோபுர கலசத்தை நோக்கி, சில நேரத்திலே கற்கள் வீசப்படுகின்ற நேரத்தில் எல்லாம் கோபுரக் கலசம் கீழே விழுந்தால், கோபுரமும் இருக்காது. இந்த நாட்டிலே ஆண்டவனும் இருக்கமாட்டார்.

**திரு. எம். அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, அமிதாப் பச்சனுக்கு இருந்த மான உணர்வு அவர்களுடைய தலைவருக்கு இல்லை என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டதற்கு நன்றி. (கூச்சல் குழப்பம்)

**திரு. குமரி அனந்தன்:** எப்போதுமே ஒரு செய்தியை அவர்களே சொல்லிவிட்டு, அதை உறுதிப்படுத்துவது என்பது இருக்கிறதே அது மிகத் தவறான பழக்கம் என்று நான் உங்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்' கொஞ்சம்கூட உண்மை அல்லாத ஒன்றை எதிர்த்துப் போராடியாக வேண்டும். இப்போது ராஜீவ் காந்தி அவர்கள் கண்ணகியாக இருக்கிறார். கோவலன் மீது குற்றம் சாட்டப்பட்ட நேரத்திலே அது இல்லை என்று தெரிந்தவுடனேயே குற்றம் சாட்டியவர்களையே எரிக்கின்ற கண்ணகியாக இருந்து அதை நிறைவேற்றுவதற்கு ராஜீவ் காந்தி உயிரோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். பதவியிலே இருந்துக் கொண்டிருக்கிறார்கள். கோப்பெருந்தேவி உடனே செத்த பழக்கமும் உண்டு. அவர்கள் ஒரு பத்தினி. எதிர்த்து நின்று வென்ற ஒரு பழக்கமும் உண்டு. அவள் ஒரு பத்தினி. கோப்பெருந்தேவி எங்கள் அமிதாப்பச்சன். கண்ணகி எங்கள் ராஜீவ்காந்தி. அதை நினைவிலே வையுங்கள். எனவே இங்கே நான் சொன்ன தகவலை வைத்துக்கொண்டு, நீங்கள் எல்லோருமாக சேர்ந்து உதவினால் அந்த இன்கம்–டாக்சிற்கு நாம் உதவி செய்யலாம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாம் மேட்னிக்கே போய்விடுவோமோ?

**திரு. எம். அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராஜீவ்காந்தி கண்ணகி என்றால், கோவலன் யார் என்பதை விளக்கிச் சொல்வாரா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை மேட்னியில் பார்த்துக்கொள்வோம்.

**திரு. பெ. சீனிவாசன்:** துணைத் தலைவர் அவர்களே, கோப்பெருந்தேவியைப் பொறுத்தவரையில், இலக்கியத்திலேயே கற்பினுடைய முதல் இலக்கணமாக இருந்தவர். கணவன் இறந்த அந்த வினாடியே உயிரைத் துறந்தவர், அவ்வளவு பெரிய கோப்பெருந்தேவியைப் போய், ஸ்விட்சர்லாந்திற்குப் போய் வீடு கட்டி, இந்திய சர்க்காருக்கு,... (குறுக்கீடு) அந்த கோப்பெருந்தேவியை அவமானப்படுத்தக் கூடாது. அதை தயவு செய்து நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும். ஒரு கேடுகெட்ட நடிகனோடு ஒரு குலப்பெண் நம்முடைய கொடி மரபைச் காத்த கோப்பெருந்தேவி, சிலப்பதிகாரத்தினுடைய இதயமாக இருக்கின்ற கோப்பெருந்தேவி, அவருடைய கற்பைப் பற்றி இளங்கோவடிகள் வியந்து பாராட்டக்கூடிய அந்த கோப்பெருந்தேவியோடு ஒரு அமிதாப்பச்சனை ஒப்பிடுவது நம்முடைய கலாச்சாரத்தை கற்பழிப்பதற்கு சமானம்,

**திரு. குமரி அனந்தன்:** கலாச்சாரம், கற்பழிப்பு என்ற சொற்கள் எல்லாம் உங்களுக்கே உரியன. நான் உங்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். பவளம் போன்ற உதடு என்றால், அமுக்கினால் அமுங்குமா என்று கேட்கக்கூடாது. உவமை ஒரு எல்லையோடு நிற்கும். அதுதான் உவமைக்குரிய இலக்கணம். எனவே கோப்பெருந்தேவியினுடைய கற்பு என்பதையும்' கண்ணகியினுடைய கற்பு எனபதையும், இரண்டு பிரிவுகளாக பிரித்து கற்பிற்கு பெருமை தேடினோம். அந்த இரண்டு பிரிவுகளுடைய செயலுக்கும் நான் உதாரணம் காட்டினேன். அதனை விட்டு விட்டு, நீங்கள் ஒரு எல்லையை மீறிச் சொல்லக்கூடாது. கரும் பாம்புச் சடை என்று சொன்னால், அது கொத்துமா என்று கேட்கக்கூடாது.. அதுபோன்று உவமைக்கு ஒரு எல்லை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு ஸ்டன்ட் சீனையே நான் பார்த்துவிட்டேன். ஒரு சினிமாவைப் பற்றிப் பேசியதால் ஒரு ஸ்டன்ட் சீனே வந்தாயிற்று. அதைப் பார்த்த மாதிரி ஆயிற்று.

திரு. குமரி அனந்தன்: இந்த அவையிலே ஒரு நேரத்திலே கூட நம்முடைய முன்னாள் முதலமைச்சர்கூட நடிகராக இருந்தவர். இப்போது கூட ஒவ்வொருவருடைய கட்சியிலேயும் நடிகர்கள், நடிகைகள் இருக்கிறார்கள். நடிக்கிறார் என்ற காரணத்திற்காகவே சில சொற்களை நாம் சொல்லிவிட்டோம் என்று சொன்னால், கேடு கெட்டு போன்றவைகளை சொல்லிவிட்டோம் என்று சொன்னால், அது எந்த அளவிற்கு பொருத்தமாக இருக்கும் என்பதனை அவைத் தலைவர் அவர்கள் முடிவு செய்யட்டும் என்று சொல்லி, இந்தத் திரைப்படத்திலே கேளிக்கை வரி என்பதனை நாம் மீண்டும் கொண்டுவருவோமேயானால் அந்த கேளிக்கை வரி என்று நான் சொல்வதற்கு காரணம், வசூலுக்கு தகுந்தவாறு நீங்கள் 'ப்ரபோர்ஷனேட்' என்ற அளவிற்கு இருக்கலாம். இப்போது ஆந்திராவிலே, கர்நாடகத்திலே, கேரளாவிலே இருக்கின்ற வரிகள் எல்லாம் 25 சதவீதத்திலிருந்து 30 சதவீகத்திற்கு மேலேயில்லை. ஆனால் நமது ஊரிலே 52 சதவீதத்திற்குப் போடுகின்ற அளவிற்கு இருக்கின்ற காரணத்தால்தான் இந்தத் தொழில் அதிகமாக நசுங்கி போகிறதோ என்று எண்ணுகின்ற அளவிற்கு சில இடங்களில் படங்கள் தோல்வியடைகின்றன. படங்கள் தோல்வியடைகின்றன என்று சொன்னால், அதற்கு கேளிக்கை வரியைக் குறைக்கிற போது மக்கள் அதிகமாக சென்று பார்ப்பார்கள் அதன் மூலம் அதிகமான வருவாய் வரும் என்று நாம் சிந்திக்கவேண்டும். அடுத்த செய்தியாக நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது நீங்கள் மட்டும்தான் இன்றைக்கு உங்களுடைய கட்சியின் சார்பில் பேசப் போகிறீர்களா அல்லது இன்னும் சில பேருக்கு வாய்ப்புத்தரப்பட வேண்டுமா?

திரு. குமரி அனந்தன்: மதுரையைப் பற்றி, நமது ஊரைப் பற்றி பேசியதிலே அதிக நேரம் ஆகிவிட்டது சபாநாயகர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமது ஊரைப் பற்றி பேசியதினாலே நான் அதிக நேரம் ஒதுக்கிவிடுவேன் என்று நீங்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது நீங்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தால் எல்லோரையும் விட்டு விட்டு நான் நேரிடையாக அமைச்சருடைய பதிலுரைக்கு வந்துவிடுவேன்.

திரு. குமரி அனந்தன்: நமது ஊர் என்றாலும், யாதும் ஊர்தானே நமக்கு. அதனாலே இந்த ஊரையும் எடுத்துக் கொண்டேன். யாதவர் ஊர் என்றால் யாதும் நமது ஊர்தான் என்று சொல்லுகிற வகையிலே இன்னும் ஒரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன். சபாநாயகர் அவர்களே தேவையில்லாத அதிகமாக, நான் இன்னும் சொல்லப்போனால் உங்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், நான் சொற்பொழிவே செய்யவில்லை. சொற்பிழிவுதான் செய்ய விரும்புகிறேன். வெளியே பேசுவது



சொற்பொழிவு என்பதும் சட்டமன்றத்திற்குள்ளே கொடுப்பது சொற்பிழிவு என்பதும் எனக்கு ஓரளவு தெரியும் தமிழன்னையினுடைய கருணை கடாட்சத்தினாலே. (சிரிப்பு) எனவே நான் இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். அதற்கு மேலே எடுத்துக்கொள்ள மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிழிவு 34 நிமிடம் ஆகிறது. பொழிவு எவ்வளவு நேரம் எடுக்கும்? (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன்: கனிகளைப் பொறுத்தது. நிறைய கனிகள் இருந்தால் பிழிவதற்கு சற்று நேரம் ஆகத்தானே செய்யும் சபாநாயகர் அவர்களே. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களே பிழிந்துக்கொண்டிருந்தால் மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பு வேண்டாமா! (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன்: மற்றவர்களுக்கும் அந்த வாய்ப்பு நீங்கள் கொடுப்பீர்கள். இன்னும் சொல்லப்போனால்....

திரு. கே ரமணி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே தங்களுடைய கவனத்தை நான் தாழ்மையோடு ஈர்க்க விரும்புகிறேன். எத்தனையோ பேர்கள், இது மிகவும் உயிர் தன்மை பெற்ற மிக முக்கியமான மானியம் என்பதனால் பேச இருக்கிறார்கள், பேசியவர்களுக்கெல்லாம் 5 நிமிடம், 8 நிமிடம் 10 நிமிடம் என்று கொடுத்து அவர்களுடைய குரல் வளையைப் பிடித்து, இப்போது இவ்வளவு பெரிய தர்க்கத்திற்கு, பெரிய விவாத மன்றமே உருவாவதற்கு இடம் அளிக்கலாமா. தயவு செய்து நீங்கள் எல்லோரையும் பாதுகாக்க வேண்டும். இந்த விவாதத்தில் அவசியம் இல்லாத இத்தனை ஊர் சுற்றும் ஏற்பாட்டை நிறுத்திவிட்டு அவையை ஆரம்பிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குமரி அனந்தன் அவர்கள் ஒரு மணித்துளியில் முடித்துக் கொள்ளவேண்டும்.

திரு. குமரி அனந்தன்: ஒரு மணித் துளிக்கூட தேவையில்லை. இது ஒரு பழக்கமாகப் போய்விட்டது. ஆளுங்கட்சிக்கு எப்போதும் துணையாக இருக்கின்றவர்கள் இதை ஒரு பழக்கமாக வைத்திருக்கிறார்கள். நான் ஒரு சுற்றும் சுற்றவில்லை. நான் என்னுடைய சொற்பொழிவை அல்லது சொற்பிழிவை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, குமரி அனந்தன் அவர்கள் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியதில்லை. ஆளும் கட்சிக்கு ஆதரவாக சொல்வது என்பதல்ல. இருக்கின்றவர்கள் பேச வேண்டியிருக்கிறதே. இப்போது எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் பேச வேண்டியிருக்கிறதே. அவர்களுக்கு என்ன

செய்வது? ஆக எந்தவிதக் கொள்கையும் அடிப்படையும் இல்லாமல் சுற்றிக் கொண்டே இருப்பதைத்தான் சொல்கிறேனே தவிர வேறு அல்ல. அவர் ஊரைச் சுற்றுகிறார் என்று அல்ல நான் சொல்வது.

திரு. குமரி அனந்தன்: கொள்கையும் கட்டுப்பாடும் அடிப்படையும் இல்லாமல் பேசுகிற பழக்கம் காமராஜரின் தொண்டனாகிய எனக்கு இல்லை. அவர் அதைச் சுட்டிக் காட்டுவாரேயானால், தனியாக ஒரு செஷனை நீங்கள் வையுங்கள். தயவுசெய்து அவர் சுட்டிக்காட்டுவதை எல்லாம் நான் திருத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரவு 8 மணிக்குப் பின்னால் அதைப் பற்றி சிந்திப்போம். இப்போது நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான். இரண்டு பேரும் பேசிவிட்டீர்கள். நீங்கள் சொன்னீர்கள் அவர் அதற்கு விடை சொல்லிவிட்டார். இதையே இன்னும் வளர்த்துக் கொண்டே போகவேண்டாம். நீங்கள்தான் சொன்னீர்கள் என்றால் அவர் சும்மா இருக்கலாம். ''ஆளும் கட்சிக்கு ஆதரவாக'' என்று நீங்கள்தான் கொக்கி போட்டீர்கள். கொக்கியைப் போட்டால் ஏதாவது வரும் அங்கேயிருந்து. (சிரிப்பு) திரு. வெள்ளிங்கிரி.

திரு. குமரி அனந்தன்: ஒரே ஒரு நிமிடம். ஒவ்வொரு தடவையும் இன்னொருவர் பேசுகிறபோது கமெண்ட்ஸ் பாஸ் பண்ணுவதற்கு என்றே சிலர் இருக்கிறார்கள். அந்த நிலைமை வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கை மீது எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முதலிலேயே நான் சொல்லிவிடுகிறேன். எனக்குக் கொடுத்திருக்கக்கூடிய நேரம் நிச்சயமாகப் போதாது. கூடுதலாக நேரம் பேரவைத் தலைவர் அவர்கள் ஒதுக்குவார்கள் என்ற நம்பிக்கையோடு நான் என்னுடைய பேச்சைத் துவங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உழைக்கின்ற தொழிலாளர்களை, பொருள்களையெல்லாம் உற்பத்தி செய்து, உற்பத்தியைக் பெருக்கக்கூடிய அந்த தொழிலாளர்களை, இன்றைக்கு பல அமைப்புகள்—மத்திய அரசாங்கம், ஏற்கெனவே இருந்திருக்கக்கூடிய பல அரசாங்கங்கள் எல்லாம் பல சட்டங்களைப் போட்டு அவர்களுடைய குரல்வளைகளை எல்லாம் நெறிக்கக் கூடிய காட்சிகளை சமீபகாலத்திலே பார்த்திருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



(பிற்பகல் 12-10)

குறிப்பாக இன்றையதினம் தொழிலாளர் நலம் சம்பந்தப்பட்ட வரைக்கும் ஏற்கனவே மத்திய அரசாங்கத்தால் இந்தியாவிலே இருக்கக்கூடிய தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டிலே எடுத்த முடிவுக்கு மாறாக தொழில் தகராறை மாற்றுகின்ற முறையில் தொழில் உறவு என்ற ஒரு மசோதாவை கொண்டு வந்து இன்றைக்கு தொழிலாளியுடைய உரிமைக் குரலை பறிக்கின்ற அந்த மசோதாவை இன்றைக்கு நடைமுறைபடுத்தினார்கள் என்பதை நான் இங்கே கவலையோடு தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக நம்முடைய மாநில தொழிலாளர் நல அமைச்சரும், அதே போல இந்தியாவில் இருக்கக்கூடிய மேற்கு வங்காளத்தினுடைய தொழிலாளர் நல அமைச்சர், கேரளா, ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களிலே பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய தொழிலாளர் நல அமைச்சர்கள் எல்லாம் அந்த தொழில் உறவு மசோதாவை எதிர்க்க கூடிய நேரத்திலே கூட மத்திய அரசாங்கம் பிடிவாதமாக அந்தச் சட்டத்தை அமுலாக்குவேன் என்ற ஒரு நிலை. நம்முடைய மன்றத்தின் சார்பாக மீண்டும் ஒரு முறை இந்தியாவில் இருக்கக்கூடிய தொழிற்சங்க அமைப்புகளையும், தொழிலாளர் நல அமைச்சர்களையும் அழைத்து ஒரு சுமூகமான சூழ்நிலையை உருவாக்குவதற்காக பேச்சுவார்த்தை நடத்தித்தான் அதை அமல்படுத்த வேண்டும் என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

அதே போல நீண்டகாலமாக தொழிலாளிகள் போராடி பெற்றிருக்கக்கூடிய பஞ்சப்படி என்ற உரிமை இன்றைக்கு படிப்படியாக 1939 ஆம் ஆண்டு பேஸை அடிப்படையாகக் கொண்டு இருந்தது. அதை 1960 ஆகக் கொண்டு வந்தார்கள். இன்றையதினம் 1982 என்ற அடிப்படையில் இன்றைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே தொழிலாளிகள் போராடிப் பெற்ற அந்த பஞ்சப்படி உரிமை கூட மத்திய அரசால் மறுக்கப்படுகிறது. இதை தொழிலாளிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராடக்கூடிய தொழிலாளிகளுக்கு மாநில அரசாங்கமாவது பக்கபலமாக இருந்து 60 ஆம் ஆண்டு பஞ்சப்படி பேஸை கணக்கில் வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல இந்தியாவில் மட்டும் அல்ல, தமிழகத்தில் சம்பந்தப்பட்ட வரைக்கும் மூடிய ஆலைகளைத் திறக்க வேண்டும் என்ற ஒரு நிலையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பட்ஜெட் அறிக்கையிலே கொடுத்தார்கள். தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் அவர்களுடைய அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். மூடப்பட்ட ஆலைகளை முடிந்த வரையில் திறப்பதற்கு இந்த அரசு உறுதிகொண்டுள்ளது

என்று சொல்லி அவருடைய அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். நான் இதிலே சொல்லிக்கொள்வதெல்லாம் கோவை மாவட்டத்தில் எத்தனை பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதெல்லாம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கோவையில் தான் அதிகமான பஞ்சாலைகளை மூடியிருக்கிறார்கள். சிங்காநல்லூர் பகுதியிலே அதிகமாக பஞ்சாலைகள் சாத்தியிருப்பதாக மோகன் அவர்கள் சொல்கிறார்கள். நிச்சயமாக எனக்குத் தெரியும். அதே போன்று எனக்கு முன்னால் பேசிய பேரூர் சட்டமன்ற உறுப்பினர் எவரெஸ்ட் கம்பெனி சாத்தியிருப்பதாக சொன்னார். அதே போல அமுசர் இண்டஸ்ட்ரீஸ், ஆட்டோஸ்மித் போன்ற பல தொழிற்சாலைகளும் அதே போன்று மத்திய மந்திரி பிரபுவுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய ராமகிருஷ்ணா தொழிற்சாலைகள் எல்லாம் சாத்தப்பட்டு பல ஆண்டுகளாக அந்த தொழிலாளிகள் எல்லாம் நடு வீதியிலே திரிந்து கொண்டிருக்கின்ற காட்சியை நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். பல இயக்கங்கள், போராட்டங்கள் கோவை நகரில் இருக்கக்கூடிய... ... ..

**திரு. எஸ். டேனியல்ராஜ்:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் பிரபு அவர்கள் இந்த அவைக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள். அவர்களுடைய தொழிற்சாலையைப் பற்றி உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய பெயரை அவைக் குறிப்பிலிருந்து அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு டேனியல் ராஜ் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இதுபோன்ற வினாக்கள் எழுப்பும் போது நீங்கள் உங்கள் இருக்கையில் இருக்க வேண்டும் என்பது ஒரு விதி, அதனால், அதிலிருந்து எழுப்பினால் தான் இதற்குப் பொருத்தமாக இருக்கும். திரு. வெள்ளிங்கிரி தொடரலாம்.

**திரு. யூ. கே. வெள்ளிங்கிரி:** தலைவர் அவர்களே, எனக்கு அவருடைய பெயரைக் குறிப்பிட வேண்டும் என்ற நோக்கம் கிடையாது. அவருடைய தொழிற்சாலை சாத்தியிருக்கிறது என்று தான் சொன்னேன். ஆகவே அந்தத் தொழிற்சாலையைத் திறக்க முடியாதவர்கள் பொறுப்பிலே இருக்கிறார்கள். என்றைக்கு இந்த தொழிற்சாலைகள் எல்லாம் திறக்கப்படும் என்பதையும் நான் ஒரு தொழிற் சங்கத் தலைவன் என்ற முறையிலே தான் இந்த சபையின் மூலமாக நான் வெளி உலகத்திற்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல்தான், மூடிய ஆலைகளைத் திறப்பதற்கெல்லாம் மாநில அரசாங்கத்தின் தரப்பிலே ஒரு சரியான வரையறைகள், கொள்கைகள் திட்டமிட்ட முறையிலே இருக்கவேண்டும். எத்தனை தினங்களுக்குள்ளாக அந்த ஆலைகளையெல்லாம் திறப்போம், அதற்கான நடவடிக்கை எடுப்போம், அரசாங்கத் திட்டத்திலே என்ன திட்டங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே கொடுப்பார்கள் என்று நான்



எதிர்பார்க்கிறேன். ஏனென்று சொன்னால், நீண்ட காலம் ஆகிவிட்டது. இன்றைக்குத் தமிழகத்தில் சிறியது, பெரியது, நடுத்தரம் என்று இருக்கக்கூடிய பல தொழிற்சாலைகளைச் சாத்தியிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளை, பட்ஜெட் உரையிலே முதலமைச்சர் அவர்கள் சொல்லியது போல், வேகமாக, விரைவாகத் திறப்போம் என்று சொன்னால் தமிழகத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய பாராட்டுக்கள், நம்பிக்கைகள் இந்த அரசிற்குக் கிடைக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லி, அந்த அடிப்படையில் வேகமாக, விரைவாகத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதுபோல் ஒரு பக்கம் தொழிற்சாலையைத் திறக்கவேண்டும் என்று சொல்கிற நேரத்திலேயே கோவையில் மூலப்பொருள்கள் கிடைக்காத காரணத்தால், கோக்கும், (p g:rcn) பிக்ஐயரனும் கிடைக்காத காரணத்தால், மின்சாரம் இல்லாத காரணத்தால் பல தொழிற்சாலைகள் இன்றைக்குச் சாத்தக்கூடிய அபாயம் இருக்கிறது என்பதையும் இங்கே கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதுபோல் தொழிலாளர்துறை சம்பந்தப்பட்ட வரைக்கும் இன்றைக்கு திரட்டப்பட்டு இருக்கக்கூடிய தொழிலாளர்களும், திரட்டப்படாத தொழிலாளர்கள் பல இலட்சம் பேரும் இருக்கிறார்கள். இந்த இரண்டு பகுதியினருக்கும் நன்மை பயக்கக்கூடிய துறை தான் தொழிலாளர் நலத்துறை. ஆனால் இன்றையதினம் அந்தத் துறையினுடைய செயல்பாடு போதுமானதாக இல்லை.

முழுமையாகப் போதுமானதாக இல்லை என்று நான் சொல்லவில்லை. ஒரு சில அதிகாரிகள் போதுமான கவனத்தை எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஒரு சில அதிகாரிகள் போதுமான அளவிற்கு அந்தத் தொழிற்தகராறுகளிலே தலையிடுகிறார்கள். ஆனால் பெரும் பகுதியினர் போதுமான அக்கறை செலுத்த வில்லை. நீண்டகாலமாக கன்சிலியேஷன் நடக்கிறது. தீர்வு ஏற்படுவது கிடையாது. கோர்டுக்கு அனுப்புவது கிடையாது. அப்படிப் அனுப்பினாலும் நோ-அப்ஜெக்ஷன் என்று வருகிறது. பட்ட முறையிலே இந்தத் துறை மிக மோசமான நிலையில் இருக்கிறது. அதைச் சரியாக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்கிறேன்.

அதேபோல், இந்தத் துறையின் சார்பாக பல இடங்களிலே லேபர் ஆபீசர், ஏ.சி.எல்., டி.சி.எல். போன்றிருக்கக்கூடிய இடங்களிலே அவை காலியாகவே இருக்கின்றன. பல ஆண்டு காலமாக, நான் கமிஷனரிடத்திலேயே எடுத்துச் சொன்னேன். கோவை சம்பந்தப்பட்டவரைக்கும், ஏ.சி.எல்.3 நிரந்தரமாகவே காலியாக இருக்கின்றது. 300,400-க்கு மேற்பட்டு இருக்கக்கூடிய இன்ஜினீரிங் தொழிற்சாலைகளை இந்தச் சரகம்–3 தான் கவனித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதுசம்பந்தமாகக்

கேட்டபோது, அங்கே பல ஏ.சி.எல்-கள் அவர்களுக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்படாத காரணத்தால், சென்னை கோட்டுக்கு சென்றிருக்கிறார்கள், ஆகவே அது முடியும் வரை போட முடியாது என்று கமிஷனர் அவர்கள் சொன்னார்கள். நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வது,— நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலும் ஞாபகப்படுத்தி இருக்கிறேன். டெம்பரவரியாகவாவது போட்டு, அந்தக் கேஸ்களை எல்லாம் உடனடியாக நடத்தி, சம்பந்தப்பட்டவர்களை அழைத்து வைத்துப் பேசி அந்தப் பிரசசினைகளை சுமூகமாகத் தீர்த்து வைத்து, அவர்கள் ஒரு நிம்மதியாக அந்தப் பணியிலே ஈடுபடுவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். தொழிலாளர் கோரிக்கைகள், கன்சிலியேஷன் ஃபைல்கள் எல்லாம் வேகமாக நடக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

உடனடியாக, தமிழகம் முழுவதும் ஆங்காங்கே காலி இருககின்ற அந்த இடங்களை நிரப்புவதற்கு இந்தத் தரப்பிலே முயற்சி செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல், தொழிலாளர்கள் சட்டங்கள் பல இருக்கின்றன. குறிப்பாக, இன்றைக்கு நீங்கள் பார்க்கலாம். நிரந்தரத் தொழிற்சாலைகள் சட்டம் பல இருக்கின்றன. ஐ.டி. ஆக்ட். உங்களுக்கெல்லாம் தெரியும். அந்தத் தொழிற்தகராறுச் சட்டம் அநேகமாக தமிழகத்தில் பெரிய அளவிற்குச் செயல்படவில்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

இதனுடைய பணி ஒரு தொழிற்சாலையில் வருகைப் பதிவேடுகள் வைத்திருக்கிறார்களா, எத்தனை பேர் வேலை செய்கிறார்கள், லைசென்சு இருக்கிறதா, கழிப்பறைகள் இருக்கின்றனவா, அல்லது மணியடிக்கின்றார்களா, பட்டியல் வைத்திருக்கின்றார்களா, என்று அந்த முறைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து தொழிலாளர்களுக்கு ஒரு நன்மை பயக்கின்ற அடிப்படையில் இந்தத் துறை செயல்படவேண்டும். ஆனால் தமிழகத்தில் அப்படிப்பட்ட ஒரு நிலை இல்லாமல் இருக்கிறது என்பதை நான் சொல்லவிரும்புகிறேன். பல சந்தர்ப்பங்களிலே தொழிற்சங்கங்கள், சம்பந்தப்பட்ட துறைக்கு எழுத்துமூலமாகக் கொடுத்தும் கூட அவை இன்று வரைக்கும் செயல்படாத ஒரு நிலைதான் இருக்கிறது. அதை ஏற்கனவே அவருடைய அறிக்கையிலேயே கொடுத்து இருக்கிறார்கள். போதுமான அளவிற்கு அது செயல்படவில்லை. எதிர்காலத்தில் போக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தொழிற்சாலைகள், வேலைவாய்ப்புத் துறை கொள்கைக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. ஆகவே, அதையும் உடனடியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லி (மணியடிக்கப்பெற்றது) நேரம் போதாது. 10 நிமிடம் வேண்டும், தயவுசெய்து, பெரிய பிரச்சினைகள், தொழிலாளர் மான்யம் பெரிய பிரச்சினை: உங்களுக்கே தெரியும் எனக்கு 5 நிமிடம், 10 நிமிடம் எல்லாம் போதாது தயவுசெய்து இன்னும் கொஞ்சம் நேரம் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆகவே, அந்த அடிப்படையில் அந்த துறைச் சம்பந்தப்பட்ட வரையில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

அதேபோல் இன்றைக்கு தொழிற்சாலைகள், சட்டப் பிரிவு 85(1)-ன் கீழ் அறிவிக்கப்பட்ட தொழிற்சாலைகள், அறிவிப்பு செய்யப்படாத தொழிற்சாலைகள் என்று நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக சுருக்கமாக சொல்கிறேன் தற்போது அமலில் உள்ள தொழிற்சாலைகள் சட்டவிதிகளின் படி பரிந்துரையுடன் 10-க்கு மேற்பட்டிருக்கக்கூடிய தொழிற்சாலைகள் தான் பேக்டரி ஆக்ட்டின் கீழ் வரும். 10-க்கு கீழ் இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் பேக்டரி ஆக்ட்டின் கீழ் வராது. ஆனால் பல மாவட்டங்களில் மாநிலம் முழுவதும் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் 10-க்கு கீழ் தொழிலாளர்களை வைத்துக் கொள்கிறார்கள். 10-க்கு மேற்பட்ட ஆட்களோ அல்லது பரிதிறனின்றி இருந்தால் பேக்டரி ஆக்ட்டில் கவர் ஆகும். 20 பேர் வைத்துக் கொண்டால் பி. எப். கவர் ஆகும். 50 பேர் வைத்துக் கொண்டால் லே ஆப் கவர் ஆகும். ஆனால் நிர்வாகங் களை நடத்தக்கூடிய முதலாளிகள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் 9 பேரை வைத்துக்கொள்கிறார்கள். மீதம் இருக்கக்கூடியவர்களை எல்லாம் டெம்பரரியாக, கேஷ்யூவலாக கான்டிராக்ட் முறையில் வைத்துக் கொள்கிறார்கள். அதுபோல் 19 பேரை வைத்துக் கொள்கிறார்கள். மீதம் உள்ள ஆட்களை எல்லாம் கேஷ்யூவலாக, டெம்பரரரியாக வைத்துக்கொள் கிறார்கள். இந்த சட்டங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு தொடர்ந்து இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை கையாளு கிறார்கள்.

அதுபோல் தமிழகத்தில் தொழிற்சாலைகளை பதிவே செய்யாமல் 1986 ஆம் ஆண்டு கணக்குபடி சற்றேறக்குறைய கொஞ்சம் முன் பின் இருக்கலாம். 86 ஆயிரம் பேர் மேற்சொன்ன விதிமுறைகளின் கீழ் வராது பயிற்சி பெற்றுக்கொண்டு இருக்கக் கூடிய பரிந்துரை செய்துகொண்டிருக்கக்கூடிய 10-க்கு குறைவான ஆட்களை, 20-க்கு குறைவான ஆட்களைக் கொண்டு உற்பத்தியை செய்யக்கூடிய தொழிற்சாலைகள் அரசு தொழிற்சாலை சட்டப் பிரிவு 85 (1)-ன் கீழ் முறையான தொழிற்சாலைகள் என அறிவிப்பு செய்துள்ள குறிப்பாக அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள், கடலை உடைப்பு ஆலைகள், மரத் தொழிற் சாலைகள், மரம் அறுக்கும் பட்டறை, தீப்பெட்டித் தொழிற் சாலை, பட்டாசு தொழிற்சாலை. தானியங்கித் தொழிற்சாலை, விசைத்தறி, அச்சக தொழிற்சாலைகள், டையர் ரீ-டிரேடிங் தொழிற்சாலைகள், பொறியியல் பணிமனை, பனியன் மற்றும் பின்னல் தொழிற்சாலை, பி.வி.சி. பைப் தொழிற்சாலை இதுபோன்று ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கின்றன.

[திரு. யூ.கே. வெள்ளிங்கிரி] [1989 ஏப்ரல் 20

இவைகள் முழுவதும் பதிவு செய்யப்படாமல் இருக்கின்றன. ஏறக்குறைய தமிழ்நாட்டில் ஒரு லட்சத்திற்கு மேலான நிறுவனங்களில் 10-க்கு குறைவானவர்கள் இருக்கிறார்கள். இவைகளில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கைசராசரி 10-க்கு குறைவானவர்கள் என்று கணக்கெடுத்துக் கொண்டால்கூட 10 லட்சத்திற்கும் மேற்பட்டதொழிலாளர்கள் அந்தத்துறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவைகளை எல்லாம் நிச்சயமாக பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னாலும் கூட அதனால் அரசுக்கு ஒரு வருமானம் கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிட்டத்தட்ட மேற்பட்ட சட்டத்தினை அமல் செய்வதால் அரசுக்கு இழப்பு எதுவும் இல்லை. மாறாக ஒவ்வொரு ஆண்டுக்கும் அரசுக்கு 1 லட்சத்து 26 ஆயிரம் தொழிற்சாலைகளிடமிருந்து குறைந்தபட்ச உரிமைக் கட்டணம் ரூபாய் 100 என்று சொன்னால் கூட ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதை முழுமையாக தவற விட்டு இருக்கிறீர்கள் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அதுபோல் தொழிலாளர் நல வாரியம் என்று இருப்பதற்கு 2 ரூபாய் பிடிக்கிறார்கள். அந்த முறையில் கிட்டத்தட்ட 60 லட்சம் ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைக்கும். அதையெல்லாம் ஒழுங்குப்படுத்தினால் ஓரளவுக்கு அந்த சட்டங்களை அமல் செய்தால் தொழிலாளர்களுக்கு நன்மைகள் ஏற்படுவதற்கு உண்டான ஒரு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் நிரந்தரம் செய்யக்கூடிய சட்டங்கள் இருக்கின்றன. 1981 ஆம ஆண்டு தமிழகத்திலே கொண்டு வந்தார்கள்; ஏற்கனவே இருந்த அரசு, ஆனால் ஏற்கனவே இருந்த சட்டம் 240 நாட்கள் வேலை செய்தால் அவர்கள் நிரந்தர தொழிலாளர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு உண்டான பஞ்சப்படி, சம்பளம் முழுவதும் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்த சட்டத்தை 480 நாட்கள் 'கண்டினியுட்டி சர்வீஸ், இருந்தால் தான் நிரந்தரம் செய்யப்படவேண்டும் என்று சொல்லி 1981 ஆம் ஆண்டு சட்டத் திருத்தம் கொண்டு வந்தார்கள். அந்த சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் இன்றைக்கு மாநிலம் முழுவதும் எந்த நிர்வாகமும் 480 நாட்கள் வைத்துக்கொள்ளுவது இல்லை. மாறாக 300 நாட்கள், 200 நாட்கள் வந்தால் என்று போடுவது செய்வது, அவரை வீட்டுக்கு அனுப்புவது என்ற ஒரு கொடுமை தமிழகத்தில் நடக்கிறதே தவிர 480 நாட்கள் வேலை வாங்கு 'கண்டினியுட்டி சர்வீஸ்' கொடுத்து நிரந்தரம் செய்வது என்பது அனேகமாக மாநிலம் முழுவதும் நடக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவைகளை கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 20] [திரு. யூ. கே.வெள்ளிங்கிரி]

அது மட்டுமல்ல, 480 நாட்கள் அவர்கள் வேலை செய்தால் அவர்களுக்கு நிரந்தர தொழிலாளர்களுக்கு கொடுக்ககூடிய சலுகைகள், உரிமைகள் இல்லை என்று அந்தச் சட்டத்தில் இருக்கிறது. நிரந்தரம் செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்களே தவிர ஏற்கனவே இருக்கிற நிரந்தர தொழிலாளிக்கு என்ன என்ன சலுகைகள் இருக்கிறதோ அவைகளை கொடுக்க வேண்டியது இல்லை என்று சொல்கிறார்கள். தயவு செய்து அந்த சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 480 நாட்கள் வேலைசெய்தால் அவர்களை நிரந்தரம் செய்தால் ஏற்கனவே அந்த தொழிற்சாலையில் நிரந்தரம் செய்யப்பட்டு வேலை செய்யக்கூடிய அந்த தொழிலாளர்களுக்கு என்ன என்ன சலுகைகள் இருக்கிறதோ அவைகள் அத்தனையையும் 480 நாட்கள் வேலைசெய்து நிரந்தரம் செய்யப்படும் தொழிலாளர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்ற சட்டத் திருத்தத்தை கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். லேபர் கேஸஸ் குறித்து லேபர் ஆபீசர்களிடமோ அல்லது ஏ. சி. எல்.-யிடமோ கன்சிலியேஷன் நடத்தப்படும் போது பிரச்சினைப்பற்றி சொன்னால் கேஸ் முடிவிற்கு கடைசியாக அங்கே 12(4) அறிக்கை வரும். அந்த 12(4) அறிக்கை மூலம் அரசாங்கத்திற்கு பரிந்துரைகள் வரும். அதுவும் வேண்டா விருப்பு வெறுப்பாகத்தான் இன்றைக்கு கோர்ட்டுகளுக்கு விடப்படுகிறதே தவிர அதை உடனடியாக கோர்ட்டுக்கு விடப்பட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

அதைப் போல சம்பளப் பட்டுவாடா சட்டம் என்று நம் நாட்டிலே இருக்கிறது. முறையாக 7 ஆம் தேதி தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பது கிடையாது. அந்தச் சம்பளத்தை வாங்குவதற்கு அவர்கள் பல நாட்கள் போராட வேண்டியிருக்கிறது. அந்தச் சம்பளத்தை வாங்குவதற்காக, ஏ.சி.எல். மூலமாக போனால் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே போனால் அவர்கள் நீங்கள் கோர்ட்டுக்குப் போங்கள் என்று சொல்கிறார்கள். அதனால் மூன்று மாதம், 6 மாதம் ஆகிறது. ஆகவே வேலை செய்த சம்பளம் உடனடியாகக் கிடைப்பதற்கு நிச்சயமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்,

அதைப் போல குறைந்த பட்ச சம்பளச் சட்டம் என்று நம் நாட்டிலே இருக்கிறது. இந்தக் குறைந்த பட்ச சம்பளத்தை விவசாயத் தொழிலாளிகளுக்கு, கைத்தறி தொழிலாளிகளுக்கு, பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழிலாளிகளுக்கு, ஓட்டல் தொழிலாளிகளுக்கு இப்படி பல பெயர்களில் இருக்கக்கூடிய அத்தனை தொழிலாளிகளுக்கும் அந்தக் குறைந்த பட்ச கூலியை அமல் ஆக்குவதற்கு எந்த ஏற்பாடும் கிடையாது. அதை முறையாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல பெண்கள் சம்பந்தமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பல பெண்கள் பீடி தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

[1989 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெண்களைப் பற்றி முன்னாலேயே சொல்லியிருந்தால் இன்னும் வரவேற்பு இருந்திருக்கும். (சிரிப்பு)

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் பெரும்பாலான பெண்கள் பீடித்தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் பெண்கள் பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அவாகளுக்குப் போதுமான பாதுகாப்பு கிடையாது. ஆகவே அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். குழந்தைகள் காப்பு இல்லங்கள் கிடையாது. பஞ்சாலைகளில் படிப்படியாகக் குறைத்துக் கொண்டார்கள். பெண்களுக்குப் போதுமான வாய்ப்புகள் அநேகமாக கொடுப்பது கிடையாது. ஆகவே அதையெல்லாம் முறையாகச் செய்வதற்கு இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பெண்களிடம் இரவிலே வேலை வாங்குகிறார்கள். என்ன சட்டம் போட்டு தடுத்தாலும் அது கண்டிப்பாக நடைமுறை படுத்தப்படாத ஒரு சூழ்நிலை கோவையிலே இருக்கிறது. ஆகவே, அதையும் தடுத்து நிறுத்துவதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

கடைசியாக, ஒரே ஒரு பிரச்சினையைப் பற்றி கூற விரும்புகிறேன். கோவையில் இருக்கக்கூடிய ஐ.டி.ஐ., முதல் மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய ஐ.டி.ஐ. சம்பந்தப்பட்ட வரைக்கும் பணிமனைஉதவியாளர்களுக்கும்பண்டகபணிமனைஉதவியாளர்களுக்கும் இடையே அடிப்படை ஊதியத்திலுள்ள முரண்பாட்டைக் களைந்திட வேண்டும். ''சமவேலை, சமஊதியம்'' என்ற அடிப்படையில் இளநிலை பயிற்சி அலுவலர்கள் கிரேட்-1, கிரேட்-2 என்ற முறையை உடனடியாக ரத்து செய்து ஊழியர்களிடையே சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். பயிற்சியாளர் களிடையே ஒழுக்கத்தையும், அவர்களுக்குத் தேவையான உடல் பயிற்சியையும் அளித்து அவர்கள் தங்கும் விடுதிகளையும் பராமரித்து, உடற் பயிற்சி அலுவலர்களுக்கு பயிற்சியாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பதவிகளை உருவாக்கி வேலைப் பளுவை குறைத்து மாணவர்கள் மத்தியில் ஒழுக்கத்தை ஏற்படுத்தியும், நான்காவது ஊதியக் குழு செய்துள்ள பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும். 300 பயிற்சியாளர்களையும் இளநிலை பயிற்சியாளர்களாக மாற்ற வேண்டும். 600 பயிற்சியாளர்களை உதவிப் பயிற்சியாளர்களாக மாற்ற வேண்டும். 900 பயிற்சியாளர்களை பயிற்சி அலுவலர்களாக மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லி, தொழிலாளர் நல மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறுவதோடு, இந்தச் சட்டங்களையெல்லாம் எந்த நிர்வாகங்கள் தமிழகத்திலே மீறுகின்றனவோ அவர்களிடம் அந்தச் சட்டங்களை கராறாக அமல் படுத்த, இந்த அரசாங்கமாவது, இந்தத் துறையாவது, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையோடு, எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 20]

*திருமதி பி. லட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான வால்பாறை, பெரும்பான்மையாக தேயிலைத் தோட்டங்களையும், விவசாயத்தையும் உள்ளடக்கிய தொகுதியாகும். வால்பாறை மலைப் பிரதேசமாக இருக்கின்ற காரணத்தால், அது தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்பின் காரணமாக தேயிலை, காப்பி, ஏலக்காய் தோட்டம் என்று வளம் கொழிக்கும் பகுதியாக எனது வால்பாறைத் தொகுதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மைய, மாநில அரசுகளுக்கும், உள்நாட்டின் தேவைக்கும், வெளிநாடுகளுக்கும் தேயிலை, காப்பி, ஏலக்காய் ஏற்றுமதியின் மூலமாக பல கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட எனது தொகுதியில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் குடும்பங்களோடு குடியிருந்து வர தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளின் முதலாளிகளின் மூலமாக, அந்த முதலாளிகளுக்குச் சொந்தமான, தேயிலைத் தோட்டங்களிலுள்ள 'பாடிகள்' என்று அழைக்கப்படும் குடியிருப்புகளை அமைத்து அதில் அந்தத் தொழிலாளர்கள் குடியிருந்து வருகிறார்கள். அப்படி அதில் அவர்கள் குடியிருந்து வருகின்ற தருணத்தில் அந்தத் தொழிலாளர்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் அந்தத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்ற தருணத்தில் மட்டும் அந்தக் குடியிருப்புகளில் அவர்கள் குடியிருந்து கொள்ளலாம் என்று ஒரு சட்டத்தை அவர்கள் அங்கே நிர்ணயித்து உளளார்கள். அந்தக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் அந்தத் தேயிலைத் தோட்டத்தில் அவர்களது வாரிசுகளை நியமிப்பது கிடையாது. அப்படி இருக்கின்ற தருணத்தில் அவர்கள் பல ஆண்டுகளாக அந்தத் தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றியிருந்தாலும் அவர்கள் ஓய்வு பெறுகின்ற தருணத்தில் அந்தக் குடியிருப்புகளில் அவர்கள் குடியிருக்கக் கூடாது என்று அவர்களை வெளியேற்றி விடுகிறார்கள். இப்படி வெளியேற்றுகின்ற தருணத்தில் அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அங்கே குடியிருக்க வேறு இடங்கள் இல்லாத காரணத்தினால் அவர்கள் மிகவும் அவதிக்குள்ளாயிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அந்தத் தேயிலைத் தோட்டங்களில் பெண்கள் தான் அதிகமாகப் பணிபுரிகிறார்கள். அந்தப் பெண்கள் ஓய்வுபெறுகின்ற நாளில் அவர்களின் வாரிசுகளான பெண்களுக்கு முக்கியத்துவம்தந்து அங்கே தேயிலை பறிப்பதற்கு ஆட்களை நியமிப்பது கிடையாது. அப்படி இருக்கும் தருணத்தில் அந்தப் பெண்களுடைய வேலைக் காலம் முடிந்து விட்டால் அவர்களுக்கு குடியிருப்பதற்கு வீட்டுமனையும் தரப்படுவது கிடையாது. இப்படிப்பட்ட நிலையில் ஓய்வு பெற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை கொடுக்கப்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30.)

வால்பாறைத் தொகுதி மலைப் பகுதியாக உள்ளது. அங்கே பெரும்பகுதி தேயிலைத் தோட்டங்களாக இருக்கின்றன; தேயிலை விளைகின்ற நிலமாக இருக்கின்றன. அங்கே அரசு புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தால் அவர்கள் தேயிலைத் தோட்ட அதிபர்களின் பொறுப்பில் இருக்கிறார்கள். வீடுகளை தேயிலைத் தோட்ட அதிபர்கள் பாரமரித்து வருகின்ற நிலையில் இருக்கிறது அந்த தேயிலைத்தோட்ட அதிபர்கள் எந்த நேரத்தில் வீட்டை காலி செய்ய வேண்டுமென்று கூறுகிறார்களோ அந்த நேரத்தில் அவர்கள் வீட்டை காலி செய்து வெளியேற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த சூழ்நிலையில் அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் பெண்களாக இருக்கிற காரணத்தால், அந்தப் பெண் தொழிலாளர்களை அவர்கள் நிரந்தரமாக்குவது கிடையாது. பெண் தோட்டத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதோடு, அவர்களுக்கு அடுத்து அவர்களுடைய வாரிசுகளை நியமிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பெண் தோட்டத் தொழிலாளர்கள் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கிறபோது அவர்களுக்கு மாதத்திற்கு ஒரு முறை விடுப்பு தர வேண்டுமென்று நீண்ட நாட்களாக ஒரு கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் அந்த தேயிலைத் தோட்ட அதிபர்கள் அவர்களுக்கு விடுப்பு தருவது கிடையாது. அவர்கள் விடுப்பு தராத காரணத்தால் மிகவும் அவதிப்படுகிறார்கள். அந்த அவல நிலையைப் போக்க சம்பளத்தோடு கூடிய மாதத்தில் ஒரு நாள் விடுப்பு அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தேயிலைத் தோட்டங்களில் பெண்களுக்கு ஒரு மணி நேரம் விடுப்பு தருகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். ஒரு மணி நேரம் என்பதை ஒரு நாளாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்கள் குடியிருக்க தேயிலைத் தோட்ட அதிபர்கள் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அவை நீண்ட நாட்களுக்கு முன்பாகக் கட்டப்பட்டவை; பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அந்த குடியிருப்புகளை பழுது பார்ப்பதே கிடையாது. எப்போது குடியிருப்பவர்கள் மேல் இடிந்து விழுமோ என்ற அச்சத்தில் அங்கே குடியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீடுகளை பழுது பார்த்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் 1979 ஆம் ஆண்டில் தேயிலைத் தோட்ட அதிபர்கள், தொழிலாளர் நல ஆணையாளர், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய முத்தரப்பினர் சேர்ந்து தேயிலைத் தோட்டங்கள் ஒரு ஏக்கர், 1½ ஏக்கர் பரப்பு விகிதத்தில் இருந்தால் அவை பதிவு





செய்யப்பட வேண்டுமென்று ஒப்பந்தம் செய்தார்கள். ஆனால் அந்த ஒப்பந்தம் செயல்படவில்லை என்று தொழிலாளர்கள் புகார் கூறி வருகிறார்கள். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பெண் தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றித் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தேயிலைத் தோட்டங்கள் உருவான காலம் தொட்டு தேயிலை பறித்து வரும் பெண் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதோடு அவர்களுடைய ஊதியத்தையும் அதிகமாக்க வேண்டும். அவர்களுடைய ஊதியத்தை எடுத்துக் கொண்டால் முதலிலே 17 ரூபாய் 19 காசு என்று இருந்தது. 1987-ல் 17 ரூபாய் 18 காசு என்று ஆகியது. 1-4-1988-ல் அது 13 ரூபாய் 23 காசு என்றும் அடுத்து படிப்படியாக குறைந்து இப்போது 15 ரூபாய் 25 காசு என்றும் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படிக் குறைக்கப்பட்ட காரணத்தால் அந்தத் தொழிலாளர்கள் வேலை முடிந்த பின்னால் சம்பளத்தைப் பெறாமல், எங்களுக்கு அதிக சம்பளம் வழங்கும் வரை ஊதியம் வாங்க மாட்டோம் என்று சொல்லி, ஊதியம் வாங்காமல் இருக்கிறார்கள். அந்தத் தோட்டத் தொழிலாளர்களின் நலன் கருதி உரிய சம்பளத்தை அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தோட்டத் தொழிலாளர்கள் இன்றைக்கு மிகவும் அவதிக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அவர்களின் நிலையைப் போக்கி அவர்களுக்கு சாலை வசதி மற்றும் குடியிருப்பு வசதிகளை எல்லாம் செய்து தரும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் குறுகிய கால கட்டத்திலேயும் எனக்குச் சில மணித் துளிகள் அளித்த மாண்புமிகு பேரவைப் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. ராம. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி, திரைப்படத் தொழில் மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சபையிலே பேசுவதற்குக் காரணமாக இருந்த தாரைக்குடி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், தாய்க்கும் மேலாக என்மீது பாசத்தையும், பரிவையும் காட்டி என்னை வளர்த்து வரும் தங்கத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய கலை உலகைச் சேர்ந்த நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

இந்தத் திரைப்படத் துறையைப் பற்றிப் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களும் சற்று அதிகமாகவே தாக்கிப் பேசி விட்டார்கள். அவர்கள் எல்லாம் வெளியே இருந்து கேள்விப்பட்டதுதான். ஆனால் நான் அந்தத் திரை உலகில் உள்ளவன் என்பதால் சில விஷயங்களை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் பேசும்போது அரசியலிலே நாம் ஏதாவது தவறு செய்தால் அவை பத்திரிகையில் வருகிறது, கலை உலகைச் சேர்ந்தவர்கள் தவறு செய்தால் பத்திரிகையில் வருவதில்லை என்று சொன்னார்கள். கிசு, கிசு என்ற பகுதியே திரைப்பட உலகில் உள்ளவர்களைப் பற்றி ஆரம்பிக்கப்பட்டதுதான். அதற்குப் பிறகுதான் அரசியலில் உள்ளவர்களைப் பற்றி இன்று பல பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

அதுபோல் நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசும் போது தமிழ்நாட்டைச் சேர்ந்த சில கலைஞர்கள் 48 இலட்சம் 50 இலட்சம் என்று வாங்குவதாகச் சொன்னார்கள். எல்லாம் அவர்கள் கேள்விப் பட்டதுதானே தவிர நிச்சயமாக அது உண்மை இல்லை இது எப்படி இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மனிதன் வாந்தி எடுக்கிறான். பக்கத்திலே இருந்தவன் பார்த்துக்கொண்டிருக்கிறான். அதைத் பார்த்த போது அந்த வாந்தி கருப்பாக இருந்ததால் பார்த்துக் கொண்டிருந்தவன் அடுத்தவனிடம் சென்று நம்முடைய முதலாளி கருப்பாக வாந்தி எடுத்தான் என்று கூறுகிறான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவன் அடுத்தவனிடம் சென்று அவன் காக்காயைப் போல வாந்தி எடுத்தான் என்று சொன்னான். அடுத்துச் சென்றவன் அவன் காக்காய், காக்கா யாக வாந்தி எடுத்தான் என்று சொன்னானாம். எனவே இப்படிப் பட்ட வதந்திகளை நம்பி பொறுப்புள்ள நாமெல்லாம் பேசக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. குமரி. அனந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கன்னிப் பேச்சுப் பேசுகிறார். எனவே தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. குமரி அனந்தன்:** நான் பேசுவதும் குமரிப் பேச்சு தான். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குமரி முற்றி நெடுநாட்கள் ஆகிவிட்டன. (சிரிப்பு)

**திரு. ராம. நாராயணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எல்லாம் எனக்கு வழிகாட்டியாக இருந்து சபையை நடத்திச்செல்ல வேண்டியவர்கள். எனவே தாங்கள் அவர்களிடம் இந்தத் தகவலை நான் தெரிவித்தேன். இன்று திரை உலகம்



தள்ளாடிக்கொண்டிருக்கிற நிலைமையில் இருக்கிறது. இன்றைக்கு ஏகப்பட்ட வருவாயைத் தந்து கொண்டிருக்கிற திரைப்படத் துறை, ஏழைகளுக்கு விருந்தாகவும், மருந்தாகவும், பொழுது போக்காகவும் இருக்கின்ற திரைப்படத் துறை இன்று தவித்துக் கொண்டிருக்கிறது. அந்த நிலையை அரசு போக்கியாக வேண்டும். இன்று தயாரிக்கப்படுகிற படங்களில் நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேற்பட்ட படங்கள் நஷ்டத்தில் தான் ஓடு கின்றன. போட்ட முதலைக் கூட எடுக்க முடியாத ஒரு சூழ் நிலை இருந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டிலே திரைப்பட உலகில் வளர்ச்சி குறைந்திருக்கிறது. நிறைந்த இலாபம் இருந்திருந்தால் 150 படம் எடுத்த இந்தத் துறையில் இன்றைக்கு 300 படங்கள் எடுத்திருக்கவேண்டும். ஆனால் இந்த ஆண்டு அந்தக் கணக்கு நிச்சயமாக வராது. ஏகப்பட்ட நஷ்டத்தில் வேறு வழி இல்லாத காரணத்தால், வேறு தொழில் அவர்களுக்குத் தெரியாத காரணத்தால்தான் இந்தத் தொழிலை அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு தக்க பாதுகாப்பைத் தரவேண்டும்.

முக்கியமாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். கம்பவுண்டிங் டாக்ஸ் என்ற முறை இருக்கிறது. சென்னை, கோவை, திருச்சி, மதுரை போன்ற நகரங்களைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் கம்பவுண்டிங் டாக்ஸ் முறை கொண்டுவரப்பட்டால்தான் அத் துறை சீராக இருக்கும் என்பதோடு அரசாங்கத்திற்கு நிச்சய மான, நிலையான ஒரு வருமானமும் கிடைக்கும். அப்படிக் கிடைக்கிற வருமானத்தின் மூலம் கலை உலகிற்கு நிச்சயமாக நன்மைகளைச் செய்ய முடியும். ஓவர் டிக்கெட் கொடுக்கின்ற இடங்களைப் பொறுத்தவரையிலோ அல்லது 5 ரூபாய் டிக்கெட்டை 10 ரூபாய்க்குக் கொடுக்கிற தியேட்டர்களைப் பொறுத்தவரையிலோ நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அங்கே படத்தை நிறுத்த வேண்டும். கம்பவுண்டிங் டாக்ஸ் முறையை எல்லா ஊர்களுக்கும் கொண்டுவந்தால்தான் சின்னப் படங்கள், பெரிய படங்கள் என்றில்லாமல் நல்ல படங்கள் எங்கேயிருந்தாலும் நன்றாக ஓடும். இப்போது சமீபத்திலே வந்திருக்கிற 'புதிய பாதை' கூட சின்னப் படம்தான். சிறப் பாகத்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே சிறப்பாக ஓடு கின்ற படங்களை கம்பவுண்டிங் டாக்ஸ் முறை அதாவது ரெகுலர் டாக்ஸ் முறையை பாதிக்காது என்பதுதான் உண்மை. திரைப்படங்களில் உள்ள எங்களைப் போன்றவர்களுக்குத்தான் அந்த உண்மை புரியும். அதனால்தான் நான் சொல்ல வந்தேன்.

தமிழ்ப்படங்களைத் திரையிடுவதற்கு தமிழ்நாட்டின் இதய மாக இருக்கின்ற மவுண்ட் ரோட்டிலே நல்ல தியேட்டர் கிடைப் பதில்லை. வருடத்திற்கு லச்சியமாக நான்கைந்து மாதங்கள் தமிழ்ப்படங்களைத் தருகிறோம் என்று தியேட்டர் அதிபர்கள். ஒப்புக் கொண்டார்கள். மூன்று ஆண்டுகள் ஆகி இருக்கும் என்று

[திரு. இராம நாராயணன்] [1989 ஏப்ரல் 20

நினைக்கிறேன். அவர்கள் சொன்னார்களே தவிர ஆனால் யாரும் செய்யவில்லை. உதாரணமாக மவுண்ட் ரோட்டிலே உள்ள காசினோ தியேட்டரில் கிட்டத்தட்ட நான்கைந்து ஆண்டுகளாகவே தமிழ்ப்படங்கள் போடுவதில்லை. அங்கே ஆங்கிலப் படங்கள்தான் போடுகிறார்கள். அவர்களுக்குத் தமிழ் உணர்வு இல்லையா? அல்லது தட்டிக் கேட்க மாட்டோம் என்று நினைக்கிறார்களா? அப்படிப்பட்டவர்களை எல்லாம் அழைத்து நிச்சயமாக வருஷத்திற்கு நான்கு மாதங்கள் அல்லது ஐந்து மாதங்கள் தமிழ்ப்படங்கள் திரையிடப்பட வேண்டும் என்று கூற வேண்டும். அந்த வகையில் அவர்களை அழைத்துப் பேச வேண்டும்,

அடுத்ததாக திரை உலகை பயமுறுத்திக் கொண்டிருக்கும் பிரச்சினை 'வீடியோ' இப்போது திருட்டு வீடியோக்களினால் பல திரைப்படங்கள் பாதிக்கப்படுகின்றன. அரசுக்கு வரவேண்டிய வருவாயும் அதனால் பாதிக்கப்படுகிறது. சமீபத்தில் வெளி வந்துள்ள 'அபூர்வ சகோதரர்கள்' படத்தின் திருட்டு வீடியோவை வேலூருக்குப் பக்கத்திலே இருக்கும் ஒரு ஊரில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அது பற்றிய செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நிச்சயமாக தருகிறேன். அவர்கள் அதற்கு ஆவன செய்யவேண்டும். தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த திருட்டு வீடியோக்களால் நல்ல தொழிலாளர்கள், நல்ல கலைஞர்கள் பாதிக்கப்படுகின்றனர். நல்ல கலையம்சத்தோடு எடுக்கின்ற படங்கள் சரிவர ஓடாமல் போய் விடுகின்றன. அந்த படங்களை எல்லாம் நல்லபடியாக ஓட்டுவதற்கு, அந்த படங்களை திருட்டு வீடியோ எடுத்து ஓட்டுவதை ஒழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோலவே நமது அரசியலைப் பொறுத்தவரையில், தமிழகத்தினுடைய அரசியலைப் பொறுத்த வரையில், அரசியலும் திரை உலகமும், ஒன்றோடு ஒன்று இணைந்து வந்திருக்கின்றன. நம்முடைய இதய தெய்வம் பேரறிஞர் அண்ணாவும், தாயினும் மேலாக என்னிடம் பாசமும் பரிவும் காட்டி வளர்த்துவரும் தங்கத் தலைவர் கலைஞர் அவர்களும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும் திரை உலகிலிருந்துதான் இந்த சட்டமன்றத்துக்கு வந்தவர்கள் அப்படிப்பட்டவர்கள் இங்கே இருந்து கலை உலகிற்கு நல்லது செய்யவேண்டும். அண்டை மாநிலங்களில் இருப்பதுபோல சப்சிடி, அதாவது உதவிப் பணமாக எல்லா படத்திற்கும், தயாரிக்கப் படுகின்ற படங்களுக்கும், கொடுக்க வேண்டும். இப்போது 4,5 படங்களுக்குத்தான் கொடுப்பதாக அறிவித்திருக்கின்றார்கள். படத்திற்கு $1\frac{1}{2}$ லட்சம் அல்லது 2 லட்சம் ரூபாய் வரையில் கொடுக்கவேண்டும். பக்கத்து மாநிலங்களில் என்ன செய் கின்றார்களோ அதை செய்யவேண்டும். அதற்கு மேல் நாங்கள் கேட்கவில்லை. இந்த திரையுலகில் இருப்பவர்கள் தவிப்பைப் போக்குவதற்கு உடனடியாக செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



89 ஏப்ரல் 20] [திரு. இராம நாராயணன்]

(பிற்பகல் 12-40)

இப்போது திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில் தியேட்டர்கள் ...வர நடக்கவில்லை. கிட்டத்தட்ட 10, 12 தியேட்டர்கள் ...ருச்சியிலே மூடப்பட்டிருக்கின்றன. பக்கத்திலே உள்ள தியேட்டர் ...ளும் மூடப்பட்டிருக்கிறன. இதற்குக் காரணம் அங்குள்ள ...நியோகஸ்தர்களுக்கும் தியேட்டர் உரிமையாளர்களுக்கும் ...டையே உள்ள பிரச்சினையாகும். இதனால் பாதிக்கப்படுவது ...ரசு வருமானம் தான், அவர்களை அழைத்துப் பேசி, ...ங்களுக்குள்ளே பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ள ...வண்டுமே தவிர, எந்தக் காரணத்தைக் கொண்டும் நிச்சயமாக தியேட்டர்களை மூடக்கூடாது என்று உடனடியாக உத்தரவு இட வேண்டும் என்றும் அந்த தியேட்டர்களை திறக்க நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது காரைக்குடி தொகுதியை தங்கத் தலைவர் கலைஞர் அவர்கள் 'கலையூர்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக்கலையூரில் இருந்து வந்தவர்கள்தான் ஏ.வி.எம். மெய்யப்ப செட்டியார், கவியரசு கண்ணதாசன், இன்று திரை உலகில் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கும் திரு. எஸ். பி. முத்து ராமன், திரு. இராஜசேகரன், திரு. காரை நாராயணன், திரு. பஞ்சு அருணாசலம் போன்றவர்கள் எல்லாம். அந்த ஊரிலே இருந்து தான் வந்தவர்கள். அந்த ஊரிலே அழகப்பா பல்கலைக் கழகத்திலே திரைப்படம் சம்பந்தப்பட்ட அரசு ஸ்டுடியோ ஒன்றை நிறுவி, அந்த ஊரினை 'கலையூர்' என்று சொல்வதற்கு ஏற்ப அந்த ஊரில் ஒரு அமைப்பை நிறுவவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை நல்கியமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி. வணக்கம்.

144362

*திரு. கே. ஏ. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்று சிறப்புமிக்க இம்மாமன்றத்திலே எனக்கு பேசுவதற்கு வாய்ப்பினை அளித்த என்னுடைய கபிலர்மலை தொகுதி பெருமக்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இன்று தொழிலாளர் நல மானியத்தின் மீது நான் சார்ந்துள்ள இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியினுடைய சார்பிலே என்னுடைய கருத்துக்களை கூற விழைகிறேன்.

தொழிலாளர் நலம் பற்றிக் கூறும்போது அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் தான் இந்த நாட்டிலே மிக அதிகமாக இருக்கின்றார்கள் என்று குறிப்பேட்டில் கூறப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே பெருபான்மையான மக்கள் நம்பிக் கொண்டிருக்கின்ற இந்த உழவுத் தொழிலை ஒரு தொழிலாகவே இன்னும் அங்கீகரிக்கப்படாமலே இருக்கிறது. நாட்டிலே இருக்கின்ற பெரும்பான்மையான மக்கள் நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற இந்த உழவுத் தொழிலை ஒரு தொழிலாக இந்த அரசு

அங்கீகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கிராமப்புறங்களிலே இருக்கின்ற உழவுத் தொழிலை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற கூலித் தொழிலாளர்கள் எந்தவித பாதுகாப்பும் இல்லாமல் இருக்கின்றார்கள். இன்று நீர்ப்பாசன பகுதியிலே இருந்து கொண்டிருக்கின்ற நிலை மட்டுமல்ல அல்லாமல் கிணற்று நீரை, ஏரி நீரை, மழை நீரை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் கூலி வேலை கிடைக்கிறதா என்று சொன்னால் கட்டாயமாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும். குறிப்பாக குடிப்பதற்கே தண்ணீர் பற்றாக்குறை இருக்கின்ற இந்த காலங்களில் விவசாயத் தொழில் எப்படி செய்யமுடியும் என்பதையும், இப்படிப்பட்ட காலங்களிலே கூலித் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையை நடத்த அரசு பாதுகாப்புத் தொகை நிரந்தரமாக வழங்க வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு முன்பு மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பண்டங்களை வழங்கியது போல, உழவுத் தொழிலை நம்பி வாழ்நது கொண்டிருக்கிற கூலி தொழிலாளர்களுக்கும், இப்படிப்பட்ட வறட்சி காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை மானிய விலையில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிற கூலி தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இறந்து போகின்ற கூலி தொழிலாளர்களின் ஈம சடங்கிற்காக ஊராட்சி மன்ற தலைவர்கள் 100 ரூபாய் வழங்கலாமென்ற ஒரு நிலைமை இருக்கிறது. அப்படி அந்த 100 ரூபாயை பெறுவதற்கும் தங்களுடைய குடும்பத்திலே யாராவது இறந்து விட்டால் அந்த சடலத்தை எடுத்து அடக்கம் செய்ய கூட அவர்களுக்கு வசதி யற்ற நிலை இருப்பதால் முதலிலேயே அவர்களுக்கு 50 வழங்கப் பட வேண்டுமென்றிருந்த நிலை மாறி இப்போது 100 ரூபாயாக அது மீண்டும் உயர்த்தப்பட்டாலும் கூட அதனை பெறுவதிலே நடைமுறை சிக்கல்கள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் தங்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இறந்துபோகும் நிலையில் சடலத்தை அடக்கம் செய்ய உடனடியாக இந்தப் பணம் அவர்களுக்கு கிடைக்கும் வகையில் இப்போது இருக்கின்ற நடைமுறை சிக்கல்கள் அனைத்தையும் தீர்த்து கொடுக்க வேண்டும்.

அடுத்து, இப்போது 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப் பட்டுள்ள திட்டத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலான கூலி தொழிலாளர்களுடைய குடும்ப அட்டையிலே 300 ரூபாய்க்கு குறைவாக வருமானம் என்று குறிக்கப்பட்டு இருப்பதால் பிரச்சினை எதுவும் இல்லை. இருப்பினும் எந்த ஒரு கூலி தொழிலாளியும் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, நிலமற்ற கூலி தொழிலாளர்அத்தனை பேருக்கும் இலவச அரிசி கொடுப்பதற்காக ஒரு கண்காணிப்பு நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.





அடுத்து, கூலி தொழிலாளர்களுடைய குடியிருப்பைப்பொறுத்த வரையில் அதை பெறுவதிலே இன்றைக்கு மிகுந்த நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன. இரண்டு சென்ட் நிலம் இருக்கிறவர் களுக்கு வீடு கட்டி கொடுக்கும் வசதியை செய்து தர முடியாது என்று கூறியிருக்கிறார்கள். குறைந்தபட்சம் 3 சென்ட் நிலம் இருக்க வேண்டுமென்று சொல்லி, அப்படிப்பட்டவர்களுக்குத்தான் வீடு கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்நிலையை மாற்றி, 2 சென்ட் நிலம் இருக்கிறவர்களுக்கும் இலவசமாக வீடு கட்டி கொடுக்கவேண்டுமென்றும், குறிப்பாக அவர்களுக்கு கட்டி கொடுக்கப்படும் வீடுகள் வெறும் 7400 ரூபாய் செலவில் கட்டிக் கொடுக்கப்படும் நிலை இருப்பதையும், இந்த ரூபாயை வைத்துக் கொண்டு வீடு கட்ட முடியாத நிலை இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அத்தனை பொருள்களின் விலைவாசிகளும் உயர்ந்துள்ள நிலையில் இந்த தொகை போதாது. மேலும் அங்கே கட்டப்படும் வீடுகள் அனைத்தையும் நல்ல பொருள்களை வைத்து கட்ட வேண்டும். நீண்டகாலம் அந்த வீடுகள் பயன்படும் வகையில் இருப்பதற்கு ஏற்ற வகையில் அவை கட்டப்படவேண்டும்.

அடுத்து, எங்கள் பகுதியில் வாழ்கின்ற கூலி தொழிலாளர்கள் உழவு தொழிலை நம்பியிருப்பவர்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். என் தொகுதியில் உள்ள ஒருசில கிராமங்கள் மட்டும் காவிரி ஓரத்தில் இருக்கின்றன. மீதியுள்ள அத்தனை கிராமங்களும் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அங்கே வாழ்கின்ற கூலி தொழிலாளர்கள் தங்களுக்கு நிரந்தர வேலையில்லாத நிலையில், மழை பொய்த்து போயுள்ள நிலையில் அவர்கள் வெளி கிராமங்களுக்கு செல்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. வெளி கிராமங்களில் சென்றுள்ள அவர்கள் தங்குவதற்கு கூட வசதியில்லாத நிலையில், பிழைப்பு தேடி சென்றவர்கள், தண்ணீர் இருக்கின்ற கிராமமாக பார்த்து தேடி அலைகின்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட வறட்சி நிலை நிலவுகிற நிலையில் உழவுத் தொழிலை நம்பி வாழ்கின்ற அந்த கூலி தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டும். அதற்காக அந்தப் பகுதியில் அரசு தொழிற்சாலை களை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏதாவது ஓர் ஏற்பாட்டினை செய்தால்தான் அந்த கூலி தொழிலாளர்களின் வாழ்வுக்கு ஒரு பாதுகாப்பான நிலை ஏற்படும். குறிப்பாக, அந்த கூலி தொழி லாளர்களுக்கு விவசாய தொழில் தவிர வேறு தொழில் எதுவும் தெரியாத காரணத்தால் அவர்கள் குடும்பத்திலிருந்து வருகின்ற குழந்தைகளுக்கு வேறு தொழில்களை கற்றுக்கொடுக்க அரசு அங்கே தொழில் பயிற்சி கூடங்களை தொடங்க வேண்டும். இந்த வறட்சி காலத்தில் அந்தப் பகுதியில் இதனை ஆரம்பித்தால் வருங்காலத்தில் நிரந்தரமாக தொழில் வாய்ப்பு கிடைக்கும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சுற்றுலா மானியத்தின் மீது ஒருசில கருத்துக்களைக் கூறுகிறேன். சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில் எங்களு டைய பகுதி குறிப்பாக இந்தியாவிலேயே சேலம்/மாவட்டத்தி லுள்ள நாமக்கல்லில் இருக்கின்ற ஆஞ்சநேயர் கோவிலைப் பற்றி

[திரு. கே. ஏ. மணி] [1989 ஏப்ரல் 20

பெருமையாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த இடத்தைப் பார்த்தால் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அந்தப் பகுதியை சுற்றுலா பகுதியாக அறிவித்து அந்த இடத்திற்கு வருகின்றவர்களுக்கு வசதி செய்து கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

(பிற்பகல் 12-50)

குறிப்பாக, இன்றைய தினம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் நான் பயணம் செய்த போது நிகழ்ந்ததை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் இங்கே வருவதற்காக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் பயணம் செய்தபோது அந்தப் பஸ் திண்டிவனம் பேருந்து நிலையத்திலே வந்து சேர்ந்தது. அந்தப் பேருந்து நிலையத்திலே குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல், கழிவறைக்குச் செல்கின்றவர்களுக்குக் கூட, ஒரு பெரிய போர்டிலே 'தண்ணீர் இல்லை' என்று எழுதி வைத்திருந்தார்கள். அங்கே கழிவறைக்கு உள்ளே செல்வதற்குக் கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கிற நிலைமையைக் கண்டேன். நம்முடைய மிகவும் பிற்போக்கான நிலைமையையே இதெல்லாம் எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது என்பதைக்கூறிக்கொள்கிறேன். அந்தப் பேருந்து நிலையத்திலே மட்டுமல்லாமல், ஒவ்வொரு பேருந்து நிலையத்திலும், கழிப்பிடத்திற்குச் செல்கின்றவர்களிடமிருந்து கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கிற மிக அசிங்கமான ஒரு நிலைமையையெல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், அவர்கள் தண்ணீர் கூட இல்லாத ஒரு கழிவறைக்குக் கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் மிகச் சிறிய பிரச்சினையாக இருந்தாலும், இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கொ. மாதப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி அனுப்பி வைத்த பாலக்கோடு தொகுதி மக்களுக்கும் மாண்புமிகு கழக பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அவை உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவை அலுவலர்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர் நலன் மற்றும் தொழில் மானியக் கோரிக்கையின் மீது நான் கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

சமீபத்திலே மூடியிருந்த ஆலைகளைத் திறக்கப் போவதாக பேப்பரிலே அறிவித்துக் கொண்டு வருகிறார்கள். உருப்படியாக ஆலை திறக்கப்படவில்லை. ஆனால் மாகத் திறக்கப்படுவதாகத் தெரியவில்லை. ஆலைகள் நிரந்தர திறக்க வேண்டுமென்று ஜனநாயக முறையில் போராடி



1989 ஏப்ரல் 20] [கொ. மாதப்பன்]

ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர்களைக் காட்டுமிராண்டித்தனமாக தாக்கி, மண்டையைப் பிளந்தது** இந்த அரசின் சாதனையாக இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மூடிய ஆலைகளைத் திறப்போம் என்று பேசியவர்கள் இப்போது மௌனமாக இருக்கிறார்கள். மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள், என்ஜினியரிங் தொழிற்சாலைகள் இவற்றையெல்லாம் . . . .

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது கன்னிப் பேச்சு என்பதை நான் அறிவேன். இருந்தாலும்கூட, ** *** தான் இந்த ஆட்சி என்பது போன்ற சொற்றொடர்கள் நீக்கப்படலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக உறுப்பினர்கள் கன்னிப் பேச்சுப் பேசும்போது, கன்னிப் பேச்சுப் பேசுகிற மாதிரிப் பேச வேண்டும். ரொம்ப முற்றின மாதிரிப் பேசினால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டியிருக்கும்; அல்லது அவையிலிருந்தே நீக்க வேண்டியிருக்கும். அது ரொம்ப நல்லது அல்ல. கன்னிப்பேச்சு என்ற பெயரிலே, அது ஒரு போர்வையாகி விடக் கூடாது. எனவே, *** என்கிற தொடரை மட்டும் நான் உறிஞ்சி எடுத்துவிட்டேன். (சிரிப்பு) (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். இராதா: On a point of order...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லச் சொல்கிறேன். நான் என் கருத்தைச் சொல்லிவிட்டேன். அதன்மேல் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. பேரவைத் தலைவர் சொல்லி விட்ட பிறகு, தாங்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடு) உங்களுக்கு விருப்பம் இருந்தால் இருங்கள்; இல்லாவிட்டால் போய்க் கொண்டே இருங்கள். அடுத்து, திரு. கொ. மாதப்பன். . . .

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து அப்படிப் பேசாதீர்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். நான் சொல்லிவிட்ட பிறகு நீங்கள் உட்காரலாம். இப்போதுள்ள உறுப்பினர்கள் பேச வாய்ப்பளிக்க வேண்டுமா அல்லது அவையை முடித்துக்கொள்ள வேண்டுமா? (குறுக்கீடு) விளக்கம் தேவையில்லை. பேரவைத் தலைவர் பார்த்து, எதை நீக்க வேண்டுமோ, அதை அவர் செய்வார். (குறுக்கீடு) எதை நீக்க வேண்டுமென்று நீங்கள் எனக்கு 'dictate' செய்ய வேண்டாம். எதை நீக்க வேண்டும், எதை நீக்க வேண்டாம் என்ற அறிவுரை சொல்ல வேண்டாம்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1989 ஏப்ரல் 20

திரு. எஸ். ஆர். இராதா: நான் சபையிலே ஓர் உறுப்பினர் என்ற முறையிலே அன்பார்லிமென்டரி இல்லாததை நீக்கலாமா என்று கேட்கிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதை நீக்க வேண்டும், நீக்க வேண்டாம் என்ற அறிவுரை எல்லாம் சொல்ல வேண்டாம். அது எனக்கு நன்றாகத் தெரியும். அறிவுரை சொல்கிற அளவுக்கு அல்லது அறிவுரை கேட்கிற அளவுக்கு அவையிலே யாரும் இருக்க மாட்டோம். (குறுக்கீடு) ஒரு கருத்தை அமைச்சர் சொன்னார். எனக்கு அது உடன்பாடு என்பதால் நீக்கப்பட்டது. அவ்வளவுதான்.

திரு. எஸ். ஆர். இராதா: நீக்கத்திற்கு முறைகள் இருக்கின்றன. அந்த முறையிலே நீக்க வேண்டும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன முறைகள் என்பதை நான் பார்த்துக் கொள்கிறேன். எனக்கும் முறைகள் தெரியும். அதை திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் சொல்லித் தான் தெரிய வேண்டுமென்று இல்லை, எனக்கும் நன்றாகத் தெரியும்.

திரு. கொ. மாதப்பன்: மூடப்பட்ட பஞ்சாலை இன்ஜினீயரிங் தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி செய்ய வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால், இந்த அரசு தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து ரூ. 250 மட்டும் வழங்குவதாக அறிவித்தது. அதுவும் அனைவருக்கும் கிடையாது. ஏற்கனவே நிதி உதவி பெறுபவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று இருந்தது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் திருப்பூர் எஸ். ஆர். சி. மில் தொழிலாளர்களுக்கு முதல் அமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து ரூ. 500 வழங்கியது. ஆனால், இப்பொழுது ரூ. 500 கூடுதலாக வழங்குவதை விட்டு, ரூ. 250 மட்டும்தான் வழங்கி உள்ளார்கள். எனவே அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இந்த அரசு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 1,000 வழங்க வேண்டும் என்றும் மூடிய ஆலைகளை உடனடியாகத் திறக்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் இந்த ஆலைகளைத் திறப்பதற்கு ஆலை அதிபர்கள் ஒத்து வராவிட்டால் நஷ்டத்தை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு அதற்கான நிதி உதவிகளை செய்து அரசு இந்த ஆலைகளை ஏற்று நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் விலைவாசிப் புள்ளி ஒன்றுக்கு ரூ. 1.65 வீதம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதைக் குறைப்பதற்கு இந்த ஆட்சியில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் மூன்றாவது ஊதிய உயர்வைக் கோரி, தொழிற்சங்கத் தலைவர்கள் கடந்த 4 மாதங்களாக வேலை நிறுத்தம் செய்து, பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்கள். ஆனால், எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.



1989 ஏப்ரல் 20] [திரு. கொ. மாதப்பன்]

சர்க்கரை ஆலைகளில் அறைவைக் காலம் 2,3 வாரங்களில் முடியப் போகிறது. ஆனால் அமைச்சர் ஒரு முறை கூட அழைத்துப் பேசவில்லை. எனவே, சர்க்கரை ஆலை தினக் கூலி தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்றும். சீசன் தொழிலாளர்களுக்கு ரிட்டையரிங் அலவன்ஸ் 50% வழங்க வேண்டுமென்றும் மற்ற மாநிலங்களைவிட தனித் தன்மையோடு ஊதிய உயர்வையும் மற்றும் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்ற அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இங்கே புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் தொழில் ஆட்சிக் காலத்தில் தொழிற்சங்கத் தலைவரும் முத்தரப்பில் அதிபர்களும் பிரதிநிதிகளும் அரசு அதிகாரிகளும் ஆட்சியிலே குழு அமைத்திருந்தார்கள். அந்தக் குழு கவர்னர் செய்து, கலைக்கப்பட்டது. இந்த அரசு மீண்டும் பரிசீலனை வேண்டுமென்று தொழிலாளர் ஆலோசனைக் குழுவை ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

கடந்த கவர்னர் ஆட்சிக் காலத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே அனைத்து மத்திய சங்கங்கள் கேட் வாயில் கூட்டத் திலே பேசிய போது, கடந்த 4-4-1989 அன்று கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கும் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் சம்மன் அனுப்பப்பட்டு, அவர்களுக்கு 5-1-1989 ஆம் தேதி நீதி மன்றத்திற்கு வர வேண்டுமென்று அழைப்பு வந்திருக்கின்றது. அரசு அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி அமைந்துள்ள தர்மபுரி மாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு, தென்னை மரங்களும், பாக்கு மரங்களும் மிகவும் காய்ந்து போகும் நிலையில் இருக்கிறது. அங்கே குடிநீர்ப் பஞ்சம் தோன்றியிருக்கும் நிலையில் இருக்கிறது. எனது தொகுதியான பாலக் கோடு தொகுதியில் குறைந்தபட்சம் ஆயிரம் போர் வெல்களைப் போட்டால்தான், கிராமங்களில் உள்ள கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். எனவே இதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் அரசை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவையின் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கொ. மாதப்பன்: வறட்சியின் காரணமாக, கிராமத்தில் இருக்கிற மக்களெல்லாம் தண்ணீர் இருக்கும் ஆற்றங்கரையின் ஓரத்திற்கு குடியேறும் சூழ்நிலை இருப்பதை கடந்த முறை நான் அந்தப் பகுதியில் சுற்றுப் பயணம் செய்தபோது காணும் வேதனைக்குரிய நிலை ஏற்பட்டது. எனவே தர்மபுரி மாவட்டத் தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, குடிநீர் பஞ்சத்தைப்

போக்க வேண்டும். ஒகேனக்கல் திட்டத்தை தற்போது விரைவாக முடிக்காவிட்டாலும், அந்த மாவட்டத்திலே 10 அணைகள் கட்டப்பட்டுள்ளன. அந்த அணைகளில் தேங்கியுள்ள தண்ணீரை 2 மாத காலத்திற்கு அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்களுக்கு, குடிநீராக வழங்க முடியும். கடந்த காலங்களில் 60 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள, தர்மபுரியில் உள்ள சின்னாறு அணையிலிருந்து குடிநீருக்காக தண்ணீரை தர்மபுரிக்கு எடுத்து வந்தார்கள். இப்போது 10 அணைகள் இருப்பதால், அவற்றிலே தண்ணீர் தற்சமயம் கொஞ்சம் இருக்கிறது. அந்த அணைகளில் உள்ள தண்ணீரை சுற்றுப்புறங்களில் உள்ள டவுன், பஞ்சாயத்துக்களுக்கும், கிராமங்களுக்கும் குடிநீராக் கொடுக்கலாம். அரசாங்கம் போர்க்கால நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதியில் உள்ள குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன் (மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இது தொழிலாளர் நல மானியக் கோரிக்கை.

திரு. கொ, மாதப்பன்: தலைவரவர்களே, இது என்னுடைய கன்னிப் பேச்சு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்னிப் பேச்சிலே, எல்லாம் பேசலாம் என்பதல்ல. கன்னிப் பேச்சில் என்ன தேவையோ, அதைப் பேசலாம்.

திரு. கொ. மாதப்பன்: என்னுடைய தொகுதி மலைப் பகுதியாக இருக்கிறது. மலைப் பகுதிகளில் வாழ்கிற ஏழை எளிய மக்கள் விறகு விற்றும் கூலிவேலைசெய்தும் வருகிறார்கள். ஆனால், அவர்களுக்குப் பாதை வசதிகள் இல்லாத காரணத்தால் அவர்களுக்குப் பாதை வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை விவசாய தொழிலாளர்களுக்கும் அரசு பண்ணையில் பணிசெய்யும் தொழிலாளர்களுக்கும் தனியார் பஸ்களிலே பணியாற்றும் கூலித் தொழிலாளர்களுக்கும் நிரந்தரமான ஊதியத்தை வழங்க வேண்டுமென்று அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, பாலக்கோடு சர்க்கரை ஆலை மட்டுமல்ல, பொதுவாக தமிழகத்தில் உள்ள அனைத்து ஆலைகளையும் எடுத்துக் கொண்டாலும் தினக் கூலித் தொழிலாளர்கள் 20 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல் கன்சாலிடேட்டட் பே என்று 250, 300 ரூபாய்தான் 10, 15 ஆண்டுகளாக வாங்கி வருகிறார்கள். அவர்களுக்கு நிரந்தர ஊதியம் வழங்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பண்ணை மற்றும் கூட்டுறவுத் துறையிலே இருக்கிற. . . . (மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நீங்கள் ஏற்கெனவே என்னிடத்தில் கேட்டபடி, 2,3 பேருக்கு அதிக வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டபடி, ஒவ்வொருவருக்கும் நேரம் கொடுத்திருக்கிறேன். நீங்கள் 10 நிமிடம் அதிகமாக எடுத்துக்





கொண்டால், அடுத்து ஒருவரைக் குறைக்கப் போகிறேன். அதாவது என்னிடம் சொல்வது ஒன்று, நடப்பது ஒன்று என்றால் பிறகு வாய்ப்பே கொடுக்க மாட்டேன்.

திரு. கொ. மாதப்பன்: தனியார் துறையிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு, விவசாயப் பண்ணையிலே பணியாற்றும் தினக் கூலித் தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக ஒரு ஊதியத்தை அரசு நிர்ணயித்து, ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

திரு. குமரி அனந்தன்: On a point of order. சபாநாயகர் அவர்களே, தாங்கள் சற்று நேரத்திற்கு முன்னால் இங்கே பயன்படுத்திய சொற்களிலே 'அவையை முடிக்கட்டுமா' என்று சொல்கிற ஒரு சொல்லும். 'என்னுடைய கருத்தைச் சொல்லி விட்டேன், உங்களுக்கு அது பிடித்தம் இல்லை என்றால் நீங்கள் வெளியே போய்க்கொண்டிருக்கலாம்' என்று சொன்ன கருத்தும் பொருத்தமானவைதானா என்பதை உங்கள் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பிறகும், அது தொடர்பாக எழுந்து கருத்துத் தெரிவிப்பது பொருத்தம்தானா என்பதை உங்களையே கேட்க விரும்புகிறேன். தயவு செய்து விடை சொல்லுங்கள்.

திரு. குமரி அனந்தன்: தாங்கள் வழங்கியது தீர்ப்பாக அல்ல' அது ஒரு கருத்து. எனவே. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வெறும் கருத்து அல்ல; அது ஒரு முடிவு.

திரு. குமரி அனந்தன்: அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று பலமுறை பேசி, பின்னர் நீக்க வேண்டாம் என்று முடிவு செய்த சந்தர்ப்பங்கள் பல உண்டு. அதனால். .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீக்க வேண்டாம் என்று வேண்டுகோள் விடுவது வேறு. ஆனால் தொடர்ந்து நீங்கள் இப்படியே நீக்கிக் கொண்டிருக்கிறீர்களே அது நியாயம் தானா என்று கேட்பது வேறு.

திரு. குமரி அனந்தன்: அவர் சில கருத்துக்களைச் சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே பலதடவை நீங்கள் கருத்துச் சொன்னபிறகு ஏற்றுக் கொண்டிருக்கிறேன். ஆனால் அதற்கும் ஒரு முறை இருக்கிறது. வரம்பு இருக்கிறது. அதையும் நீங்கள் பார்க்க வேண்டும். அடுத்து திரு. குருநாதன்.

*திரு. சு. குருநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50வது பிறந்த தினத்தை—பொன் விழாவை—எளிமையாக இன்றைக்குக் கொண்டாடியிருக்கிற மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பொன்முத்துராமலிங்கம் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பொன்னான நாளில் தொழிலாளர்களுக்கான நல்ல பல திட்டங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

கடந்த காலத்தில் தொழிலாளர்கள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்ற நிலை இருந்தது. ஆயினும் அவர்களுக்கு சரியான முறையில் ஆதரவு கொடுக்கப்படாத காரணத்தால் இன்றையதினம் அவர்களுடைய முதுகெலும்பு நொறுக்கப்பட்டு கிடக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் புத்தொளி சேர்க்கிற அளவுக்குக் கழக அரசு கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு பல்வேறு ஆலைகளைத் திறந்திருக்கிறது. எனவே அந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

தென்னகத்தைப் பொறுத்தவரை, அதிலும் தமிழ்நாட்டின் தென்கோடியில் இருக்கிற, தென்னகத்தின் ஆக்ஸ்போர்டு என்று அழைக்கப்படுகிற பாளையங்கோட்டையில்—குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் எந்த இடத்திலும் ஒரு தொழிற்சாலை கிடையாது. இன்றைக்கு பாளையங்கோட்டை—திருநெல்வேலி தொகுதியில் நல்லதொரு தொழிற்பேட்டையை அமைக்க வேண்டுமென்று இங்கே இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், இன்றையதினம் அந்தப் பகுதியில் பல்வேறு கல்லூரிகள் இருக்கின்ற காரணத்தால் அதுவும் தொழில்நுட்பக் கல்லூரி இருக்கிற காரணத்தால் மாணவர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இளைஞர்களும் படித்த நண்பர்களும் அவர்களுக்கிருக்கிற கவலையைப் போக்குகிற அளவுக்கு அங்கே ஒரு தொழிற்பேட்டையை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பாளையங்கோட்டையைப் பொறுத்த வரையில் கடந்த இரண்டு மாதங்களாக அங்கே துணை லேபர் கமிஷனர் இல்லை. அதனால் ஏராளமான வழக்குகள் அங்கே தேங்கியுள்ளன. ஆகவே துணை லேபர் கமிஷனர் ஒருவரை அங்கே நியமனம் செய்து, அங்கே இருக்கிற வழக்குகளையெல்லாம் விரைவில் நடத்தி முடித்திட அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதைப்போன்றே, திருநெல்வேலியில் நிரந்தரமான லேபர் கோர்ட் அமைக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, ரீஜினல் பிராவிடெண்ட் பண்டு கமிஷனர் அலுவலகம் ஒன்று மதுரையில் இருக்கிறது. அந்த அலுவலகத்திற்கு வருவதற்கு நெல்லையிலிருந்து பெண்களும் வயதானவர்களும் பல கஷ்டங்களை ஏற்க வேண்டியிருக்கிறது. எனவே பிராவிடென்ட் பண்டு அலுவலகத்தை திருநெல்வேலிக்கு மாற்றித்தர வேண்டுமென்றும் மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் தொழிலாளர்களுக்கிடையே நடக்கிற தாவாக்களை தொழில் உரிமையாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நடக்கிற வழக்குகள் டி.சி.எல்., ஏ.சி.எல். நீதி மன்றங்களில் நடக்குகிற வழக்குகள் உடனடியாக தீர்த்து வைக்கப்பட ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு வழக்கு தொடர்ந்தால் குறைந்த பட்சம் 5,6 ஆண்டுகள் ஆகிறது என்றால் அதனால் தொழிலாளர்களின் நிலையை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். முதலாளிகளைப் பொறுத்தவரையில் அந்த வழக்கு 10 ஆண்டுகள் கூட நடக்கலாம் அந்த அளவுக்கு அவர்களுக்குத் தகுதியும் பணமும் அவர்கள் கையிலே விளையாடிக் கொண்டிருக்கிறது. ஆனால், அன்றாடங் காய்ச்சிகளாக இருக்கிற தொழிலாளர்களை எண்ணிப் பார்க்கிறபோது அந்த வழக்குகளை விரைவாக முடித்து தர வேண்டும்—ஒரு வழக்கு வந்தால் அதை 6 மாதகாலத்திற்குள் முடிக்க வேண்டும் என்ற ஆணையை வெளியிட வேண்டும் என்று தொழிலாளர் வர்க்கம் இன்றைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

அடுத்து, நெல்லை மாவட்டத்தில் டி.சி.எல். கோர்ட்டில் அவர் நியமனம் செய்யப்படாமலேயே கடந்த 3 மாதகாலமாக நீதிமன்றமே நடைபெறாமல் இருக்கிறது. அந்த நீதிமன்றம் செயல்படுவதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நெல்லை மாவட்டத்தில் உள்ள இந்தியா சிமின்ட் நிறுவனம் மிகப் பெரிய நிறுவனமாக காட்சி அளித்தாலும், அங்கே பணியாற்றும் தொழிலாளர்களின் நிலை பரிதாபமாக இருக்கிறது. அந்த இந்தியா சிமின்ட் லேபர் வெல்பர் ஸ்கீமில் வீடு கட்ட நிலம் கொடுத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1.10)

ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் 3 செண்ட் என்ற அளவுக்கு 150 பிளாட்டுகள் அந்த நிறுவனமே வழங்கியுள்ளது. அதற்கு அரசு அனுமதி வழங்காமல் இருக்கின்ற காரணத்தால் இன்றைக்கு அந்த 150 பிளாட்டுகளிலே வீடுகள் கட்ட முடியாமல் தொழிலாளிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த குறையை நீக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஈ.எஸ்.ஐ. ஹாஸ்பிட்டல் எங்கும் சரியாக பராமரிக்கப்படவில்லை. மேனேஜ்மென்டுக்கு சாதகமாகத்தான் இன்றைக்கு ஈ.எஸ்.ஐ. தொழிலாளர் காப்பீட்டுக் கழகம் இருந்து கொண்டிருக்கிறது. அதை நல்ல முறையில் பராமரிப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லேபர் வெல்பர் போர்டு என்கின்ற தொழிலாளர் நல வாரியத்திலிருந்து உழைப்பவர் உலகம் என்கின்ற ஒரு மாத இதழ் அரசாங்கத்தால் வெளியிடப்படுகிறது. அதிலே பல்வேறு பிரச்சினைகளை விவாதித்தாலும், தொழிலாளர்களுக்கு தேவையான அவர்களுடைய சட்டங்கள், அதனுடைய விதிகள், அந்த வாரம் நடைபெற்ற வழக்குகளிலிருந்து என்ன தீர்ப்பு சொல்லப்பட்டு இருக்கிறது என்பதையெல்லாம் அதிலே விரிவாக சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்,

ஆலைகள் அனைத்திலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அங்கு வழங்கப்படவில்லை. பாதுகாப்பு முறைகள் சரியான முறையில் கையாளப்படவில்லை. விபத்து ஏற்படுவதை தடுப்பதற்கான ஏற்பாடுகள் எந்த ஆலையிலும் நல்ல முறையில் கடைப்பிடிக்கப் படவில்லை. இன்றைக்கு பல்வேறு முதலாளிகள் தொழிலாளர் வர்க்கத்தினரின் உயிரோடு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். ஓய்வு அறைகள் அவர்களுக்கு ஒழுங்கான முறையில் ஒதுக்கப்பட வில்லை. அப்படி சில தொழிற்சாலைகளில் ஒதுக்கப்பட்டு, கொடுக்கப்பட்டு இருந்தாலும் அது நல்லமுறையில் பராமரிக்கப் படவில்லை. இன்றைக்கு மினிமம் வேஜஸ் என்கின்ற குறைந்த பட்சக் கூலியை கூட அவர்களுக்கு தொழிற்சாலைகளில் கொடுக்கப் படவில்லை. அதை கொடுக்க லேபர் போர்டை கட்டாயப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்காக மாதம் ஒருமுறை கிரீவன்ஸ் செல் என்கின்ற குறை தீர்க்கும் ஒரு பிரிவை மாவட்டம் தோறும் கூட்ட வேண்டும். அப்படி கூட்டினால் அங்கே வந்து தொழிலாளர்கள் தங்கள் குறைகளைச் சொல்லி, பிரச்சினைகளை தீர்க்க வாய்ப்பாக அது அமையும். ஆகவே மாவட்டம் தோறும் குறை தீர்க்கும் பிரிவை ஏற்படுத்தி, தொழிலாளர்கள் தங்கள் குறைகளை சொல்லும் வாய்ப்பை ஏற்படுத்தி தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு எத்தனையோ தொழிற்சாலைகள் இருந்தாலும் அத்தனை தொழிற்சாலைகளுக்கும் வருகிற டெபுட்டி சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரிஸ் என்கிற அதிகாரிகள் இன்றைக்கு, தண்டிக்கின்ற அளவுக்கு அதிகாரத்தை பெற்றிருக்கிறார்கள். ஆனால் அந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு அவர்கள் ஆலை முதலாளிகளுக்கு சாதகமாக இருக்கிறார்களே தவிர, அந்த தொழிலாளர்களின் வாழ்க்கையில் என்ன முன்னேற்றம் செய்த வேண்டும்; அவர்களுக்கு எப்படி பாடுபட வேண்டுமென்பதை





எல்லாம் மறந்துவிட்டு இன்றைக்கு வருகிறபோதே அவர்களுடைய அறையில் ஓய்வு எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு சாதகமான குறிப்புரைகளைத் தான் எழுதி வைத்துவிட்டு செல்கிறார்கள். இந்த முறையை மாற்றுவதற்கு அரசாங்கம் அனைத்து முயற்சி களையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தியா சிமென்ட் பேக்டரியில் கடந்த 6–10–88 அன்று ஒரு தொழிலாளர் இறந்து விட்டார். அங்கே தொழிலாளர்களுக்கு சரியான முறையில் பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை. அங்கே தொழிலாளர்கள் தினந்தோறும் வந்து செல்வதற்குரிய பாதுகாப்பு கொடுக்காத காரணத்தால், பல்வேறு தொழிலாளர்கள் இன்றைக்கு இறந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு பாதுகாப்பு முறை களை எற்லாம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் போக்குவரத்து துறையில் ஈடுபட்டுள்ள சுமார் 2½ லட்சம் தொழிலாளர்களின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. தினக் கூலியாக, அதுவும் கொத்தடிமைகளாக இன்றைக்கு அவர்கள் நடத்தப்படுகிறார்கள். இவர்களுக்கு பி.எப். ஈ.எஸ்.ஐ., சீருடைகள், காலணிகள் வழங்காமல், அவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். தனியார் நிறுவனங்களில் வேலை பார்க்கும் போக்குவரத்து ஊழியர்களுக்கு, அரசு போக்குவரத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கொடுக்கும் சம்பளத்தை கொடுக்க வேண்டும்; ஆனால் அவர்கள் இன்றைக்கு பாதிக்கும் கீழ் குறை வான சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர் களுடைய கூலியை நிர்ணயம் செய்து, ஒவ்வொரு தனியார் பஸ் கம்பெனிகளுக்கும் எந்த அளவுக்கு சம்பளம் கொடுக்க வேண்டு மென்று ஒரு சட்டத்தை இயற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நூற்பு ஆலைகளை எடுத்துக் கொண்டால் அங்கு ஐந்தாண்டு, ஆறு ஆண்டுகளுக்கு உழைத்தாலும் அந்த தொழி லாளர்கள் நிரந்தரம் ஆக்காமல், கொத்தடிமைகளாகத்தான் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த முதலாளிக்கு வேண்டியவரை, அந்த கட்சிக்கு வேண்டியவரை தான் நிரந்தர மாக்குகிறார்களே தவிர; அங்கு உழைப்பவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை; அவர்கள் நிரந்தரம் செய்யப்படவில்லை; இந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டும். குறிப்பாக கூற வேண்டு மெனில், தூத்துக்குடியில் இருக்கிற ஸ்பின்னிங் மில்லில் முதலாளிக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே கமிஷனர் முன்பு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அது இன்றுவரை நிறைவேற்றப்பட வில்லை. அதை எதிர்த்துக் கேட்டால் இன்றைக்கு தொழி லாளர்கள் எல்லாம் விரட்டி, விரட்டி அடிக்கப்பட்டு, பதவி யிலிருந்து நீக்கம் செய்யப்படுகிறார்கள். இந்த அளவுக்கு தூத்துக்குடியில் இருக்கிற ஸ்பின்னிங் மில் இருந்து கொண்டிருக் கிறது. இது சம்பந்தமாக கமிஷனர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் பல்வேறு முறை நாங்கள் மனுக்கள் அனுப்பி உள்ளோம்.

கோவில்பட்டியை எடுத்துக்கொண்டால் அங்கு இருக்கிற ராயல் மில்லில் ஒரு தொழிலாளர் கூட நிரந்தரம் செய்யப்படவில்லை.

சங்கரன் கோவிலில் கீதாஞ்சலி மில் இருக்கிறது. அங்கே இன்றைக்கு 500, 600 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களில் ஒரு நபர் கூட நிரந்தரம் செய்யப்படவில்லை. அதைப்போல, நாங்குநேரியை எடுத்துக் கொண்டோம் என்றால் அங்கே டி. வி. எஸ். மில் என்று சொல்லப்படுகின்ற சுந்தரம் மில் இருக்கிறது. அங்கே எந்தவிதமான தொழிற்சங்கமும் கிடையாது. யாராவது தொழிற்சங்கம் வைக்க வேண்டுமென்று முன் வருவோர்களேயானால் அவர்களுடைய உயிருக்கு ஆபத்துத்தான் வந்து கொண்டிருக்கிறது. இந்த அளவிற்கு நாற்றமையிலே பல்வேறு சிக்கல்கள் இருந்து கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இரண்டு இலட்சம் பேர் ஆண்களும், பெண்களுமாகப் பீடி சுற்றும் தொழிலைச் செய்து பயன் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்காக இன்றைக்குப் பல்வேறு உத்தரவுகளை அரசு போட்டாலும், குறைந்த பட்சக் கூலியாக 14 ரூபாய் 5 காசு கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை வழங்கிய பின்பும்கூட, இன்றைக்கு பெரிய பீடிக் கம்பெனியாக இருக்கின்ற மங்களூர் பீடி, கணேஷ் பீடி, சங்கு பீடி. போன்ற பெரிய கம்பெனிகளெல்லாம் அந்தக் கூலியை வழங்கவில்லை. இன்றைக்குப் பெண்களுக்கு பாஸ் புத்தகம் வழங்காமல், ஆண்கள் பெயருக்குப் பாஸ் புத்தகம் வழங்கி, அவர்களுக்குக் கொடுக்கின்ற மருத்துவக் கால விடுப்பு, லீவு கால சம்பளம் போன்றவைகளெல்லாம் முடக்கப்பட்டு, கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நீக்குவதற்கு மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தியேட்டர் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அவர்கள் நிரந்தரம் செய்யப்படாமல், அவர்களுடைய கூலிகளெல்லாம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓட்டல் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய கூலி நிர்ணயம் செய்யப்படாமல், ஏதோ அன்றாடம் வயிற்றைக் கழுவுகின்ற நிலையில்தான் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் நல்லதொரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்குக் கட்டுமரம், விசைப்படகு போன்றவற்றில் சென்று மீன் பிடிக்கின்ற தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கடைசியாக, தமிழ்நாடு செய்திப் படத் துறையை 'ஏ' சென்டரிலே மட்டும் போட்டுக் காட்டுகிறார்கள். அதை 'பி' சென்டரிலும், 'சி' சென்டரிலும் போட்டு, இன்றைக்கு அந்தச் செய்தித் துறையைச் சார்ந்த நண்பர்களெல்லாம் அந்தப் பகுதியில் சென்று அந்தப் படத்தைப் போட்டு மக்களுக்கு நல்ல பல கருத்துக்கள் விளங்கும் என்று சொல்லி, வாய்ப்பளித்த பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. பா. அப்துல்சமத்: பேரவைத் தலைவரவர்களே, வாய்ப்புக்கு நன்றி. பாரா 8–இல், தொழிற்சங்கங்களால் அரசு கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட சில முக்கிய பிரச்சினைபற்றி இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று உறுதி அளித்த மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

வீட்டு வசதித் திட்டம் பீடித் தொழிலாளர்களுக்கு 50 சதவீதத்தை மானியமாகக் கொடுத்து, ரூபாய் 5,000–க்கும் உட்பட்ட வீடுகளை வேலூரிலும், சத்துவாச்சேரிலும் கட்டப் பட்டதுபோல, வாணியம்பாடி, ஜோலார்ப்பேட்டை பகுதிகளுக்கும் விரிவுபடுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு 7–4–1988 இல் லேபர் கமிஷனர் திரு. செல்லதுரை அவர்கள் முன்பு தொழில் அதிபர்களும் தொழிலாளர்களும் சேர்ந்து 12 (3) என்ற ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில் ஆயிரம் பீடி சுற்றக் கூலி 12 ரூபாய் 50 காசு என்பதை மாற்றி 14 ரூபாய் 25 காசு அதாவது 1,000 பீடி சுற்றக் கூலி 1 ரூபாய் 75 காசு உயர்வு ஏற்பட்டது. அதைத் தமிழகத்தில் எல்லாக் கம்பெனிகளிலும் அமல் படுத்தினார்கள். ஆனால் கணேஷ் பீடி கம்பெனி, இந்த ஒப்பந்தம் குறித்து அரசு பிறப்பித்தால்தான் நாங்கள் கொடுக்க முடியுமென்று அறிவித்து விட்டார்கள். இதைக்கண்டு, திருநெல்வேலியிலே உள்ள சில கம்பெனிகள் கூலி உயர்வைக் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள், கணேஷ் பீடி கம்பெனி கொடுத்தால்தான் நாங்களும் கொடுப்போம் என்று நிறுத்திவிட்டார்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினை. பெரிய கம்பெனியான கணேஷ் கம்பெனி கூலி உயர்வைக் கொடுத்து இருந்தால் மார்க்கெட்டில் விலையை ஏற்றியிருக்க முடியும். கூலி உயர்வு கொடுக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி, சிறிய தொழில்கள் நடத்தி வந்த அனைத்துக் கம்பெனிகளும் பாதிக்கப்பட்டு தங்களுடைய தொழிற்சாலைகளை ஆந்திர மாநிலத்திற்கு மாற்றிக்கொண்டார்கள். ஆகவே, ஆந்திராவுக்குப் பல தொழிற்சாலைகள் போவதன் காரணமாக, பீடி சுற்றும் தொழிலாளர்கள் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டார்கள் ஒவ்வொரு கம்பெனிக்கும் ஒரு சட்டம் என்று

இருக்கிறதா என்பதைத் தயவு செய்து அமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது லேபர் கமிஷனர் அவர்கள் இதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆந்திர மாநிலத்திற்குத் தொழில் போவதற்குக் காரணம் அங்கே கூலி நிலைமை, பி.எஃப்.பிரச்சினை ஆகியவை ஒன்றுமே இல்லை. ஏறத்தாழ தமிழ்நாட்டிலிருந்து ஆந்திராவுக்கும் 1,000 பீடி சுற்ற கூலி 2 ரூபாய் 50 காசு முதல் 3 ரூபாய் வரை குறைவு.

கம்யூனிஸ்ட் கட்சிகள் தயவு செய்து மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தத் தொழிற்சாலையானாலும், தொழிற்சங்கத்தில் தொழிலாளர்களுக்காகப் போராடும் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆந்திராவில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை எனக் குறைப்பட்டுக்கொள்கிறேன். ஆகவே, இது குறித்து நம்முடைய முதல்வரவர்களும், ஆந்திர மாநில முதல்வரவர்களும் தொடர்பு கொண்டு, தமிழ்நாடு ஆந்திரா, கர்நாடகா ஆகிய இந்த மூன்று மாநிலங்களிலும் ஒரே சீரான கூலியை அமைப்பதற்கு முயற்சித்தால் நல்லது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வரதராசன் அவர்கள் உட்காருங்கள். அவர் முடித்து விடுவார்.

(பிற்பகல் 1-20).

திரு. பா. அப்துல்சமத்: முதலில் கேட்டுக் கொண்டேன். அவர்களால் அதில் அதிகம் வெற்றி காணமுடியும். இந்த பீடி சுற்றும் சமுதாயம் அவருக்கு நன்றிக் கடன் பட்டிருக்கும். நானும் இந்த சமுதாயத்தின் சார்பாக நன்றி கூறிக்கொள்வேன். இதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். கடந்த 7.4.1988 அன்று ஒப்பந்தம் ஏற்பட்டு, 14.4.1988-ல் அமல் செய்யப்பட்டது. ஆனால் அரசாணை 23.2.1989 நாளன்று அதாவது இந்த அரசு தான் பிறப்பித்திருக்கிறது. அரசாணை பிறப்பித்த பின்னால் கணேஷ் பீடி கூலி உயர்வு ரூ. 1.75 கொடுக்கிறார்கள். மற்ற கம்பெனிகள் தமிழ்நாடு முழுவதும் கடந்த ஒன்பது மாதமாக கூலி உயர்வு கொடுத்திருந்தும், கணேஷ் பீடி கம்பெனி மட்டும் இப்படி செய்கிறார்கள் அவர்களுக்கு என்ன சலுகை என்று எனக்கு புரியவில்லை. ஆகவே கணேஷ் பீடி கம்பெனிக்கு மட்டும் ஒரு தனிச் சட்டம் இருக்கிறதா? அல்லது லேபர் டிபார்ட்மெண்ட் மூலமாக தனிச் சலுகை ஏதாவது கொடுத்திருக்கிறார்களா என்று தெரிவிக்க வேண்டுகிறேன். ஒன்பது மாத காலமாக நிலுவையில் இருந்த ஒப்பந்தக் கூலி ஆயிரம் பீடிக்கு ரூ. 1.75 என்று கணக்கிட்டு தயாரான பீடியின் கணக்கின்படி இந்த அரசு உடனே அரசாணை பிறப்பித்து தொழிலா



ளர்களுடைய கூலி பிடித்தம் செய்ததை வாங்கிக் கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன். அப்படி பிடித்தம் செய்த பணத்தை வாங்கிக் கொடுக்காவிட்டால் இதுநாள் வரையில் கூலி உயர்வு கொடுத்துக் கொண்டிருந்த மற்ற கம்பெனிகள் அவர்கள் கொடுத்து வந்த ரூ. 1.75 உயர்வை தொழிலாளர்கள் போனசிலிருந்து பிடித்தம் செய்து விடுவோம் என்று அறிவித்து இருக்கிறார்கள். இது நியாயம் தான் என்று நான் கருதுகிறேன். வரி விதிப்பு. மத்திய அரசு..(மணியடிக்கப் பெற்றது) வரி விதிப்பு முறையில் ஊழல்கள் நடக்கின்றன. இதனால் தொழிலாளர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. காரணம் 20 லட்சம் பீடிகள் வரையில் தயாரித்தால் அந்த பீடி கம்பெனிகளுக்கு வரி கிடையாது. ஆகவே இந்தத் தொழில் செய்பவர்கள் 5, 6 லைசென்ஸ் வாங்கிக் கொண்டு 20 லட்சம் பீடிகள் வரையில் லேபில் இல்லாமல் எடுத்து கொண்டு டில்லிக்குச் சென்று அங்கே லேபில் போட்டு விற்கிறார்கள். அதனால் நம்முடைய அரசுக்கு வர வேண்டிய பேசிக் டியூட்டியும், அந்த மானியமும் சென்ட்ரல் கவர்ன்மெண்டிற்குச் சேரவேண்டிய எக்சைஸ் டியூட்டியும் இதிலே பாதிக்கிறது. பி. எப். இல்லாமல், கணக்கு இல்லாமல் பீடி தயாரிக்கிறார்கள். தொழிலாளர்களுடைய பிரச்சினை என்று எடுத்துக்கொண்டால் அன்றைக்கு அவனுக்கு ஒரு ரூபாய் அதிகமாக கொடுத்துவிட்டால் போதும். மற்ற கணக்கை அவர்கள் கேட்கமாட்டார்கள். தொழிலாளர் சங்கத் தலைவர்கள் சொன்னாலும்' தொழிற் சங்கத் தலைவர்களிடத்தில் ஏறுமாறாகப் பேசுவார்கள். ஆகவே இந்த பிரச்சினையில் மத்திய அரசை அணுகி, வரி விதிப்பு முறையில் லேபிள் இல்லாத பீடியோ, லேபில் போட்ட பீடியோ எதுவாக இருந்தாலும் ஒரே சீரான முறையில்....

திரு. உ. ரா. வரதராசன்: தலைவர் அவர்களே, தொழிற் சங்கத் தலைவர்கள் இப்படியெல்லாம் பேசுவார்கள் என்று சொல்கிறார்கள். இங்கே நாங்கள் எல்லாம்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொழிற்சங்கத் தலைவர்களை இவர்கள் ஏசுவார்கள் என்று சொல்கிறார். உங்களை ஒன்றும் சொல்லவில்லை. திரு. வரதராசன் அவர்களுக்குக் காதில் சரியாக விழவில்லையென்று நினைக்கிறேன். (குறுக்கீடு) அப்படியில்லை. இந்தத் தொழிலாளர்களுக்குக் கூடுதலாக ஒரு ரூபாய் கொடுத்துவிட்டால் தொழிற்சங்கத் தலைவர்கள் சொன்னாலும் அவர்களையே ஏசுவார்கள் என்று சொல்கிறார். உங்கள் சார்பில் தான் பேசுகிறார். திரு. அப்துல் சமத் அவர்கள் முடித்து விடலாம். நீங்கள் கேட்டது பீடிக்காகத்தான் கேட்டீர்கள். ஆனால் உங்கள் பேச்சு ரொம்ப நீளமாகப்போகிறது.

திரு. பா. அப்துல் சமத்: தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு போனஸ் எல்லாம் சேர்த்து கொடுத்து பி.எப். கணக்கை வைக்கவில்லை. இந்த அரசு, தொழிலாளர்களும் ஏமாற்றப்படுகிறார்கள். தொழிலாளர்களுடைய மனோபாவம் அப்படி. ஆகவே.....

[1989 ஏப்ரல் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்துல் சமத் அவர்கள் உட்கார வேண்டும். அடுத்து திரு. எஸ். ஆர். இராதா,

*திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மணி 1.30 ஆகப்போகிறது. திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் பேசி, அதற்கு பிறகு இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டி யிருக்கிறது. தனித்தனி டிமாண்ட் இருக்கிற காரணத்தால் ஒரு அமைச்சருடைய பதிலை மட்டும் இப்போது வைத்துக் கொண்டு, மாலை 4.00 மணிக்கு மீண்டும் அவை கூடுகிறபோது இன்னொரு டிமாண்டிற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி, பிறகு அடுத்த டிமாண்டை மூவ் பண்ணி, அப்படி செய்தால் எல்லோருக்கும் வசதியாக இருக்கும். அது மாதிரித் தாங்கள் அறிவிக்கலாமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுடைய கருத்தை ஏற்று, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் பிற்பகலில் சேர்த்து விடை சொல்லி, பிறகு மானியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா. அப்துல் சமத்: தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுதி வைத்ததை எல்லாம் படிக்கவேண்டுமென்று நினைத்தால் அனுமதியே கொடுக்க மாட்டேன் அடுத்த தடவை. சுருக்கி முடிப்பதற்குத் தெரிய வேண்டும். பீடிதான் சுற்றவேண்டுமே தவிர, பேச்சையெல்லாம் சுற்றிக்கொண்டு இருக்கக் கூடாது. (சிரிப்பு)

திரு. பா. அப்துல் சமத்: ஆகவே மத்திய அரசுக்கு இந்த நிலைமைகளை எடுத்துச் சொல்லி எல்லா பீடிகளுக்கும், லேபிள் போட்ட பீடிகளுக்கும், லேபிள் போடாத பீடிகளுக்கும் ஒரே மாதிரியான எக்சைஸ் வரியை அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முக்கிய கவனம் செலுத்தி, இந்த அரசுக்குத் தொழிலாளர்கள் பாராட்டுச் செலுத்தக்கூடிய வகையில், நம்முடைய அமைச்சர் அவர்கள் உதவி செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். இன்னும் ஒன்று. வருடம் ஒருமுறை பஞ்சப்படி கணக்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. சேலத்தில் இருக்கின்ற தொழில் அதிபர்கள், தொழிலாளர்களுக்கு வருடம் ஒருமுறை அதைக் கணக்கிட்டுக் கொடுக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. ஆகவே அதைக் கொடுக்க, அரசு உத்தரவைப் பிறப்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடைசி யாக பீடி தயாரிக்கும் பீடி இலைக்கு ஒருமுனை வரியைக் கொண்டுவந்து விலையேற்றத்தைக் கட்டுப்படுத்திய முதல்வர் அவர்களுக்கு நன்றி, இங்கே பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கும் நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரி வித்துக்கொள்கிறேன். பொதுவாக தொழிலாளர் துறை மானியம் வருகிற நேரத்தில் சட்டமன்றம் மிகுந்த பரப்பரப்பாகவும்



1989 ஏப்ரல் 20] [திரு. எஸ். ஆர். இராதா]

இங்கு சூடான பேச்சுக்களும் ஏற்படுவது வழக்கம். இப்படிப்பட்ட
மானியக் கோரிக்கைகள் பற்றி விவாதம் நடைபெறுகிற
நேரத்தில் காவல்துறைக்கு அடுத்து, தொழிலாளர் துறைதான்
அதிகமான அளவிற்கு கவனிக்கப்படுகிற நிலையும், தொழிலா
ளர் மானியம் என்று சொல்கிற நேரத்தில், பல்வேறு சூடான
விவாதங்கள் நடைபெறுகிற காலமும் ஒன்று இருந்தது. ஆனால்
இன்றைக்கு தொழிலாளர் துறை மானியம் என்பது சுற்றுலாத்
துறை மானியத்தோடு சேர்ந்த காரணத்தாலோ என்னவோ,
எனக்குத் தெரியாது, தொழிலாளர்களைப்பற்றிப் பேசுகிற
பேச்சுக்கள் அனைத்தும் பல்வேறு நிலைகளில் மாறி, வேறு பல
பல கருத்துக்களைப் பேசுகிற நிலை ஏற்பட்டுவிட்டது. இருந்
தாலும் எனக்கு ஒரு மகிழ்ச்சி. இன்றைக்குப் பேசுகின்ற இந்தத்
தொழிலாளர் மானியத்தோடு இன்னொரு எழுதுபொருள்
அச்சுத்துறை மானியத்தைப் பற்றியும் இங்கே விவாதம் நடை
பெறவேண்டும். ஆனால் இந்தத் தலைப்பைப் பற்றி எடுத்துச்
சொல்ற வாய்ப்புக்கூட கிடைக்காத அளவிற்கு இங்கே மானியக்
கோரிக்கைகள் மீது நடைபெறுகிற விவாதம் என்ற அளவிற்கு
சட்டமன்றத்திலே இன்றைக்கு விவாதம் நடந்து கொண்டிருக்
கிறது. ஆனால் இந்தத் தொழிலாளர் துறை மானியம் என்று
சொல்கிற நேரத்திலே, எத்தனையோ கருத்துக்கள் சொல்லப்பட
வேண்டும் என்பதும், எப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் இங்கே
எடுத்துச் சொல்லவேண்டும் என்பதும் இன்றைக்கு மரபு
வழியாக மாறிவிட்டது என்பதை நான் வேதனையோடு தெரி
வித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் ஒன்று சொல்கிறபோது, அவர்களைப்
பற்றிப் பேசுகிற இடம் அவர்களுடைய பிரச்சினைகளை எடுத்துச்
சொல்லி வாதாடுகிற இடம், இங்கே பேசினால் ஏதாவது பரி
காரம் கிடைக்காதா என்ற அளவிற்கு இருந்த நிலை
மாறிவிட்டது. என்றாலும் இன்றைக்குப் புதிய அரசு என்ற
வகையில் ஆட்சிப் பீடத்திலே இருக்கிற திராவிட முன்னேற்றக்
கழக அரசு தொழிலாளர் துறையிலே எடுத்துவைக்கிற
கொள்கைகள் எப்படி இருக்கின்றன என்பதை
விமர்சிக்கிற அளவிற்கு காலம் இன்னும் இடம் தரவில்லை என்ற
காரணத்தாலே நாம் கற்பனையான விமர்சனத்தைச் சொல்லி,
நீங்கள் தொழிலாளர்களுக்குத் துரோகம் செய்கிற அரசு,
தொழிலாளர்களுக்கு விரோதமாக நடந்து கொள்கிறார்கள் என்று
பேசுகிற நிலை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றுதான்.
ஏனென்றால், இனி வருகின்ற காலத்திலே இன்னும் என்னென்ன
நடைபெறப் போகிறதோ, அவைகளைக் கூர்ந்து நாம் கவனிக்க
வேண்டும். அதன் பிறகுதான் சொல்ல முடியும்.

ஆனால் இங்கே பேசிய உறுப்பினர் ஒருவர் சொன்னார்
இதற்கு முன்னாலேயிருந்த அரசு தொழிலாளர்களைக் கவனிக்க
வில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார். நான் அதற்கு

பதில் சொல்ல விரும்பவில்லை என்றாலும் ஒரேஒரு கருத்தை மட்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதிகாரிகளை பொறுத்தவரையில், ஆட்சியில் இருப்பவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து தான், லேபர் ஆபிசரிலிருந்து கமிஷனர் வரையில், ஆட்சியில் இருப்பவர்கள் எந்த வகையில் விரும்புகிறார்களோ, அதற்கேற்ற வகையிலே அந்த அதிகாரிகள் நடந்து கொள்வார்களே தவிர, அவர்கள் தானே, தனித்தன்மையோடு இயங்குவது கிடையாது. இன்றைக்கு தொழிலாளர்களுக்கு சாதகமாக இருப்போம் என்று தெரிந்தால், மாவட்டத்திலே இருக்கிற லேபர் ஆபிசர் கூட முதலாளிகளை விரட்டுகிற அளவிற்கு நடந்து கொள்வார். நமக்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறது, அரசு நம்மை பாதுகாக்கும் என்ற உணர்வோடு, அவர்கள் எந்த முதலாளியாக இருந்தாலும், எப்பேர்ப்பட்ட முதலாளியாக இருந்தாலும், அவர்களை எதிர்த்துப் பேசுகிற தைரியம் அந்த லேபர் ஆபிசருக்கு வரும். ஆனால் அதே நிலையில் ஆட்சியிலே இருக்கின்றவர்கள் முதலாளிக்கு சாதகமாக இருப்பார்கள் என்று தெரிந்தால் லேபர் ஆபிசர், லேபர் ஆபிசர் என்ற பெயரிலிருந்து கன்சில்யேஷன் ஆபிசராக மாறி, இரண்டு பேருக்கும் காப்பி வாங்கி கொடுத்துக் கொண்டு, எப்படியாவது என்னை விட்டால் போதும் என்ற அளவிற்கு நான் மேலதிகாரிகளுக்கு அனுப்பிவிடுகிறேன் கமிஷனரிடத்திலே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்கின்ற நிலை வரும். அதேபோன்று கமிஷனர், ஆட்சி எப்படி இருக்கிறது என்று கூர்ந்து கவனித்துக் கொண்டு இருப்பார். மந்திரி எப்படி இருக்கிறார், முதலமைச்சர் எப்படி இருக்கிறார், ஆதரவாக இருப்பாரா, எதிர்ப்பாரா என்று தெரிந்து, எந்தெந்த தொழிலோடு அவர் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார் என்று பார்த்து, அவருக்கு ஏற்ற வகையிலேதான் அந்தக் கமிஷனர் பேசுகிற நிலை வரும். நான் பல்வேறு கமிஷனர்களை பார்த்திருக்கிறேன். ஒரு கமிஷனர் ஒரு காலத்திலே முதலாளிகளை எழுந்து வெளியே போங்கள் என்று சொல்கின்ற அளவிற்கு ஒரு கமிஷனரை எனக்குத் தெரியும். (குறுக்கீடு)

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகாரிகளின் சில நடைமுறைகளைப் பற்றிச் சொல்கிறார்கள். இது கடந்த கால ஆட்சியிலே அப்படித் தான் நடந்ததா என்பதை உங்கள் மூலமாக நான் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சை நான் ஒரு முறைப்படுத்திப் பேச வேண்டுமென்று ஆரம்பித்தேன். ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னை பழைய நிலைக்கு அழைத்துக்கொண்டு



போகிறார். நான் இங்கே சொலலிக் கொள்வதற்குக் காரணம், பழைய ஆட்சியைப் பற்றிக் கேட்கின்ற காரணத்தாலே நான் சொல்கிறேன். அன்றைக்கு முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவர், எம். ஜி. ஆர். அவர்கள் தொழிலாளர்கள் எந்த வகையிலே பாதிக்கப்பட்டார்கள் என்று தெரிந்தால், அவர்கள் எப்பேர்ப் பட்டவர்களாக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற உணர்வோடு இருந்தார். அதேபோன்று அவர்களுக்கு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், தொழிற்சங்கத் தலைவர்களை கேட்டுப் பாருங்கள். அன்றைக்கு நீண்டகாலமாக தொழிலாளர் நல அமைச்சராக இருந்த திரு. இராகவானந்தம் அவர்கள் தொழிலாளர் தலைவர் என்ற நிலையிலேதான் அந்த அமைச்சர் பதவியிலே இருந்தாரே தவிர, தன்னை ஒரு தொழிலாளி என்ற நிலையிலேதான் நினைத்திருந்தாரே தவிர, வேறு நிலைக்கு அவர் போனதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டதனாலே நான் சொல்கிறேன். நீங்களும் தொழிலாளரோடு கொஞ்சம் தொடர்பு வைத்துக் கொண்டு நீங்களும் தொழிற்சங்கத் தலைவராக வரவேண்டும் என்ற உணர்வோடு நீங்கள் நடந்து கொள்வீர்களேயானால், தொழிற் சாலைகளை நடத்துகின்ற முதலாளிகள், தொழிலாளிகளை பரிவோடு கவனிப்பார்கள். அமைச்சரிடத்திலே பேசப்போனால், அமைச்சர் தொழிலாளிகளுக்காகப் பேசுவார் என்ற நிலையை நீங்கள் உருவாக்கிக் காட்டவேண்டும். எந்த நிலையிலும் எப்பேர்ப்பட்ட முதலாளிகளாக இருந்தாலும், அவர்கள் உங்களிடத்திலே வருகின்ற நேரத்தில், நீங்கள் தொழிலாளி களுக்காகத் தான் பேசுவீர்கள் என்ற நிலையை எடுப்பீர்களே யானால், நான் நிச்சயமாகச் சொல்வேன், தொழிலாளிகளுக்கு தமிழ்நாட்டில் பல்வேறு நல்ல காரியங்கள் நடக்க ஆரம்பிக்கும். இந்த நிலையை நீங்கள் உருவாக்கிக் காட்டவேண்டும். எதிர் காலத்தில் நீங்கள் அப்படிப்பட்ட நிலையை எடுத்துக் காட்டுவீர் களேயானால், நிச்சயமாக தொழிலாளர்களுக்கு எந்தவகையிலே உதவியாக இருப்பீர்களோ, அந்த வகையிலே நீங்கள் பாராட்டப் படுவீர்கள். நீங்கள் முதலாளிகளுக்குத் துணை போக ஆரம்பிப் பீர்களேயானால், நான் நிச்சயமாகச் சொல்கிறேன். நீங்கள் எந்த இடத்திலே இருந்தாலும், உங்களை கண்டிக்க வேண்டி யிருக்குமே தவிர, பாராட்டுகிற நிலைமை வராது. அதை நான் தெரிவித்துக் கொள்வதற்குக் காரணம், அன்றைக்கு திராவிடர் இயக்கத்தைப் பொறுத்தவரையில், இந்த தொழிற்சங்க இயக்கத்தில் நாங்கள் ஈடுபட்ட நேரத்தை நினைத்துப் பார்க்கிற நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் தொழிலாளர் இயக்கத்திலே, நான் தொழிற்சங்கத் தலைவராகச் சேரவேண்டு மென்று சொன்ன நேரத்திலே எல்லாம் பேரறிஞர் அண்ணா எங்களை எப்படி எல்லாம் நடத்தினார் என்பது எனக்குத் தெரியும். அதற்குப் பின்னர், என்னைப் போன்றவர்கள், தொழிற்சங்க இயக்கத்திலே ஈடுபட்டு, தொழிற்சங்கத் தலைவர் களாக நாங்கள் உருவான நேரத்தில், எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, இன்றைக்கு வளர்ந்திருக்கிறதே, அந்தப் பேரவை வளர்வதற்கு எப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம்

செய்திருக்கிறோம் என்பது பல பேருக்குத் தெரியாது. ஆனால் ஒன்றை நான் சொல்லவேண்டும். இன்றைக்கு வளர்ந்திருக்கிற அந்தப் பேரவைக்கு உயிர் கொடுத்தவர் பிரதாப் சந்தர். அவர்கள் இன்றைக்கு மறைந்துவிட்டார். கொலை செய்யப் பட்டார் என்றால் தொழிலாளர்களிடத்திலே இருந்த விரோதத்தின் காரணமாக கட்சிமாச்சரியத்தின் காரணமாக, பிரதாப் சந்தர் அன்றைக்குக் கொலை செய்யப்பட்டார். அப்படி கொலை செய்யப்பட்ட பிரதாப் சந்தருடைய ரத்தத்திலேயிருந்து ஆரம்பித்துத் தான் அன்றைக்கு பேரவை கட்ட ஆரம்பித்தோம். இன்றைக்கு அது வளர்ந்திருக்கிறது. தொழிலாளர் நலனுக்கு நாங்களும் போராடுகிறோம் என்ற நிலை வந்திருக்கிற நிலையிலே கூட, நான் சொல்வேன். எனக்கு இருக்கின்ற மகிழ்ச்சி அந்தக் காலத்திலே தொழிற்சங்க இயக்கத்திலே ஒருவருக்கொருவர் சண்டை போட்டு போராடிக் கொண்டிருந்த காலம் இருந்தது. ஆனால் இன்றைக்கு அது மாறி தொழிலாளர்களுக்காக எந்த நிலையிலும் யாரும் சேர்ந்து கொள்ளலாம் என்ற நிலையில், எந்தப் போராட்டமாக இருந்தாலும், இன்றைக்கு தொழிலாளர் மத்தியிலே ஒன்று சேர்கிற உணர்வு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற அளவில், அது தொழிலாளர் தலைமையில்தான் நடைபெற வேண்டும் என்ற நிலை இன்றைக்கு தொழிலாளர்கள் மத்தியிலே அதிகமான அளவிற்கு கருத்து ஏற்பட்டிருக்கிறது. அதனாலே இன்றைக்கு பிரச்சினைகள் எந்த அளவிற்கு இருக்கின்றன என்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இங்கே சொன்னார்கள். மூடிக் கிடக்கின்ற ஆலைகள், தொழிற்சாலைகள், பல்வேறு நிறுவனங் களில் நீங்கள் செய்திருக்கிற காரியங்களை எல்லாம் இங்கே பேச ஆரம்பித்தார்கள்.

நான் அப்படி எல்லாம் மூடி வைத்திருக்கிற ஆலைகளை ஆட்சிக்கு வந்த மறுநாள் காலையிலே திறந்து விட முடியும் என்று நம்பவில்லை. அதிலே இருக்கிற கஷ்ட நஷ்டம் என்ன என்பது எனக்குத் தெரியும். முதலாளிகள் எப்படி எல்லாம் ஆட்சியை ஏமாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்பதும், எவ்வளவு வழி முறைகளைக் கையாளுவார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். நம்மை, கட்சியிலே இருக்கின்றவர்களையே பிரித்து வைப்பார்கள். ஆளும் கட்சியிலே இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்களானாலும் சரி, முதலாளிகள் பிரித்து வைத்து அவர்களுடைய தந்திரங்களை கையாண்டு அவர்களுடைய நிலைமைகளை காப்பாற்றுவதற்கு பார்ப்பார்களே தவிர அவர்களுக்கு தொழிலாளிகளைப் பற்றிக் கவலை இல்லை. ஆட்சியைப் பற்றிக் கவலை இல்லை.

இங்கே இருக்கிற ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் எத்தனை நாள் மூடிக் கிடக்கிறது. மூடிக்கிடக்கின்ற அந்த தொழிற்சாலையை இன்றைக்கு திறக்க முடியுமா ? சென்னையிலே இருக்கிற ஒரே ஒரு தொழிற்சாலை அது ஒன்றுதான். இன்றைக்கு அந்த தொழிற் சாலையை திறக்க முடியவில்லை. ஆனால் இன்றைக்கு



நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். முதலாளிகளோடு பேசிக் கொண்டிருக்கிறோம். சமரசத்திற்கு அழைக்கிறோம். எத்தனையோ காரியங்கள் நடைபெறுகின்றன. ஆனால் திறக்க முடியவில்லை. அரசாங்கத்திற்கு இருக்கிற அதிகாரம் அவ்வளவு தான். அதனால் நான் ஆட்சி மீது குறை சொல்லி, எதற்கு நீங்கள் ஆட்சியை வைத்திருக்கிறீர்கள்? திறக்கக் கூடாதா என்றால் கேட் கதவைக் கூட திறக்க முடியாது. தொழி லாளர்களை வெளியே உட்கார வைத்துக் கொண்டு கதவை மூடி விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தான் நாம் பார்க்க முடியும். ஆனால் தொழிலாளர்களுடைய நிலைமையிலே நாம் இன்றைக்கு பார்க்க வேண்டிய அடிப்படை ஒன்று இருக்கிறது. உற்பத்தி திறன் வளருகிற நேரத்தில் தொழிலைக் கவனிப்பதா, தொழிலாளர்களை கவனிப்பதா, என்று சொன்னால், தொழிலும் தொழிலாளர்களும் என்று வருகிற நேரத்தில், தொழிலை எந்த அளவுக்கு கவனிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோமோ அதே நிலையில் தொழிலாளர்களின் நலனையும் நாம் பாதுகாத்தாக வேண்டும். அப்படி பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால் உங்களுடைய கொள்கை குறிப்பிலே கொடுத்திருப்பதைப் போல விஞ்ஞான ரீதியான வளர்ச்சிகளுக்கு எந்த வகையிலே துணை செய்கிறீர்களோ அந்த வகையிலேதான், விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டால்தான் நிச்சயமாக தொழிலாளர் நலன் நல்ல முறையிலே வளரும்.

இன்றைக்கு தொழிலாளர் நலன் என்று சொல்கிற நேரத்தில் மூடிக் கிடக்கிற ஆலைகளுக்கு நாங்கள் உதவி செய்கிறோம் தொழிலாளர்களுக்கு நாங்கள் 250 ரூபாய் பணம் தந்து விட்டோம் என்று அமைச்சர் அவர்கள் மதுரையிலே ஒரு பெரிய விழா நடத்தி பணம் கொடுத்தார்கள். அந்தப் பணம் அரசாங்கத்தினுடைய பணத்திலே கொடுத்திருந்தால் முதலமைச் சருடைய நிதியிலேயிருந்து கொடுத்திருந்தால் நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஆனால் தொழிலாளர் நல வாரியத்திலே இருக்கிற பணத்தை எடுத்து — அவர்கள் 2 ரூபாய் 1 ரூபாய் என்று சேர்த்து வைத்திருக்கிற பணத்தை எடுத்து அவர்களுடைய பணத்தையே வைத்துக் கொண்டு ஒரு விழாவை நடத்தி நீங்கள் எடுத்துக் கொடுப்பதை விட, நான் பணிவோடு உங்களை வேண்டி கேட்டுக் கொள்வேன், முதலமைச்சர் நிதியிலிருந்து தாருங்கள் இல்லாவிட்டால், அரசாங்கத்தினுடைய நிதியிலிருந்து கூட கொடுக்கலாம். அதிலே எந்தத் தவறும் இல்லை. எனவே அந்த வகையிலே நாம் இதை அணுக வேண்டும்.

தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற விதத்தில் பல்வேறு தொழிலாளர்களைப் பற்றி நான் பேசிக் கொண்டு இருப்பேன். எனக்குத் தெரியும், பேரவைத் தலைவர் அவர்களால் எந்த நேரத்திலும் எனக்கு ஒரு ஆபத்து இருக்கும் என்ற பயத்தோடு நான் பேசிக் கொண்டிருக்கிறேன். எனவே நான் எல்லாத் தொழிலாளர்களைப் பற்றியும் பொறியியல்

தொழிலாளர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள், கரும்பாலை தொழிலாளர்கள் என்று நான் பேசிக் கொண்டிருந்தால் என்னுடைய நேரம் வீணாகி விடுமோ என்ற பயத்தோடு நான் என்னுடைய தொழிலுக்கு நான் சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு, நான் வாதாடிக் கொண்டிருக்கிற தொழிலாளர்களுக்கு என்ற நிலையிலே நான் பணிவோடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், நெசவுத் தொழிலாளர்களை கொஞ்சம் கவனியுங்கள். சட்டம் ஒன்று இருக்கிறது. அவ்வளவு தான் பெயருக்கு இருக்கிறது.

இன்றைக்கு நெசவாளர்களுடைய நிலைமை என்ன என்று தெரியுமா? நூல் விலை ஏறி எந்த அளவுக்கு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் தெரியுமா? மதுரையிலே இருக்கிற நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு சாப்பாட்டுக்கு இல்லாத அளவுக்கு கஷ்டப்படுகிற அளவுக்கு நிலைமை வந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதனால் பாதிக்கப்படுகிறார்கள், நானும் பாதிக்கப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) பரமக்குடியும் சேர்த்து பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த நெசவுத் தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய அந்தப் பணி இருக்கிறது. அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு பாருங்கள் 80 ஆம் நம்பர் நூல், டிசம்பர் மாதத்திலே 460 ரூபாய் விற்ற நூல் இன்றைக்கு 600 ரூபாய் ஆகிவிட்டது. அதேபோல 60 ஆம் நெம்பர் நூல் வெறும் 320 ரூபாய் இருந்தது 400 ரூபாய்க்கு விலை ஏறிவிட்டது. அவைகள் எல்லாம் ஏறிக் கொண்டே போகின்றன. மில் முதலாளிகளை யாராலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அவர்களுக்கு வானளாவிய அதிகாரம் இருக்கிறது. எவனும் கேட்க முடியாது என்ற அளவுக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்களும் சபாநாயகர்களா ? (சிரிப்பு)

**திரு. எஸ். ஆர். இராதா :** அவர்களும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமைகளிலே அவர்கள் சபாநாயகர்கள்தாம். எங்களை யார் கேட்க முடியும் என்ற நிலையில் இருக்கிறார்கள். (குறுக்கீடு) சபாநாயகரை விட மேலே என்று சொல்லுகிறார்கள். அதை நான் ஒத்துக் கொள்கிறேன். அவர்களையும் தாண்டி மேலே மேலே போய்க் கொண்டேயிருக்கிறார்கள். எனவே அவர்களைக் கொஞ்சம் கீழே இறக்கிக் கொண்டு வந்து, தொழிலாளர் நலன் என்ற முறையிலே் நீங்கள் செய்ய வேண்டும். நீங்கள் எல்லாவற்றிலும் அக்கறை காட்டலாம். கைத்தறித் துறைதானே அந்தத் தொழிலாளர்களை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்றால் நிச்சயமாக நான் சொல்வேன். தொழிலாளர்கள் என்று பார்க்கிற நேரத்தில் நீங்கள் எல்லாப் பிரச்சினைகளிலும் தலையிடுவதில்லை



(பிற்பகல் 1-40)

எனவே அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த நெசவுத் தொழிலாளிகளுடைய நிலைகளை நீங்கள் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பீடித் தொழிலாளர்களுக்காக வீடு கட்டியிருக்கிறோம் என்ற ஒன்றைப் போட்டு 500 ரூபாய் அரசாங்கம் தருகிறது. 500 ரூபாயிலே வீடு கட்டுகிறோம். மத்திய அரசு மானியம் 50 சதவீதம். மத்திய அரசு மானியத்திலே கட்டப்பட்ட வீடுகள் என்று கொள்கை குறிப்பிலே பார்த்தால் மிக மிக அதிகமான வீடுகள் எண்ணிக்கையிலே பார்த்தால் பீடித் தொழிலாளர்கள் முழுவதுமே அந்த வீட்டிலே குடியிருந்து வாழ்க்கையை முடித்து விடலாம் போல் இருக்கிறது. கொள்கை குறிப்பிலே 150 வீடுகள் கட்டியிருக்கிறார்கள் என்றிருக்கிறது. நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது இந்த நிலைகளை நீடிக்க விடாதீர்கள். அதிகாரிகள் எல்லோரையும் ஏமாற்றுவார்கள். அரசியல்வாதிகளுக்குள்ளேயே சண்டையை உண்டாக்கி விட்டு அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பார்த்துக் கொள்வார்கள். எனவே நீங்கள் விரட்டி வேலை வாங்க வேண்டும் என்று சொன்னால் எவ்வளவு அதிகமாக வீடுகளைக் கட்ட முடியுமோ அந்த அளவிற்கு இந்த மானியம் கிடைக்கின்ற காலத்திலாவது வீடுகள் கட்டுவதற்கு நீங்கள் முயன்று வேகமாக அந்தப் பணியை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுகொள்வேன். இன்னொன்று இந்த கொள்கை குறிப்பிலே இருக்கிறது. தொழிலாளர் கல்வி என்று போட்டு அதிலே பட்டப்படிப்பிற்காக வழி செய்திருக்கிறோம் என்று தெரிவித்து இருக்கிறீர்கள். இன்னும் இந்த பட்டப் படிப்பு நீண்ட நாளைக்கு முன்னாலே போடப்பட்டு அதே நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. மு. இராமநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய பேச்சிலே குறிக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அதிகாரிகள் எல்லோருமே ஏமாற்றுவார்கள் என்று பொதுவாக சொல்வது ஒரு அரசாங்கத்தில் இருக்கக் கூடிய ஒட்டு மொத்தமான அதிகாரிகளையே சந்தேகிப்பதாக வந்துவிடும் ஆகவே குறிப்பாக அதிகாரிகளிலே சிலர் என்று சொன்னால் கூட அதை ஏற்றுக் கொள்ளலாமே தவிர பொதுவாக அதிகாரிகள் எல்லோரையும் ஏமாற்றுவார்கள் என்ற பதம் இருப்பது அரசுக்கும் நல்லதல்ல. அது இந்த சபையின் மரபுக்கும் ஏற்றதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ''சிலர்'' என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லது ''பலர்'' என்றும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் ''இலர்'' என்பது எப்போதும் கிடையாது. (சிரிப்பு)

**திரு. எஸ். ஆர். இராதா :** திரு. இராமநாதன் அவர்கள் என்னுடைய பழைய நீண்ட நெடுங்கால நண்பர். அவர்கள் சொல்லுகின்ற காரணத்தினாலே நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் சொன்னது இந்த பீடி தொழிலாளர்களுக்கு வீடு

கட்டுவதற்கு 150 வீடுகள் கட்டுகின்ற அளவிற்குத்தான் இருக்
கின்றார்கள் என்ற சூழ்நிலை இருப்பதைச் சுட்டிக் காட்டுவதற்
காகத்தான் சொன்னேன். எல்லா அதிகாரிகளும் ஏமாற்று
வார்கள் என்ற நிலையிலே நான் இல்லை. நல்ல அதிகாரிகள்
இருக்கிறார்கள். வேகமாக பணி செய்கின்ற அதிகாரிகள் இருக்
கின்றார்கள். தொழிலாளர்களுக்காகவே வாழ்ந்து கொண்டு
இருக்கின்ற அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று எனக்குத்
தெரியும். ஆனால் சில அதிகாரிகள் முதலாளிகளுக்கு சாதகமாக
இருந்து கொண்டு எல்லா காரியமும் முதலாளிகளுக்குச்
சொல்லிக் கொண்டு இங்கே வேலை போகும்போது 57வது
வயதில் இன்னொரு பாக்டரியில் லேபர் ஆபீசராக ஆவதற்கு
தயாராகிக் கொண்டு வேலையும் வாங்கி வைத்துக் கொண்டு,
அதற்கு பணியாற்றிக் கொண்டு இருக்கின்ற அதிகாரிகளும் இருக்
கிறார்கள். எனவே அவர்களைப் பற்றி நம் கவலை அல்ல.
பட்டப் படிப்பு பற்றி நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன். பல்வேறு படிப்புகளை நீங்கள் கல்வித் துறையிலே
தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகளை உருவாக்கு
வதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அமைச்சர் அவர்களும்
முயற்சி எடுக்க வேண்டும்.

பழைய காலத்திலே பி. எல். எம். எம்., எம். எல். எம் எம்.
என்று இருக்கிறது. அதே போல இன்றும் பல்வேறு துறைகளிலே
இன்றைக்கு வளர்ந்து வருகின்ற கல்வித் துறையில், தொழிலாளர்
கல்வியை வளர்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. தொழி
லாளர்களுக்கு எந்த அளவிற்கு கல்வியைக் கொடுக்கின்றோமோ,
அவர்களை கல்வித் துறையிலே எந்த அளவிற்கு நாம் பயிற்றுவிக்
கின்றோமோ அந்த அளவிற்கு தொழில் துறை அமைதி பெறவும்,
தொழிலாளர்கள் அமைதி பெறவும் அவர்களுடைய வாழ்க்கைத்
தரம் முன்னேறவும் பல்வேறு வகையிலே ஒரு நல்ல நிலை வரும்.
உதாரணத்திற்கு இன்றைக்கு பெரிய பொறியியல் கல்லூரியை
ஈரோட்டிலே ஆரம்பித்தார்கள். அது போல பல்வேறு தொழிற்
சாலைகள் இருக்கின்றன. அவர் அவர்களுக்கு அந்த தொழிலில்
இருக்கின்ற கல்லூரிகளுக்கு அவர் அவர்களுக்கு பள்ளிப்
படிப்புகள் என்ற அளவிற்கு அந்தத் தொழிலோடு இணைந்து
இருக்கின்ற கல்விகளை நீங்கள் ஆரம்பிக்கலாம். உடனே சுயநிதி
கல்வி என்று சொன்னால் பயந்து அதிலே ஏதோ தவறுகள்
நடக்கின்றன என்பதனால் அதை அனுமதிக்க மாட்டோம் என்று
இருக்க வேண்டியதில்லை. அரசாங்கத்தினுடைய நிறுவனத்
திலிருந்து கூட செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.
எனவே அந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்துங்கள்.
இன்னொன்று சொல்வேன். நுகர்வோர் பாதுகாப்பு என்று ஒரு
தரப்பிலே பல்வேறு விவரம் போட்டிருக்கிறீர்கள். அதேபோல்
பெரிய பிரச்சினை. இன்றைக்கு எடை பார்க்கிறவர்கள் எல்லா
ஊர்களிலும் இருக்கிறார்கள். அவர்கள் யார் எடையை பார்க்
கிறார்களோ, இல்லையோ எனக்குத் தெரியாது. எடை
எப்படியும் போய்க் கொண்டு தான் இருக்கிறது. நான் ஒன்றைத்



தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து வருத்தப்படக் கூடாது. இன்றைக்கு இந்த எடை பார்க்கின்ற அதிகாரிகள் எப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள் என்பதை நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குப் பல்வேறு நிலையிலே ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களை தடுக்கின்ற அளவிற்கு இந்த எடை அதிகாரிகள் தான் அவர்களை கண்காணிக்க வேண்டும். அவர்கள் கண்காணிக்கிறார்களா இல்லையா என்பதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு நிலையிலும் ஏமாற்றுகிறார்கள் என்று சொன்னால்—ஒரு காலத்திலே நடந்தது என் நினைவுக்கு வருகிறது. மதியழகன் அவர்கள் அமைச்சராக இருந்த போது ஒன்று சொன்னார். வணிக வரி ஏமாற்றுகிறான் என்று சொன்னால் மக்களிடமிருந்து வரியை வாங்கிவிட்டு அரசாங்கத்திற்குத் தருகிறேன் என்று இடையிலே இருக்கின்ற வணிகன் ஏமாற்றுகிறான் என்று சொன்னால், திருட்டுக் குற்றத்திலே அவனுக்கு கேஸ் போட வேண்டும் என்று சொன்னார்.

அதேபோல், இன்றைக்குப் பார்த்தால் 4 கிலோ தருகிறேன், 5 கிலோ தருகிறேன் என்று சொல்லிவிட்டு, 2 கிலோ, 3 கிலோ கொடுத்து ஏமாற்றுகிறார்கள் என்று சொன்னால், அதுவே பெரிய தவறு. எனவே அந்தத் தவறுகளை நாம் கண்டிக்க வேண்டும். நான் அதற்கு உதாரணத்திற்கு எங்களுடைய தொழிற்சங்கப் பேரவையிலே இருந்து ஒரு பெரிய சர்வே ஒன்று நடத்த வேண்டும் என்று சொல்லி சமீபத்திலே ஒரு சர்வே நடத்தினோம். அதிலே ஏறத்தாழ 640 கடைகளிலே அந்த சர்வே நடை பெற்றது. எவ்வளவு தருகிறார்கள் என்று நம்முடைய தொழிற் சங்கத் தோழர்களை வைத்துக் கணக்குப் பார்க்கச் சொன்னோம்.

நான் அதைப் பார்த்த நேரத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள், பல்வேறு தவறுகள் நடைபெற்றன. நான் அதைச் சொல்வதற்குக் காரணம், நீங்கள் யாரும் வருத்தப்படக் கூடாது. நீங்கள் வருத்தப்பட மாட்டீர்கள் என்பதற்காக நான் சொல்கிறேன். அதைத் திருத்துவதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். சமீப காலத்திலே நீங்கள் கொடுத்து இருக்கிற இலவச அரிசி இருக்கிறதே, பல்வேறு இடங்களிலே தவறாகக் கொடுக்கப்பட்டு, $3\frac{1}{2}$ கிலோ, 4 கிலோ, $4\frac{1}{2}$ கிலோ என்ற அளவுக்கு அரிசி கொடுத்ததிலே தவறுகள் நடந்து விட்டது, அந்தத் தவறு யார் தலையிலே விடிகிறது என்று சொன்னால், அரசினுடைய தலையில்தான் விடியும். பல்வேறு அதிகாரிகளுக்கும் சொன்னோம். தொழிற்சங்கத்திலிருந்து எழுதிக் கொடுத்தோம். இன்றைக்கு அரிசி கொடுக்கிறார்கள். 5 கிலோ அரிசி சரியாக இருக்கிறதா என்று பாருங்கள் என்று சொன்னோம். எங்களுடைய தொழிற்சங்கத்திலிருந்து 640 பேருடைய அரிசியை வாங்கி அளந்து பார்க்கும் போது எவ்வளவு குறைந்தது என்றால் 2 கிலோவிலிருந்து அரைக் கிலோ

வரை குறைத்துக்கொடுத்தார்கள். இப்படிப் பார்த்தால் ஏறத்தாழ 30 இலட்சம் பேருக்குக் கொடுத்திருக்கிற அரிசியிலே மட்டும் 9 கோடி ரூபாயை யாரோ சாப்பிட்டு விட்டார்கள். எனவே, இந்த நிலைமைகளை நாம் அனுமதிப்பது என்பது நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. எனவே இதை நீங்கள் அனுமதிக்கக் கூடாது என்று உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடைசியாக, நீங்கள் நேரத்தைக் காரணத்தாலே ப்போது தொழிலாளர் துறையை விட்டுவிட்டு, நான் அடுத்த பிரச்சினை, இங்கே செய்தி—சுற்றுலா சேர்ந்து வந்திருக்கிற காரணத்தாலே ஒன்றைச் சொல்கிறேன். இந்தத் தொழிலாளரோடு செய்தி—சுற்றுலா வந்து விட்டதனாலே நான் இங்கே ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு செய்தித் துறையிலிருந்து ஒரு நடராசன் பழி வாங்கப்பட்டார். நீங்கள் ஒரு தொழிலாளர் என்ற முறையிலே அணுகிப் பாருங்கள். வேலையை விட்டு ராஜினாமா செய்கிறேன் என்று சொன்னால், ராஜினாமாவை ஏற்றுக் கொள்கிறேன் இல்லை, முடியாது என்று சொல்லி அனுப்பலாமே தவிர, அரசு காரணத்திற்காக, அரசியல் காரணத்திற்காக பழி வாங்குகிற நடவடிக்கை இருக்கிறதே, நிச்சயமாக அது எந்த ஆட்சியாக இருந்தாலும் தவறு தவறு தான். அந்த நிலையை நீங்கள் உருவாக்கக் கூடாது. ஒரு தொழிலாளர் வேலை செய்கிறான், வேலையை விட்டு நான் போகிறேன் என்று சொன்னால் போக அனுமதிக்க வேண்டுமே தவிர, வேறு காரணங்களைக் காட்டி அவனை பழி வாங்குவோம் என்ற முயற்சிகளில் ஈடுபடுவீர் களானால் நிச்சயமாக எதிர்காலம் ஒரு பாதிப்பான சூழ்நிலையை உண்டாக்கும் என்பதை மட்டும் நீங்கள் நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள்.

இன்றைக்கு அதே போல் பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்தால், வேண்டாத பத்திரிகை, வேண்டிய பத்திரிகை என்று நினைத்த நேரத்திலே ஏதோ துக்ளக் தர்பார் மாதிரி நினைத்தால் இன்றைக்குப் பத்திரிகை விளம்பரம் வரும். நாளைக்குக் காலையிலே கிடையாது என்று சொல்கிற நிலை இருக்கிறதே, அது என்றைக்கும் நீண்ட நெடுங்காலமாக வந்து கொண்டிருக் கிறது. அதனாலே நாங்களும் செய்கிறோம் என்று சொன்னால், அப்போது செய்தார்கள், நாங்களும் இப்போது செய்து கொள் கிறோம், பழி தீர்த்துக் கொள்கிறோம் என்ற அளவுக்கு வருகிற நிலை வருமே தவிர, நீங்கள் அதிலே நியாயத்தைக் கடைபிடிக் கிறீர்கள் என்று நிலைநிறுத்த வேண்டுமே தவிர, எங்களுக்கு வேண்டிய பத்திரிகை, வேண்டாத பத்திரிக்கை என்று வரக் கூடாது. அதிலேயும் அமைச்சர் ஒரு பத்திரிகை நடத்தி, அதிலேயே புகழ் பெற்றவர் என்ற நிலையிலே இருக்கிற காரணத்தாலே நான் சொல்கிறேன். நீங்கள் அந்த நிலையிலே யிருந்து மாறிவிடாதீர்கள். நீங்கள் பாதிக்கப்பட்டு இருக் கலாம்.... ..



மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அந்தச் செய்தித் துறையினுடைய அமைச்சர் அல்ல என்பதை இங்கே தெளிவாக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுற்றுலா கூடே கலந்து வந்து விட்டது? (சிரிப்பு).

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னதற்காக நன்றி. நான் சொன்னதற்கு அடிப்படைக் காரணம் அவருக்கு அனுபவம் இருக்கிறது. அந்தத் துறையிலே அவர் அனுபவம் பெற்றவர், அவர் பாதிக்கப்பட்டு இருக்கிறார் என்று எத்தனை தடவை, பத்திரிகையிலே எழுதி இருக்கிறார் என்பதை நானே பார்த்து இருக்கிறேன். அதனாலே அவர் அமைச்சரிடத்திலே சொல்கிற தகுதி படைத்தவர். இன்றைக்குச் சேர்ந்து உட்கார்ந்து இருக்கிறீர்கள். அதனாலே சேர்ந்து சொல்லலாம். இன்றைக்கு தினமணிப் பத்திரிகைக்கோ வேறு பத்திரிகைக்கோ நீங்கள் பேப்பருக்கு வருகிற விளம்பரத்தை நிறுத்துவதனாலே அவர்கள் பாதிக்கப்பட்டு விடுவார்களா என்றால் பாதிக்கப்பட மாட்டார்கள். அவர்களை நீங்கள் ஒரு அச்சுறுத்தலுக்காக அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வளவுதான். பயப்படுகிறவன் தான் பயப்படுவானே தவிர, எல்லோருமே பயப்படுவான் என்று எதிர்பார்க்க முடியாது. நிமிர்ந்து நின்று நீ நான் என்ன செய்கிறேன் என்று பார்க்கிற அள விற்கு நிமிர்ந்து நிற்கிற அளவிற்கு நிலைமை வந்துவிடுமானால், நிச்சயமாக நான் சொல்கிறேன், அது உங்களுக்குப் பாதகமாகத் தான் அமையும். எனவே, அந்தத் துறையிலே விளம்பரம் தருகிற நேரத்திலே கூட நீங்கள் நியாயத்தோடு, நேர்மையோடு நடந்து கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள் கிறேன்.

கடைசியாக நான் ஒன்றை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் உங்களோடு நான் பிரச்சினைக்குரியவனாக ஆகக்கூடாது என்பதிலே நான் பயந் திருக்கிறேன். எனவே, ஒரே ஒரு பிரச்சினையை மட்டும் தெரி வித்துக் கொள்கிறேன். இன்றைக்குத் தொழிலாளர்கள் பாதிக்கிற நேரத்தில் நான் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

மதுரையிலே திருப்பரங்குன்றம் தொகுதியிலே சாயத் தொழி லாளர் பேக்டரி ஒன்று இருந்தது. அந்தத் தொழிலாளருடைய பேக்டரியை, மதுரையிலே இருக்கிற சில பேர்—யார் என்று நான் சொல்ல வேண்டாம், சொல்லக் கூடாது. ஏன் என்றால் அது

(பிற்பகல் 1-50)

அரசியல் காரணத்திற்காக சொல்வேன் என்று ஆகிவிடக் கூடாது நான் சொல்கிறேன். ஒரே நாள் இரவில் சாயத் தொழிற்சாலை முழுவதையும் அடித்து உடைத்து இருக்கிறார்கள். இது மதுரையில் இன்றைக்கு சாதாரணமாக ஏதோ அடித்து விரட்டுவது என்பது அதற்கு என்று தனியாக சில பேரை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதிலே எல்லா அரசியல் வாதிகளும் இருக்கிறார்கள். எந்தக் கட்சி என்று வித்தியாசம் பார்க்க வேண்டியது இல்லை. ஒவ்வொரு கட்சிக்கும் அதற்கென்று தனியாக ஆட்கள் வைத்து இருக்கிறார்கள். காலி செய்ய வேண்டுமானால் 10 ஆயிரம் ரூபாய் 20 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் ஒரே நாளில் காலி செய்து விடுகிறார்கள். அங்கே இருக்கிற போலீஸ் அதிகாரிகளும் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். நான் சொல்லுகிற இந்த சாயத் தொழிற்சாலை அங்கீகரிக்கப்பட்டு இருக்கிற சாயத் தொழிற்சாலை. வழக்கு மன்றத்தில் வழக்கு நடக்கிறது, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்திலேயே நீதிமன்றத்தில் தடை வாங்கியிருக்கிற நேரத்திலேயே சில அரசியல் வாதிகள் அதில் தலையிட்டு பணம் வாங்கிக் கொண்டு சில பேருடைய தூண்டுதலின் பேரில் ஒரே நாள் இரவில் அந்தத் தொழிற்சாலையை அடித்து உடைத்து இருக்கிறார்கள். 10 தொழிலாளர்கள் வேலையில்லாமல் வெளியே நின்று விட்டார்கள். வேலைக்கு உத்திரவாதம் இல்லை. சாப்பாட்டுக்கு வழியில்லை. அந்த முதலாளி ஒரே ஒரு வரியில் சொல்லிவிட்டார், நான் என்ன செய்ய முடியும் நீங்கள் யாரை பார்த்துக் கொள்ள முடியுமோ போய் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிற அளவுக்கு நிலைமை வந்து விட்டது. இது நடைபெற்று இருப்பது திருப்பரங்குன்றம் தொகுதி என்றாலும் நான் சுற்றி இருக்கிற 3 தொகுதியில் இருக்கிறேன் என்ற முறையில் அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரைக்கு வருகிற நேரத்தில் கவனித்து இதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு சபாநாயகர் அவர்களிடத்தில் நல்ல பெயர் எடுக்கும் வகையில் என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு என்றைக்கும் என்னுடைய வாழ்த்துக்கள் உண்டு. அடுத்து பதிலுரை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்.

**திரு. கே. ரமணி:** பாயின்ட் ஆப் ஆர்டர். நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் பேசும் போது ஒரு தொழிற்சாலையை அடித்து உடைப்பதற்கு எல்லோருமாக சேர்ந்து அதில் அரசியல் கட்சிகள் பேதம் இல்லை. அத்தனை கட்சிகளும் அதிலே சேர்ந்து அதற்காக நூற்றுக் கணக்கில் ஆட்களை வைத்து இருக்கிறார்கள், அடித்து உடைக்கிற



வேலைக்கு, அப்படிப்பட்ட நடவடிக்கை அங்கே நடந்து இருக்கிறது என்று அவர் சொல்கிறார், அங்கே என்ன நடந்தது என்று நமக்கு தெரியாது. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் நான் தெளிவாக சொல்ல முடியும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான ஆட்களை வைத்து தொழிற்சாலையை அடித்து உடைக்கக்கூடிய காரியத்தில் இல்லை. அதை நான் தெளிவாக சொல்கிறேன். அப்படி இருக்கிறது என்றால் அவர் ஆதாரத்தோடு காட்டினால் அந்த இடத்திலேயே நாங்கள் கூப்பிட்டு நடவடிக்கை எடுப்போம். அப்படிப்பட்ட ஏற்பாடு எங்கள் கட்சியில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ரமணி அவர்களுக்கு இதில் என்ன சந்தேகம் வந்தது என்று எனக்கு தெரியவில்லை. நான் எந்தக் கட்சியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடு) பொதுவாகச் சொன்னேன். நான் சொன்னது எல்லாக்கட்சிக்காரர்களும் அங்கே ஒன்றாக இருக்கிறார்கள். இந்த நிலையில் சிலபேர் ஒவ்வொரு குரூப் குரூப்பாக மதுரையில் பார்த்தால் வீட்டை காலி செய்வதற்கு பல பேர் இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் துணையாக இருக்கிறார்கள். நான் அதை விவாதத்திற்கு வைத்துக்கொள்ளவேண்டுமானால் யார் யாருக்கு துணை போனார்கள் என்ற பெரிய வரலாறே என்னிடம் இருக்கிறது. தயவுசெய்து நான் அதிலே கருத்து மாறுபாடு சொல்லவில்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பொதுவாகச் சொன்னீர்கள். அதில் ஒன்றும் தப்பு இல்லை. அவர்கள் கட்சியில் அப்படி இல்லை என்று சொல்லிவிட்டார். அதை நாம் ஏற்றுக் கொண்டோம். அதுபோல் ஒவ்வொரு கட்சியும் சொல்லி விட்டால் பிரச்சினை இல்லை. இதில் விளம்பரம் இல்லை.

***திரு. ஆர். அண்ணாநம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியிலும் அப்படி யாரும் இல்லை.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தொழிலாளர் துறை மானியத்திலேயும், அச்சகத் துறை மானியத்திலேயும், செய்தித்துறை மானியத்திலேயும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். நல்ல பயனுள்ள கருத்துக்களையும் அரசுக்கு ஆலோசனை வழங்குகின்ற கருத்துக்களையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். பயனுள்ள அரசுக்குத் தேவைப் படுகிற கருத்துக்கள் அனைத்தும் அரசால் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, எதிர்க்கட்சியில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்கள் ஆளுகின்ற கட்சியால்

[திரு பொன் முத்துராமலிங்கம்] [1989 ஏப்ரல் 20

ஏற்றுக்கொள்ளப்படுமா என்ற ஐயப்பாடு எந்த ஒரு மாண்புமிகு உறுப்பினருக்கும் தேவையில்லை. காரணம் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது இந்த அரசு. என்றைக்கும் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று கருதுகின்ற ஆட்சி தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் தமிழகத்தில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஜனநாயகத்திலே மாறுபட்ட கருத்துக்கள் எதிர்வரிசையிலே இருந்து வரக்கூடும் என்பதை தெளிவாக உணர்ந்துதான் இந்த ஆட்சியினுடைய நடவடிக்கைகள் இன்றைக்கு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலேதான் நல்ல மனமுள்ள ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்களை இந்த அரசு நிச்சயமாக வேறுபாடு கருதாமல் மாச்சரியங்கள் கற்பிக்காமல் ஏற்றுக் கொள்ளும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத் தொழிலாளர் துறையைப் பொறுத்தமட்டில் இந்த அரசினுடைய நிலை என்பது மிகத் தெளிவான ஒன்றாகும். தமிழ்நாட்டிலேயுள்ள அமைப்பு ரீதியாக உள்ள தொழிலாளர்கள் அமைப்புகள்அதற்கு அப்பாற்பட்டு ''அன்-ஆர்கனைஸ்டு'' என்கின்ற நிலையிலே உள்ள தொழிலாளர்கள் இந்த இரு சாராரையும் சட்டத்தின் துணை கொண்டு அவர்களின் உரிமைகளை எந்த அளவிற்கு பாதுகாக்க முடியும் என்கின்ற அந்த வினாவோடுதான் இந்த ஆட்சியின் நடவடிக்கைகள் அமையும் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். அத்தோடு ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புக்குட்பட்ட தொழிலாளர்களுக்காக இயற்றப்பட்ட சட்டங்கள் எந்த அளவிற்கு அமல்படுத்தப்படுகின்றன, உருவாக்கப் பட்டசட்டங்களின் பயன் யாருக்காக உருவாக்கப்பட்டிருக்கிறதோ அந்தத் தொழிலாளியின் கரங்களுக்கு உருவாக்கப்பட்ட சட்டத்தினுடைய பயன் எட்டுகிறதா என்பதை இந்த அரசு விழிப்போடு இருந்து கண்காணித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அமைப்புக்கு அப்பாற்பட்ட தொழிலாளர்கள், 'அன்—ஆர்கனைஸ்டு செக்டார்', இந்தத் தொழிலாளர்களுக்கு முறைப்படி படிப்படியாக அவர்களின் தொழில் நிலைமை கருதி அவர்களுக்கு சட்டப் பாதுகாப்பையும், பணிப் பாதுகாப்பையும் இந்த அரசு வழங்குகின்ற முயற்சியில் தொடர்ந்து ஈடுபடும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அமைப்புக்கு அப்பாற்பட்ட தொழிலாளர்களுடைய பணி நிலைமைகள், வாழ்க்கை நிலைமைகள் இவைகளையெல்லாம் பேணிப் பாதுகாப்பதற்கு, இவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்துவதற்கு பல்வேறு தொழிற்சங்கப் பிரிவுகளைச் சார்ந்த தலைவர்களும், தொழிற்சங்க நடவடிக்கைகளிலே அக்கறை கொண்ட மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துச்சொல்லுகின்ற நல்ல ஆலோசனைகள் அவ்வப்போது ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த



1989 ஏப்ரல் 20] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

நிலையில் இந்த அரசு தமிழ்நாட்டிலேயுள்ள தொழிலாளர்களை எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில் 1 கோடியே 9 இலட்சம் தொழிலாளர்களில் 10 இலட்சம் தொழிலாளர்கள்தான் அமைப்புக்குட்பட்டு ஆர்கனைஸ்டு லேபர் செக்டார் என்கின்ற வகையில் வருகிறார்கள். இந்த 10 இலட்சம் தொழிலாளர்கள் 16 ஆயிரத்து 818 நிறுவனங்களில் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது மூடிய ஆலைகளைப்பற்றியும் அந்த ஆலைகள் திறக்கப்படவேண்டுமென்பதைப்பற்றியும் அக்கறை காட்டிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய பதிலாக இந்த மாமன்றத்திலே தெரிவிப்பதெல்லாம் இன்றைக்கு 21நிறுவனங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற 13 ஆயிரத்து 227தொழிலாளர்கள் 21 ஆலைகள் மூடிய காரணத்தாலே வேலை இல்லாமல் இன்னல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு பொறுப்பு ஏற்ற பின்னால், இந்த அரசு பொறுப் பேற்று ஏறத்தாழ 3 மாத கால அவகாசம்தான் ஆகிறது. இந்த 3 மாத கால அவகாசத்தில், ஆட்சிக் கட்சியாக இந்தக் கட்சி, எங்களின் மாண்புமிகு முதலமைச்சர், தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் தொழிலாளர்களுக்கு என்ன நன்மைகளை, என்ன காரியங்களை செய்து இருக்கிறது என்று கேட்பதில் உங்களுக்கு உரிமை இருக்கிறது. அப்படி கேட்கின்ற நேரத்தில் நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்பதை கணக்கிட்டு சொல்லுகின்ற கடமை எங்களுக்கு இருக்கிறது.

(பிற்பகல் 2-00)

அந்த வகையிலே தான் இந்த மூன்று மாதக் காலத்தில் முத்தரப்பு மாநாட்டைக் கூட்டி இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின்னாலே நிறுவனத்தினர், தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அரசு அதிகாரிகள் இவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து மூடிய ஆலைகளைத் திறப்பதற்கான வழிவகைகளை அவர் துரிதப் படுத்த வேண்டுமென்று அரசின் சார்பாகக் கேட்டோம். அதைச் சொல்லி, இந்த முத்தரப்பு மாநாட்டைக் கூட்டியதற்கான காரணம் தொழிலாளர்களுக்கும் தொழில் நடத்துகின்ற நிர்வாகத்திற்கும் ஒரு இணக்கமான சூழ்நிலையை உருவாக்குவது ஒரு அரசினுடைய கடமை என்று இந்த அரசு தெளிவாக உணருகிறது. இந்த அரசு 'மியூச்சுவல் ட்ரஸ்ட் அன்ட் கான்பிடன்ஸ்' என்ற அடிப்படையில் ஆலை நிர்வாகியாக இருந்தாலும் ஆலையிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களாக இருந்தாலும் இருசாராரும் ஒருவருக்கொருவர் நம்பிக்கையோடு இருக்கக் கூடிய சூழ்நிலை உருவாகிவிட்டால் அந்த ஆலையில், அந்தத் தொழில் நிறுவனத்தில் வேலை நிறுத்தத்திற்கோ கதவடைப்புக்கோ வாய்ப்பு இல்லாத சூழ்நிலை எதிர்காலத்திலே உருவாகும் என்பதைக் கருதிதான் இந்த அரசு ஆரம்ப கட்டத்திலேயே முத்தரப்பு மாநாட்டைக் கூட்டி 'மியூச்சுவல் ட்ரஸ்ட் அன்ட் கான்பிடன்ஸ்' என்ற வகையில் இருதரப்பாருக்கும் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து மாநில, மாவட்ட தொழிலாளர் ஆலோசனைக் குழு ஸ்லாப் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்-அந்தக்குழுவைக்கூட்டி தொழிற்சங்க மைய பிரதிநிதிகளை எல்லாம் அழைத்து தமிழகத் தினுடைய தொழிலாளர்கள் நிலைமை, ஆலைகள் மூடியதன் காரணமாக வேலையை இழந்து தத்தளித்துக் கொண்டிருக்கிற தொழிலாளர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கின்ற வழிமுறைகள் இவைகளுக்கு எல்லாம் கட்சிமாச்சரியங்களை மறந்து தொழி லாளர் வர்க்கம் ஒன்றுதான்; தொழிலாளர்களுடைய உரிமை களை எந்தக் கட்சி எழுப்பினாலும் தொழிலாளர்களுடைய உரிமைகள் எல்லா நிலைகளிலும் ஒன்றாகத்தான் இருக்க முடியுமே தவிர மாறுபட்ட கட்சிகள் உரிமை கேட்கின்ற காரணத்தால் உரிமைகள் வேறுபடும் என்று யாரும் கருதத் தேவையில்லை. ஆகவே நீங்கள் எந்த இயக்கத்தில் இருந்தாலும் கூட,. பொதுவாக தொழிலாளர்கள் நலன் கருதி உங்களுடைய ஆலோசனைகளை வழங்கலாம் என்று கேட்டோம், அந்த அடிப்படையில் பல்வேறு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கட்சிமாச் சரியங்களை மறந்துவிட்டு கலந்து உரையாடினார்கள்; கருத்துக் களை வழங்கினார்கள். நல்ல ஆலோசனைகளை எல்லாம் அரசுக்கு வழங்கினார்கள். அவர்களுக்கு இந்த மன்றத்தின் மூலம் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மூடிய ஆலைகளைத் தி. ந்திட வேண்டும் என்பதற் காக அரசு தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது, அப்படி மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாகத்தான் கோவை யிலே நான்கு நூற்பாலைகள் திறக்கப்பட்டன. 4 நூற்பாலைகள் திறக்கப்பட்டன என்று அரசின் சார்பாக அறிக்கை விட்டாலும் மாண்புமிகு உறுப்பினர்—எனது ஞாபகம் சரியாக இருக்கு மானால்—மாண்புமிகு உறுப்பினர் அண்ணாநம்பி அவர்கள் அந்த ஆலைகள் திறக்கப்பட்டிருக்கின்றனவே தவிர பணி நடைபெற வில்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிப் பது எல்லாம் அந்த ஆலைகள் பல ஆண்டு காலமாக மூடிக் கிடந்த ஆலைகள். அந்த ஆலைகள் திறக்கப்பட்டவுடன் 'கிளீனிங் பிராஸஸ்' நடைபெற வேண்டும்; 'கிளீனிங் பிராஸஸ்' என்பது திறக்கப்பட்ட உடன் முதன் முதலாக நடை பெறுகின்ற பணியாகும். இந்தக் கிளீனிங் பிராஸஸ் நடை பெற்ற பின்னால்தான் உற்பத்தி ஆரம்பமாகும். அந்த உற்பத்தி நடைபெறுகின்ற கட்டத்தை அடைந்த பிறகு அரசின் சார்பாக எனக்குக் கிடைத்த தகவலைத் தெரிவித்தேன். இந்தக் கேள்வி கேட்கப்படும் என்பதற்காகவே நேற்றைய தினம் இதற்கு சரியான தகவல் என்ன என்று துறை மூலம் வினவிய நேரத்தில் துறை மூலமாக எனக்குத் தெரிவித்த தகவல் இந்த கிளீனிங் பிராஸஸ் நடந்துகொண்டிருக்கிறது: இன்னும் சில நாளில் உற்பத்தி தொடங்க இருக்கிறது என்பதாகும். மின் தடை காரணமாக சிலசில தடைகள் ஏற்படுகின்றன என்பதைத் தவிர இந்த ஆலைகள் முழுமையாகத் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாநம்பி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



அடுத்து மூடிய ஆலைகள் பல்லாண்டு காலமாகவே மூடிக் கிடக்கின்றன. எந்தவிதமான நம்பிக்கையும் அவர்களுக்கு இல்லாமல் தொழில் இனிமேல் தொடங்கப்படுமா, தொழிற் சாலையின் பணி தொடருமா, வாழ்க்கையில் புனர்வாழ்வு நமக்குக் கிடைக்குமா என்கிற ஏக்கப் பெருமூச்சோடு தத்தளித் துக்கொண்டிருந்த தொழிலாளர் வர்க்கத்திற்கு இந்த அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிற வகையில், அப்படி எடுத்துச் சொல்வதற்கு அச்சாரமாக இந்த அரசின் மூலம் 250 ரூபாய் வேலை இழந்த தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக—எங்களின் அன்புத் தலைவர், தொழிலாளர்களுடைய இதயத்திலே என்றைக்கும் வீற்றிருக்கக் கூடிய தொழில் வர்க்கத்தினுடைய தலைவர் கலைஞர் அவர் களின் உத்தரவோடு அனுமதியோடு 250 ரூபாய் வழங்கப் பட்டது. இந்த 250 ரூபாய் என்பதைப் பொறுத்தவரையில் ஏறத் தாழ 30 இலட்சம் ரூபாய் அளவில் மொத்தமும் தொழிலாளர் நலநிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு தொழிலாளர்களுக்கு எல்லாம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னும் முழுமை அடைவதற்குச் சில நாட்களே இருக்கின்றன. முழுமையாக அந்த நிதி வழங்கப்படும்.

இதிலே கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார். என்ன கருத்து என்றால் இந்த நிதி முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்கப்பட்டிருந்தால் நான் பாராட்டியிருப்பேன், ஆனால் இது தொழிலாளர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி வழங்கலாமா என்று கேட்டார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு, இராதா அவர்களின் இனிய கவனத்திற்கு ஒரு கருத்தைக் கொண்டுவர விரும்புகிறேன்.

அது என்னவென்றால் கடந்த காலத்திலே உங்களுடைய கட்சி ஆட்சியில் இருந்தபோது இப்படி மூடிய ஆலையில் உள்ள தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கியது, அதை மறக்கவில்லை. முதலமைச்சர் நிதியிலிருந்துதான் வழங்கப் பட்டது. ஆனால் 1986-ஆம் ஆண்டு முதலமைச்சர் நிதியிலிருந்து எந்தப் பணமும் தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடாது என்று அந்த அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதையும் உங்களின் இனிய கவனத்திற்கும் பரிசீலனைக்கும் நான் எடுத்து வைக்க விரும்பு கிறேன். இன்றைக்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பைக் கையிலே எடுக்கிற போது ஒரு செய்தியை நாட்டு மக்களுக்குச் சொன்னார்கள். அது என்ன செய்தி என்றால் களஞ்சியமும் காலி, கஜானாவும் காலி என்று சொன்னார்கள். எனவே கஜானா காலியாக இருக் கின்ற நேரத்தில் நாம் எப்படியாவது தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டும், அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை உருவாக்கவேண்டும் என்கிற புனிதமான சிந்தனையின் அடிப்படையில் இந்தத் தொழிலாளர் நல நிதியிலிருந்து

250 ரூபாய் அவர்களுக்கு வழங்கியதிலே என்ன மனிதாபிமான கடமையிலிருந்து நாங்கள் புரண்டுவிட்டோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு இராதர அவர்கள் விளக்க முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். சட்ட விதிகளுக்குப் புறம்பாக இந்த அரசு செயல்பட்டிருந்தால் அதைக் காரணம் காட்டி மாண்புமிகு உறுப்பினர் திரு இராதா அவர்கள் இந்த ஆட்சியின் குறைபாடுகளை எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு அனைத்து உரிமையும் உண்டு. இந்த 'லேபர் வெல்பேர் பண்ட்' என்பது ஒரு சட்டத்திற்கு உட்பட்டு இயங்கக்கூடிய நிதியாகும். இதிலே யார், யார் பங்கு கொடுக்கிறார்கள் என்றால் அலுவலர்கள், தொழிலாளர்கள் பங்கு கொடுக்கிறார்கள்; நிர்வாகம் பங்கு தருகிறது; அரசு பங்கு தருகிறது. இந்த நிதி எப்படி கையாளப்பட வேண்டும் என்பதற்கு சட்ட ஷரத்துக்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் மனதில் கொண்டு சட்டத் துறையிலே, இந்த நிதியை இடைக்கால நிவாரண நிதியாக வழங்கலாமா என்கிற வினாவைக் கேட்டு அவர்களுடைய ஒப்புதலுக்குப் பின்னாலே, இன்றைக்கு அந்த நிதியை வழங்கி இருக்கிறோம். 30 இலட்சம் ரூபாயை, பல ஆண்டு காலம் உழைத்து வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாமல் இருக்கக்கூடிய ஏழைத்தொழிலாளர்களுக்கு ரூ. 250 என்றவகையில் வழங்கியதை திருஎஸ். ஆர். இராதா அவர்கள் தவறு என்று நாட்டுக்குச் சொல்கிறார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இங்கே நம்முடைய சில பிரச்சினைகளை நான் உங்கள் முன் எடுத்து வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு மூடிய ஆலைகளைத் திறந்திருக்கிறோம்; தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்; அமைச்சர் என்கிற முறையில் என்னை நான் வேறுபடுத்திக் கொள்ளாமல்......

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்கள் முரசொலி படித்துக்கொண்டிருக்கிறார்கள். எப்படிப் படிக்கலாமா?....(பதில் இல்லை)

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, பல்வேறு முனைகளில் பேச்சுவார்த்தையின் மூலமாக மூடிய ஆலைகளைத் திறக்கலாம் என்கிற ஒருமுனைப் போக்கை இந்த ஆட்சி கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில்தான் தொழிற்சங்கத் தலைவர்களை, தொழில் நிர்வாகிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடத்துகிறோம்.

(பிற்பகல் 2–10)

நானும் அமைச்சர் என்கின்ற முறையில் 4,5 முறைகள் அந்த பேச்சு வார்த்தையிலே கலந்து கொண்டு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கின்றோம். இன்னும் சில பெரிய ஆலைகளை எப்படி திறக்கலாம் என்று எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில் ஆலைகள் ஏன் மூடப்படுகின்றன என்பதற்குச் சில



காரணங்கள் இருக்கின்றன. நிதிப் பற்றாக்குறை காரணமாக தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. எனவே இந்த 3 காரணங்களை எப்படி தீர்க்கலாம் என்று அரசு எண்ணிப்பார்த்து, சில ஆலைகளைத் திறப்பதற்கு புதிய முனைவர்கள், புரோமோட்டர்ஸ் முன் வந்தால்தான் இந்த ஆலைகளைத் திறக்கலாம் என்கின்ற நிலையிலேயுள்ள ஆலைகளை எல்லாம் பொறுக்கி எடுத்து அவர்களுக்கு புதிய முனைவர்களை உருவாக்கி அந்த ஆலைகளை திறக்கின்ற முயற்சியையும் இந்த அரசு செய்து கொண்டிருக்கின்றது. இந்த முனைவர்கள் மூலமாகவும் சில ஆலைகள் வெகுவிரைவிலே திறக்கப்பட இருக்கின்றன என்கின்ற இனிய செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மிக முக்கியமான பிரச்சினை. இன்றைக்கு சென்னை மாநகரத்தில் இரண்டு இன்சினியரிங் இண்டஸ்ட்ரீஸ் என்ற வகையில் ஸ்டேன்டர்ட் மோட்டார்ஸ், மெட்டல் பாக்ஸ் என்கின்ற இந்த இரண்டு நிறுவனங்களும் சென்னை மாநகரத்திலே இருக்கின்றன. இந்த நிறுவனங்களில் ஒன்று பழைய காரணங்களுக்காக சமீபத்திலே மூடப்பெற்றிருக்கின்ற ஸ்டேன்டர்ட் மோட்டார்ஸ். ஏற்கெனவே பல ஆண்டுகளாக மூடிக்கிடக்கின்ற மெட்டல் பாக்ஸ். இந்த இரண்டு ஆலைகளைத் திறப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று நீங்கள் கேட்டீர்கள். அதற்கு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் அந்த நிறுவனத்தோடு தொடர்ந்து பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம்.

நம்முடைய அருமை நண்பர் மாண்புமிகு வில்லிவாக்கம் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினரான திரு. வரதராசன் அவர்கள் நல்ல தொழிற்சங்கத் தலைவர் என்பதை உணர்வேன். அவர்கள் தொடர்ந்து எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக நாங்கள் அதிலே தொடர்ந்து இந்தத் தொழிற்சாலையை எப்படியாவது திறந்துவிடவேண்டும் என்றும், இல்லையென்றால் தமிழகத்திலே திறக்கப்பட வேண்டிய இந்தத் தொழிற்சாலை வேறு எங்கோ போய்விடும், காரணம் அவர்களுக்கு இந்தியா முழுவதும் கிளைகள் இருக்கின்றன, தமிழகத்திலே ஏறக்குறைய 900 தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய அந்த தொழில் நிறுவனம் திறக்கப்படவேண்டும் என்று மீண்டும் மீண்டும் நம்முடைய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்களும் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அவர்களும் தொழிலாளர்களோடு கலந்து பேசினார்கள். இதற்கு இடையில் ஐ.சி.ஐ.சி.ஐ. என்கின்ற பி.ஐ.எப்.ஆர். நிறுவனத்தினுடைய ஏஜென்டாக, இந்த நிலைமைகளை ஆய்வதற்காக வந்த அந்த நிறுவனம் தொழிலாளர்களுக்கு விரோதமான தீர்ப்பை வழங்கியது. தொழிலாளர்களுக்கு விரோதமான தீர்ப்பை ஐ.சி.ஐ.சி.ஐ. நிறுவனம் வழங்கிய காரணத்தினாலே இப்போதுள்ள சூழ்நிலையிலே எந்த அளவுக்கு இதை முடிக்

[திரு பொன். முத்துராமலிங்கம்] [1989 ஏப்ரல் 20

கலாம் என்பதை ஆழமாக ஒரு நாள் அல்ல பல நாட்கள் சிந்தித்து, முடிவுக்கு வந்து, இன்றைக்கு ஒரு நல்ல இனிப்பான செய்தியை மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். உலகம் போற்றும் உலகத் தொழிலாளர் உணர்வை ஏற்படுத்திய மே தினத்திற்கு மறுநாள் மெட்டல் பாக்ஸ் திறக்கப் படும் என்ற நல்ல செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து ஸ்டேண்டர்ட் மோட்டார்ஸ். 3 ஆயிரம் தொழிலாளர்களை உள்ளடக்கியது—மன்னிக்கவும் இந்த தொகுதியினுடைய உறுப் பினர் மரியாதைக்குரிய மாண்புமிகு சகோதரி சற்குணம் அவர் களும் இந்த முயற்சியை மேற்கொண்டமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஸ்டேண்டர்ட் மோட்டார்ஸ் என்கின்ற, ஏறத்தாழ 3 ஆயிரம தொழிலாளர்களை உள்ளடக்கிய அந்த நிறுவனம் கடந்த காலத்திலே ஏற்பட்ட தவறுகளின் காரணமாக, தவறான நிர்வாகம் இருந்ததன் காரணமாக இப்போது ''சஸ்பென்சன் ஆஃப் ஆப்பரேஷன்'' என்ற முறையினை கையாண்டு இந்த நிறுவனம் இன்றைக்கு மூடிக்கிடக்கின்றது. இது தொடர்பாக பலமுறை பேச்சுவார்த்தை நடத்தி அந்த ஆலையை திறக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு புரோபோசலையும், பல்வேறு பிரேரணைகளையும் நிறுவனத்திற்கு வழங்கி, தொழி லாளர்களுக்கும் வழங்கி, தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். மெட்டல் பாக்ஸ் நிறுவனத்திலே ஏற்பட்ட அந்த நல்ல செயதியை வெகு விரைவிலே இங்கே உருவாக்குவோம் என்பதைச் சொல்வதோடு, அந்த நல்ல செய்தியை இந்த மாமன்றத்திலேயும் வெகு விரைவிலே இந்த அரசின் சார்பாக உங்களுக்கு அறிவிப்பேன் என்பதை உங்கள் இனிய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே இந்த அரசு சில தொழிலாளர் நிலைகளில் ஆணித்தரமான பிடிப்பும், எண்ணமும், கருத்தும் கொண்டது என்பதை உங்களுடைய இனிய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

பணி பாதுகாப்பு என்று வருகின்றபோது இந்த அரசு அதுகுறித்து கடுமையான அணுகுமுறைகளை பின்பற்றும். உதாரணத்திற்கு ஆலை மூடலை தடுத்தல், மூடிய ஆலைகளைத் திறத்தல் ஆகிய குறிக்கோள்களுடன், செயல்பாட்டுடன் இந்த அரசு தொடர்ந்து பணியாற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து, தேவையின் அடிப்படையிலான குறைந்த பட்ச ஊதியத்தை நோக்கி இந்த அரசு நடைபோடுகிறது. ஆகவே இந்த தத்துவத்தின் அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியம் எங்கெங்கு இல்லையோ அங்கேயெல்லாம் இந்த நிலைமைகளை எல்லாம் உருவாக்க இந்த அரசு தொடர்ந்து தீவிரமான நடவடிக்கைகளை



1989 ஏப்ரல் 20] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே நேரத்தில் இந்த காரியங்களை எல்லாம் ஒட்டுமொத்தமாக செய்து விட முடியுமா என்று இங்கே கேட்டுவிட வேண்டாம். ஆனால் படிப்படியாக ஒரு ஆட்சி, நல்ல ஆட்சி தொடர்ந்து உயிரோட்டத் துடன் பணியாற்றுகின்ற ஆட்சி எந்த அளவுக்கு வேகம் காட்ட முடியுமோ அந்த அளவுக்கு எள் முனையளவு கூட குறையாமல் இந்த ஆட்சி முனைப்போடும், வேகத்தோடும் நடைமுறைப் படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வாழ்க்கைச்செலவு புள்ளியுடன் இணைந்த அகவிலைப் படி என்கின்ற அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் இன்றைக்கு வாழ்க்கைச் செலவு புள்ளியுடன் இணைந்த அகவிலைப்படி அவர் களுக்கு கிடைப்பதற்கான ஏற்பாட்டை, நடைமுறைகளை இந்த அரசு தொடர்ந்து பின்பற்றும் என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

இதுபோன்று தொழிலாளர் மத்தியில் ஒரு தீர்க்கமான தெளிவான, கொள்கை வடிவங்களை வைத்துக்கொண்டு இந்த அரசு தொழிற்சாலை தொழிலாளர் உறவினை காப்பாற்றும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் தொழில் வளர்ச்சி இருக்க வேண்டும். தொழிற்சாலைகளில் அமைதி இருக்க வேண்டும். உற்பத்தி பெருக வேண்டும், உற்பத்தித் திறன் வேண்டும். இதற்கு மாறான கருத்துக்களுக்கு இந்த ஆட்சியில் இடமேயில்லை. தொழில் அமைதி இருக்க வேண்டும், தொழிற்சாலைகளில் நிம்மதி இருக்க வேண்டும், உற்பத்தி பெருக வேண்டும். அதன் மூலம் நாட்டின் பொருளா தாரம் சிறப்படைய வேண்டும், உற்பத்தித் திறன் பெருக வேண்டும். அது நாட்டின் வளர்ச்சிக்கு, வலிமைக்கு தேவையான தத்துவம். எனவே இவைகளையும் இந்த அரசு கவனத்திலே கொள்ளும் என்பதையும் உங்களுடைய கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளுக்காக போராடுகின்ற நேரத்தில் தொழிலாளர் வர்க்கம் தங்களுடைய உரிமைகள் நிராகரிக்கப்படுகின்ற நேரத்தில் உரிமைகள் ஊனப் படுத்தப்படுகின்ற நேரத்தில், சேதப்படுத்தப்படுகின்ற நேரத்தில் ஆர்த்தெழுந்து போராட்டம் நடத்துவதற்குரிய உரிமை என்பது தொழிலாளர் வர்க்கம் போராடி பெற்ற உரிமை. இந்த உரிமை களுக்கு இடையூறாக வன்முறை தலைதூக்கினாலொழிய காவல் துறையினுடைய தலையீடு இங்கே தடுத்து நிறுத்தப்படும் என்கிற வாக்குறுதியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த அடிப்படையில் தீர்க்கமான, தெளிவான, அடிப்படையான அணுகுமுறைகளில் இந்த ஆட்சி தொழிலாளர் தொழிற்சாலை என்கின்ற உறவுமுறைகளை பேணி பரிசீலித்து நடைபோடுகிறது.

அடுத்து, தொழிற்சாலை தகராறு சட்டத்திலுள்ள 12(3) Settlement என்பதைப் பொறுத்தவரையில் இயற்கை நியதிகளுக்கு மாறுபட்டு மெஜாரிட்டிக்கு பெரும்பாலான தொழிலாளர்களுக்கு விரோதமாக, நியாயத்திற்கும், இயற்கை நியதிக்கும் மாறுபாடான முறையில் இந்த செட்டில்மென்ட் என்பது உருவாக்கப்படுமானால் அரசு தலையிட்டு எந்த அளவுக்கு இந்த இயற்கை நியதியையும் நியாயத்தையும் காப்பாற்றமுடியுமோ அந்த அளவுக்கு இந்த அரசு முனைப்போடு தலையிடும்.

அடுத்து, குறைந்த பட்ச ஊதியத்தைப் பொறுத்த வரையில் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் 15 ரூபாய் குறைந்தபட்ச ஊதியம் என்கிற அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்கள். ஆனால் இந்திய அளவில் எனக்கு தெரிவித்த கணக்குப்படி 11 ரூபாய்தான் குறைந்தபட்ச ஊதியம் என்று தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-20)

ஆனால் தமிழகத்திலேதான் 15 ரூபாய் குறைந்தபட்ச ஊதியம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில், இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தைப் பொறுத்தமட்டில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த 90 நாட்களுக்குள், அதாவது மூன்று மாதத்திற்குள் பீடித் தொழிலாளர்களுக்கு — திருநெல்வேலி மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், இப்படிப்பட்ட மாவட்டங்களில் நிறைந்து வாழ்கின்ற பீடித் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாள் கோரிக்கையாகும். அந்தக் கோரிக்கையொட்டியை அளித்த தீர்ப்பினை மையமாக வைத்து, குறைந்தபட்ச ஊதியம் பீடித் தொழிலாளர்களுக்கு வழங்கியதன் மூலமாக தமிழகத்திலுள்ள3 இலட்சம் பீடித் தொழிலாளர்கள் பயன் பெறுகிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்திலே உள்ள பெரும்பாலான மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். அப்படி விவசாயம் ஒரு பெருந்தொழிலாகத் தமிழகத்திலே கணக்கிடப்பட்டாலும், விவசாயத் தொழிலாளர்கள் பெற வேண்டிய நியாயமான குறைந்தபட்ச ஊதியம் பெற்றார்களா என்பதற்கு கடந்த காலத்தில் இல்லை என்று பதில் வரும் வகையில் இருந்தது. இப்போது அதற்காக நியமிக்கப்பட்ட குழு பரிந்துரைசெய்து, குறைந்தபட்ச ஊதியம் விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று சொல்லி, இந்த அரசு குறுகிய கால அவகாசத்தில் உத்தரவிட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்து



கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், சில நடைமுறைப்படுத்தப்படாத சட்டங்கள்—அதைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராதா அவர்களும், மாண்புமிகு மற்றைய உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். அதிலே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய சட்டங்கள் — கைத்தறி நெசவாளர்கள் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட சட்டம் ஒன்று. இன்னொரு சட்டம், கட்டடம்—கட்டுமானத் தொழிலாளர்கள் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட சட்டம். இன்னொரு சட்டம் உடல் உழைப்பை ஒழுங்குபடுத்துவதற்காக உருவாக்கப்பட்ட சட்டம். இந்த 3 சட்டங்களும், சட்டமாக வடிவெடுத்தலும், அது யாருக்காக உருவாக்கப்பட்டதோ, அவர்கள் அந்தப் பயனை அனுபவிக்க முடியவில்லையே என்ற குறைபாட்டைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். நான் கடந்த முறை எதிர்க் கட்சி வரிசையில் இருந்த காலத்தில் கை நெசவுத் தொழிலாளர்கள் சட்டம் ஏன் அமுல்படுத்தப்படவில்லை என்பதை உங்கள் ஆட்சியைப் பார்த்து கேள்வி கேட்டேன். இப்போது நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் அன்ஆர்கனைஸ்டு லேபரை பொறுத்த 3 சட்டங்களும் ஒழுங்கு படுத்தப்பட்டு, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தரும் அளவில் இந்தச் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது. ஆனால் ஒன்று என்னவென்றால், இந்தச் சட்டங்களில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்று சில உறுப்பினர்கள் பல கட்டங்களில் இந்த மன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதோடு ஆலோசனைக் குழுக்களிலும் இந்தக் கருத்துக்கள் பரிமாறப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் மனதிலே கொண்டு வேண்டிய மாற்றங்களை, சீர்திருத்தங்களை இந்த 3 சட்டங்களிலும் செய்து, விரைவிலே இந்தச் சட்டங்கள் அமுல்படுத்தப்படும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நொடித்த ஆலைகள் பற்றி ஒன்று சொல்லியாக வேண்டும். திடீர் திடீர் என்று ஆலைகளை மூடிவிடுகிறார்கள். அப்படி மூடுவதன் காரணத்தாலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் முதல் நாள் நாம் வேலையிலே இருக்கிறோம். வாழ்க்கையிலே பாதுகாப்பு இருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருக்கும் தொழிலாளர்கள், அடுத்த நாள் சூரிய உதயத்தில் ஆலை மூடப்பட்டிருக்கிறது, உங்களுக்குப் பணியில்லை என்று சொன்னவுடன் அவர்கள் வாழ்க்கையிலே எல்லாவற்றையும் இழந்ததுபோல அவலமான நிலை தமிழ்நாட்டிலே அடிக்கடி உருவாகிக்கொண்டிருக்கிறது. இந்த ஆழமான அழுத்தத்தை உணர்ந்துகொண்டு, மூடிய ஆலைகள் எப்படி மூடப்பட்டிருக்கின்றன, அதற்கான காரணங்கள் என்ன என்பதை முன்கூட்டியே

## விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

[திரு பொன். முத்துராமலிங்கம்] [1989 ஏப்ரல் 20

தெரிந்துகொள்வதற்கு ஒரு மானிட்டரிங் செல்—கண்காணிப்புக் குழு ஒன்றை இந்த அரசு நியமித்து, தேவைப்பட்டால் மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்துகொண்டு, சட்டப் பாதுகாப்பும் அந்தக் குழுவிற்குத் தந்து, அதன் மூலமாக ஆலைகள் மூடக் கூடிய சூழ்நிலையை முன்கூட்டியே உணர்ந்து, மூடப்படக் கூடிய ஆலைகளைத் தடுத்து நிறுத்தி, பணி செய்யும் தொழிலாளர்கள் திடீரென்று வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்படாத நிலையில், மானிட்டரிங் செல் என்று சொல்லப்படும் கண்காணிப்புக் குழு எதிர்காலத்தில் பயன்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாற்று தலைவர்—தலைமை)

அடுத்து, இந்த அரசைப் பொறுத்தமட்டில் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மூலமாக—நிர்வாகம், தொழிலாளர்கள் இருவரும் மனம் விட்டு கலந்து பேசி—இணக்கமான ஒரு ஒப்பந்தத்திற்கு வர வேண்டும் என்பதைத்தான் ஊக்குவிக்கும். தேவைப்பட்டால்தான்—அவசியம் ஏற்பட்டால்தான்—சூழ்நிலைகள் வற்புறுத்தினால்தான் அரசு இவர்களுடைய பேச்சு வார்த்தையில் கலந்துகொண்டு ஒரு இணக்கமான முடிவை ஏற்படுத்துமே அல்லாது மற்ற நேரத்தில் தலையிடாது. பை—பார்டைட் என்கிற இருதரப்பு பேச்சு வார்த்தையோடு முடிந்து விடவேண்டும் என்று இந்த அரசு மனப்பூர்வமாக விரும்புகிறது. அதற்குக் காரணம், நிர்வாகமும் தொழிலாளர்களும் ஒரு ஐக்கிய மனப்பான்மை ஏற்பட்டு—பை பெர்சுவேஷன்—ஒரு போராட்டம் மூலமாக, வேலை நிறுத்தம் மூலமாக, கதவடைப்பின் மூலமாக, ஒரு முடிவுக்கு வருவதைவிட—இரு சாராரும் ஒத்த மனத்தோடு கருத்துக்களை மனம்விட்டுப் பேசுவதன் மூலமாக ஒரு இணக்கமான முடிவை எளிதில் அடைந்துவிட முடியும் என்பதுதான் இந்த ஆட்சியின் தீர்க்கமான முடிவாகும். எனவே அந்த வகையில் இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு இந்த அரசு எப்போதும் ஆதரவாக இருக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, சட்டங்கள், தீர்ப்புகள்—அவார்டு என்கிற அந்த தீர்ப்புகள் இவைகள் எல்லாம் தொழில் நீதிமன்றங்களாலே வழங்கப்படுகின்றன என்றாலும்கூட அவைகள் எல்லாம் அமுல்படுத்தப்படாத ஒரு அவலமான சூழ்நிலை தொழிலாளர் உலகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. இவற்றை எப்படி போக்கிடுவது என்று இந்த அரசு சிந்தித்து இந்தத் தீர்ப்புகள் அமுல் செய்யப்படாவிட்டால் அது யாராக இருந்தாலும்—அது தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது இந்த ஆட்சியின் கடுமையான கரம் தன்னுடைய பணியைச் செய்யும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.



## விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

1989 ஏப்ரல் 20] [திரு பொன். முத்துராமலிங்கம்]

அடுத்து 10 (பி) பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். இதைப் பொறுத்தமட்டில் அதற்கு என்று சில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகள் எப்போது தேவைப்படுகிறதோ—எப்போது அத்தகைய பிரத்தியேகமான சூழ்நிலை தொழில் மட்டத்திலே உருவாகிறதோ அப்போது இந்த 10 (பி) பற்றி பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோவை மாவட்டத்தில் மூடிக்கிடக்கிற பஞ்சாலைகளில் 4 பஞ்சாலைகள் திறக்கப்பட உத்திரவிடப்பட்டிருக்கிறது—கிளீனிங் ப்ராசெஸ் நடந்துகொண்டிருக்கிறது—இன்னும் சில தினங்களில் தொடங்கப்பட்டு அங்கே உற்பத்தி தொடங்கப்படும் என்று சொன்னார்கள். எப்போது தொடங்கப்படும் என்று விளக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: தொடங்கப்படும் என்றது தொடங்கியாகிவிட்டது. உற்பத்தி எப்போது செய்யப்படும் என்பது மட்டும்தான் கேள்வி. விரைவில் உற்பத்தி தொடங்கும் என்பதுதான் என்னுடைய பதில்.

அடுத்து, ஒப்பந்தத் தொழிலாளர்கள்—கான்ட்ராக்ட் லேபர் என்கிற ஒப்பந்தத் தொழிலாளர் முறை மூலமாகத் தொழிலாளர் வர்க்கம் தேவையில்லாமல் பழிவாங்கப்படுகிறது என்ற உணர்வு தொழிலாளர் மத்தியில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களை எப்படி சட்டத்திற்குள் சரி செய்வது அல்லது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற அவலங்களை எப்படிப் போக்குவது என்று எண்ணிப் பார்த்ததில் கான்ட்ராக்ட் லேபர் அபாலிஷன் ஆக்ட் மூலமாக அப்படி ஒரு ஏற்பாட்டை தடுத்தாலும் அவ்வாறு தடுப்பதன் மூலமாக டிஸ்—பிளேஸ்டு ஓர்க்கர்ஸ் எனப்படும் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு வேலை வழங்க முடியுமா என்றால் வேலை வழங்க முடியாத சூழ்நிலை அந்தச் சட்டத்திலே இருக்கிறது. எனவே இந்தக் குறைபாடுகளையெல்லாம் களைந்து டிஸ்பிளேஸ்டு ஓர்க்கர்களுக்கு வேலை வழங்கக்கூடிய ஒரு சட்டத் திருத்தத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துகொண்டு இந்த அரசு வெகு விரைவில் கொண்டுவரும் என்பதையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொரு பிரச்சினை பற்றியும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள், உரிமைகளைப் போராடித்தான் பெற வேண்டும் என்கிற கட்டம் ஏற்பட்டால், போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை என்கிற நேரத்தில் தொழிலாளர்கள்—போராட்ட வர்க்கம் தாங்கள் பெற்றிருக்கிற அந்த உயரிய போராட்ட முறையைப்—பயன்படுத்துகிறார்கள். ஆனால் அப்படி பயன்படுத்துவதில்லை.

[திரு பொன். முத்துராமலிங்கம்] [1989 ஏப்ரல் 20

பல்வேறு காரணங்களாலே அவர்கள் மீது காவல் துறையினர் வழக்கு போட்டு விடுகிறார்கள். அந்த வழக்குகள்—தொழிலாளர்கள் தங்களுடைய உரிமைகளை காப்பாற்றுவதற்காக நடத்தியப் போராட்டத்தில், கிரிமினல் வழக்குகள் என்பது, வளர்ந்து வருகிற சமூகத்திலே ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு இக்கட்டான சூழ்நிலையாகும். எனவே இந்த இக்கட்டான சூழ்நிலையை மாற்றுவதற்காக, அப்படி நடந்துவிட்ட சம்பவங்களை நாம் திரும்ப அப்படி நடக்கக்கூடாது என்று எதிர்காலத்திலே காட்டுவதற்காக தொழிலாளர்களுடைய போராட்டத்தையொட்டி தமிழகம் முழுமையும், எங்கெங்கெல்லாம் தொழிலாளர்கள் மீது காவல் துறையினர் வழக்கு போட்டு இருக்கிறார்களோ—வன்முறை வழக்குகளைத் தவிர அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை நம்முடைய அருமை தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய அனுமதியோடு அந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

(பிற்பகல் 2–30)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்): கடைசியாகக் கேளுங்கள்.

*திரு. உ. ரா. வரதராசன்: மாற்றுத் தலைவரவர்களே, எனது குறுக்கீட்டுக்கு மன்னிக்கவும். இந்த வழக்குகள் எல்லாம் வன்முறை ஏதும் நடைபெறாத இடங்களிலேகூட முதலாளிகள் வேண்டுமென்றே சில புகார்களைக் கொடுத்து காவல் துறையால் கொலை குற்ற முயற்சிகள் உட்பட வழக்குகள் பதிவு செய்யப் படுகின்றன. ஆகவே அதையும் கவனமாகப் பரிசீலித்து அந்தத் தொழிலாளர்கள் மீதான வழக்குகளை திரும்பப்பெற அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் அச்சப்பட தேவையில்லை; அவர் அச்சம் அகற்றும் வகையில் ஆழமாக அந்த வழக்குகள் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வேலை வாய்ப்பு நிலையங்கள். இந்த வேலை வாய்ப்பு நிலையங்களைப் பொறுத்தவரையில் கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களை எல்லாம் கொள்கை விளக்கக் குறிப்பிலே இருந்து நான் எடுத்துச்சொல்லி, இந்த மாமன்றத்தினுடைய பொன்னான நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த கால ஆட்சியில் 1984 ஆம் ஆண்டு ஒரு



1989 ஏப்ரல் 20] [திரு பொன். முத்துராமலிங்கம்]

அரசாணையின் மூலமாக, தட்டச்சர்கள், சுருக்கெழுத்தர்கள், இளநிலை எழுத்தர்கள் ஆகியோர் யாவரும் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக அழைக்கப்பட்டு, தற்காலிகமாக பணியிடங்களை நிரப்பக் கூடாது என்ற அரசு உத்திரவு அன்றைய அரசாலே பிறப்பிக்கப்பட்டது. பின்னாலே தட்டச்சர்கள் மீது இருந்த தடை நீக்கப்பட்டது. சுருக்கெழுத்தர்கள் மீது இருந்த தடை நீக்கப் பட்டது. இறுதியில் இளநிலை உதவியாளர்கள் மீது இருந்த தடை இருந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக இன்னொரு இக்கட்டான சூழ்நிலை வருகிறது. 10 ஆண்டுக் காலம், 12 ஆண்டுக்காலம் வேலை வாய்ப்பு அலுவலகங்களில்பதிந்து வைத்திருந்த இளைஞர்கள் வேலை வாய்ப்பை பெற இப்போது கூட்டிய படி 30 வயதாக இருந்தாலும் அவர்கள் வேலை வாய்ப்பை பெற முடியாத ஒரு அவலமான சூழ்நிலை இருந்து வருகிறது. இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் இளைஞர்களின் தலைவர் ஸ்டாலின் அவர்கள் இங்கே பேசுகின்றபோது தெரிவித்தார்கள். இளைஞர்களுக்கு ஒரு மனத்தேக்கம் இருக்கிறது; 10 ஆண்டுக் காலம் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து வைத்தாலும், வேலை வாய்ப்பு பெறுவதற்கான வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது என்கின்ற சூழ்நிலை இருக்கிறது. வயது வரம்பை உயர்த்தினாலும்கூட அவர்கள் அந்த இலக்கை அடைய முடியவில்லை. எனவே இதுபற்றி அரசு பரிசீலித்து இளைஞர்களுடைய இந்த அழுத்தமான உணர்வை மாற்றுவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டார். அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் அரசு பரிசீலனை மேற்கொண்டது. 1984 ஆம் ஆண்டு, சென்ற ஆட்சியில் போட்ட உத்தரவுதான் இதற்கு தடையாக இருக்கிறது என்பதை அறிந்து இன்றைக்கு முதல் கட்டமாக வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 3 மாதமும், அதற்கு குறைந்த அளவிலே உள்ள தாற்காலிக பணியிடங்கள் எந்தத் துறையிலேயாவது காலியாக இருக்குமேயானால், அந்தத் துறைக்கு வேண்டிய இளநிலை உதவியாளர்களை, தட்டச்சர்களை, சுருக்கெழுத்தர்களை இந்தவேலை வாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பெற்று, அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கலாம் என்கின்ற உத்திரவை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இன்று காலை பிறப்பித்து இருக்கிறார்கள் என்கின்ற நல்ல செய்தியையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இதனாலே பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே பதிந்து, வேலையில்லாமல் இருக்கின்ற சூழ்நிலையிலேயிருந்து மாற்றம் ஏற்பட்டு, அவர்களுக்குத் தற்காலிகப் பணியிடங்களில் மூன்று மாதங்களோ, இரண்டு மாதங்களோ அல்லது கொஞ்சம் நாள் விட்டு இன்னொரு மூன்று மாதங்களோ கிடைப்பதற்கான வாய்ப்பு இன்றைக்கு இளைஞர்களுக்கு உருவாக்கித் தந்திருக்கிறது இந்த ஆட்சி என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, இந்தப் பயிற்சித் துறையைப் பொறுத்தமட்டில், பயிற்சித் துறையில் பெண்களும் பயிற்றுவிக்கப்பட வேண்டு மென்ற அடிப்படையில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஐந்து தொழிற் பயிற்சி நிலையங்களைப் பெண்களுக்காக இந்த அரசு உருவாக்க இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், பிளாஸ்டிக் தொழில், 'டிரேடு' என்று சொல்வார்கள், அந்தத் தொழிலைப் புதிய புதிய இப்படிப்பட்ட தொழில்களைப் பயிற்சி நிலையங்களிலும் ஆரம்பிப்பதன் மூலம் இளைஞர்களுக்கு வேறுபட்ட தொழிற்பயிற்சி வழங்குவதன் காரணமாக, வளர்ந்து வருகின்ற தொழிற்புரட்சியில் ஏற்கனவே அளிக்கப்பட்ட, பயிற்சி கொடுக்கப்பட்ட இளைஞர்கள் எதிர் காலத்திலே வேலையில்லை என்று சொல்லாமல், வேலையை அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய அளவில் அல்லது அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இந்தத் தொழிற் பயிற்சி நிலையங்கள் பல்வேறுபட்ட தொழில்களில் பயிற்சி கொடுப்பதற்கான முறையை இன்றையதினம் இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் சில பல தவறுகள் நடப்பதை ஆங்காங்கு சுட்டிக்காட்டினார்கள். இந்தத் தவறுகள் களையப் படுவதற்கு என்ன முறை கையாளப்பட வேண்டுமென்று இந்த அரசு ஆழமாகச் சிந்தித்தது. முதற்கட்டமாக, கம்ப்யூட்டரை சேஷன்—கம்ப்யூட்டர்கள் மூலமாக கார்டுகள், சீனியாரிட்டிகள் இவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டால், நிச்சயமாகத் தவறுகள் குறைக்கப்படலாம் அல்லது அறவேயில்லாமல் செய்துவிடலாம் என்பதற்கான சாத்திய கூறுகள் இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்திருப்பதால், நிபுணர்கள் கருத்துக்கு ஒப்ப இன்றைய தினம் கம்ப்யூட்டர்கள் மூன்று, நான்கு மையங்களிலே இந்த அரசின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அச்சகத்துறை. அச்சகத்துறையை பொறுத்தமட்டில், அவர்களுக்கு அங்கே ஒரு குழு—வல்லுநர் குழு ஒன்று அமைக்கப் பட்டு, அவர்களுடைய பணிப் பாதுகாப்பு, பணி நிலைமைகள் இவைகளெல்லாம் ஆராயப்படும் என்று நான் தெரிவிக்கின்ற நேரத்தில், அங்கே ஒரு குழப்பமான சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள்கூட தலைப்பை மட்டும் சொல்லிவிட்டு, வேறு தலைப்புக்குச் சென்று விட்டார்கள். அங்கே அலுவலர்கள் அல்லது தொழிற்சாலைகளிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் என்கின்ற இரண்டு நிலைகளில், ஒரு சாராரைத் தொழிலாளர்கள் என்று ஏற்றுக்கொள்வதா? தொழிலாளர்கள் என்று ஏற்றுக்கொண்டு அதற்கான உரிமைகளைத் தருவதா? அல்லது அரசு அலுவலர்கள் என்கின்ற நிலையில் அவர்களுக்கு உரிமைகள்மாற்றி வழங்கப்பட வேண்டுமா என்கிறகேள்விக்குறிக்கு இதுவரையிலே விடை காண முடியாமல் பல்லாண்டுக் காலமாகத்



தொடர்ந்து வருகிறது. அதே நேரத்திலே, நிர்வாகத்தில் அவ்வப்பொழுது சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன. இந்தக் குழப்பங்களைக் களைய வேண்டு மென்பதற்காகத்தான் வல்லுநர் குழு ஒன்றை ஏற்பாடு செய்து அந்தக் குழுவின் மூலமாகப் பணி அமைப்பு, பணி முறைகள் இவைகளையெல்லாம் ஆராய்ந்து ஒரு தீர்க்கமான வடிவம் அவர்கள் தரவேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. அந்த வகையிலேயும் குழுவை இந்த அரசு நியமிக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, செய்தித்துறை. நம்முடைய செய்தித் துறை குறித்து சில கருத்துக்களை நான் தெரிவிக் விரும்புகிறேன். கலைச் செறிவும், தொழில் நுட்பமும் உள்ள, நல்ல கதையமைப்புக் கொண்ட, உயர்ந்த தமிழ் படங்களுக்கும் சிறந்த நடிகர்கள், நடிகைகளுக்கும், தொழிக நுட்பக் கலைஞர்களுக்கும் பரிசு வழங்கும் திட்டம் 1982–83 வரை செயல்பட்டு வந்தது. அதன் பின்னர் விருதுகள் வழங்கப்படவில்லை. அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு முதல் மீண்டும் தொடங்கிட இந்த அரசு முடிவு செய்துள்ளது.

(பிற்பகல் 2–40)

இதற்கான விருதுகள் வழங்குவது தமிழ்ப் புத்தாண்டு தினத் தன்று வழங்கப்படும். இந்த விருதுகளில் ஒன்று மறைந்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரால் வழங்கப்படும் என்று தமிழக முதல்வர், எதையும் தாய் உள்ளத்தோடு ஏற்றுக்கொள்கிற தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அது செயல்படுத்தப்படும்.

இந்தச் செய்தியைச் சொல்கிறபோது இன்னொரு தகவலை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது எங்களுடைய அரசின் கடமையென்று கருதுகிறேன். 1983–84, 1984–85 ஆகிய இந்த இரண்டு ஆண்டுகளுக்கும் கடந்த காலத்தில் நடந்த ஆட்சி அதற்கான குழுவெல்லாம் நியமித்து சிறந்த படம், சிறந்த நடிகர்கள், சிறந்த இயக்குநர் இவர்களை எல்லாம் தேர்ந்தெடுத்த அந்த கோப்பு. சீலிடப்பட்ட அந்த கவர்கள் அப்படியே இதுவரையில் இருந்து கொண்டிருக்கின்றன. அதில் எந்தவிதமான முயற்சியும் இல்லாமல், 1983–84, 1984–85 இந்த இரண்டு ஆண்டுகளுக்கும் நீதிபதிகளை தலைவர் களாகப் போட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த முடிவுகள் அப்படியே கோப்பில் இருக்கிறதேயல்லாமல், அதுபற்றி நடவடிக்கை எடுக்கவில்லை. இதை நான் குறிப்பிட்டு காட்டு வதற்கு காரணம் கடந்த காலத்தில் நடந்த ஆட்சி எவ்வளவு வேகமாக செயல்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிற ஒரு சான்று என்பதை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

அடுத்து இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கருத்து தெரிவிக்கிறார்கள், Exhibitors, Distributors and Producers இந்த மூன்று நிலைகளில் உள்ளவர்கள் திரைப்படங்களை உருவாக்குகிறார்கள். திரைப்படங்களை உருவாக்குகிற இந்த மூன்று பிரிவினர்களுக்கும் பல்வேறு நிலைகளில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. வரிவிதிப்பில் சங்கடம் ஏற்படுகிறது. பல்வேறு அரசு நடவடிக்கைகளால் சங்கடம் ஏற்படுகிறது. சட்டத்தால் சங்கடம் ஏற்படுகிறது. இவைகளையெல்லாம் ஒரு ஜனநாயக நாட்டில் அவர்கள் பரிந்துரைகள் மூலமாக கொடுப்பது வாடிக்கை. இந்த மூன்று தரப்பினரும் திரைப்பட உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள், படத் தயாரிப்பாளர்கள். இவர்கள் எல்லாம் குறைகளை முதலமைச்சரிடம் தந்திருக்கிறார்கள். இந்தக் குறைகளைப் போக்குவதற்கு இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை தெளிவாகத் தெரிவித்து இருக்கிறார்கள். என்ன கருத்து என்றால் முத்தரப்பு பகுதியினரை கூட்டி அவர்கள் மூலமாக என்னென்ன வரிச் சலுகைகள் அவர்களுக்கு தொல்லையாக இருக்கின்றன, என்ன சட்ட ஷரத்துகள் அவர்களுக்கு சங்கடத்தை உருவாக்குகிறது என்று இவற்றையெல்லாம் பூர்வாங்கமாக, தீர்க்கமாக அரசு ஆராய்ந்து, இந்த மூன்று பிரிவினரும் பயன்பெறத்தக்க வகையில் அல்லது சங்கடங்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்கிற வகையில், எப்படியெல்லாம் நிலைமைகளை உருவாக்கலாம், அரசு ஆணையிடலாம் என்பதற்கு இந்த மூன்று பகுதியினரையும் வெகு விரைவில் முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனைப்படி கூட்டி, ஆலோசனைகளை கேட்டு உரிய முடிவுகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, 1987-ம் ஆண்டு தமிழக அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தச் சட்டம் ஒரு திருத்தச் சட்டம். தமிழ்நாடு திரைப்படங்கள் முறைப்படுத்துதல் இரண்டாவது திருத்தச் சட்டம். இந்தச் சட்டத்தின் மூலமாக சில தண்டனைகள், அதைத் தயாரித்தவர்களுக்கு அல்லது அதிலே நடித்தவர்களுக்கு எல்லாம் வழங்கலாம் என்பதுதான் இந்தச் சட்டத்தினுடைய ஷரத்தாகும். இது கடந்த ஆட்சியில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் அவர்களுடைய கையொப்பத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஆளுநர் அவர்கள் அதைப் பரிசீலித்து மீண்டும் இதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த மாமன்றத்தில் அனுமதி பெற வேண்டும் என்பதற்காக அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஜனநாயக நாட்டில்—freedom of expression—என்கிற தத்துவங்களை ஏற்றுக்கொண்ட இந்த ஜனநாயக நாட்டில், ஒருவரையொருவர் விமர்சிப்பது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துதான். கருத்து பரிமாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு உட்பட்டு விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஜனநாயக மரபுகள் என்ற அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்



அவர்கள் ஆழமாகச் சிந்தித்து, இந்த மன்றத்தினுடைய அனுமதியை விரைவில் பெற்று, அந்தச் சட்டத்தையும் ரத்து செய்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதன் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ஜனநாயக வாதியாகவும், விமர்சனங்கள் கடுமையாக இருந்தாலும் கூட அதை ஏற்றுக்கொள்ளுகின்ற ஒரு மனப்பக்குவம் ஒரு ஜனநாயகவாதிக்கு வேண்டும், எதிர்க்கட்சியின் சார்பாக மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மக்களுடைய அபிலாஷைகளையும் உணர்வுகளையும், ஆத்திரங்களையும் பிரதிபலிக்கக்கூடிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆத்திரப்படக்கூடும். அவர்களுடைய உணர்வுகளை மதிக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு புதிய ஜனநாயகத் தத்துவத்திற்கு விளக்கம் அளிக்கின்ற வகையில், இந்த சட்டத்தை ரத்து செய்வதன் மூலமாக ஜனநாயக உலகத்தில்,— தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு தன்னிகரற்ற தலைவராகவும், விடிவெள்ளியாகவும், நம்பிக்கை நட்சத்திரமாகவும், வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகவும், இன்றைக்கு உருமாறி இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வீடியோவால், எதிர்காலத்திலே சினிமாத்துறை அழிந்து போய்விடுமோ என்ற அச்சத்தை தொடர்புடைய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ராம நாராயணன் அவர்கள் தெரிவித்தார்கள், அவர்கள் அச்சப்படத் தேவையில்லை. நீங்கள் அச்சப்படத் தேவையில்லை என்று சொல்கிறீர்கள், வேண்டுமானால் உங்களுக்கு அபூர்வ சகோதரர்களைக் காண்பிக்கிறேன் என்று சொன்னார். ஆனால் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட வீடியோ பைரசி, என்கிற வீடியோ திருட்டு நடைபெறாமல் இருப்பதற்கு இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இருந்து உரிய நடவடிக்கைகளை நிச்சயமாக மேற்கொள்ளும் என்ற வாக்குறுதியை, சினிமாத் துறையிலே ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கும், அந்தப் படத்தை தயாரிப்பவர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும், எக்சிபிட்டார்ஸ், திரையரங்கு உரிமையாளர்களுக்கும் இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே இந்த வீடியோ பைரசி மூலமாக இந்த சினிமாத்துறை பாதிக்கப்பட்டுவிடாமல் இந்த அரசு கண்ணுங் கருத்துமாக பார்த்துக் கொள்ளும்,

அடுத்து இன்றைக்கு தமிழக அரசினுடைய சார்பாக நடத்தப்படுகின்ற தமிழரசு பத்திரிகை ஒரு புதிய வடிவோடும், பொலிவோடும் எதிர்காலத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுடைய கரங்களை அலங்கரிப்பதோடு, தமிழகத்திலே உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் செய்திகளைத் தாங்கிச் செல்கின்ற பல்வேறுபட்ட செய்திகளைத் தாங்கிச் செல்லுகின்ற ஒரு மீடியாவாக, ஒரு செய்தித் தொகுப்பாக இந்தத் தமிழரசு பத்திரிகை நடைபோட வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. அதனால்தான்

ஏற்கனவே ஆரம்பித்த அடிப்படையில், பல்வேறு துறைகளால் நடத்தப்படுகின்ற அந்த மாதாந்திர சஞ்சிகைகள் எல்லாம் ஒன்றாக்கப்பட்டு, இந்தத் தமிழரசு பத்திரிகை மாதாந்திரப் பத்திரிகை அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை வரக்கூடிய பத்திரிகை என்ற வகையில், முழுப்பொலிவோடும், அனைத்துச் செய்திகளையும் தாங்கி வரக்கூடிய அரசுப் பத்திரிகையாக இது மாற்றப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை எடுத்து செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.இராதா அவர்கள்—நான் சொல்ல வேண்டாம் என்று கருதினாலுங்கூட—கோடிட்டுக் காண்பித்தக் காரணத்தாலே, விளக்கத்தைச் சொல்ல வேண்டிய கட்டாய நிலைமையில் நான் இன்றைக்கு நின்று கொண்டு இருக்கிறேன். நடராசன் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். நடராசன் பழிவாங்கப்பட்டார். இந்த அரசு பழி வாங்கலாமா என்றெல்லாம் கேள்விகளைக் கேட்டார்கள். உண்மையான விவரங்களை, அது தொடர்பான விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் இராதா அவர்கள் அறிந்துகொள்ளாத காரணத்தாலோ, அல்லது அறிந்துகொண்டாலும் அந்த உண்மைகள் மன்றத்திலே சொல்லப்படக்கூடாது என்பதற்காகவோ, தனக்குச் சாதகமான வாதங்களை இந்த மன்றத்திலே எடுத்து வைக்கவேண்டும் என்ற ஒருதலைபட்சமான போக்கின் காரணமாகவோ என்னவோ, உண்மைகளை மறைத்து, சாதகமான சில நிலைமைகளை மட்டும் மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது ஒருதலைபட்சமான கருத்து என்ற அடிப்படையிலேயும், உண்மையான நிலையை மாமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்ற அக்கறையிலேயும், ஜனநாயக் கடமையிலேயும் சில விவரங்களை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். நடராசன் மே 1977-லே விளம்பர உதவியாளராக நியமிக்கப்பட்டார். அதே ஆண்டு டிசம்பரில் வட்டார மக்கள் தொடர்பு அலுவலராக நியமிக்கப்பட்டார். 1984-ல் உதவி இயக்குநராகவும். 1986-ல் துணை இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார். அவரைப் பற்றி பத்திரிகைகளில் பரவலாக செய்தி வந்ததன் காரணமாக மார்ச் 1988-ல் அவர், தலைமைச் செயலகத்தின் துணை இயக்குநர், (மக்கள் தொடர்பு) என்ற பதவியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்திற்கு மாற்றப்பட்டார். ஆனால் அங்கு பணியில் சேராமல் விடுப்பில் சென்றார்.

(பிற்பகல் 2-50)

மீண்டும் இவரது அரசியல் தொடர்புபற்றி பத்திரிகைகளில் செய்தி வந்தபோது இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டது. பத்திரிகைச் செய்திகளின் அடிப் படையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் புலன் ஆய்வுத்துறை அதனைப்பற்றி மேல் நடவடிக்கை எடுக்கலாம்



என்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை மற்றும் சட்டத் துறை கருத்து தெரிவித்தன. ஆகவே புலன் ஆய்வுத் துறை மற்றும் விழிப்புப், பணி மற்றும் லஞ்ச ஊழல் தடுப்புத் துறை Inspector-General of Police (Intelligence) and Director of Vigilance and Anti-Corruption அறிக்கை பெற்று, திரு. எம். நடராஜன், துணை இயக்குநர் மீது ஒழுங்கு முறை விதி 17-பீ-ன் கீழ் குற்றச் சாட்டு ஏற்படுத்தி, 29–8–1988-ல் அவருக்குக் கடிதம் அனுப்பப் பட்டது. அவர் முதலில் விளக்கம் தர அவகாசமும் பிறகு புலன் ஆய்வுத் துறையின் அறிக்கை நகலும் கோரினார். புலன் ஆய்வுத் துறையின் அறிக்கை மந்தன அறிக்கை. ஆகையால் அதனைத் தர இயலாது என்றும், பத்திரிகைத் துணுக்குகளை இத்துறையில் வந்து பார்க்கலாம் எனவும் அவருக்கு தெரிவிக்கப்பட்டது, அவர் 15-2-89-ல் நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டார். ஆனால் அவர் வரவில்லை. மீண்டும் விசாரணைக்கு அழைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையில் அவர் மீது ஒரு தனிப்பட்ட நபர் புகார் அடிப்படையில் 18–3–89-ல் கைது செய்யப்பட்டு, காஞ்சிபுரத்திலே தங்கி இருக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். மேலும் அவர் 3-11-88—ல் தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்பினார். வீடு வாங்க வாங்கிய முன் பணம் மற்றும் மோட்டார் வாகனம் வாங்கும் முன் பணம் ரு. 1,30,180—ஐ திரும்பச் செலுத்துமாறு 8-12-88-ல் அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் அவர் இதுவரை நிலுவையில் உள்ள முன் பணத்தைத் திருப்பிச் செலுத்தவில்லை. அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை இருப்பதாலும் அவரிட மிருந்து முன் பணம் வசூலிக்க வேண்டியிருப்பதாலும், அவருடைய பதவி விலகல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 1-4-89 மற்றும் 2-4-89—ல் அவர் பத்திரிகைகளுக்கு அரசினை குறை கூறும் வகையில் அறிக்கை வெளியிட்டதன் காரணமாக அவர் மீது வேறு ஒரு குற்றச்சாட்டு, ஒழுங்கு முறை விதி 17-பீ—யின்படி ஏற்படுத்தப்பட்டு, அவரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் மன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்க விரும்புகிறேன். கட்சி மாச்சரியங் களுக்கு அப்பாற்பட்டு, ஒரு அரசு ஊழியர், அரசு அலுவலர் வரைமுறைகளைக் கடந்து செயல்படுவாரேயானால், ஒரு ஆட்சி அவர் மீது நடவடிக்கை எடுக்காமல் என்ன செய்யமுடியும்? ரூ. 1,30,180 அவரிடமிருந்து பாக்கி இருக்கிறது என்று தெரிந்த பின்னால், அவரது ராஜிநாமா கடிதத்தை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்? அரசு அலுவலர்கள் என்பவர்கள் சில வரைமுறைகளுக்கு, சில சட்ட நிபந்தனைக்கு உட்பட்டு அவர் களுடைய பணிகளை அமைத்துக் கொள்ளவேண்டும். எனவே அந்த நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டு சென்று ஒரு அரசு அலுவலர் செயற்படுவாரேயானால். ஒரு நல்ல ஆட்சி அவர் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர, வேறு என்ன செய்ய முடியும்? எனவே இத்தகைய சூழ்நிலையில் அவருக்காக வாதாடுவது என்பது ஒரு தலைபட்சமான போக்கு என்பதை இந்த மாமன்றத்தின் இனிய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்பு கிறேன்.

அடுத்து இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் சொன்னார்கள். அரிசி 5 கிலோ நீங்கள் போட்டீர்கள். ஆனால் எல்லா கடைகளிலேயும், என்னுடைய சங்கத்தைச் சார்ந்தவர்கள் வாங்கிய இடத்திலே குறைவாக இருந்தது. அதன் மூலமாக ஒரு கணக்கைப் போட்டு, அவர் சங்கத்திலே உள்ளவர்கள் மட்டும் குறைவாக வாங்கினார்கள் என்பதை மொத்தப்படுத்தி, பரவலாக்கி அவர் ஒரு கணக்கைச் சொல்லி, அதிலே ரூ. 9 கோடி என்ற கணக்குக்கு அவர் வந்தார். அந்தக் கணக்கு என்ன கணக்கு என்பதை நாட்டுக்குத் தான் அவர் சொல்லியாக வேண்டும். இருந்தாலும் மன்றத்திலே உள்ளவர்களுக்கு விளங்கவேண்டுமென்பதற்காக தெரிவிக்க விரும்புகிறேன். 5 கிலோ அரிசியை வாழ்க்கையின் அடித்தளத்திலே, வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு, இந்த அரசு உண்ண உணவும், உடுக்க ஆடையும், இருக்க உறைவிடம் இவற்றை வழங்கவேண்டுமென்ற புனிதமான சித்தாந்தங்களை மனதிலே கொண்டு, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்கின்ற அந்த மகத்தான சமூக விஞ்ஞானி, பேரறிஞர் அண்ணாவின் தத்துவத்தை மனதிலே கொண்டு, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே நடைப்போடுகின்ற இந்த அரசு 5 கிலோ அரிசியை, நல்ல நாள், தமிழர் திருநாள், இந்த நாளில் ஏழை தனக்கு வயிற்றுக்குச் சோறு இல்லையே என்ற வருத்தத்தோடு வாடிவிடக்கூடாது என்பதற்காக, அந்தப் புனிதமான நோக்கங்களை அடித்தளமாக வைத்து வழங்கப்பட்ட அரிசிக்கு குறை காணுகின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலேயே அறிவித்தார்கள். எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் நியாய விலை கடைக்குச் செல்லலாம். அவர்களே முன் நின்று இந்த நல்ல காரியத்தைச் செய்யலாம். ஆட்சியிலே ஒரு கட்சி இருக்லாம். அடுத்து இன்னொரு கட்சி வரலாம். இது ஜனநாயகத்திலே நடக்கக்கூடிய சாதாரண சம்பவங்களே தவிர அதைத் தவிர இந்த ஆட்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேறு பெரிய சிந்தனை இல்லை. எனவே ஆட்சி மாற்றங்கள் என்பது ஜனநாயகத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு தத்துவம். எனவே அந்த வகையிலேதான் கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு நியாய விலைகடைகளுக்குச் சென்று நீங்கள் தாராளமாக அரிசி வழங்கலாம் என்று உங்களுக்கு அனுமதி கொடுத்த பின்னாலும், நீங்கள் அந்த நியாய விலைக் கடைகளுக்குச் செல்லாமல், உங்கள் சங்கத்து ஆட்களை மட்டும் பார்த்துக் கொண்டு, உங்கள் சங்கத்து ஆட்களைச் சொன்னால் தான், மீறி சாட்சி சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு, எங்களுடைய சங்கத்து ஆட்களுக்கு வழங்கிய அந்த சரக்கிலே மட்டும் கொஞ்சம் குறைவாக இருக்கிறது என்று நாட்டுக்கு அறிவிப்பீர்களேயானால் உங்களை அடையாளம் காட்ட வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப்



புனிதமான கடமையை இப்போது நிறைவேற்றி இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இங்கே நேரு நூற்றாண்டு விழாக் கொண்டாடப் படுகிறது. நேருவினுடைய நூற்றாண்டு விழா, நாடு விடுதலை பெற்று 40 ஆண்டுகள் ஆகின்ற அந்தப் புனிதமான விழா, இந்த இரண்டு விழாக்களையும், எல்லா மதத்தினரும், எல்லா ஜாதியினரும், எல்லா வகுப்பினரும் வேறுபாடுகளையெல்லாம் தூக்கி வீசி விட்டு விடுதலை வேட்கை கொண்ட அந்த நினைவுகளையும், அந்த விடுதலைப் பெற வேண்டும் என்பதற்காக 9 ஆண்டுக் காலம் கடுமையானமுறையில் சிறையிலே வாழ்ந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய நூற்றாண்டு விழாவையும் அனைவரும் கொண்டாடக் கடமைப் பட்டிருக்கிறோம். அந்த வகையிலே இந்த விழா முழுமையாகத் தமிழகத்திலே எடுக்கப்பட்டது. பண்டித ஜவஹர்லால நேருவிற்கு அவருடைய நூற்றாண்டு விழாவை ஒட்டி நினைவாக, அவருடைய தியாகத்தையும் அவருடைய ஸ்டேட்ஸ்மேன் என்று சொல்லுகிற அந்த அரசியல் ஞானி என்று சொல்லத்தக்க வகையிலே அவருடைய அந்த பண்பையும் பாராட்டுகிறவகையில் எங்களுடைய ஆற்றல் மிகு தலைவர் ஜனநாயத்தினுடைய காவலர் கலைஞர் அவர்கள் ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டுமென்று கருதி, ஏதாவது நினைவிலே நிற்கக் கூடிய ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கருதி, கத்திப்பாரா வளைவிலே உள்ள பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய திருவுருவச் சிலையிலிருந்து அண்ணாநகருக்குச் செல்லுகிற சாலையை பண்டித ஜவஹர்லால் நேரு சாலை என்று இந்த அரசு பெயர் சூட்டுகிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதன் மூலமாக எவ்வளவுதான் அரசியல் மாறுபாடுகள் இருந்தாலும் அவைகளுக்கு அப்பாற்பட்டு நம் அனைவருக்கும் ஜனநாயகத்தை காப்பாற்றக் கூடிய பெரும் கடமை இருக்கிறது என்பதை இங்கே உள்ள ஆட்சி, அரசு உணர்ந்திருக்கிறது என்பதற்கு அச்சாரம் தான் இந்த நடவடிக்கைகள் ஆகும்.

இன்றைக்குக் கூட மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசும்போது இலக்கிய நயம் சொட்டச் சொட்ட, இங்கே உள்ள அனைவரும் ரசிக்கத் தக்க அருமையான சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அது தொடர வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன். விரும்புகிறேன். இந்த ஜனநாயக மரபுகள் அனைவராலும் கடைபிடிக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் பெரிதும் விரும்புகிறோம். இந்த மன்றத்தில் கருத்துக்களோடு கருத்துக்கள் மோதல் நடக்கலாம். அப்போதுதான் தெளிவான முடிவை நம்மால் மேற்கொள்ள முடியும். கருத்து மோதல்கள் இல்லை என்றால் தெளிவான முடிவுகளை மேற்கொள்ள முடியாது. எனவே இது ஜனநாயகத்தில் நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தாத்பரியம் ஆகும். அந்த வகையிலேதான் இன்றைக்கு நம்முடைய

அனந்தன் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள், அது தொடர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதுபோல் அடுத்து....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்):** அமைச்சர் அவர்கள் இன்னும் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** உறுப்பினர்கள் சொன்னதற்கு பதிலே தவிர வேறு ஒன்றும் இல்லை. உறுப்பினர்கள் சொல்லியதற்கு பதில் வேண்டுமென்றால் சொல்கிறேன். இல்லை என்றால் முடித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக்களுக்கு பதில் வேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள் என்று நினைக்கிறேன். உறுப்பினர்களுக்கு சங்கடமாக இருந்தால் முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 3-00)

நம்முடைய மாண்புமிகு திரு.அண்ணாநம்பி அவர்கள் சொல்லுகின்றபோது குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யவேண்டுமென்று கேட்டார்கள். நிர்ணயிப்பதிலே இந்த அரசுக்கு மாற்றுக் கருத்து இல்லை. நிச்சயமாக நிர்ணயிப்பதிலே அக்கறைக் கொண்டு எந்தெந்தப் பிரிவினருக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயிக்க வேண்டுமோ அதையெல்லாம் அரசினுடைய பல்வேறு துறைகளின் மூலமாக, தொடர்புடைய துறைகளின் மூலமாக விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கெல்லாம் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் கருத்து தெரிவிக்கின்ற நேரத்தில் மத்திய ஜவுளிக் கொள்கையால்தான் பல்வேறு சங்கடங்கள் வந்தது என்று சொன்னார்கள், ஜவுளிக் கொள்கை நடைமுறையிலே எப்படி இருக்கிறது. ஒரு காம்போசிட் மில் என்ற வகையிலேதான் மத்திய அரசினுடைய ஜவுளிக்கொள்கை வெற்றிகரமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஸ்பின்னிங், வீவிங், டையிங் என்று தனித்தனியாக ஆலையாக இருக்கின்றபோது மத்திய அரசினுடைய ஜவுளிக் கொள்கை டெக்ஸ்டைல் பாலிசி சரியாக அது வரவில்லை. அதிலும் குறிப்பாக தென்னகத்திற்கு அது சரியாக இல்லை என்பதுதான் அனைவருடைய கருத்தும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னும் சில மில்களைக் குறிப்பிட்டு அவர்களுக்கெல்லாம் ரூ, 250 வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே ஒரு முறை கொடுத்துவிட்டால் அவர்களுக்கு மீண்டும் கொடுத்தால் அது தொடர்கதையாக மாறிவிடும். எனவே ஒரு இலக்கணத்திற்கு உட்பட்டு 250 ரூபாய் கொடுக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அந்த வகையிலேதான் ஏற்கனவே வழங்கப்பட்ட ஆலைகள் தவிர புதியதாக கொடுக்கப்பட



வேண்டியவர்களுக்கு இன்றைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய முன்னாள் சபாநாயகர் அவர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே சொன்னார்கள். அரசியல் சட்ட புத்தகங்களையெல்லாம் எடுத்து வைத்து, தனி மனிதனுடைய உரிமைகளையெல்லாம் எடுத்து வைத்து 19—ஜி க்ளாஸ் 2 ரீசனபுள் ரெஸ்ட்ரிக்ஷன் என்கின்ற வகையில் நாம் இந்த சினிமாத் துறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் எதிர்காலத்திலே விளைவுகள் விபரீதமாக இருக்கும். இதை நான் முன்கூட்டியே உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன் என்று தீர்க்கதரிசனமான சில கருத்துக்களை எடுத்து மன்றத்திற்கு வைத்து இருக்கிறார்கள், அவர் இன்னும் சொன்னார். ஒருவரே நடித்து, ஒருவரே இயக்கி, ஒருவரே பாடி, ஒருவரே எல்லா வகையிலும் செயல்படுவாரானால் அது ஒரு மோனாபலி. எனவே எம். ஆர். டி.பி. ஆக்ட்டின் கீழ் வரும் என்றெல்லாம் பல்வேறு சட்ட விளக்கங்களை எல்லாம் சொன்னார்கள். அவர்களுடைய கருத்துக்களை பொறுத்த மட்டில் என்னுடைய ஒட்டுமொத்தமான ஒரு ஆப்சர்வேஷன்—மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எச், பாண்டியன் அவர்களுடைய கருத்து சிலருக்கு பாடமாக இருக்கலாமே அல்லாமல் அதுவே முழுவதுமாக பின்பற்றுவது என்பதற்கு இப்பொழுது காலம் இடம் கொடுக்காது என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்திலே என்னுடைய பதிலாக அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே அவருடைய கருத்துக்கள் சிலருக்கு நிச்சயமாக பாடமாகவே இருக்கும்.

அடுத்து நம்முடைய திரு.குமரிஅனந்தன் அவர்கள் பேசினார்கள். அவர்கள் பெரும்பாலும் சுற்றுலாத் துறையைப் பற்றி தான் பேசினார்கள். என்னைப் பற்றி குறிப்பிடும்போது பிட்டுக்கு மண் சுமந்தவர்--அந்த பூமியிலிருந்து வந்திருக்கிறார் என்று சொன்னார். அதோடு அவர்கள் சுற்றுலாத் துறைக்குச் சென்று விட்டார்கள். சுற்றுலாத் துறை அமைச்சர் மாலையிலே அவர்களுக்கு நிச்சயமாக பதில் அளிப்பார்கள். சி.பி.எம். உறுப்பினர் மாண்புமிகு வெள்ளிங்கிரி அவர்கள் பல்வேறு நிலைமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய பதிலிலே நிரம்ப அவருக்கு பதில் சொல்வதைப்போல் பல கருத்துக்களை நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். சில சட்டங்கள் அமல் படுத்தப்படவில்லை என்று சொன்னார்கள். சட்டங்கள் அமல் படுத்தப்படவில்லையென்றால் சட்டங்களை அமல்படுத்துகின்ற ஏஜன்சிஸ் என்கின்ற அவர்கள் மீதும் சட்டம் அமல்படுத்துகின்ற நிலையில், ஏஜன்சிகள் அமல்படுத்துகின்ற நிலையில் அதை மறுக்கின்ற நிர்வாகத்தின் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு திரு. வெள்ளிங்கிரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பாக்டரி ஆக்ட் டின் கீழ் பல தொழிற்சாலைகளை கொண்டுவர வில்லை. அதிகாரிகள் சில நேரங்களில் பத்துக்கும் குறைவாக உள்ள தொழிலாளர்கள் என்று கணக்கிட்டு பல தொழிற்சாலைகளை

இதன் கீழ் கொண்டுவரவில்லை. அப்படி ஒரு அன்ஃபேர் லேபர் பிராக்டீஸ் நடந்துகொண்டிருக்கிறது என்கின்ற அர்த்தத்தில் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு நான் தெரிவிப்பதெல்லாம் இந்தத் தொழிற்சாலை பிரிகள் மூலமாக அவர்களுக்கு ஒரு குறியீட்டை நியமித்து அந்தக் குறியீட்டை அவர்கள் செய்தாக வேண்டும் என்கின்ற வழி காட்டும் நெறிமுறைகளை எல்லாம் இந்த அரசு அவர்களுக்கு வழங்கியிருக்கிறது. இந்த வழிகாட்டும் நெறிமுறைகளிலிருந்து பிறழ்கின்ற, தவறுகின்ற, மறுக்கின்ற யாராக இருந்தாலும் அவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சம வேலைக்கு சம ஊதியம் என்று கேட்டார்கள். அது ஒரு கோட்பாடு. ஒரு தத்துவம். அந்தத் தத்துவத்தை நோக்கி நாம் அனைவரும் நடை போடுவோம் என்பதைத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் திரு. வெள்ளிங்கிரி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். சகோதரி மாண்புமிகு திருமதி. லட்சுமி அவர்கள் தோட்டத் தொழிலாளர் பற்றியும் அவர்களுடைய நிலைமை பற்றியும் கவலைப்பட்டு பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களுடைய கவலை நீக்கப்படும். அந்தத் தோட்டத் தொழிலாளர்களுடைய நிலைமைகள் சீராக்கப்படும். அவர்கள் இருக்கின்ற இல்லங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமா என்கின்ற நிலைமைகளை எல்லாம் இந்த அரசு ஆழமாக ஆராய்ந்து நல்ல முடிவுகளை மேற்கொள்ளும் என்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி லட்சுமி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய திரு. ராம. நாராயணன் அவர்கள் வீடியோ பைரசி பற்றிப் பேசினார்கள். அதற்கு நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். வீடியோ பைரசியைப் பொறுத்தமட்டில், கண்டிப்பான, கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

அடுத்து நம்முடைத் உழவர், உழைப்பாளர் கட்சி மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஏ. மணி அவர்கள் பேசினார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு, கூலி நிர்ணயம் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே கூலி நிர்ணயம் செய்யப்பட்டாகிவிட்டது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மாதப்பன் அவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசுகின்றபோது தொழிலாளர்கள் நடத்துகின்ற போராட்டங்கள் மீது காவல் துறையினர் அத்துமீறிய நடவடிக்கையிலே ஈடுபடுகிறார்கள் என்று சொன்னார்கள். நிச்சயமாக இந்த அரசு அந்த வர்க்கத்தினுடைய போராட்டத்தில், உரிமைகளுக்காக நடைபெறுகின்ற போராட்டத்தில் காவல்துறையினுடைய தலையீட்டைக் குறைக்கும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய பாளையங்கோட்டை உறுப்பினர் மாண்புமிகு திரு. குருநாதன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் எஸ்.ஐ. மருத்துவமனை ஒழுங்காகச் செயல்படவில்லை என்று



சொன்னார்கள். லேபர் கோர்ட் ஒரு மாவட்டத்திற்கு ஒன்று வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஏ.சி.எல்., டி.சி.எல்., இவர்கள் எல்லாம் நியமிக்கப்படாத காரணத்தினாலே வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அந்தக் குறைபாடு களை எல்லாம் அரசு கவனித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் குறைபாடுகள் நீக்கப்படவேண்டும் என்பதற்காக அரசு விரைவான நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையிலே மேற்கொண்டிருக் கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, தமிழக அரசினுடைய செய்திப் படச்சுருள் என்பது 'ஏ' சென்டர்களில் மட்டும் போடப்படுகிறது. பி அண்டு சி சென்டர்களுக்கு அது விஸ்தரிக்கப்படவேண்டும் என்று தெரிவித் தார்கள். நல்ல யோசனை. அந்த யோசனை சட்டதிட்டங் களுக்குட்பட்டு பரிசீலிக்கப்பட்டு, பி. மற்றும் சி. சென்டர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்கள் பீடித் தொழிலாளர்களுக்காக வாதாடினார்கள். பீடித் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டாகிவிட்டது. 'கணேசா பீடி' மட்டும் நிறை வேற்ற மறுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது உண்மையாக இருக்குமேயானால் உரிய நடவடிக்கை சம்பந்தப்பட்டவர்கள் மீது தொடரும் என்பதையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். அடுத்து, நம்முடைய திரு. இராதா அவர்கள் சொன்னார்கள். ஏதோ அதிகாரிகள்தான் தன்னிச்சையாக நடப்பார்கள். அவர்களைக் கண்ணும் கருத்துமாகப் பார்க்கவேண்டும் என்றும் அவர்கள் அதிகாரிகளை நம்பக்கூடாது என்கின்ற பொருள்படச் சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தமட்டில், இந்த ஆட்சியைப் பொறுத்தமட்டில், அதிகாரிகளை நம்பிச் செயல்படும். அதிகாரிகள் ஏமாற்றுகின்ற அளவிற்கு இங்கே அமைச்சர்களும் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களும் இல்லை என்பதையும் நான் இங்கே அவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே, ஏமாற்றப்படக்கூடியவர்கள் இல்லாத காரணத்தினாலே ஏமாற்றுபவர்களைப் பற்றி இந்த அரசு கவலைப்பட வேண்டிய அவசியம் கனவிலும் இல்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, நெசவுத் தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் இதிலே அக்கறை எடுத்துக்கொள்வதிலே நியாயம் இருக்கிறது. அவர் எனக்காகவும் சேர்த்துத்தான் வாதாடுகிறார், காரணம் எங்களுடைய தொகுதி அனைத்திலும் நெசவுத் தொழிலாளர்கள் நிரம்ப இருக்கிறார்கள். அதற்கு அவர்கள் என்ன ஆக்கபூர்வமான யோசனைகள் சொன்னாலும் கூட, அதை இந்த அரசு ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. எப்போது வேண்டு மானாலும், மன்றத்திலே வேண்டுமானாலும், தனியாக வேண்டு மானாலும் நெசவுத் தொழிலாளர்களுடைய இடர்ப்பாடுகள் களையப்படவேண்டும் என்பதற்கு ஆக்கபூர்வமான யோசனைகளை

அவர் வழங்குவாரேயானால் முழுமனதோடு, வாழ்த்துச் சொல்லி அந்தக் கருத்துக்களையெல்லாம் இந்தஅரசு ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, பத்திரிகை விளம்பரம் பற்றிச் சொன்னார்கள். பத்திரிகை விளம்பரம் என்பது, கடந்த காலத்திலே நடந்தவை களையெல்லாம் நான் எடுத்துச் சொன்னால் அது தொடர்கதை யாகப் போய்க்கொண்டிருக்கும். எனவே, What is done cannot be undone. ஏற்கெனவே செய்தவைகள் செய்தவைகளாகத்தான் இருக்குமே அல்லாமல், இனிமேல் அதை மாற்றிச் செய்வது என்பது இயலாத காரியம். எனவே, அந்த அடிப்படையில் ஏற்கெனவே நடந்தவைகளைப் பற்றி எல்லாம் நான் எடுத்துச் சொல்லத் தயாராக இல்லை. எனவே, அந்தப் பிரச்சினையைப் பற்றி அவர் பேசாமலே இருந்திருக்கலாம். இன்றைக்குப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பதற்குப் பல்வேறு முறைகள் 'நார்ம்ஸ்' கையாளப்படுகின்றன. 'டோன் அண்டு கன்டென்ட்ஸ்' சர்க்குலேஷன் என்கின்ற பல்வேறு அந்த நிலைமைகளை எல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்துத்தான் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்கப்படுகிறது. இந்த அரசினுடைய தலையாய கொள்கைகளிலே, தலையாய நடைமுறைகளிலே ஒன்று சிக்கனப்படுத்துவது ஆகும்.

சிக்கனப்படுத்துகின்ற நடவடிக்கை மேற்கொண்ட இந்த அரசு விளம்பரத் துறையிலேயும் சிக்கனப்படுத்துவதற்கு விரும்பு கிறது. அப்படி சிக்கன நடவடிக்கையின் காரணமாக சில பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்காமல் இருந்திருக்கக் கூடும். பல விளம்பரம் கொடுக்காமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். அவர்களுடைய 'டோன் அண்டு கன்டென்ட்ஸ்' சரியாக இல்லாமலும் இருந்திருக்கலாம், எனவே, அந்த நார்ம்ஸ்க்குட்பட்டு வராமல் இருந்த காரணத்தினாலே அந்த விளைவுகள் ஏற்பட்டு இருக்கலாம். தனித்து எந்தப் பத்திரிகை என்று பின்னாலே அவர்கள் சொல்வார்களேயானால், அந்த நார்ம்ஸ் எல்லாம் இருக்கிறதா என்று பார்த்து, அதிலே நடவடிக்கை உரிய காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று நான் உரிய தெரிவிக்க விரும்புகிறேன்.

எனவே, அந்த அடிப்படையில் இங்கே கருத்துக்கள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டார்கள். ஒன்று, ஆபாசச் சுவரொட்டி பற்றிச் சொன்னார்கள். ஆபாசச் சுவரொட்டிகளுக்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவற்றை எல்லாம் எடுக்கிறோம். இன்னொன்று, நீலப்படம், 'புளூ பிலிம்' பற்றிச் சொன்னார்கள். அதுபற்றியும் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.



(பிற்பகல் 3-10)

ஆனால் இவைகளையெல்லாம் எப்படி நடவடிக்கை எடுப்பது? எப்படி அதைக் கட்டுப்படுத்துவது என்கின்ற நிலையில் தான் சில இடர்பாடுகள் இருக்கின்றன. இதிலே அனைத்து கட்சிக்காரர் களும் ஆலோசனை வழங்கலாம். இதை நடைமுறைப்படுத்து வதிலே ஏற்படுகின்ற சிக்கல்களைத் தவிர்த்து இதைக் கண்டிப்பாக நடைமுறை செய்ய எல்லாவிதமான அக்கறையையும் இப்போது அரசு எடுத்துக் கொள்ளும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்து கருத்துக்களை வழங்கிய அனைத்து மாமன்ற உறுப் பினர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் சொல்லி உங்களுடைய நேரத்தை எடுத்துக் கொண்டமைக்கு பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானிய கோரிக்கையிலே பதில் தெரிவித்ததற்குப் பின்னால் அதை விவாதிப்பது என்பது பழக்கத்திலே தேவையில்லை என்று சொன்னாலும் நான் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லிக் கொண்டிருப்பது நேரத்தை எந்த அளவுக்கு பாதிக்கும் என்ற நிலையில் ஒரே ஒரு வரியில் நான் சொல்கிறேன். தொழிலாளர் நல நிதியை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தவேண்டும். வேறு நல்ல காரியங்கள் இருக்கின்றன. இப்படி உதவி தருகிற நேரத்தில் அதற்கு எந்தத் தடை இருந்தாலும் அதை பல்வேறு சட்டங்கள் போட்டு நீக்கி இருக்கிறோம். சட்டம் போட்டு நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் 1986 ஆம் ஆண்டில் ஒரு சட்டம் போட்டு இருந்தால் அந்தச் சட்டத்தை நீக்கி விட்டு தரவேண்டுமே தவிர அதைக் காட்டி அதற்காக இந்த நிதியை எடுத்துச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

அதுபோல் அரிசி வழங்குவதிலே ஏற்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் அரிசி அன்றைக்கு வழங்குகிற நேரத்தில் அன்றைக்கே தொழிற்சங்கப் பேரவையில் இருந்து அளந்து பார்ப்பதற்கு 6400 இடங்களைத் தேர்வு செய்து ஆங்காங்கு இருக்கின்ற எங்களுடைய தொழிற்சங்க அமைப்பாளர் களை அனுப்பி அளந்து பார்க்கவேண்டும் என்ற முறையில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தோம். அதிலே கிடைத்த புள்ளி விவரங்களைச் சொல்லுகிறோமே தவிர நாங்கள் வாங்கிய அரிசியில் இவ்வளவு குறைந்து விட்டது என்று அல்ல. அரிசி வாங்கியவர்களுக்குத் தெரியும் எவ்வளவு குறைந்து இருக்கிறது என்று. அரசியலுக்கு வேண்டுமானால் பேசிக் கொள்ளலாமே தவிர வாங்கியவர்கள் அவ்வளவு பேரும் எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஒத்துக் கொள்வார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் நடராசன் விவகாரத்தைப் பொறுத்த வரையில் முழுக்க முழுக்க சொல்கிறேன். நீங்கள் அரசியல்....

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு சம்பிரதாயம் இருக்கிறது. சட்டமன்றத்தில் பதில் சொல்லிய பின்னால் விளக்கம் பெற விரும்பினால் தொடர்புடைய உறுப்பினர்கள் வினாக்கள் மூலமாக விளக்கம் பெறலாம். அதை விடுத்து நீங்களே விளக்கம் சொன்னால் நான் எப்படி? வினாவா கேட்பது.

திரு. எஸ். ஆர். ராதா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லவில்லை. நடராசன் விவகாரம் அரசியல் விவகாரம் என்ற அளவுக்கு நீங்கள் பழி வாங்குகிற உணர்ச்சியோடு நடந்து கொள்கிறீர்கள் என்பதை மட்டும் சுட்டிக் காட்டி இந்தப் போக்கு தடை செய்யப்படவேண்டும் என்பது தான் என்னுடைய கருத்து என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, யாராவது அரிசியைப் பற்றி புகார் கொடுத்து இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, இந்த விளக்கத்திற்குப் பின்னால் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அதை வலியுறுத்தாமல் இருக்குமாறு என்று நான் கேட்டிட விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவை மாற்றுச் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் கேட்டு அறிந்து அக்கறையோடு பதில் அளித்ததற்கு நான் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாதவரம் பால் பண்ணையில் வேலை இழந்த அனைவருக்கும் வேலை கொடுப்பதாக நமது அரசு அறிவித்தது. சிலருக்கு வேலை கொடுக்கவில்லை என்ற புகார் வந்துள்ளதே, அது அரசுக்குத் தெரியுமா? அந்த சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுடைய கருத்துக் களை அறிந்து வேலை கொடுக்கப்படுமா?

அடுத்து பொருள் போக்குவரத்துக் கழகம் கலைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதிலே இருக்கின்ற தொழிலாளர்கள் மற்ற போக்குவரத்துத் துறையில் எடுத்துக் கொள்ளப்படுவார்களா?

அடுத்து, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பெயரால் விருதுகள் வழங்குவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது என்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தது மகிழ்ச்சி யானது. அதனைத் தொடர்ந்து நமது அமைச்சர் பெருமகனாரும் உறுதி படுத்தியது மகிழ்ச்சியானது. ஏன் என்றால் அப்படி புரட்சிகரமான ஒரு நடிகராக இருந்த அவருக்கு அந்த மரியாதை செலுத்தவேண்டியது தான்.



இன்னும் ஒரு ஆலோசனையாகவும், ஒரு வினாவாகவும், சொல்ல விரும்புவது, தமிழகத்திலே முதன் முதலாக படம் எடுத்தவர் மௌனப் படம் என்று சொல்லுகின்ற 'சைலன்ஸ் பிக்சர்' எடுத்தவர் நடராச முதலியார் என்று சொல்கிறார்கள். அவருடைய பெயரால் ஏதாவது விருதுகள் வழங்கப்படுமா என்பதை இங்கே உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

நீங்கள் பல்வேறு செய்திகளைப் படிக்கின்றவர்கள். பல தியாகிகள் சிறைச் சென்ற பல ஆண்டுகளை மாறி, மாறி நாம் படித்து இருக்கின்ற நேரத்தில் சில நேரங்களில் ஒன்றுக்கு ஒன்று நாம் வேறு வகையில் தெரிந்துகொள்வதற்கோ, புரிந்து கொள்வதற்கோ, சொல்வதற்கோ வாய்ப்பு வந்து விடுகிறது. எனவே பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் சிறை இருந்த நாட்கள் ஏறத்தாழ 14 ஆண்டுகள் என்பதை உங்களுக்கு நினைவு படுத்துகிறேன்.

எம்.ஆர்.டி.பி. ஆக்ட் என்று சொல்வது தனி மனிதனுடைய மூளையிலே, ஆற்றலிலே வருகின்றவைகளெல்லாம் இந்தச் சட்டத்திற்குள்ளே வருமா என்று தெரியாது. மதுரையிலே, சங்கரதாஸ் சுவாமிகள் எல்லா கலைகளிலும் சிறந்தவராக இருந்தார்கள் என்பது நமக்குத் தெரியும். அப்படிப்பட்ட சங்கர தாஸ்கள் உருவாக வேண்டுமென்று நாம் விரும்புகிற காரணத் தினாலே, அமைச்சர் பெருமகன் அப்படிப்பட்டவர்களை உருவாக்குகின்ற வகையிலே சில செயல்களை நடத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய துணைத் தலைவர் எடுத்துத் தெரிவித்த கருத்துக்களை முதலமைச்சரோடு கலந்து கொண்டு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரை யாற்றுகின்றபோது, இலவசமாக அரிசி வழங்குகிற விழாவிலே கலந்து கொள்வதற்கு அழைப்பு விடப்பட்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ளாமல் புறக்கணித்தார்கள் என்று சொன்னார்கள். அந்த நிகழ்ச்சிகளிலே அவர்கள் கலந்து கொண் டிருக்கலாம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். எங்களை அதிகாரிகள் அணுகியபோது நாங்கள்கூட அந்த அழைப்பி தழ்களில் எங்கள் பெயர்களைப் போடுங்கள் என்று சம்மதம் அறிவிட்டோம். ஆனால் அதற்குப் பின்னாலே அந்தக் கட்சியின் அமைப்புச்செயலாளராக இருக்கிற திரு.நீலநாராயணன் அவர்கள், ரேஷன் கடைகளிலேயும் அந்த விழா நடக்கின்ற இடங்களிலேயும் தி.மு.க. கொடிகளைக் கட்டி விளம்பரப்படுத்தி அதை தி.மு.க.

விழாவாக கொண்டாட வேண்டுமென்று அறிவித்ததையொட்டி அந்த நிகழ்ச்சிகளிலே நாங்களும் கலந்து கொண்டால், அங்கே அண்ணா தி.மு.க ,காங்கிரஸ் கொடிகளையும் கட்டவேண்டி வரும். அதனாலே அசம்பாவிதமும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் நடக்கலாம் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். அதற்குப் பின்னாலே அது நடந்தது. 22 ஆயிரம் ரேஷன் கடைகளிலேயும் அதைப்போல தி.மு.க. கொடிகள் அந்தக் கடைகளுக்குள்ளேயே கட்டப்பட்டு இந்த நிகழ்ச்சிகள் நடந்தன. அதை பல சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே கவன ஈர்ப்பாகக் கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி கேள்விகளையும் கேட்டிருக்கிறார்கள். இது ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட முறைதான். எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இதற்கு முன்னாலே இலவசமாகப் பாடபுத்தகங்கள் கொடுக்கப்பட்டது, இலவசமாகச் சீருடைகளெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி இதுபோன்றவைகள் நடைபெற்றபோது அது அரசு நிகழ்ச்சிகளாக நடந்திருக்கிறது. கட்சி நிகழ்ச்சியாக அவை மாற்றப்பட்டதில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. மு. இராமநாதன் ): உறுப்பினர்கள் அனைவரும் தயவுசெய்து உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) முதலிலே தயவுசெய்து உட்காருங்கள். எல்லோரும் போதுமான நேரம் பேசலாம். முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் அவரைப் பேச அனுமதித்து இருக்கிறேன், ஆகவே உட்காருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னை பேச அனுமதித்திருந்தாலே நான் இந்நேரம் முடித்து இருப்பேன். எனவே பிற்காலத்திலே நடக்கின்ற நிகழ்ச்சிகளிலே, அரசு விழாவை அரசு விழாவாக நடத்துவீர்களானால், அண்ணா தி.மு.க.வும் அதிலே கலந்து கொள்வதற்கு யோசிக்கும். அதைத்தான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்லிய விளக்கத்திற்காக நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். கழகத்தினுடைய அமைப்புச் செயலாளர் திரு. நீலநாராயணன் அவர்கள் எந்தக் காலகட்டத்திலும் நியாய விலைக் கடைகளிலே கொடி கட்டுங்கள் என்று அறிக்கை விட்டிருக்க மாட்டார்; அப்படி விட்டிருக்க முடியாது. ஒரு அரசு செய்கின்ற நல்ல காரியங்களை அரசியல் கட்சிகள் விழாவாகக் கொண்டாடுவதிலே தவறில்லை. மக்களுக்கு எடுத்துச் சொல்வதிலும் தவறில்லை. அது உங்களுக்கு எந்த அளவிற்கு இடைஞ்சலாக இருந்தது? எந்த நிகழ்ச்சியிலே அப்படி இருந்தது என்று தனித்துச் சுட்டிக்காட்டினால் அந்த நிகழ்ச்சியைப் பொறுத்தமட்டில் நாம் நடவடிக்கை எடுப்பதற்கும், விளக்கம் கோருவதற்கும் வாய்ப்பாக இருக்குமேயல்லாமல், ஒட்டு மொத்தமாகச் சொல்லி, ஒரு அறிக்கை விட்டார், அதனாலே தொல்லைகள் வந்தது என்பதைவிட குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியைச் சொல்லி, அந்த நிகழ்ச்சியில் இப்படி ஏற்பட்டது, அப்படி நடக்கலாமா என்று கேட்டால் அரசு நிச்சயமாக அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. நேரம் இப்பொழுது 3.19 ஆகிறது. பிற்பகல் நிகழ்ச்சியும் இருக்கிறது. எந்த ஒரு உறுப்பினருடைய உரிமையையும் பறிக்க வேண்டுமென்பது இந்தச் சபையினுடைய நோக்கமல்ல. ஆகவே, மீண்டும் அவை இருக்கின்ற காரணத்தால் எல்லோரும் பேசவேண்டுமென்று நீங்கள் விரும்புவதை இங்கே உட்கார்ந்து கொண்டு நான் தடுப்பதாகத் தயவுசெய்து நினைக்கக் கூடாது. அப்படியானால் எதுவரைக்கும் அவையை நடத்தலாம் என்பதைப்பற்றி நீங்களே முடிவு செய்து கொள்ள வேண்டும். ஆகவே, விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(பிற்பகல் 3-20)

## கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

திரு. பொன்.விஜயராகவன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்): திரு. எஸ்.டி. உகம்சந்த் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்தி, அதற்கான காரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்): காரணத்தைச் சொல்ல நேரம் இல்லை. வலியுறுத்துகிறீர்களா இல்லையா என்பதை மட்டும் சொல்லுங்கள். இன்று பிற்பகலிலும் அவை கூடுகிறது. (குறுக்கீடுகள்) நேரம் இல்லாததால் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை.

*திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, நேரம் கடந்து விட்டதால் தங்களுடைய உத்தரவை ஏற்றுக்கொள்கிறேன். இருந்தாலும் மரபு என்னவென்றால் வெட்டுத் தீர்மானம் கொடுத்தவர் எதற்காக வலியுறுத்துகிறாரோ அதற்கான காரணத்தைச் சொல்ல அனுமதிக்க வேண்டும். இப்படியே கூட விட்டுவிடலாம். ஆனால் அது இந்தமாதிரியாக தொடர்ச்சியாக நடைமுறைகளுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். அவரை அனுமதித்தால் ஒரே நிமிடத்தில் சொல்லி முடித்து விடுவார்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் விரைவில் திறக்கப்படும என்று சொன்னார்கள். பிப்ரவரி மாதம் 700 பேர்களுக்கு பணி நீக்கம் செய்து உத்தரவு வழங்கப்பட்டிருக் கிறது. இன்னும் மூன்று மாதம் முடிந்தால் அவர்கள் நிரந்தரமாக பணி நீக்கம் செய்யப்பட்டுவிடுவார்கள். (குறுக்கீடுகள்) அந்த மூன்று மாதம் விரைவில் முடியவிருக்கிறது. அந்த காலம் முடிவதற்குள் அந்த ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனத்தைத் திறக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு புதிய விளக்கத்தைக் கேட்கவில்லை. அவர் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அதற்கு நான் விளக்கம் அளித்திருக்கிறேன். அந்த நிறுவனத்தை திறப்பதற்கான முயற்சியை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்): இப்போது வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறீர்களா?

திரு. எஸ். டி. உகம்சந்த்: அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை நான் திரும்பப்பெற்றுக் கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்): பேரவை முன்னுள்ள கேள்வி

"மானியக் கோரிக்கை எண் 29 —தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,03,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

**கோரிக்கை எண் 44—எழுது பொருள்—அச்சுத்துறை.**

திருவாளர்கள் கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், பொன். விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றனவாகக் கருதப் பெற்றன.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்): பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 44—எழுது பொருள்—அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,70,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்): பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 5.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 3.24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 5 மணியளவில் மாண்புமிகு டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஒ) பொதுக் கணக்குக்குழு—உறுப்பினர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989-90-ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவிற்குக் கீழ்க்கண்ட 16 உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்:—

1. திரு. வ. அன்பழகன்
2. திரு. நா. இராமகிருஷ்ணன்
3. திரு. சா. கணேசன்
4. திரு. ஏ. ஜி. சம்பத்
5. திரு. வே. தங்கபாண்டியன்
6. திரு. மா. பன்னீர்செல்வம்
7. திரு. ஐ. பெரியசாமி
8. திரு. இரா. மோகன்
9. திரு. எஸ். டேனியல் ராஜ்
10. திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்
11. திரு. கே. அர்ஜுனன்

12. திரு. கே. ஏ. செங்கோட்டையன்

13. திரு. சி. கோவிந்தராஜன்

14. திரு. டி. சி. விஜயேந்திரையா

15. திரு. எம். அப்துல் லத்தீப்

16. திரு. பொன். விஜயராகவன்

நியமனம் செய்யப்பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1989-90-ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

நிதியமைச்சர் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோரும் தங்கள் அலுவல் காரணமாகவும் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர். பேரவையின் 204-வது விதியின் கீழ் திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி.

*மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையிலே நான் இந்தக் கோரிக்கை மீதான தீர்மானத்தை மொழிந்தேன். ஆனால் அந்த நேரத்தில் முன்னுரையாக ஒரு விளக்கம் தர முடியாததன் காரணமாக இங்கே மதிப்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு ஐயப்பாடு எழுந்தது. ஒட்டுமொத்தமாக செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் ஆகிய இந்த மூன்று துறைகளுக்கும் சேர்த்து நான் மானியக் கோரிக்கையை மொழிந்ததன் காரணமாக இந்த மூன்று துறைகளுக்கும் நானே அமைச்சராக இருக்கிறேனோ என்ற ஒரு ஐயப்பாடு எழுந்தது. என்னுடைய முன்னுரையிலேயே நான் விளக்க எண்ணி இருந்தேன். அப்போது முடியாததன் காரணமாக இப்போது அதை நான் விளக்குகிறேன். இந்த மூன்று துறைகளிலே செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் ஆகிய துறைகளுக்கு மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் அமைச்சராக இருக்கிறார்கள். சுற்றுலா என்னுடைய பொறுப்பிலே இருக்கிறது. ஆனால் மூன்று துறைகளுக்கும் சேர்த்து மானியம் ஒட்டுமொத்தமாகக் கணக்கிடப்படுவதாலே இந்த இரண்டு பேரிலே யாராவது ஒருவர் இந்த மானியக் கோரிக்கையை எழுப்ப வேண்டும் என்று சொல்லி இருவரிலே நான் மூத்த அமைச்சர் என்ற அடிப்படையில் இங்கே அந்தப் பணி எனக்குத் தரப்பட்டது. ஏனைய இரண்டு துறை



களைப் பற்றியும் மாண்புமிகு அமைச்சர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் மிக விளக்கமாகவும், விரிவாகவும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே சுற்றுலாத்துறையைப் பொறுத்தமட்டில் நான் என்னுடைய பதிலுரையை இங்கே தர விழைகிறேன்.

இங்கே காலையிலே பேசிய ஏறத்தாழ 12 உறுப்பினர்களிலே 3 பேர் மட்டும் சுற்றுலாத் துறையைத் தொட்டுப் பேசினார்கள். அதிலே மிக அதிகமாக நம்முடைய இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுடைய கருத்துக்களை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் அதிலே பெரும் பகுதியை நான் ஏற்றுக் கொள்ள முற்படுகிறேன். குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து வருகிற பயணிகளுக்கு நாம் என்னென்ன தகவல்களைச் சேர்த்து தரவேண்டுமென்றெல்லாம், அவர்கள் ஒரு விரிவுரையாகவே இங்கே ஆற்றினார்கள். அம்மசிப்பலாவிலே இருந்து—மிக அதிகமான தகவல்களை அவர்கள் இங்கே தந்து இருக்கிறார்கள். நான் அவற்றை மீண்டும் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

ஆனால் அவர்கள் சொன்னவற்றிலே ஒன்றிரண்டை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வழி காட்டிகளைப் பற்றி சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். இங்கே அவர்கள் பேசுகிறபோது, 'நான் பல நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறேன்' ஆகவே இந்தத் துறையைப் பற்றி, இந்த துறையினுடைய வளர்ச்சி பற்றி நன்றாக தெரியும், என்று சொல்லி விட்டு என்னைவிட அதிகமான இடங்களுக்குச் சென்று வந்த அனுபவத்தை இங்கே சொன்னார்கள். குறிப்பாக, எகிப்து நாட்டிற்கு நான் செல்லவில்லை. அங்கே சென்று வந்து அங்குள்ள கோபுரத்தைப் பார்த்த விவரத்தைச் சொன்னார்கள். வெளிநாட்டிலே இருக்கின்ற அளவுக்கு இங்கே கைடுகள் இல்லை. நான் ஏற்றுக்கொள்கிறேன். வெளிநாடுகளிலே உல்லாசப் பயணிகள் பேருந்துகளிலே செல்கின்ற நேரத்திலே அங்கே இருக்கக்கூடிய கைடுகள், வழிகாட்டிகள் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பார்கள். நல்ல தோற்றம் உள்ள இளம் பெண்கள், இன்னும் சொல்லப்போனால், கல்லூரி மாணவ-மாணவியர்கள் கூட ஓய்வு நேரத்திலே அல்லது விடுமுறை காலங்களிலே அப்படிப் பட்ட பணிகளை அங்கே செய்கின்றார்கள். எல்லா மொழிகளிலும் சொல்லாவிட்டாலும் அங்கே அவசியமான மொழிகளிலே சொல்கின்றார்கள். பல்வேறு அவசியமான மொழிகள் அவர்களுக்குத் தெரியும். எந்த நாட்டிலேயிருந்து பயணிகள் வந்தாலும், குறிப்பாக இங்கிலாந்து நாட்டிலே லண்டன் நகருக்கு பிரான்சு நாட்டிலேயிருந்து வருகின்ற பயணிகளுக்கு பிரெஞ்சு மொழியிலே சொல்ல வேண்டும், ஜெர்மன் நாட்டிலேயிருந்து வருகின்ற பயணிகளுக்கு

ஜெர்மன் மொழியிலே சொல்ல வேண்டும். அப்படி 3,4 மொழி
களையாவது தெரிந்தவர்களாக அங்கே கைடுகள் இருக்கின்
றார்கள். இங்கே அந்த வசதி குறைவுதான். நாம் இதை மேலும்
பெருக்குகின்ற அளவுக்கு, இந்த வசதிகளை, கைடுகளை பெருக்கு
கின்ற அளவுக்கு சில நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும்.
அதை அரசு கவனத்தில் கொண்டு அதற்கான பணிகளைச்
செய்யும்.

அவர்கள் இன்னொன்றை இங்கே சொன்னார்கள். இங்கே
யுள்ள வரைபடங்களிலே, சுற்றுலாத் துறை மூலமாக வெளியிடப்
படுகின்ற படங்களிலே, விவரக் கையேடுகளிலே, சினிமா நடிகர்
களுடைய, நடிகைகளுடைய படங்களை மட்டும்தான் போட்டு
வெளியிடுகிறார்கள் என்று சொன்னார்கள். நானும் இதுவரை
அப்படிப்பட்ட படத்தை பார்த்ததில்லை. சினிமாவை பார்த்திருக்
கிறேன். நடிகைகளைப் பார்த்திருக்கிறேன். சினிமா நடிகர்கள்,
நடிகைகளுடைய படத்தைப் பார்த்திருக்கிறேன். ஆனால்
சுற்றுலாத் துறையைச் சேர்ந்த கையேடுகளிலே அப்படிப்பட்ட
படங்களைப் போட்டு இருப்பதை நான் பார்த்ததில்லை. இந்தத்
துறையைச் சேர்ந்த அதிகாரிகளிடம் கேட்டேன். இதுவரை
அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யவில்லை என்று தெரிவித்
தார்கள். அதற்கு மேலும் ஏதாவது விளக்கம் இருந்தால் தரும்படி
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, ஒரே ஒரு திருத்தம். நெல்லை மாவட்டத்திலே
திருச்செந்தூர் அருகே, குலசேகரப்பட்டணத்திலே
கலைக்கூடம் ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு திட்டம் இருக்கிறது
என்பதாக பொதுக்கூட்டத்திலே நான் பேசி இருந்தேன். இங்கே
ஒரே ஒரு திருத்தம் மட்டும்தான் சொல்ல விரும்புகிறேன். அது
முத்தாரம்மன் கலைக்கூடம் அல்ல. 'முத்தாரம் கலைக்கூடம்'.
அது அந்த முத்தாரம்மனுடைய கோயில் அருகிலே உருவாக்கப்பட
இருக்கின்ற காரணத்தினாலே, எப்படி 'பூம்புகார்' என்ற ஒரு
பெயர் சூட்டப்பட்டு இருக்கிறதோ, அது போல 'முத்தாரம்
கலைக்கூடம்' என்ற அளவுக்கு அப்படிப்பட்ட ஒரு கலைக்கூடத்தை
அறநிலையத் துறை சார்பாக உருவாக்க, எண்ணியிருக்
கிறோம். அங்கே அது சுற்றுலா பயணிகளுக்கும் பயன்படும் என்று
கருதுகிறேன். ஏனென்றால் தசரா சமயத்திலே ஒவ்வொரு
ஆண்டும், கடந்த 20 ஆண்டுகளாக தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய
அத்தனை கிராமிய கலைஞர்களும்—கரக ஆட்டக்காரர்கள்
போன்ற கிராமிய கலைஞர்கள்—புதுக்கோட்டையிலே இருந்தும்,
தஞ்சாவூரிலிருந்தும், ஏறத்தாழ தமிழ்நாடு முழுவதிலும் இருந்து
வந்து சேர்ந்து ஒரு நாள், இரு நாட்கள் கலை நிகழ்ச்சியை நடத்து
கின்ற காட்சியானது வெளிநாட்டுப் பயணிகள் மிகவும் ரசித்துப்
பார்க்கின்ற விதமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே
அந்தக் கலைக் கூடத்தை உருவாக்குகிறபோது சுற்றுலாத்துறை
மையத்தோடு இணைத்து அந்த இடத்தை வளர்க்க திட்டமிட்டிருக்
கிறோம்.





இன்னும் இங்கே பேசிய காஞ்சிபுரத்தைச் சேர்ந்த
மதிப்புமிக்க உறுப்பினர் திரு. முருகேசன் அவர்கள்
தமிழ்நாட்டிலே குறிப்பாக 11 இடங்கள், சுற்றுலா
பயணிகளைக் கவர்கின்ற இடங்களாக ஏற்கப்பட்டிருக்கும்போது
ஏன் எங்களுடைய காஞ்சிபுரம் அந்தப் பட்டியலிலே இல்லை
என்ற கேள்வியை எழுப்பினார்கள். இது அரசு அறிவிப்பு அல்ல.
வெளிநாடுகளிலிருந்து வரக்கூடிய பயணிகள் இந்தியாவில்
எங்கெங்கு அதிகமாக செல்ல விரும்புகிறார்கள், சென்று பார்க்க
விரும்புகிறார்கள் என்கிற ஒரு கணக்கெடுத்து அதன்
அடிப்படையில் இந்தியா முழுவதிலிருந்தும் 52 இடங்களைத்
தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதில் 11 இடங்கள் இங்கே
இருக்கின்றன என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். மொத்தம்
இந்தியா முழுவதும் இருக்கிற 52 இடங்களில் தமிழ்நாட்டில்
மட்டும் 11 இடங்கள் இருப்பது நமக்குப் பெருமை சேர்க்கக்கூடிய
ஒரு காரியமாகும். இராமேஸ்வரம், சென்னை, மாமல்லபுரம்,
மதுரை இப்படி 11 இடங்கள் அவ்வாறு கணக்கெடுக்கப்
பட்டிருக்கின்றன. ஆனால் தமிழக அரசு மாவட்டத்திற்கு
ஒன்றுக்குக் குறையாமல், சில மாவட்டங்களில் 2 இடங்கள்
என்கிற அடிப்படையில் மொத்தம் ஏறக்குறைய 30 இடங்களை
சுற்றுலா மையமாகத் தேர்ந்தெடுத்து அறிவித்திருக்கிறது. அந்தப்
பட்டியலில் காஞ்சிபுரம் இல்லாவிட்டாலும் கூட, பல
வெளிநாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள்,
அங்கே வந்து தங்குகிறார்கள், கோயில்களைப் பார்க்கிறார்கள்,
அங்குள்ள சங்கர மடத்திற்குச் செல்கிறார்கள். அவர்களுடைய
வசதிக்காக அங்கே ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய் செலவில் ஒரு
சுற்றுலா இல்லம் அல்லது யாத்ரிகர் நிவாஸ் என்கிற பெயரில்
சுற்றுலா இல்லம் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் இரண்டு
மாதங்களில் அது முடிக்கப்பட்டு அங்கே வெளிநாட்டிலிருந்து
வருகிற சுற்றுலாப் பயணிகள் தங்க வழிவகை செய்யப்படும்.
இன்னும் இதுபோன்ற பல்வேறு காரியங்களைக் காஞ்சிபுரத்தில்
செய்து தர முடியும்.

(மாலை 5-10)

அதுபோல இங்கே பேசிய உழவர் உழைப்பாளர் கட்சியைச்
சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் நாமக்கல் அருகில்
ஆஞ்சநேயர் கோயில் ஒன்று இருப்பதாகவும் அந்தக் கோயிலை
சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.
கோவிலை சுற்றுலா மையமாக எப்படி ஆக்குவது என்று எனக்குத்
தெரியவில்லை. ஒரு கோவிலை நல்ல கோவிலாக ஆக்க
முடியும். ஆனால் கோவிலை சுற்றுலா மையமாக சுற்றுலாத்
துறை ஏற்கமுடியாது. அந்தக் கோவிலைச் சார்ந்தவர்களே
திருப்பணிக்கு ஏற்பாடுபண்ணி நல்ல நிலைமைக்கு அதைக்கொண்டு
வந்தால் அப்படிப்பட்ட நிலையில் சுற்றுலாத் துறை அங்கு
வருகின்ற சுற்றுலாப் பயணிகளை கவனிக்கின்ற முறையில் ஏற்பாடு
செய்யும். ஆகவே, அந்தக் கோவிலை நல்ல நிலைமைக்கு
கொண்டு வர அங்கு உள்ளவர்கள், அங்கு வாழ்கின்றவர்கள்
தான் அதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

[திரு. கே. பி. கந்தசாமி] [1989 ஏப்ரல் 20

இன்னும், 3, 4 மானியக் கோரிக்கைகள் மீது உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்க இருப்பதால் நான் என்னுடைய உரையைச் சுருக்கமாக முடிக்கவிரும்புகிறேன். ஆனால் இறுதியிலே ஒன்றிரண்டு முக்கிய தகவல்களை, சுற்றுலாத் துறையிலே நாங்கள் என்ன செய்கின்றோம் என்பதை மட்டும் நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டிலும் 3 துறைகளுக்கும் சேர்த்து ஏறத்தாழ 4 கோடி ரூபாய்க்கு மேல் மானியம் கோரப் பட்டிருந்தாலும் கூட, மொத்தத் தொகையிலே சுற்றுலாத் துறைக்கு மட்டும் ஒதுக்கப்படுவது ஏறத்தாழ 1½ கோடிதான். அதிலும் திட்டப்பணிகளுக்காக என்று வருவது ஏறத்தாழ 60 லட்சம் அல்லது 65 லட்சம் ரூபாய் தான். இங்கே பேசிய இந்திரா காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள்வட்டக்கோட்டை பற்றி சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே சுற்றுலாப்பயணிகள் தங்கக் குடில் கள் என்று சொல்லப்படுகிற காட்டேஜுகள் அமைக்கப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது, ஆனால் அதற்காகப் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லையே என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். நான். இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது இந்த மாதிரி திட்டங்களைப் பொறுத்தவரையில் மாநில அரசு திட்டங் களுக்கு எவ்வாறு நிதிகள் ஒதுக்கப்படுகின்றன என்பதைப் பொறுத்தமட்டிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், இங்கே ஏழையெளியவர்களின் மேம்பாட்டு திட்டங்களுக்காக அதிகமான அளவில் நிதி ஒதுக்கப்படுகிறது. அதுபோல கல்விக்காக, பொதுப் பணிக்காக அதிக நிதி ஒதுக்கப்படுகிறது அப்படிப் பார்க்கின்ற போது சுற்றுலாத் துறைக்கு அதிகமாக நிதி கொடுப்பதில்லை. கடந்த 4 ஆண்டுகளில் — இப்போது நாம் 7வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தினுடைய, கடைசி இறுதி ஆண்டில் இருக்கிறோம். 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே மாநில அரசு அதற்காக ஏறத்தாழ 5 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று திட்ட மிட்டிருக்கிறது. மொத்தம் 14 கோடி ரூபாய்க்குத் திட்டமிடப் பட்டு, அதில் ஸ்டேட் ப்ளேனிங் கமிஷன் ஒத்துக்கொண்டது 5 கோடி ரூபாய் அளவுக்கான திட்டங்கள்தான். அதைப்போல மத்திய அரசு 4 கோடி ரூபாய் தருவதாக ஏற்பளித்திருக்கிறது. ஆனால் 4 ஆண்டுக்காலத்தில் இங்கே செலவிட்டிருப்பது ஏறத்தாழ ரூ. 1 கோடியே 60 இலட்சம், மாநில அளவிலே திட்டங்களுக்காக. நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தால் ஆண்டு ஒன்றுக்கு 40 இலட்சம் ரூபாய் வருகிறது. மத்தியிலே இருந்துகூட 4 கோடி ரூபாய்க்கு ஏற்பு அளிக்கப்பட்டாலும், 2 கோடி ரூபாய் அளவுக்குத்தான் திட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே மாநில அரசு அளவிலே அதிகமான நிதி ஒதுக்கப்படவில்லை. ஆனால் இந்தத் துறையிலே மத்திய அரசிடமிருந்து நாம் அதிகமான நிதியைப் பெறுவதற்கு வழிவகை இருக்கிறது. அவர்கள் மானியமாகத் தருகிறார்கள். நாம் ஒரு கோடி ரூபாய் மூலதனமாகச்



1989 ஏப்ரல் 20] [திரு. கே. பி. கந்தசாமி]

செலவிட்டால் அவர்கள் 3 கோடி ரூபாயை 1:3 என்ற அளவில் மானியமாகத் தருகிறார்கள் திட்டப் பணிகளுக்கு. இதை எப்படித் தருகிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டும். இந்திய நாட்டுக்கு வருகின்ற வெளிநாட்டுப் பயணிகள் மூலமாக வரக்கூடிய அன்னியச் செலாவணி இந்த ஆண்டு 2,000 கோடி ரூபாய். 1987 ஆம் ஆண்டு 1,440 கோடி ரூபாய் என்று சொல்லி யிருக்கிறார்கள். இந்த ஆண்டு 2,000 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அந்த 2,000 கோடி ரூபாயும் மத்திய அரசுக்கு வருவாயாக வருவதில்லை. ஆங்காங்கு வெளிநாட்டுப் பயணிகள் ஓட்டல்களில், தங்குகிற இடங்களில் சாப்பிடுவது, சுற்றிப் பார்க்கும் இடங்களில் கட்டணமாகக் கொடுப்பது, இந்த வகைகளிலே வருவாய் 2,000 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது. மத்திய அரசுக்கு அந்த அன்னியச் செலாவணி வருவாய். அந்த 2,000 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி வருவாயிலே தருகிறார்கள். அல்லது இங்கே வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய பயணிகள் ஏறத்தாழ 20 சதவிகிதம் என்று எடுத்துக் கொள்ளலாம், சரியான கணக்கில்லை, அவர்கள் அன்னியச் செலாவணியை இங்கே தருகிறார்கள். இங்கே அவர்கள் செலவிட்டு, அந்த அன்னியச் செலாவணி ரிசர்வ் வங்கிக்குப் போகிறது. இப்படிப்பட்ட காரணங்களால் மாநிலங்களுக்கு சுற்றுலாவுக்கு மானியமாகத் தாராளமாகத் தர வேண்டுமென்பது மத்திய அரசினுடைய கொள்கை. நாம் கேட்டால்தான் அங்கேயிருந்து கிடைக்கும். கடந்த 4 ஆண்டுகளில் இந்தத் துறை அதிகமாகக் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும் டெல்லிக்கு அருகாமையில் உள்ள அரியானா மாநிலத்தை எடுத்துக்கொண்டால் அங்கே நல்ல வளர்ச்சி. பல கோடி ரூபாயை மத்திய அரசு அங்கே மானியமாகக் கொடுத்திருக்கிறது. தென் பகுதியில் கர்நாடக மாநிலம் தாராளமாகப் பெற்றிருக்கிறது, நல்ல வளர்ச்சியை அங்கே பெற்றிருக்கிறார்கள். இங்கும் இந்த ஆண்டிலிருந்து நல்ல நல்ல திட்டங்களை உருவாக்கி, அவற்றை மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மானியத்தை அதிகமாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம். அந்த அளவிலேதான் வட்டக்கோட்டை வருகிறது. டச்சுக் காரர்கள் முதன்முதலாக இறங்கியது தரங்கம்பாடி, அடுத்தது வட்டக்கோட்டை. அவர்கள் கட்டிய கோட்டை அது. வட்டமாக அமைந்திருக்கிறது. கடற்கரை ஓரத்தில் அது இருக்கிறது. 4, 5 ஏக்கரில் அது அமைந்திருக்கிறது. அதைச் சுற்றி 40, 50 ஏக்கர் இன்னும் பெற்று, பட்டாதாரர்களிட மிருந்து நிலங்களைப் பெற்று செய்ய வேண்டும். அங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினரிடம் பேசி இருக்கிறேன். 50 ஏக்கர் நிலத்தைப் பெற்றுத் தர அவர்கள் சம்மதம் தெரிவித்திருக் கிறார்கள். திருவனந்தபுரம் அருகே கோவளத்தில் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் அளவுக்கு காட்டேஜஸ் இருக்கின்றன. அப்படி வட்டக்கோட்டை அருகே குடில்களை, காட்டேஜ்களைக் கட்ட வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம்.

[திரு. கே. பி. கந்தசாமி] [1989 ஏப்ரல் 20

(மாலை 5-20)

இதுபோல பூம்புகார் — நம் ஆட்சிக் காலத்தில், முன்பு தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது — கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவர்களுடைய கற்பனையில் உருவாக்கப்பட்ட நகரம்தான் பூம்புகார். ஏறத்தாழ ரூ. 75 லட்சம் செலவில் உருவாக்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு அது எப்படியோ வேறு பல திட்டங்களைப் போல், தேடுவாரற்று கிடந்துவிட்டது. மீண்டும் அதை நல்ல முறையில் உருவாக்கிட வேண்டும், வளர்த்திட வேண்டும் என்று நாங்கள் திட்டமிட் டிருக்கிறோம் இந்த ஆண்டிலேயே ஏறத்தாழ அங்கே ரூ. 100 லட்சம் செலவில் கடல் அரிப்பைத் தடுக்க திட்டமிட்டிருக் கிறோம். கடல் அலை வந்து ஓரத்தில் இருக்கிற கட்டிடங் களையே அழிக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே ரூ. 50 லட்சம் செலவில் தடுப்புச் சுவர் கட்ட இருக்கிறோம். அங்கே இன்னும் சில முன்னேற்றப் பணிகளை எடுத்துக் கொள்ளவும் இருக்கிறோம். அதாவது ரூ. 100 அல்லது ரூ. 110 லட்சம் செலவில் பூம்புகாரை மேம்படுத்த இருக்கிறோம்.

அடுத்து, சென்னை நகரில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கே தெரியும். ஐலண்டு கிரவுண்ட்ஸ் என்று இருக்கிறது. அதை இப்போது ''ஃபேர் லேண்ட்ஸ்'' என்று மாற்றியிருக்கிறார்கள். மத்திய அரசு 99 ஆண்டுக் கால குத்தகைக்கு நமக்குத் தந்திருக்கிறது. அது இப்போது சுற்றுலாத் துறையின் பொறுப்பில் இருக்கிறது. ஆண்டுதோறும் அங்கே சுமார் 70 அல்லது 75 நாட்களுக்குப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. இனிமேல் ஆண்டு முழுவதுமே அது ஒரு பொழுது போக்கு இடமாக இருக்கிற அளவுக்கு அதை மாற்றவேண்டு மென்ற திட்டம் இருக்கிறது. இந்த ஆண்டு அல்லது இன்னும் 2 அல்லது 3 ஆண்டுக் காலத்தில் — ஒவ்வொரு ஆண்டும் கொஞ்சம் கொஞ்சமாக — அந்தப் பணிகள் எடுத்து நிறைவேற்றப் படுமென்று எதிர்பார்க்கிறோம்.

ஹரியானாவில் ''கிராப்ட்ஸ் மேளா'' என்று நடக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள்கூட அதைப்பற்றி பேசும்போது குறிப்பிட்டார். வெளிநாட்டிலிருந்து நம்முடைய கைத்திறனைப் பார்ப்பதில் ஆர்வம் கொண்டவர்கள் நிறைய பேர் வருகிறார்கள். சாதாரணமாக வீவிங் போன்ற கைத்தறி நெசவைப் பார்க்கக்கூட ஆர்வம் காட்டுகிறார்கள் என்றார்கள். நம்முடைய கைத்திறன் விற்பன்னர்கள் செய்கிற காரியங்களைப் பார்ப்பதில் வெளிநாட்டுப் பயணிகள் ஆர்வம் காட்டுகிறார்கள். ''கிராப்ட்ஸ் மேளா'' என்று சாதாரணமாக கிராமங்களிலிருந்து வந்து வேலை செய்யக் கூடியவர்கள் அங்கே வந்து அவர்களுடைய கைத் திறனைக் காட்டுவார்கள். வெளிநாட்டுப் பயணிகள் ஒரு வாரம், 10 நாள் என்று கூட்டம் கூட்டமாக அங்கே வந்து பார்க்கிறார்கள். இதைப் போல பல விழாக்களை ஏற்பாடு செய்கிறார்கள். இங்கேயும் எத்தனையோ விழாக்களை அப்படி ஆர்கனைஸ் செய்ய முடியும். சித்திரை



1984 ஏப்ரல் 20] [திரு. கே. பி. கந்தசாமி]

விழா, இந்திர விழா, பொங்கல் விழாவை அடுத்த ஆண்டு நடத்த திட்டமிட்டிருக்கிறோம். பொங்கல் விழா, கோடை விழா, இசை விழா, கிராமிய கலை விழாவெல்லாம் நடத்த இருக்கிறோம். கிராமியக் கலை விழாவைத்தான் குலசேகரப் பட்டணத்தில் நடத்தத் திட்டமிட்டிருக்கிறோம் என்று நான் சொன்னேன். இதற்கெல்லாம் வெளிநாட்டில் அதிக விளம்பரம் செய்வதன் மூலமாக அதிக அளவில் பயணிகளைக் கவர முடியும் என்று நினைக்கிறேன். அடுத்து ஒன்றை மட்டும் இறுதியாகச் சொல்லி என்னுடைய உரையை இறுதியாக முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சுற்றுலாத் துறையினுடைய கொள்கை எப்படி இருக்க வேண்டும் என்பது வரையறுக்கப்பட்டிருக்கிறது . இந்தத் தொழிலினுடைய வளர்ச்சியில் எல்லோரும் அக்கறை கொள்ள வேண்டும். தனியார்கள் எங்கெங்கே முன்வருகிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு ஊக்கம் தருவது என்பதுதான் அரசின் கொள்கை. சமீபத்தில் கூட தாம்பரம் அருகே 100 ஏக்கர் நிலத்தை வாங்கிக் கொண்டு ஒரு தொழில் அதிபர் அங்கே ரூ. 15 கோடியைச் செலவழித்து ஒரு சுற்றுலா மையத்தை ஏற்படுத்த விரும்பி என்னிடம் வந்தபோது, ''நன்றாகச் செய்யுங்கள்'' என்று ஊக்கப்படுத்தி அனுப்பினேன். அப்படித் தனியார்களை ஊக்கப்படுத்த வேண்டியது அரசின் கொள்கை. மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து கடைபிடிக்கும் கொள்கை. அதைப் போலவே வெளிநாடுகளில் வாழ்கிற அமெரிக்க இந்தியர்கள — நான் ரெசிடென்ட் இந்தியன்ஸ் எனப்படும் என். ஆர். ஐஸ். — தங்கள் முதலீட்டைக் கொண்டு வந்து — அந்நியச் செலாவணியைக் கொண்டு வந்து, இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முன்வந்தால் அவர்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்பதுதான் நம் திட்டம். ஆனால் உங்களுக்கெல்லாம் தெரியும் என்று நினைக்கிறேன். முந்தைய அரசு மகாபலிபுரத்தில் சுற்றுலாத் துறையின் பொறுப்பில் இருந்த தமிழ்நாடு ஓட்டல்—அது 2 கோடி ரூபாய் அளவுக்கு சாதாரணமாக மதிப்பு போட்டாலும் வரும் — அதோடு 50 ஏக்கர் நிலத்தையும், தமிழ்நாடு ஹோட்டல் அருகில் உள்ள பெட்ரோல் பங்க், அதற்கு மேலும் 30 ஏக்கர் நிலத்தில் இருக்கிற யூத் ஹாஸ்டல் இத்தனையும் சேர்த்து ஒருவருக்கு அளித்ததை ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மோகன் ராவ் என்ற அமெரிக்காவில் வாழும் இந்தியருக்குக் கொடுக்கப்பட்டது. அங்கே அந்த ஜாயின்ட் செக்டார் கம்பெனியில் அவரும், நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் சேர்ந்து ஒரு கம்பெனியை உருவாக்கி, அது முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் போடப்பட்ட உத்தரவு. அந்த அரசாணையின் மூலமாக நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் அவரும் சேர்ந்து புதிதாக 'தமிழ்நாடு டூரிஸம் இன்டர்நேஷனல் ரிசார்ட்' என்று சொல்லும் அளவுக்கு ஒரு கம்பெனியை உருவாக்கி, அந்த கம்பெனிக்கு இந்த இடங்கள் எல்லாம்

கொடுக்கப்பட்டன. கொடுப்பதற்குப் பதிலாக அவர் என்ன தர வேண்டுமென்றால், எப்படியோ அந்த விலை மதிப்பை, இரண்டு கோடி என்பதை 90 லட்சம் என்ற அளவுக்கு முதலிலே போட்டு, அதற்குப்பிறகு, டிப்ரிசியேஷன் போட்டு பார்த்து அதில் 64 லட்சம் ரூபாய் அளவுக்கு வந்து, பிறகு ஏதோ 3 கட்டிடங்கள் இடிக்கப் போவதாகச் சொல்லி, அதற்கு 12 லட்சம் கழித்துக் கொண்டு, பிறகு 54 லட்சத்திற்கு வந்து, அதிலும் 50 லட்சம் சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு ஷேராகவும், 4 லட்சம் ரூபாய் அவர் நமக்குத் தரவேண்டிய கடனாகவும் எடுத்துக்கொள்ளும் அளவிலே போட்டு, அந்தக்கடனுக்கு ஒரு வட்டி விகிதம், இப்படி ஒரு ரூபாயை கூட தன் கையிலிருந்து போடாத அளவுக்கு 50 லட்ச ரூபாய்க்கு ஷேர் சர்ட்டிபிகேட் இதுபற்றி நான் எங்கோ ஒரு கூட்டத்தில் பேசும்போது சொன்னேன் — அந்த ஷேர் சாட்டிபிகேட்டை பிரின்ட் பண்ணுவதற்கு எவ்வளவு செலவாகும் என்றால், நூறு ரூபாய் செலவாகலாம்; அதுதான் செலவு. அதற்குப்பிறகு அதற்குமேல் உள்ள 4 லட்ச ரூபாயையும் கடனாக வைத்துக்கொள்வது; இப்படி தன்னுடைய கையில் இருந்து ஒரு ரூபாய் கூட செலவிடாதபடி, அரசு கையிலிருந்த, அரசு பொறுப்பிலிருந்த இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு சொத்தை மாற்றிக் கொடுத்தார்கள். அதற்குப்பிறகு நம்முடைய அரசு வந்த பிறகு, அந்த transaction was not complete என்ற வகையில் இருந்ததன் காரணமாக, இதற்கு ஒரு கொள்கை முடிவு எடுத்து, அமைச்சரவை இதுபற்றி கலந்து பேசி, ஒரு அரசாணை போட்டு, அந்தக் கம்பெனியிலும் நமக்கு அதிகமான வாக்கு இருந்ததன் காரணமாக — டைரக்டர்ஸ் இருந்ததால்— அந்த போர்டு மீட்டிங்கில் ஓட்டு நம் கையில் இருந்ததன் காரணமாக, நாமே அங்கு ஒரு தீர்மானத்தை போட்டு, ''to discontinue the hotel business'' என்ற அளவிலே ஒரு தீர்மானத்தை போட்டு, அதற்குப்பிறகு, சுமுகமாக, எந்தவித சிக்கலும் இன்றி— அவர் கோர்ட்டுக்கு சென்றாலும் கூட அவர் ஸ்டே வாங்க முடியவில்லை—இந்த மாதம் 1–4–1989 முதல் மீண்டும் அந்த ஹோட்டல் நம் சுற்றுலா வளர்ச்சி கழகத்திடம் வந்திருக்கிறது, அந்த ஹோட்டல் மீட்கப்பட்டு இருக்கிறது என்ற தகவலை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, இதனால் நாம் அங்கே அமெரிக்க இந்தியர்கள் பணம் கொண்டுவந்து ஏதாவது நல்ல காரியம் செய்ய வந்தால், அதிலும் குறிப்பாக, சுற்றுலாத் துறையில் ஏதாவது செய்ய முன்வந்தால், நிச்சயமாக அவர்களுக்கு they must create இங்கு இருக்கக்கூடிய பப்ளிக் அன்டர்டேகிங் அல்லது கவர்ன்மென்ட் பிராபர்ட்டியை நாம் மாற்றிக் கொடுக்கவே கூடாது—அது இந்த அரசினுடைய— மத்திய அரசு அல்லது மாநில அரசினுடைய கொள்கையாக இருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் மிக்ஸட் எக்கானமி என்பதை நாம் ஏற்றுக்கொண்டோம். பப்ளிக் செக்டார் இருக்கும், பிரைவேட் செக்டார் இருக்கும், ஜாயின்ட் செக்டார் இருக்கும். ஆனால் பப்ளிக் செக்டாரில் இருக்கக்கூடிய ஒரு காரியத்தை ஜாயின்ட் செக்டாருக்கோ அல்லது பிரைவேட் செக்டாருக்கோ மாற்றக்கூடிய அளவிலே





நாட்டினுடைய கொள்கை இருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட ஒரு முறைகேட்டை நாங்கள் தடுத்து விட்டோம். அந்த ஒரு மாற்றத்தை நாங்கள் மீட்டு விட்டோம். அந்த ஹோட்டலை அந்த அமெரிக்க இந்தியரிடமிருந்து மீட்டு விட்டோம் என்ற நல்ல செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்து—இத்தோடு என்னுடைய பதிலுரையை நான் முடித்துக்கொண்டு—இங்கே வெட்டுத் தீர்மானங்கள் நிறைய வந்திருக்கின்றன, ஏற்கெனவே நான் அவற்றையும் ஓரளவு பார்த்துவிட்டேன்—இங்கே நீங்கள் எல்லாம் கேள்வி கேட்க விரும்பினால், நான் அதற்கு மீண்டும் பதில் சொல்கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்; வணக்கம்.

[மாலை 5–30]

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவரவர்களே, இப்பொழுது நம்முடைய அமைச்சரவர்கள் தமிழ்நாட்டிலே 10, 11 சுற்றுலாப் பகுதிகள் இருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய தொகுதியான பழனி ஒரு பெரிய யாத்திரிகர் ஸ்தலம். முப்பது லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அங்கே வந்து செல்லக்கூடிய ஒரு பிரபல்யமான இடமாக இருந்து கொண்டிருக்கிறது. வேறு மாநிலங்களிலேயிருந்தெல்லாம் அங்கே நிறைய வருகிறார்கள். ஆதலால், அதைச் சுற்றுலாப் பகுதியாக நம்முடைய அரசு அறிவித்து, அங்கே எல்லா விளம்பரங்களும் செய்து, அதற்கு ஒரு முக்கியத்துவத்தை ஏற்படுத்துவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவரவர்களே, திருக்கோயில்கள் இருக்கின்ற ஊர்களிலே சுற்றுலா மையங்கள் வேண்டுமென்று சொல்வது சரிதானா என்பதை நாம் இங்கே சிந்தித்து பார்க்கவேண்டுமென்று நான் உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறேன். திருக்கோயில்—பழனி ஒரு திருக்கோயில் ஸ்தலம். மாமல்லபுரம், பூம்புகார் இவையெல்லாம் சுற்றுலா மையங்கள். காஞ்சிபுரத்திற்குசுற்றுலாப்பயணிகள்வருகிறார்கள். திருப்பதிக்குச் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். ஆனால், திருப்பதியை சுற்றுலா மையமாக அறிவித்து அதற்கான காரியங்களில் அவர்கள் ஈடுபட்டுகொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதவில்லை. அங்கே வரக்கூடிய பக்தர்களுக்கு வசதிகளை அவர்கள் செய்து தந்திருக்கிறார்கள். ஆகவே அங்கே பயணிகள்—கோயிலுக்காகப் பக்தர்கள் வந்தாலும் சரி, சுற்றுலாப் பயணிகளாக வந்தாலும் சரி—தங்கிக் கொள்ளமுடியும். அந்த வகையிலே பழனியிலே நல்ல நல்ல கட்டிடங்களை நாம் எழுப்பவேண்டும். இன்னும் அந்தப், பழனிகோயிலிலேயிருந்து வரக்கூடிய வருவாய் மூலமாக நல்ல பணிகளை எடுத்துச் செய்யலாம். ஆனால், சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமா என்பதை உறுப்பினர் மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 20

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பேராவூரணி தொகுதியில், கடற்கரைப்பகுதியிலே புராதனச் சின்னமாகிய மனோரா என்ற ஒன்று இருக்கிறது. அதை சுற்றுலா மையமாக ஆக்கவேண்டுமென்று நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்பிருந்த பொழுது கோரிக்கைவைத்து, அதைச்செய்வதற்கான முயற்சியிலே ஈடுபட்டு பிறகு அது முடியாமற்போய்விட்டது. அதன் பிறகு இருந்த அரசும், அதைச் செய்வதற்கு முயற்சியை எடுத்து அதுவும் முடியாமற் போய்விட்டது. பிறகு கவர்னர் ஆட்சியிலே நாங்கள் சென்று முயற்சி செய்து தற்போது எஸ்டிமேட் போடப்பட்டதாகத் தெரிகிறது. ஆகவே அதை ஆரம்பித்து வைத்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தினால் அதை முடித்து வைப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** தலைவரவர்களே, முந்தைய அரசு ஏன் செய்யவில்லை என்பதற்கு நான் பதில் சொல்லமுடியாது. நான் அடுத்தமாதம் 6ஆம் தேதி திருவாரூருக்கு வருகின்ற நேரத்தில், கோடிக்கரைக்கும், மனோராவிற்கும் வர எண்ணியிருக்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் என்னைச் சந்தித்தால் அதற்கான காரியங்களை நாம் பேசி முடிவு செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரியைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான ஒரு சுற்றுலா மையமாகும். பல இலட்சம் ரூபாய்களை மத்திய, மாநில அரசுகள் ஒதுக்கியிருக்கின்றன. ஆனால் குடிதண்ணீர் இல்லாத காரணத்தினால் டூரிஸ்டுகள் வருவது இல்லை என்று பத்திரிகையிலே அடிக்கடி போடப்படுகிறது. பல லாட்ஜ்கள் இருக்கின்றன, எல்லா வசதிகளும் இருக்கின்றன. ஆனால், இதுவரை மாஸ்டர் பிளான் ரீதியாகக் குடிதண்ணீர் இல்லாமல் இருக்கின்ற பிரச்சினை அரசுக்குத் தெரியுமா? ஆகவே, உடனடியாக குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்து மேலும் மேலும் அந்தப் பகுதியிலே டூரிஸ்டுகள் வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** தலைவரவர்களே, இந்தக் குடிதண்ணீர் பிரச்சினை ஏற்கெனவே இங்கே அவையிலே பேசப்பட்டிருக்கிறது. ஆனால் குடிதண்ணீர் மட்டும் அல்ல. கன்னியாகுமரியிலே வெளிநாட்டுப் பயணிகள் வந்து தங்கக்கூடிய அளவிற்குக் கட்டிட வசதிகூட இல்லை. இத்தனை ஆண்டுக் காலமாகக் கோவளத்தில் தங்கிக்கொண்டு அவர்கள் காலையிலே இங்கே வந்து இங்கே சன் ரைஸ் பார்த்து, இங்கேயுள்ள இடங்களையெல்லாம் பார்த்துவிட்டு, சாயங்காலம் சன் செட்டையும் பார்த்து விட்டும் மீண்டும் இரவு தங்குவதற்கு அங்கே செல்கிறார்கள். ஆகவே, தண்ணீர் மட்டும் அல்ல, இன்னும் வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.



1989 ஏப்ரல் 20]

***திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தேனருவி திரையெழும்பி தென் பகுதி சாரலிலே தமிழ் பிறந்த குற்றாலம் என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்றது. சுற்றுலா அமைச்சருடைய மாவட்டம் என்பதிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுகின்ற பொழுதே அருவி தலையிலே கொட்டுவது மாதிரி இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்:** இப்பொழுது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காகப் பேசினார்கள். குற்றாலம் என்பது It is a common man's Ooty, என்று சொல்லி, சராசரி மனிதனும் கூட, இரண்டு மூன்று நாட்கள் வந்து தங்கக் கூடிய ஒரு இடம் தமிழ்நாட்டிலே குற்றாலம் மட்டும்தான் இருக்கிறது. ஆனால் அங்கே அருவியில் குளிப்பதைத் தவிர வேறு பொழுதுபோக்கு இல்லை. ஆகவே சீசன் காலத்திலேயாவது அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு மனதைக் கவருகின்ற வகையிலே, நேரம் போவதற்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமா என்று நான் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** தலைவரவர்களே, இங்கே நான் வெளிநாட்டுப் பயணிகளைப்பற்றி அதிகமாகச் சொன்னாலும் கூட வெளிநாட்டுப் பயணிகளை விட சுற்றுலா இடங்களுக்கு 100 மடங்கு அதிகமாக உள்நாட்டுப் பயணிகள் செல்கிறார்கள். மூன்று இலட்சம் பேர் வெளிநாட்டுப் பயணிகள் ஆண்டொன்றுக்கு வந்தால் மூன்றுகோடிபேர் அல்லது நான்குகோடி பேர் உள்நாட்டுப் பயணிகள் ஆங்காங்கே சென்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் குற்றாலத்தில் என்ன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திட்டவட்டமாக ஒரு திட்டத்தோடு வந்தால் நிச்சயமாக அதை ஏற்று செய்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. வீரையன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு இடத்தை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்றால் அதற்கு என்னென்ன வரையறைகள் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அந்த வரையறைகளுக்கு உட்பட்டு ஒரு பகுதி வருகிறது. ஒரு பக்கத்தில் நாகூர் முஸ்லீம்பெருமக்கள் வருகிற நகரம், இன்னொரு பக்கத்தில் வேளாங்கன்னி, கிறிஸ்தவ பெருமக்கள் வரக்கூடிய நகரம். இன்னொரு பக்கத்தில் சிக்கல், எட்டுக்குடி இந்துக்கள் வரக்கூடிய பகுதி. எனவே இப்படி மூன்று மதங்களைச் சேர்ந்தவர்களும் ஆண்டுதோறும் நம்முடைய நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், அன்னிய நாடுகளிலிருந்தும் வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.** பக்கத்தில் இருக்கிற திருநள்ளாற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். (சிரிப்பு)

திரு. கோ. வீரையன்: தலைவர் அவர்களே, அதையும் நான் சேர்த்துக் கொள்கிறேன். திருநள்ளாறும் இருக்கிறது. இதற்கெல்லாம் மையமாக நாகப் பட்டினம் நகரம் இருக்கிறது. அதை ஒரு சுற்றுலா மையமாக்கிட வேண்டும். சுற்றுலாப் பயணிகள் வந்து தங்குவதற்குரிய இடமாக, சுற்றுலா மையமாக நாகை நகரத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே நாகப்பட்டினம் ஒரு சுற்றுலா மையமாக கருதப்பட்டு அங்கே 40 லட்சம் ரூபாய் செலவில் ஒரு கட்டடமும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு, பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலைப் பகுதி ஏழைகளின் கோடை வாசஸ்தலமாக விளங்கி வருகிறது. ஆனால், அங்கே தங்குவதற்கு வசதி, வாய்ப்பு இல்லாததால் நிறைய பேர்கள் வந்து அன்றே கீழே இறங்கி விடுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே மக்கள் தங்குவதற்கான வசதி ஏற்பாட்டைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏலகிரி மலையில் சில வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டு வசதிகளைப் பெருக்க இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து பணம் வாங்குவதைப் பற்றிச் சொன்னார்கள். நாம் எல்லோருமாக இந்த சுற்றுலாத் துறையை வளப்படுத்த வேண்டுமென்றால் அந்த முயற்சியிலே எங்களுடைய துணையும் இருக்கும். கிராமிய கலை என்று சொல்கிற அந்த கலைகளை—முத்தாரம்மன் கலைக்கூடம் என்று நான் நினைத்தேன். முத்தாரம்மன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏனென்றால் தென் பகுதியிலிருந்து இன்று காலையில்தான் வந்தேன். முத்தாரம்மன் கலைக்கூடம் என்றுதான் போட்டிருந்தார்கள். அங்கே நேற்று வந்தேன், மன்னிக்க வேண்டும். எனவே, முத்தாரம் கலைக்கூடத்தில்—அவை எல்லாம் வைக்கப்படும் என்று சொன்னார்கள். இன்னும் ஒரு வினாவை, விளக்குவதற்காக நான் எழுப்புகிறேன். St. Xavier College, Palayamkottai-யில் folk lore என்று சொல்கிற நாட்டுப்புற இயலில் எம்.ஏ. பட்டத்திற்கு பாடம் நடத்துகிறார்கள். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் அதற்கென்று ஒரு சான்றிதழ் வகுப்பு நடத்தப் படுகிறது. ஆனால் கல்வி இலாக்காவோடு சேர்ந்து இதே மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், அது ஒரு கலை நகரமாக இருக்கிற காரணத்தால், நமது பழங்காலக் கலைகளாக



இருக்கிற பொய்க்கால் குதிரை ஆட்டத்திலிருந்து, களியன் ஆட்டம் வரையில் எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கிற ஒரு கிராமிய கலை மையம், A Department for folk-lore performing arts என்ற ஒன்று வைப்பதாக இருந்தால் அது பயன்படும் என்பதற்கு ஒரு சான்று, இதேபோன்று ஒன்றை கர்நாடகா அரசு தன்னுடைய பல்கலைக் கழகத்தில் சேர்த்து Ford Foundation-ல் 75 கோடி ரூபாய் வாங்கியிருக்கிறது. எனவே வெளிநாட்டவர் பலர் நம்முடைய மத்திய அரசாங்கத்தினுடைய துணையோடு முயன்றால் நமக்குப் பணம் தருவதற்கும், அதை வளர்ப்பதற்கும் தயாராக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் அப்படிப்பட்ட a Chair, a separate Department அங்கே மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இந்தப் பழங்கால நாட்டுப்புறக் கலை இயலுக்கு ஒரு மையம் ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனைதான். ஆனால் இதற்குப் பதில் சொல்வதற்கு கல்வித் துறை அமைச்சர் இங்கே இல்லையே என்று தான் கவலைப்படுகிறேன்.

*திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலை என்னுடைய தொகுதியில் இருக்கிறது அது சுற்றுலா மையமாக அறிவிக்கப்பட்டுள்ளது 1972–ம் ஆண்டிலிருந்து கோடை விழா அங்கே கொண்டாடுவது வழக்கமாக நடைபெற்று வருகிற காரியம். ஆனால் இரண்டு ஆண்டுகளாக கோடைவிழா நடைபெறவில்லை. அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டாவது கோடை விழா நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்வார்களா? அதேபோல அங்கே வருபவர்கள் தங்குவதற்கு சரியான இடம் இல்லை. அதனால் அங்கே தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(மாலை 5-40)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, கோடைவிழாவை ஆங்காங்கே நடத்துவதற்கு அமைச்சர் அவர்களே ஏற்பாடு செய்யவேண்டும் என்றால், அது முடியாத காரியம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், அங்கே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் சேர்ந்து அதற்கான ஏற்பாட்டைச் செய்து கொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசுக்கு நல்ல வருமானம் வரக்கூடியதைச் சொல்கிறேன். ஃபாரினர்ஸ், அயல் நாட்டுக்காரர்கள் நிறைய பேர்கள் கொடைக்கானலுக்கு வருகிறார்கள். அப்படி வரும்போது, பாண்டியன் எக்ஸ்பிரஸி

லிருந்து இறங்கியவுடனே, அந்தப் பிள்ளைக்குட்டிகளை, சாமான்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அலையாக அலை கிறார்கள். ஆகவே அந்த கொடை ரோட்டிலே—ஹில்—குன்றுகள் இருக்கின்றதல்லவா, அந்த இடத்திலே 10 ஏக்கருக்கு மேல் நிலம் இருக்கிறது. அதை எடுத்து ஒரு சுற்றுலா மையம் அமைத்துக் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, திருமதி பொன்னம்மாள் அவர்கள் மீண்டும் தான் என்ன வேண்டு கிறார் என்பதைப்பற்றி விளக்கமாகச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுதிக் கொடுத்தால் அது நடக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: One minute, Sir, one line, Sir. நிறைய பேர்கள் வெளிநாட்டிலிருந்து பாண்டியன் ரயிலிலேயிருந்து கொடை ரோட்டிலே வந்து இறங்குகிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இறங்குகிறார்கள் .... (சிரிப்பு).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இறங்கியவுடனே, அவர்கள் குளிப்பதற்கும், உட்கார்ந்து காஃபி சாப்பிடுவதற்கும் இடம் இல்லாமல், மிகவும் சிரமம் அடைகின்ற காரணத்தாலே, அந்த ரயில்வே ஸ்டேஷனை ஒட்டி இடம் இருக்கிறது. மலைக்குப் பக்கத்திலே புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்த இடத்திலே டூரிஸ்ட் ஹோம் அமைப்பதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப் படுமா என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கொடை ரோட்டிலே அப்படிப்பட்ட ஒரு வசதியைச் செய்து தர வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆங்காங்கே பல இடங்களிலே இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து தருவதற்கு நாம் மத்திய அரசிடமிருந்து பணம், மானியம்பெற முடியும். அந்த வகையிலே கொடை ரோட்டிலே அப்படிப்பட்ட வசதியைச் செய்து தர அரசு முயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, செங்கற் பட்டுக்குப் போவதற்கு முன்னாலே, செங்கற்பட்டுக்கும் பரனூ ருக்கும் இடையில் ஒரு பெரிய ஏரி ஒன்று இருக்கிறது. ஆண்டு முழுமைக்கும் முழுக்க முழுக்க தண்ணீர் நிரம்பியிருக்கிற ஏரி அது ஒன்றாகத்தான் தமிழ்நாட்டிலே இருக்க முடியும். ஆனால் அந்த ஏரியை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்துவதில்லை. பக்கத்திலே எல்லாம் மலைகள் இருக்கின்றன. அங்கே ஒரு இயற்கைச் சூழ் நிலை இருப்பதாலே, வார இறுதியில் வந்து அங்கு நேரத்தை



கழிப்பதற்கு, அங்கே படகுகளை எல்லாம் விட்டு, வேறுவிதமாக சுற்றுலா மையமாக ஏற்பாடு செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாட்டிலே ஏரிகள், ஏரிகளாக இருந்தால்தான் நல்லது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் நிறையப் பேர்கள் கையை உயர்த்தி இன்னும் சுற்றுலா, வலம் வர விரும்பு கிறார்கள். அதிலே எனக்கு மகிழ்ச்சி. ஆனால் நான் ஒன்றை மட்டும் கவனமூட்டவேண்டும். இந்த மானியக் கோரிக்கை நிறை வேற்றப்பட்ட பிறகு, பேச்சாளர்கள் 15 பேர்கள் தங்களுடைய பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். முற்பகல் நிகழ்ச்சிகள் 3.30-க்கு முடிந்ததாகக் கேள்விப்பட்டேன். ஏன் என்றால் நான் இல்லை. அடுத்துப் பேரவையின் பிற்பகல் நிகழ்ச்சிகள் இன்னும் இரவு வரை நீண்டு எவ்வளவு நேரம் வரையில் போனாலும் பரவாயில்லை என்று நீங்கள் சொன்னால், நீங்கள் யார் யார் எல்லாம் கையைத் தூக்குகிறீர்களோ, அவ்வளவு பேர்களுக்கும் அனுமதி கொடுத்து, யார் யார் எல்லாம் எவ்வளவு நேரம் பேச வேண்டுமோ, அவ்வளவு பேர்களுக்கும் அனுமதி கொடுத்து, விடியும்வரை காத்திருப்பதற்கு நான் தயார் என்பதை மட்டும் அன்போடு சொல்லிக் கொண்டு, நான் இப்போது எதற்கும் தயார் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள்.....

*திரு. ந. இராமச்சந்திரன் : தமிழகத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்தது செஞ்சிக் கோட்டை. அதைச் சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு மத்திய அரசுக்கு ஏற்கனவே இந்த அரசு பரிந்துரை செய்தது. அதன்மீது அந்த அரசாங்கம் தொடர் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக, மிகச் சிறப்பான, உலகத்திலேயே கற்கோட்டை என்று சொல்லப்படுகிற செஞ்சிக் கோட்டையை சுற்றுலா மையமாக ஆக்கி அங்கே ஒரு ஹோட்டலும், பயணி களைக் கவருகின்ற வகையிலே, இழுவை ரயிலும் அமைப்பதற்கு, நமது அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? அதன் மூலமாக நம்முடைய அரசு கோட்டைக்கு வெளியே இருக்கின்ற பகுதியைக் கையகப்படுத்தி, புதிய கோட்டையை ஏற்படுத்த முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, செஞ்சிக் கோட்டையைப் பற்றிச் சொல்கிறார்கள். ஏற்கனவே Department of Archaelogy, Government of India அந்தக் கோட்டைப் பகுதியைப் புதுப்பிக்கின்ற பணிகளைச் செய்து கொண்டிருக் கிறார்கள். அதற்கும் மேலே, அங்கே அதிகமான பயணிகள் வருவ தாகத் தெரியவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதைப் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(இ) கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்

திருவாளர்கள் பொன். விஜயராகவன், எஸ்.டி. உகம்சந்த் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன,

திரு. என். பழனிவேல் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்—என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,07,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஈ) கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,31,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''



திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் கோவில் நிலங்களை உழுகின்ற நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு மட்டும் நெல் குத்தகை பாக்கியை ரத்து செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்துசமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,31,68,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(உ) கோரிக்கை எண் 25—சின்கோனா

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,47,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் மலைப் பகுதியில் சின்கோனா மரக் கன்றுகள் நடுவதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண்.25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,47,31,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

Thiru M. SUNDARADAS : Hon'ble Speaker Sir, "TO discuss the need to expand quinine products" I move that "the sum of Rs. 4,47,31,000/-under Demand No.25—Cinchona be reduced by Rs. 100"

(ஊ) கோரிக்கை எண். 33—வீட்டு வசதி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 33—வீட்டுவசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,62,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, விவசாயிகளுக்கும், வீடு கட்டிக் கொள்ள கடன் வழங்குவது
குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை
மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 33—வீட்டுவசதி—என்ற தலைப்
பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,62,78,000–இல் ரூ. 100
குறைக்க வேண்டும்.''

(எ) கோரிக்கை எண். 45— காட்டுவளத் துறை

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி
கிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை என்ற
தலைப்பின் கீழ் ரூ. 20,36,06.000–க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, காடு வளர்க்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில்
ஏரிகள் முழுவதும் காடாக ஆக்கப்படுவது தடுக்கப்பட வேண்டியது
குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை
மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 45—காட்டுவளத் துறை—என்ற
தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 20,36,06,000-இல்
ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஏ) கோரிக்கை எண். 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி
கிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 56—காட்டுவளம் குறித்த மூலதனச்
செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 23,35,27,000-க்கு மேற்படாத
தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும்,
வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்
பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக
ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,
இந்தத் துறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் இங்கே
அவையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைக் குறிப்
பேட்டிலே ஏற்றிக்கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்*
இங்கே உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய மேலான கருத்துக்
களை எடுத்து வைக்கும்படி கேட்டுக்கொண்டு, இறுதியிலே
என்னுடைய பதிலுரையைத் தருகின்றேன் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

(மாலை 5-50)

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, தங்
களுக்கும் சேர்த்துத்தான் இந்தப் பாயின்ட் ஆப் ஆர்டரைக்
கிளப்புகிறேன். கோவில்களுக்குச் சென்றால் பிரசாதம் கிடைக்கும்.
கோயில் மானியத்தை விவாதிக்கிற நேரத்தில் ஏதாவது பிரசாதம்
கொடுப்பாரா அமைச்சர் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,
நான் ஒன்றைத் தெரிவிக்க விட்டு விட்டேன். இங்கு காலையிலே
தான் நம்முடைய முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர்
மதிப்புமிகு பாண்டியன் அவர்கள் ஆண்டாண்டு தோறும் சுற்றுலாத்
துறை மானியக் கோரிக்கை விவாதிக்கப்படுகிற நேரத்தில்
சுற்றுலாத் துறையின் மூலமாக உறுப்பினர்களுக்கு, வளாகத்திலே
இங்கே இல்லை—லாபியிலே, உறுப்பினர்களுக்கு—இனிப்பு, காரம்
காபி இவையெல்லாம் கொடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள்.
அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதை அங்கே
அவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கணபதி அவர்கள்
இதைக் கேட்டதோடு நிறுத்த வேண்டும். பின்னால் பொதுப்
பணித் துறையில் விவாதம் நடக்கிறபோது, ஒவ்வொருவருக்கும்
ஓர் அணைக்கட்டுக் கொடுக்கப்படுமா என்று கேட்டுக் கொண்
டிருக்கக் கூடாது (சிரிப்பு). முதலிலே விவாதத்தைத் துவங்கி
வைப்பவர் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர்
அவர்களே, இந்த அறநிலையத் துறைக்கு 5 கோடியே 31 லட்சத்து
68 ஆயிரம் ரூபாய் மானியமாகக் கேட்டிருக்கிறார்கள் அறநிலையத்
துறை அமைச்சர் அவர்கள். நாட்டிலே அற தர்மத்திற்காகவும்
தர்மத்தை ரட்சிப்பதற்காகவும் கோவில்கள் இருக்கின்றன.
விக்கிரக ஆராதனை என்பது தமிழ்நாட்டிலே ரொம்ப பிரசித்தி
பெற்றது. இது வட நாட்டிலே அவ்வளவு இல்லை. (குறுக்கீடு)

* கொள்கை விளக்கக் குறிப்புகள் இணைப்புகளாக அச்சிடப்
பெற்றுள்ளன.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 ஏப்ரல் 20

இருக்கு இருக்கு. அவையெல்லாம் கொஞ்சம் இருக்கின்றன. வடநாட்டுக் கோவில்கள் எல்லாம் எப்படி இருக்கும் என்றால் ரொம்ப சின்ன சின்னதாக இருக்கும். காசி விசுவநாதர் கோவிலிலே போனாலே ஒரு ரவுண்டுக்குள்ளாக, ஒரு சுற்றுக்குள்ளாக நாமெல்லோரும் போக முடியாது. போகிற அளவிலே கும்பல் இருந்தால் அதிலே பிரவேசிக்கிறது கஷ்டம்.

ஆனால் இந்த விக்கிரக ஆராதனையானது மக்களுக்கு நல் வாழ்வு அளிப்பதற்காக ஏற்பட்ட ஒரு பழங்கால நியதி, அந்த ஆராதனையின் மூலமாகத்தான் அந்த விக்கிரங்களைப் பராமரிக்க முடியும். பராமரிக்க வேண்டும். அதற்காகத்தான் கோவில் ஏற்பட்டது. கர்ப்பக் கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், சயன மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், கல்யாண மண்டபம் என்று எத்தனையோ மண்டபங்கள் கோவிலிலே இருக்கின்றன. இது மாதிரி ஆகம விதிப்படி ஆராதிக்கப்படும் நூற்றுக்கணக்கான கோவில்கள் நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்றன. ஆனால் இந்த மாதிரியான கோவில்கள் எல்லாம் வட நாட்டிலே கிடையாது. அத்தனையும் எதற்காக ஏற்பட்டிருக்கிறது? நம்முடைய ஷேமநலத்திற்காகத் தான். நம்முடைய ஜனங்கள் நன்றாக இருக்க வேண்டும். இது மாதிரி ஆராதனையை நியதிப்படி செய்து கொண்டிருந்தால் எப்போதுமே மழை பெய்துக் கொண்டிருக்கும், நெல் விளைச்சல் கண்டிருக்கும், நாம் நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டிருப்போம். வியாதியே வராது, வைத்தியர்களே தேவையில்லை. அதற்காகத் தான். இப்படியேற்பட்ட நிர்வாகத்தில் பலவிதமான நிலைமைகள் இருக்கின்றன. நிர்வாகம் நல்லபடியாகத்தான் நடந்து கொண் டிருக்கிறது. அதிலே ஒன்றும் சொல்ல முடியாது. அதிலே கெடுதல் ஒன்றும் சொல்வதற்கில்லை. தமிழ்நாட்டிலே கோவில் களில் அரசாங்கத்தினுடைய நிர்வாகம்தான் நடக்கிறது. அறங் காவலர்களுடைய நிர்வாகமானது பல வருஷங்களுக்கு முன்னாலே டிரஸ்டிகள் என்று ஆங்காங்கே தர்மகர்த்தாக்கள் போட்டு நிர்வாகம் நடத்தினர். அதன் பிறகு கோவில்களிலே அதற்கு மேலே எக்சிகியூட்டிவ் ஆபிசர்-இ.ஓ.-என்று போட்டிருந்தார்கள். அதிலே சில கோவில்களிலே நிர்வாகத்திலே தவறுகள் ஏற்பட்டிருக் கலாம்; தவறுகள் இல்லாமலும் இருந்திருக்கலாம். ஏனென் றால் பல வருஷங்கள் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான வருஷங்கள் கோவில்களிலே நிர்வாகம் நடக்கிறது. அந்த நிர்வாகத் திற்கு இப்போது இ.ஓ. என்று போட்டு அதற்கு மேலாக கமிஷனர் போட்டு, இப்போது மந்திரி அளவிலே போடக்கூடிய அளவிற்கு நம்முடைய சட்டம் இடம் கொடுக்கிறது.

அந்த நிர்வாகத்திற்குப் பழங்காலத்திலேயிருந்து தர்மங்கள் நிறைய எழுதி வைத்திருந்தார்கள். ஏராளமான தர்மங்களை அந்தக் காலத்திலே அப்படி எழுதி வைத்தார்கள். இந்தக் காலம் மாதிரி ஷெட்யூல்டு பாங்க் கிடையாது. எந்தவிதமான வசதியும் கிடையாது. தர்மங்கள் எழுதி வைப்பது என்றால் நிலங்களை எழுதி வைத்து, இந்தக் கோவிலுக்கு இந்த தர்மம் பண்ண,



1989 ஏப்ரல் 20] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

4 கால பூஜை பண்ண, 6 கால பூஜை பண்ண, இத்தனை ஏக்கர் நிலம் எழுதி வைக்கிறேன் என்று எழுதி வைப்பார்கள். அதனுடைய வருமானத்தைக் கொண்டு நிர்வாகம் பண்ணு என்று பழங்காலம் முதல் தொன்று தொட்டு நடந்து கொண்டிருக் கிறது. அப்படியேற்பட்ட நிர்வாகத்தில் சில சமயங்களில் குறை பாடுகள் ஏற்படும் போது சட்டங்களைத் திருத்துகிறோம். அதன் படி பல கோவில்களிலே பரம்பரை, பரம்பரை அல்லாதது என்று பல சட்ட திட்டங்களின் படி கோவில்கள் நடக்கின்றன. அப்படி நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான கோவில்கள் நம்முடைய நாட்டிலே இருக்கின்றன. நம்முடைய அறிக்கையின்படி மடங்கள், திருக்கோவில்கள், மடத்தினுடைய கோவில்கள், குறிப்பிட்ட கட்டளைகள், அறக்கட்டளைகள், சமண சமயக் கோவில்கள் கூட இதிலே சேர்ந்திருக்கின்றன. அது கூட 17 கோவில்களில் சேர்ந்திருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிறது என்று நினைக்கிறேன். 34 ஆயிரத்து சொச்சம் கோவில் இருக்கிறது. பெரிய கோவில், சின்ன கோவில்கள் என்று. அதிலே 2,000 வருமானம், 10,000 வருமானம், இலட்சத்திற்கு வருமானம், அதற்கு மேற்பட்ட வருமானம், பல இலட்சம் வருமானம் என்று கோடிக்கணக்கிற்கு மேலே போய்க்கொண்டிருக்கிறது. அதை யெல்லாம் சரியான முறையிலே நிர்வகிக்க வேண்டும். வருமானம் இல்லாமல் இந்தக் கோயில் நிலங்கள் எல்லாம் பராமரிக்கப்பட்டு நிர்வாகம் வெகு காலமாக நடந்து கொண்டிருக்கிறது. பல சட்டங்கள். இந்த நிலச்சீர்திருத்தம் வரும்போது இந்த நிலங் களுக்கு கோயில் நிலம் மட்டுமல்ல, நிலத்தை உழுகின்றவர்களுக்குப் பாதுகாப்பு—குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் வருகின்ற போது அந்த நிர்வாகத்தினுடைய செலவிற்குப் பத்தவில்லை. இதிலே கூடச் சொல்லி இருக்கிறீர்கள். செலவை எப்படித் தடுப்பது? இருக் கின்ற சொத்துக்களை எப்படிப் பாரமரிக்கின்றது? அதற்கப்புறம் அதிலிருந்து வருமானமா அல்லது இன்னும் வேறு வருமானம் கண்டுபிடிக்கணுமா? அதிலே வரும்போது ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான ஏக்கர் என்று கூடச் சொல்லலாம். கிட்டத் தட்ட ஆலயக் கட்டிடங்கள் மட்டும் அதிலே குத்தகைதாரர்கள் மட்டும் 1,04,277. அந்தப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரும்போது கோயில் நிலங்களோ மற்ற அறக்கட்டளை நிலங் களோ ஏலம் விடப்படும். ஏலம் விடும் போது ஆயிரக்கணக்கான ரூபாய் டேணித் தொகை கட்ட வேண்டும். கட்டித்தான் எடுக்க முடியும். முக்கியமாக வசதி உள்ளவர்கள்தான் ஏலம் நிறைய எடுப்பார்கள். நமக்கே தெரியும். எடுத்தவுடனே பாது காப்புச் சட்டம் வந்த உடனே அவர்களிடத்திலே அந்த நிலம் புலன்கள் நின்னு போச்சு. 50 ஏக்கர், 10 ஏக்கர், 20 ஏக்கர், எத்தனை ஏக்கர் அந்த கோயில்களில் இருக்கிறதோ அந்தப் பாது காப்புச் சட்டம் வந்தவுடன் குத்தகைதாரர்கள் அப்படியே வைத்துக்கொண்டு விட்டார்கள். அதிலிருந்து அவர்களுக்கு நிலம் சீர்திருத்தம், நிலம் சீர்திருத்தம் என்று கோயில்களுக்கு நிலத் தினால் வரும் வருமானம் பெர்சன்டேஜ் குறைந்து கொண்டே வந்துவிட்டது. ஆகையினால் பல கோவில்களுக்கு, பெரிய கோவில் களுக்கு எங்கே வருமானம் வருகிறது? ஸ்ரீரங்கம் கோயில்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 ஏப்ரல் 20

இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். எந்தவிதமாகப் போனாலும்—இபபோதுதான் நாம் எல்லாத்தையும் வசூல் பண்ணுகிறோம். சேவார்த்திகள் கோவிலுக்கு வருவதாக இருந்தால் தரிசனத்திற்குக் கூட வசூல் பண்ணுகிறோம். ரூ. 10 கொடு, ரூ. 5 கொடு என்று வசூல் பண்ணுகிறோம். தர்ம தரிசனம் என்பது கொஞ்சம் தான். அந்த தர்ம தரிசனத்தில் நாம் போய் தரிசனம் பண்ணிவிட்டு வருவதற்குக் கூட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. திருப்பதி கோயில் இருக்கிறது. கர்நாடகாவிலிருந்து, கேரளா, ஆந்திரா முதற்கொண்டு எல்லாக் கோவில்களிலும் இது மாதிரி இருக்கிறது. சேவார்த்தி டிக்கெட்டை வாங்கிக் கொண்டு உள்ளே போய் நிண்ணு இந்த இடத்தில் தரிசனம் பண்ண வேண்டியது. அப்படிங்கிற ஒரு பழக்கம். அதிலே நிறைய வசூல் ஆகிறது. அதில் ஒன்றும் குறைச்சல் இல்லை. ஒரு சேவார்த்தி வெளியூரிலிருந்து வேனிலோ, பஸ்ஸிலோ, காரிலோ வருகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஸ்தலங்களுக்கு வரும் போது அது முனிசிபாலிட்டியாக இருந்தால், முதலில் முனிசிபாலிட்டிக்காரன் வரியை வாங்கி விடுகிறான். உள்ளே நுழையும் போதே முதலில் அவனிடம் வரி கொடுக்க வேண்டும். அடுத்த படியாக கோவில் முன்னாலே கொண்டு வந்து நிறுத்தினால் இரண்டாவது தரம் வரி வாங்கிவிடுகிறான். முனிசிபாலிட்டி வரி வேறே; அதற்கப்புறம் வேன், பஸ், காரோ கோவிலுக்கு முன்னால் நிறுத்தினால் அதற்கு இத்தனை தொகை என்று திட்டமிட்டு வசூல் பண்ணுகிறார்கள். ஏதோ நிர்ணயித்த தொகையை வசூல் பண்ணினால் பரவாயில்லை. அதற்கு மேலே பல கட்டங்களில் தொகை வசூல் பண்ணுவது நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. அங்கிருந்து வேனிலிருந்து இறங்கி 15, 18 அடி உள்ளே போனோமானால் அதற்கப்புறம் செருப்பு கழட்டி வைக்கிறோம். அதைக் கூட இப்போது ஏலம் விடுகிறார்கள். செருப்புக் கடை இத்தனை ஆயிரம் போகிறது. நான் வருமானம் வருவதில் ரொம்ப சந்தோஷப்படுகிறேன். செருப்புக்கடை ஏலம் விடுவதில் தவறு இல்லை. அவர்கள் மலஜலத்தைக் கழிக்கணும் என்றால் கழிப்பிடக் கட்டணம் கோவில் வரை வந்துவிட்டது. அந்த மலஜலம் கழிப்பதற்கு உள்ளே லெட்ரீன்-டாக்கூஸ் இருக்கிறதே அதற்குக் கட்டணச் கழிப்பிடம் என்று அங்கேயும் வாங்கி விடுகிறார்கள். இதைத் தாண்டி உள்ளே போனால் தரிசனம் பண்ணுவதற்குக் கட்டணம் வசூல் பண்ணுகிறார்கள். அதற்கு மேல் நம்முடைய நன்மையைக் கருதி, இந்த நாள், இந்த நட்சத்திரம், இந்த பிறந்த தினம் என்று அர்ச்சனை பண்ண வேண்டுமென்றால் அதற்கு மேல் டிக்கெட்டை வாங்கி சேவார்த்திகள் தீபாராதனை உட்பட பண்ண வேண்டிய சிரமங்கள் இருக்கின்றன. அதிலே பல தவறுகள் நடக்கின்றன. பல கோவில்களில் இதுமாதிரி நடத்தப்படுகின்ற கோவில்களில் பல தவறுகள் இருக்கின்றன. சேவார்த்திகள் சாமான்யமாகத் தரிசனம் பண்ணிவிட்டு வெளியே வருவதற்குள்ளே அங்குள்ள சிப்பந்திகளின் உபத்திரவம் தாங்கவில்லை. சரி. இந்தக் கோவில் நிர்வாகத்திலே இந்த மாதிரி சிரமங்கள் இருக்கின்றன. இதைக் கொண்டு கோவில் நிர்வாகத்தைப் பண்ணுகிறார்கள். அதிலே



1989 ஏப்ரல் 20] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

(மாலை 6-00)

உபரி பணத்தை எல்லாம் பல கட்டங்களிலே வருமானம் இல்லாக் கோயில்களுக்கு நாம் செலவழிக்கிறோம். வாஸ்தவம்தான். செலழிக்க வேண்டியதுதான். வருமானம் இல்லாக் கோவில்களுக் குள்ள நிலங்களிலே வருமானம் வருவதில்லை. இதுமாதிரி சில கோயில்களிலேதான் ஒரு டிஸ்டிரிக்ட்டுக்கு 3, 4 கோயில் தான் இது மாதிரி வருமானங்கள். மற்ற கோயில்களுக் குஎல்லாம் நிலத்தைப் பொறுத்துத்தான் வருமானம். அங்கே இருக்கிற சிப்பந்திகளுக்கு அந்தக் காலத்திலே இனாம் போட்டு இருக்கிறார்கள். ஏவதாயம், தர்மதாயம், ஊழியப்பாதி, பர்சல் இது மாதிரி பல இனாம்கள் எல்லாம் இருந்தன. இப்போது எல்லாம் ஒரே தாயமாகப் போய் விட்டது. அந்தச் சிப்பந்திகள் எல்லாம் அவர்களும் குத்தகைக்கு விட்டு இருக்கிறார்கள். இதுமாதிரி நிலம்படைத்த அந்த ஊழியர்கள் இருக்கிறார்களே. அவர்களும், அந்த நபர்களும் குத்தகைக்குவிட்டு சாகுபடி பண்ணுவதற்கு வேறு யாரையாவது வைத்திருக்கும் போது இந்தப் பாதுகாப்புச் சட்டம் அவர்களையும் பாதிக்கிறது. அவர்களுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை. கோயில்களில் பரம்பரை அர்ச்சகர்களிலிருந்து ஊழியர்கள் முதற்கொணடு பரம்பரைதான் ஜாஸ்தியாக இருக்கிறது. கோயில்களிலே ஆபீஸ் சிப்பந்திகளை, பியூன்களைத் தவிர்த்து பாக்கி எல்லாச் சிப்பந்திகளும் பரம்பரை பாத்தியம் மாதிரி, பரம்பரை பாத்தியத்தை ஒழித்தாலும் அந்தப் பரம்பரை பாத்தியத்தை இன்னும் நடைமுறையில் அகல வில்லை, இன்னும் பல கோயில்களில் அதே மாதிரி இருக்கிறது. அப்படிப்பட்ட கோயில்களிலே அந்தப் பரம்பரை பாத்தியத்தை வைத்தே இந்த ஊழியர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். தங்களுடைய குடும்பத்தை நடத்த முடியவில்லை. ஆகவே, அவர்களுக்குள்ளே அந்தப் பெரும் கோயில்களுக்குள்ளே இருக்கிற ஊழியர்களுக்கு நல்ல சம்பளம் ஏதாவது— நம்முடைய அரசு ஊழியர்களைப் போல் கொடுக்காவிட்டாலும் ஏதோ ஓரளவிற்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அரசு ஊழியர்களைப் போல், கோயில் ஊழியர்களுக்கும் நிவாரணம் கொடுத்தால் எல்லாவிதத் திலும் நல்லபடியாக இருக்கும் என்று நான் சிபாரிசு செய்கிறேன்.

ஆகவே, இந்த ரூரல் கோயில்களிலே வருமானம் வராத கோயில் சிப்பந்திகள் ரொம்ப சிரமப்படுகிறார்கள். பல கோயில் களிலே அர்ச்சகர்களுக்குப் போதுான வருமானம் கிடையாது. அதைவிட்டு, அந்தப் பரம்பரை பாத்தியத்தை விட்டு அகல முடியவில்லை. அதுமாதிரி எல்லாச் சிப்பந்திகளும்— அர்ச்சகர்கள் மட்டுமல்ல, எத்தனையோ விதமான சிப்பந்திகள் அங்கே இருக்கிறார்கள், அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு ஒரு நிவாரணத்தை இந்த அரசு தேடிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கோயில்களிலே நவீன விதத்திலே ஊரிலே திருட்டு நடக்கிறது. அந்தக் காலத்திலே பணத்தைத் திருடுவான். ஏதோ திருட்டு என்பது பொது ஜனங்கள் கிட்டே நடந்து

கொண்டு இருந்தது. அது கோயில் வரைக்கும் போய்விட்டது. திருக்கோயில் வரைக்கும் திருட்டு என்பது ரொம்ப ஜாஸ்தியாகப் போய் விட்டது. கோயிலுக்கு வருகிறவன்கிட்டே திருடுவான். அதுகூட பெரிய உற்சவங்களிலே போய் கும்பலாக இருந்தால், இலட்சம் பேர் வந்தால், 4 திருடன் வருவான் என்பது நமக்குத் தெரியும். அதிலே திருட்டு நடக்கும். (குறுக்கீடு) அது வேறு பிரச்சினை. அதற்கு வேண்டுமானாலும் பதில் சொல்கிறேன். இப்போது சமீப காலத்திலே கோயில்களிலே திருடுவது என்பது சகஜமாகப் போய்விட்டது. திருடன் வேறு இடத்தில் போனால் கஷ்டமாக இருக்கிறது. கோயிலிலே திருடினால் கேள்வியே இல்லை. அதுவும் விக்ரஹத்தை திருடுவது சகஜமாக; 10, 12 வருடங்களாக திருடிய விக்ரஹத்திற்குக் கணக்கே இல்லை. அதிலே யாரோ கண்டுபிடித்தான், அதிலே இத்தனை கிலோ தங்கம் கிடைக்கிறது என்று. அல்லது வெளிநாட்டுக்கு விக்ரஹத்தைத் திருடி அனுப்பினால் அந்த விக்ரஹத்திற்கு நல்ல கிராக்கி இருக்கிறது என்று எவன் கண்டுபிடித்தான், யார் கண்டுபிடித்தான் என்று தெரியவில்லை..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய தெய்வங்களுக்கு அந்த நாட்டில் மதிப்பு அதிகம். நம்முடைய தெய்வங்களுக்கு வெளிநாட்டில் கிராக்கி அதிகம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: நம் தெய்வங்களிடத்தில் இங்கே பக்தி அதிகம். வெளிநாட்டிலே கிராக்கி அதிகம் என்பதால் தான் திருடுகிறான். விவரமாக இதிலே போட்டு இருக்கிறீர்கள், நீங்களே, இந்த ஊரிலிருந்து வெளிநாட்டுக்கு அனுப்பியதை. 'தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பத்தூரில் உள்ள அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான விலை மதிப்பிட இயலாத நடராஜர் சிலை; 1976-இலேயே திருடிக் கொண்டு போய்விட்டான். அப்போது ஒரு சிலைதான் இருந்தது. அதைக் கண்டாலும் கண்டான், இப்போது தினசரி—இப்போது தான் இரண்டு மாதமாக திருட்டு, விக்ரஹத் திருட்டு, கோயிலிலே மாண்புமிகு திரு. கந்தசாமி மினிஸ்டராக வந்த பிறகு கொஞ்சம் குறைந்திருக்கிறது. கொஞ்சம் என்ன? அறவே இல்லை என்று நினைக்கிறேன். இதற்கு முன்னாலே திருடிய திருட்டு இருக்கிறதே, கணக்கே இல்லை. கொலை பண்ணிவிட்டுத் திருடுவான். ராஜகோபாலசாமி கோயிலிலே கொலை பண்ணி விட்டுத்தானே திருடினான். வெட்டி இரண்டாகப் போட்டுவிட்டு கோயிலிலே இருக்கிற ஆபரணங்களை எடுத்துக்கொண்டு போகிறான். எல்லாச் சாட்சிகளையும் விசாரித்து, பார்த்து அவனுக்கு மரண தண்டனை போட்டால், நேரிலே தண்டனை போடக்கூடாது என்று நாமே போகிறோம். மரண அரசியல் கட்சிகளே, நாட்டிலே நல்லது இல்லை. போடக் கூடாது என்று சொல்கிறாம். வெளிநாட்டிலே அமைச்சர்கள் லஞ்சம் வாங்கினாலே, அங்கே அவன் அமைச்சராக வேலை பார்த்து 25 வருஷம் இருக்கும். அதைப் புரூப் பண்ணினாலே மரண தண்டனை போடுகிறான். நம் நாட்டிலே



கொள்ளை அடித்து, கொலை பண்ணி, அத்தனையும் புரூப் பண்ணி மரண தண்டனை போட்டால் இங்கே அரசியல் கட்சிகளே, இருக்கட்டும், அது தர்மத்திற்கு உகந்ததல்ல என்று சொல்கிறோம. இன்னும் இருக்கிறான் என்று நினைக்கிறேன். ராஜகோபாலசாமி கோயிலிலே கொலை பண்ணிய அந்தக் கைதியானவர் ஆயுள் தண்டனை போடப்பட்டு ஜெயிலிலே இருக்கிறார். இதுமாதிரி திருச்சியிலே கூட ஒன்று நடந்தது. உத்தமசீலி என்கிற இடத்திலே ராத்திரி படுத்துக்கொண்டிருந்த காவல்காரன், ஐயர்—இரண்டு பேரும் படுத்துக் கொண்டு இருக்கிறார்கள். கோயில்களிலே பொறுப்பு எப்படி இருக்கிறது என்றால் ஜாயிண்டாக விக்ரஹங்களுக்குப் பொறுப்பு உண்டு. அப்படிப் படுத்துக் கொண்டு இருந்தார்கள். சட்டென்று போட்டான். நசுங்கினான். கிளீன் ஆகிவிட்டான். தீர்ந்து போச்சு. கண்டுபிடித்துவிட்டார்கள். என்ன பண்ணினார்கள் என்றால், பிடிக்கிறதுச்கு முன்னாலே அத்தனை பேரைக் கேட்டு இருப்பார்கள், அர்ச்சகரிலிருந்து, சிப்பந்திகளிலிருந்து, பியூனிலிருந்து போலீஸிலே கொண்டு போய் குதறு குதறு என்று குதறி விட்டார்கள். கடைசியில் கிடைத்து விட்டது இவனார் திருடினார்கள் என்று. ஆக மொத்தம் இன்றைக்கு சிலைகள் எப்படி போகிறது? நம்முடைய ஊரிலிருந்து வெளிநாட்டுக்குப் போய் விடுகிறது. நம்முடைய சபாநாயகர் அவர்கள் சொன்னதைப் போல வெளிநாட்டில் நம்முடைய சிலைகளுச்குக் கிராக்கி அதிகமாக இருக்கிறது.

பழனி கோயிலில் உள்ள மூல விக்ரகம் சுயம்பு என்று சொல்வார்கள். அதுவே ஆட்டம் கண்டுவிட்டது என்று சொல்கிறார்கள். எவனோ சொன்னான பழனி விக்ரகத்தில் அப்படிச் சுரண்டி எடுத்து அப்படி மருந்தாக சாப்பிட்டால் 70, 80 வயதானவர்கள் 20 வயது ஆகிவிடுகிறார்கள் என்று எவனோ சொல்லிவிட்டான். ஆகவே ஆளுக்குச் சொந்தமாக சுரண்டி விட்டார்கள்; காய கல்பம் மாதிரி. கொஞ்சம் கொஞ்சமாகச் சுரண்டி அது ஆட்டம் கண்டுவிட்டது. எத்தனையோ லட்சம் வருமானத்தில் அது இருக்கிறது. பல கோடி வருமானமுள்ள பழனி கோவில் விக்கிரகம் இருக்கிறது. தேயாத விக்கிரகம் திடீர் என்று இப்போது சமீபத்தில் தேய்ந்து போய்விட்டது என்று சொன்னால் அதற்குக் காரணம் ஏதாவது இருக்க வேண்டும். பரவலாகப் பேசப்படுகிற காரணம் என்ன என்று சொன்னால் அந்த பழனி விக்கிரகத்திலிருந்து வழித்து அதிலிருந்து வருகிறதை அப்படி எடுத்து மனிதன் எங்களைப் போன்றவர்கள் வயதானவர்கள் சாப்பிட்டால் அவ்வளவு தான், கிழவன் குமரன் ஆகிவிடுகிறான் என்று அப்படி சொல்லி வைத்தான். பூராவையும் சுரண்ட ஆரம்பித்து விட்டார். 500 அபிஷேகம் நடந்து கொண்டு இருந்தது. கடைசியில் 50 அபிஷேகம்கூட பண்ண முடியவில்லை. ஆடுது என்று சொன்னார்கள் இப்போது நிறுத்தியாகிவிட்டது. இப்போது பழனி கோவிலில் அபிசேகம் செய்கிறோமா? இல்லையா? ஏற்கனவே உள்ள அபிசேகத்தில் கெமிக்கல் ஏதாவது

வித்தியாசம் ஆகி அல்லது சர்க்கரையில், பழத்தில் அல்லது திராட்சையில் ஏதாவது ஒரு வித்தியாசம் ஆகி அதன் காரணமாகக் குறைந்து விட்டதா? அதனுடைய நிலைமை என்ன என்று தெரிய வில்லை.

அடுத்து ஸ்ரீரங்கத்தில் எங்களுடைய கோவிலைப்பற்றி முதலில் பேச வேண்டும் அல்லவா? பக்கத்தில் இருக்கிற கோவிலை விடக் கூடாது. அது ராமாயணக் காலத்தில் ஏற்பட்டது. இட்சுவாகு மன்னனால் பூஜை செய்யப்பட்ட தெய்வம். ராமாயணத்தைத் தெய்வமாக இப்போது போற்றுகிறோம். ராமாயணக் காலத்தில் பூஜை செய்யப்பட்ட தெய்வம் அது. அப்படிப்பட்ட திருக் கோவிலில் ஜியர் இருந்தார். இப்போது இருக்கிற ஜியர் அல்ல. இவர் அதற்கு அப்புறம் வந்தவர் தான் ராமானுஜருக்குப் பின்னால் தெய்வம் ஏற்பட்ட போது இருந்த ஜியர் அவர். அவரை எந்தக் காரணமும் இல்லாமல் கோவில் நிர்வாகத்தில் உள் துறையில் அவர்கள் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. ஏதாவது கேட்டார்களோ தெரியவில்லை, அவரை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். எங்காவது ஒரு மதத் தினுடைய ஜியரை டிஸ்மிஸ் செய்தது பற்றி எந்த நாட்டிலாவது கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? எந்த நாட்டிலும் கிடையாது. இந்த நாட்டில் தான் இந்த தமிழ்நாட்டில் தான் இந்த மாதிரி ஒரு ஜியரை டிஸ்மிஸ் செய்ததை எந்த காலத்திலும் பார்த்தேன். அதற்குக் காரணம் எவ்வளவோ இருக்கலாம். திருடினாரோ வருடினாரோ அது எல்லாம் ஒன்றும் இல்லை. அல்லது இவர்களுடைய பேச்சைக் கேட்கவில்லை. அப்படி ஏதாவது பெரிய குற்றம் செய்து நீங்கள் டிஸ்மிஸ் செய்து இருந்தால் பரவாயில்லை. ஜியர் ஏதாவது பண்ணாத காரியத்தைச் செய்தாரா? அல்லது அவர் வேறு ஏதாவது சம்பாத்தியம் செய்து விட்டார் என்று இருந்தால்கூடப் பரவாயில்லை. அப்படி எல்லாம் இல்லாமல் அவரை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். டிஸ்மிஸ் செய்த அந்த அரசு போய்விட்டது. இப்போது புதிய சர்க்கார் வந்து இருக்கிறீர்கள். அந்த மாதிரி உள் துறைக்கு ரங்கநாதர் கூடப் பிறந்த ஜியருக்கு மறுபடியும் அவரை அப்பாயின்ட் செய்யும் பவர் இருக்கிறது. அதனால் தான், டிஸ்மிஸ் செய்ததற்குக் காரணம், எங்களுக்கு பவர் இருக்கிறது, அப்படி என்று தான் டிஸ்மிஸ் செய்தார்கள். கோவில் நிர்வாகத்தில் பல கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய பெரிய பெரிய கோவில்களில் தணிக்கை உண்டு. அந்த மாதிரி ஸ்ரீரங்கம் கோவிலிலும் தணிக்கை உண்டு. தணிக்கை செய்து கிட்டத்தட்ட 4 வருடம் ஆகிறது. வெங்கடாசலம் என்ற அதிகாரி; எம். ஏ. படித்த அதிகாரி; வந்து தணிக்கை செய்தார். அவனுக்கு வேலையும் கிடைத்து விட்டது. என்ன காரணமோ தெரியவில்லை; எதைக் கண்டுபிடித்து விட்டானோ தெரியவில்லை. ஒரு நாள் இரவு தூக்கில் தொங்குகிறான். அங்கே போய்ப் பார்த்தால் தூக்கில் தொங்கிக்கொண்டு இருக்கிறான். தூக்கில் தொங்கக்கூடிய அளவில் அவனுக்கு உயிர் போய் இருக்குமா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. அவசர அவசரமாக அவனுடைய உறவினர்கள் எல்லாம் வருவதற்குள் அவனை போஸ்ட் மார்ட்டம்



செய்து அவர்கள் கையில் கொடுத்து விட்டார்கள். காரணம் என்ன என்று இதுவரைக்கும் தெரியவில்லை. என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால் அந்த வெங்கடாசலம் என்பவனுக்கு மூளைக் கோளாறு; அப்படி மூளைக் கோளாறாக இருந்ததால் இறந்தான் என்றால் நம்முடைய கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் நிச்சயமாக 4 பேர் தினமும் தூக்கு போட்டுக் கொள்ளலாம் அல்லவா? எம். ஏ. படித்தவன். படிப்பும் வந்து விட்டது. வேலையும் கிடைத்து விட்டது. ஆனால் ஆடிட்டில் அங்கே போய் பார்க்கிறான், என்ன தப்பைக் கண்டுபிடித்தானோ தெரியவில்லை. தப்பை கண்டுபிடித்து விட்டானே; நம்முடைய சிப்பந்திகள் எல்லாம் இப்படி மாட்டிக்கொண்டு, என்னவோ நடந்து இருக்கிறது. அப்படி ஏதோ நடந்து இருப்பதால்தான் அவனுடைய உயிர் பறிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதனுடைய சரியான விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இப்படிப் பல கோவில்களில்; திருநெல்வேலிக்குப் பக்கத்தில் தென்திருப்பேரை மகாநெடுங்குளகாதர் கோவிலில் நடைபெற்ற திருவாபரணத் திருட்டு. திருவாபரணத் திருட்டு தான் இப்போது சேர்ந்தாற் போல் விக்கிரகத்தை எல்லாம் திருடுகிறான். அதற்காக நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் கூட யாத்திரை எல்லாம் கூட போய் இருக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் திருவாபரணத் திருட்டு நடந்து இருக்கிறது. என்ன ஆயிற்று? அதனுடைய விளைவு என்னவென்று இதுவரை தெரிய வில்லை. அதுபோல் திருச்செந்தூரில் நடந்ததையும் இன்னும் கண்டுபிடிக்காத அளவுக்கு இருக்கிறது. அதனுடைய விளைவாக பால் கமிஷன் போட்டும் அந்தக் கமிஷன் ரிப்போர்ட் இங்கே பப்ளிக்காக கொண்டு வரப்போகிறீர்களா? இல்லையா? கமிஷனில் என்ன சொல்லியிருக்கிறார்கள்? அதனுடைய விவரமும் நமக்கு ஒன்றும் தெரியவில்லை. சரி அத்தனையும் போகட்டும்.

(மாற்றுத் தலைவர்— தலைமை)

(இரவு 6–10)

எங்கள் ஊரிலே பெரிய தேவஸ்தானம் ஒன்று இருக்கிறது. திடு திடுப்பென்று வேகமாக வருகின்ற தேவஸ்தானங்களும் உண்டு. பக்கத்திலே இராமேஸ்வரம் இருக்கிறது. ஸ்ரீரங்கம் இருக்கிறது. இந்த மாதிரி தேவஸ்தானத்தோட இப்போது மாரியம்மன் கோயிலும் இருக்கிறது. இந்த மாரியம்மன் கோயிலிலே கோடிக் கணக்கான ரூபாய் வசூல் ஆகிறது. அங்கே நடக்கின்ற தவறு களைப் பார்த்தால், அதுபற்றியெல்லாம் ஒருநாள் பத்திரிகை யிலேகூட வந்திருக்கிறது. மாலை முரசு, தினத்தந்தி என்றில்லாமல் பெரிய இங்கிலீஷ் பத்திரிகையிலேகூட வருகிறது. இரவிலே 1½ மணிக்கு ஒரு பியூன் பூட்டை உடைத்து, நல்ல வேளை உண்டியலை உடைக்கவில்லை. ஏனென்றால் உண்டியலை உடைத்தால் கோயிலுக்குச் சேதம் ஆகிவிடும் என்று நினைத்து பூட்டை அப்படியே திறந்து திருடியிருக்கிறான். உண்டியலுக் குள்ளே எவ்வளவு இருந்தது தெரியாது. எவ்வளவு வேண்டு மானாலும் இருந்திருக்கலாம். அந்தக் கோவிலுக்கு நிறைய

உண்டியல் வசூல் வரும். அந்தத் திருட்டை ஒரு பியூனே கண்டு பிடித்தான். இதை பத்திரிகையிலேகூடப் போட்டு இருந்தார்கள். போலீஸ்காரர்களும் பிடித்தார்கள். கடைசியிலே நாங்களெல்லாம் போய்கூட உண்ணாவிரதம் இருந்தோம். கம்யூனிஸ்டுகளெல்லாம் சுவர்களிலே இதுபற்றி எழுதினார்கள். எல்லா எதிர்க் கட்சிகளும் அங்கே போய் போராடியும் கடைசியில் அதுபற்றி எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதுபற்றி என்னவாயிற்று என்பதுகூட இதுவரையில் தெரியவில்லை. இதுமாதிரி இரண்டு தடவை நடந்து விட்டது. உண்டியலை உடைக்கும் போது, சரி ஏதோ பியூன்தான் செய்துவிட்டான் என்று விட்டுவிட்டு இருக்கலாம். ஏனென்றால் ராத்திரியிலே சாட்சி கிடைக்காது பாருங்கள். அதனால் விட்டுவிட்டு இருப்பார்கள். மகமாயி அம்மன்தான் நம்மையெல்லாம் கண்டால் வெகுதூரம் ஓடி விடுகிறாளே, 10 மைலுக்கு அந்தாண்டை சென்று தனியாக உட்கார்ந்து விடுகிறாளே என்ன செய்வது? இப்போதெல்லாம் கோயிலுக்குள்ளே அம்மன் இருப்பதேயில்லை. (மணியடிக்கப் பற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்): இன்னும் இரண்டு நிமிடங்கள்தான், பேசி முடியுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: ஒரு கோயிலைப் பற்றிச் சொல்லும்போது எல்லாவற்றையும் சொல்லவேண்டும் இல்லையா? அந்தத் திருக்கோயில்லே உண்டியலை உடைத்தார்கள். அந்தக் கோயிலிலே உள்ள உண்டியலில் லட்சக்கணக்கான ரூபாய் வரும். அந்த உண்டியலில் தங்கமாகவும் வரும்; வெள்ளியாகவும் வரும். பலவிதமான பொருள்கள் அந்த உண்டியலை உடைக்கும்போது எடுக்கப்பட்டிருக்கிறது. சமீபத்திலே பத்திரிகையிலேகூடப் பார்த்திருப்பீர்கள். 3 தங்கக் காசுகள் பற்றி. அந்தத் தங்கத்தை நிறுத்திப் பார்க்க முடியாது. அதைத் தானம் பண்ணியிருக்கிறான். தானம் பண்ணும்போது அங்கேயிருக்கிற சிப்பந்திகளெல்லாம், போலீஸிலே பிடிக்கப்போகிறான், அப்படி இப்படி என்று சொல்லியவுடன் மறுநாள் அந்தக் காசுகள் பார்சலிலே வருகிறது. எங்கேயிருந்து வருகிறது? யார் அனுப்பி வைத்தார்கள்? அது தெரியாது. அப்போது நம்முடைய முத்தமிழ்க் காவலர் கே.ஏ.பி. விஸ்வநாதப் பிள்ளையும் இருந்தார். அவர் என்ன பண்ணமுடியும்? ''கள்ளன் பெரியவனா, காப்பவன் பெரியவனா'' என்று பார்க்கும் போது கள்ளன்தான் பெரியவனாகப் போய்விட்டான். அதனால் காப்பவனால் ஒன்றும் பண்ண முடியவில்லை. என்னென்னவோ சொல்லி அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று சொல்லிப் பார்த்தும், காசு மாதிரி கிடந்ததே, இப்போது அதில் சுற்றியிருந்த மஞ்சள் துணிகூட காணவில்லையே என்று அவர்தான் கண்டு பிடித்தார். கடைசியில் அவர் பெயருக்கே பார்சல் வருகிறது. 3 காசுகள் வந்தது. என்ன எடை, எவ்வளவு காசு இருந்தது? காப்பவனிடமே அந்த 3 காசுகள் வருகிறது. அது 1 பவுனாகக்கூட இருக்கலாம்; 3 பவுனாகக் கூட இருந்திருக்கலாம். அதே மாதிரி



அந்தக் கோவிலிலே பலதடவை நடந்திருக்கிறது. கோடிக்கணக்கான ரூபாய் வசூல் ஆகக்கூடிய இந்தத் திருக்கோயிலிலே, இந்த மாதிரி தவறுகள் நடக்காமல், இனிமேலாவது உண்டியலிலேயிருந்து திருடுபோகாமல் காப்பதற்கு, அந்த கோயில் சரியான முறையிலே நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் என்ட்ரன்ஸ் அதாவது நுழைவாயில் பற்றிச்சொல்ல வேண்டுமென்றால் அதுபற்றியும் பத்திரிகைகளில் போட்டு இருக்கிறார்கள். அதையெல்லாம் வாசித்தால் ரொம்ப நேரம் ஆகும். அம்மா எனக்கு அனுமதி கொடுத்தால் வாசிக்கிறேன். உண்டியல் கொள்ளை பற்றி இதிலே போட்டிருக்கிறான். ஆனால் அதைப் பற்றி முன்னேயே சொல்லிவிட்டேன்.

அடுத்து, அம்மனின் கவசம் களவு போய் விட்டது. இதெல்லாம் சமீபத்திலே நடந்த திருட்டுதான். அதிக நாள் ஆகவில்லை. கவசம் திருட்டு போனவுடனே, 5, 6 பேர்களைப் பிடித்து, 25 ஆயிரம் பணத்தை வாங்கிவிட்டார்கள். பணத்தை வாங்கியவுடன் அதன்மேல் எந்தவிதமான ஆக்ஷனும் இல்லை.

கோயில் நுழைவு வாயில்களில் எங்களைப் போன்று நான்தான் எம்.எல்.ஏ., நான்தான் டி. சி. என்றால் இனாமாக விட்டு விடுவான். வெளியூர் யாத்திரிகர்கள் யாராவது வந்தால் அவர்களிடம் கொஞ்சம் அதிகமாகப் பணத்தை வாங்கிக்கொள்கிறார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு, அதற்குத் தேவையான ரசீது கொடுப்பதில்லை. எதிர்த்துப் பேசினால், அவர்களுக்குச்சங்கடமான நிலைமை ஏற்படும்.

நாமக்கல்லிலே இருக்கிற எங்களுடைய கட்சியின் அம்மையார் ஒருவர் புடவை சாத்துவதற்கு ரொம்ப அல்லல்பட்டு, தகராறு பண்ணி அதற்கப்புறம் கோவிலிலே சென்று ரிப்போர்ட் செய்தார்கள். அவர்களைக் கோயில் உள்ளேயே விடவில்லை. அதே மாதிரி பணத்தை வாங்கிக் கொண்டு சிப்பந்திகள் நிறைய சம்பாதிக்கிறார்கள். அதற்கு என்ன காரணமென்றால், நிறைய சம்பாத்தியத்திற்காகத்தான். 5, 10, 15 என்று பணம் கொடுத்தால் அவர்களை அழைத்துக் கொண்டு போய் பின்னாலே நிறுத்தி விடுகிறான். எங்களைப் போன்றவர்கள் போனால், இனாமாகச் சென்று அம்மனுக்கு அருகிலே போய் நிற்க வேண்டியிருக்கிறது. 10 ரூபாய் பணம் கொடுத்தால்தான் அவனால் நின்று தரிசனம் பண்ண முடியும். அப்போதுதான் அனுமதிப்பார்கள். அப்போதுதான் தரிசனம் பண்ண முடியும். மரியாதை என்பது இப்போது கொஞ்சம்கூட கிடையாது. ஸ்ரீரங்கத்தை எடுத்துக்கொண்டால், சொர்க்க வாசல்படி திறக்கும்போது 10 ரூபாய் டிக்கட்காரர்கள் எல்லாம் அவ்வளவு பேர் நிற்பார்கள். எங்களைப் போன்றவர்களும் சேர்மன், பழைய காலத்து பெரிய ஆசாமிகள் இவர்களெல்லாம் பக்கத்திலே போய் நிற்பதற்கும்,

[திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 ஏப்ரல் 20

அம்மனைத் தரிசனம் பண்ணுவதற்கும் அருகிலே போய் நிற்பார்கள். என்னைப்போல இருப்பவர்களும், நானும் நாமம் போட்டுக்கொண்டு, பக்கத்திலே போய் நின்றுகொண்டிருப்போம். இனாமாக வருபவன், அதிகாரத்திலே வருபவனெல்லாம் பக்கத்திலே நிற்கவேண்டும். பக்தி சேகரிக்கவும், சாமியை சேவிக்க வருபவனெல்லாம் எட்டி நிற்கவேண்டும். இது சகஜமாக எல்லா இடங்களிலும் நடக்கக் கூடியதுதான். அதையெல்லாம் தடுக்க முடியுமா? முடியாது. அப்படி ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி தடுக்க முடிந்தால் அது குறித்து நான் சந்தோஷப் படுவேன்.

அங்கே ஒரு ரெஸ்ட் அவுஸ் இருக்கிறது. எல்லாம் அவர்களுடைய கண்ட்ரோலில்தான் இருக்கிறது. அங்கே என்னென்ன நடக்கிறதென்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியும். ரெஸ்ட் எடுப்பவர்களுக்கு ரெஸ்ட் அவுஸ் கிடையாது. அங்கே இருப்பவர்களுக்குத்தான் அது ரெஸ்ட் அவுஸ்-ஆக இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் குழந்தைகள் இருக்கிறார்கள், மற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ரெஸ்ட் எடுப்பதற்குத்தான் அந்த ரெஸ்ட் அவுஸ் இருக்கிறது. அதைப்பற்றி அதிகமாகச் சொல்வதற்கில்லை. அதுபற்றி பத்திரிகையிலேயெல்லாம் வந்திருக்கிறது.

கோயிலின் நுழைவாயில்களில் நுழைந்து திருடுகிறார்கள். அதுமாதிரி மொட்டை போடுவது பற்றி சொல்லவேண்டும். மொட்டை போடுவதற்கு என்று ரசீது வாங்க வேண்டும். அங்கிருப்பவனிடம் கொடுத்துத்தான் தனியாக ரசீது வாங்க வேண்டும். அப்படி ரசீது வாங்கினால்தான் மொட்டை போடுவது ஒழுங்காக இருக்கிறது. இல்லை, தப்பித் தவறி நாமே ரசீது வாங்கிவிட்டால் தலை பூராவும் அந்தக் குழந்தைகளுக்குக் காயம்தான். அந்த அளவிலே இந்த அறநிலையத்துறையிலே பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. அதை எல்லாம் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக இராமேஸ்வரம் இருக்கிறது. அங்கு இப்போது பாலம் கட்டிவிட்டார்கள். சமீபத்திலே இராமேஸ்வரத்திற்கு போகக்கூடிய சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. அந்தக் கோவிலுக்கு செலவுக்குப் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். அது ஒன்றும் சாதாரண சின்ன கோவில் அல்ல மாரியம்மன் கோவில் போன்ற சிறிய கோவில்களுக்கு எல்லாம் இப்போது நிறைய வருமானம் வருகிறது. ஆனால் இராமேஸ்வரம் கோவிலுக்கு வருமானம் இல்லை. அது சாதாரண கோவில் அல்ல. ஆல் இந்தியா டூரிஸ்ட் செண்டர் அது. ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். நிறையப் பணம் கிடைக்கிறது. ஆனால் செலவுக்குப் பணம் இல்லை. மாரியம்மன் கோவில் போன்ற சின்ன கோயில்களுக்கு எல்லாம் இந்த வருஷம் ஒரு இலட்சம் வருமானம் என்றால் அடுத்த வருஷம் 3 மடங்கு, 4 மடங்கு கூடுதல் வருமானம் கிடைக்கிறது. இராமேஸ்வரம் ஆல் இந்தியா பில்கிரிம் சென்டர். நிறைய பணம் வருகிறது. வெளிநாட்டுக்காரர்கள் டூரிஸ்ட் என்கிறார்கள்.



1989 ஏப்ரல் 20] [திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

நம்முடைய இந்திய நாட்டுக்காரர்கள் யாத்ரிகர்கள் என்கிறார்கள். அவ்வளவுதான் வித்தியாசம். அப்படிப்பட்ட ஒரு பெரிய கோவிலுக்குப் போனால் செலவுக்கே பணம் இல்லை என்று சொல்கிறார்கள்.

கங்கையிலிருந்து நீர் கொண்டு வந்தோம் என்று சொல்லி 5 ரூபாய் கொடுத்தால் கங்கைநீர் தெளிக்கிறார்கள். தண்ணீரைத் தெளித்துவிட்டு போகிறார்கள். இப்படி எல்லாம் வருமானம் வந்தாலும் யாத்ரிகர்கள் ஏராளமாகப் போனாலும் செலவுக்குப் பணம் இல்லை என்று சொல்லகூடிய நிலையிலே அந்தக் கோவில் இருக்கிறது. அதை கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

அதேமாதிரி பெட்டவாய்த்தலை கோவில் பற்றி டைப் அடித்துக் கொண்டு வந்திருக்கிறேன் அனுமதி கொடுத்தால் படிக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்)**: உங்களைப்போன்ற பெரியவர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும். இன்னும் ஒரே ஒரு நிமிடம் தான் கொடுக்க முடியும்; அதற்குள் முடித்து விடுங்கள்.

நேரம் இல்லை; நீங்கள் முடித்து விடுங்கள்.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்**: பெட்டவாய்த்தலையில் ஒரு கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்குச் சொந்தமாக சுமார் 343 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்திலே வாழை, கரும்பு போன்ற பயிர்கள் எல்லாம் விவசாயம் செய்கிறார்கள். ஆனால் கோவிலுக்கு அந்த வருமானம் கிடைப்பதில்லை. கரும்பை எல்லாம் அங்கே இருக்கிற ஷுகர் ஃபாக்டரிக்கு அனுப்புகிறார்கள். வாழையை விற்றுவிடுகிறார்கள். பணத்தை எல்லாம் சில பெரிய மனிதர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். சில பெரிய மனிதர்கள் எல்லாம் சேர்ந்து குத்தகை எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் கோவிலுக்கு பணம் கிடைப்பதில்லை கோவில் நிலத்திலிருந்து கோவிலுக்கு வருமானம் வர பாதுகாப்பு இல்லை. ஆனால் அவர்கள் கொள்ளையடிக்க பாதுகாப்பு இருக்கிறது. இப்படி பல இடங்களில் நடக்கும் என்று நினைக்கிறேன். இந்த அறநிலையத் துறை நிர்வாகத்தில் இதுவரையில் இப்படி நடந்தது போதும். இனிமேல் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காமல் பாதுகாக்க வேண்டும்.

நாட்டிலே மழை இல்லை என்கிறார்கள். இப்படி இருந்தால் மழை எப்படி வரும்? வருணன் பயப்படுகிறார். நம்ம கோவிலிலே இப்படி கொள்ளையடிக்கிறார்களே, மற்ற இடங்களில் இவர்கள் என்ன செய்வார்கள் என்று நினைக்கிறார். அதனால் தான் மழை வரமாட்டேன் என்கிறது. காவேரி தண்ணீர் வரவில்லை என்றால் மழைபெய்தால் தானே வரும். வருணபகவானும் பயப்படுகிறார்; மழையும் பயப்படுகிறது. ஆகவே இந்த அறநிலையத் துறையில் நல்ல சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் கேட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

[1989 ஏப்ரல் 20

**திரு. வி. கே. இராசு:** எல்லாம் செயல்கூடும் என் ஆணை அம்பலத்தே எல்லாம் வல்லான்றவை ஏற்றி.

பெருமைக்குரிய தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பான மானியத்திலே எனக்கு பேசுகின்ற வாய்ப்பு கிடைத்ததற்கு நன்றி. இது எனக்கு ஈடுபாடுடைய மானியம்.

''கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.''

என்பது வள்ளுவர் வாக்கு. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய உறுப்புகள் இருந்தும் அவை பார்த்தல், கேட்டல், நுகர்தல் ஆகிய தொழில்களை செய்யாவிட்டால் அந்த உறுப்புகள் ஒருவனுக்கு இருந்தும் யாதொரு பயனும் இல்லை. அதைப் போன்றுதான் ஆண்டவனுடைய திருவடிகளை வணங்காத தலை ஒருவனுக்கு இருந்தால் அதனால் அவனுக்கு ஒரு பிரயோஜனமும் கிடையாது. அதைப்போன்றே அவரவர்கள் சார்ந்திருக்கிற இயக்கத்தில் இருக்கக்கூடிய தலைவர்களை வணங்காதவன் தலையும் பிரயோஜனப்படாது.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

என்றும் வள்ளுவர் கூறுகிறார். 'அ' என்ற எழுத்து எப்படி எழுத்துகளுக்கெல்லாம் முதல் எழுத்தாக அமைந்திருக்கிறதோ அதைப் போல இந்த மண்ணுக்கு முதல் இடத்தைப் பெற்றிருக்கிற பேரறிஞர் அண்ணா அவர்களின் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைக் காக்கத் தெரியாத உறுப்பினர் யாராக இருந்தாலும் அவரை மதிக்கவில்லை என்று அர்த்தம்.

(இரவு 6-20)

மனித சமுதாயத்திற்குச் சேவை செய்கிற இடம்தான் பெரிய கோயில். அதுதான் பெரிய மசூதி, அதுதான் பெரிய குருத்வாரா என்று சொன்னார்கள். அந்த நடைமுறைக்கேற்ப அதை அப்படியே கடைபிடிக்கிற நம்முடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், நம்முடைய மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்களும் சேவை புரிந்து வருகிறார்கள். பேராசிரியர் அவர்களுடைய பேச்சிலே ஆவேசம் இருக்கும், ஆனால் அர்த்தம் எப்போதாவது அனர்த்தம் ஆகி இருக்கிறதா என்று பார்த்தால் யாரும் சேலஞ்ச் பண்ணவே முடியாது. நானும் 1977-லே இருந்து இன்று வரையில் இந்த மன்றத்தில் இருக்கிறேன். எத்தனையோ வெள்ளி பரீட்சைகள் எல்லாம் நடந்தன. வேள்விகூட ஒரு காலத்தில் நடந்தது. இப்போது கேள்விப் பரீட்சை.

இங்கே இலக்கியச் செல்வர் எதிர்த்தார்போல இருக்கிறார். அபிநயத்தோடு சாடுகிற ஆற்றலுக்குச் சொந்தக்காரர் அவர்கள். சென்ற முறையோ அதாவது மூன்று நான்கு வருஷங்களுக்கு முன்பே உங்களுடைய திறமையை நான் முழுசாக அறிந்தவன். ஆனால் இந்தத் தடவை நாட்டு மக்களுக்கு உங்களுடைய சேவை



1989 ஏப்ரல் 20] [திரு. வி. கே. இராசு]

ஒழுங்காகப் போய்ச் சேரவில்லையே ஏன்? இதே லைப்ரரியில் அவருடைய கையைப் பிடித்துக் கேட்கிறபோது என்னைத்தட்டிக் கொடுத்து என்னுடைய உணர்வுகளை மெச்சுவதாகச் சொல்லி விட்டுப் போய்விட்டார். ஆனால் இப்போது சாடுகிற சாடை நாம் பார்க்கிறோம். அன்றாடம் நிகழ்ச்சியில் கேட்கிறோம். எவவளவு பெரிய கஷ்டங்கள், எவ்வளவு பெரிய நிலைமைகள் இருக்கின்றன? இந்தப் புனிதமான சபையை இப்பேர்ப்பட்ட விவரம் தெரிந்தவர்கள்— சில நேரங்களில் - ஒரு ஐந்து நிமிஷம் நான் பெர்மிஷன் கேட்டேன். இன்னும் பேசாத உறுப்பினர்கள் நம்முடைய பக்கத்திலே 60 குழந்தைகள் இருக்கிறார்கள். இன்னும் எதிர்த்தாற் போல எத்தனைபேர் இருக்கிறார்களோ தெரியவில்லை. அப்படி அவரவர்களுக்கும் பேச வேண்டுமென்ற எண்ணம் இருக்கும். நம்முடைய தீட்சிதர் மாதிரி பேசிக்கொண்டே போனால் எப்போது அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தை அப்போதைக்கப்போது நினைவு படுத்த வேண்டும்.

கோவிலிலே பாருங்கள். இங்கே அமைச்சர் பெருமக்கள் வரிசையிலே இருக்கிறார்கள். அது, அதுக்கு இன்னின்னார் என்று சொல்வது மாதிரி 6 அடி உயரம், அழகான தோற்றம்-சாமியிலே பெரிய சாமி, பரமேஸ்வரன்தான், அந்த மாதிரியான தோற்றம் ஒரு கடுகளவும் எதற்கும் சபலம் தட்டாத ஒரு நல்லவரை இந்த அறநிலையத் துறைக்குப் போட்டதால் இப்போது தீட்சிதர் சொன்னது மாதிரி அவர் வந்ததிலிருந்து இன்று வரையில் திருட்டே போகவில்லை. நானும் பல கோயில்களுக்கு, இந்தியாவிலே இருக்கின்ற பல கோயில்களுக்குச் சென்று முறைப்படி அதனை வணங்குகிற ஆற்றல், சக்தி, அரவணைப்பு, ஈடுபாடு எப்படி இருக்கிறதோ அதுபோல் அந்தக் கோயிலினுடைய நிர்வாகத்தை யார், யார் பார்க்கிறார்கள் என்று அதாவது கடைநிலை ஊழியர்களிலே இருந்து பெரிய அந்தஸ்துக்குச் சொந்தக்காரர்கள் வரையில் சந்தித்து சில விவரங்களை நான் வாங்கிவந்திருக்கிறேன். இந்தக் கோயில் எப்படி, யாரால் உருவாக்கப்பட்டது, யார் கட்டியது, இன்னும் 10 வருஷங்களுக்குப் பிறகு, இதனுடைய நடைமுறைகள் என்னென்ன, இதற்கு முன்னாலே எப்படி இருந்தது என்ற விவரங்களை எல்லாம் கேட்டபோது, நான் கேட்கிற அபிநயத்தில் அவர்கள் சொல்கிற விளக்கங்கள் என்னவென்றால் நாளுக்கு நாள் குறைந்து கொண்டுதான் போகிறதே தவிர அதிலே எங்கேயும் ஒரு தர்மம் கூட கிடையாது. தர்மம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லவே இல்லை. ஆனால் இப்போது அமைச்சர் அவர்களிடத்திலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது. எனக்கு சாமி பக்தி, ஈடுபாடு உண்டு. நம்முடைய இயக்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னாலும்கூட சாமி பெயரில் பக்தி உண்டு. ஆனால் சாமி பெயரிலே எவ்வளவு பற்று இருக்கிறதோ அதே அளவு பேராசிரியர் மற்றும் தலைவர் பெயரிலே கழகத்திலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்கள் பெயரிலே அளவுக்கு மீறிய பற்றும், பாசமும் உள்ளவன் நான். மனிதனை முழுசாக மதிக்கத் தெரிய வேண்டும் என்றால் கடவுளைக்

கண்டிப்பாக கும்பிட வேண்டும். கும்பிடவில்லை என்றால்— பேராசிரியர் அவர்கள் இந்த இடத்திற்கு வராமல் இருக்கப் போகிறார்களோ என்று நான் சாமி கும்பிட்டேன். அவரும் வந்து விட்டார். அது வேறு எனக்குப் பெரிய கஷ்டமாக ஆகிவிட்டது. ஒரு அச்சம், பயம், நாணம் எல்லாம் சேர்ந்து ஒட்டுமொத்தமாக இருக்கிறது. சரி, என்னதான் இருந்தாலும் வெளியே போனால் தானே திட்டப் போகிறார்கள் என்ற எண்ணத்தில் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

அமைச்சர்களிடத்திலே கேள்விகளை எழுப்புகிறார்கள். எல்லாம் பண்ணுகிறார்கள். நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அழகாக அபிநயமாக பதில் சொல்கிறார்கள். எந்த உறுப்பினராவது பள்ளிக் கூடங் களில் தேவாரம், திருப்புகழ், திருக்குறள் போன்ற நல்ல பாடங் களைக் கற்றுக்கொடுக்க இந்த அரசு ஏதாவது வழிவகை செய்யக் காத்திருக்கிறதா என்று பார்த்தால் ஒருவருமே கேட்கவில்லை. முட்டை போடு, சோறு போடு, இதைப்போடு, அதைப்போடு என்றுதான் கேட்கிறார்களே தவிர (குறுக்கீடு) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எல்லாம் முடிந்து போன கதை புதுசாக சொல்கிறாயே என்று சொல்கிறார்கள். எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். இது வரையில் எனக்குத் தெரியாமல் இருந்தது. நான் வருந்துகிறேன், இந்தத் தகவலை வைத்து. எனவே இனிமேல் அதை மேற்கொண்டு விரிவாக்கம் பண்ணி தேவாரம், திருப்புகழ், திருக்குறள் போன்ற வற்றை நல்லமுறையில் சொல்லிக்கொடுக்க வேண்டும். இங்கே இருக்கின்ற இந்தத் திருக்குறளை இந்த மன்றத்திலே முழுசாகப் படித்திருக்கிறார்களா என்று பார்த்தால் ரொம்பப் பேருக்குத் தெரியாது என்றுதான் நினைக்கிறேன்.

''சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்''

இந்தக் குறள் எப்பேர்ப்பட்ட கீர்த்திக்குச் சொந்தம். அந்தச் சொல்லை யாராவது கடைபிடித்து இங்கே பேசினால்—மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதா அவர்களுடைய நடையை முழுவதும் அறிந்து வைத்திருக்கிறேன். அவருடைய நடை எப்படி, எப்படி அடி எடுத்து வைப்பார் என்று மொத்தத்தையும் நான் அளந்து வைத்திருக்கிறேன். அப்பேர்ப்பட்ட சக்திக்குச் சொந்தக்காரர்கள் எல்லாம் இந்தச் சபையை முழுசாக மதித்து ஆக்க பணிகளுக்கு— எத்தனையோ கோடிக்கணக்கான ஏழை எளியவர்கள் எல்லாம் மத்தியான கஞ்சிக்கு இல்லாதவர்களாக, எதிர்பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். ஒரு நாளைக்கு 6,000 அப்ளிகேஷன் தலைவருக்கு மட்டும் வருகிறது. என்னுடைய அந்தஸ்துக்கு—என்னுடைய உயரம் வரை அப்ளிகேஷன் வந்திருக்கிறது. உங்களுக்கு எவ்வளவு அப்ளிகேஷன் வந்திருக்கும் என்பது ஒட்டுமொத்தமாக உங்களுக்கும் தெரியும். எனவே வெளியே இருக்கிற ஜனங்கள் ஓட்டுப்போட்டு மட்டும் இங்கே அனுப்பி விட்டார்கள் என்ற எண்ணம்



யாருக்கும் வரவே கூடாது. நாம் இப்பேர்ப்பட்ட கஷ்ட நஷ்டங்களை இன்ப துன்பங்களை அன்றாட நிகழ்ச்சியிலே சந்திக் கிறோம் என்பதைச் சொல்லி ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனி யாகவும் வேண்டுகோளாகவும், வியாக்கியானமாகவும், பக்தி யாகவும், பயமாகவும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே வைக்க நான் சித்தமாக இருக்கிறேன். கரண்ட் இல்லை, மழை இல்லை. கடவுளை வணங்கவில்லை என்பதால் மழை இல்லை என்பது முக்கியமாகத் தெரியும். கடவுளை வணங்கியாகவேண்டும். அப்போது தான் மழை வரும். நான் தினமும் பிரார்த்தனை பண்ணுகிறேன். இப்போது நிலவரத்திற்கு மழை சீராக பெய்து எலெக்ட்ரிசிடி வந்து கிராமம் முழுவதும் சப்ளை பண்ணுவோம் என்று சொன்னால் இந்த நிர்வாகத்தை குறை சொல்வதற்கு யாராலும் முடியாது. இந்த இரண்டு சக்தி களும் எப்போது கொடுக்கப்போகிறாய் என்று பகவானை நான் தினமும் தியானம் செய்கிறேன். அது என்றைக்காவது நமக்கு ஈடேறும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அதே நேரத்திலே இந்த கோயில்களிலே அண்ணாவுக்கு ஒரு மவுசு உண்டு. கலைஞருக்கும் ஒரு மவுசு உண்டு. காஞ்சிக்கும் காசிக்கும் என்ன ஐயா வித்தியாசம் என்று கேட்கிறபோது, காஞ்சிபுரத்திலே ஒருவரை கேட்கிறபோது காஞ்சிபுரத்திலே 107 கோயில்கள், காசியிலே 108 கோயில்கள் ஐயா என்றான். அந்த 107 கோயில்களில் பிரார்த்தனையால்தான் அண்ணா பிறந்தார்கள். தஞ்சாவூரிலே பெரிய கோயில் இருக்கிறது. அந்த மண்ணிலே திருவாரூர் கோயில் என்று இருக்கிறது. தேர் இழுப்பு இருக்கிறது. நம்முடைய கலைஞருக்கு தேர் இழுத்த பெருமை இருக்கிறது. அந்த தேரைப் பார்த்தேன். இப்பேர்ப்பட்ட ஒரு அந்தஸ்து நம் தலைவருக்கு வந்திருக்கிறதே என்று சொல்லி அதை எண்ணி எண்ணி பூரிப்பு அடைந்தேன். அது போலவே மெட்ராசிலே இருக்கின்ற மிகப் பிரசித்தி பெற்ற கோயில் கபாலீசுவரர் கோயில் தான். துண்டு முடிந்து கொண்டு தூர் வாருகின்ற அந்த பணியிலே நம்முடைய தலைவர் அவர்கள் ஈடுபட்டு இருக்கின்றார்கள். இப்படி எத்தனையோ கோயில்களிலே இன்னும் அந்த மாதிரி கஷ்டநஷ்டம் இருக்கின்றன. நீங்கள் என்ன பண்ணவேண்டும், அமைச்சர் என்ன பண்ண வேண்டும் என்று சொன்னால் யார் தர்மத்திற்கு அதிலே சோடா குடித்தால் கூட அவர் சீராக இருந்ததற்கு சரித்திரமே கிடையாது. என்னை கூட யாராவது, ஏதாவது ஒரு உறுப்பினராக, ஜாதி அந்தஸ்துக்கு என்று வருகின்றீர்களா என்று கேட்பார்கள். அதிலே போனால் சோடா குடிக்கவேண்டும். கலர் குடிக்கவேண்டும் என்று நிலைமை வந்துவிடும். அந்த பழி பாவம் நமக்கு வேண்டாம் என்று ஒதுங் கினவன் நான். அந்த மாதிரி தர்ம சிந்தனை உள்ளவன் இருக் கிறான். அதிலே ரூ. 5, ரூ. 10க்கு கூட ஆசைப்படாதவன் எத்தனையோ புண்ணியவான் எல்லாம் இந்த மண்ணிலே இருக் கின்றான். அவனை எல்லாம் தேடிப் பிடித்து வைக்கவேண்டும். போனது எல்லாம் போகட்டும். இனிமேல் வருகின்ற காலங்களில் இதுமாதிரி ஒரு எழுச்சியான எண்ணத்திற்குச் சொந்தக்காரனைக் கண்டு பிடித்து கொண்டுவரவேண்டும். இருக்கிற 2,40,000 ஏக்கர்

[திரு. வி. கே. இராசு] [1989 ஏப்ரல் 20

நிலம் எத்தனையோ கிராமங்களிலே பரந்து விரிந்து கிடக்கிறது. அது எப்படி எப்படி பாழ்பட்டு கிடக்கிறது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். எங்கள் ஊரிலேகூட ஒரு கோயில் இருக்கிறது. 'ஏகாம்பரேஸ்வரர் கோயில்' என்று சொல்லி இருக் கின்றது. அந்த சின்ன கிராமத்தில் இருக்கின்றது. இரண்டு பக்கம் அணை. முச்சந்தியிலேதான் எங்கள் ஊர் இருக்கிறது. வெள்ளைக் காரன் அதை யாரோ அணைக்கட்டுப் புதூர் என்று பெயர் வைத்து விட்டு போய்விட்டான். கோயில் பெயரையும் மாற்றிவிட்டான். அதற்கு ஒரு சரியான அமைப்பு இல்லை. பாழ் அடைந்து கிடக் கிறது. 25 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்கிறானே தவிர 25 கோணி நெல்கூட அந்த வருடத்திலே அந்தக் கிராமத்திலே வருவதற்கு வசதியில்லை. வாய்ப்பு இல்லை. வாட்டர் பெசிலிட்டி இல்லை. அப்படி சில இடங்கள் இருக்கின்றன. வருமானம் கூடுதலாக வருகின்ற கோயில்கள் எல்லாம் இருக்கின்றன. இதிலே ஒன்று சொல்லிக் கொள்கிறேன். இது ஒரு பெரிய திருப்பணியாக இருக்கவேண்டும். அந்த திருநாமத்திற்கு சொந்தக்காரனாக இருக் கின்ற அந்த கந்தனுடைய அடியை வணங்குங்கள் என்றுசொல்கின்ற அளவுக்கு அந்த நாமத்திற்கு சொந்தக்காரனாக இருக்கின்ற நீங்கள் ஒரு நல்ல யோக்கியமானவனை கண்டுபிடித்து அந்த ஆலயப் பணி களிலே வைத்து, நீங்களும் அதில் ஈடுபாடு வைத்தீர்கள் என்று சொன்னால் அது உங்களுக்கு ஒரு பெரிய கீர்த்தியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே ஒன்றை சொல்கிறேன். முன்னால் முதல மைச்சராக இருந்த புரட்சித் தலைவர் அவர்கள், இந்த மானியம் வருகிறபோது அந்த பைலை கையிலே எடுத்தார்கள். இந்த பைல் ரொம்ப லேசாக இருக்கும். அப்படி போட்டார்கள். அதில் எவ்வளவு லேசாக காரியங்களை செய்திருக்கிறார்கள் என்பதை அந்த குறி எங்களுக்கு உணர்த்தியது. அந்த மாதிரி எண்ணத்திற்கு நீங்களும் சொந்தமாக இருந்து, நல்ல கீர்த்தி யுள்ளவராக, அந்தஸ்துக்காரராக போடவேண்டும் என்ற அந்த வேண்டுகோளை உங்கள் மத்தியிலே வைத்து எனக்கு இந்த சின்ன வாய்ப்பைக் கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் இந்த மாமன்றத்திற்கும் நன்றி சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்) நன்றி நன்றி. சீக்கிரம் முடித்ததற்காக.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கழக உடன்பிறப்பு, சட்டமன்ற உறுப் பினர் அவர்கள் (மேசையை தட்டும் ஒலி) பிரமாதமாக பேசி னார்கள். அவரை உங்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அவர் வணங்குகின்ற கடவுள் பெயரை கேட்க விரும்பி கேட்கிறேன். அந்த பெயரை அவர் சொல்ல முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.



1989 ஏப்ரல் 20]

திரு. வி. கே. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணுக்குத் தெரிந்த தெய்வமே சூரியன் தான். அதைத்தான் அண்ணா சின்னமாக வைத்தார்கள்.

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கும் திருக் கோயில்களில் 490 திருக்கோயில்கள் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமானதாக இருக்கின்றது. இந்த திருக்கோயில் களிலே ஒன்று இரண்டு திருக்கோயில்கள் தவிர, மற்ற கோயில் களிலே அனைத்திலுமே தினம் விளக்குகூட எரியாத அளவிலே தான் இருக்கின்றது. இந்த அரசாவது இதற்கு தனி கவனம் செலுத்தி அந்தக் கோயில்களை நல்லமுறையிலே பராமரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அந்த கோயிலுக்குச் சொந்தமான பூமிகள் அனைத்துமே தனியார்களுக்குச் சொந்தமாக இருக் கின்றன. எங்களது ஊருக்குப் பக்கத்திலே உள்ள திருவெட்டாறு பகுதியில் ஆதிகேசவ பெருமாள் கோயிலுக்கு சொந்தமான 100 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அதில் ஏககாலமாக 2 லட்சம் ரூபாய் வருடத்திற்கு வருமானம் வரக்கூடிய நிலைமை இருக் கின்றது. அந்த பூமியை ரூபாய் ஏழாயிரத்திற்கு பாட்டத் திற்காக விட்டிருக்கிறார்கள். அதை திருப்புவதற்காக கோர்ட் டுக்குப் போயும் அந்த சொத்தை திருப்ப முடியாத சூழ்நிலை இருக்கிறது. இப்போதும் அந்த ஏகபோக தனி நபர் அந்த சொத்தை அனுபவித்து வருகிறார். இப்படிப்பட்ட சொத்துக் களை எல்லாம் தனியார்களிடத்திலிருந்து திரும்ப எடுப்பதற் காக ஒரு சட்டத்தை இந்த அரசு கொண்டுவர வேண்டும். தனியாரிடம் இருக்கிற கோயில் சொத்துக்களை எல்லாம் திரும்பவும் கோயில்களிடமே ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இரவு 6–30)

அடுத்து, ஆலயங்களில் பணிபுரியும் ஆட்களுக்கு சம்பளம் மிகவும் குறைவு. திருக்கொச்சி காலத்திலே கன்னியாகுமரியில் கொடுத்து வந்த சம்பள விகிதத்தையே இப்போதும் கொடுப் பதாக சொல்லி அந்த ஆட்கள் வருத்தப்படுகிறார்கள் ஆகவே, இந்த அரசு கருணை கூர்ந்து அவர்களுக்கு அரசு இங்கே கொடுக் கக்கூடிய சம்பளத்தை கொடுக்காவிட்டாலும் கூட அன்றாடம் அவர்களுக்கு தேவைப்படுகிற அவசியத்திற்கேற்பவாவது சம்பளம் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்து, மத கலாச்சார பண்பாடுகளை புண்படுத்தும் அளவிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு அரசு அனுமதியளிக் காமல் இருக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன். காரணம் "ஆபாசத்தில் மிஞ்சியது இராமாயணமா மகாபாரதமா" என்ற நாடகத்தை தான் தகராறுக்கு காரணம். அதற்கு அனுமதி வழங்கிய தாக சொன்னார்கள். அதனால்தான் பல ஊர்களில் குழப்பங்கள் ஏற்பட்டன. ஆகவே, அருள்கூர்ந்து இந்த அரசு இம்மாதிரி காரியங்களுக்கு அனுமதி வழங்காமல் இருக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

[திரு. ஆர். நடேசன்] [1989 ஏப்ரல் 20

அடுத்து, பழுதடைந்த கோயில்களை, புராதனமான கோவில் களை எல்லாம் பழுது பார்க்க வேண்டும். முன்புபோல அங்கே தீபங்களை ஏற்றி கடவுளை பிராத்தனை செய்ய வசதி செய்து கொடுக்கும்படி மிகவும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டம் மலைகள் நிறைந்த பகுதி. அங்கே மலைதான் கூடுதல். அங்கு 4, 5 அணைக் கட்டுகள் இருக்கின்றன. அதற்கு பக்கத்திலே வருடத்தில் 6 மாதம் மழை பெய்யும், அங்கே 5 ஆயிரம் ஹெக்டர் நிலத்தில் அரசு சார்பாக ரப்பர் வாரியம் ரப்பர் பயிரிட்டு வருகிறது. அதுபோல சில இடங்களில் அல்பீசியா போன்ற மரங்களையும் நட்டு வளர்ந்த பிறகு முறிக்கிறார்கள். அம்மா ரி மரங்களை முறிக்கின்ற இடங்களில் திரும்பவும் தேக்கு போன்ற மரங்களை வளர்ப்பதாக இருந்தால் முன்புபோல அங்கே நாம் பெரிய காடுகளை பார்க்க முடியும்.

அடுத்து, இந்த காடுகளை, காடுகளிலுள்ள மரங்களை திருட்டுப் போகாமல் தடுப்பதற்காக இப்போது போட்டிருக் கின்ற ஆட்களால், சட்டங்களால் முடியவில்லை. இப்போது பாரஸ்டில் போட்டிருக்கின்ற பணியாளர்கள் போதவில் லை என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அவர்களுக்கு தேவையான ஆயுதங்களையும், தோக்கு முதலியவைகளையும் ஒழுங்காகக் கொடுக்கவில்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே தயவுகூர்ந்து அங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு தேவையான ஆயுதங்களையும் தோக்கு முதலியவைகளையும் வழங்க வேண்டும் அத்துடன் அரசுக்கு சொந்தமான காடுகளில் வேலிகள் போட்டால் போதும். அப்படி ஓர் ஏற்பாட்டினை இந்த அரசு செய்தால் எங்கள் பகுதி பழையபடி 10 ஆண்டுகளில் பெரிய பாரஸ்ட் ஆக மாறிவிடும்.

அடுத்து, இன்றைக்கு சாலை ஓரங்களில் அமைக்க இருக்கும் செடிகள் வளர்ப்பு திட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் அதற்கு ஊக்கம் கொடுக்க வேண்டும். வருடா வருடம் லட்சக் கணக்கில் மரங்களை நடுகின்றோம் என்கின்ற கணக்கு வந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு வருடமும் நடுகின்ற மரங் களை ஒழுங்காக அரசு பரிபாலனம் செய்யவில்லையோ என்று எனக்கு படுகிறது. ஆகவே, வருடா வருடம் பயிர் செய்யப்படுவது குறைவாக இருந்தாலும் கூட பரவாயில்லை, ஒழுங்காக ஏற்கனவே நட்டவற்றை தண்ணீர் ஊற்றி வளர்ப்பதன் மூலம் அவை பட்டுப் போகாமல் நாம் தடுப்பதுடன் அவற்றின் எண்ணிக்கையையும் பெருக்குவதாக அது அமையும் என்பதை நான் அன்புடன் வேண்டி கேட்டுக்கொள்கின்றேன்.



1989 ஏப்ரல் 20] [திரு. ஆர். நடேசன்]

கன்னியாகுமரி மாவட்டத்தில் 5,000 எக்டேர் அளவுக்கு ரப்பர் நட்டிருக்கிறார்கள். அந்த ரப்பர் தோட்டங்களில் 3,000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். அந்த 3,000 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் எஸ்டேட் மேலே இருப்பதால், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை இன்னும் அதிகமாகச் செய்து கொடுக்க வேண்டும். அந்த மரங்களைப் பராமரித்து, பால் வெட்டுவதற்கு இன்று செய்கிற முறை, காட்டிலே வேலை செய்கிறவர்களை வைத்து பால் வெட்டு கிறார்கள். அதுவும் மிகவும் நிபுணத்துவம் வாய்ந்த தொழில். அனுபவம் உள்ளவர்களுக்குத்தான் அதைச் செய்ய முடியும். எனவே பால் வெட்டும் தொழிலாளர்களுக்குத் தனியாக ட்ரெயி னிங் கொடுக்க வேண்டும். அரசே அவர்களுக்கு ட்ரெயினிங் கொடுத்து, பால் வெட்டச் செய்து, நல்ல ஆதாயத்தை ஈட்ட வேண்டும். தனியார்கள் தோட்டத்தில் பால் வெட்டும் நபர் களுக்கு மேற்பார்வையாளர்களாக கங்காணி என்று வைத்திருக் கிறார்கள். அந்த முறையில் 10 பேருக்கு ஒரு மேற்பார்வை யாளர் என்று வைத்து நாமும் பால் வெட்டுவதாக இருந்தால் நல்லமுறையில் மரத்தைப் பேணி வளர்க்க முடியும், கூடுதலாக ஆதாயம் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கழிந்த 16-4-89 அன்று என்னுடைய தொகுதியான திருவட்டார் தொகுதியில் திற்பரப்பு கிராமம், திருநந்திக்கரை என்ற இடத்தில் சானல் கரை புறம்போக்கில் உள்ள பெரிய அயனி மரங்களை வெட்டும்போது, தடுக்க முயன்ற சில அதிகாரிகளை தனி அறையில் பூட்டி வைத்துவிட்டு, மரங்களை வெட்டிச் சென்று விட்டார்கள். அந்த மரத்தை அங்குள்ள முக்கியஸ்தரின் சொந்தக்காரரின் லாரியில் கடத்திச் சென்றிருக் கிறார்கள். அங்கே உள்ள ஏ.சி, அவர்கள் தனியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த நடவடிக்கை யை மாற்ற மேலும் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. தயவு செய்து மரங்களைத் திருடி கொள்ளை அடிக்கும் ஆட்களைக் கண்டுபிடித்து, தக்க நடவடிக்கை எடுத்து, வன இலாக்காவுக்கு பாதுகாப்பு கொடுக் கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் கூடுதலாகக் கிடைக் கிறது. அந்த ரப்பர் இந்தியாவிலேயே முதல் தரமான ரப்பர். ஆகையால் அந்த ரப்பரைப் பயன்படுத்தி மிகப் பெரிய 2, 3 தொழிற்சாலைகளை அரசு துவங்குவதாக இருந்தால், அங்குள்ள தொழிலாளர்களுக்கு நிறைய வேலை வாய்ப்பு கிடைக்கும். அதோடு ரப்பர் பயிரிடுவோருக்கு நல்ல விலை கிடைக்க உதவி யாக இருக்கும். ஆகையால் இந்த அரசு 2, 3 பெரிய ரப்பர் தொழிற்சாலைகளை கன்னியாகுமரி மாவட்டத்தில் நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு மர டிப்போக்களில் மரங்களை உடனே ஏலம் விடாமல் 10, 15 வருடங்கள் கழிந்து மரங்கள் கெட்டுப்போன பிறகுதான் ஏலம் போடுகிறார்கள். இதனால் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள

மரம் நூறு ரூபாய்க்குக்கூட போகாது. அரசு டிப்போக்களுக்கு மரங்கள் எப்போது வந்தாலும், அவற்றை வேகமாக ஏலம் போட்டு, நல்ல விலைக்கு விற்க வேண்டும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சுற்றார், திர்பரப்பு ஆகிய ஆணைக்கட்டுகள் அங்கே இருக்கின்றன. மாத்தூரில் தொட்டிப் பாலம் இருக்கிறது. ஆசியாவிலேயே உயரமானதும், நீளமானதுமாக உள்ளது என்று சொல்லுகிறார்கள். அந்த இடங்களை மையமாகக் கொண்டு சுற்றுலா மையத்தை உருவாக்க வேண்டுமென்று அமைச்சரவர்களை மீண்டும் கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(இரவு 6-40)

திரு. ஆர். எட்டியப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்தில் பேச வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதியான பெரணமல்லூர் வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைக் கூறி இந்த மான்யக் கோரிக்கையைப் பற்றி சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இந்து சமய அறநிலையத் துறை மன்னர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து மக்கள் ஆட்சிக் காலம் வரை தொன்றுதொட்டு வருகிற ஒரு துறையாகும். இந்தத் துறை பல்வேறு காலகட்டங்களின் பல்வேறு வகையாக சீரமைக்கப்பட்டு, புனரமைக்கப்பட்டு வந்திருக்கிறது. 1925, 1927, 1940, 1951 மற்றும் 1959 ஆம் ஆண்டு ஆகிய காலகட்டங்களிலே இந்தத் துறையில் இருக்கிற பல்வேறு குறைகளை நீக்கி இதையொரு நல்ல துறையாக மாற்ற தமிழக அரசாங்கங்கள் முயற்சிகள் செய்து, அந்த வகையிலே வெற்றி கண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட இந்தத் துறையில், தமிழகத்தில் இருக்கிற கோயில்களை மூன்று வகையான கோயில்களாகப் பிரித்திருக்கிறார்கள். அதாவது பரம்பரை தர்மகர்த்தாக்கள் இருக்கிற கோயில்கள் — அதுமட்டுமல்லாமல் அரசாங்கம் நியமிக்கிற தர்மகர்த்தாக்கள் இருக்கிற கோயில்கள்— மூன்றாவது ஸ்கீம் டெம்பிள்ஸ் என்கிற கோயில்கள், இத்தகைய கோயில்களில் எல்லாம் ஏறக்குறைய பல்வேறு குறைகள் இருந்தாலும், அரசாங்கம்தான் இவற்றையெல்லாம் ஏற்று நடத்த வேண்டும் என்ற ஒரு கோரிக்கை பல்வேறு காலகட்டங்களிலும் எழுப்பப்பட்டிருக்கின்றன. அது நடைபாதை கோயில்களானாலும் சரி அல்லது தஞ்சைப் பெரிய கோயிலானாலும் சரி, அரசாங்கத்தால் முழுமையாக ஏற்று நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை தமிழகத்தில் எழுந்திருக்கின்றன.



தொ அந்த வகையில் வெள்ளைக்காரன் நம் இந்தியாவை ஆண்ட போது இங்கே இருக்கிற இந்து சமயத்தையும் இங்கே இருக்கிற இந்து கோயில்களையும் அதன் சொத்துக்களையும் பராமரிக்கிற சட்டத்தைக் கொண்டு வந்தான். 1810 ஆம் ஆண்டு புரோகிளமேஷன் ஆப் பெங்கால் என்றும் 1816 ஆம் ஆண்டில் புரோகிளமேஷன் ஆப் மெட்ராஸ் என்றும் 1827 ஆம் ஆண்டில் புரோகிளமேஷன் ஆப் பாம்பே என்றும் சொல்லி நம் இந்தியத் திருக்கோயில்களையும் அவற்றின் சொத்துக்களையும் அவற்றின் அதிகாரங்களையும் பிடுங்கிக்கொண்டு நம் இந்திய நாட்டு சொத்துக்களையும் அவர்கள் அபகரித்து சென்றுவிட்டனர். இங்கே 20, 30 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய இந்துச் சமய சான்றோர்கள் போராடி அத்தகைய அதிகாரத்தை மீண்டும் நமக்கே வாங்கிக் கொடுத்து, மீண்டும் இங்கே இருக்கிற பெரியவர்களே இந்து சமய கோயில்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர்.

அந்த வகையிலே இந்து சமய கோயில்களையெல்லாம் — இங்கே சொல்லப்பட்ட பரம்பரைத் தர்மகர்த்தாக்கள் மற்றும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாக்கள் எல்லாம் நிர்வகிக்கிற கோயில்களையெல்லாம் — நிர்வகிக்க 'ஃபிட்டஸ்ட் பர்சன்ஸ்' எனப்படும் தகுதியானவர்களைத்தான் நியமிக்க வேண்டும். அவர்கள் எல்லாம் ஏதோ மிட்டா மிராசுகளாக இருக்காமல், உண்மையான பக்திமான்களாக இருக்க வேண்டும் என்று நான் அரசை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் அந்த ஆலயத்தில் இருக்கிற ஊழியர்கள் எல்லாம் சரிவர சம்பளம் கொடுக்கப்படாமல் கஷ்டப் படுகிறார்கள். மேலும் அவர்களெல்லாம் முழுமையாக நேரடியாக அரசு ஊழியர்களாகக் கருதப்பட வேண்டும். இந்து சமய நிறுவனங்களில் பணிபுரியும் அந்த ஊழியர்கள் எவ்வாறு அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்தால் ரூ. 20,000 பெறுகிறார்களோ அப்படியே இவர்களுக்கும் 20,000 வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் திருக்கோயில்களில் இருக்கிற அர்ச்சகர்கள் — தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்துத் திருக்கோயில்களிலும் இருக்கிற அர்ச்சகர்கள் — தமிழிலேதான் வழிபாட்டு முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதோடு அந்தத் திருக்கோயில்களை நிர்வகிக்கும் பொறுப்பில் இருக்கிற உதவி ஆணையர்கள், துணை ஆணையர்கள், மற்றும் ஆணையர் போன்ற பெரிய அரசு அதிகாரிகள் அனைவரும் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாகவே இருக்க வேண்டும் என்றும் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி இருந்தால்தான் இந்து தர்மத்தை, இந்து நெறியில், இந்து சமயத்தில் அவர்களுக்கு இருக்கின்ற நம்பிக்கை, அந்த கோயில்கள் எப்படி எப்படி எல்லாம் இருக்க வேண்டுமென்பதற்கு ஏதுவாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த திருக்கோவில்களுக்கு சொந்தமான நிலங்களை எல்லாம் கு
பலர் என்குரோச்மென்ட் செய்துகொண்டு, அபகரித்துக்கொண்டு,
திருக்கோவில்களின் வருமானத்தை எல்லாம் ஒரு தனிப்பட்ட
நபர்களோ, தனிப்பட்ட கும்பல்களோ சேர்ந்துகொண்டு
அபகரிக்கும் நிகழ்ச்சியாக தமிழ்நாட்டில் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றது. அத்தகைய என்குரோச்மென்ட்டை
எல்லாம் தயவுதாட்சண்யமின்றி, கட்சி பாகுபாடின்றி நிச்சயமாக
இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோவில்கள் சட்டங்கள் 1950, 1959-ம் ஆண்டு நிறை
வேற்றப்பட்டு, பல ஓட்டைகள் சரி செய்யப்பட்டு, இப்போது
அந்த திருக்கோவில்கள் சட்டங்கள் ஓரளவு நிர்வகிக்கும் அளவுக்கு
இருக்கின்றன. அந்த வகையில் தமிழ்நாடு திருக்கோவில்கள்
நிச்சயமாக மற்ற மதங்களைக் காட்டிலும் செழுமையான,
செழிப்பான, உண்மையான இந்து மதமாக மாறக்கூடிய நிலைமை
இருக்கிறது. இந்துக் கோவில்களுக்கு பக்கத்திலே முஸ்லீம்
கோவில்கல் இருக்கின்றன; அல்லது முஸ்லீம் கோவில்களுக்கு
பக்கத்தில் இந்துக் கோவில்கள் இருக்கின்றன. இங்கு இரு
சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அவரவர்களுக்கு வழிபாட்டு
நேரம், முறை ஆகியவை இருக்கின்றன. தமிழ்நாட்டில் பல்வேறு
இடங்களில் குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் பேரணாம்
பட்டு, வந்தவாசி போன்ற இடங்களில் ஆடி மாதத்தில் முஸ்லீம்
களுக்கும், இந்துக்களுக்கும் — அண்ணன், தம்பி போல இருக்
கின்ற எங்களுக்கு இந்த சமயத்தில் ஒரு பிரச்சினை இருக்கின்றது.
அதற்கு இந்து சமயத்தைச் சேர்ந்த அறநிலையத் துறை
அதிகாரிகள், முன்கூட்டியே இந்து சமயத்தைச் சேர்ந்த பெரியோர்
களை அழைத்து எப்படி, எப்படி, எந்தெந்த நேரத்தில் எந்த
வகையான வழிமுறைகளை பின்பற்ற வேண்டுமென்பது பற்றி
இரு சமயத்தவர்களிடமும் முன்கூட்டியே ஆலோசனை செய்து
அவர்களுக்கு ஒரு உத்திரவிட்டால், நிச்சயமாக அந்த இரு
சமையத்தவர்களிடம் ஏற்பட இருக்கும் மோதல்களைத் தவிர்க்க
உதவிகரமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் மிகப் பெரிய கோவில்களுள்
ஒன்றான திருவண்ணாமலை கோவில் இருக்கிறது. அங்கு
இந்தியாவில் இருக்கிற யாத்திரிகர்கள் மட்டுமல்லாமல், வெளி
நாட்டு யாத்திரிகர்கள் கூட வந்துபோகும் திருத்தலமாக அது
இருக்கிறது. அத்திருத்தலத்தில் குறிப்பாக கார்த்திகை மாதத்தில்
10 நாள் திருவிழா நடத்துகிறார்கள். அந்த 10 நாள் திருவிழா
வில் அந்த கோவிலுக்கு வரும் யாத்திரிகர்களுக்கு சரிவர சுகாதார
வசதி செய்யப்படாமலும், கழிவறை போன்ற கட்டிடங்கள்
இல்லாமலும் இருப்பதால், அவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு
உள்ளாகிறார்கள், ஆகவே, இந்து சமயத்தை சேர்ந்த
அதிகாரிகள், வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலையில்
உள்ள அருணாசலேஸ்வரர் கோவிலை மிகவும் நல்லமுறையில்
சீர்படுத்தி செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதுபோலவே, வேலூரில் இருக்கும் ஜலகண்டேஸ்வரர் ஆலயம் தொல்பொருள் ஆராய்ச்சி துறை நிர்வாகத்தில் இருந்தாலும்கூட தமிழக அரசு அதை ஏற்று நடத்தி வருகிறது. அந்தக் கோவிலையும் நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த நெடுங்குளம் கிராமத்தில் 2 கோவில்கள் இருக்கின்றன. ஒன்று சிவன் கோவில்; மற்றொன்று விஷ்ணு கோவில். அந்த இரண்டு கோவில்களுமே இந்து அறநிலையத் துறைக்கு சொந்தமானவை. மிகப் புராதனமான அந்தக் கோவில்களை இந்து அறநிலையத்துறை மேற்கொண்டு இருக்கிறது. அவைகளுக்கு அதிக மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், ஆவணியாபுரத்தில் லட்சுமிநரசிம்மசுவாமி கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்கும் அதிக மானியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அத்தொகுதி முழுவதுமே நிறைய குடிநீர் பிரச்சினை இருக்கின்றது. ஆகவே, அதையெல்லாம் இந்த அரசு நிச்சயமாக தீர்த்து வைக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, கடைசியாக கோவில்கள் கொள்ளையர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்கின்ற எங்களுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் வழி நின்று, இந்த அறநிலையத் துறை செம்மையாக நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்த மாற்றுத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

(இரவு 6–50)

**திரு. பி. வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரவர்கள் தனது மானியக் கோரிக்கைகளை இங்கே முன்மொழிந்திருக்கின்றார்கள். அதன்மீது எனது கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பினைத் தந்த உங்களுக்கு நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் கடந்த 1–4–88-ஆம் தேதியன்று பேரவை விதி 74(1)-இன் கீழ் அவசர நிர்வாகப் பொருள் குறித்து விவாதிக்க அனுமதி கோரியிருந்தேன். அந்த விஷயம் அறநிலையத் துறை பொறுத்ததாக இருந்ததால் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பிருப்பதாகச் சுட்டிக்காட்டி, எனக்கு அப்பொழுது அனுமதி மறுத்திருக்கின்றீர்கள். எனவே, விதி 74(1)-இல் கோரியிருந்த ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத விவாதம், அதற்கு மேல் இன்றைக்கு ஐந்து டிமாண்டுகள்; அவைகளின் மேலேயும் நான் பேச வேண்டும், 15 நிமிடங்கள். குறைந்தது அந்த அளவிற்காவது நேரத்தை எனக்குத் தாங்கள் ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. பி. வி. இராஜேந்திரன்) [1989 ஏப்ரல் 20

அறநிலையத் துறையைப் பொருத்தவரையில் இந்து சமயத்தின்
மீதும், ஆகமங்களின்மீதும் பற்றுதலும், நம்பிக்கையும்,
இன்றைக்கு இருக்கின்ற ஆளுங்கட்சிக்கு இருக்கிறதா இல்லையா
என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், தோழர் இராசு
போடறவர்கள் அங்கே இருப்பதிலே — எக்செம்ப்ஷனாக
இருந்தாலும்கூட, எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது, மாண்புமிகு
அமைச்சரவர்களுக்கு அதிலே மிகுந்த நம்பிக்கை இருக்கிறது
என்பதில் எங்களுக்கு சற்றும் சந்தேகம் கிடையாது.

காலையில் அவர்கள் அவைக்குள்ளே நுழையும்பொழுதே
அறநிலையத் துறை அமைச்சராகவே, தலையெல்லாம் பிரசாதம்,
திருச்செந்தூர் முருகன் கோயில் பிரசாதத்துடன், நல்ல குங்குமப்
பிரசாதத்துடன் அவர்கள் உள்ளே வந்தார்கள். பார்த்தால்,
அவர்களுக்கு ஏற்ற துறையை அவர்கள் ஏற்றுயிருக்கிறார்கள்
என்பது தெரிகிறது.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** தலைவரவர்களே, நான்
காலையிலே இங்கே வரும்பொழுது, பெரியார் நகர் என்ற இடத்
திலே நடைபெற்ற ஒரு கோயில் கும்பாபிஷேகத்திலே கலந்து
கொண்டுவிட்டு இங்கே வந்தேன் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** எப்படியோ, ஆன்மீகத்தின் மீது
ஏற்பட்டிருக்கின்ற இந்தப் புதிய மாறுதல், ஆளுங்கட்சியைச்
சார்ந்தவர்களுக்கு இந்தப் பெரிய மாறுதல் எங்களுக்கெல்லாம்
பெரிய மகிழ்ச்சியைத் தருகிறது என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவ
ரவர்களே, இது ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்பட்
டிருக்கிற மாறுதல் அல்ல. ஆன்மீகத்தை மதிப்பவர்களும் இந்த
இயக்கத்திலே இருக்கிறார்கள்; பகுத்தறிவு வாதிகளும் இருக்
கிறார்கள். இது அவரவர்களுடைய தனி உரிமையாக நீண்ட
காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது அறிஞர் அண்ணா
அவர்கள் வகுத்த பாதை.

**திரு. குமரி அனந்தன்:** சில நேரங்களிலே நல்ல வாய்ப்பாக சில
செய்திகள் வந்துவிடுகின்றன. நமது அறநிலையத் துறை அமைச்
சரவர்கள் சென்று வந்த கும்பாபிஷேகம் நடந்த இடம் பெரியார்
நகர். அது ஒன்று. இரண்டாவது, வேலூரிலே போய் நின்றால்.
திருவண்ணாமலை தீபம் பார்க்க பெரியார் தயார். திருவண்ணா
மலை தீபம் பார்க்க பெரியார் தயார் என்று அந்தக் கண்டக்டர்கள்
சப்தம் போடுகிறார்கள். ஏனென்றால் அங்கிருக்கின்ற
பேருந்துக்குப் பெரியார் என்று பெயர். பல மாற்றங்கள்.
(சிரிப்பு)



1989 ஏப்ரல் 20]

**திரு. பி. வி ராஜேந்திரன்:** எப்படியோ ஆன்மீகம் என்றால்
அது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்று கிடையாது. ஆன்
மீகத்தில் நம்பிக்கை இருக்கின்றவர்களும் இருக்கின்றார்கள்;
பகுத்தறிவு வாதத்தில் நம்பிக்கை உள்ளவர்களும் இருக்கின்
றார்கள் என்று மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்
சொன்னார்கள். எப்படி இருந்தாலும் எங்களுக்குச் சந்தோஷம்.

இந்த மானியக் கோரிக்கையை முன் மொழிந்திருக்கின்ற
அமைச்சர் பெருமகனார் அவர்களை நான் உண்மையாகவே மனப்
பூர்வமாக, உளப்பூர்வமாக, பாராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பொறுப்பு,
நிச்சயமாக அவர்களுக்கு ஏற்ற பொறுப்பு. அறநிலையத் துறைக்கு
நிச்சயமாக இந்த அமைச்சரவையில் அவர்களை விட்டால், மற்ற
வர்கள் அந்தப் பொறுப்பை ஏற்பதைவிட — மற்றவர்கள்
என்றால், கம்பேரிட்டிவாகச் சொல்லப்போனால், இவர்களுக்கு
அத்துணை அருகதைகளும் இருக்கின்றன என்றுதான் அவர்கள்
ஏற்றிருக்கின்றார்கள். அவர்களுடைய இந்தக் காலத்தில் அற
நிலையத் துறையும், வன வளங்களும், அத்தனையும் மேம்பட
வேண்டுமென்று, மேம்படும் என்கின்ற நம்பிக்கையும் எங்களுக்
கிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், ஆளுங்கட்சியினுடைய தேர்தல் வாக்குறுதியிலே
அறநிலையத் துறையின் நிர்வாகச் சீரமைப்புக்கு சமயச் சான்
றோர்களுடன் கலந்து பேசி, குழு நியமிப்பதாகச் சொல்லி,
அதையும் தற்போது ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக்
குழுவை நியமித்ததை நான் பாராட்டுகிறேன். மூன்று மாதக்
காலத்தில் அந்தக் குழு தனது அறிக்கையைத் தர வேண்டுமென்ற
கால அவகாசம் மேலும் நீட்டிக்கப்படாமல், அந்தக் குழு அதனு
டைய உரிய காலத்தில் தன்னுடைய பணிகளைச் செய்து தர
வேண்டுமென்றும் இந்த மன்றத்தின் சார்பாக நான் அந்தக்
குழுவைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், அதே தேர்தல் வாக்குறுதியில், திருச்செந்
தூருக்கு நீதி கேட்டு நடத்திய பயணம் சுட்டிக்காட்டப்பட்டிருக்
கிறது, ஆளுங்கட்சியினுடைய தேர்தல் வாக்குறுதியில். அன்றைக்கு
மாண்புமிகு கலைஞர் அவர்கள் நீண்ட நெடுந்தூரம், தன்னுடைய
உடல்நலத்தையும் பொருட்படுத்தாமல் நடந்து அதனால் கால்
களில் புண் ஏற்பட்டு, கால் கட்டுகளோடு கூட அவர்கள்
அன்றைக்கு நடந்து சென்றதை நான் அன்றைக்கு பத்திரிகைகளில்
வந்த படங்கள் மூலம் பார்த்தேன். அந்த நெடிய பயணத்தை
அவர்கள் மேற்கொண்டார்கள். அன்றைக்கு நடந்த சம்பவங்கள்
சுப்பிரமணிய பிள்ளை அவர்களுடைய கொலை வழக்கு, திருச்
செந்தூர் முருகன் கோவிலில் பல பொருட்களை காணோம் என்ற
அன்றைய கோரிக்கை, இவை அத்தனையும் அன்றைக்கு இந்த
மன்றத்திலே எழுப்பப்பட்டன; மன்றத்திற்கு வெளியேயும்
எழுப்பப்பட்டன. அன்றைய அறநிலையத்துறை அமைச்சர்
அவர்களை பதவி நீக்கம் செய்யச்சொல்லி இந்தமன்றத்திற்குள்ளே

(திரு. பி. வி. இராஜேந்திரன்) [1989 ஏப்ரல் 20

இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிற திராவிட முன்
னேற்றக் கழக உறுப்பினர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசை
யிலிருந்து, அறநிலையத் துறை அமைச்சரை பதவி நீக்கம் செய்ய
வேண்டுமென்ற கோரிக்கையை ஆணித்தரமாக வலியுறுத்தி
னார்கள். மேலும் வள்ளுவனைக் கூட இங்கே மேற்கோள் காட்டி
யிருக்கிறார்கள். தூரத்தில் இருக்கிற ஆயிரம் எதிரிகளைவிட
பக்கத்தில் இருக்கிற ஒரு கெட்ட மந்திரி மோசமானவர்,
அதனால் உங்களுடைய கெட்ட மந்திரியை, துர்மந்திரியை
வெளியே அனுப்புங்கள் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களுக்கு அன்றைக்கு கோரிக்கை வைத்தார்கள்; இப்படி
யார் மீது எல்லாம் அன்றைக்கு புகார்கள் எழுப்பப்பட்டதோ,
யாருடைய நிர்வாகத்தில் தவறு இருக்கிறதென்று சொல்லி நீண்ட
நெடிய நீதி கேட்கும் நெடும் பயணம் நடந்ததோ, யாரால்
அன்றைக்கு திருச்செந்தூரில் மோசங்கள் நடந்தது, கொலை
மறைக்கப்பட்டிருககிறது என்று குற்றம் சாட்டப்பட்டதோ
இன்றைக்கு அவரைப் பற்றிய பேச்சு, சபையில் புகார்கள் எல்லாம்
எழுந்திடக் காணோம். காரணம், திடீரென்று உங்களுடைய
கையில் இருக்கிற கமண்டலத்திலிருந்து ஏதோ புனித நீரை அவர்
தலையில் தெளித்து, மோசமானவர் என்று நீங்கள் புகார்கள்
சாட்டியவரை, திடீரென்று புனிதமாக மாற்றி விட்டீர்களோ
என்ற சந்தேகம் எனக்கு எழுந்திருக்கிறது. இன்றைக்கு அவர்
மாற்றான் தோட்டத்து மல்லிகை என்று சொல்லி, கலைஞர்
அவர்களுடைய வாயால் எங்கள் தோட்டத்து மலர் என்று ஏற்றுக்
கொள்ளப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்ட....

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, யார் அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்
கிறார், புனித நீர் யாருடைய தலையில் தெளிக்கப்பட்டிருக்கிறது
என்பதை வெளிப்படையாகவே சொல்லிவிட்டால் வசதியாக
இருக்குமென்று நினைக்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாற்றுத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய சிரிப்பிலேயிருந்தே தெரி
கிறது. அவர்கள் ஏதோ புரிந்தும் புரியாதவர் போல ஒரு
கேள்வியைக் கேட்கிறார்கள். முன்னாள் அறநிலையத் துறை
அமைச்சர், உங்களுடைய தொகுதியில் நடந்த விவகாரம், திருச்
செந்தூரில் நடந்த விவகாரம். அதை அன்றைக்கு நீங்களே எந்த
அளவிற்கு கனல் பறக்க ஒரு அரசியல் பிரச்சினையாக எழுதியிருக்
கிறீர்கள்? இன்றைக்கு அந்தப் பேச்சே காணோம். எங்கள்
தோட்டத்து மலர் என்று அவரை ஏற்றுக்கொண்டு விட்டீர்கள்.
இன்றைக்கு பைல்கள் அணி வகுக்கும் என்று சொல்லி சற்று
மூன்று அடி தூரத்தில் இருக்கிற ஒருசில எதிர்க்கட்சித் தலை
வர்கள் முன்னால் பைல்களை அடுக்குகிறீர்கள், இவர்களை
எல்லாம் விட்டுவிட்டீர்களே என்றுதான் கேட்கிறேன்.



1989 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே,
அவர்களை யாரும் விட்டு விட்டதாக இன்னும் அறிவிக்கவில்லை.
அந்த பைல்கள் எல்லாம் தோண்டி எடுக்கப்படும். ஆனால்
உறுப்பினர் சொல்வது யார் என்பதை சொல்லிவிட்டால் இன்னும்
நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: தலைவர் அவர்களே, நான் யார்
என்று பெயரை சொன்னால் சிறிய குட்டி சண்டையே இங்கே
உருவாகும், அதிலே என்னுடைய கவனம் எல்லாம் போய்விடும்
என்பதால் சொல்லவில்லை. நேரம் கொடுப்பதற்கு உத்தரவாதம்
தந்தால் நிச்சயமாகப் பெயரைச் சொல்கிறேன். இன்றைக்கு
அப்படிப்பட்டவர்களுடைய தவறுகள் மறைக்கப்பட்டுள்ளன, அதைப்
போல இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
Tamil Nadu Tourism International Resort இந்த கம்பெனி பற்றி
அமைச்சர் அவர்களின் காதுகளில் போட விரும்புகிறேன்.

TamilNadu Tourism InternationalResort-ன் டைரக்டராக இருந்த
மோகனராவ் அவர்களுடைய பிரச்சினைப் பற்றி இங்கே சொன்
னார்கள். மகாபலிபுரத்தில், அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த
இடம், 30 ஏக்கர் இடம், அந்த பெட்ரோல் பங்க், பொதுத்துறை,
பப்ளிக் செக்டரிலிருந்து கைமாறியதைச் சொன்னார்கள். அதிலே
பார்ட்னர் யார் என்று கண்டுபிடிக்க வேண்டும். உண்மையில்
முதலமைச்சர் எம்,ஜி.ஆர். காலத்தில் நடந்ததா அல்லது அவர்கள்
நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் சர்க்குலேஷனில் விடப்பட்டு
அந்த பைல் கைமாறியதா? அன்றைக்கு சுற்றுலாத் துறையில்
யார் பொறுப்பில் இருந்தார்கள்? இரண்டாவதாக மோகனராவ்
அவர்களின் பார்ட்னர் யார்? தியாகராசன் யாருக்கு சொந்தக்
காரர்? இவற்றையெல்லாம் நீங்கள் ஆராய வேண்டும். ஏதோ
எம்.ஜி.ஆர். அவர்களுடைய நேரடி கவனத்தில் இது நடந்ததாக
நான் கருதவில்லை. காரணம் அந்தக் கோப்புகள் கையெழுத்து
ஆகும்போது அதிலே சுமார் இரண்டு கோடி பெறுமானமுள்ள
நீங்களே சொல்கிற சொத்து..பெட்ரோல் பங்க், அதற்குள்ளே
இருக்கிற 30 ஏக்கர் நிலம், யூத் ஹாஸ்டல்..அவ்வளவும் கைமாறி
யிருக்கிறது என்பதால் மோகனராவிற்கு இன்றைக்கு கேன்சல்
பண்ணியிருப்பதாக சொல்லியிருக்கிறீர்கள். அன்றைக்கு கை
மாறியதற்கு காரணம் யார் என்பதை நீங்கள் இந்த நேரத்தில்
பொறுப்போடு விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மொத்தத்தில் எப்படியோ பல குற்றச்சாட்டுகளுக்கு
ஆளாகியிருந்தவர், சந்தன மரங்களை கடத்தியவர், மரங்களை
வெட்டியவர், ஆலயங்களில் திருடியவர் என்று உங்களுடைய
வாயால் பேசப்பட்டு வந்தவர்களுக்கு எல்லாம்—இன்றைக்கு தமிழ்
நாட்டில் வனவளம் குறைந்ததால் மழை குறைந்து விட்டாலும்—
இன்றைக்கு அவருடைய காட்டில் நல்ல மழை பெய்கிறது என்று
நினைக்கிறேன். ஏதோ உங்களுடைய ஆசிகளோடு அவர்களுடைய
காலமும் நன்றாகத்தான் இருக்கிறது.

(திரு. பி. வி. இராஜேந்திரன்) [1989 ஏப்ரல் 20
(இரவு 7-00)

கோவில் இல்லாத ஊரிலே குடியிருக்கவேண்டாம் 'என்று
சொல்வார்கள். அப்படிப்பட்ட புராதன, தொன்மையான
கோவில்களை பேரழிவிலிருந்து நீங்கள் காப்பாற்றவேண்டும்
என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நமது தொன்மை,
நம்முடைய கலாச்சாரத்தின் தொன்மை நின்று கொண்
டிருக்கும் காலப்பெட்டகம் இவைகள்தான், நம்முடைய திருக்
கோயில்கள்தான். அவற்றுக்கு, புனர் அமைப்புக்காக ஒதுக்கப்
பட்டு உள்ள நிதிகள் போதாது. கோயில்களுடைய சுயநிதி,
பொதுமக்களுடைய காணிக்கை, அரசு மானியம், கமிஷனர்
காமன் குட் பண்ட்...

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாற்றுத் தலைவர் அவர்
களே, ஏதோ வன வளம், கோயில் சொத்தைத் திருடியவர், திருச்
செந்தூர் என்றெல்லாம் சொல்லி, இப்போது அவர் உங்களிடத்
திலே இருக்கிறார், அவரை நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்று சொன்
னார்கள். யார், அவர்? அவருடைய பெயரைச் சொன்னால்
நான் புரிந்துகொள்ள முடியும்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: முதல்வர் அவர்கள் கேட்டால்,
நான் தனியாக வந்து அறையிலே சொல்கிறேன். என்னுடைய
நேரம் மிகவும் குறைவு. சிறிது நேரத்தில் மணியடித்து
விடுவார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லை, இல்லை, நான்
வேண்டுமானால் சிபாரிசு செய்து, அம்மையார் அவர்களிடத்திலே
நேரம் வாங்கித் தருகிறேன். நான் கேட்பது, ஒரு அவையிலே ஒரு
அரசு பிரச்சினையைப் பற்றிப் பேசிவிட்டு, அரசாங்கப் பிரச்சி
னையைப்பற்றி பேசிவிட்டு, யார் அவர்கள் என்று கேட்டால், தனி
யாக வந்து சொல்வேன் என்று சொல்வது சரியில்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன்: எனக்கு நேரம் கிடைக்காது
என்பதுதான் பிரச்சினையே தவிர, பெயரைச் சொல்லக்கூடாது
என்பது அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு.கருணாநிதி: இத்தனை வாக்கியங்களைப்
பயன்படுத்தியதற்குள், அந்தப் பெயரை சொல்லியிருக்கலாமே.

திரு. பி. வி. இராஜேந்திரன்: உடனடியாகச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர்
மாண்புமிகு ஆர்.எம். வீரப்பன் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தக் குற்றச்சாட்டுக்கள்
எல்லாம் முன்பு சொல்லப்பட்டபோது, அவரைக் காங்கிரஸ்
நண்பர்கள் ஆதரித்துக்கொண்டிருந்தார்கள் என்பதை மறந்துவிட
வேண்டாம். (மேசையைத்தட்டும் ஒலி)



1989 ஏப்ரல் 20]

திரு. மா. சுந்தரதாஸ்: மாற்றுத் தலைவர் அவர்களே, நாங்கள்
தோழமை என்று சொன்னால், இப்போதுகூட தோழமைக்
கட்சிகள் இருக்கின்றன. நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலே அப்போது
இல்லை. ஆகவே எங்கள் மீது பழி போடுவது சரியாக இல்லை
என்பதைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆதரிப்பது என்ற வார்த்
தையைத்தான் தோழமை என்று தாங்கள் சொல்கிறீர்கள்.
தோழமை, ஆதரவு இரண்டும் ஒன்றுதான்.

திரு. மா. சுந்தரதாஸ்: தோழமை என்று சொன்னால், எலக்
ஷன்லேதான் நாங்கள் தோழமையாக இருந்தோமே தவிர, நாங்கள்
ஆட்சிக்கு தோழமை இல்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டு
இருக்கிறேன். ஆட்சியிலே நாங்கள் தோழமை இல்லை. நாங்கள்
தேர்தலிலேதான் தோழமையாக இருந்தோமே தவிர, கடந்த
சட்டசபையில் நாங்கள் வந்து ஆட்சிப்பொறுப்பில் இருக்கவில்லை.
அவர்கள்தான் ஆட்சி நடத்தினார்கள். நாங்கள் எதிர்க்கட்சி
வரிசையிலே உட்கார்ந்து இருந்தோம் என்பதை மாண்புமிகு
முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்
பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்):
இத்தோடு இந்த விஷயத்தை முடித்துவிட்டு, நீங்கள் ஒரு நிமிடத்
திலே முடிக்கவேண்டும்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: முதல்வர் அவர்கள் கேட்டதற்
காக நான் பதில் சொன்னதால் என்னுடைய நேரத்தை பறி
கொடுத்திருக்கிறேன். அதனால் கருணை கூர்ந்து அதிகமான
நேரத்தை ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
இன்றைக்குக் குட்டிச்சுவர்களாக நிற்கும் சோழர் காலத்துக்
கோயில்களையும், அதற்கும் முன்பாக உள்ள திருக்கோயில்களை,
குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தினுடைய திருக்கோயில்களையும்
பற்றி உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.
இன்றைக்கு நாம் இருப்பது செக்யூலர் ஸ்டேட், மதச்சார்பற்ற
அரசு என்பதற்காக அதற்கு நிதி ஒதுக்கி விடாமல் இருந்து
விடாதீர்கள். அரசே அதற்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டும்.
இவை வெறும் வழிபாட்டு இடங்களோ, இந்து மதத்திற்கு
மட்டும் சொந்தமான இடங்களோ கிடையாது. நான்
ஏற்கனவே சொன்னதைப் போல, நம்முடைய கலாச்சாரத்
திற்குச் சான்றாக நிற்கின்ற இடங்கள், காலப்பெட்டகமாக
நின்று கொண்டு இருப்பவை. அதற்காக அதிக நிதியை,
எங்காவது பெற்றுச் செய்யுங்கள். யுனெஸ்கோகூட கொடுப்ப
தற்குத் தயாராக இருக்கிறது. United Nations Education, Science
and Cultural Organisation போன்ற இயக்கங்கள் அவற்றை,
புராதனச் சின்னங்களாக மதித்து, அதற்கு எல்லாம் பணத்தை
ஒதுக்கியிருக்கிறார்கள். அதனை எல்லாம் பெற்று, நீங்கள்
செய்ய வேண்டும்.

[திரு.பி.வி. இராஜேந்திரன்] [1989 எப்ரல் 20

அதோடு பப்ளிக் செக்டர் அன்டர்டேகிங்ஸ், அவர்களை எல்லாம் கூப்பிட்டு இந்தந்த திருக்கோயில்களை எல்லாம் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி. அவைகளைப் பராமரிக்கலாம்.

அதேபோல் கமர்சியல் பேங்க்குகள் தங்களுடைய விளம்பரத்திற்கு என்று பல திருக்கோயில்களை அவர்கள் எடுத்துக்கொண்டு, விளம்பரங்களைச் செய்து கொள்ளலாம், பல நல்ல திருக்கோயில்களின் பொறுப்புகளை நல்ல லாபத்திலே ஓடுகின்ற பப்ளிக் செக்டார் கையிலே கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இவைகள் எல்லாம் ராஜாக்கள் இருந்தபோது, அவர்களுடைய ஸ்டேட் ரெவின்யூவிலிருந்து கட்டிய கட்டிடங்கள். இன்றைக்கு நாம் செக்யூலர் ஸ்டேட் என்பதற்காக, நாம் பலருடைய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் இந்தச் சின்னங்கள் அழிந்துவிடும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்க்காத நாடு கிடையாது. ரோமபுரி சாம்ராஜ்யத்திலே, ஒரு சிறு கல்லாக இருந்தாலும் கூட ரோமன் எம்பயர் காலத்திலே கட்டியவைகளுக்கு எல்லாம் வேலி வைத்து பாதுகாப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு சோழ சாம்ராஜ்யத்திலே கட்டப்பட்ட எத்தனையோ இடங்களில் ஆடுகள் படுத்துக் கொண்டிருக்கின்றன, கழுதைகள் படுத்துக் கொண்டிருக்கின்றன. ஆலமரங்கள் மண்டிக் கிடக்கின்றன, வௌவால்கள் தங்கியிருக்கின்றன, கோட்டான்கள் குடியிருக்கின்றன. இவைகளை உடனடியாக நீங்கள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது.)

மேலும் இன்றைக்கு பல சாமிகள் நம்முடைய நாட்டிலிருந்து சொல்லாமல், கொள்ளாமல், விசா இல்லாமல், பாஸ்போர்ட் இல்லாமல் வெளிநாடுகளுக்குப் போவது சகஜமாக இருக்கிறது. இப்படி சாமிகள் சொல்லாமல், கொள்ளாமல், விசா இல்லாமல், பாஸ்போர்ட் இல்லாமல் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுவதால், நமக்கு வருத்தங்கள் ஏற்படுகின்றன. தெய்வ வழிபாடுகளைச் செய்பவர்களுக்கு வருத்தங்கள் ஏற்படுகின்றன. அந்தச் சாமிகளுடைய பாதுகாப்பு என்ன. ஆயிற்று என்ற வேதனையும் நமக்கு ஏற்படுகிறது. எனவே இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இன்றைக்கு லண்டன் கோர்ட்டிலே தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலேயிருந்து சென்ற நடராசர் சிலைக்காக, அவர்கள் நல்ல தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள்,

அதோடு மட்டுமல்லாமல் இங்கே கொடுக்கப்பட்டுள்ள பாலிசி நோட்டிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு 'Tell-tale clocks' வைத்திருப்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். அதுபோன்று, 'Burglar Alarm' வைத்திருப்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் இதிலே கண்டிப்பாக இருக்க வேண்டும். அப்போதுதான் நம் நாட்டுச் சாமிகள்



[1989 ஏப்ரல் 20 (திரு. பி. வி. இராஜேந்திரன்)

எல்லாம் வெளிநாட்டிற்கு பாஸ்போர்ட் இல்லாமல், விசா இல்லாமல் செல்வதை நாம் தடுத்து நிறுத்த முடியும். நமக்கும் இதிலே கவலை இருக்காது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது லண்டன் கோர்ட்டிலே கூட அவர்களுடைய தீர்ப்பிலே ஒன்றைத் தெளிவாகச் சொல்லியிருப்பதாக நம்முடைய பாலிசி நோட் காட்டுகிறது. லண்டன் ஹைகோர்ட்டினுடைய வர்டிக்ட்டில் " .. the deity of the Temple is a juristic entity entitled to claim the idols belonging to the Temple .. " என்று கூறியுள்ளார்கள். இதைப் பார்த்தால் ஒரு கோயிலிலுள்ள சிலைகளைக் கேட்பதற்கு அந்த சாமிக்கே உரிமை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்—நிச்சயமாக இந்த மன்றம் பாராட்ட வேண்டும், ஒரு தெய்வத்திற்கு தன்னுடைய சிலையை கேட்பதற்கு உரிமை இருக்கிறது என்று சொல்கிறார்கள் நமது ஊரில் தெய்வம் கேட்கிறது என்று வக்காலத்து போட்டால், வக்காலத்து போட்டவர்களைப்பிடித்து உள்ளேபோடக்கூடியநேரமாகக்கூடஇருக்கிறது. அந்த வக்கீல்கள் மீதே கேஸ் வருவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். தெய்வங்களை எல்லாம் வழிபடுவதற்குத்தான் திருவாரூரில் பிடித்து அடைத்து வைத்திருக்கிறீர்கள். 1340 தெய்வச் சிலைகளை அடைத்து வைத்திருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல. அவைகளை Antiquities and Treasure Act, 1972–ல் ரிஜிஸ்டர் வேறு செய்திருக்கிறீர்கள். அப்படிச் செய்ய வேண்டாம். தெய்வம் என்பதற்காக லண்டன் கோர்ட்டில் அந்த அளவிற்கு மரியாதை கொடுத்து இருக்கிறார்கள். வேண்டுமானால் தனிச் சட்டமாகப் போட்டு ஏதாவது செய்யுங்கள். அதுபோன்று தெய்வங்களை அடைத்து வைக்க வேண்டாம். விமானங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் 'ஏர்போர்ட்டில்' இருக்கலாம். கப்பல்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் ஹார்பரில் இருக்கலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, லண்டன் கோர்ட்டிலே தீர்ப்பு அளிக்கப்பட்ட தெய்வம் 1952ஆம் ஆண்டு சிவபுரத்திலிருந்து களவாடப்பட்ட நடராஜர்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் புத்தூர் என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனக்கு சரியாகத் தெரியவில்லை. சிவபுரம் என்ற வார்த்தையே இல்லாததால் நான் சொன்னேன். சிவபுரம் நடராஜர் விரைவில் வர வேண்டும். எங்கு இருந்தாலும் சாமிகள் சீக்கிரம் திரும்புவதில் எங்களுக்கு மாறுபாடு கிடையாது. பத்திரமாக அந்த சாமி வருவதில் நிச்சயமாக எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. அந்த சாமியை நாங்கள் வணங்குபவர்களாக இருந்தாலும், ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருந்தாலும், அந்த சாமிகளுடைய பத்திரத்தில் எங்களுக்கு எப்போதும் ஆழ்ந்த கவலை இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மேலும் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வேதாரண்யம் திருக்கோயிலுக்கு 12000 ஏக்கர் நிலங்கள் இருந்தாலும் சரியான வருவாய் இல்லாமல் இருக்கிறது. மேலும் வேதாரண்யம் டவுனுடைய மொத்த வீடுகளும் இருக்கின்ற, குடிமனைகளின் பட்டாக்கள் அத்தனையும் சாமிகளின் பெயரில் தான் இருக்கிறது. அதை எல்லாம் அன்றைக்கு ' இனாம் அபாலிஷன் ஆக்ட் ' வந்தபோது மக்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மீண்டும் இதை விசாரணை செய்து அத்தனை பேருக்கும் பட்டா தரவேண்டும். ஏனென்றால் குடியிருப்புகள் இன்றைக்கு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. தொழில்கள்கூட ஆரம்பிக்க முடியவில்லை. என்.ஓ.சி. இல்லை என்பதை இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

*திரு. வி. இராமசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வனத்துறை, அறநிலையம், வீட்டு வசதி வாரியம் சம்பந்தமாக பேசுவதற்கு எனக்கு வாக்களித்து இந்த மன்றத்திற்கு என்னை அனுப்பிய திருச்செங்கோடு வாக்காளர் பெருமக்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கக்கூடிய மேற்குத் தொடர்ச்சி மலை நீங்கலாக, சுமார் 20 மலைகள் நம்முடைய தமிழகத்தில் இருக்கின்றன. அந்த மலைகளில் இருக்கின்ற காடுகள் காக்கப்படுவதின் மூலம் தான் மழை பெய்யும், நாடு செழிக்கும் என்ற அடிப்படையில் மலை வளங்களை நாம் உறுதியாக காப்பாற்ற வேண்டும். அரசு அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்த மலைகளிலே முற்றிய, விளைந்த சந்தன மரங்களை வெட்டுவதற்கு அரசு ஏலம் விடும்போது அதை காண்ட்ராக்ட் என்ற பெயரில் எடுக்கக் கூடியவர்கள் அந்த முற்றிய சந்தன மரங்களை மட்டும் வெட்டுவதில்லை, ஃபாரெஸ்ட்டில் இருக்கக்கூடிய மற்ற மரங்களையும் வெட்டி எடுத்துக் கொள்கிறார்கள்.

குறிப்பாக கொல்லிமலை, கல்ராயன் மலை, பச்சை மலை, சேர்வராயன் மலை என்று எங்கள் ஜில்லாவில் இருக்கக்கூடிய மலைகளிலுள்ள மரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு உடந்தையாக அரசு அதிகாரிகளே இருப்பார்களோ என்ற சந்தேகம் உள்ளது. ஆகவே அதனை அரசு தடுத்து நடவடிக்கை எடுத்து, மலைச் செல்வங்களையும், பொருட்களையும் பாதுகாக்க வேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் வனத்துறை காவலர்கள், கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, ஏதோ சுள்ளி, முள் பொறுக்கக்கூடிய அந்த ஏழை எளியவர்களின் மீது உண்மைக்கு புறம்பான வழக்கு போட்டு தொல்லை கொடுக்கிறார்களே ஒழிய, அந்த மலை வளங்களை அழிக்கக் கூடியவர்களுக்குத் துணை போகிறார்கள் என்றுதான் தெரிய வருகிறது. இதுவரையில் அழிக்கப்பட்ட மரங்கள் போக இனி



(இரவு 7.10)

இருக்கக்கூடிய வன வளத்தையாவது பாதுகாப்பதற்கு அரசு முன்வர வேண்டும். காடுகளை இனி அழிக்காமல் பாதுகாப்பதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் வனத்துறை ஊழியர்களுக்கு அரசு அதிகம் ஊதியம் வழங்க வேண்டும் என்பதோடு அங்குள்ள மலைவாசி மக்களோடு அதிகாரிகள் நேசமனப்பான்மையோடு நடந்து கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக ஒரு ரேஞ்சர் என்றாலே மலைப்பகுதியில் ஒரு முடிசூடா மன்னனாக நடந்து அங்குள்ள மக்களுக்கு தொல்லை கொடுக்கக்கூடாது என்பதை அரசின் கவனத்திற்கு சொல்ல விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நிலையில் சமூக நலக் காடுகளில் பணி செய்யக் கூடிய ஊழியர்களும் வனக் காவலர்களும் இந்த மாநிலத்தில் 10 வருடம், 20 வருடங்கள் பணி செய்து வருகிறார்கள். அவர்களை அரசு நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆலயங்கள் பராமரிப்பு, அவற்றின் நிர்வாகம், அவற்றைச் சார்ந்த அறக்கட்டளைகள், அவற்றின் நிர்வாக நெறிமுறைகள் செவ்வனே நடப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் எனக்குத் தெரிந்த வரையில் 51,385 கோவில்கள் உள்ளன. அதிலே 34,811 கோவில்களை அரசு கவனத்தில் எடுத்துள்ளது. 10 ஆயிரம் கோவில்கள் பரிசீலனையில் உள்ளது. இன்னும் மீதி உள்ள கோவில்களையும் பரிசீலனை செய்து அதில் உள்ள சொத்துக்களையும் அங்கிருக்கக்கூடிய நடைமுறை செல்வங்களையும் அரசு கையாள வேண்டும் என்பதோடு ஐவர் கொண்ட குழு ஒன்று போடப்பட்டிருப்பதாக கொள்கை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கோவிலுக்கு சொந்தமான நிலங்களை அரசு எடுத்து அதில் குத்தகைக்கு உழுது கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு அந்த நிலங்களை சொந்தமாக ஆக்க வேண்டும் என்பதோடு குறிப்பாக பழனி தண்டாயுதபாணி கோவில் போன்ற கோவில்களிலே கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. அதனை எடுத்து அங்கே கலைக்கல்லூரி அமைப்பது போன்ற காரியங்களை செய்வதற்கு அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு ஆலயங்களில் வேலை செய்யக்கூடிய இ.ஓ. போன்றவர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கும்போது, அங்கே வேலை செய்யக் கூடிய ஆயிரக்கணக்கான பேர்கள், பட்டை சாதத்திற்கும் குறைந்த பட்ச ஊதியத்திற்கும் பணி செய்து வருகின்றார்களே, அவர்கள் அனைவரையும் குறைந்த பட்ச சம்பளமாவது கொடுத்து அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆலயங்களில் உள்ள முடி திருத்தும் ஊழியர்கள் உள்பட அனைவரையும் அரசு அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குறிப்பாக வீட்டு வசதி வாரியத்தின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்களுடைய திறனுக்கு ஏற்றவாறு குடியிருப்புகளை அமைத்துக் கொடுப்பதாக அரசு கொள்கைக் குறிப்பிலே இருந்தாலும்கூட, வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பாநிலத்திலே கட்டப்பட்ட வீடுகள் பழுதாகியும், அப்படி பழுதாகக்கூடிய வீடுகளில் எந்தவிதமான சுத்தமோ போதுமான லைட்டு வசதிகளோ அந்தக் கட்டப்பட்ட கட்டிடங்களில் இல்லை என்று சொல்லப்படுகிறது. அப்படி கட்டப்பட்டிருக்கக்கூடிய இடங்களிலே பொது இடங்களுக்காக வைக்கப்பட்டிருக்கக் கூடிய நிலங்களை அங்கேயிருக்கக் கூடிய ஊராட்சி மன்றத்திற்கோற் நகராட்சி மன்றத்திற்கோ ஒப்படைக்கப்படாமல் அது விற்பனை செய்யப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. அதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இப்படி பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டிருந்தாலும், தமிழகம் பூராவிலும் அரசால் கட்டப்பட்ட பல வீடுகள் இப்படி பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியிலே ஆலம்பாளையம் பேரூராட்சி மன்றத்திற்கு உட்பட்ட இடத்தில் 1500 மாடி வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அதிலே சத்தியா நகர் என்ற பெயர் வைக்கப்பட்டிருக்கிற அந்த நகரிலே கட்டப்பட்ட வீடுகள் எந்த நேரத்திலே விழுந்து விடுமோ என்ற அச்சத்தில் அங்கு குடியிருப்பவர்கள் இருக்கிறார்கள். அங்கு லைட்டுகளே கிடையாது. குடிதண்ணீர் கிடையாது. பழுதடைந்த வீடுகளாக காட்சி அளிக்கிறது. அப்படி தமிழகத்தில் இருக்கக்கூடிய வீடுகளை அரசு பராமரித்து. புது வீடுகளைக் கட்டுவதற்கு முன்னால் அவைகளைப் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த அடிப்படையில் அங்கேயிருக்கக்கூடிய என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லி முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சேலம் மாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு இன்றையதினம் அங்கே குடிநீர் பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. குறிப்பாக இந்த அரிசி வழங்கும் விழாவில் கலந்துகொள்ளக்கூடிய நேரத்தில், தொகுதி பூராவும் நான் சுற்றிவரக்கூடிய நேரத்தில் அங்கே அரிசியை விட அதிகமாக மக்கள் கேட்டது தண்ணீர் தேவை, தண்ணீர் தேவை என்பதுதான். குறிப்பாக என் தொகுதியில் வாளரைகேட்டு என்ற இடத்தில் 550 அடி ஆழ் குழாய் போட்டும் கூட தண்ணீர் கிடைக்காமல் மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற பரிதாபமான நிலை இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட தண்ணீர் பஞ்சத்தை போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் கைத்தறி, விசைத்தறி தொழில் நிறைந்த பகுதியானதால் அங்கு தேங்கி கிடக்கும் கைத்தறி துணிகளை விற்பதற்கும் மேலும் நூல் விலையேற்றத்தால் விசைத்தறிகளை இயக்கவும் முடியவில்லை. அங்கே இருக்கக்கூடிய விசைத்தறி அதிபர்களும் மின்சார வரி உயர்வால் தங்களுடைய தொழிலை நடத்த முடியவில்லை என்று அவர்கள் ஒருநாள் நேரிடையாக மாவட்டம் பூராவும் வேலைநிறுத்தம்



நடத்தி அவர்களுடைய கோரிக்கைகளை அரசுக்கு தெரிவிக்க இருக்கிறார்கள் என்பதையும் இங்கே அரசுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். விவசாயிகளாக அந்தப் பகுதியிலே இருக்கக் கூடியவர்கள் பல ஆண்டுகளாக மின்சாரம் வேண்டும் என்று விண்ணப்பம் செய்திருந்தாலும் மின்சாரம் இன்று வரைக்கும் கொடுக்கப்படவில்லை. அது பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது. அந்தப் பகுதியிலே கிடைக்கக்கூடிய தண்ணீரை விவசாயிகள் பயன் படுத்துவதற்காக உடனடியாக மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இன்னும் அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய பிரச்னைகள் என்ற அடிப்படையில் அங்கே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் இந்த வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்டு கடந்த ஒரு வார காலமாக தங்களுடைய கிராமத்தை விட்டு வெளி ஊருக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். வறட்சி நிவாரண வேலையைத் துவக்கி, அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று என்னுடைய சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். வீட்டு வசதி வாரியம் சம்பந்தமாக, திருவரம்பூர் நவல்பட்டு பகுதியில் அண்ணா நகர் என 600 ஏக்கர் நிலபரப்பில் அரசால் உருவாக்கப் பட்டு வரும் வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக அந்த அண்ணா நகரில் உள்ள வீடுகளுக்கு பராமரிப்புக் கட்டணம் என ரூ. 60 விதித்து இருந்ததை ரூ.20 என்று குறைத்து பாளையங்கோட்டையில்—ரூ. 20 தான் வாங்கப்படுகிறது. பராமரிப்பு இல்லை, குழாய் தண்ணீர் கிடையாது, என்ற குறை குடிநீருக்கு மக்கள் அவதிப்படுகிறார்கள். தீர்க்கப்பட வேண்டும் என்றும் புதுக்கோட்டையில் இருக்கக்கூடிய அண்ணா நகரிலும் இந்த நிலை இருக்கிறது என்பதை சொல்லி இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு அரசு கட்டியுள்ள வீடுகளுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம், பழமையை செழுமையாக்கவும், அபிவிருத்தி பண்ணவும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசை வலியுறுத்தி எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி சொல்லி அமர்கிறேன்: வணக்கம்.

*திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களின் நிர்வாகத்தை செம்மைப்படுத்தவும், கோயில்களின் பாரம்பரிய கட்டிடக் கலை அழகுகளை காக்கவும், கோயில்களின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு அவற்றின் வருவாய் பெருகவும் இந்த அரசு விரைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளதை பாராட்டி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்குகின்றேன். திருக்கோவில்களின் நிர்வாகச் சீரமைப்புப் பணி முழுமைப் பெற்றிட, அத்திருக்கோவில்களின் அடிப்படையாக விளங்கும் திருக்கோவில்களின் பணியாளர்களுடைய தீர்வு காணப்பட வேண்டிய அவசியமான பிரச்னைகள் குறித்தும் சிலவற்றை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அறநிலையத் துறை

அமைச்சர் அவர்களுக்கும் இங்கே பரிசீலனைக்கு வைக்க விரும்புகிறேன். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோவில்களில் 47,771 பணியாளர்கள் பணிபுரிந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(இரவு 7–20)

இவர்களில், உபரி நிதி வசதியுள்ள 20 பெரிய கோவில்களில் பணிபுரியும் 4,166 பணியாளர்களின் ஊதிய வீதங்கள் 1–4–86 முதல் முறைப்படுத்தப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இதர திருக்கோவில்களில் பணி புரியும் பெரும்பாலான திருக்கோயில் பணியாளர்கள் நிலை முந்தைய ஆட்சிக் காலத்தில் பரிதாபத்திற்குரிய நிலையாக இருந்தது இம்மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். திருக்கோவில் பணியாளர்கள் அரசு ஊழியர்கள் ஆகவோ, தொழிலாளர்களாகவோ, குறைந்தபட்சக் கூலி நிர்ணயத்திற்குட்பட்ட தினக்கூலிகளாகவோ வரையறுக்கப்படாத ஒரு நிலையில் அவர்களுடைய வேலைகள், வேலை நேரம், ஊதிய விகிதங்கள், சலுகைகள் முதலியன எந்தச் சட்ட அடிப்படையும் இல்லாமல் திருக்கோவில் நிர்வாகத்தின் விருப்பு–வெறுப்புக்கேற்றபடி பலவிதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1973–74 ஆம் ஆண்டில் கழக ஆட்சிக் காலத்தில் திருக்கோயில் பணியாளர்களுக்கு முதன்முதலாக சம்பள விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டன. பெரும்பாலான கோயில்களில் இந்தச் சம்பள விகிதங்கள் முந்தைய ஆட்சியாளர்களால் முழுமையாக அமல்படுத்தப்படவில்லை. அதனால் பல ஆயிரம் திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்கள் மாதம் 100 ரூபாய்க்கும் குறைவான மாத ஊதியத்தில் முழு நேரப் பணிபுரிந்து வருகின்றனர். திருக்கோயில் பணியாளர்கள் தங்களை அரசு ஊழியராக அங்கீகரிக்க வேண்டும் என்று 1961 ஆம் ஆண்டிலேயிருந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் கீழ், விதி 12-இன்படி, திருக்கோயில் பணியாளர்களும் அரசு ஊழியர்கள்தான் என நீதிமன்றத் தீர்ப்புகள் வந்துள்ளன. எனவே, திருக்கோயில் பணியாளர்களை கொள்கை அளவில் அரசு ஊழியர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1973 ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் தொடர்ந்து அந்தக் கோரிக்கையை வைத்து வருகிறார்கள். திருக்கோயில் பணியாளர்களை அரசு ஊழியராக்க முந்தைய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. திருக்கோயில் பணியாளர்கள் நல்வாழ்வில் அக்கறை கொண்ட மாண்புமிகு கலைஞர் அவர்களின் அரசு திருக்கோயில் பணியாளர்களை அரசு ஊழியராக்க நடைமுறைக்கு ஏற்ற ஒரு திட்டத்தை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



திருக்கோயில்களின் நிகர வருமானத்தில் 40 விழுக்காடு வரை பணியாளர் சம்பளத்திற்காகச் செலவிடலாம் என்ற அரசின் நடைமுறைக் கொள்கையின்படி, அறநிலையத் துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் சம்பளத்திற்காக திருக்கோயில்களின் வருடாந்திர நிகர வருமானத்தில் 10 விழுக்காடு சகாயத் தொகையாகவும், 4 விழுக்காடு தொகை தணிக்கைக் கட்டணமாகவும், வசூலிக்கப்படுவது போல் திருக்கோயில் பணியாளர்களின் சம்பளத்திற்காக 40 விழுக்காடு தொகையினை வசூலித்து ஒரு தனி நிதி ஏற்படுத்தி அதிலிருந்து அனைத்துத் திருக்கோயில் பணியாளர்களுக்கும் சம்பளம் கொடுக்கும் வகையில் கிரேடு வாரியாக உழைப்புக்கேற்ற ஊதியம் நிர்ணயம் செய்து, அனைத்து வெளித் துறைப் பணியாளர்களையும், அரசு ஊழியர் ஆக்கவும், உள்துறை பணியாளர்களுக்கு ஸ்தல ஸ்தாபன ஊழியர் அந்தஸ்து வழங்கவும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்த திட்டத்தினை அமல்படுத்துவதற்கான வழிவகைகளையும், நடைமுறைகளையும் ஆராய்ந்து அரசிற்கு அறிக்கை தர ஒரு தனி நபர் குழுவையாவது அமைத்திட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பணிக் காலத்தில் இறந்துவிடும் பணியாளர் குடும்பத்திற்கு ரூபாய் 10,000 வழங்கப்படும் என 12–10–87 இலேயே அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டும் இன்று வரை அது அமல்படுத்தப்படவில்லை. இறந்துவிடுகிற பணியாளர்கள் குடும்பத்திற்கு 5,000 ரூபாய் மட்டுமே இன்று வரை வழங்கி வருகிறார்கள். எனவே, இறந்து போகின்ற பணியாளர்களுக்கு 10,000 ரூபாய் வழங்க வேண்டும் என நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, முந்தைய ஆட்சியாளர்களுடைய காலத்தில் திருக்கோயில் பணியாளர்களுக்கு இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்பட்ட பல்வேறு சலுகைகள் அமல்படுத்தப்படவில்லை. குறிப்பாக திருக்கோயில் பணியாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு கோயில் நிதியிலிருந்து கடன் வழங்கப்படும் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் அந்தத் திட்டமே அமல்படுத்தப்படவில்லை. அதேபோல் சிப்பந்திகளுடைய குடும்பங்களுக்கு திருமணக் கடன் வசதி செய்து தருகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அது அமல்படுத்தப்படவில்லை. அரசு ஊழியர்களுக்கு உள்ளது போல் விடுமுறைச் சலுகைகளை ஏற்றுக்கொள்வதாக அறிவித்து இருக்கிறார்கள். அது அமல்படுத்தப்படவில்லை. அதேபோன்று தமிழக அரசு ஊழியர்களுக்குப் பொங்கல் பரிசாக 1987 ஆம் ஆண்டு முதல்—87 ஆம் ஆண்டில் ரூபாய் 300-ம் 1988 ஆம் ஆண்டில் ரூபாய் 350; 1989 ஆம் ஆண்டில் 400 ரூபாய் பொங்கல் பரிசாக–வழங்கப்பட்டது. ஆனால் இந்த ஆலயப்பணியாளர்களுக்கு 1987 ஆம் ஆண்டில் 200 ரூபாயும், 1988 ஆம் ஆண்டில் 200 ரூபாயும் வழங்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டில் அது வழங்கப்படவில்லை. எனவே அரசு ஊழியர்கள் பெற்ற அந்த பண்டிகைத் தொகையை இந்த ஆலயப்பணியாளர்களுக்கும் வழங்க அரசு உத்திரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் திருக்கோவில் வருமானம் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ள நிலையில் குறிப்பாக தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களில் திருக்கோவில் பணியாளர்களுக்கு பல மாத சம்பளம் வழங்கப்படவில்லை. நிலுவையாக இருக்கிறது, இவ்வாறு தமிழகம் முழுவதும் திருக்கோவில் பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய சம்பள பாக்கி சுமார் 50 லட்சம் ரூபாய் வரை வழங்கப்படாமல் இருக்கிறது. முந்தைய ஆட்சிக் காலத்தில் பல மாத காலம் சம்பளம் வழங்கப்படாத அந்தப் பணியாளர் களுக்கு உடனடியாக சம்பளம் வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வறுமையின் காரணமாக கோவிலில் பணியாற்றிய கல்யாண சுந்தரம் என்ற குருக்கள், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர், நெடுங்காலமாக சம்பள பாக்கி இருந்ததால் அவர் தன்னுடைய 8 வயது மகனுடன் தற்கொலை செய்து கொண்டு இறந்தார் என்று ஒரு ஆண்டுக்கு முன்னால் பத்திரிகையில் வந்தது. இந்த மன்ற உறுப்பினர்களுக்கு தெரியும் என்று கருதுகிறேன். எனவே அப்படிப்பட்ட அவல நிலை மீண்டும் தமிழகத்தில் ஏற்படாமல் இருக்க ஆலய பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 1 ஆம் தேதியே ஊதியம் கிடைக்கிற வகையில் அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் அரசு ஆணை 437-ன்படி திருக்கோவில் உபரி நிதியிலிருந்து ஏற்படுத்தப்பட்டுள்ள 7 கோடி ரூபாய் நிதியில் சேர்ந்துள்ள வட்டியிலிருந்து திருக்கோவில் பணியாளர்களுக்கு சம்பள பாக்கி முழுவதையும் பைசல் செய்ய இந்த அரசு தக்க ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி வழங்கும் தேதியிலிருந்து திருக்கோவில் பணியாளர்களுக்கும் அகவிலைப்படி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இந்த திருக்கோவிலின் சம்பள செலவினத்தை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் திருக்கோவிலில் புதிய பதவிகளை ஏற்படுத்த வேண்டாம் என்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே போதுமான பணியாளர்களுடன் நல்லவிதமாக நிர்வாகம் நடந்து வரும் மதுரை கூடலழகர் திருக்கோவில், திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் திருக்கோவில் இப்படிப்பட்ட கோவில்களில் தேவை யற்ற புதிய பதவிகளை ஏற்படுத்தி இந்த பதவிகளில் திருக்கோவில் பணியாளர்களை நியமிப்பதால் ஏராளமான செலவினம் கோவிலுக்கு ஏற்படுகிறது. இதைவிட அந்த ஆலயத்தில் பணி யாற்றுகின்ற பணியாளர்களையே அந்தப் பணியில் நியமிக்கலாம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இது போல் தேவையற்ற அளவில் பணியாளர்களை நியமனம் செய்வதை ரத்து செய்யவும் இனிமேல் புதிய பதவிகளை ஏற்படுத்தாமல் இருக்கவும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.





நிலையான சம்பளம் பெறுபவர்களுக்கு சம்பள விகிதம் ஏற்படுத்த, இவர்களுக்கும் அகவிலைப்படி வழங்க தக்க ஆணைகளை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போல் நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி போன்றவைகளை திருக்கோவில் பணியாளர் களுக்கும் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல் தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவில்களினுடைய கலை, கலாச்சாரம் இவைகள் பாதுகாப்பாக இருப்பதற்கு, இந்த திருக்கோவில்களின் கலை, கலாச்சாரங்களைக் காண ஏராளமான வெளிநாட்டுப் பயணிகள் வருவதால் அரசுக்கு அந்நிய செலாவணி நிறைய வருவதை கருத்தில் கொண்டு இந்த கோவில் களை நல்லமுறையில் பராமரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, மயிலாப்பூர் குளத்தில் தூர் வாருவதற்கு 1974–75ஆம் ஆண்டில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்பு முதலமைச் சராக இருந்த காலத்தில் 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அங்கே அந்த மயிலாப்பூர் குளத்தை தூர் வாருவதற்கு திட்டமிடப்பட்டு சிறப்பாக அந்தப் பணி நிறைவேற்றப்பட்டது. சான்றோர்களும், பொதுமக்களும், பக்தர்களும் இந்தப் பணியை சிறப்பாக பாராட்டினார்கள். ஆனால் அந்தப் பணியை சிறப்பாக செய்து முடித்த அலுவலர் திரு. நாகராஜன் என்பவரை 1975–76 ஆம் ஆண்டில் அவசரக் காலத்தில் அந்த ஆட்சியில் ஏறத்தாழ 16 மாத காலம் தற்காலிகமாக பணி நீக்கம் செய்து வைத்தார்கள். அவர் அந்த வேலையை சிறப்பாக செய்ததற்காகவே அப்படிப்பட்ட ஒரு மாபெரும் தண்டனையை அனுபவித்தார். ஆனால் இன்றைய தினம் கடந்த 1983–84 ஆம் ஆண்டில் அதே குளத்தை தூர் வாருவதற்கு 14 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து இதுவரை 7 லட்சம் ரூபாய் செலவு செய்து இருக்கிறார்கள். எனவே

(இரவு 7.30)

உடனடியாக இந்தப் பணியை நிறைவேற்ற துரிதமாக நேர்மையாக நிறைவேற்ற ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மைலாப்பூர் ஆலயத்தில் 1985 ஆம் ஆண்டு குடியரசுத்தலைவரை வரவேற்பதற்காக 28 ஆயிரத்து 724 ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். இரண்டாவது முறை அவர் வருகை தந்தபோது 11–5–88ல் 13 ஆயிரத்து 699 ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். ஆலயத்தினுடைய தொகை இப்படி தவறான காரியங்களுக்கெல்லாம் முறையற்ற வழியில் ஏராளமாக செலவு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் கலைஞர் அவர்களுடைய ஆட்சி காலத்தில் 1972ல் குடியரசுத்தலைவரை வரவேற்பதற்கு சாதா ரணமாக 716 ரூபாய்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. எனவே இப்படி ஊதாரித்தனமாக ஆலயங்களுடைய பணத்தை செலவு செய்வதை தவிர்க்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு. செ. இராமலிங்கம்) [1989 ஏப்ரல் 20

கடைசியாக என்னுடைய தொகுதியைப்பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில், அங்கே மிகவும் பிரசித்திப்பெற்ற உப்பிலியப்பன் கோயில், ராகு ஸ்தலமாகிய நாகநாத ஸ்வாமி தேவஸ்தானம். சூரியனார் கோயில் போன்ற மிகப்பெரியஆலயங்கள் இன்றையதினம் சரியான முறையில் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன.

திரு. ஆர். சிங்காரம் : ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்றபோது இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ராஷ்டிரபதி அவர்களை வரவேற்பதில் ஊதாரித்தனமாக செலவு செய்துவிட்டதாக சொன்னார்கள். ராஷ்டிரபதி அவர்களை வரவேற்பது ஊதாரித்தனமா அல்லது செலவு ஊதாரித்தனமா, அது அவசியமா அல்லது அவசிய மில்லையா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க, அதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1972-ல் இதே காரியத்திற்காக குடியரசுத் தலைவரை வரவேற்றதற்கான செலவு 716 ரூபாய்தான். ஆனால் அதே காரியத்திற்காக 1985-ஆம் ஆண்டு 28 ஆயிரத்து 724 ரூபாய். 1988 ஆம் ஆண்டு 13 ஆயிரத்து 699 ரூபாய். எனவே வரவேற்றதை ஊதாரித்தனம் என்று சொல்லவில்லை. செலவு செய்த முறையைத்தான் நான் ஊதாரித்தனம் என்று சொன்னேன். அதே நேரத்திலே இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தணிக்கைத் துறைக்கு நம்முடைய தமிழக அரசில் நிதித் துறையைச் சேர்ந்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். உள்நிதி தணிக்கைத் துறையைச் சேர்ந்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் ஏ.ஜி. அலுவலகத்திலிருந்து தணிக்கையாளர்களை நாம் நியமிக்கிறோம். அது தேவையில்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் பெரியநாயகி அம்மன் கோவில் திருப்பணி நீண்ட காலமாக செய்யத் துவங்கி அந்தத் திருப்பணி நிறைவேற்றப்படாமல் இருக்கிறது நம்முடைய மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் அவர்கள் மிகவும் ஆர்வத்தோடு இந்தப் பணியை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை கேட்டிருக்கிறார்கள். எனவே இந்தப் பணியை உடனடியாக நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன். நன்றி.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மானியத்தில் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. இன்னும் பேசக் கூடிய அங்கத்தினர்கள் 6, 7 பேர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் இந்த சேருக்கு மரியாதைக் கொடுத்து, தயவுசெய்து 5 நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டுமாய் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



1989ஏப்ரல் 02]

*திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வனத் துறையின் மானியக் கோரிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. வனப்பில்லாத வனத் துறை, வளமில்லாத காடுகள் மலைகளின் இளவரசி இன்றைக்கு மங்கலம் இழந்த நிலையில் இருப்பதைத்தான் பார்க்கிறோம். காட்டு வளமே நாட்டு வளம் என்று சிறு வயது முதல் கட்டுரை எழுதி வந்தாலும் இன்றைக்கு காட்டு வளம் காக்கப்படாத நிலையில் பருவ மழை இழந்து பரிதவிக்கிறது தமிழகம். இது தானே நிதர்சனம்; இதுதானே உண்மை நிலை 1989-90-அம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 'சிடா' எனப்படும் சுவீடன் நாட்டு நிதி உதவி திட்டத்தின் செயலாக்கம் குறித்து அத் திட்டத்தின் முதல்கட்டப் பணிகள் சரியாக செயல்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்கள். 1981-ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட இத்திட்டத்தைப் பற்றி தமிழ்நாட்டில் எத்தனை பேருக்கு தெரியும்? வனத்துறை அதிகாரிகளைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்?

பொதுமக்களுக்கு நேரிடையாகப் போக வேண்டிய ஒரு அற்புதமான திட்டம் போதிய விளம்பரமின்றி சரியான 'பிளான் ஆஃப் ஆக்ஷன்' இன்றி சரியாகச் செயல்படாமல் இருக்கிறது. சமுதாயக் காடுகளை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கம். ஏன் வளர்க்க வேண்டும்? எதற்கு வளர்க்க வேண்டும், எப்படியெல்லாம் வளர்க்க வேண்டும் என்று பொது மக்களுக்கு சொல்லித் தர வேண்டாமா? இலட்சக் கணக்கில் ஆண்டுதோறும் விளம்பரச் செலவை செய்துவரும் வனத்துறை தனது விளம்பரம் போய்ச் சேரவேண்டிய இடத்துக்குப் போகிறதா என்று பார்க்க வேண்டாமா? இன்றும் காட்டிலிருந்து சுட்டெரிக்கும் வெயிலில் விறகு சுமந்துகொண்டு விறகோடு விறகாகிக் கொண்டிருக்கும் ஏழைப் பெண்கள் எத்தனை பேர்? சமுதாயக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் கருவேல மரங்கள் வளர்த்தால் இந்த ஏழைகள் சிந்தும் வியர்வை குறையுமே. மரங்களே இல்லாத மலட்டு நிலங்கள் எவ்வளவு உள்ளன? தேசிய நெடுஞ்சாலையின் இரு பக்கங்களிலும் நிழல் தரும் மரங்கள் வளர்க்க வேண்டாமா? வைகையாற்றின் இருமருங்கும் மரம் வளர்த்தால் எவ்வளவு அழகாயிருக்கும்?

கூவத்தை அழகுபடுத்த வேண்டும் என்று அக்கறையோடு திட்டங்கள் தீட்டிய கலைஞர் ஆட்சியில் கூவம் நதியின் இரு மருங்கிலும் குறிப்பாக 'ஃப்ளேம் ஆஃப் பாரஸ்ட்ஸ்' என்று அழைக்கப்படும் மரங்களை நட்டுவைத்தால் அவை வளர்ந்து செந்நிறப் பூக்களை தீச்சுடராய் தெளிக்கும் காட்சி எவ்வளவு அழகாயிருக்கும்?

'வர்ல்டு ஹெல்த் ஆர்கனைசேஷன்' அறிக்கையில் நமது கூவத்தைப் பற்றி ஒரு உலகச் சாதனை குறிப்பிடப்பட்டுள்ளது. ''உலகிலேயே ஒரு சதவீதம் கூட 'ஆக்சிஜன்' இல்லாத ஒரே நதி'' வேதனையான சாதனை. இருமருங்கிலும் நெடுக மரங்களை

வளர்த்தால் கூவத்தில் அழகு கொஞ்சுமே. அரசு இப்போதே செய்ய வேண்டிய அவசரப் பணி இதுவென்று குறிப்பிட்டு இதன் மீது நடவடிக்கைக்கு மாண்புமிகு வனத்துறை அமைச்சர் உறுதி மொழி வழங்க வேண்டும் என்று வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன்.

சமுதாயக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் வழங்கப்படும் மரக்கன்றுகள் ஒரேமாதிரியான சீரான முறையில் வழங்கப்பட வேண்டும். சமூகக் காடுகள் வளர்ப்பு ஒரு உன்னதமான, உயர்ந்த நோக்கமுடைய நாட்டுப்பணியாகும். யார் வேண்டு மானாலும் இலவசமாக மரக்கன்றுகளை வாங்கி அவர்களுக்குச் சொந்தமான விரும்பும் பகுதியில் வளர்க்க ஊக்கமளிக்க வேண்டும்.

மரங்கள் வாயிலாக வனத்துறைக்கு வரும் வருவாயை இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அதிகரிக்கலாம். கொள்கையை மாற்றினால் போதும். எடுத்துக்காட்டாக சேஷசாயி காகித ஆலைக்கு மூங்கில் மரங்களை வனத்துறை விற்பனைக்கு வழங்கி வருகிறது. வேடிக்கையான விற்பனைக் கொள்கை. மரம் அரசினுடையது. வாங்குவது சேஷசாயி. நேரிடையாக வியாபாரம் செய்ய வேண்டியதுதானே. இதில் ஏன் இடைத் தரகு முறை? மரங்கள் கான்டிராக்டுக்கு விடப்படுகின்றன. கான்ட்ராக்டர் மூங்கில் மரங்களை வெட்டுகிறார். எப்படி வெட்டுகிறார்? வேரடியோடு வெட்டுகிறார். அங்கு மூங்கில் மீண்டும் தழைக்குமா? ஓரடி அல்லது ஈரடி விட்டு வெட்டினால் வெட்டிய மூங்கில் மீண்டும் வளராதா? எவ்வளவு பெரிய இழப்பு? வேரடியோடு வெட்டுகிற காரணத்தால் எதிர்காலத்தில் அந்த மூங்கில் மர இனங்கள், அந்தக் குடும்பங்கள் அழிந்துபோகிற அபாயத்தை அரசுக்குச் சொல்லுவது என்னுடைய கடமையாகும்.

அது மட்டுமல்ல. இந்த மூங்கில் காடுகளை அடியோடு அழிப்பதால் உள்ள இன்னொரு கேடு என்னவென்றால் யானைகள் அங்கிருந்து அடுத்த மாநிலங்களுக்குச் சென்றுவிடு கின்ற அபாயமும் இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்த முறை நீடித்தால் சேஷசாயி மூங்கில் மரங்களை வெட்டுவது மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் யானைப் படத்தைக் காட்டித்தான் இந்த விலங்கு தமிழ்நாட்டில் வளர்ந்தது என்று சொல்லுகின்ற நிலைக்கே தள்ளப்பட்டு விடுவோம்.

குறிப்பாக 'டான்இந்தியா' கம்பெனிக்கு விற்கப்படும் மிலாறு மரங்கள் (வாட்டில்ர்ன் ட்ரீஸ்), விஸ்கோஸ் நிறுவனத்திற்கு 'யாண்' உற்பத்திக்கு விற்கப்படும் மரங்கள் எல்லாவற்றிலும் வருவாய்க் கசிவு (ரெவின்யூ லீக்கேஜ்) உள்ளது. கசிவு என்பதை விட மடை திறந்த வெள்ளம் போல் சமயங்களில் இழப்பு நேரிடும் அபாயம் இருப்பதால் நடைமுறைச் செயலாக்கத்தை முற்றிலுமாக மாற்ற வேண்டும்.





அடுத்து, சந்தனக் காடுகள் வெட்டப்படுவதிலிருந்து விற்கப் படுவது வரை உள்ள ஊழல் சந்தன வாசனையைக் கூட மிஞ்சு வதாக உள்ளது. வனத்துறை அலுவலகங்களில் விலையுயர்ந்த சந்தனக் கட்டைகள் விறகுக் கட்டைகள் போல அடுக்கி வைக்கப் பட்டுள்ளன. வெயிலாலும், மழையாலும் இந்த சந்தனக் கட்டைகள் பாதிக்கப்படுவதைப்பற்றி யாருக்கும் கவலையில்லை. அரசு 'ரைட் ஆஃப்' செய்துவிடும். ஒரு வேடிக்கையான சம்பவத்தை, நான் கேள்விப்பட்டதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒசூரில் ஒரு வனத்துறை அலுவலகத்தில் அடுக்கி வைக்கப் பட்டிருந்த சந்தனக் கட்டைகளில் சிலவற்றை விறகுக் கட்டைகள் என்று எண்ணிக்கொண்டு சமையலுக்கு எரிக்க, எரிக்க எரிக்க மணக்கும் சந்தனம் காடு முழுவதும் மணந்ததாம். எவ்வளவு அலட்சியம்? விலையுயர்ந்த சந்தனக் கட்டைகளைப் பாதுகாக்க வேண்டாமா? 'வேர் ஹவுஸ்' கட்டி அல்லது 'கோடவுன்' கட்டி அங்கு சந்தனக் கட்டைகளைப் பாதுகாப்பாக வைத்து, அவற்றை 'இன்ஷூர்' செய்தும் வைத்தால் விரயங்கள் தடுக்கப்படலாம்.

திருப்பத்தூரில் அரசு ஒரு சந்தனத் தைல தொழிற்சாலை ஆரம்பித்துள்ளது. சந்தனத் தைலத்தின் 'மார்கெட்டிங் கப்பாசிட்டி' மிகக் குறைவு.

(இரவு 7.40)

வாங்கும் திறனும் வாங்குவோர் திறனும் மிக மிகக் குறைவு' வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்றால் வெளிநாட்டில் 'சிந்தட்டிக்' சந்தனத் தைலம் மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. அரசு நடத்தும் தொழிற்சாலையில் எவ்வளவு இலாபம்? அதற்கென்று எவ்வகையான மார்க்கெட்டிங் முறை நடைமுறையில் உள்ளது? இவற்றை எல்லாம் அரசு மறு பரிசீலனை செய்யவேண்டும்.

நீண்ட நெடுங்காலமாக பாம்பு பிடித்தலையே தொழிலாகச் செய்து கொண்டிருப்பவர்கள் இருளர்கள். அவர்களைப் பற்றி அரசின் கனிவான கவனத்திற்குச் சிலவற்றைச் சொல்ல விரும்பு கிறேன். அவர்களுக்கு அடிப்படைத் தேவையான உணவு, உறை விட வசதி கூட இல்லை. உயிரைப் பணயம் வைத்து வயிறு வளர்க்கும் இந்த ஏழையைக் கொஞ்சம் பாருங்கள். அணி வதற்குச் சட்டை கூட இல்லாமல் திறந்த மேனியுடன் தினமும் பாம்புகளுடன் வாழ்ந்து வருகின்ற இருளர்களின் நிலைமை இப்படி ஒரு பக்கம். ஆனால் அவர்கள் பிடித்துக்கொடுக்கும் பாம்புகளைக் கடத்தித் தொழில் செய்யும் கடத்தல்காரர்களுடைய நிலை என்ன? சொகுசான வாழ்க்கை, உல்லாசமான வாழ்க்கை? சமதர்ம சமுதாயத்தை உண்டாக்கவேண்டும் என்று நாம் சொல்கிறோம். எனவே இந்த இருளர்களைத் தமிழகத்தின் முதல்வராவது காப்பாற்ற வேண்டும். அவர்களுக்கு இலவச வீடுகள் தர வேண்டும். அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கல்வி வசதி தர வேண்டும்.

என்னுடைய கம்பம் தொகுதியிலே குமுளிக்குப் பக்கத்தில் குமரிக்காடு என்று ஒரு பகுதி இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் அந்தக் குமரிக்காட்டில் சமவெளிப் பகுதியில் விவசாயம் செய்துகொள்ளலாம் என்று அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சமவெளி உள்ள இடங்களில் இன்றைக்கு மீண்டும் விவசாயம் செய்துகொள்ளலாம் என்று அந்த விவசாயிகளுக்கு ஒரு உற்சாகத்தை ஊட்டுகிற வகையிலே, உத்திரவு பிறப்பிக்க வேண்டும். விவசாயம் செய்கிற அந்த விவசாயிகள் மரத்தை நட்டு ஒரு 6 வருடம், 7 வருடம் ஆனதற்குப் பிறகு, அதாவது அந்த மரமானது பெரியதாக ஆனதற்குப் பிறகு அரசுக்கு அந்த நிலத்தைத் தரவேண்டும் என்ற உறுதியினை ஏற்படுத்தி அந்த விவசாயிகளுக்கு அந்த நிலத்தைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய கம்பம் தொகுதியில் 2000 ஏக்கருக்கு மேலாக ஏலத்தோட்ட விவசாயிகள் சுற்றிலுமுள்ள காட்டையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஏலப் பயிருக்கு முக்கியமானது நிழல். ஏல விவசாயி ஏலத்தை எப்படி காப்பாற்றுகிறானோ அதைப்போல அந்த மரத்தையும் காப்பாற்ற வேண்டியவனாக இருக்கிறான். எனவே அந்த ஏல விவசாயிக்கு உற்சாகத்தை ஊட்டுகிற வகையில், அந்த மரத்தைக் காப்பாற்றுகிற வகையில் இந்த அரசு எலத் தோட்ட விவசாயிகளுக்கு லீஸ் என்று கொடுக்கிற முறையைக் கைவிட்டு பட்டா என்ற உரிமையை அந்த விவசாயிக்குக் கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் நிச்சயமாகச் சொல்கிறேன், தமிழ்நாட்டில் எனக்கு ஒரு ஏக்கர் ஏல நிலம் கூட கிடையாது. காட்டுவளத்தைப் பெருக்கவேண்டும் என்ற ஒரே எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்தக் கருத்தை நான் அரசுக்குச் சொல்லி 'Preserve trees; deserve prosperity' என்று கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. வே. பெரியசாமி : தின்றால் சுவை ததும்பும், தேனென இனிக்கும், தித்திக்கும் தென்பாண்டித் தமிழ் மொழியிலே, பேசக்கூடிய சிறப்புமிகு ஆற்றலுடைய மன்றத்தினுடைய தற்காலிகத் பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற தமிழ்ச் சமுதாயம் ஒரு காலத்திலே கேட்பாரற்று அடிமைப் படுத்தப்பட்டு, நசுக்கப்பட்டு, நலிவுற்ற நிலையிலே இனி தலை தூக்க முடியாது என்ற விரக்தி மனப்பான்மையோடு இருந்த நேரத்தில் இதோ விடிவெள்ளி முளைத்தது காண் என்று ஈரோட்டிலிருந்து கிளம்பிய விடிவெள்ளி தன்னுடைய 95 வயது வரையில் ஏறத்தாழ 70 ஆண்டுகாலம் பொது வாழ்க்கையிலே ஈடுபட்டு, தள்ளாடித் தடி ஊன்றுகின்ற நிலையிலேயும் நோய் ஒவ்வொரு நொடியும் அவரைத் துன்புறுத்திக்கொண்டிருந்த நிலையிலேயும் அந்த நோயைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல், இடைக்காலத்திலே தமிழகத்திலே பரவிவிட்ட மூட





நம்பிக்கை என்ற தொற்று நோயை விரட்டுவதுதான் தன்னுடைய தலையாய கடமை என்று சூளுரைத்துக்கொண்டு, எதிர்த்தவர்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு கருத்து மழை பொழிந்து இந்த நாட்டை, மொழியை, சமுதாயத்தை, பண்பாட்டை, விழாமல் காப்பாற்றினாரே இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர், விடுதலை வீரர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அவர் பிறந்த இந்த நாட்டிலே தான் இன்றைக்கு அறங்காவல் துறையைப் பற்றி அழகாக இங்கே விமர்சனம் செய்துகொண்டிருக்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலையிலே திருநீறோடும், சந்தனப் பொட்டோடும் வந்தார் என்று இங்கே சொன்னார்கள். ஆலயங்களிலே தொழுவது சாலச்சிறந்தது என்றாலும் கூட மூட நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கிற நேரத்தில், ஆலயங்களிலே பணியாற்றுகிற ஏழை,எளிய தாழ்த்தப் பட்ட மக்கள் எவ்வளவு பேர், அவர்கள் அங்கே பணியாற்றுகிறார்களா என்று சொன்னால் ஏறத்தாழ 5 விழுக்காடு கூட அங்கே இல்லை. தந்தை பெரியார் எதற்காக இந்த நாட்டிலே பிறந்தாரோ, எந்த நிலையிலே இந்த நாட்டுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல பல காரியங்களை ஆற்றவேண்டும் என்றும், சம உரிமைகளை வழங்கவேண்டும் என்றும் சொன்னார்களோ அந்த நிலைகளை எல்லாம் இன்றைக்கு வைத்திருக்கிறீர்களா என்று சொன்னால் வாயாலே பந்தல் போடுவார்களே தவிர, அதை நடைமுறைக்குக் கொண்டு வருகிறார்களா என்றால் இல்லை; இல்லவே இல்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள், அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், திருச்செந்தூர் தொகுதியிலே இருந்து வந்திருக்கிறார்கள். தெய்வ பக்தி மிகுந்த அந்த பகுதியைச் சேர்ந்தவர்கள் இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்தில் ஒவ்வொரு ஆலயத்திலும் தாழ்த்தப்பட்டவர்களை அறங்காவலர்களாக ஒரு பெண்ணையும் ஒரு ஆணையும் நியமனம் செய்யவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக பணிந்து கேட்டுக்கொள்கிறேன். இது கடந்த காலத்தில் எந்த ஆலயத்திலும் இல்லை. கேட்டால் தாய்க் குலத்தை ஏதோ ஒரு மாதத்திற்கு ஒரு முறை வெளியிலே இருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களை அங்கே கோயிலுக்குள்ளே விடாதபடி, அங்கே அறங்காவலர்களாக நியமனம் செய்யப்படாமல் வைத்து இருக்கின்றார்கள். சத்தியமங்கலம் அருகே அருள்மிகு பண்ணாரி மாரி அம்மன் திருக்கோயில் உள்ளது. நான் அந்த கோயிலிலேதான் 3 ஆண்டுகள் அறங்காவலராக இருந்தேன். அந்த கோயிலை சுற்றி வன இலாகாவிற்கு சார்ந்திருக்கின்ற இடங்களில் ஏறத்தாழ 2 ஏக்கர் பூமி இருக்கின்றது. அந்த திருக்கோயிலினுடைய பணி நடக்கின்றபோது, கோயிலுடைய விழா நடக்கின்ற நேரத்தில், வன இலாகா அதிகாரிகள் அது மத்திய அரசுக்கு சொந்தமானது என்று சொல்லி அந்த வளாகத்திலே ஒரு கடை கூட போடமுடியாத நிலையை உருவாக்கி வைத்திருக்கின்றார்கள். எனவே மாண்புமிகு

(திரு. வே. பெரியசாமி) [1989 ஏப்ரல் 20

அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு சொல்லி உடனடியாக அந்த பகுதியிலே உள்ள அந்த காட்டிலாகாவைச் சேர்ந்த இடத்தை நம்முடையை அறங்காவலர் துறைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அறங்காவலர் துறையிலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் அரசு ஊழியர்களாக இருக்கிறார்கள். ஆனால் அங்கே வேலை செய்கின்ற ஊழியர்கள் தற்காலிக ஊழியர்கள் அவர்களுக்கு சம்பளம் குறைந்த நிலையிலே இருக்கின்றது. அரசு ஊழியர் களுக்கும், அலுவலர்களுக்கும் பணிப்பாதுகாப்பு கொடுத்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் அந்த தேவாலயங்களிலே சிறப் பான முறையிலே பணியாற்றுகின்ற அந்த அரசு ஊழியர்களுக்குப் பணிப்பாதுகாப்பை கொடுத்து கடந்த காலத்திலே எப்படி அரசு ஊழியர்களுக்கு நீங்கள் சம்பளத்தை உயர்த்திக்கொடுத்திருக் கின்றீர்களோ அதேபோல் இந்த 5-வது சம்பளக் கமிஷனும் ஏற்படுத்தி இருக்கின்றீர்கள் அதை அவர்களுக்கும் சம்பளம் மற்றும் அத்தனை சலுகைகளையும் இப்போது அரசு ஊழியர் களுக்கு கொடுப்பது போல நீங்கள் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, வனத்துறை இலாகா பற்றி ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

நான் இருக்கின்ற ஊர் அந்தியூர் தொகுதி. அது வனங்கள் அதிகமாக இருக்கின்ற பகுதியாகும். அங்கே வனத்திலே வசிக்கின்ற ஆதிவாசிகள் காட்டிலே பாரஸ்ட் செட்டில்மென்ட் என்று சொல்வார்கள், அந்த காட்டிலே இருக்கின்ற ஆதிவாசி களுக்கு பாதுகாப்பு இல்லை. 1947 ஆகஸ்ட் 15லே சுதந்திரம் பெற்றோம் என்று சொல்லி இன்றைக்கு கொடிகளை ஏற்றிக் கொண்டிருக்கின்றார்கள், மிட்டாய்களை கொடுத்துக்கொண்டிருக் கின்றார்கள். அந்த மக்களைப் போய்ப் பாருங்கள். ஆதிவாசிகள் என்று சொன்னால், 'சோழகர்கள், இருளர்கள் என்று சொல்லக் கூடிய சாதிகள் இன்றைக்கு புழுக்களாக பஞ்சைப்பராரிகளாக இருந்துகொண்டிருக்கின்றார்கள். அந்த மக்களுக்கு உடுக்க உடை கூட கிடையாது. இருக்க இடம் கூட இல்லை. செட்டில்மென்ட் என்று சொன்னால் வனத்துறைக்குச் சொந்தம் என்று சொல்லி அவர்களை அவதிப்படுத்திக்கொண்டிருக் கின்றார்கள். வன இலாகா அதிகாரிகள் கொடுமை தாங்க முடியாத நிலையில் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றார்கள். அங்கே யாராவது சந்தன மரங்களை வெட்டிச்சென்று விட்டாலும் கூட, அந்த ஆதிவாசிகளிடம், நீங்கள்தான் இந்த பாரஸ்ட் செட்டில்சென்ட்டில் இருக்கின்றீர்கள். உங்களுக்குத் தெரியாமல் எப்படி நடக்கும் என்று சொல்லி அந்த மக்கள் மீது பொய்க் கேஸ் போடுகின்றார்கள். ஏராளமானவர்கள் சிறைச் சாலையிலே சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள். எனக்கு கொடுத்த நேரம் குறைவாக இருந்த காரணத்தால் இத்தோடு முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க கவனம் செலுத்தி இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு எனக்கு வாய்ப்பு கொடுத்த அம்மையாருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்



1989 ஏப்ரல் 20]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்): மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்கள் 5 நிமிடங்கள்தான் எடுத்துக்கொள்ளவேண்டும்.

*திரு. அ.லெ. சுப்பிரமணியன்: கூட இரண்டு நிமிடம் தரவேண்டும். மாண்புமிகு தலைவர் அவர்களே, தலைவர் அவர்களே என்று சொல்லிவிட்டேன், கூட 5 நிமிடம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே தமிழ்நாடு 1959ஆவது ஆண்டு இந்து சமய அறநிலையத் துறை மான்யத்தின்மீது என்னுடைய கருத்துக்களை கூறவிரும்புகிறேன்.

இங்கே அவர்கள் சொன்னதைப்போல, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் மதத்திற்கும் கோயில் நிர்வாகத்திற்கும் எதிரான இயக்கம் என்று கருதவேண்டாம். அது எதிரான இயக்கம் அல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட திருமூலர் வாக்கான, ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற கொள்கையை உடையவர்தான். அதைப் போல மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 'கோயில் கூடாது என்பதல்ல, கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது' என்பதுதான் எங்களுடைய கொள்கை என்று தெரிவித்து இருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலேதான் தேர்தலுக்கு முன்னாலே தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற வகையிலே, இந்து கோயில்களுடைய நிர்வாகத்தைச் செம்மைப்படுத்து வதற்கும், கோயில் சொத்துக்களை பாதுகாப்பதற்கும், நிதி ஆதாரங்களைப் பெருக்கவும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து இருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அந்த குழு மாவட்ட தலைநகரங் களில், மற்றும் வட்ட தலைநகரங்களிலும் சென்று ஆலயம் இருக்கின்ற ஊர்களுக்கும் சென்று அந்த மக்களுடைய கருத்துக் களை அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்.

நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். கோயில் சொத்தை பாதுகாக்கவேண்டும் என்று சொன்னேன் கலைஞர் அவர்கள் காலத்திலே தான் சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் ஆலய சொத்துக்களை சரிபார்ப்பு அதிகாரியாக இருந்தவர், அவர் கொலை செய்யப்பட்ட காரணத்தினாலே அதற்கான ஒரு விசாரணை வேண்டும் என்று குரல் எழுப்பியவர் இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் தான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தலைமையிலே ஒரு வழக்கறிஞர் குழுவை அமைத்து, கழகத்தின் சார்பாக நீதிபதி பால் அவர்கள் முன்னாலே ஆஜராகி, அவரும் இங்கே நடந்து இருப்பது படுகொலைதான் என்று அவருடைய அறிக்கையிலே தெள்ளத் தெளிவாக குறிப்பிட்டார்கள். அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கலைஞர் அவர்கள் 100மைல் தூரம்நடைப் பயணம் வந்தாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை,

[திரு. அ. லெ. சுப்பிரமணியன்] [1989 ஏப்ரல் 20

(இரவு 7–50)

ஆனால், அதற்கு மாறாக அந்த அறிக்கையை வெளியிட்டார் என்று குற்றம் சாட்டி கலைஞர் அவர்கள் மீது I.P.C. 379-ஆவது செக்ஷன்படி திருட்டு வழக்கு ஒன்றைப் பதிவு செய்தார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல; ஓர் அரசு ஊழியர் இறந்துவிட்டால் அவருடைய மகனுக்குக் கருணை அடிப்படையில் வேலை தர வேண்டும். ஆனால், சுப்பிரமணியப்பிள்ளை இறந்ததற்குப் பிறகு அவருடைய மகனுக்காவது வேலை முந்திய அரசினர் தந்தார்களா என்றால் நிச்சயமாக இல்லை. ஆனால் கலைஞர் அவர்கள்தான்—எதிர்க் கட்சித் தலைவராக இருந்தாலும்—50 ஆயிரம் ரூபாயை நிதியாகத் திரட்டி, கழகத்தின் சார்பாக அந்தக் குடும்பத்திற்குத் தந்து, அவர்கள் அதை அறக்கட்டளையாக இன்றைக்கு ஏற்றிருக்கிறார் கள் என்ற செய்தியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல திருநெல்வேலி மாவட்டத்தில் தென்திருப்பேரை என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே குழைக்காத நாதர் கோயில் உள்ளது. அந்தக் கோயிலிலே கொள்ளை போனபோது, அந்தக் கொள்ளையரைப் பிடிக்க வேண்டுமென்று முன்பிருந்த ஆட்சியைத் தட்டிக் கேட்டு, அதற்காக வாதிட்டவர், அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசைத் தூண்டியவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போல இன்றைக்குச் சிலைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கின்ற கருத்தையெல்லாம் சொன்னார்கள்.

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கோயில் சொத்துக் களுக்கு ஆலயப் பாதுகாப்புக் குழு என்று இன்றைக்குப் போட்டிருக்கிறீர்கள். நீதிபதி பால் அவர்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தாலும், பல இந்துக் கோயில்களுக்குச் சென்றார். குருவாயூர் போன்ற இந்துக் கோயில்கள், இன்னும் திருப்பதி தேவஸ்தானம் போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று கோயில் சொத்துக்கள் எப்படி பாதுகாக்கப்பட வேண்டும், உண்டியலில் திருட்டு நடைபெறாமல் எப்படி உண்டியல் எண்ணப்பட வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் தம்முடைய அறிக்கையில் இரண்டாவது பகுதியில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக் கிறார்கள். அதையும் இந்த அரசு கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இனி, வருமானத்தைப் பெருக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பல வழிகளைச் சொல்லியிருக்கிறார்கள். 6.11 லட்சம் ஏக்கர் இருந்தாலும் கோயில்களுக்கு 2.21 கோடி ரூபாயும், 7.53 லட்சம் குவிண்டால் நெல்லும்தான் வருமானமாகக் கிடைக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற சட்டத்தின்படி Public Trust Act-ன்கீழ் 25 சதவீதம்தான் அவர்கள் மகசூலிலே கோயிலுக்குத் தர வேண்டும். அதைக் கூட தராத காரணத்தால் இன்றைக்குப் பல கோயில்களில் பூஜை நடக்கவில்லை. எனவே,



1989 ஏப்ரல் 20] [திரு. அ. லெ. சுப்பிரமணியன்]

நான் தெரிவிக்க விரும்புவதெல்லாம்—உழுபவர்களுக்கே நிலத்தை சொந்தமாக்கும் என்ற கொள்கையுடையது இந்த அரசாங்கம் அப்படிப்பட்ட நிலத்தை யார் யார் பயிரிடுகிறார்களோ அவர்களுக்கு முதல் உரிமை தந்து, அந்த நிலங்களை காலக் கிரயத்திற்கு அவர்களுக்குக் கொடுத்து, அதை 12 ஆண்டுக் காலத்தில் அதிலிருந்து வருகிற பணத்தை 12 தவணைகளில் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்படி வருகிற பணத்தை Nationalised Bank-ல் Fixed Deposit செய்து, அதிலிருந்து வருகிற வட்டியை எடுத்தால் இன்றைக்குக் கோயிலைப் பராமரிக்க முடியும் என்று கருதுகிறேன். இதே கருத்தை நம்முடைய அமைச்சர் அவர்களிடம், மறைந்துவிட்ட ஜீயர் தெரிவித்ததாக பத்திரிகை களில் நான் பார்த்தேன்.

அதைப்போல இன்னொன்று. கோயில்களுக்குக் கட்டிடம் கட்டுவதற்கென்று சில திட்டங்களை வைத்திருக்கிறார்கள். எங்களுடைய ஊரில் நெல்லையப்பர் கோயில் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் அதற்குச் சொந்தமான தாமரைக்குளம் என்ற ஒரு இடம் இருக்கிறது. அதில் 7 லட்சம் ரூபாய் அவர்கள் முதலீடு செய்தால் 50 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டிடம் கட்டிக் கொள்ள முடியும். வருகின்ற வாடகைதாரர்கள் அட்வான்ஸ் பணம் ஒரு கடைக்கு 70 ஆயிரம் தருவதாகக் கூறுகிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தின்கீழ் 7 லட்சம் ரூபாய் கோயிலிலே வரவு செய்தால், 50 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கட்டிடத்தையும் கட்ட முடியும்; ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் ரூபாய் வருமானமும் கிடைக்கும். எனவே, இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில்—இன்றைக்குத் தனி அதிகாரிகள் இருக்கிறார்கள்—விரைவிலே அறங் காவலர் குழுக்களை அமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன். அர்ச்சகர்களைப் பொறுத்தவரையில் ஆலயத்திற்குள்ளே அரிசனங்கள் செல்லலாம் என்ற உரிமையை வாங்கித் தந்தவர் காந்தியடிகள். ஆனால் இன்றைக்கு கலைஞர் அவர்கள்தான் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்—அரிசனங்களாக இருந்தாலும் கூட—அந்த வேதாகம முறைகளைப் படித்தால், அவர்களையும் அர்ச்சகர் ஆக்கலாம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தவர் கலைஞர் அவர்கள்தான். இன்றைக்கு அது உச்சநீதிமன்றத்தில்—அது செல்லுமா என்று கேட்கக்கூடிய அளவுக்கு—நாடு போய்க் கொண்டிருக்கிறது.

அதேபோல, இன்னும் கோயில் நிர்வாகத்தைச் செம்மைப் படுத்தி வருமானத்தைப் பெருக்குவதோடு, பக்தர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையையூட்டத் தக்க அளவில் இன்றைக்கு அறநிலையத் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். அவருடைய காலத்தில் திருக்கோயில்கள் திருப்பணிகள் நடப்பதற்கும், வருமானத்தைப் பெருக்குவதற்குமான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டு மென்று கேட்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, நான் என்னுடைய பேச்சின் துவக்கத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கவர்னர் ஆட்சிக் காலத்திலே வீடு கட்டுவதற்கு நிலம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. பாப்புலர் கவர்ன்மென்ட் வந்தவுடனே கொடுப்போம் என்று சொன்னார்கள், ஆகையினால் கன்னியாகுமரியிலே டாக்டர் கலைஞருடைய பெயரால் இருக்கிற நகரிலே நிலம் கொடுக்கப்பட வேண்டும், ஏனென்றால், இரவு பகலாக உழைக்கின்றவர்கள். ஜனநாயக நாட்டிலே முக்கியமான பங்கு வகிக்கின்றவர்கள். ஆகவே, அவர்களுக்கு கலைஞர் கருணாநிதி நகரிலே இடம் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஆகையினால் கருணை உள்ளம் படைத்த கலைஞர் அவர்கள் பெயரால் இருக்கிற கே. கே. நகரிலே இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளில், ஃபாரஸ்டைப் பொறுத்தவரையில், 1986–லே பேசும் பொழுது மழை கூட பெய்யாத அளவுக்கு வனங்கள் இல்லையென்று குறிப்பிட்டபோது, அமைச்சர் அவர்கள் அன்று கோபப்பட்டார்கள். இப்பொழுது நம்முடைய அமைச்சர் கோபப்பட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிற காடுகள் 'இஸ் நாட் ரெககனைஸ்ட் ஆஸ் எ பாரஸ்ட் ஏரியா'. நான் வழக்கறிஞர் என்ற முறையிலே சொல்கிறேன். கடந்த இரண்டு மாதத்திற்கு முன்னால், கேஸ்கள் போடப்பட்டன. பல கோடி ரூபாய் மதிப்புள்ள தேக்குகள், வெஸ்டர்ன் காட்சிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே, திருவாங்கூர் காலத்திலேயே நோட்டிஃபை ஆகியிருக்கிறது. நம்முடைய தமிழக அரசிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே, பாரஸ்டிலே ஒரே ஒரு பகுதியைத்தான் பாரஸ்ட் ஏரியா என்று சொல்லியிருக்கிறார்கள் கன்னியாகுமரியிலே தடிக்காரகோணம் என்ற பகுதியிலே அசம்பு என்ற பகுதியைத் தவிர, மற்ற எந்தப் பகுதியும் நோட்டிபை ஆகவில்லை. ஆகவே அரசு கேஸ் நடத்த முடியாமல் இருக்கிறது. கேஸ்கள் பத்மநாபபுரம் பகுதியிலே தொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலே, தேக்கு திருடப் படுவது உண்மைதான். ஆனால் கேஸ் போடமுடியாது என்று சொல்கிறார்கள். இப்படி இருந்தால் ஒரு தேக்கு மரமாவது கன்னியாகுமரியிலே இருக்குமா என்று கேட்க விரும்புகிறேன். இந்த அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? கோர்ட் ஜட்ஜ்மென்டை நினைத்தால் இப்பொழுது நல்ல அதிகாரிகள் கேஸ் நடத்த விருப்பவில்லை. குளித்துறை, தக்கலை, நாகர்கோவில் பகுதியிலே பல ஆயிரக்கணக்கான கேஸ்கள் தேங்கியிருக்கின்றன. பத்மநாபபுரம் கோர்ட் தீர்ப்பிலே, மாஜிஸ்டிரேட் கொடுத்திருக்கிற பைண்டிங்கில் The land is belonging to the Government but the Forest is not a reserved Forest என்று சொல்லியிருக்கிறார். களியன்விளையிலே கோடிக்கணக்கான மதிப்புள்ள தேக்கு மரங்கள் இருக்கின்றன. இந்த





ஷரத்தை வைத்து திருடிவிட்டால், ஒரு கேஸ் கூட வராது. ஆகையினால், தயவு செய்து அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற பாரஸ்டை ரிசர்வ் பாரஸ்ட் என நோட்டிபை செய்வார் என்று நான் எதிர்பார்க்கிறேன். நிச்சயமாகச் செய்வார் என்று எதிர்பார்க்கிறேன். பிரைவேட் பாரஸ்ட் இருக்கிறது, அவற்றை வெட்டுவதற்கு மாவட்ட அளவில் தடை இருக்கிறது. ஆனால், இப்பொழுது அவர்கள் ஹைகோர்ட்டில் ஸ்டே வாங்கி மரங்களை வெட்டுகிறார்கள். ஆகவே, அந்த கேஸை உடனடியாக முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

யாரும் மன்றத்திலே அந்தப் பகுதியிலே இருந்து ஒன்றைப் பேசி இருக்க மாட்டார்கள். அரசு ரப்பர் கழகம் என்ற ஒரு கழகம் இருக்கிறது. அது எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறது. அதற்கும் சி. சி. எப். என்ற ஒரு அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். அங்கே நடக்கிற ஊழலை வெளியே சொன்னால் வெட்கக்கேடு என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை காடுகளை வெட்டித்தான் ரப்பர் பகுதியாக மாற்றப்பட்டிருக்கிறது. 11,000 ஏக்கர்கள் ரப்பர் பிளான்டேஷன் இருக்கிறது. அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு ரப்பர் பற்றி எதுவும் தெரியாது. நாங்கள் எல்லாம் ரப்பர் பிளான்டேஷன் வைத்திருப்பவர்கள். அங்கே இருக்கிற எல்லோருக்கும் 2 ஏக்கர் 3 ஏக்கர் ரப்பர் தோட்டம் இருக்கிறது. ஆனால், அங்கே அதிகாரிகள் ஐ.எப்.எஸ், படித்தாலும் ரப்பரைப் பற்றி ஏ, பி, சி தெரியாது. அவர்கள் பனிஷ்மென்டாகத்தான் அங்கே போடப்படுகிறார்கள். அங்கே வந்து உட்கார்ந்து, 'தே ஆர் கவுன்டிங் டேஸ்' எப்படி டிரான்ஸ்பர் ஆகிப்போகலாம் என்று நினைக்கிறார்களே தவிர, அரசு ரப்பர் கழகத்தை நன்றாக ஆக்க வேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் கிடையாது. மாநில அளவிலே அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள், அங்கே இருக்கிற பிரச்னையைப் பொறுத்தவரையில், டிஸ்டிரிக்ட் லெவலில் அவர்கள் பணியாற்றுகிறார்கள். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் 35,000 தனியார்கள் தோட்டங்கள் வைத்திருக்கிறோம், அந்தத் தனியார்கள் உற்பத்தி செய்யும் ரப்பருடைய அளவிலே பகுதி கூட நம்முடைய அரசு ரப்பர் கழகத்திலே உற்பத்தியாவது இல்லை;

(இரவு 8–00)

குறிப்பாக சொன்னால் அவர்களைப் பொறுத்தமட்டில் ரப்பர் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது, ஆனால் ரப்பரை பற்றி நன்றாக தெரிந்தவர்கள் அங்கே இருக்கிறார்கள். காந்திமதி, சிவலோகம், மாருதி, அம்பாடி போன்ற இடங்களில் ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன, அங்கே ரப்பர் பயிர் பற்றி நன்றாக தெரிந்த நிபுணர்களே இருக்கிறார்கள். இந்த ரப்பர்

தோட்டங்களில் இருப்பவர்களை எல்லாம் இங்கே ரெக்ரூட் பண்ணி போட்டால் நம்முடைய ரப்பர் தோட்டங்களை மிகவும் நல்லமுறையில் வளர்ச்சி பெற வைக்க முடியும். ரிசர்வு பாரஸ்ட் ஏரியாவில் தான் இந்த ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன. இன்றைக்கு தனியார் ரப்பர் தோட்டங்களில் கிடைக்கிற பாலில் பாதி அளவு கூட நமக்கு பால் கிடைக்கவில்லை, இன்றைக்கு 11 ஆயிரம் ஏக்கர் ரப்பர் தோட்டங்களில் 35 ஆயிரம் ஏக்கர் ரப்பர் தோட்டங்களில் வேலை பார்க்க எவ்வளவு பணியாளர்கள் தேவைப்படுவார்களோ அந்த அளவுக்கு எண்ணிக்கையில் பணியாளர்கள் இருக்கிறார்கள். அங்கே பால் எடுக்கிற வேலை, ரப்பர் தோட்டங்களை பராமரித்தல் போன்ற வேலைகளை சரிவர செய்வதில்லை. அது மட்டுமல்ல. ரப்பர் செடிகளை நடுகிற போது 100 செடிகள் நடுகிறார்கள் என்றால் 75 செடிகள் பட்டு போகின்ற நிலை இருக்கிறது, அதிகமான செலவு கணக்கை காட்டுகிறார்கள். அது மாத்திரமல்ல, எந்த விதமான மரத்தை, எந்த இடத்தில் நட வேண்டுமென்ற விவரம் அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு நன்றாக தெரியும். ஆனால் எந்த மரத்தை, எந்த இடத்தில் நட வேண்டுமென்ற செய்தி கூட தெரியாத நம்முடைய பாரஸ்ட் அதிகாரிகள் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) காட்டைப் பற்றி இன்னும் நான் பேச தொடங்கவில்லை. அதற்குள் மணியை தட்டினால் எப்படி. சீக்கிரம் முடித்து விடுகிறேன். 1984-ல் இருந்து அரசு ரப்பர் கழகமாக மாறியும் இன்னும் அதுபற்றிய அக்கவுண்ட் செட்டில் ஆகவில்லை. அதுபோல 1965 ஆம் ஆண்டிலிருந்து தொழிலாளர்கள் கட்டி வந்த இ.பி.எப். பற்றிய கணக்கு யாருக்கும் தெரியவில்லை. அதுபற்றிய ரசீதும் கொடுப்பதில்லை. அதுபற்றி ஏதாவது கேட்டால் அக்கவுன்ட் பற்றி எதுவும் தெரியவில்லை என்று சொல்கிறார்கள். லோன் கேட்டால், லோன் கேட்பவர்களிடமே கணக்கு கேட்கிறார்கள். அதுபோல கம்பல்சரி டெப்பாசிட் ஸ்கீமில் பணம் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் அதை 5 தடவைகளில் திருப்பி கொடுக்குமாறு கேட்டும் அங்கேயுள்ள ரப்பர் கழக அதிகாரிகள் கொடுக்க தயாராக இல்லை.

அடுத்து, அங்கே சிலோனிலிருந்து வந்த தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சியின் போது அவர்கள் அங்கே குடியமர்த்தப்பட்டார்கள். அவர்களில் வாரிசு இல்லாதவர்களும் குழந்தை இல்லாதவர்களும் ரிட்டயர்ட் ஆகும்போது அவர்கள் வசித்த வீடுகளை காலி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் இந்த கழகத்திற்கு சொந்தமாக அங்கேயிருக்கிற ஏராளமான நிலங்களிலிருந்து ஒவ்வொருவருக்கும் 5 சென்ட் நிலம் வீதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்க ஆவன செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். காரணம் இன்றைக்கு அங்கே தனியார்கள் ஆயிரக்கணக்கான





ஏக்கர் நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலும் இரண்டு பெரிய எஸ்டேட்களுக்கு சொந்தமான முதலாளிகள் இருக்கிறார்கள். நான் அவர்களுடைய பெயரை சொல்ல விரும்பவில்லை. இன்றைக்கு அவர்கள் எல்லாம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள். 10 ஆயிரம் ஏக்கர் நிலம் ஒருவர் வைத்திருக்கிறார் என்றால், அவருக்கு அது சொந்தம் என்றால், அவருடைய பொறுப்பிலே இன்றைக்கு 25 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னால், மூன்றில் ஒரு பங்கு தான் அவருக்கு சொந்தமானது. மூன்றில் இரண்டு அரசுக்கு சொந்தமான மலை. அப்படி நிலைமை இருக்கும்போது இந்த 5 சென்ட் நிலத்தை ஏழையெளிய சிலோன் அகதிகளுக்கு அரசாங்கம் கொடுப்பதிலே பிரச்சினை ஒன்றும இருக்காது என்பதால் அதை அரசு அவசியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்:

அடுத்து, பிரைவேட் எஸ்டேட்டில் கூட இன்றைக்கு 20 பெர்சென்ட் போனஸ் கொடுக்கும் நிலையில் அரசு ரப்பர் தோட்டத்தில் 8.33 பெர்சென்ட் கொடுப்பதற்கு கூட யோசிக்கிறார்கள். அரசு ரப்பர் கழக தோட்டத்தின் பொறுப்பாளராக ஐ.ஏ.எஸ். அதிகாரியை போட்டிருக்கிறார்கள். இருந்தும் 1984-ல் இந்த தொழிலாளர்கள் கட்டிய பிராவிடென்ட் பணத்தை 65 பேர் கேட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர அவர்களுக்கு அந்தப் பணத்தை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபோல போனஸ் கேட்டால் கணக்கு இல்லையென்று சொல்கிறார்கள். இப்படி சொல்வதற்கு ஓர் அரசு நிறுவனம் தேவையா? அரசு கார்ப்பரேசனில் எந்தவித சலுகைகளும் இல்லை. போனஸ் இல்லை. தொழிலாளி இறந்தால் பணம் இல்லை. சரியாக கணக்கு பார்ப்பதில்லை. தொழிலாளர்களை அவர்கள் 'பாண்டட் லேபர்' என்கிற ரீதியில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களின் குழந்தைகள் படிக்க வசதி செய்து கொடுக்கவில்லை. ஆகவே, தொழிலாளர்களின் குழந்தைகள் படிக்க வசதி செய்து கொடுப்பதுடன். வீட்டு வசதியும் செய்து கொடுக்க வேண்டும். அதுபோல நல்லமாதிரி போனஸ் கொடுக்க வேண்டும். அது மாத்திரமல்ல, தனியார் தோட்டங்களில் கொடுக்கிற அளவுக்கு போனஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

அடுத்து, கோவில்களைப் பொறுத்தவரையில், இந்தக் கோவில்கள் 1956 ஆம் ஆண்டிலிருந்து கேரளாவிலிருந்து அங்குள்ள ஆக்ட் படி செயல்பட்டு இங்கே வந்துள்ள நிலையில் அங்கே இன்றைக்கு ரிட்டையர்ட் ஆகிற அர்ச்சகர் 1,500 ரூபாய் வாங்குகிறார் என்றால் இங்கேயுள்ள அர்ச்சகர் 15 ரூபாய். 25 ரூபாய் என்று வாங்குகிற நிலை இருக்கிறது. ஆகவே, அந்த கோவில் ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் வித்தியாசங்கள் இல்லை என்கிற நிலையை உருவாக்க

வேண்டும். அதுபோல கோவில் சொத்துக்களை, பல சட்டங் களைக் கொண்டு வந்து. அந்த சட்டங்களின் கீழ் லீசுக்கு விடு கிறார்கள். அப்படி லீசுக்கு விடப்பட்ட கோவில் நிலங்கள் திரும்ப கோவிலுக்கு வருவதில்லை. அது மட்டுமல்லாமல், அப்படி லீசுக்கு எடுப்பவர்கள் கோவில் சொத்துக்களை பராமரிக் கும் முறையும் சரியில்லை. எங்கே பார்த்தால் சொத்துள்ள கோவில்களை அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது. சொத்து இல்லாத கோவில்களில் விளக்கு வைக்கக் கூட வழியில்லாமல் இருக் கிறது. ஆகையால் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கேரளாவில் இருக்கிற அந்த அளவுக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அந்த அளவுக்கு கோவில்கள் பராமரிப்பு இல்லை, அர்ச்சகர்களுக்கு சம்பளமும் சரியாகக் கொடுப்பதில்லை. எனவே கேரளா விலேயிருந்து பிரிந்து வரும்போது. அவர்களுக்கு கேரளாவில் உள்ள ஊதியம் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அந்த அர்ச்சகர்களுக்கு அந்த ஊதியத்தை கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. மூக்கன் அவர்கள் 5 நிமிடங்களில் முடிக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லையா, ரொம்ப நன்றி அவருக்கு. (குறுக்கீடு) முன்னாள் சபாநாயகர் திரு பி.எச். பாண்டியன் அவர்கள் பேசவில்லை என்று சொல்லிவிட்டார். அவருக்கும் நன்றி. அடுத்து திரு. எம். அப்துல் லத்தீப் அவர்கள். வேண்டாம் என்று சொல்லுவார்கள் என்று நம்புகிறேன். பேசுவதாக இருந்தால் 2,3 நிமிடங்களில் பேசி முடித்துக்கொள்ள லாம். (குறுக்கீடு)

திரு. எம். அப்துல் லத்தீப்; நான் பேசுவதற்குத் தேவையான நேரத்தை எடுத்துக்கொள்வேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்(திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்): Please take your own time.

Thiru. M. ABDUL LATHEEF : I do not want to trouble the House, if you feel that I should not talk. Deliberately, I am being concerned and my name is being delegated to the background It is not proper. I think it is time for me to protest. If you want, I will not take part in the deliberation at all.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்(திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்): பேசுங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவி அவர்களே,

மாண்புமிகு மாற்றுத் தலைவர்(திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்): தலைவர் என்பது common name. 'தலைவி' என்பது நியாயமல்ல 'தலைவி' என்று சொல்லக்கூடாது.





திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவரவர்களே, வனத் துறையைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் அவையில் வைத்திருக்கிற கொள்கை விளக்க ஏட்டிலே நம்முடைய வனங்களினுடைய பரப்பு, தேசிய அளவுகளைவிட பாதி அளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டிருக் கிறார்கள். 33 சதவிகிதம் வனப் பகுதியாக இருந்தால்தான் நாடு வளம் பெறும் என்பது உலக அளவிலே, தேசிய அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒன்றாகும். அப்படி இருந்தும் நாம் கடந்த 20 ஆண்டுகளாக இதே கொள்கை, இதே அறிவிப்பு என்ற அளவுக்கு இருக்கிறோம். வனத் துறையைப் பற்றி எப்போது பேசுவதாக இருந்தாலும், 33 சதவிகிதம் என்று இல்லாவிட்டாலும், குறைந்த அளவுக்கு 25 சதவிகிதமாவது இந்த 20 ஆண்டுகளில் உயர்ந்திருக்க வேண்டும். இருந்தாலும் அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கோடிக் கணக்கான ரூபாயை நாம் வனப் பெருக்கத்திற்கு, விஸ்தரிப்புக்கு செலவழிக்கிறோம் என்று அந்தத் துறையினர் அறிவிக்கும் நேரத்தில், 20 ஆண்டுகளுக்கு முன்னால் நம்முடைய வனப் பரப்பு எவ்வளவு இருந்ததோ அதே அளவுதான் இப்போதும் இருக்கிறது என்று சொன்னால் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. வனத் துறைக்குச் செலவழிக்கும் பணத்தால் அந்த மரங்கள் முளைக்க மறுக்கின்றனவா? ஏன் என்று தெரியவில்லை. தயவு செய்து அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது, 2, 3 விதங்களில் வன நிலப் பரப்பை பாதுகாக்க முயற்சி செய்ய வேண்டும்.

ஒன்று, திட்டமிட்ட ஒரு காலகெடுவுக்குள்ளாக ஏற்கெனவே வனங்களாக இருந்த பகுதிகளிலே புதிய வனங்களை வளர்த்தாக வேண்டும். அடுத்து, புதிய நிலப் பரப்பில், 'சர்க்கார் தரிசு நிலங்களில், புறம்போக்கு நிலங்களில் இன்றைக்கு திட்டமிடப் பட்டுள்ள சோஷியல் பாரஸ்ட்ரி என்று சொல்லுகிறோமே, அதை விரிவுபடுத்தி, புதிய இடங்களில் வனங்களை ஏற்படுத்த வேண்டும். அடுத்து, இன்றைக்கு 'கூப்புகள்' என்று சொல்லி, கான்ட்ராக்டர்கள் வெட்டுகிறார்கள். அதற்கு ஒரு கால வரையறையைக் குறித்து, 10, 15 ஆண்டுகள் என்று சொல்லி, அந்தக் காலத்தில் மனிதர்கள் மூலமாக தலையில் சுமந்து வந்து மார்க்கெட்டில் விற்கக்கூடிய மக்களுக்குத் தேவையான விறகு களுக்கு வெட்டுவதைத் தவிர வேறு வகையில் 'கூப்புகள்' என்று வெட்டுவது நிறுத்தப்பட வேண்டும். அப்படிச் செய்யாமல் இருந்தால் நிச்சயமாக இன்றைக்கு இருக்கும் காடுகள் மேலும் அழியும். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

(இரவு 8-10)

மனிதர்களைக் கொல்பவர்கள் இருதயம் அற்றவர்கள். அதே நேரத்தில் கூப்பு என்று ஒரு இடத்தில் வாங்கி பல இடங்களில் ஆண்டாண்டு காலமாக மேலோங்கி வளர்ந்திருக்கிற பச்சை மரங்களை எல்லாம் வெட்டுகிறார்களே, அவர்களைவிட மாபாவிகள் யாரும் இருக்க முடியாது. அதற்கு உறுதுணையாக

இருக்கிற அதிகாரிகள் எல்லாம் கடுமையான தண்டனைக்கு ஆளாக்கப்பட வேண்டியவர்கள் என்பதை மட்டும் நான் இங்கே மிகுந்த மனவருத்தத்தோடு சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்போது இருக்கிற ரிசர்வ் பாரஸ்ட்களிலும், ரெவின்யூ பாரஸ்ட்களிலும் இருக்கிறமரங்களையெல்லாம் வெட்டுகிறார்கள். ரெவின்யூ பாரஸ்ட் என்று சொல்லுகிற இடங்களில் உள்ள மரங்கள் வெட்டப்படுவது எந்தவிதமான தடையும் இல்லாமல் நடக்கிறது. மரம் திருட்டுப் போவதைக் கண்டிபிடிப்பதென்பது ஒரு முறையாக இருந்தாலும், அதிகாரிகளே கூட்டு சேர்ந்து கொண்டு மரங்களை எல்லாம் அதிலும் ரெவின்யூ ஃபாரஸ்ட்களில் இருக்கிற மரங்களையெல்லாம் வெட்டி, லாரி லாரியாக வெளி மார்க்கெட்டுக்குக் கொண்டு போய் வெளி மாநிலங்களுக்குக் கொண்டுபோய் விற்கிற கொடுமை நடந்து கொண்டே இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஃபாரஸ்ட் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம் என்று திட்டம் போடுகிறார்கள். அதாவது அந்த இடங்களில் ஆயிரக்கணக்கான ஹெக்டேர் கணக்கில் இருக்கிற மரங்களையெல்லாம் வெட்டி விட்டு, அங்கெல்லாம் புதிதாகச் செடிகளை வைக்கிறார்கள். ஏனென்றால் மரங்கள் விஸ்தரிப்புத் திட்டம் என்கிறார்கள். நன்றாக இருக்கிற மரங்களையெல்லாம் வெட்டிவிட்டு—40, 50 100 ஆண்டுகளுக்கு மேலாக வளர்ந்திருக்கிற மரங்களையெல்லாம் வெட்டிவிட்டு அந்த இடங்களில் புதிதாக மரங்களை வளர்க்கும் சூழ்நிலை இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடுமையாகத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சந்தனத் திருட்டு. சந்தனத் திருட்டை உங்களாலே ஒன்றுமே செய்ய முடியாது. அது எந்த அரசு வந்தாலும் சரி, செய்யமுடியாது. காரணம் சந்தன மணம் எல்லோரையும் ஈர்க்கிறது. என்னுடைய தொகுதியான வாணியம்பாடிக்கு அருகில் வடாற்காடு மாவட்டத்தில்தான் ஜவ்வாது மலைகள் இருக்கின்றன. அங்கே தான் மாநிலத்தில் விளைகிற சந்தமன மரத்தின் 60, 65% சந்தன மரம் விளைகிறது. அங்கே சந்தனத் திருட்டு என்பது பெரிய காட்டேஜ் இன்டஸ்ட்ரி யாக நடந்துகொண்டிருக்கிறது. அங்கே கேட்பதற்கு யாரும் இல்லை. சந்தன மரங்களையெல்லாம் அங்கே திருட்டுத்தனமாக வெட்டுகிறார்கள். அதிகாரிகள் அதற்கெல்லாம் கூட்டாக இருக்கிறார்கள். இப்படி பகிரங்கமாகக் கூட்டுக் கொள்ளை அங்கே நடக்கிறது. ஆகவேதான் சந்தன மரங்கள் இந்த அளவுக்குத் திருட்டு போகின்றது, பெயருக்கு ஒரு குறி வைத்திருக் கிறார்கள். மதுவிலக்கு வழக்குகள் ஒரு மாதத்திற்கு இவ்வளவு பிடிக்க வேண்டும் என்று குறியீடு வைத்திருப்பதைப்போல் சந்தன மரங்களைக் திருடுபவர்களில் ஒரு குறியீட்டை வைத்துக் கொண்டு சிலரைப் பிடிக்கிறார்கள். ஒரு சதவீதம்தான் அப்படிப் பிடிக்கிறார்கள். ஆனால் 90 சதவிதத்திற்கு மேல் அங்கே கூட்டுக் கொள்ளை நடக்கிறது. அதிலே அதிகாரிகளும் கலந்திருக் கிறார்கள் என்று நான் இங்கே பகிரங்கமாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன். இதைத் தடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முறையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



சந்தன மரங்கள் மூலமாக ஜவ்வாது மலைப் பகுதியிலிருந்து கடந்த ஆண்டு மட்டுமே அரசுக்கு ரூ. 15 கோடி வருவாய் வந்திருக்கிறது என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ரூ. 1½ கோடியில் ஒரு சந்தனத் தைலம் மற்றும் சோப்புத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்திருக்கிறீர்கள். அந்தப் பகுதியில் இருக்கிறவர்களுக்கு வேறு தொழிலே இல்லை. வேலை வாய்ப்பும் வேறு இல்லை. அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துகிற அளவுக்கு சந்தனப் பவுடர் தயாரிக்கும் தொழிற் சாலையைத் தொடங்கி நடத்த வேண்டும். எங்களிடமிருந்து ரூ. 15 கோடியை எந்தவிதமான இன்வெஸ்ட்மென்டும் இல்லாமல் எடுத்துப் போகிறீர்கள். அதிலே இருந்து ரூ. 1½ கோடியை மட்டும் இன்வெஸ்ட் செய்கிறீர்கள். மாண்புமிகு திரு. எட்மன்ட் அவர்கள் அமைச்சராக இருக்கிறபோது ஒரு திட்டம் இமியம் பட்டில் அங்கீகரிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் வந்தவர் களால் அந்தத் திட்டம் சின்னாபின்னப்படுத்தப்பட்டு, கையை நீ வைத்துக்கொள், காலை நீ வைத்துக்கொள், தலையை நீ வைத்து கொள் என்று அந்த திட்டம் உருவில்லாமல் செய்து விட்டார்கள். அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்மையிலே பார்வையிட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். எனவே சந்தன மரங்களை மையமாக வைத்து ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துகிற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டம் வகுத்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீட்டு வசதி வாரியத்தைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குடிசை மாற்றுத் திட்டம் என்றெல்லாம்கூட வைத்திருக்கிறீர்கள். நான் கேட்கிறேன். இந்தத் திட்டங்களின் கீழ் வீடுகளை ஒதுக்குவதில் ஒரு முறை இருக்க வேண்டாமா? யார் மீதும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. நான் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறேன். இதுநாள் வரை சென்னையில் இதுவரையில் வாடகை வீட்டில் தான் இருந்து வருகிறேன், சென்னையில் சொந்த வீடு ஏதுமில்லை. ஆனால் இருந்தாலும் நான் சிலருக்கு மட்டும் எப்படி கே.கே. நகரில் ஒரு வீடு, அங்கே ஒரு வீடு, இங்கே ஒரு வீடு என்று வைத்திருக்க முடிகிறது. அவர் களுக்கெல்லாம் எந்த அடிப்படையில் வீடு கொடுக்கிறீர்கள். அவர் களுக்கெல்லாம் எந்த அடிப்படையில் வீட்டு மனை கொடுக் கிறீர்கள். அதற்கெல்லாம் ஒரு திட்டம் வேண்டாமா? ஒரு நெறி வைத்துக் கொள்ள வேண்டாமா?

இன்னொன்று ஜெர்னலிஸம். Journalism is the most important social utility service. Social utility service–க்குள்ளேயே ஜெர்னலிஸம் வருகிறது. பத்திரிகையாளர்கள் உங்களிடத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எங்களிடத்தில் எல்லாம் வந்து சொல்லக் கூடிய அளவுக்கு பத்திரிக்கையாளர்களை நீங்கள் ஆக்க வேண்டுமா? அவர்கள் நம்முடைய காதுகளாகவும், கண்களாகவும் செயல் படக்கூடியவர்கள். கலைஞர் கருணாநிதி நகரில் ஏற்கெனவே ஒரு இடம் சுட்டிக்காட்டப்பட்டு, அவர்களுக்கு நிலம் ஒதுக்கப் பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

அவர்களுக்காவது, ஜெர்னலிஸ்டுகளுக்காவது நீங்கள் கொஞ்சம் பரிவோடு வீடுகளை கொடுக்கின்ற ஒரு முயற்சியை மேற்கொள்ளக் கூடாதா? ஆனால் அமைச்சர் அவர்களே ஒரு பத்திரிகை துறையிலே இருக்கக்கூடியவர்கள்.

Hon. Minister is a reputed Journalist. Not only the Hon. Minister, but also the Hon. Chief Minister is a reputed journalist. Therefore, atleast they will further the cause of their own community and they will come forward to allot house sites as the journalists have already requested under the rules, according to the rules, and as per the rules.— என்று நான் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அதோடு குடிசை மாற்று வாரியத்தில் இல்லை என்று சொல்லி விட்டார்கள், என்னுடைய தொகுதியில் சில இடங்களை சுட்டிக் காட்டி மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கலாம் என்று இருந்தேன். அந்த துறையிலே பேச அனுமதித்தால் பேசிக்கொள்கிறேன் என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஆலயங்கள், எந்த ஆலயங்களாக இருந்தாலும், அந்த ஆலயங்களின் நோக்கம்–அது எந்த மார்க்கத்தை, மதத்தை சேர்ந்த ஆலயங்களாக இருந்தாலும் அவர்களுடைய நோக்கம் மனிதனுடைய அகவியல் துறையை, ஆத்மீகத் துறையை செம்மைப்படுத்த வேண்டுமென்பதுதான். அப்படி ஆத்மீகத் துறையை, அகவியல் துறையை செம்மைப்படுத்த வேண்டுமென்ற நோக்கமே, மனிதனை மனிதாபிமானத்தோடு வாழ வேண்டுமென்ற அடிப்படையில் எல்லா மார்க்கங்களும் போதிக்கும் வகையில் அவர்களுக்குரிய முறையில் வழிபாடுகளை செய்கிறார்கள். அப்படி நம்முடைய நாட்டிலே பெரும்பான்மை மக்கள் வழிபாடு செய்யும் ஆலயங்களை முறையாக நடத்த வேண்டும், முறையாக செயல்படுத்த வேண்டும்; ஆகம விதிகளின்படி அவைகள் எல்லாம் நடத்தப்பட வேண்டும், ஆறுகால பூஜைகள் அங்கே முறையாக நடத்தப்பட வேண்டும். ஆலயங்களில் அகவியல், ஆத்மீக சூழ்நிலை காப்பாற்றப்பட வேண்டும்; லௌகீகமும், அரசியலும் அங்கே போகக்கூடாது என்பது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு உண்மையாகும். அரசுக்கு மார்க்கம் கிடையாது; அரசுக்கு மதமும் கிடையாது. அதே நேரத்தில் நாட்டிலே வாழுகிற பல்வேறு மதத்தை சார்ந்தவர்களை காப்பாற்றுகிற மத உணர்வுகளுக்கு மதிப்பு தருகிற கடமை அரசுக்கு உண்டு. எனவே இன்றைக்கு பெரும்பான்மையான மக்களுடைய ஆலயங்களாக இருக்கிற அந்த ஆலயங்களிலிருந்து, வணங்குகின்ற தெய்வங்களை எல்லாம் நாட்டில் திருடிக்கொண்டு போகிறார்கள் என்று சொன்னால் இதுபற்றி வெளிநாடுகளில் எல்லாம் நம்முடைய நாட்டின், மக்களுடைய ஒழுக்கத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் எண்ணிப் பார்த்தால் மிகுந்த வேதனை ஏற்படுகிறது. கடவுளா மதித்து, கோடிக் கணக்கான மக்களால் வணங்குகின்ற அந்



கடவுள் சிலைகளை எல்லாம் கோவிலிலிருந்து திருடிக்கொண்டு செல்கிறார்கள் என்று சொன்னால் கோடிக் கணக்கான மக்களுடைய மத உணர்வுகளுக்கு தீங்கு விளைவிக்கின்ற அவர்கள் மனித உருவத்தில் இருக்கக்கூடிய மிருகங்கள் என்ற அடிப்படையில் நீங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல், அதுவும் கோவில்களில் திருட்டு நடைபெறுகிறது என்று சொல்வது கூட கேட்பதற்கே வேதனையாக இருக்கிறது. திருவாபரணங்கள் ஆபரணங்கள் என்று சொன்னால்கூட அது தவறு, திருவாபரணங்கள் என்று சொல்கின்ற காரணத்தாலே, அதிலே இன்னொரு 'திரு' வை போட்டு திருட்டு நடத்த வேண்டுமா? தயவுசெய்து நான் கேட்கிறேன். மாரியம்மன் கோவிலிலே திருட்டு தென் திருப்பேரை மகர குழல் காதருடைய கோவிலிலே, அந்தப் பெருமாள் கோவிலிலே எல்லா அணிகலன்களையும் எடுத்துக் கொண்டுபோய் இருக்கிறார்கள் என்று சொன்னால் கடவுள் பொறுமையானவர்; பொறுமையின் எல்லையே அவர்; எனவே அவர் சும்மா இருந்துவிட்டார்; ஆனால் அரசாங்கம் சும்மா இருக்கலாமா? அவர்களைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டாமா? இதுவரையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்று நாடு கேட்கிறது; ஏடு கேட்கிறது. அதை அமைச்சரவர்கள் கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருச்செந்தூர் தொகுதியிலிருந்து தேர்வு செய்யப்பட்டு இருப்பவர். திருச்செந்தூர் என்றாலே அது அறுபடை வீடுகளில் ஒன்றாகும். அது ஒழுக்கம் உள்ளஇடம். அங்கே எழுகின்ற அலைகள் கூட சீராக எழும், அதிலே கூட ஒழுங்கீனம் இருக்காது. கடல் அலைகள் கூட சீராக எழுகின்ற திருத்தலமாக இருக்கின்ற காரணத்தாலே, திரு சீர் அலைவாய் என்ற சிறப்புப் பெயரை பெற்ற காரணத்தாலே. அந்த மண்ணிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். what happened to a murder case of Subramania pillai? இப்போது உங்களுக்கு வாய்ப்பு வந்திருக்கிறது. சுப்பிரமணிய பிள்ளையை யார் கொலை செய்தார்கள்? எதற்காக கொலை செய்தார்கள்? எப்போது கொலை நடந்தது? அந்த கொலையிலே சம்பந்தப்பட்டவர்கள் யார் என்று கண்டு பிடித்து தண்டிக்கக்கூடிய பொறுப்பு திருசீர்அலைவாயை சேர்ந்த தொகுதி மக்களின் பிரதிநிதியாக வந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சாரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இரவு 8-20)

பொதுவாகச் சொல்லும்போது ஏதோ காவிரி நாகரிகம் தான் பெரிய நாகரிகம் என்று சொல்லுவார்கள். 64
சிவாலயங்களை எழுப்பிய மாபெரும் அந்த நாகரிகம் காவிரி நாகரிகம், தமிழகத்தினுடைய தொன்மையான நாகரிகம் என்று சொல்லுவார்கள். அதை யார் சொல்லுவார்கள்; என்று

சொன்னால் தமிழகத்தை அறிந்தவர்கள் சொல்வார்கள் ஆனால் தமிழகத்தினுடைய தொன்மையை அறிந்தவர்கள் அப்படிச் சொல்ல மாட்டார்கள். தமிழகத்தினுடைய நாகரிகத்திலே முதல் நாகரிகம், இன்றைக்கு வரலாறு ஏற்றுக் கொண்டிருக்கின்ற நாகரிகம் பாலாறு நாகரிகம். பாலாற்றிலே இன்றைக்குத் தண்ணீர் இல்லாவிட்டால் அதற்காகப் பாலாறு மறுக்கப்பட வேண்டுமா? பாலாற்று நாகரிகம்—நான் இன்றைக்குச் சொல்கிறேன், வாணியம்பாடி முகத்துவாரத்திலேயிருந்து தோன்றி, காஞ்சிபுரம் வருகின்ற, காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயில் நம்முடைய ஏகாம்பரேஸ்வரர் கோயில், காமாட்சி அம்மன்கோயில், சங்கர மடம், இவைகளைப் பற்றியெல்லாம் காலையிலே பேசிய நம்முடைய அந்தத் தொகுதியினுடைய உறுப்பினரவர்கள் சொன்னார்கள். பாலாற்றையும் சொன்னார்கள். அதே நேரத்திலே வேகவதியையும் சொன்னார்கள். அண்ணா இரண்டு ஆறுகளிலேயும் உட்கார்ந்துதான் தமிழகத்தினுடைய வரலாற்றையே உருவாக்கினார் என்பதையும் மிக வேகமாகவே அவர்கள் சொன்னார்கள்.

சதுரங்கப்பட்டணம் வரையிலே செல்லுகின்ற அகண்ட இந்த பாலாறு வரையிலே பார்க்கும்பொழுது ஆயிரக்கணக்கான சைவ ஸ்தலங்கள், ஆயிரக்கணக்கான வைணவ ஸ்தலங்கள், சாத்த மதத்தைச் சேர்ந்தவைகள், காபாலிக மதத்தைச் சார்ந்தவைகள், வீர சைவ எண்ணத்தை உடையவர்களுடைய மிகப் பெரிய ஸ்தலங்கள், மிகப் பெரிய வரலாற்றுப் பின்னணி உடைய ஸ்தலங்களெல்லாம் இங்கே இருக்கின்றன. வேண்டுமானால், நான் மாண்புமிகு அமைச்சரவர்களை அன்போடு அழைக்கிறேன். தயவுசெய்து வாணியம்பாடிக்கு வாருங்கள். அங்கே ஒரு ஈஸ்வரன் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலிலே குடி கொண்டிருக்கின்ற ஈஸ்வரனுடைய பெயரே அதிதீஸ்வரன்—அதி ஈஸ்வரன்—ஆக அதிதீஸ்வரன்—அதிதிகளையெல்லாம் அழைப்பவன் மட்டுமல்ல; அவனாகவே அதிதியாக வாணியம்பாடிக்கு வந்த இடத்தில், அந்த இடத்தை விட்டுப் போக மனமில்லாமல் இன்றைக்கும் நிரந்தரமான அனந்த அததியாக—அனந்தனாக அல்ல, குமரிஆனந்தனாக அல்ல, அனந்தனாக அங்கே குடி கொண்டு விட்ட அந்த அதிதி ஈஸ்வரனுடைய ஆலயத்தை நீங்கள் வந்து பார்த்தால், அதனுடைய சிலா சாசனங்களைப் பார்த்தால், உள்ளே சென்று மூலவரைப் பார்ப்பதற்கு முந்தியே, உங்களை எதிர் கொண்டு அழைக்கின்ற துவாரபாலகர்களைப் பார்த்தாலே நீங்கள் ஆச்சர்ய முற்று நின்று விடுவீர்கள்.

இந்த நாகரிகம், காவிரி நாகரிகம், பொருனை நாகரிகம், வைகையாற்று நாகரிகத்தையெல்லாம் முந்திய நாகரிகமுடைய இந்த சிலா சாசனங்கள் உங்களுக்கு எடுத்துச் சொல்லும் பாலாற்று நாகரிகம் பழமையான நாகரிகம் என்று.



வாணியம்பாடியிலே இருக்கின்ற சுந்தரப் பெருமாள் கோயிலாக இருந்தாலும் அல்லது அதிதீஸ்வரனாக இருந்தாலும், ஆம்பூரிலே இருக்கின்ற நாகேஸ்வரன் கோயிலாக இருந்தாலும், அல்லது பள்ளிகொண்டாவிலே எப்பொழுதும் பள்ளி கொண்ட பெருமாளாக, அனந்தசயனமாக அங்கே எழுந்தருளியிருக்கின்ற பள்ளிகொண்ட பெருமாளாக இருந்தாலும் அல்லது ஜலகண்டேஸ்வரர், வேலூர் கோயிலிலே ஜலகண்டேஸ்வரர் என்று சொன்னார்கள். அப்படித்தான் அவர் அறியப்படுகிறார். அவர் ஜலகண்டேஸ்வரர் அல்ல; ஸ்வர கண்டேஸ்வரர்—நீலகண்டர் என்று சொல்லுவோம் அல்லவா? அந்த விஷத்தை உண்ட காரணத்தினாலே அவருடைய கண்டத்திலே ஏற்பட்ட அந்த ஸ்வரம்.... அந்த ஸ்வரத்தோடு பக்தர்களுக்கு அவர் காட்சியளிக்கிறார் என்ற காரணத்தினாலே ஸ்வரகண்டேஸ்வரர் என்ற பெயருடைய அந்தத் திருக்கோயில் மிகப் பிரபல்யமான கோயில். அப்படியே வந்தால் காஞ்சி—நகரேஷு காஞ்சி—நம்முடைய தீட்சிதர் அவர்கள் மன்னித்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய ஊரிலே நம்முடைய ஐம்பெரும் லிங்கங்களிலே ஒன்றாக—பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றானது திருவானைக்கா. ஆனால் அது அப்பு லிங்கம். எங்களுடைய மாவட்டத்திலே ஜோதிலிங்கம்—ஜோதி லிங்கமே இருக்கிறது. திருவண்ணாமலையில் ஜோதி லிங்கம். நம்முடைய காஞ்சிபுரத்திலே இருப்பது தான் பிருத்வி லிங்கம். எனவே, நம்முடைய பாலாற்றங்கரையிலே இரண்டு பூதஸ்தலங்கள் இருக்கின்றன. கைலாச நாதர் கோயில் இருக்கிறது. இவைகளையெல்லாம் பார்த்தால் தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவைகளையெல்லாம் முறையாகப் பாதுகாக்க வேண்டும்.

இலர் கேட்கலாம். லத்தீப் கோயிலுடைய பாதுகாப்புக்காக இங்கே வாதாடிக் கொண்டிருக்கிறாரே What is his bonades? என்று கூடக் கேட்கலாம். I am not speaking as Latheef, Iam speaking on behalf of Hindu Constituents who form part of my Constituency. Whatever be their opinion and sentiments I must truly reflect them. என்ற அடிப்படையில் அவர்களுக்கும் நான் ஆற்ற வேண்டிய கடமை இருக்கிறது. எனவே, அந்தக் கடமையை நான் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்.

இரண்டாயிரம் ரூபாய்க்கு அதிகமான வருமானம் உள்ளவர்களுக்கெல்லாம் நாம் இன்றைக்குப் போட்டிருப்பது அது முறையானது அல்ல. இரண்டாயிரம் ரூபாய்க்கு மேலே வருமானமுள்ள கோயில்களுக்குப் பங்களிப்புத் தொகையும், தணிக்கைக் கட்டணமும் நாம் விதிக்கிறோம். வருஷத்திற்கு இரண்டாயிரம் ரூபாய். என்ன அநியாயம் இது? வருஷத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் ஒரு கோயிலுக்கு. ஆறு கால பூஜை நடத்த முடியுமா? ஆராதனை செய்ய முடியுமா? அபிஷேகம் செய்ய முடியுமா? பூஜை புனஸ்காரங்கள் நடக்க முடியுமா? அதே நேரத்திலே அங்கே இருக்கின்ற கோயில் உத்தியோகஸ்தர்களுக்கு நாம் சம்பளத்தைக்

கொடுக்க முடியுமா? அவர்களுக்கு ஏன் பங்களிப்புத் தொகை வசூலிக்க வேண்டும். இந்தத் தொகையை நம்முடைய தணிக்கைத் தொகை கட்டணம் என்று ஏன் வசூலிக்க வேண்டும். இது குறித்து அரசு பரிசீலித்து அரசே ஏதாவது ஒரு Hindu Temples Development Fund என்று ஏதாவது ஏற்படுத்த முடியுமா? அதற்கு கான்ட்ரிபியூஷன் தரமுடியுமா என்ற அளவிற்கு நீங்கள் சிந்தித்துப் பார்த்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மன்னிக்க வேண்டும். நான் உங்களை மிகவும் கஷ்டப்படுத்தி விட்டேன். தலைவராக இருந்தால் அதைப் பற்றி கவலைப்பட மாட்டேன். திருப்பத்தூரில் சந்தன டெப்போவில் தினக்கூலிகளாக பணியாற்றுபவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று அந்தத் தொகுதியைச் சார்ந்த எனது அருமை நண்பர் சுந்தரம் அவர்கள் எனக்கு நினைவு படுத்தினார். ஏற்கனவே சொன்னார், நான் மறந்து விட்டேன். தயவு செய்து அவர்களை—சந்தனம் நாட்டிற்கு அளித்து மனம் மகிழ்விக்கின்ற சூழ்நிலையை உருவாக்குகின்ற—அந்த தினக்கூலிக்காரர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அப்துல் லத்தீப் அவர்கள் சொன்னார், வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோவில் என்று சொல்கிறார்களே, அந்த ஜலகண்டேஸ்வரர் கோவில் இன்றைக்கு சர்க்கார் ஆதிக்கத்தில் வந்து விட்டதா? இல்லை, இன்னும் அந்த பிரைவேட் கம்பெனியின் ஆதிக்கத்தில் இருக்கிறதா என்று கொஞ்சம் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** தனலவர் அவர்களே, இது குறித்து அமைச்சர் தான் சொல்ல வேண்டும். இந்தப் பிரச்சினைகளில் நான் ஜாக்கிரதையாக பேச வேண்டும். இருந்தாலும் நான் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவனாக இருக்கிற காரணத்தால் அதைச் சொல்கிறேன். அது தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு கோவிலாகத்தான் இருந்து வருகிறது. அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தாலும், அங்கே பூஜை நடத்துவதை அரசு தடை செய்யவில்லை. நம்முடைய கடந்த கால கலெக்டராக திரு. கங்கப்பா அவர்கள் இருந்தபோது இந்துப் பெருங்குடி மக்கள் ஊர்வலமாகச் சென்று பூஜை தொடங்கினார்கள். அங்கே ஒரு ஐதீகமும் இருக்கிறது. அதையும் தீட்சிதர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும். அந்தக் கோவிலில் ஆறு கால பூஜை நடத்தப்படக் கூடாது. அப்படி நடத்தினால் அது லோக க்ஷேமத்திற்கு நல்லதல்ல என்பது சாஸ்திர சம்பிரதாய அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். எனவே அது குறித்துத் தான் இந்துப் பெருங்குடி மக்கள் கொஞ்சம் தயங்கு



கிறார்கள். எவ்வளவு தான் அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டாலும் அங்கே ஆறு கால பூஜைக்கு யாரும் வருவதில்லை. இருந்தாலும் பூஜை செய்ய விரும்புகிறவர்கள் வரலாம் என்று தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. தடை செய்யவில்லை. இருந்தாலும் அது தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாகத்தான் இருக்கிறது. ஆனால் பூஜைக்கு எந்தத் தடையும் இல்லை.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே நான் முன்மொழிந்த இந்து சமய அறநிலையத் துறை, வீட்டு வசதித் துறை, வனத் துறை, சிங்கோனா துறை ஆகிய இந்தத் துறைகளுக்காகக் கோரப்பட்ட மானியத்தின்மீது இதுவரையில் பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். நேரம் வெகு நேரம் ஆகி விட்டது. ஆகவே நான் இங்கே நீண்டதொரு உரையை ஆற்றிட விரும்பினாலும் நீங்கள் எல்லாம் விரும்ப மாட்டீர்கள் என்றே கருதுகிறேன். ஆகவே, வெகு விரைவில் ஒரு அரை மணி நேரத்திற்குள்ளாக இந்த 3, 4 துறைகளைப் பற்றி ஓரளவிற்கு என்னுடைய கருத்துக்களைச் சொல்லிவிட்டு, தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்குப் பதிலுரையாக என்னுடைய எண்ணங்களை வெளியிட்டு விட்டு, நான் அமர விரும்புகிறேன்.

முதலாவதாக, அறநிலையத் துறை பற்றி இங்கே எழுப்பப்பட்ட கருத்துக்களுக்கு நான் ஓரளவிற்குப் பதில் கூற விரும்புகிறேன். மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் மிக விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக வேலூர் ஈஸ்வரர் கோவிலைப் பற்றி இங்கே மிகத் தெளிவாக என்னுடைய சார்பிலேகூட தீட்சிதர் அவர்களுடைய வினாவிற்கு அவர்கள் விடை அளித்து இருக்கிறார்கள்.

(இரவு 8–30)

ஒரு கோவில் இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிறது என்றால், அங்கே பூஜைகள் நடத்தக் கூடாது என்பது அர்த்தம் அல்ல. குறிப்பாக எடுத்துக்கொண்டால் தஞ்சை பெரிய கோயில், அங்கே நான் சென்று பார்த்தேன். Department of Archaeology—மத்திய அரசினுடைய அந்தத் துறை மிகப் பாதுகாப்போடு அங்கே உள்ள சிற்பங்களை வைத்து இருக்கிறார்கள். உள்ளபடியே நான் அந்தத் துறையினுடைய பணியினை இங்கே பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். பல்வேறு இடங்களில் இங்கேயுள்ள மகாபலிபுரத்தில் உள்ள சிற்பங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். வேலூர் செல்லக்கூடிய வாய்ப்பு இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை. சென்று பார்த்த பிறகு, அதுபற்றி இங்கே தெளிவாகச் சொல்லமுடியும். இருந்தாலும் கூட, Department of Archaeology-யினுடைய

கட்டுப்பாட்டில் இருந்தாலும்கூட, அங்கே பூஜைகளை நடத்துவதற்கு எந்தவிதமான தடையும் இருக்க முடியாது. அங்கேயுள்ள மக்களாலே ஏதாவது தடை அல்லது கட்டுப்பாடு விதித்துக்கொண்டால் ஒழிய அப்படிப்பட்ட தடையை, மத்திய அரசாங்கமாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, இந்தத் துறையிலே கொண்டு வரமுடியாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

இந்து சமயக் கோவில்களைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் சொன்ன தகவலின்படி, முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே மார்ச் மாதம் 10 ஆம் தேதி என்று நினைக்கிறேன், சமயச் சான்றோர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, கோவில்களிலே நடைபெறுகின்ற முறைகேடுகளை எப்படிக் களைவது, மேலும் எப்படிச் சீரமைப்பது என்ற அளவிலே ஒரு ஆய்வை நடத்தி, அரசுக்கு, இந்தத் துறைக்கு நல்ல பல வழிவகைகளைச் சொல்லுகின்ற வகையில், 5 பேர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து இருப்பது உங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கிறேன். ஆகவே இந்தத் துறையின் மீது அரசுக்கு இருக்கின்ற அக்கறை, இவ்வளவு துரிதகாலத்திலே உடனடியாக இப்படிப்பட்ட ஒரு குழுவை அமைத்து, அதிலேயிருக்கக் கூடிய சீர்கேடுகளைக் களைந்திட வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இருந்தாலும் கூட இங்கே எழுப்பப்பட்ட பல்வேறு கோரிக்கைகளுக்கு எல்லாம் நான் என்னுடைய கருத்துக்களை ஓரளவிற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இங்கே பேசிய ராஜேந்திரன் அவர்கள் ஒரு அரசியல் பிரச்சினையை எழுப்பினார்கள். அதற்கு நான் பதில் சொல்ல ஆரம்பித்தால், இங்கே ஒரு பட்டிமன்றமாக ஆகிவிடும். ஆகவே அரசியல் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு உள்ளே நான் போகவிரும்பவில்லை. இருந்தாலும்கூட, திருச்செந்தூர் கோவிலிலே கொலை நடைபெற்றது என்பது உண்மை. அதற்குப் பிறகு அந்த அரசாலே ஒரு கமிஷன் ஏற்படுத்தப்பட்டு—பால் கமிஷன்— அந்தக் கமிஷனும் அறிக்கை தந்துவிட்டது. அது தற்கொலையாகவே இருக்கமுடியாது என்ற ஒரு அறிக்கையை, பால் கமிஷன் தந்திருக்கிறது. இங்கே என்னுடைய கையிலே அந்த அறிக்கையினுடைய நகல் இருக்கிறது. படித்துப் பார்த்தேன். அந்த அறிக்கை தரப்பட்ட பிறகும் அந்த அரசு இது சம்பந்தமாக மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. அதுதான் இங்கே உள்ள குறைபாடு. தற்கொலை அல்ல, வேறுவிதமாகத்தான் அந்தக் கொலை நடந்து இருக்கிறது, அந்தச் சூழ்நிலையை ஆராய்வதற்காகத்தான் அந்தக் கமிஷன் போடப்பட்டது. அதற்கான சூழ்நிலை என்ன என்பதை அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகும் அரசு—நான் நினைக்



கிறேன்-அந்த நேரத்திலே இதுபற்றி கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருந்தாலும்கூட, இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே இதுபற்றி இன்னும் ஆய்ந்து பார்த்து, இந்த அரசு கோவில்களிலே யார் தவறு செய்தாலும், யாரையும் சும்மாவிடப் போவதில்லை என்ற அறிவிப்பை நான் இந்த நேரத்திலே அத்தனை பேர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அங்கே மட்டுமல்ல. ஸ்ரீரங்கம் கோயில் பற்றிச் சொன்னார்கள். வெங்கடாசலம் பற்றி, அந்த ஃபைல்கூட இங்கே தான் இருக்கிறது. அப்படிப்பட்ட காலங்களிலே நாம் இந்தத் துறையைச் சார்ந்தவர்களிடத்திலே எந்த அறிக்கையைக் கேட்டாலும், உண்மைக்குப் புறம்பாகத் தெரிவிக்கக் கூடிய நிலையில்— ஏனென்றால் அங்கே இருப்பவர்கள் பலர் அத்தோடு சம்பந்தப்பட்டிருப்பார்கள். அவர்களிடத்திலே மேலும் மேலும் அந்த ஃபைலை புரட்டிப் பார்த்தால், வெங்கடாசலத்திற்கு என்ன நடந்தது என்று அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் அங்கேயிருந்த அதிகாரிகளிடத்திலே கேட்டிருந்தார்கள். அவர்களுடைய பதில் எப்படி இருக்கும்? ஆகவே சுப்பிரமணிய பிள்ளை கொலை பற்றியும், அதுபோன்று திருவரங்கத்தில் நடைபெற்ற வெங்கடாசலம் கொலை பற்றியும் நிச்சயமாக, தீவிரமாக போலீஸ் புலன் விசாரணை நடைபெற்று, அதிலே குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, உரிய முறையில் தண்டிக்கப்படுவார்கள் என்ற அந்த உறுதிமொழியை இந்த நேரத்தில் நான் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுபோன்று இங்கே பேசிய மதிப்புமிகு உறுப்பினர் தீட்சிதர் அவர்கள் ஜீயர் பற்றிச் சொன்னார்கள். நான் கூட ஆச்சரியப்பட்டு விட்டேன். அங்கேயிருக்கக் கூடிய அந்த மடாதிபதி ஜீயர் அவர்களை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள் என்ற அளவிற்கு நான் ஆச்சரியப்பட்டேன். ஆனால் எனக்குத் தரப்பட்டிருக்கின்ற தகவல் நாராயண ஜீயர் 'டெம்பிள் எம்ப்ளாயி'. அந்த ஆலயத்திலே பணி புரிந்த ஊழியரைத்தான் டிஸ்மிஸ் செய்ததாக எனக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். (குறுக்கீடு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அரசு அந்த ஜீயரை எம்ப்ளாயியாகப் பாவித்து, வெளியேற்றினார்களே ஒழிய, அந்த வருந்தத்தக்க எம்ப்ளாயி, அந்த ரங்கநாதசாமியுடைய கூடவே பிறந்த உள்துறை ஜீயர் என்று நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்த தகவலுக்கு நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்தத் துறையிலே யாராக இருந்தாலும் சரி, எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் சரி, பல மட்டங்களிலே தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு நான் தவறாகச் சொல்கிறேன் என்று கருதக் கூடாது. அந்தக் கோயிலிலே, திருவரங்கம் கோயிலிலே

திருப்பணி நடைபெற்றது. தெற்கு கோபுரம் என்று நான் நினைக்கிறேன். அந்தக் கோபுரப் பணிகளை முன் நின்று நடத்தியவர், நான் குற்றச்சாட்டாகச் சொல்வதாக நினைக்க வேண்டாம், இன்னும் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு அனுமதிக்கவில்லை. எவ்வளவு வசூலானது என்ற விவரம் தெரியாது. கோபுரத்திற்காக எவ்வளவு செலவிடப்பட்டது என்பதற்கு விவரம் கிடையாது. இன்னும் அந்த விவரங்கள் அறநிலையத் துறைக்குத் தரப்படவில்லை. இப்படிப் பல மட்டங்களிலே இருக்கின்றன. நான் யாருடைய மனதையும் புண்படுத்துவதாகக் கருதிட வேண்டாம். ஆனால் இந்தத் துறையிலே நடைபெறுகின்ற காரியங்கள் எல்லாம் சரியானது தான் என்று நான் வாதிடவில்லை. (குறுக்கீடு)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: சபாநாயகர் அவர்களே, அந்த ராஜ கோபுர திருப்பணி வரவு-செலவுக் கணக்கு, பொருளாதாரத்தை வைத்திருப்பவர் அந்த எக்சிகியூடிவ் ஆபிசர் தான். தனிப்பட்ட முறையில் பண வரவு-செலவு எல்லாவற்றையும் வைத்திருப்பவர் அந்த எக்சிசியூடிவ் ஆபீசர் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்களும் வேறு ஒன்றும் சொல்லவில்லை. இன்னும் கணக்குத் தரப்படவில்லை என்று தான் அவர்கள் சொல்கிறார்கள். நம்முடைய தீட்சிதர் அவர்கள் இதில் கொஞ்சம் முயற்சி எடுத்து, அந்தக் கணக்குகளைக் காலா காலத்தில் ஒப்படைக்கச் சொன்னால் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: எது எப்படியாக இருந்தாலும் சரி, எக்சிகியூடிவ் ஆபிசராக இருந்தால், இந்த அறநிலையத் துறை கேட்கின்றபோது அவர் அந்தக் கணக்குகளைக் கொடுக்க மறுக்க முடியாது ஆகவே கணக்கு தரப்படவில்லை என்றால், அது வேறு ஏதாவது இடத்திலே இருந்தாலும் — நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை, உள்ள நிலவரத்தைப் பற்றிச் சொல்கிறேன்.

அதுபோன்று கோயில் நிலங்களைப் பற்றிச் சொல்கிறோமே, இன்றைக்கு ஒரு புறத்திலே இந்த நிர்வாகத்தைத் தனி ஒரு வாரியமாக அமைத்து, மடாதிபதிகள் கையில் ஒப்படைத்து விடலாம் என்ற ஒரு கோரிக்கை இருப்பது இங்கே உள்ள அனைவருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். ஆனால் நான் கூட பதவி ஏற்ற பிறகு, காஞ்சிபுரத்திற்குச் சென்ற போது, அங்கே சங்கர மடத்திற்குச் சென்று பெரியவரைச் சந்தித்தேன். பல மணி நேரம், ஏறத்தாழ 2½ மணி நேரம் உட்கார்ந்து, இந்தத் துறையைப் பற்றி, கோயில்கள் பற்றி, மடங்களைப் பற்றி ஆலோசனைகளை நடத்தினோம். அவர் கூட என்னுடைய கருத்தை ஏற்றுக்கொண்டார். ஒரு புறத்திலே ஆங்காங்கே இருக்கக் கூடிய மடாதிபதிகளிடம் இந்தக் கோயில் நிர்வாகத்தை ஒப்படைத்து விட வேண்டுமென்று கேட்டுக் கொண்டாலும் கூட இந்து சமய சான்றோர்கள் மாநாடுகள் நடந்ததே அப்போது கூட, அதற்கு



முன்பாக பல மடாதிபதிகள் ஒன்றுகூடி, ஒரு கருத்தை உருவாக்கி, சங்கர மடத்திலே இருக்கக் கூடிய பெரியவர் மூலமாக அரசுக்கு அந்தச் செய்தியை அனுப்பினால், ஓரளவிற்கு அரசு ஏற்றுக் கொள்ளும் என்ற விதத்திலே அவர்கள் எல்லோரும் ஒன்று கூடி பெரியவரைச் சொல்ல வைத்தார்கள். என்னிடத்திலே அவர் சொன்னார். நானும் அவரிடம் மனந்திறந்து பேசினேன். அத்தனை மடாதிபதிகளும் ஒழுங்கானவர்களாக இருந்தால் நான் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இருக்கிற நிலைமை அப்படி இல்லையே என்று சொல்லுகிறபோது அவர்களும் புன்முறுவலோடு அதை ஏற்றுக் கொண்டார்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் நான் இங்கே இந்தத் துறை முழுமையாக சரியாகச் செயல்படுகிறது என்று வாதிட விரும்பவில்லை. துறையிலும் பல குறைகள் இருக்கின்றன, அதே நேரத்திலே ஊழியர்கள் எல்லாம்—44 ஆயிரம் ஊழியர்கள் இருக்கிறார்கள், மேல் நிலையிலே ஒரு நாலாயிரம் ஊழியர்கள் இருக்கிறார்கள். இப்படி மொத்தமாக இருக்கிற அத்தனை பேரும் ஒழுங்காக வேலை செய்கிறார்களா என்று சொன்னால் அதையும் நான் முழுவதுமாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

(இரவு 8-40)

மடத்திலே இருக்கிற மடாதிபதிகள் அத்தனை பேரும் – சிலர் இருக்கிறார்கள். பெரியவர்கள் இருக்கிறார்கள். உண்மையிலேயே பக்தியோடு, கோவில் நிலங்களிலே கை வைக்கக் கூடாது, வைத்தால் நல்லது அல்ல என்ற உணர்வோடு இருக்கக்கூடிய பெரியவர்களும் இருக்கிறார்கள். அதே சமயத்திலே 5 ஏக்கர் நிலத்தை விற்க வேண்டுமென்று அனுமதி வாங்கிக் கொண்டு—நிலத்தை விற்க வேண்டுமானால் துறையினுடைய அனுமதியோடுதான் விற்க முடியும். 5 ஏக்கர் நிலத்தை விற்க வேண்டுமென்று அனுமதி வாங்கிக் கொண்டு 100, 200, 500 ஏக்கர் நிலங்களை விற்ற மடாதிபதிகளும் இருக்கிறார்கள். ஆகவே தான் நான் சொல்கிறேன், யாரையும் நான் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை, யாரையும் நான் முழுமையாகக் குறை சொல்லவும் விரும்பவில்லை.

ஆனால் கோவிலைப் பொறுத்தமட்டில் நான் இந்தத் துறையில் பொறுப்பு வகிக்கின்ற காலக் கட்டத்தில் என்னால் முடிந்த வரையில் எவ்வளவு ஒழுங்கினை அங்கே ஏற்படுத்த முடியுமோ, புகுத்த முடியுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்வேன் என்ற உறுதி மொழியை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காஞ்சிபுரத்திலே, காஞ்சிபுரத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. முருகேசன் என்று நினைக்கிறேன். அவர் நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு ஒரு மனுவை எடுத்துக் கொண்டு வந்தார்கள். அங்கே இருக்கக் கூடிய 16, 17 ஏக்கர் நிலத்தைப் பங்கு போட்டு விற்க முயற்சிக்கிறார்கள் என்று ஒரு மனுவை

என்னிடத்திலே கொண்டு வந்து கொடுத்தார்கள். இந்த முறையில் அங்கே இருக்கக்கூடிய இ. ஓ., அங்கே இருக்கக்கூடிய அசிஸ்டெண்ட் கமிஷனர்,—ஏ. சி.,—அதற்கு மேலாக காஞ்சிபுரத்தை நிர்வகிக்கக் கூடிய சென்னையிலே இருக்கக்கூடிய டெபுடி கமிஷனர்,—டி. சி.—இந்த மூன்று பேருமாகச் சேர்ந்து 16 ஏக்கர், நிலத்தை அவர்களின் விதிகளுக்கு உட்பட்டு, அவர்கள் எந்த முறையிலே செய்ய முடியுமோ அந்த வகையிலே தனியார்களுக்குப் பட்டா போட்டுக் கொடுத்தார்கள் என்று சொல்ல முடியாது—அவர்கள் அனுபவிக்கக் கூடிய வகையிலே அதைப் பிரித்து பிளாட் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஏப்ரல் மாதத்திலே நாங்கள் பதவிக்கு வந்த பிறகே இங்கே உள்ள டி. சி., அதில் கையெழுத்து இட்டிருக்கிறார்கள்.

நான் அந்த மனு வந்த பிறகு துறை ஆணையாளரிடத்திலே கொடுத்து என்ன என்று விசாரித்து எனக்குத் தகவல் தரவேண்டும் என்று கேட்டிருந்தேன். அவர்களும் விசாரித்துத் தகவல்கள் சேகரித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு துறையிலே இருந்து வந்த தகவல் ஓரளவு சரியாக இருக்குமா என்ற எண்ணத்தோடு நான் காஞ்சிபுரத்திற்குச் சென்றிருந்தபோது அங்கே மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து அவரிடத்திலே சொல்லி, அதைப் பற்றித் தனியாக விசாரித்து எனக்குத் தகவல் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவருடைய அறிக்கையும் வந்திருக்கிறது. முழுக்க முழுக்கத் தவறு நடந்திருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய இ. ஓ., அங்கே இருக்கக் கூடிய அசிஸ்டெண்ட் கமிஷனர், அதே நேரத்திலே இங்கே இருந்த— இன்றைக்கு அவர் இங்கே சென்னையிலே இல்லை, இங்கேயிருந்து வேறு இடத்திற்கு மாறுதலில் சென்றிருக்கிறார், அவர்கூட சேர்ந்து 16 ஏக்கர் நிலம் காஞ்சிபுரம் நகர எல்லைக்குள்ளே, விலை மதிப்புள்ள நிலம், அதைப் பங்கு போட்டு பிளாட்டுகளாக அனுபவிக்கிற ஒரு பாத்தியதையை மற்றவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். எனக்கு வந்த தகவல் அந்த நேரத்திலே முந்தைய ஆட்சிக் காலத்திலே ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் கூட இதிலே சேர்ந்திருக்கிறார் என்ற தகவல் எனக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வந்திருக்கிறது நான் யாரையும் தனிப்பட்ட முறையிலே குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. அவையெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வளவு அதிகமான கண்டிப்போடு ஒழுங்காக இருங்கள் என்று சொன்ன பிறகும் கூட, We have to assure that the people have a clean Government என்று சொல்லிச் சொல்லி, என்னை அதிகாரிகள் சந்திக்கிறபோது எல்லாம் அந்தத் தாரக மந்திரத்தை அவர்களுக்கு எடுத்துச் சொன்ன பிறகும் கூட, அதே டி. சி., யை நான் பலமுறை நேரிலே சந்தித்த போதுகூடச் சொல்லியிருக்கிறேன். சென்னையிலே அவர் பல முறை என்னைச் சந்தித்திருக்கிறார்கள். அவரிடத்திலே பல முறை சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகும் கூட பிப்ரவரி மாதத்திலே நாங்கள் பதவிக்கு வந்த பிறகு அவர் கையெழுத்திட்டு அந்த நிலங்கள் கைமாற்றப்



பட்டு இருக்கின்றன என்றால் இன்னும் இதற்கு முன்பு எத்தகைய முறைகேடுகள் அங்கே இருந்திருக்கக்கூடும் என்பதை நீங்கள் எல்லாம் யூகித்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த அதிகாரிகளை தி டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் அண்டு ஆண்டி கரப்ஷன் அவர்களுடைய விசாரணைக்குட்படுத்தி இருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட தவறுகள் எங்கே நடந்தாலும் அதை இந்த அரசு நிச்சயமாகக் கண்டிக்கும், தடுக்கும் என்ற உறுதிமொழியை இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதே போல கோவில் ஊழியர்களுடைய ஊதியத்தைப் பற்றி இங்கே உறுப்பினர்கள் பேசினார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே மிகக் குறைந்த நிலையில் இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இத்தனை ஆண்டுக்காலம் அது கவனிக்கப்படாமல் இருந்தது, இப்போது அது என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. நிச்சயமாக அதைப் பரிசீலனை செய்து எந்த அளவிற்கு அந்த ஊதியத்தை மற்றைய பகுதிகளிலே இருக்கக்கூடிய ஆலய ஊழியர்களுக்குச் சமமாகவாவது கொடுக்க வேண்டிய முறையிலே நாங்கள் அதை ஆய்வு செய்து முடிவு எடுப்போம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற இடங்களில்— பெரியசாமி என்று நினைக்கிறேன். அவர் தந்தை பெரியாரிலிருந்து ஆரம்பித்து எங்கேயோ போவார் என்று நினைத்தேன். ஆனால் கோவில் பற்றியே, கோவில் ஊழியர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். கோவில் ஊழியர்களைப் பொறுத்தமட்டிலே அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை சரிதானா இல்லையா என்பதை நாம் சிந்தித்துப் பார்த்துத்தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

அரசியல், மதம் சார்பற்ற முறையிலே ஆட்சி நடைபெறுகின்ற ஒரு நாட்டிலே ஏதோ இந்து மதத்தைப் பொறுத்தமட்டிலே அது பெரும்பான்மை மக்களால் பின்பற்றப்படுகின்ற ஒரு மதம். இங்கே கோவில்களுக்கு அதிகப்படியான சொத்துக்கள், நிலங்கள் இருக்கின்றன என்ற ஒரு காரணத்திற்காக ஒரு கால கட்டத்திலே அந்தச் சொத்துக்கள், நிலங்கள், கோவில்கள் அரசினுடைய கட்டுப்பாடுகளுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆனால் ஆங்காங்கே பணி புரிகின்ற அத்தனை ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதைப் பலர் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு ஊரிலும்—ஒரு கிராமத்திலே பார்த்தால் 10 கோவில்கள் இருக்கும். இங்கே சொன்னார்கள், 2000 ரூபாய் வரக்கூடிய கோயிலுக்குக் கூட அந்தக் கட்டணம் வசூல் செய்ய வேண்டுமா என்று கேட்டார்கள். நியாயமான கேள்வி. நானும் அதைப்பற்றி சிந்தித்துக்கொண்டு தான் இருக்கிறேன். ஏன் சிறிய கோயில்களை எல்லாம் நாம் நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைக்க

வேண்டும் என்று எனக்கே அது தெரியவில்லை. ஆகவே அதைப் பற்றி நாம் பரிசீலனை செய்து முடிவு செய்வோம். ஆனால் அத்தனை கோவில்களிலும் உள்ள வருவாய் மொத்தமாக 40 சதவீதம் என்று சொன்னால் அந்தத் தொகையை மொத்தக் கணக்கிலே கொண்டு வந்து அந்த நிதியிலிருந்து அத்தனை கோவில்களுக்கும் அத்தனை கோவிலில் உள்ள ஊழியர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் அல்லது ஊதியத்தை ஒரே சீராக ஆக்கிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையைக்கூட என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் கோவில்கள் உருவாகிக்கொண்டே இருக்கும் ஒவ்வொரு ஊரிலும் ஆங்காங்கு இருக்கக்கூடிய பெரியவர்கள் அந்தப் பகுதியிலே வாழ்கின்றவர்கள் தான் அந்தக் கோயிலைப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் அந்தக் கோயிலுடைய வருமானத்தை வைத்து. பழனி கோயிலிலே 6 கோடி 8 கோடி வருமானம் இருக்கிறது என்று சொல்லி திருச்செந்தூர் கோயிலிலே 1 கோடிக்கு மேல் வருமானம் இருக்கிறது என்று சொல்லி, இந்தப் பணத்தை எல்லாம் சேர்த்து ஒரு கிராமத்திலே இருக்கக்கூடிய கோயிலுக்கு உள்ள ஊழியர்களுக்கும் கொடுக்கக்கூடிய அளவிற்குப் பொது நிதியாக 40 சதவீதத்தைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்வதையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்த ஆலய ஊழியர்களுடைய ஊதியம் சீராக்கப்பட வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆங்காங்கு இருக்கக்கூடிய கோவில்களுடைய வருவாயிலிருந்து எவ்வளவு கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு அந்த ஆலய ஊழியர்களுக்கு வருவாய் சீராக்கப்பட வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். அவர்களுடைய கோரிக்கை கோவில்களுடைய முதுநிலை ஊழியர்கள் ஏறத்தாழ 20 கோயில்கள்—பெரிய கோவில்கள் அங்கே பணிபுரிகின்ற ஏறத்தாழ 4,000 ஊழியர்கள் ஐந்து கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை நம்முடைய முதல்வர் அவர்கள் பரிவோடு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறார்கள். ஏற்கனவே தேர்தல் காலத்தில் திருச்செந்தூர் வந்தபோது தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலே அந்தக் கோரிக்கைகள் அவர்கள் முன்பாக வைக்கப்பட்டு பரிவோடு கவனிக்கப்படும், அந்தக் கோரிக்கைகள் மீது ஆவன செய்யப்படும் என்ற உறுதிமொழியைக் கொடுத்திருக்கிறார்கள்.

(இரவு 8-50)

நானும்கூட ஒவ்வொன்றாக, அதை முழுமையாக பார்த்ததில்—அங்கே அரசு ஊழியர் ஆக்கவேண்டும் என்று அந்த ஐந்து கோரிக்கைகளிலே ஒரு கோரிக்கை கூட இல்லை, அரசு ஊழியர்களுக்குச் சமமாக எங்களுக்கு ஊதியம் தர வேண்டும் என்று கேட்கிறார்களே தவிர, அரசு ஊழியர்கள் ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை, அந்த ஐந்து கோரிக்கைகளில் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும் ஒன்றிரண்டு கோரிக்கைகளை



நாங்கள் ஏற்றுக்கொள்வதாக இருக்கிறோம். நான் இங்கே வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை. இருந்தாலும்கூட, பரிவோடு இவைகளை நாங்கள் கவனிக்கிறோம். மீதியுள்ள கோரிக்கைகளைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்கு, ஆய்வு செய்வதற்கு, ஒரு குழு, இரண்டு அல்லது மூன்று அதிகாரிகள் கொண்ட மேல்மட்ட அதிகாரிகள் கொண்ட குழு நியமிக்கப்படும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் இப்படிக் கோயில் ஊழியர்களுடைய ஊதியத்தைச் சீராக்கிக் கொடுக்க வேண்டும், அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் அந்த ஊழியர்கள் எல்லாம் கோயில் நிர்வாகத்திலே நல்ல முறையிலே பணிபுரிய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் திருச்செந்தூர் கோயிலே என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அங்கே பணி புரிகின்ற ஒரு ஊழியர்—பெயரை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. தெரிவிக்க வேண்டாம் என்று நினைக்கிறேன்—பெரிய கோயில்கள் 20 கோயில்களிலே பணிபுரிகின்ற 4,000 ஊழியர்களிலே ஒருவர், இரவு நேரத்திலே அந்தக் கோயிலுக்கு வந்த ஒரு பெண்ணைத் தனியாக ஒரு இடத்திற்கு, அந்தக் கோயிலைச் சுற்றியுள்ள ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றுக் கற்பழித்து இருக்கிறார் என்ற புகார் வந்திருக்கிறது. போலீசில் புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது. எப்படி இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் நாம் சகித்துக்கொள்வது? ஊழியர்களுடைய ஊதியத்தைப் பற்றி நாம் பேசுகிறோம். அதே சமயத்தில் அவர்கள் மத்தியிலே இருக்கக்கூடிய ஒரு கண்ணியம், அவர்கள் மத்தியிலே இருக்கக்கூடிய ஒரு கடமையுணர்வு, இவைகளைப் பற்றியும் நாம் இங்கே வற்புறுத்திப் பேசியாக வேண்டும் என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட தவறுகள் எந்த நாட்டிலேயும் நடைபெறக் கூடாது. ஆனால் அதிலும் குறிப்பாக, கோயில் வளாகங்களிலே இப்படிப்பட்ட முறைகேடுகள், இப்படிப்பட்ட தவறுகள், நடைபெறக்கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கோயில்களினுடைய வருமானத்தைப் பெருக்கவேண்டும் என்ற அளவிலே இங்கே பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. இங்கே கோயில்களுக்குத் தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 6 இலட்சம் ஏக்கர் நிலங்கள், அதில் இரண்டு இலட்சத்திற்கும் மேல் நஞ்சை நிலங்கள் இருந்தாலும்கூட, அந்த வருவாயிலே இருந்து குத்தகைதாரர்கள் இருபத்தைந்து சதவிகிதம்தான் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிலை இருந்தாலும்கூட, அதைக் கூட சரியாகக் கொடுக்காதபடிதான் இருக்கிறார்கள், அதற்குக் காரணம் என்ன என்பதை அந்தக் குழு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இங்கே அந்தச் சான்றோர்கள் மாநாட்டில்

ஒரு பெரியவர் எடுத்துச் சொன்னார், அந்த நிலங்கள் எல்லாம் மற்றவர்கள் நினைப்பதைப் போல் உழுபவர்களிடத்தில் இல்லை. இரண்டு ஏக்கர் மூன்று ஏக்கர் என்று உழுபவர்களிடத்திலே நிலம் இருந்தால் அந்த 25 சதவிகித வருவாயை அவர்கள் ஒழுங்காகக் கொடுத்துவிடுவார்கள். ஆனால் பெரியதனக்காரர்கள் இடத்திலே இவைகள் எல்லாம் இருந்து கொண்டு இருக்கின்றன என்பதை அங்கே அவர் தெளிவாக எடுத்துச் சொன்னார். இங்கே கூட இந்த வெட்டுத் தீர்மானத்தில் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள், கோயில் நிலங்கள் எல்லாம் பெரியதனக்காரர்களிடத்திலே சிக்கிக் கொண்டிருக்கின்றன என்று.

இங்கே அந்தச் சட்டப்படி ஒருவருக்கு நஞ்சை நிலமாக இருந்தால் 3 ஏக்கர் அல்லது 5 ஏக்கருக்கு உள்ளாக இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தாலும்கூட, ஒருவரே தன்னுடைய மகன் தன்னுடைய பிள்ளை, தன்னுடைய வேலைக்காரர்கள், தன்னைச்சேர்ந்தவர்கள், உறவினர்கள், தெரிந்தவர்கள் அத்தனைபேர் பெயரிலும் போட்டு, 40, 50 ஏக்கர் வைத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அவர்கள் தானாக அந்த நிலத்தில் உழுது பயிரிடாமல் வேலைக்காரர்களை வைத்து, விவசாயிகளை வைத்துக்கொண்டு அந்த வேலைகளைச் செய்வதனால் தான் அவர்களுக்கும் கொடுத்து, அவர்களிடத்தில் இவர்கள் கொஞ்சம் பெற்று, அதற்குப் பிறகு இவர்கள் கோயிலுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்க முடியாமல் இருந்து கொண்டுஇருப்பதை நான் அறிகிறேன்.

ஆகவே, எப்படிப்பட்ட சீர்திருத்தத்தை இங்கே செய்யவேண்டும் என்று நினைத்தாலுங்கூட, இங்கேகூட ஒரு முறை பேசிய கோயில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் கேரளாவிலே இந்தக் கோயில் நிலங்களை எல்லாம் எடுத்து விவசாயிகளுக்குக் கொடுத்துவிட்டார்கள். ஆகவே, இங்கே கூட, அப்படிச் செய்யலாம் என்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இப்போது அப்படிப்பட்ட கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமையில் இல்லை. அங்கேயும் நான் கேட்டுப் பார்த்தேன். கோயில் நிலத்தை அப்படி எடுத்துக் கொடுத்த பிறகு அங்கே உள்ள நிலைமைகள் என்ன என்று கேட்டேன். ஏதோ அந்த நேரத்திலே கொஞ்சம் பணம் வந்தது. ஆனால் இன்றைக்கு ஒரு பத்து ஆண்டுகளுக்கு இருந்த பணத்தினுடைய மதிப்பு என்ன, இப்போது அந்தப் பணத்தினுடைய மதிப்பு என்ன, 10 ஆண்டுகளுக்கு முன்புநிலத்தினுடைய மதிப்பு என்ன, இப்போது அந்த நிலத்தினுடைய மதிப்பு என்ன என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்கும் போது, நிச்சயமாக, கோயில் நிலங்களை எடுத்து இவ்வளவு தாராளமாக அத்தனை பேருக்கும் கொடுத்துவிட முடியாது என்ற கருத்தினை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அதேபோல் திருவண்ணாமலை கோவிலைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். திருவண்ணாமலை கோவில் இவ்வளவு பெரிய கோவிலாக இருந்தாலும் சரியான முறையில்—மாண்புமிகு லத்தீப் அவர்கள் எடுத்துச் சொல்லியது போல்—ஆறுகால பூஜை அங்கே நடப்பதற்குப் பணம் இல்லை. பெரிய கோவில், கார்த்திகை தீபம், தமிழ்நாடு முழுவதும் தெரியக்கூடிய அளவுக்கு அவ்வளவு சிறப்பாக அங்கே கொண்டாடப்படுகிறது. இருந்தாலும் கூட பண வசதி இல்லை. அந்தக் கோவிலைச் சார்ந்தவர்கள் என்னை வந்து பார்த்தார்கள். சென்னையில் 300 கிரவுண்டு நிலம் அந்த கோவிலுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அவர்களுடைய கோரிக்கை அந்த நிலத்தை விற்றுப் பணமாக எங்களுக்குக் கொடுத்து விடுங்கள்; அந்தப் பணத்தை நாங்கள் வங்கியில் போட்டுக் கொண்டு அதிலிருந்து வரும் வட்டியை வைத்து பூஜையை நன்றாக நடத்துகிறோம் என்று சொன்னார்கள். நான் சொன்னேன், அந்த கோரிக்கையை ஏற்க முடியாது என்று சொல்லி அனுப்பினேன். என்னுடைய கருத்து எல்லாம் இப்படிப்பட்ட நிலங்களை நாம் கண்டுபிடித்து, எங்கே இருக்கிறது என்று எனக்கே ஓரளவுக்குத் தெரியும், அந்த கோவிலைச் சார்ந்த நிலங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்று ஓரளவு எனக்கு முன்பே தெரியும். அப்படிப்பட்ட இடங்கள் எல்லாம் வேக்கண்ட்டு லேண்டாக இருக்கிறது. அங்கே எந்தவிதமான கட்டிடங்களும் எழுப்பப்படாத நிலங்கள் கபாலீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. திருவண்ணாமலை கோவிலைச் சார்ந்த நிலங்கள் சென்னையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட கோவிலுக்குச் சொந்தமான இடங்களில் எல்லாம் ஏதாவது நிதி வசதியைப் பெற்று கட்டிடங்களை எழுப்பி அந்தக் கட்டிடங்கள் மூலமாக வரக் கூடிய வருமானத்தை கோவிலுக்குக் கொடுத்து விட்டால் நிச்சயமாக ஆறுகால பூஜை என்ன 10 கால பூஜையை கூட அங்கே நடத்த முடியும். ஆகவே, இப்படிப்பட்ட வழிவகைகளை நாங்கள் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏன் என்றால் சென்னையில் வீட்டு வசதி வாரியம் எவ்வளவுதான் வீடுகள் கட்டிக் கொடுத்தாலும் கூட இன்னும் அரசு அதிகாரிகள் மத்தியில் இருந்து கூட வாடகைக்கு வீடுகள் வேண்டும் என்று மனுக்கள் ஏறத்தாழ ஆயிரம் மனுக்கள் இன்னும் நிலுவையில் இருக்கின்றன. அந்த அளவுக்கு வீடுகளைக் கட்டக்கூடிய திட்டம் வீட்டு வசதி வாரியத்திடம் இல்லை. ஆகவே நான் சொல்லியிருக்கிறேன் கோவில் நிலத்தை விற்க முடியாது; ஆனால், கோவில் நிலத்தில் வீடுகள் கட்டி இங்கே சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய கோவில் நிலங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டி கோவில் பொறுப்பிலே விட்டுவிட்டு, வாடகைக்கு விட்டு, வாடகைக்கு வீடுகளைக் கேட்பவர்களுக்கு மட்டும், ஹையர் பர்சேஸ்க்கு அல்ல, வாடகைக்குக் கேட்பவர்களுக்கு மட்டும் வீடுகளை கொடுக்கக்கூடிய முறையில் கோவில் நிலங்களில் இங்கே வீடுகள் கட்டலாம்; வீடுகள் மட்டும் அல்ல, ஷாப்பிங் காம்பிளக்ஸ்

கட்டலாம்; ஷாப்பிங் காம்பிளக்ஸ் மட்டும் அல்ல, திருமண மண்டபம் கட்டலாம். இப்படிப்பட்ட முறைகளில் கோவில்களினுடைய வருமானத்தை நாம் அதிகரிக்கலாம் என்ற அளவில் நாங்கள் முடிவு எடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நான் வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி என்னுடைய பதிலுரையைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வீட்டு வசதி வாரிய மானியக் கோரிக்கையைப் பொறுத்த வரையில் எம்.எம்.டி.ஏ. அர்பன் டெவலப்மெண்டு மாண்புமிகு மகத்தறித் துறை அமைச்சரின் பொறுப்பில் இருக்கிறது. அதுபோல் குடிசை மாற்று வாரியமும் அவருடைய பொறுப்பிலேயே இருக்கிறது. அது தவிர ஹவுசிங் போர்டு இன்னும் ஹவுசிங் கோ–ஆப்பரேஷன் இவை போன்ற துறைகள் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப் படுகின்றன. நான் கணக்கை எடுத்துப் பார்த்தேன். ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ 50 ஆயிரம் வீடுகளுக்கு மேல் இந்தத் துறைகளின் மூலமாகக் கட்டித் தரப்படுகின்றன. ஏறத்தாழ 20 ஆயிரம் வீடுகள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும் இன்னும் 30, 32 ஆயிரம் வீடுகளுக்கு கடன் கொடுப்பது இன்னும் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. இங்கே கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் நகர்ப்புறங்களிலும் ஏறத்தாழ மொத்தத்தில் சென்னை நகரத்தையும் சேர்த்து ஆங்காங்கே ஆலங்குளம் போன்ற நகரத்தில் இருக்கிறது; பேரூராட்சிகளில் நகர்ப்புற கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள். 480 கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றன; நகர்ப்புற கூட்டுறவுச் சங்கங்கள். அதுபோல 165 என்று கணக்கு தருகிறார்கள்; ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு கூட்டுறவுச் சங்கம் இந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் கொடுக்கப் படுகின்றன. ஆனால் இங்கே ஒரு வித்தியாசம் இப்போது நாம் ஆதிதிராவிடர்களுக்கு, மீனவர்களுக்கு இலவசமாக 8 ஆயிரம் ரூபாய் செலவில் அல்லது 10 ஆயிரம் ரூபாய் செலவில் மலைப் பகுதியில் என்றால் 10 ஆயிரம் ரூபாய் செலவில் நாம் திட்டம் போட்டிருக்கிறோம். இலவசமாகக் கட்டித் தருகிறோம்.

(இரவு 9.00)

ஆனால் மற்றவர்களுக்கு அதே நிலையிலே இருக்கக்கூடிய நலிவுற்ற சமுதாயத்திலே, நலிவுற்ற பிரிவினருக்கு வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம், அவர்களுக்குக் கடனாகக் கொடுக்கிறார்கள். ஆகவே கிராமங்களிலே இப்படிக் கடனாக ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாகவும் மற்றவர்களுக்கு இப்படிக் கடனாகவும் கொடுக்கின்ற ஒரு காரணத்தினாலே எப்படியோ இந்தக் கடன் திருப்பி வருதல் ஆனதிலே கொஞ்சம் தாமதமாகிறது. தடங்கல் இருக்கிறது. பாக்கியிருக்கிறது. அதையும் கவனத்திலே கொண்டு இந்தக் கடனை இதற்கு முன்பு



எப்படிக் கொடுத்துக் கொண்டிருந்தோமோ அதேமாதிரி நாங்கள் கொடுக்கத்தான் தீர்மானித்து இருக்கிறோம். ஆனால் இந்தக் கடனைப் பெறுபவர்கள் எப்படியாவது திருப்பிக் கொடுத்து விட வேண்டுமென்ற எண்ணத்தோடு கடனைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அதே சமயத்திலே அவர்களுடைய கோரிக்கையும் நியாயமானதுதான். எங்களுடைய வருவாயும் ஏறத்தாழ நலிவுற்ற நிலையிலே இருக்கக் கூடிய, மாதம் 700 ரூபாய்க்குக் கீழே உள்ளவர்கள் நலிவுற்ற நிலையிலே இருப்பதாகக் கருதுகிறோம். எங்களுடைய வருவாயும் இப்படிக் குறைவாக இருக்கின்றபோது ஒரு சாராருக்கு நீங்கள் இலவசமாகக் கட்டிக் கொடுத்துவிட்டு எங்களுக்கு மட்டும் கடனா? நாங்கள் திருப்பிக் கொடுக்க வேண்டுமா என்ற ஒரு பிரச்சினை இங்கே எழுகிறது. ஆகவே முழுமையான மானியமாக, இலவசமாக இல்லாவிட்டாலும் ஒரு பகுதியாவது அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற அளவிலே பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இது வரை கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. நானே வாலாஜாபேட்டை அருகே இருக்கக்கூடிய 300. 375 வீடுகள் என்று நினைக்கிறேன். முழுக்க முழுக்க அரசு ஊழியர்களுக்காக, அதிகாரிகளுக்காகக் கட்டப்பட்ட வீடுகள். முதன் முதலாக அங்கேதான் சென்று பார்த்தேன் பார்த்த உடனேயே இதற்கு முழுமையாக எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டதோ அவ்வளவு தொகை செலவிடப்படவில்லை என்று சொன்னேன். ஆகவே வீடுகள் தரமுள்ள வீடுகளாகவே இல்லை என்பதை நான் அங்கேயே தெரிவித்துவிட்டு வந்தேன். என்னைச் சந்தித்த அதிகாரிகள் ஒரு பகுதி வீடுகளில் குடியிருக்க வந்தார்கள். அங்கே தண்ணீர் வசதியில்லை. அந்த வீடுகளைச் சுற்றி சுற்றுச் சுவர் எழுப்பவேண்டியிருந்தது. அதுவும் முடிக்கப்படவில்லை, இப்படிப் பல குறைபாடுகளைக் கண்ணீர் விட்டுச் சொன்னார்கள். அந்த வீடுகளில் உள்ள பூச்சு சரியாக இல்லை. தரை சரியாக இல்லை. சீலிங் சரியாக இல்லை. தண்ணீர் உள்ளே வரக்கூடிய அளவிற்கு அவ்வளவு மோசமான நிலையிலே இருக்கின்றது. ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்திருந்தால் அதில் 500, 600 ரூபாய் அளவுக்குக் கூட செலவு செய்திருக்க முடியாது. மீதமெல்லாம் எங்கே எடுத்துச் சென்றார்கள் என்று நான் ஒரு கேள்வியை எழுப்பிவிட்டு வந்தேன். இன்னும் பல வீடுகளை நான் சென்று பார்க்க முடியவில்லை. வீட்டு வசதித் துறையைப் பொறுத்த வரையில் நான் மிகக் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறேன். இனி மேல் கட்டப்படுகின்ற வீடுகளுக்கென்று குவாலிட்டி கன்ட்ரோல் என்ற ஒரு அமைப்பை உருவாக்க திட்டமிட்டிருக்கிறோம். வீட்டு வசதித் துறையிலேயே அதற்கென்று தனியாக ஒரு செக்ஷனை, ஒரு பிரிவை ஆரம்பித்து கல் இப்படி இருக்க வேண்டும், சிமெண்ட்

இப்படி இருக்க வேண்டும் என்ற அளவிலே அதை நாங்கள் கட்டுப் படுத்தப் போகிறோம். அதற்கு மேலாக ஒரு விஜிலென்ஸ் கமிட்டி. ஆங்காங்கே சென்று எப்படி அந்தக் கட்டுமானம் இருக்க வேண்டுமென்று கட்டுப்பாடு விதிக்கிறோமோ அப்படி இருக்கிறதா என்பதை நேரிலே பார்த்து பிறகுதான், அவர்கள் ஒரு சர்டிபிகேட் கொடுத்த பிறகுதான், அதற்குரிய தொகையை ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு முறையை ஏற்படுத்தலாம் என்று நாங்கள் திட்டமிட்டு இருக்கிறோம். ஆகவே இந்தத் துறையைப் பொறுத்த மட்டிலே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையெல்லாம் நாங்கள் ஏற்று பரிசீலனை செய்து அதற்கான முடிவுகளை நாங்கள் எடுப்போம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் நாம் விரிவாகப் போய் கொண்டிருக்கிறோம். ''சைட் & சர்விஸஸ்'' என்று ஒரு ஸ்கீம் இருக்கிறது. உலக வங்கியினுடைய உதவியோடு விரிவாகப் போய்க்கொண்டிருக்கிறோம். நான் சிங்கப்பூர் சென்று பார்த்திருக்கிறேன். அங்கே அழகான 10 மாடி வீடுகள் நிறைய இருக்கின்றன. இங்கேயும் அப்படி 10 மாடி வீடுகளைக் கட்டுவதற்கு ஏதாவது தடை இருக்கிறதா என்று கேட்டேன், இல்லை என்று சொன்னார்கள். இப்போது டெய்லர்ஸ் ரோட்டிலே ஒரு இடத்திலே அப்படி ஒரு 10 மாடி வீடு கட்டுவதற்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். 90 மாடி வீடுகள் வந்திருக்கின்றன, சிங்கப்பூரில்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதிலே 35 மாடிகள் கடலுக்கு அடியிலே கட்டப்பட்டிருக்கும். மேலே 40 அல்லது 50 மாடிகள் என்று இருக்கிறது. ஆனால் சாதாரணமாக குடியிருக்கும் வீடுகளைப் பற்றி நான் சொல்கிறேன். எங்கே பார்த்தாலும் ஒரே விதமான 10 மாடி வீடுகள் அங்கே கட்டித் தந்திருக்கிறார்கள் சுத்தமாகவும் இருக்கிறது. அதே சமயத்தில் வசதியாகவும் இருக்கிறது. நானும் ஒரு முறை அங்கே சென்றபோது அந்த 10 மாடி வீட்டிலே தங்கியிருக்கிறேன். நல்ல காற்று வசதி இருக்கிறது. ஃபேன் இல்லாமலேயே இயற்கையான காற்று வசதி இருக்கிறது. நல்ல வசதியான வீடு. அங்கே குடியிருப்பவர்கள் நிம்மதியோடு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட வசதியோடு ஏன் இங்கும் வீடுகளைக் கட்டக்கூடாது என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறேன். அங்கே 'சைட் அன்ட் சர்வீஸ்' வேண்டுமென்று அடுக்கடுக்கான வீடுகளைக் கட்டிக்கொண்டே போகிறார்கள். அந்தமாதிரியாக அடுக்கு மாடிகளைக் கட்ட நாம் உலக வங்கியின் உதவியைக் கேட்டிருக்கிறோம். மேலும் கேட்கிறோம்; மாடிவீடுகள் கட்டலாம் என்ற ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள்.



இங்கே பத்திரிகையாளர்கள் பற்றி ஒரு கருத்து எழுப்பப் பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பரிவோடு பேசினார்கள். என்னுடைய கவனத்திற்கும் வந்திருக்கிறது. முன்னாள் அமைச்சர் வீட்டுவசதித் துறை அமைச்சராக இருந்த எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு இங்கே இருக்கிறார்கள். என்னிடம் சொல்வதெல்லாம் முந்தைய ஆட்சியில் பலர் பல உறுதிமொழிகளைத் தந்தவர்கள், நகரின் மையத்திலே இப்படிப்பட்ட ஒரு காலனியை தனியாக பத்திரிகையாளருக்கு என்று அமைத்துத் தருகிறோம் என்று உறுதிமொழி தந்தார்கள். ஆனால் இது வரையில் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். அதன் பிறகு நான் அமைச்சராகப் பதவி ஏற்ற உடனே ஒரு கோப்பு வந்தது. கொட்டிவாக்கம் என்ற இடத்திலே ஒரு ஏக்கர் நிலம் கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்திருந்தார்கள். அது இன்னும் நிலுவையில் இருக்கிறது. அதைக் கொடுக்கலாமா அல்லது அதைவிட இன்னும் சிறந்த இடத்தைக் கொடுக்கலாமா என்று நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987–ல் பத்திரிகையாளர்கள் சேர்ந்து ஒரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்தார்கள். அப்போது திருவான்மியூருக்கு அப்போதிருந்த அதிகாரிகளுக்கும் தலைவருக்கும் அழைத்துச் சென்று காட்டப்பட்டது. அதன் பிறகு கவர்னர் ஆட்சியில் அந்த இடத்தைப் பார்த்து சரி என்று ஒப்புக் கொண்ட பின்னால், அந்த இடம் ஒரு பள்ளிக்கு ஒதுக்கப்பட்டு விட்டது. இப்போது கொட்டிவாக்கத்தில் கேட்டிருக்கிறார்கள். 210 பேர் சேர்ந்து, சங்கத்தைப் பதிவுசெய்து, 10 இலட்சம் ரூபாய் வங்கியில் டிபாசிட் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள். தங்கள் நகை நட்டுகளை எல்லாம் அடமானம் வைத்து பணத்தைக் கட்டியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையாளர் என்ற முறையிலே நீங்களும் அதில் உண்டா?

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, அந்த சொசைட்டியில் நான் மெம்பர் அல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பத்திரிகையாளராக இருந்தாலும் அவர்களும் அதில் மெம்பர் ஆக முடியாது. பத்திரிகையாளர் என்ற முறையிலே மாண்புமிகு முதலமைச்சரும் மெம்பராக முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவரும் ஒரு காலத்தில் பத்திரிகையாளராக இருந்தார். அவர் சேரலாமா?

திரு. எஸ். திருநாவுக்கரசு: பத்திரிகையாளராக இருந்தாலும் நீங்களும் சேரமுடியாது. அவர்கள் 10 இலட்சம் ரூபாய் டிபாசிட் போட்டிருக்கிறார்கள். இடம் கொட்டிவாக்கத்திலே இருக்கிறது. கே. கே. நகரிலும் இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களுடைய தகவலுக்காகச் சொல்கிறேன். இறுதியிலே சொல்லலாம் என்று

நினைத்திருந்தேன், சந்தர்ப்பம் வந்ததால் இப்போதே சொல்கிறேன். ஆந்திராவிலும் கேரளாவிலும் இதைப்போன்ற இடம் இனாமாகக் கொடுத்து வீடு கட்ட சப்சிடியும் கொடுத்திருக்கிறார்கள். அங்கே எல்லாம் அந்த அளவுக்குக் கொடுத்திருக்கிறார்கள், அதைப்போன்ற திட்டத்திற்கு இங்கேயும் ஏற்பாடு செய்யவேண்டும்; நீங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். நாங்கள் அதைப்போன்ற ஒரு திட்டத்திற்கு ஏற்பாடு செய்தோம். முதலிலே பார்த்த இடம் மாற்றப்பட்டிருக்கிறது. கொட்டிவாக்கத்திலும் கே. கே. நகரிலும் இடம் இருக்கிறது. கே. கே. நகரில் தாலுக்கா ஆபீசுக்கு முன்னால் இருக்கிறது. உங்களிடம் சொல்லியிருக்கிறார்கள். ஏதாவது ஒரு இடத்தை ஒதுக்கீடு செய்து, சப்சிடி கொடுத்து, ஆந்திராவிலும் கேரளாவிலும் செய்திருக்கிறார்களே அதே பாணியில் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திருநாவுக்கரசு அவர்கள் கேரளத்தைப் பற்றிச்சொன்னார்கள். ஆந்திராவைப் பற்றியும் சொன்னார்கள். நான் சமீபத்திலே திருவனந்தபுரத்திற்குச் சென்றிருந்தபோது அங்கே வீட்டுவசதித் துறை அமைச்சரை சந்தித்துப் பேசினேன். அவர், தனியாக இடம் ஒதுக்கித் தரப்படவில்லை; எங்கெங்கே வீட்டுவசதித் துறை வீடுகளைக் கட்டுகிறதோ ஆங்காங்கே ஒரு சதவீதத்தை ஆங்காங்கே இருக்கிற பத்திரிகையாளர்களுக்குக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆந்திராவிலே என்ன நிலைமை என்று எனக்குத் தெரியாது. டெல்லிக்குச் சென்றபோதும் விசாரித்துப் பார்த்தேன். பல இடங்களில் கட்டப்படுகின்ற வீடுகளில் ஒரு சதவீதத்தைப் பத்திரிகையாளர்களுக்குத் தருகிறோம் என்று சொன்னார்கள்.

இங்கே இருக்கிற பிரச்சனை சென்னை மாநகரில் ஒரு தனி இடத்தை அவர்களுக்குக் கொடுக்கலாம்; ஆனால் சென்னையில் மட்டும் தான் பத்திரிகையாளர்கள் இருக்கிறார்களா? கோவையில் இல்லையா? மதுரையில் இல்லையா? சேலத்தில் இல்லையா? திருச்சியில் இல்லையா? அவர்களுக்கு எல்லாம் என்ன செய்வது? நான் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை.

(இரவு 9-10)

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே, ஒரு பிரபலமான பத்திரிகையை நடத்திக்கொண்டிருப்பவர்கள். அவர்கள் பேசுவதைப் பார்த்தால் ஏதோ எதிரான உணர்வு உள்ளது போல் தொனிக்கிறது. மற்ற மாவட்டத் தலை நகரங்களில் அவர்களுக்கும் செய்யலாம். இங்கே 6 ஏக்கர் கொடுத்தால், அங்கே அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் கொடுத்து உரிய ஏற்பாடுகளைச் செய்யலாம். நீங்கள் கூட எடிஷன்ஸ் ஆங்காங்கு வெளியிடுகிறீர்கள். எனவே செய்யலாம். (குறுக்கீடு) அனேகமாக தினகரன்



எடிஷன் கூட நான்கைந்து மாவட்டங்களில் வெளியிவருகிற அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் கூட செய்யலாம். எல்லா இடங்களிலும் அதுபோல் செய்யலாம். அதிலே ஒன்றும் தவறில்லை.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, ஐந்தாறு மாவட்டங்களிலே இருக்கக்கூடிய பத்திரிகை தினகரன் மட்டுமல்ல. இன்னும் பல பத்திரிகைகள் இருக்கின்றன. எனவே இங்கே நான் கொடுக்கவேண்டாம் என்ற உணர்வு எனக்கு இருக்கிறது என்று எடுத்துக்கொண்டால், அதைவிட பெரும் தவறு வேறு எதுவும் இருக்க முடியாது. நானே அந்தத் துறையைச் சேர்ந்தவன். நான் என்னை வந்து சந்தித்த நிருபர்களை எல்லாம் கேட்டுக்கொண்டிருப்பது, நிருபர்களுக்கு மட்டும்தான் இந்தத் திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்களே, Working Journalist Act என்று இருக்கிறதே, அதன்படி நிருபர்கள் மட்டுமல்ல, உழைக்கும் பத்திரிகையாளர்கள், இன்னும் ஏனைய ஊழியர்கள் பலர் இருக்கிறார்களே, அவர்கள் அத்தனை பேருக்குமாகச் சேர்த்து ஏன் நீங்கள் கேட்கக்கூடாது என்று நான் அவர்களிடத்திலே கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கிறேன். கொட்டிவாக்கம் என்ற இடத்தில் இருக்கக்கூடிய ஒரு இடத்தை நான் அவர்களுக்குக் கொடுப்பதாக......

திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் குறுக்கிடுவதற்காக நான் வருந்துகிறேன். அது முக்கியமான பிரச்சினை என்பதால் சொல்கிறேன். சப் எடிட்டர்ஸ், ரிப்போர்ட்டர்ஸ், ஃபோட்டோகிராஃபர்ஸ் இப்படி எல்லோரையும் அதிலே சேர்த்திருக்கிறார்கள். நீங்கள் சொல்வது போல் அங்கே பணியாற்றுகிறவர்கள் எல்லோரையும் சேர்த்தால் பிறகு காகிதத் தொழிற்சாலையில் வேலை செய்பவர்களைக் கூட சேர்க்க வேண்டி இருக்கும். அவர்களை எல்லாம் சேர்ந்தால் 2,000, 3000 பேர்களுக்கு மேலாகி, பிறகு அது ஒரு சொசைட்டியாக இருக்காது. வையபிள்—ஆக இருக்காது. எனவே இப்போது 235 பேர்கள் ஏற்கெனவே இருக்கிறார்கள். சப்-எடிட்டர்ஸ், ரிப்போர்ட்டர்ஸ், ஃபோட்டோகிராஃபர்ஸ் ஆகியோர் எல்லாம் சேர்ந்து இதிலே இருக்கிறார்கள். முதலிலே இவர்களுக்குக் கொடுத்து விட்டு அதற்குப் பிறகு மேலும் எடுத்துச் செய்வது என்றால் மற்ற எல்லோரையும் சேர்த்துச் செய்யலாம். எனவே இப்போதே 6,000, 10,000 பேர்களுக்கு எப்படிக் கொடுக்க முடியும்?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே பத்திரிகையாளர்களுக்கு மட்டுமல்ல; அதிலே உழைக்கக்கூடிய ஊழியர்களுக்கு மட்டுமல்ல விவசாயிகள், தொழிற்சாலையிலே இருக்கும் உழைக்கும் வர்க்கத்தினர் ஆகிய அத்தனை பேர்களுக்கும் குறுகிய காலத்தில் வீடுகள் கட்டித் தரவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை. எனவே அவர்களே கலந்தாலோசித்துச் சொல்லட்டும் என்று தான் நான் கேட்டிருக்கிறேன். இப்படி நிருபர்களுக்கு மட்டும்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்

என்பதல்ல; உழைக்கும் பத்திரிகையாளர்கள், சப் எடிட்டர்ஸ், ரிப்போர்ட்டர்ஸ், நியூஸ் எடிட்டர்ஸ் ஆகிய இவர்களுக்கு மட்டும் தான் என்பதல்ல; அப்படி நான் சொல்லவில்லை. நீங்களாகக் கலந்தாலோசித்துப் பாருங்கள்; ஒரு அலுவலகத்திலே பணி புரியக்கூடிய ஒரு பிரிவினரை மட்டும் ஏன் பிரித்துப்பார்க்க வண்டும் என்று தான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அது நியாயமான கேள்வி என்று நான் நினைக்கிறேன். இவர்களுக்கு மட்டுமல்ல; இங்கே விவசாயிகளுக்குக் கூட தனியாக வீடுகள் கட்டித் தருவது சம்பந்தமாக வெட்டுத் தீர்மானம் கொடுக்கப் பட்டிருக்கிறது. சமுதாயத்தில் உள்ள அத்தனை பேருக்கும்தான் இந்தத் துறை வீடுகள் கட்டிக் கொடுக்கிறது. இங்கே அந்தப் பிரச்சினையை எழுப்பியுள்ள காரணத்தால் நான் சொல்கிறேன். நிச்சயமாக பத்திரிகையாளர்களின் கோரிக்கையைப் பரிவோடு இந்த அரசு கவனிக்கும். கொட்டிவாக்கத்தில் அவர்கள் தேர்ந் தெடுத்திருக்கிற இடத்தைக் கொடுக்க முன்வருவோம். அவர்கள் ஒரு கூட்டுறவுச் சங்கமாகத் தங்களைப் பதிவு செய்துகொண்டு வீடுகளைக் கட்ட இருக்கிறார்கள் என்பதை அறிவித்துக் கொள் கிறேன். இன்னும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இவர் களுக்கு மட்டுமல்ல. எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இப்படிக் கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொண்டு வந்தால் முடிந்த அளவுக்கு இந்த அரசு செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டுவசதித் துறையைச் சற்று விட்டுவிட்டு இனிமேல் ஏதாவது கேள்வி எழுப்பப்படுமேயானால் நான் பதில் சொல் கிறேன் —அடுத்து வனத்துறைக்கு வருகிறேன். இதிலேயும் நான் அதிகமாகச் சொல்லி உங்களுடைய நேரத்தைப் போக்க விரும்பவில்லை, சந்தனமரம் பற்றிச் சொன்னார்கள். வடாற் காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய சந்தன மரங்கள் திருட்டுப் போகின்றன என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அந்தச் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை பற்றியும் எடுத்துச் சொன் னார்கள். சந்தன மரத்தைப் பொறுத்தமட்டில் இந்தத் துறையிலே மிக அதிகமாகப் பேசப்படுகிற ஒரு பெயர் வீரப்பன். நான் முன்னாள் அமைச்சர் திரு. வீரப்பனைச் சொல்வதாக யாரும் எண்ணிக்கொள்ள வேண்டாம். சத்தியமங்கலம் பகுதியில் இருக்கக்கூடிய ஒரு கொள்ளைக்காரன் ஏறத்தாழ 10 ஆண்டுக் காலமாக இந்தத் துறைக்கு ஒரு சவாலாக இருந்து கொண்டிருக் கிறான். மரங்களை வெட்டிக் கடத்துவது, யானைகளைக் கொல்வது, யானைத் தந்தங்களை வெளிநாட்டுக்குக் கடத்துவது, அதிகாரிகள் பார்த்தால் அவர்களைச் சுட்டுக்கொல்வது இந்த அளவிற்கு ஒரு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தி இருக்கிறான். ஒரு பெரும் போரே நடைபெற்று, வனவருக்கும் அதாவது சிதம்பரம் என்ற பெயருடைய வனவருக்கும் இந்த வீரப்பனுக் கும் ஒருநாள் எதிரும், புதிருமாக ஒரு பெரிய யுத்தமே நடை பெற்று இறுதியாக அந்த வனவரும் அவரைச் சேர்ந்த இரண்டு உதவியாளர்களும் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்



பட்டிருக்கிறார்கள். இந்த அளவிற்கு வீரப்பன் என்ற ஒரு கொள்ளைக்காரன் சத்தியமங்கலம் காட்டிலேயும் இன்னும் அதைச் சேர்ந்த காடுகளிலும் சந்தன மரங்களைத் திருடிக் கொண்டு போவதாகத் தகவல் வந்திருக்கிறது. நாங்கள் இந்த பொறுப்பை ஏற்ற பிறகு அதிகாரிகள் ஓரளவுக்கு நடவடிக்கை எடுத்ததாகத் தெரிகிறது. அங்கே தவறே நடக்கவில்லை என்று சொல்ல விரும்பவில்லை. முன்பு நடந்தது என்ன என்று சொல்ல முடியாது. இந்த 2, 3 மாத காலங்களில் 43 டன் சந்தன மரக் கட்டைகளை எடுத்துச் சென்றவர்களைப் பிடித்து இருக்கின்றார் கள். இங்கே ஒரு சிக்கல் என்னவென்றால், முந்தைய ஆட்சியிலே சில சட்டங்களைத் திருத்தியிருக்கிறார்கள். ஒன்றே ஒன்றுதான் 6 முக்கியமான மரங்களை செட்யூல்ட் டிம்பர் என்று ஆக்கி ஒரு சட்ட திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அருமையான சட்டம். அதை நான் வரவேற்கிறேன். அதிலே எந்தவிதமான குறைபாடும் இல்லை. ஆனால் அத்தோடு, அந்த காம்பவுண்டிங் பவர் என்று ஒன்று இருந்தது. அங்குள்ள ரேஞ்சர்கள், பாரஸ்ட் டர்களுக்கு இருந்தது. அவர்களே சில திருட்டுக்களைப் பிடிக்கும் போது அங்கே 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மரங்களைப் பிடிக்கும்போது, ரூ. 20 ஆரயிம், ரூ. 30 ஆயிரம் என்று—ஒரு உதாரணத்திற்கு சொல்கிறேன். ரூபாய் ஆயிரம் மதிப்புள்ள மரங் களைப் பிடித்தால். மூன்று மடங்கு மதிப்பு ரூ.3,000 வரை பணம் வாங்கிக்கொண்டு, அந்த மரத்தையும் பெற்றுக் கொண்டு, பணத்தையும் பெற்றுக்கொண்டு விட்டுவிடலாம் என்ற முறையிலே இருந்தது.அது கம்பவுண்டிங் பவர். ஆனால் அதையும் நீக்கி இருக் கின்றார்கள். அதற்குப் பிறகுதான் சிக்கல் ஆரம்பித்தது, முந்தைய ஆட்சியில் பாரஸ்ட் செல் ஒன்று ஆரம்பித்தார்கள். ஏறத்தாழ போலீஸ் கான்ஸ்டேபிள்ஸ். டி.எஸ்.பி., எஸ்.பி., ஐ.ஜி. என்ற அளவிலே ஒரு நூறு பேர் மட்டும், அங்கே ஏறத்தாழ 5 ஆயிரம் வார்டர்கள், பாரஸ்ட்டர்கள் இவர்கள் எல்லாம் செய்கின்ற வேலையை இந்த 100 போலீஸ்காரர்கள் எப்படிச் செய்யமுடியும் என்ற அளவிலே அதை எனக்குப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதற்குப் பிறகுதான் ஆங்காங்கு ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாய் பெறுமானமுள்ள சந்தன மரங்கள் இருக்கின்றன. இன்னும் கேஸ்கள் அங்கே நீதிமன்றங்களிலே வழக்குகளாக இருக் கின்ற காரணத்தினாலே, அந்த வழக்குகள் முடிந்த பிறகுதான் இந்த மரங்களை அவர்கள் விடுவிக்கமுடியும். ஆங்காங்கே சிறத்தாழ ரூ. 50 கோடி பெறுமானமுள்ள சந்தன மரங்கள் பிடிக்கப்பட்டு நீதிமன்றங்களில் இருக்கின்றன.அந்த வழக்குகளைச் சாதாரணமாக நீதிமன்றங்களிலே எடுத்துக்கொள்வது இல்லை. சந்தனமரம் வழக்குதானே,பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்தி வைத்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே இதற்கு என்று ஒரு தனி கோர்ட் வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். அதற் கான அனுமதியை விரைவிலே வழங்க இருக்கிறோம். ஒரு இடத்திலே சேலம், வேலூர் அல்லது கிருஷ்ணகிரி ஆகிய மூன்று இடங்களில், ஏதாவது ஒரு இடத்திலே ஒரு தனி நீதி மன்றத்தை இதற்காக உருவாக்கி இந்த வழக்குகளை விரைவிலே

[திரு கே. பி. கந்தசாமி] [1989 ஏப்ரல் 20

எடுத்துக்கொண்டு முடித்து அந்த 5கோடி பெறுமானமுள்ள சந்தன மரங்களை விற்றுவிட்டால், அரசுக்கு நல்ல வருவாய் கிடைக்கும் என்று நினைக்கிறேன். அதுபோல இந்தத் திருட்டையும் கண்டு பிடிப்பதற்கு, இன்றைக்கு வன இலாகாவிலே வயர்லெஸ் செட் சிஸ்டம் என்று இருக்கின்றது. ஒரு ஆண்டிலே 18 செட்டுகள் வாங்கிக் கொடுத்திருக்கின்றார்கள். பிறகு 7 செட்டுகள் வாங்கிக் கொடுத்திருக்கின்றார்கள். இப்படி பல இடங்களில், 2 கால கட்டத்திலே ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளக்கூடிய அளவுக்கு அங்கங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு அந்த வயர்லெஸ் செட் வாங்கிக் கொடுத்திருக்கின்றார்கள். இன்னும் மீதம் உள்ள இடங்களிலேயும் வயர்லெஸ் செட்டுகள் வாங்கிக் கொடுக்க நினைக்கிறோம்.

அதேபோல, என்னைப் பொறுத்தவரையில் ஒரு விமானம் தேவை என்று நினைக்கிறேன். சமீபத்திலே வட ஆற்காட்டிலே ஒரு மலையிலே விமானத்திலே சென்று விதைகளைத்தெளித்திருக் கிறார்கள். ஏரியல் சீட்லிங் என்ற முறையிலே அவர்கள் செய் திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மழை பெய்யாத காரணத்தினால் அது சரியாக முளைக்கவில்லை. இருந்தாலும் கூட வெளிநாடு களிலே இப்படிப்பட்ட முறை இருக்கின்றது. வெளிநாடுகளிலே வனத்துறைக்குத் தனியான விமானம் இருப்பதுண்டு. இங்கே நான் விமானம் என்று சொன்னவுடன், எங்களைப் போன்றவர்கள் விமானத்திலே செல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. வெளிநாட்டிலே இருந்து வரக்கூடிய எத்தனையோ எய்ட்- (உதவி)கள் இருக்கின்றன. ஸ்வீடனிலே இருந்து வரும் உதவிகள் கூட இருக்கின்றன. ஒரு 7 ஆண்டுக் காலத்திலே அவர்கள் 51 கோடி வரையிலே நமக்குத் தந்திருக்கின்றார்கள். அடுத்த 5 ஆண்டுக் காலத்திலே இன்னும் 85 கோடி ரூபாய் வரையிலே வர இருக்கிறது. இப்படி எத்தனையோ வெளிநாடுகளிலே இருந்து வரக் கூடிய உதவிகள் இருக்கின்றன. இந்த உதவிகளின் கீழ், அப்படிப் பட்ட விமானம் ரூ. 40லட்சம், ரூ. 50லட்சம்செலவில் வாங்கினால் அந்த விமானத்திலே மேலே சென்று பார்வையிடலாம். அங்கே சென்று பார்வையிடுகிறோம், கண்காணிக்கிறோம் என்ற பயம் இருந்தாலே, இந்தத் திருட்டு கொஞ்சம் குறையும் என்று நினைக் கிறேன். விதை விதைப்பதற்கும், இப்படிப்பட்ட கண்காணிப்பு நடப்பதற்கும் அந்த விமானத்தை உபயோகப்படுத்த முடியும் என்று கருதுகிறேன்.

கடைசியாக சின்கோனா டிபார்ட்மெண்ட் இருக்கிறது. இந்தத் துறையிலே யாருமே அதைப் பற்றிப் பேசவில்லை என்று நான் கருதுகிறேன். ஆனால் அது வனத் துறையினுடைய செயலாளரின் கீழ் அங்கே ஒரு டைரக்டர் இருக்கிறார். கட்டுப்பாட்டிலே இருக் கிறார். 1981ஆம் ஆண்டு வரை அந்தத் துறை லாபகரமாக நடந்து இருக்கிறது. மூறத்தாழ அக்குமலேட்டட் பிராபிட்



1989 ஏப்ரல் 20] [திரு கே. பி. கந்தசாமி]

(இரவு 9-20)

இரண்டு கோடி ரூபாய். 1983-ல் இந்த அதிகாரி அங்கே நியமிக்கப் பட்டிருக்கிறார். அதற்கு பிறகு இந்த 2 கோடி ரூபாய் லாபமும் கரைந்துபோய் இன்றைக்கு 4 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நானும் அந்தக் கோப்பை எடுத்துப் பார்த்தேன். வனத் துறைக்கு அமைச்சராக இருந்த திரு. இராம வீரப்பன் அவர்கள் கூட அதில் 1986-ஆம் ஆண்டில் வேகமாக எழுதியிருக்கிறார். அவர் மீது எத்தனையோ மனுக்கள், புகார்கள் வந்திருக்கின்றன. குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது. 1986 ஜூலையில் அது குறித்து விசாரித்து அறிக்கை தரவும் என்று எழுதி யிருந்தார்கள். ஆனால் அந்தக் கோப்பை புரட்டிப் பார்த்ததில் எந்த நிலையிலும் விசாரணை நடைபெற்றதாகத் தெரியவில்லை. அவரிடத்திலிருந்தே அறிக்கை வாங்குகிறார்கள். ஒருவர் மீது புகார் வருகிறது என்று சொன்னால், அவரிடமே அதுகுறித்து கேட்டால் அவர் என்ன சொல்வார்? அறிக்கை தரப் படவில்லை என்று அமைச்சரால் ஆணையிடப்படுகிறது. அதற்குப் பிறகு பொறுப்புக்கு வந்த, சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்த திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்களும் அவரைப் பற்றி எழுதுகிறார். இந்த அதிகாரியை இந்த இடத்திலிருந்து மாற்றி யாக வேண்டும் என்று கண்டிப்பாக அவர் எழுதுகின்றார். அதற்கும் ஒரு கோப்பு சுற்றுகிறது. அந்த அதிகாரியை அந்த இடத்திலிருந்து மாற்றத் தேவையில்லை என்று ஒரு கோப்பு சுற்றுகிறது. அந்தக் கோப்பின்மீது மீண்டும் அமைச்சர் திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் எழுதுகிறார். இவர்மீது ஏராள மான ஊழல் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அவைகள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும், இந்த இலாகாவில் இவர் இருப்பதற்குத் தகுதியில்லை என்று எழுதுகிறார். அதே கோப்பில் அன்றைக்கு நிதியமைச்சராக இருந்த திரு. நாவலர் அவர்களும் எழுது கிறார்கள். இதுகுறித்து விசாரிக்கப்பட வேண்டும், இதில் ஊழல் நிறைந்திருக்கிறது என்று அவரும் எழுதியிருக்கிறார். ஆனால் மீண்டும் அந்த அதிகாரியிடமிருந்து தான் அறிக்கை கேட்கப் படுகிறது. அதற்குப் பிறகு அங்கே இருக்கின்ற தமிழ்நாடு சின்கோனா டிப்பார்ட்மெண்ட் ஸ்டாப் அசோசியேசன் என்கிற அளவிலே இருந்தவர்கள் சார்பில் மனுக்களுக்கு மேல் மனுக்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். 1986—ஆம் ஆண்டில் எழுது கிறார்கள், அது விசாரிக்கப்படவில்லை. அதுகுறித்தும் அவரிடத்தி லிருந்ததுதான் அறிக்கை கேட்கப்படுகிறது. அதற்குப் பிறகு 1988 ஜூலையில் மீண்டும் புகார் வருகிறது. அதில் இவ்வளவு, இந்த இந்த காரணங்களினால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது கவர்னர் ஆட்சி இருந்த காலம். ஆளுநருடைய தனிச் செயலாளர் அதில் ஒரு நோட் போட்டு அனுப்புகிறார். இதன்மீது விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் அதில் குறிப்பிடுகிறார். அதே மனுவை மத்திய அமைச்சர் திரு. பிரபு அவர்கள் அங்கே

சென்றிருந்தபோது அவரிடமும் தருகிறார்கள். ஆக, ஜூன் 1988–ல், கவர்னருக்கு அனுப்பப்பட்ட அதே புகார் மனுவை மத்திய அமைச்சரிடமும் தருகிறார்கள், அவர் அதைப் படித்துவிட்டு, அங்கே உள்ளவர்களிடம் பேசிப் பார்த்துவிட்டு, இந்த அரசுக்குத் தெளிவாக ஒரு கடிதம் எழுதுகிறார் என்னிடத்தில் இப்படிப்பட்ட புகார்கள் தரப்பட்டன, நேரிலும் அது குறித்து விசாரித்தேன், உண்மையென்று தெரிகிறது. ஆகவே, This officer has got to be immediately replaced என்கிற அளவிலே குறிப்பிட்டு அவர் கடிதம் எழுதுகிறார். அதன்மீதும் விசாரணை நடைபெற வில்லை. அவருக்கும் அதுகுறித்து புகார் போகிறது. A high-level officer has enquired into the matter. இப்போது இந்த மனுக்கள் வருவதற்கு முன்பே, 1985–ஆம் ஆண்டிலேயே ஒரு புகார் மனு வந்திருக்கிறது, அதன் மீது இங்கேயுள்ள ஓர் ஐ.ஏ.எஸ். ஆபீசர் விசாரணை நடத்திவிட்டு the charges are baseless, frivolous and unfounded என்று அறிக்கை தந்திருக்கிறார்கள். அதே டைரக்டர் மீது ஒவ்வொரு முறை புகார் வருகிறபோதும் மத்திய அமைச்சருக்கும் A high-level officer was apqointed for this purpose . . . என்று எழுதுகிறார்கள் எப்போது? 1985-ல் நடைபெற்ற ஒரு விசாரணை. அதற்கு பிறகு இப்போது அவர்மீது கூறப்பட்ட எந்த சார்ஜஸ் மீதும் எந்த விசாரணையும் இல்லை. அந்த அதிகாரியிடத்தில்தான் அறிக்கை கேட்டிருக்கிறார்கள். மத்திய அமைச்சருக்கும் இங்கிருந்து பதில் போகிறது. எப்படிப் பதில் போகிறது என்றால் ''இதை ஒரு பெரிய அதிகாரி விசாரித்து விட்டார், ஆகவே, இந்த அதிகாரியை மாற்றத் தேவையில்லை'' என்று போகிறது. அதற்குப் பிறகு டிசம்பர் மாதத்தில் மீண்டும் கவர்னருக்கு மனு வருகிறது. அந்த மனு மீதும் ''Please enquire and ake action'' என்கிற அளவிலே குறிப்பிட்டு நோட் வருகிறது. இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. என் கைக்கு அந்தக் கோப்பு வந்து சேர்ந்திருகிறது. முழுமையாக, ஏறத்தாழ 200 பக்கங்கள் படித்துப் பார்த்தேன். அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் எழுதியும் நடைபெறவில்லை; அமைச்சர் திரு. சுவாமிநாதன் அவர்கள் எழுதியும் நடைபெறவில்லை; அமைச்சர் நாவலர் அவர்கள் எழுதியும் நடைபெறவில்லை; அமைச்சர் திரு. பிரபு அவர்கள் எழுதியும் நடைபெறவில்லை, கவர்னரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் சரியான பதில் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் 1983-லிருந்து 1989 வரை 6 ஆண்டுக்காலம் ஒரு அதிகாரி அங்கேயே இருக்கிறார் என்றால், நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், அவர் கேரளத்தைச் சேர்ந்தவர். It is a fact. எத்தனைபேர் எழுதியும், அவர்மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஏதோ மர்மம் அங்கே இருக்கிறது. அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும், அவரை சஸ்பென்ட் செய்துவிட்டு, Director of Vigilance and Anti-corruption அவர்மீது விசாரணை நடத்த வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதைச் சொல்லி, இப்படிப்பட்ட நல்ல



நடவடிக்கைகளை எல்லாம், இந்த அரசு தூய்மையான ஆட்சியைத் தருவதற்கு எடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தத் துறையைச் சேர்ந்த அத்தனை அதிகாரிகளுக்கும், சுற்றுலாத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், வனத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள், வீட்டுவசதித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், அறநிலையத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள்—ஒவ்வொருவருடைய பெயராகச் சொல்ல நேரமில்லை—அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்தத் துறைகள் நல்ல முறையில் இயங்குவதற்கு அவர்கள் பணி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இறுதியிலே நமது அமைச்சர் பெருமகனார் சின்கோனா டைரக்டர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்று சொன்னது பாராட்டத் தகுந்தது. அதைப்போல, தொகுதியிலே இருக்கிற தென்திருப்பேரையிலே களவுபோன மகர நெடுங்குழை காதலியினுடைய ஆபரணங்கள் எல்லாம் இப்போது நீதி மன்றத்தில் இருக்கின்றன. அவைகளை எல்லாம் மீட்டுக்கொண்டுவரவேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அதிலே விசாரணை செய்யும் அதிகாரிகள் எல்லாம் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதற்கு வேறு வழி காண வேண்டும். அவர்களைத் திருப்பிக்கொண்டு வர வேண்டும் என்று நான் ஏற்கனவே இதே சட்டமன்றத்திலே கோரிக்கை வைத்துள்ளேன். மாண்புமிகு அமைச்சர்கள் அதற்கும் பதில் தர வேண்டும். இன்னும் ஒன்றைச்சொல்லி முடித்துக் கொள்கிறேன். பத்திரிக்கையாளர்கள் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், இன்னாள் அமைச்சரும், முன்னாள் அமைச்சரவர்களும் பேசிக் கொண்டிருந்த காரணத்தாலே, நாங்கள் எல்லாம் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால் அமைச்சரவர்கள் இறுதியாகச் சொல்லும்போது கொட்டிவாக்கத்திலே கொடுக்கலாமென்று மனதிலே முடிவு வைத்திருப்பது போலத் தோன்றுகிறது. பத்திரிக்கையாளர்கள் அதிக நேரம் பணியாற்றிவிட்டு, இரவு நேரங்களில் போவதால், அவர்கள் கே. கே. நகர் பகுதியை விரும்புகிறார்கள். அதை அமைச்சர் மனதிலே போட்டு வைக்கிறேன். அதற்குச் சாதகமான பதிலை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் தென்திருப்பேரையிலே ஆரம்பித்திருப்பதால்நானும் அங்கேயிருந்து தொடங்குகிறேன். கவர்னர் உரைமீது அவர்கள் பேசும்போதே அதைப்பற்றி விரிவாகச் சொன்னார், நானும் கேட்டுக்கொண்டிருந்தேன். திருட்டுப் போன நேரத்திலே, அந்தத் திருட்டைக் கண்டுபிடிப்பதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மிகத் தீவிரமாக அதில் ஈடுபட்டிருந்தார்கள். அதையெல்லாம் அன்றைக்குச் சொன்னார்கள். நானும் இடைத் தேர்தல் சமயத்திலே அங்கே இருந்தபோது, அந்தப்

போராட்டத்தில் கலந்துகொண்டேன். அந்த ஊரைச் சேர்ந்த மக்களெல்லாம் கலெக்டரிடம் முறையிட்டபோது, நானும் சேர்ந்து கலெக்டரிடம் விளக்கிச் சொன்னோம். இந்தத் திருட்டு கண்டுபிடிக்கப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்; அந்த நகைகள் எல்லாம் அந்தக் கோவிலுக்குத் திருப்பிப் போய்ச் சேர வேண்டுமென்பதில் அக்கறையோடு இருக்கிறோம். நான் அமைச்சரான பிறகு, அந்தப் பகுதிக்குச் சென்றபோது, அந்த ஊர் மக்களெல்லாம் கண்ணீரும் கம்பலையுமாக நின்றுகொண்டு, முறையிட்டார்கள்; அந்த ஆபரணங்கள், நகைகள் எல்லாம் நீதி மன்றத்தில் இருக்கின்றன. ஐர்ன் சேப் ஒன்று வாங்கிக்கொடுத்து, அங்கே பத்திரமாகப் பூட்டி வைத்திருக்கிறார்கள். அன்றைக்குக் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் பேசும்போது ஏதோ அந்தக் குற்றம் சாட்டப் பட்டவர் பெயர் ஏதோ சொன்னார்கள்—பூல்பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் பேசும்போது, அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார், ஆகவே அவர்கள் மீது குற்றச்சாட்டு இருக்கிறது, ஆகவே இந்த வழக்கை நாங்கள் அக்கறையோடு கவனிக்க மாட்டோம் என்று பேசினார் என்று நினைக்கிறேன். யாராக இருந்தாலும் சரி, கூட்டத்திற்கு தலைமை வகிப்பவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராகவும் இருக்கலாம். அந்தக் கட்சியிலேயே இருக்க வேண்டுமென்பதில்லை. அந்தக் கட்சி ஆதரவாளராகவும் இருக்கலாம் அல்லது அந்த இடத்திலே உள்ள பெரியவராக இருக்கலாம். ஆனால் அதற்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை. இதில் யார் குற்றவாளிகளாக இருந்தாலும், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அங்கே போலீஸ் அதிகாரிகள் மாற்றப்பட்டது எங்கள் ஆட்சிக்காலத்தில் இல்லை.

(இரவு 9-30)

அதற்கு முன்பாகவே அவர்களை மாற்றியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட நான் கடந்த தடவை தூத்துக்குடிக்குச் சென்று இருந்தபோது அங்கே போலீஸ் அதிகாரிகளைக் கேட்டிருக்கிறேன். அந்த வழக்கு இப்போது சி.பி.ஐ. விசாரணையில் இருக்கிறது என்று நினைக்கிறேன். எங்கே இருந்தாலும் சரி, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆனால் நீதிமன்றத்திற்குச் சென்றால், அங்கே கொஞ்சம் கால தாமதம் ஆகத்தான் செய்யும். இருந்தாலும் கூட எவ்வளவு விரைவில் இதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்து அந்த நகைகளைத் திருப்பிக் கொடுப்பதில் நாங்களும் அக்கறையோடு இருக்கிறோம். குற்றவாளிகளையும் தண்டிப்போம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில், என்னிடத்தில் வந்த கோப்பில் கொட்டிவாக்கம் பற்றித்தான் இருந்தது. கே.கே.நகர் பொறுத்த கோப்பு எதுவும் என்னிடம் வரவில்லை.



கே.கே.நகர் இடத்தைப் பற்றி என்னைச் சந்தித்தவர்கள்கூட
என்னிடம் எடுத்துச் சொல்லவில்லை. செயின்ட் மேரிஸ்
ரோடுக்கு அருகே ஒரு இடத்தை முந்தைய அமைச்சர் அவர்கள்
கொடுப்பதாக உறுதி அளித்தார்கள். ஆனால் அதையும்
எங்களுக்குக் கொடுக்கவில்லை என்றுதான் சொன்னார்களே
தவிர, கே.கே. நகர் இடத்தைப்பற்றி அதிகமாகச் சொல்ல
வில்லை. நான் அதையும் பரிசீலனை செய்கிறேன். ஆனாலும்
கொட்டிவாக்கம் இடத்தைக் கொடுக்கலாம் என்று ஒரு கோப்பு
நகர்ந்து கொண்டிருக்கிறது. அதிலே ஆணையிட முடியும், அது
கொடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதனால்
கே.கே. நகர் இடத்தைக் கொடுக்கக் கூடாது என்று எண்ண
மில்லை. அங்கே எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது என்றுகூட
எனக்குத் தெரியாது. எனக்கு வந்த கோப்பிலேயே நான் எழுதி
யிருக்கிறேன். இதைவிட நல்லதாக இடம் கிடைக்குமா என்று
கூட எழுதியிருக்கிறேன். எனவே கே. கே. நகரில் இடமிருந்தால்
கொடுக்க முடியும். அதுவும் பரிசீலிக்கப்படும் என்று தெரி
வித்துக் கொள்கிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பேசும்போது. பால்
கமிஷன் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதாகச்
சொன்னார்கள். இறந்துபோன சுப்பிரமணியப் பிள்ளை
அவர்களின் மகனுக்கு முந்தைய அரசு கருணை அடிப்படையில்
கூட அரசு வேலை தரவில்லை. இந்த அரசு அதைத் தருமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர்
அவர்களே, திரு. சுப்பிரமணியப் பிள்ளையின் மகனிடமிருந்து
அரசு வேலை வேண்டும் என்று முதலில் அங்கே இருக்கிற ஒரு
வழக்கறிஞர் திரு. இரணியல் ரவி என்பவர் மூலமாக ஒரு கடிதம்
வந்தது. ஆனால் அதற்குப் பிறகு அவரே, வேறு வேலை
கிடைக்க வாய்ப்பு இருக்கிறது, ஆகவே, அரசு வேலை
வேண்டாம் என்று வழக்கறிஞர் மூலமாக எங்களுக்குத் தகவல்
தெரிவித்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே,
ஊழியர்கள் இறந்தால் 10,000 ரூபாய் தருவதைப்போல்,
ஆலயப் பணியாளர்களுக்கும் தருவதற்காக ஆணை பிறப்பிக்கப்
பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் அப்படித் தரப்படுவ
தில்லை. ரூ. 5,000 தான் தருகிறார்கள். எனவே அவர்களுக்கும
ரூ. 10,000 தரப்படுமா என்பதையும், சென்ற ஆண்டுவரை
அரசு ஊழியர்களும் பெற்றதைப்போல் பொங்கல் இனாமாக
ரூ. 400 ஆலயப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.
ஆனால் இந்த ஆண்டு வழங்கப்படவில்லை. அதையாவது
இந்த ஆண்டு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ரூ. 10,000, ரூ. 5,000 ரூ. 20,000 என்று வழங்குவதிலே ஒரு குழப்பம் இருப்பதாக நான் அறிகிறேன். விபத்தில் இறந்தவர்களுக்குத்தான் ரூ. 10,000 கொடுக்கிறோம். தொழிலாளர்கள்—அதாவது பனையிலிருந்து கீழே விழுந்து இறந்தால் அல்லது கடலில் சென்று அங்கே இறந்தால் இப்படித் தொழிலில் போய் இறந்து போகிறவர்களுக்குத்தான் ரூ. 10,000 கொடுக்கிறோம். அரசு ஊழியர்கள் சாதாரணமாக மரணமடைந்தாலும் ரூ. 20,000 தரப்படுகிறது. அது அவர்களிடம் மாதா மாதம் வசூலிக்கப்படுகிற தொகையிலிருந்து தரப்படுகிறது. அந்த நிதியிலிருந்துதான் ரூ. 20,000 தரப்படுகிறது. விபத்தில் இறந்தால் கொடுப்பதையும், இதையும் போட்டுக் குழப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். விபத்தில் இறந்தால் ரூ. 10,000 என்று அறிவித்திருக்கிறோம். அரசு ஊழியர் மரணம் அடைந்த பிறகு அவர்கள் தருகிற தொகையிலிருந்து ரூ. 20,000 தரப்படுகிறது. அதுபோல் ஆலய ஊழியர்களிடமிருந்தும் ஒரு தொகையைப் பெற்றுக்கொண்டு அந்த நிதியிலிருந்து தற்போது ரூ. 5,000 தருகிறார்கள். எனவே அவர்கள் தருகிற பணத்தை அதிகரித்தால்தான் ரூ. 10,000, ரூ. 20,000 என்று கொடுக்க முடியும். இப்போது ரூ. 5,000 தான் தர முடியும்.

*திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிர்வாகத்தில் தவறு செய்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பாடியில் திருவொட்டீஸ்வரன் கோயிலில் ஒரு அதிகாரியும் இராமேஸ்வரம் கோயிலில் ஒரு அதிகாரியும் தவறு செய்துவிட்டு, அவர்கள் மீது கோப்புகள் இருந்தும்கூட அவர்கள் எதன் காரணமாக நடவடிக்கை எடுக்கப்படாமலே பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். அடுத்து தற்போது எத்தனைத் திருக்கோயில்கள் தக்கார்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள், இன்னும் எத்தனை பேர் பதவியில் இருக்கிறார்கள், தக்கார்கள் நீக்கப்பட்ட கோயில்களுக்கு புதிய நிர்வாகிகளைப் போட ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். மேலும் சென்னை நகரத்தில் அண்ணா நகரில் சாந்தி காலனிப் பகுதியில் 80 கடைகள் கட்டப்பட்டு பல ஆண்டுகளாகியும் கூட அவை இன்னும் சரியான முறையில் விற்கப்படவோ அல்லது வாடகைக்கு விடப்படாமலோ இருப்பதால் அவை வேறு காரியங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அது பற்றி என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன். கே. கே. நகரில் கீழ் மாடி, மேல் மாடி கட்டி இடையிலே பல ஆண்டுகளாக, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து சொற்பொழிவு ஆற்றாதீர்கள்; மணி 9.35.

திரு. கோ. பூவராகன்: பேசுவதற்குக் காலையில் வாய்ப்பு கேட்டும் கொடுக்கவில்லை; இப்போது கேட்டும் கொடுக்கவில்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு எத்தனை வாய்ப்புத்தான் பெற முடியும்?

திரு. கோ. பூவராகன்: வாய்ப்பு இல்லை; இதை ஒரு கேள்வியாகத்தான் கேட்கிறேன். அந்த இரண்டு இடங்களையும் பயன்படுத்துவதற்கு எந்த அளவுக்கு முயற்சி எடுக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து முந்திரிப்பழம் ஏராளமாக நம்முடைய காடுகளில் இருக்கின்றன. தனியார் துறையிலும் இருக்கின்றன. அந்தப் பழங்களிலிருந்து ஆந்திராவிலும், கோவாவிலும் ஒரு மினி லிக்கர் தயாரிக்கிறார்கள். அதுபோல் நம்முடைய மாநிலத்திலும் அதை பயன்படுத்தி நல்ல முறையிலே வருவாயைப் பெருக்குவதற்கு ஏதாவது ஒரு தொழிற்சாலை அமைக்கும் வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவரவர்களே, ஆலய ஊழியர்களுக்குப் பொங்கல் இனாம்பற்றிக் கேட்டார்கள். அவர்களுக்கு 400 ரூபாய் இதுவரை கொடுக்கப்பட்டதாக எனக்கு தகவல் இல்லை. அந்த 20 கோவில்களுக்கு கீழே உள்ளவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் இரண்டு ஆண்டுகளுக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டும் அது தொடர்ந்து கொடுக்கப்படும். அரசு ஊழியர்களுக்கு 400 ரூபாய் தருகிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் கோவில் ஊழியர்களுக்கு, முதல்நிலை திருக்கோவில் ஊழியர்களுக்கு ஏறத்தாழ 4 ஆயிரம் ஊழியர்களுக்கு அது இதுவரை தரப்படவில்லை. ஆனால் அவர்களுக்கு எந்த வகையில் அதைத் தருவது என்பதை நாங்கள் பரிவோடு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். நிச்சயமாக அவர்கள் மன நிறைவு அடையும் வகையில் அது முடிவு செய்யப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல் இராமேஸ்வரம் கோவில் அதிகாரியைப் பற்றி சொன்னார்கள். நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். சமீபத்தில் அவர் மறைந்துவிட்டார். அந்தப் பிரச்சினையை இப்போது விட்டுவிடுவோம்.

முந்திரிப் பழத்தை அல்லது அதன் நட்டை வைத்து ஒரு தொழிற்சாலை இங்கே தொடங்கலாம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்தில் உள்ள செல்கிரிட் தொழிற்சாலை நட்டத்தில் ஓடிக்கொண்டியிருக்கிறது. அது லாபத்தில் ஓட முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். வனத்துறையில் சந்தன எண்ணெய் ஆலை இருக்கிறது. அது நட்டத்தில் ஓடிக்கொண்டிருந்தாலும்கூட, மூடப்பட்டு இருந்தாலும்கூட, அதை மீண்டும் திறந்து ஓட்டவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே இன்னொரு தொழிற்சாலை இப்போது தொடங்க உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

ஈ கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாகம்.

திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 12 தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,31,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(உ) கோரிக்கை எண். 25—சின்கோனா.

திரு. என். பழனிவேல் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

திரு மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 25–சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,47,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஊ) கோரிக்கை எண். 33.—வீட்டுவசதி

திரு. வி. தம்புசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண் 33-வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,62,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



(பிற்பகல் 9-40.)

(எ) கோரிக்கை எண் 45.—காட்டுவளத்துறை

திரு. கோ. வீரையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 45 காட்டுவளத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,36,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஏ) கோரிக்கை எண் 56.—காட்டுவளம் குறித்த மூலதனச்செலவு.

(வெட்டுத் தீர்மானம் எதுவுமில்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர். பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 56. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 23, 35,27, 000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (21–4–1989) காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 9-41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

79. வேடசந்தூர் தாலுகாவைச் சேர்ந்த செல்லம்பட்டி மற்றும் கொசவபட்டி கிராமங்களை தானமாக அளிக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சி துறையின் 17-11-1987 ஆம் நாளிட்ட 904–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

80. கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த சில பயணிகள் பேருந்துகளுக்கு செலுத்தக்கூடிய வரி பாக்கிகளை ரத்து செய்வது குறித்து உள் (போ.1) துறையின் 3.5.1988 ஆம் நாளிட்ட 996

ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

81. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையின் 23.2.1988 ஆம் நாளிட்ட 344 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

98. கோரிக்கை எண். 29—தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்பு-பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90. (தமிழ், ஆங்கிலம்).

99. கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத்துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90. (தமிழ், ஆங்கிலம்).

100. கோரிக்கை எண். 47—சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90. (தமிழ், ஆங்கிலம்).

101. கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90. (தமிழ், ஆங்கிலம்).

102. கோரிக்கை எண். 25—சின்கோனாத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90. (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்—தொடர்ச்சி.

103. கோரிக்கை எண். 33—வீட்டு வசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90. (தமிழ், ஆங்கிலம்).

104. கோரிக்கை எண். 45—வனத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989–90. (தமிழ், ஆங்கிலம்).

105. சின்கோனாத் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1989–90. (தமிழ், ஆங்கிலம்).

106. சின்கோனாத் துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு செலவுத் திட்டம், 1989–90. (தமிழ், ஆங்கிலம்).

107. வனத்துறை பற்றிய சாதனைத் திட்டம், 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

108. ஊரக வளர்ச்சித் துறையின் திட்டங்கள் குறித்த புத்தகம்.

109. ஊரக வளர்ச்சித் துறை அடிப்படைப் புள்ளிவிவர கையேடு.



## இணைப்பு I.

## தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.

### அத்தியாயம்—I.

இந்த அரசு ஏழை எளியவர்களாலும், சமுதாயத்தில் நலிந்தவர்களாலும் அமைக்கப்பட்ட அரசு என்ற முறையிலும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும், சமூகத்தில் வசதி படைத்தவர்களுக்கும் வசதியற்றவர்களுக்கும் உள்ள இடைவெளியை குறைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், அதனுடைய கொள்கைகள் சமூகத்தில் வசதியற்றவர்களின் எதிர்பார்ப்புகளுக்கும், எண்ணங்களுக்கும் ஈடுகொடுக்கின்ற வகையில் இருக்கும் என்பது வெளிப்படை. அந்தக் கொள்கையை "வாழ்க தொழிலாளர், வளர்க தொழில்" என்ற கோட்பாட்டில் காணலாம். மற்றவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி ஒருவர் உயர்ந்து விடலாம் அல்லது வளர்ச்சியடைந்து விடலாம் என்றால் அது முடியாத காரியம் என்பது தெரிந்ததே. சமூகத்தில் நலிந்த பிரிவினரை சுரண்டுவதற்கு எந்த வகையான வாய்ப்பும் இருக்கக்கூடாது என்பதில் இந்த அரசு கவனமாகவும் உறுதியாகவும் உள்ளது. தொழிலாளர்களுக்கு தங்களை யாரும் சுரண்டிவிடுவார்கள் என்ற அச்சமோ, தங்களை யாரும் நசுக்கிவிடுவார்கள் என்ற பயமோ, தங்களது வளர்ச்சிக்கு எந்த வகையான முட்டுக்கட்டையும் ஏற்பட்டுவிடுமோ என்ற உணர்வும், இல்லாமல் இருந்தால் அவர்களுக்கு மனநிறைவு எற்படும். அத்தகைய மனநிறைவு உள்ள தொழிலாளர்கள்தான் தொழிலகத்திற்கும் ஏன் சமுதாயத்திற்கும் பெரும் சொத்து ஆவார்கள். ஒரு தொழிலாளி அச்ச உணர்வோடும், அவல நிலையோடும் உள்ளக் குமுறலோடும் மனநிறைவற்றும் இருந்தால் அந்த தொழிலாளியால் தனது திறமை முழுவதையும் வெளிகாட்டி செயல்பட முடியாது. இந்த அரசின் ஒவ்வொரு முயற்சியும் தொழிலாளர்களுக்கு மன நிறைவு தரவும், தொழிலாளர்களின் நலம் பாதுகாக்கப்படவும் உரிய சூழ்நிலையை உருவாக்குவதேயாகும். மனிதனுக்கு பொருளாதார வசதிதான் முக்கியம் என்பதல்ல, சுயமரியாதையும் முக்கியம். சட்டங்களின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு தொழிலாளர் நல வசதிகளை பெறுவதற்கு அவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. முரண்பாடு அல்லது தொழிற் தகராறு என்ற உடனேயே சில தொழில் அதிபர்கள் அஞ்சுவது போன்று வெறுக்கத்தக்கதல்ல. முரண்பாடான சூழ்நிலையில் உள்ள தொழிற் தகராறுகளை சரியான முறையில் அணுகினால் அவைகள் ஆக்கப் பூர்வமானதாகவும்; வளர்ச்சிக்கு சக்தியை கொடுக்கக் கூடியதாகவும், சகோதரத்துவத்தை வளர்ப்பதாகவும் இருக்கும். பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நல்ல மனோபாவமும், ஆக்கப்பூர்வமான அணுகுமுறையும் சம்பந்தப்பட்ட எல்லோரிடமும் இருக்க வேண்டும்.

## அத்தியாயம்—2.

### தொழில் உறவு.

2.1 தொழில் வளர்ச்சி அமைவதற்கும், புதிய தொழில்கள் ஏற்படுவதற்கும், தொழிலாளர் நலம் வளர்வதற்கும், நல்ல தொழில் அமைதி நிலவ வேண்டும் என இந்த அரசு நம்புகிறது.

தொழில் அமைதி காப்பதற்கு இரு வகையான அணுகு முறைகள் உள்ளன. (1) வருமுன் காத்தல், (2) தீர்வு காணுதல், இந்த அரசு முதல் வகையான அணுகுமுறைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. காரணம் அதன் மூலம்தான் ஒருவருக்கொருவர் நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் மலரச் செய்ய முடியும்.

இந்த அணுகுமுறைக்கு உகந்தவாறு தொழில் உறவு அமைப்பை சீரமைப்பதற்கான சாத்திய கூறுகளை பரிசீலனை செய்வோம்,

'வருமுன் காத்தல்' அணுகுமுறை என்று நாங்கள் சொல்லும் போது அன்றாட பணிகளில், அரசு, தேவையற்ற முறையில் அடிக்கடி தலையிட விரும்புகிறதோ என்று எண்ணத் தேவை யில்லை. நிர்வாகத்தினரும் தொழிலாளர்களும் நேரிடையாக உட்கார்ந்து தங்கள் வளர்ச்சியை மற்றும் நிறுவன வளர்ச்சியை குறித்து பேசி அவ்வப்போது முடிவெடுக்க வேண்டும். அதில் அவர்களுக்கு சிரமம் இருப்பின், அவர்கள் தொழிலாளர் துறையி உள்ள விற்பன்னர்களின் உதவியை நாடலாம்.

### உற்பத்தித் திறன் பெருக்குதல்.

2.2 உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டும் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. சி. வி. இராமன் கூறியதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர் சொன்னார், 'இந்தியாவில் பொருளாதார பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஒரே ஒரு தீர்வுதான் இருக்கிறது. அது விஞ்ஞானம்—அதிகமான விஞ்ஞானம், இன்னும் அதிகமான விஞ்ஞானம் அதே முறையில் சொல்வதாக இருந்தால் உற்பத்தித்திறன்—அதிகமான உற்பத்தி திறன்—இன்னும் அதிகமான உற்பத்தித் திறன் என்பதாகும். இப்போதுள்ள போட்டி மிக்க சூழ்நிலையில் நாம் தாக்குப்பிடிக்க, தாழ்வற வாழ, வெற்றிபெற்று மிளிர உற்பத்தித் திறன் ஒன்றே வகை செய்யும். உற்பத்தித் திறன் என்ற சொல்லுக்கு விளக்கம் அளிப்பது நல்லது என்று கருதப் படுகிறது. 'உற்பத்தித் திறன்' இருக்கின்ற மனித சக்தி, மூலப் பொருட்கள், இயந்திரங்கள், பணம் ஆகியவற்றை சரியான முறையில் பயன்படுத்தி அதிக உற்பத்தியை அடைதல் என்பதாகும்.

2.3. உடலுழைப்பு பணியாக இருந்தாலும் அல்லது அறிவு சால் பணியாக இருந்தாலும், உற்பத்தித் திறன் என்பது நமது வாழ்க்கை முறையாக அமைய வேண்டும். நமது எதிர்காலத்தை,



உற்பத்தித் திறனால்தான் செழுமையுள்ளதாக அமைக்க முடியும். உற்பத்தித் திறனுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அதே நேரத்தில், உற்பத்தித் திறனின் பலன்களை தொழிலாளர்களுக்கு உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கும்.

உற்பத்தி திறனை நிர்ணயிக்கும் போது தொழிலாளர்கள் முழுமையாக ஈடுபடுத்தப்பட வேண்டும்.

### மூடிய நலிந்த ஆலைகளை திறந்து வேலைவாய்ப்பளித்தல்.

2.4. ஆலைகள் மூடப்பட்டதினால் வேலை இழந்த தொழி லாளர்களின் சொல்லமுடியாத இன்னல்களும் அவல நிலையும் இந்த அரசின் மனக்கண்முன் நிறைந்து நிற்கிறது. அந்தத் தொழிலாளர்களின் இன்னல்களைக் களையவும், துயரங்களைத் துடைக்கவும் மூடப்பட்ட ஆலைகளை முடிந்த வரையில் திறப்பதற்கு உறுதி கொண்டுள்ளது.

2.5. இத்தகைய ஈடுபாட்டினாலும் எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கைகளினாலும், வெவ்வேறு மட்டங்களில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளினாலும் கீழ்க்கண்ட மூன்று ஆலைகள் 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் திறக்கப்பட்டன.

1. தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், கோவை.
2. வாசுதேவ டெக்ஸ்டைல்ஸ், கோவை.
3. கே.ஜி.எஸ். ஸ்பின்னர்ஸ், கோவை.

2.6. இந்த ஆலைகளை திறப்பதற்கு அரசு அளித்த சலுகைகள்:—

1. மூன்று ஆண்டுகளுக்கு மின்வெட்டிலிருந்து விதிவிலக்கு.
2. மூன்று ஆண்டுகளுக்கு விற்பனைவரி வசூலித்தலை நிறுத்தி வைத்தல்.
   நான்காவது ஆண்டில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்ட விற்பனை வரியை செலுத்திட வேண்டும்.
3. அரசு உத்திரவாதம்.
4. இந்த நிறுவனத்தை நிவாரண நிறுவனமாக அறிவித்தல்.

2.7. மற்ற ஆலைகளைப் பொறுத்தமட்டில், அவற்றின் இயக்கத் திறன் பற்றி நிபுணர் குழுவின் ஆய்வுக்கு விடப் பட்டுள்ளது. மேல்நடவடிக்கை தொடர்கிறது. இதற்கிடையில் தற்காலிகமான இடைக்கால நிவாரணமாக ஒரே நேர நிவாரண மாக பாதிக்கப்பட்ட ஒரு தொழிலாளிக்கு ரூ. 250 வீதம் அரசு அனுமதித்துள்ளது. இந்த நிவாரணம் 19 மூடிய ஆலைகளுக்கும், 4 பொறியியல் நிறுவனங்களுக்கும் பொருந்தும். இதற்கான பணம் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஏறத்தாழ 9,000 தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்.

2.8. இதர மூடிய ஆலைகளை திறப்பதற்கு அரசு மேற்கொண்ட தீவிர முயற்சிகள் பல்வகைப்பட்டது. நிறைவானது. சில மூடிய ஆலை நிர்வாகத்தினர் அவற்றை திறப்பதற்கு மனம் இன்றி இருக்கிறார்கள். அல்லது நிதியின்மையின் காரணமாக திறக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய ஆலைகளைப் பொறுத்தமட்டில் புதிய அதிபர்களை கண்டுபிடித்து அவர்கள் மூலம் ஆலைகளைத் திறப்பதற்கு நிலுவையிலுள்ள பிரச்சனைகளை தீர்த்து அரசு சலுகைகள் கொடுக்கும் என அறிவித்து, மேற்கொண்ட முயற்சி உற்சாகம் அளிப்பதாகவும், நல்ல பயனை அளிப்பதாகவும் உள்ளது. இயங்க இயலாத நிலையிலுள்ள அல்லது இயக்க முடியாத நிலையிலுள்ள ஆலைகளையும் திறப்பதற்கு புதிய அணுகுமுறைகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு மூடிய ஆலைகளிலுள்ள தொழிலாளர்களின் பிரச்சினைகளில் பெருங்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளர் நலச் சட்டங்கள், தீர்ப்புகள் ஆகியவைகளைத் திறம்பட அமல் செய்தல்.

2.9. தொழிலாளர் நலச் சட்டங்கள் எவ்வளவு நல்ல நோக்கங்களை கொண்டதாக இருந்தாலும், அவை எப்பொழுது பொருள் உள்ளதாக இருக்கும் என்றால், அவைகள் சரியான முறையில் செயல்படுத்தப்பட்டு அதன் மூலம் தொழிலாளர்கள் நன்மையடையும் பொழுதுதான். தொழிலாளர் நலச் சட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்த தொழிலாளர் துறை ஆய்வாளர்கள் தேர்ந்த பயிற்சி பெற்றவருமாகவும், நல்ல ஆர்வமுள்ளவருமாகவும் இருக்கவேண்டும். தொழிலாளர்கள் சட்ட ரீதியான பயன்களை அடைவதற்கு ஆய்வாளர்கள் பணிகளை அவ்வப்பொழுது திறனாய்வு செய்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும். சமூக சீர்திருத்த சட்டங்களை அமுல் செய்வது தனித்தன்மை வாய்ந்தது. அது காவல்துறை பணியை ஒத்ததல்ல. ஒரு தொழிலாளர் துறை ஆய்வாளர், சட்ட அமுலில் நோக்கங்களை கருத்தில் கொண்டு ஒரு நல்ல நண்பனாகவும், ஒரு ஆலோசகராகவும், ஒரு வழிகாட்டியாகவும் செயல்பட வேண்டும். சட்ட அமுலில் முக்கிய நோக்கங்கள் :

1. சட்டத்தின் பயன்களை தொழிலாளர்கள் அடைய செய்வது.
2. நுகர்வோர் நலத்தை பாதுகாத்தல்.
3. சட்டத்தை அமுல் செய்வதின் மூலம் துன்புறுத்தலையும், அச்சுறுத்தலையும் தவிர்த்தல்.

தொழிலாளர் நலச் சட்டங்கள், உடன்படிக்கைகள், நீதிமன்ற தீர்ப்புகள் ஆகியவற்றை செயல்படுத்துவதில் அரசு தீவிரமாகவும், உறுதியாகவும் இருக்கும்.



குறைந்த பட்சசம்பளம்.

2.10. அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள், மொத்த தொழிலாளர்களில் பெரும் பகுதியாவார்கள். அவர்களின் உயர்வுக்கு போதிய சட்டங்கள் இயற்றப்படவில்லை. அவர்கள் புகலிடமாக செல்லக்கூடிய ஒரே சட்டம் குறைந்தபட்ச சம்பளச் சட்டமாகும். அந்தச் சட்டம் சரியாக அமுல் செய்யப்படவில்லை என்பது பொதுவான குறைபாடு ஆகும். அந்த தொழிலாளர்கள், நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச சம்பளத்தை பெறுவதற்கு எல்லா முயற்சிகளும் எடுக்கும்.

2.11. இந்த அரசு கீழ்க்கண்டவற்றை செயல்படுத்த பெரும் முயற்சி மேற்கொள்ளும்:—

1. குறைந்தபட்ச சம்பளத்தை அவ்வப்பொழுது மாற்றி அமைப்பது.
2. தினச் சம்பளம் ரூ. 15-க்கு குறையாமல் நிர்ணயிப்பது.
3. எல்லா தொழிலுக்கும் அகவிலைப்படி நிர்ணயிப்பது.
4. அகவிலைப்படியை விலைவாசிப் புள்ளியுடன் இணைப்பது.

பல்வேறு சட்டங்களின் செயல்பாடு பற்றிய புள்ளி விவரங்களை 1 முதல் 9 வரை உள்ள இணைப்புகளில் பார்க்கலாம்.

குறைந்தபட்ச ஊதிய வேளாண்மை தொழிலாளர்களின் விகிதங்கள் கடந்த 3–4–1989-ம் நாள் முதல் அரசால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

சில தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்தி அமைத்தல்.

2.12. சில தொழிலாளர் நலச் சட்டங்கள் அதாவது 1981-ம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் (வேலை முறை மற்றும் இதர வகைகள்) சட்டம், (2) 1982-ம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், (3) 1986-ம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர்கள் (வேலை முறைப் படுத்துதல்) சட்டம் ஆகியவை இதுவரை செயல்படுத்தப்படவில்லை. இந்த அரசு அவற்றை ஆழமாக பரிசீலனை செய்து, தேவையான திருத்தங்கள் செய்து, தீவிரமாக அமுல் செய்யும்.

புதிய சட்டங்கள்.

2.13. தொழிலாளர்களின் எண்ணங்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் வகையில் புதிய சட்டங்கள் இயற்றப்படும். தனிப்பட்ட பாதுகாப்பு தொழிலாளர்கள் ஏஜென்சியின்

மூலம் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு தொழிலாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்த முறையின் மூலம் பெரிய சுரண்டல் இருக்கிறது என்பது இந்த அரசு அறியும். தொழிற் சாலை நிர்வாகத்தினர் நேரிடையாக நியமிக்கும் பாதுகாப்பு தொழிலாளர்களின் சம்பளத்திற்கும், இத்தகைய ஏஜென்சியின் மூலம் நியமிக்கப்படுகின்ற தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும் சம்பளத்திற்கும் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது. இந்த சுரண்டலை தடுத்து நிறுத்துவதற்கு சட்டம் இயற்ற அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

2.14. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947-ம் ஆண்டு இயற்றப்பட்டது. இன்றைய மாறுபட்ட சூழ்நிலையில் அந்த சட்டம் பொருத்தமற்றதாகிவிட்டது. எனவே, அந்தச் சட்டத்தை முழுமையாக மாற்றியமைக்க மசோதா வரைவு செய்யப்பட்டுள்ளது. அரசு அதனை சட்டமாக இயற்றுவதற்கு முன்னால் முழுமையாக பரிசீலனை செய்யும்.

### விதிவிலக்கு அளிப்பதை ஊக்குவிக்காமை.

2.15. சட்டத்தை சீராக அமுல்படுத்துவதை தவிர்க்கின்ற வகையில் சில விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருப்பது தொழிற் சங்கங்களால் இந்த அரசு கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இந்த அரசு அவற்றை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

1980-ம் ஆண்டு முதல் 1986-ம் ஆண்டு வரை பல்வேறு பீடி முதலாளிகளுக்கு கீழ்க்கண்ட பதிவேடுகளை பராமரிப்ப திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது:—

(1) வீட்டிலிருந்து பணிபுரியும் பீடி தொழிலாளர் களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு பதிவேடு.

(2) வீட்டிலிருந்து பணிபுரியும் பீடி தொழிலாளர் களுக்கு பணிப் பதிவேடு.

(3) வீட்டிலிருந்து பணிபுரியும் பீடி தொழிலாளர் களுக்கு வேலைநிலைமை பதிவேடு.

1966-ம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், மற்றும் தமிழ்நாடு 1968-ம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள் ஆகியவற்றையும், தொழிலாளர் வைப்பீட்டுத் தொகை சட்டத்தையும் அமுல் செய்வதற்கு மேற்கண்ட பதிவேடுகள் இன்றியமையாதவையாகும். இந்த அரசு இந்த விதிவிலக்கு களை பரிசீலனை செய்து அவற்றை ரத்து செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுத்து உள்ளது. இந்த விதிவிலக்குகளை ரத்து செய்வதன் மூலம் லட்சக்கணக்கான, வீட்டிலிருந்து பணிபுரியும் பெண் தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.



### சில முக்கிய தகவல்கள்.

2.16. சட்ட திருத்தங்கள்.

(அ) தொழிற் தகராறு சட்டம் பிரிவு 2-ஏ திருத்தப் பட்டுள்ளது. இதன்படி வேலைநீக்கம் செய்யப்பட்ட ஒரு தொழிலாளியின் பிரச்சினையில் சமரச அலுவலர் முன் உடன்படிக்கை ஏற்படவில்லையென்றால் அவர் நேரடியாக தொழிலாளர் நீதி மன்றத்தில் மனு செய்து நிவாரணம் தேடலாம். இந்த சட்ட திருத்தம் 1–11–1988 முதல் செயல் படுத்தப்பட்டுள்ளது. இந்த சட்ட திருத்தத்திற்கான விதிகளை அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 15–3–1989-ம் தேதிய ஆணை எண் 505 மூலம் உறுதி செய்துள்ளது.

(ஆ) தமிழ்நாடு சம்பளப் பட்டுவாடா விதிகள், விதி 5 (பி)-ன் கீழ் வேலையளிப்பவர் தொழிலாளிக்கு சம்பள விவரம் குறித்த சீட்டு கொடுக்க வேண்டும் என்ற பொருள்பட திருத்தப் பட்டு உள்ளது. தமிழ்நாடு குறைந்தபட்ச சம்பள விதிகளின் கீழ் இத்தகு சம்பள சீட்டு வழங்கினால் மேற்கண்ட சட்டத்தின் கீழ் சம்பள சீட்டு வழங்க வேண்டியதில்லை.

(இ) தமிழ்நாடு பிழைப்பூதிய பட்டுவாடா சட்டத்தின் கீழ் வழங்கப்படவேண்டிய பிழைப்பூதியம் வழங்கப்படவில்லை யென்றால் அந்த சட்டப் பிரிவு 7(1)-ன் கீழ் தொழிலாளி தொழிலாளர் துறை உதவி ஆணையர்க்கு மனு செய்யலாம். அந்த ஆணையரின் உத்தரவை எதிர்த்து தொழிலாளர் துறை துணை ஆணையர்க்கு மேல்முறையீடு செய்யலாம். 1981-ம் ஆண்டின் தமிழ்நாடு பிழைப்பூதியம் பட்டுவாடா விதிகள், விதி 5 (பி)-ன் கீழ் 2-வது மேல்முறையீடு செய்வதற்கு வழி வகையுள்ளது. இது மேலும் மேலும் வழக்குகளை வளர்ப்பதற்கு வாய்ப்பாகி விடுகிறது. இதைத் தவிர்க்க 2-வது மேல்முறையீடு செய் வதற்கான விதிமுறையை நீக்க அரசு ஆலோசித்து வருகிறது. அந்த சட்டத்தின் கீழ் மேலும் மேலும் மேற்பார்வை பணி யாளர்கள் சலுகை பெறும் வாய்ப்பை அதிகரிக்க ஏதுவாக அதிக பட்ச சம்பள வரையறையான ரூ. 500-ஐ மாதம் ரூ. 1,600 ஆக திருத்த அரசு உத்தேசித்துள்ளது.

(ஈ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் களுக்கு நிரந்தரத் தகுதி அளித்தல்) சட்டத்தின் பயனைப் பெற மேற்பார்வையாளர்களுக்கு உச்சவரம்பு மாத சம்பளம் ரூ. 1,000 ஆகும். அதனை மாதம் ரூ. 1,600 ஆக திருத்த அரசு பரிசிலனை செய்து வருகிறது.

### வீட்டு வசதித் திட்டம்.

2.17. பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு வாய்ப் பாக, பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் உள்ளது. இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு

மாநில அரசுக்கு வீடு கட்ட ஆகும் தொகையில் 50 சதவீதத்தை மான்யமாக கொடுத்து விடுகிறது. வீடு கட்ட அதிகப்படியாக ஆகும் செலவு, ஒரு வீட்டிற்கு ரூ. 5,000 என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் வேலூரில் சத்வாச்சாரி என்னுமிடத்தில் 150 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

**சட்ட உதவி.**

2.18. தொழிலாளர் நீதிமன்றம் தொழிலாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பு அளித்து அதை எதிர்த்து நிர்வாகம் உயர் நீதிமன்றத்திற்கு சென்றால், எதிர்வழக்காட தொழிலாளர் களுக்கு உதவித் தொகை வழங்க இந்தத் திட்டம் வகை செய்கிறது. ஒரு கட்டளை மனு அல்லது கட்டளை மேல் முறையீடுக்கு ரூ. 150 வீதம் வழங்க தொழிலாளர் துறை ஆணையருக்கு அதிகாரம் உள்ளது. தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் அல்லது அவர்களை சார்ந் தவர்கள் வழக்கை நடத்துவதற்கு உதவியாக ஆண்டுக்கு ரூ. 1,000 வரை அரசு அனுமதிக்கலாம்.

**தொழிலாளர் துயர் துடைப்பு நிதி.**

2.19. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15,000 மானியமாக கொடுத்து அரசு மேற்கண்ட நிதியை நிறுவி உள்ளது. தொழிலாளர்கள் பணியிலிருக்கும்போது விபத்து ஏற்பட்டு அதனால் நிரந்தரமாக இயலாமையுற்றால் அல்லது இறந்துபோகும் தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு தொழிலாளர்கள் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் இழப்பீடு கொடுக்க வேண்டியது, கொடுக்கப்படாமல் இருந்தால் அந்த நிதியிலிருந்து நிவாரணம் வழங்கலாம். 1988-ம் ஆண்டு ரூ. 78,790 நிவாரணமாக வழங்கப் பட்டுள்ளது.

2.20. கீழ்க்கண்ட தொழிலாளர் சட்டங்கள் இத்துறை யினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவைகளைத் தவிர எடைகள் மற்றும் அளவுகள் சட்டத்தையும் இத்துறை செயல் படுத்துகிறது.

1. தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், 1923.
2. தொழிற்சங்க சட்டம், 1926.
3. ஊதியம் வழங்கல் சட்டம், 1936.
4. தொழிற்சாலை வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம், 1946.
5. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947.
6. தொழிற் தகராறுகள் சட்டம், 1947.
7. குறைந்த பட்ச சம்பளச் சட்டம், 1948.



8. தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1951.
9. உழைக்கும் பத்திரிகையாளர்கள், பத்திரிகைத் தொழி லாளர்கள் (பணி நிலைமைகள் பல்வகை விதித் தொகுப்புகள்) சட்டம், 1955.
10. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958.
11. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய/பண்டிகை விடுமுறைகள்) சட்டம், 1958.
12. மகப்பேறு பயன் சட்டம், 1961.
13. மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1961.
14. போனஸ் பட்டுவாடா சட்டம், 1965.
15. பீடி சுருட்டுத் தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம், 1966.
16. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும், நீக்கு தலும்) சட்டம், 1970.
17. பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், 1972.
18. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972.
19. சம ஊதியச் சட்டம், 1976.
20. விற்பனை வளர்ச்சிப் பணியாளர்கள் (பணி நிலைமை கள்) சட்டம், 1976.
21. மாநிலங்களுக்கிடையே வெளியேறும் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பணி நிலைமை) சட்டம், 1979.
22. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டம், 1981.
23. தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம், 1981.
24. தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமை மற்றும் பல்வேறு விதித் தொகுப்பு) சட்டம், 1981.
25. சினிமா தொழிலாளர்கள் மற்றும் சினிமா அரங்கு தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1981.
26. குழந்தைத் தொழிலாளர்கள் (தடுத்தலும் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1986.

**நுகர்வோர் பாதுகாப்பு.**

2.21. மனசாட்சியற்ற வர்த்தகர்கள் பொருட்களைக் குறைவாக நிறுப்பதின் மூலம், அல்லது அளப்பதின் மூலம் பொது மக்களுக்கு இடர்ப்பாடு இழைக்கின்றனர். இதன் மூலம் வர்த்தகர்களின் லாபத்தை அதிகப்படுத்துகிறார்கள். ஒரு நாகரீகமான சமுதாயத்தில் ஒரு குழந்தை கடைக்கு சென்றாலும் குறைவாக நிறுத்து அல்லது அளந்து, அந்த குழந்தையை ஏமாற்றக்கூடாது.

இத்தகைய குறுக்கு வழிகளில் இறங்குகின்ற வர்த்தகர்கள் மீது இந்த அரசு கடுமையாக நடந்து கொள்ளும். தொழிலாளர் துறை, நுகர்வோரை ஏமாற்றுவதைத் தடுக்க பல உத்திகளைக் கண்டு பிடித்துள்ளது.

1985-ஆம் ஆண்டு எடை அளவுகளின் தரங்கள் (அமுல் படுத்துதல்) சட்டத்தை (மத்திய சட்டம்) இந்த அரசு 1–3–1989 முதல் அமுலுக்கு கொண்டு வந்துள்ளது.

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்.

2.22 ''தாய் உள்ளம் கொண்ட அரசு இருக்கும் இடத்தில் அரசாங்கமே கல்வி அளிக்கும்'' என்று டிஸ்ரேலி கூறினார். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தொழில் உறவிலும் அரசு கல்வி அளிக்கிறது. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் இந்த வகையில் பெரும் பணியாற்றி வருகிறது. ஆரோக்கிய மான தொழிற் சங்கங்கள் வளரவும் தொழில் உறவில் சம்பந்தப் பட்டவர்கள் மனோபாவம் நல்ல முறையில் அமையவும் தொழி லாளர் துறையை சார்ந்த அலுவலர்களின் திறமை வளர்க்கப் படவும் வெளியீடுகள் மூலம் அறிவைப் பரப்பவும் தொழிலா ளர்கள் பற்றிய ஆய்வுகள் செய்யவும் இந்தக் கல்வி நிலையம் 1973 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது தொழிலாளர் களுக்கும் நிர்வாகத்தினர்களுக்கும் அலுவலர்களுக்கும் பயிற்சிகள் நடத்தி வருகின்றது. தனிப்பட்ட நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப பயிற்சித் திட்டம் வகுத்து செயல்படுத்துகிறது. பாரத ஹெவி எலக்ட்ரிகல் லிமிடெட், சேலம் ஸ்டீல் ப்ளாண்ட், அரசு போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு மின் வாரியம், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், தமிழ்நாடு எக்ஸ்ப்ளோசிவ்ஸ் லிமிடெட், தமிழ்நாடு சுகர் கார்ப்பரேஷன் கியவை தங்களுக்காக தனிப்பயிற்சிகள் அளிக்குமாறு கேட்டு பயன் பெற்றுள்ளன.

2.23. இந்த கல்வி நிலையம், பி.எல்.எம். மற்றும் எம்.எல்.எம். ஆகிய பட்டப் படிப்புகளை நடத்துகிறது. இவை சென்னை பல்கலை கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. பி.எல்,எம். 3 ஆண்டு பட்டப்படிப்பாகும், எம்.எல்.எம், 2 ஆண்டுகள் நேர் பட்டப்படிப்பாகும்.

2.24. தொழிலாளர் நிர்வாகத்தில் மேல்நிலை பட்டயப் படிப்பு ஒன்றும் இக்கல்வி நிலையம் நடத்தி வருகிறது. இந்தப் பயிற்சிகளுக்கு விஞ்ஞான ரீதியாக மாணவர்கள் சேர்க்கப்படு கிறார்கள்.

## தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

2.25. நிர்வாகத்தினர் தொழிலாளர்களுக்கு நலன்களைச் செய்வதுதான் தொழிலாளர் நலம் என்ற எண்ணம் இருந்து வந்தது. தொழிலாளர் நல நிதிச் சட்டம் இந்த எண்ணத்திற்கு



மாறுபட்டது. தொழிலாளர்கள் நிர்வாகத்தினர் மற்றும் அரசாங்கம் ஆகியவற்றின் கொடையின் மூலம் நிதியைச் சேர்த்து அந்த நிதியிலிருந்து, தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர் களுக்கு நல வசதிகளை செய்து கொடுப்பது ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

2.26. தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர் பிரதி நிதிகளும், நிர்வாகப் பிரதிநிதிகளும் உள்ளனர். அதன் தலைவ ராக தொழிலாளர் நல அமைச்சர் உள்ளார்.

2.27. தொழிலாளர்களைச் சார்ந்த பெண்களுக்கு நல மையங்களை இந்த வாரியம் நடத்துகிறது. தொழிலாளர்கள் குழந்தைகளை பாதுகாக்க குழந்தைகள் பாதுகாப்பு மையங்கள் உள்ளன. பெண்களுக்கு தையல் கற்றுக்கொடுக்க வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பயிற்சி காலத்தில் ஒரு நபருக்கு ரூ. 60 வீதம் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. குழந்தை களுக்கு மதிய உணவும், பாலும் பழமும் கொடுக்கப்படுகிறது. மருத்துவ வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தொழிலாளர் குடி யிருப்பு மிகுந்த பல்வேறு இடங்களில் 78 படிப்பகங்கள் உள்ளன.

2.28. பல்வேறு இடங்களில் தொழிலாளர்களுக்கு விடுமுறை இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. ஊட்டி, கோடைக்கானல், இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் விடுமுறை இல்லம் கட்டு வதற்கு திட்டம் உள்ளது.

2.29. இந்த வாரியம் அளிக்கும் பல்வேறு நலத் திட்டங்கள் பற்றிய விவரங்களை இணைப்பு 8 முதல் 10 வரை காணலாம்.

## அத்தியாயம் 3.

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை.

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 15 இதர முக்கிய தொழி லாளர் சட்டங்களை (ஊதியம் வழங்கும் சட்டம், 1936 குறைந்த பட்ச ஊதியச் சட்டம், 1948, மகப்பேறு பயன் சட்டம்,1961 ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970, தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம் 1958 சம ஊதியச் சட்டம் 1976, தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தும்) சட்டம் 1981 குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு முறைப்படுத்துதல்) சட்டம் 1986, தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்குதல் சட்டம், 1981, பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972, தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972, அபாயகரமான பொறிகள் முறைப்படுத்துதல் சட்டம், வேலையாள் இழப்பீடு சட்டம் 1923, மாநிலங்கள்

குடிபெயரும் தொழிலாளர் சட்டம் மற்றும் பருத்தி கொட்டை பிரித்தல் அழுத்துதல் தொழிற்சாலைகள் சட்டம். 1925, ஆகியவற்றை அமுல்படுத்துகின்றது. மேற்கண்ட சட்டங்கள் அனைத்தும் தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் அமுல்படுத்தப்படுகின்றன. தமிழகத்தில் 31–12–1988 அன்று 14,649 தொழிற்சாலைகள் பதிவு பெற்று 8,16,032 தொழிலாளர்கள் உள்ளனர். மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் அமுலாக்கத்தினால் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் உடல்நலம், பாதுகாப்பு ஆகியவை உறுதிபடுத்தப்படுகின்றன.

3.2. 1987 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் திருத்தப்பட்ட சட்டம் 1—12— 1987 முதல் அமுலுக்கு வந்ததினை தொடர்ந்து அபாயகரமான இரசாயனப் பொருட்களை உபயோகிக்கும் சுகாதாரகேடு விளைவிக்கக்கூடிய ( nazardous process ) தொழிற்சாலைகளுக்கு பெரும் விபத்து தடுப்பு முறையினை முன்னேற்றப்படுத்துவதில் பெரும்பங்கு கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட கேடு விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதற்கான மூலாதார பிரச்சனைகள் மற்றும் நெருக்கடிகள் ஆகியவற்றை ஆராய்ந்து அவைகளை போக்க தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழிற்சாலை ஆய்வகத் துறை சட்டம் அமுல் நடத்தும் பிரிவாகவும், சோதனை மற்றும் பாதுகாப்புப் பிரிவாகவும் இரண்டு தொகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளன- மாநிலத்தில் 10 சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்கள் கேடு விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகளை கவனிக்க செயலாற்றுகின்றன. கடும் விபத்து தடுப்புப் பிரிவு (The Major Accident Hazard control cell) உரிய தளவாடங்களுடன் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் தொடர்புள்ள தொழிலாளர்கள் நலச் சட்டங்களை மேற்குறிப்பிடப்பட்டுள்ள கேடு விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகளை தவிர்த்து ஏனைய தொழிற்சாலைகளில் அமுலாக்கம் செய்ய 13 (சட்டம் அமுல் நடத்தும்) முறைப்படுத்தப்பட்ட கோட்டங்கள் செயல்படுகின்றன. பயன் தரத்தக்க முறைகளை இத்துறையினரால் மேற்கொள்ளப்படுவதால் - தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சிறப்பான பணிச் சூழ்நிலை உறுதிப்படுத்தப்படுகிறது. தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் சலுகைகளுக்கு உறுதியளிப்பதுடன் உற்பத்தி பெருக்கத்திற்கான ஆர்வத்தை தொழிலாளர்களிடம் ஊக்குவிப்பதற்காக உற்பத்திப் பிரிவு என்று தலைமை தொழிற்சாலைகள் ஆய்வர் அலுவலகத்தில் இணை தலைமை தொழிற்சாலைகள் ஆய்வர் ஒருவரின் தலைமையின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. இப்பிரிவு கருத்தரங்கு மற்றும் கல்வி திட்டங்கள் மூலம் சிறப்பாக செயல்படுகின்றது.





3.3. இந்த ஆய்வகத் துறையின் பணிகள் ஆவன:—

1. தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தொழிலாளர் சட்டங்களை நிர்வகிப்பது.

2. பாதுகாப்பு முறைகள் மற்றும் பயிற்சி.

3. அழுத்தக் கலன் சோதனை.

4. சுகாதார முறைகள்.

5. உற்பத்தித் திறன் முறைகள்.

6. தொழிலாளர் நல முறைகள்.

தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தொழிலாளர் சட்டங்களை நிர்வகித்தல்

3.4. 1988-ம் ஆண்டு துவக்கத்தில் 13,971 தொழிற்சாலைகள் 1948-ம் ஆண்டு தொழிற்சாலை சட்டத்தின் கீழ் இருந்தன. அவைகள் 1988-ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 14,649 ஆக அதிகரித்துள்ளன. 31—12—1986-ல் 1948-ம் ஆண்டு தொழிற்சாலை சட்டத்தின் கீழ் 8,16,032 தொழிலாளர்கள் உள்ளனர். 1987-ம் ஆண்டு ரூ. 1,08,01,289 வசூலிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாண்டு ரூ. 1,20,03,269 உரிமத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது. 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் ஏனைய தொழிலாளர் சட்டங்களை அமுலாக்கம் செய்வதில் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வருக்கு உறுதுணையாக 5 இணை தலைமை தொழிற்சாலைகள் ஆய்வர்கள், 28 துணை தலைமை தொழிற்சாலை ஆய்வர்கள் 47 தொழிற்சாலை ஆய்வர்கள், 42 உதவி தொழிற்சாலை ஆய்வர்கள் உள்ளனர். மேலும் ஒரு அறுவை சிகிச்சை மருத்துவரும், 8 உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களும் தொழிற்சாலை சட்டத்தின் கீழ் சுகாதார முறைகளை கண்காணித்து வருகின்றனர்.

நடப்பு ஆண்டில் 22,722 முறையான ஆய்வுகள் மேற்கொண்டதோடு விடுமுறை, சிறப்பு, திடீர், இரவு ஆய்வுகள் மற்றும் மேலாய்வுகள் ஆகியவைகளையும் சேர்த்து 37,103 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வு விபரங்கள் இணைப்பு 6-ல் தரப்பட்டுள்ளன.

3.5. தொழிலாளர்களுக்கு சட்டபூர்வமான நன்மை தரும் பல தொழிலாளர் நல சட்டங்களின் பயன்களை தொழிலாளர்கள் அடைய தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் புதிய தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட வேண்டும். இந்த குறிக்கோளின் அடிப்படையில் மேலும் பல புதிய தொழிற்சாலைகளையும் அதன் மூலம் பெரும்பான்மையான தொழிலாளர்களையும் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் கொண்டுவர, ஒவ்வொரு தொழிற்சாலை ஆய்வரும் மாதம்

ஒன்றுக்கு ஐந்து புதிய தொழிற்சாலைகளை தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறியீடு நிர்ணயித்து, அக்குறியீட்டை அடைவதற்காக தீவிர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.6. ஆய்வின்போது காணப்படும் சட்ட விதிகளின் முரண்பாடுகளை நிர்வாகத்தினருக்கு தெரியப்படுத்தி அதனை களைவதற்கான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன, கடுமையான முரண்பாடுகளை சுட்டிக் காட்டி அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாத சூழ்நிலையில் இறுதியாக வழக்கு தொடரப்படுகிறது. நடப்பு ஆண்டில் ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம், 1970. ஊதியம் வழங்கும் சட்டம், 1936 குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 ஆகியவற்றின் கீழ் 1,300 வழக்குகள் தவிர தொழிற்சாலை சட்டத்தின் கீழ் 4,048 வழக்குகள் தொடரப்பட்டு ரூ. 11,24,280 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளன. வழக்கு விபரங்கள் இணைப்பு 4-ல் தரப்பட்டுள்ளன.

3.7. துணை தலைமை தொழிற்சாலை ஆய்வர்களால் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதந்தோறும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளைக் கூட்டி தொழிலாளர்களின் குறைகளை அறிந்து அதனை உடனுக்குடன் ஆய்வர்களால் கவனிக்கப்படுகின்றது. நடப்பு ஆண்டில் 986 புகார்கள் பெறப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளன. முரண்பாடுகள் காணப்பட்ட நேரத்தில் அவைகளை களைய நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட்டுள்ளன.

3.8. 1—12—1987 முதல் 1987 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (திருத்தம்) சட்டம் அமுல்படுத்தப்படுகிறது. இச்சட்டத்தின் மூலம் அபராத விதிகள் கடுமையாக்கப்பட்டு உரிமையாளர் மற்றும் மேலாளர்களை பின்வாங்கச் செய்கிறது. இச்சட்டத்தின் எந்த ஒரு விதியினையாவது மீறுவதற்கு அதிகபட்சமாக ரூ.2,000-லிருந்து ரூ. 1,00,000 ஆக அபராதம் உயர்த்தப்பட்டுள்ளது. அதிகரிக்கப்பட்டுள்ள அபராத விதிகளினாலும் செம்மையான சட்ட அமுலாக்கத்தினாலும் விதிமுறைகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

3.9. பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சூழ்நிலையில் பணி செய்யும் நிலையை உறுதிப்படுத்த வரைபடங்கள் தொழிற்சாலை ஆய்வகத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டியுள்ளது. தொழிற்சாலை கட்டிடத்தின் உறுதி, தன்மை, காற்றோட்டம், ஒளி, பணி செய்யும் சூழ்நிலைகள், குறிப்பாக உற்பத்தி செய்யம் முறையில் உள்ள ஆபத்துக்கள், இயந்திரங்கள் அமைப்பு, பொருள்களை கையாளும் முறைகள் ஆகிய விபரங்களை கவனத்திற்கொண்டு வரை படங்கள் ஒப்புதல் அளிக்கப்படுகின்றன. வரைபடங்கள் ஒப்புதல் அளிப்பதை துரிதப்படுத்த, வரைபடங்களை ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் சார்நிலை அலுவலர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அதாவது அபாயகரமான உற்பத்தி முறை உள்ள தொழிற்சாலைகளை தவிர்த்து 100 தொழிலாளர்களுக்கும் குறைவாக உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்களை துணைத் தலைமை தொழிற்சாலை ஆய்வாளர்களும், 100-க்கு மேற்பட்டு 500-க்கு குறைவாக தொழிலாளர்கள் உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்களை இணைத் தலைமைத் தொழிற்சாலை ஆய்வர்களும் ஒப்புதல் அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அபாயகரமான உற்ப்த்தி முறை உள்ள தொழிற்சாலைகள் மற்றும் 500 தொழிலாளர்களுக்கு மேற்பட்டு தொழிலாளர்கள் உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வரால் ஒப்புதல் அளிக்கப்படுகின்றன.



3.10. இந்த வருடம் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வரால் 503 வரைபடங்களும், இணை தலைமை தொழிற்சாலை ஆய்வர்களால் 230 வரைபடங்களும், துணை தலைமை தொழிற்சாலை ஆய்வர்களால் 2,009 வரைபடங்களும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936.

3.11. தொழிற்சாலை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் பொறுத்தவரை. இச்சட்டம் தொழிற்சாலை ஆய்வகத் துறையால் அமுல் நடத்தப்படுகிறது. 23,017 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 183 வழக்குகள் இந்த ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்விவரங்கள் இணைப்பு 4 மற்றும் 6—ல் கொடுக்கப்பட்டுள்ளன.

குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948.

3.12. இச்சட்டம் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதியப்பெற்று தொழிற்சாலைகளில் தொழிற்சாலை ஆய்வகத் துறையால் அமுல் நடத்தப்படுகிறது. 11,988 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 712 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்விபரங்கள் இணைப்பு 4 மற்றும் 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (ஒழுங்குபடுத்தல் மற்றும் நீக்குதல்) சட்டம்.

3.13. தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் இயங்கிவரும் தொழிற்சாலைகளில் இச்சட்டம் இத்துறையால் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட முதன்மை நிர்வாகிகள் 582 உரிமம் பெற்ற ஒப்பந்தக்காரர்கள் 717

இந்நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 41,847. நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்ட வகையில் கட்டணமாக ரூ. 6,647-50 மற்றும் உரிமம் கட்டணமாக ரூ. 15,710.26-ம் வசூல் செய்யப்பட்டது. ஆய்வுகள் மற்றும் வழக்குகள் தொடுத்த விபரங்கள் இணைப்பு 4 மற்றும் 6-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப் படுத்துதல்) சட்டம், 1981.

3.14. இச்சட்டம், தொழிலாளர்கள் 24 மாதங்களில் தொடர்ச்சியாக 480 நாட்கள் தொழிற்சாலையில் பணிபுரிந்து இருப்பின், அவர்கள் நிரந்தரம் செய்யக் கோரும் தகுதியை அளிக்கிறது. இச்சட்டம், தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலையில், தொழிற்சாலை ஆய்வகத் துறையால் அமுல் நடத்தப்படுகிறது. 8,308 தொழில் நிறுவனங்கள் இச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 11'934 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு. 8,533 தொழிலாளர்கள் இந்த ஆண்டு பணியில் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

3.15 தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் நிரந் தரப் படுத்தும்) சட்டம், 1981 சில சட்டச் சிக்கல்கள் காரண மாக தீவிரமாக அமுல் நடத்த இயலாமலுள்ளது. மேலும் சில வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இச்சட்டம் மற்றும் விதிகள் அமுல் நடத்துவதில் உள்ள இடையூறு களை நீக்க தக்க திருத்தங்கள் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும் நிர்வாகத் தினால் தற்போது பேணப்படும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலித்து, நிரந்தரமாக்க தகுதியுள்ள தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய தொழிற்சாலை நிர்வாகத்தினரை வலியுறுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில், தீவிர ஆய்வுகள் மேற்கொண்டு சுமார் 10,000 தொழிலாளர்கள் நிரந்தரமாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாநிலப் பாதுகாப்பு பரிசுகள் மற்றும் சிரம்வீர் பரிசுகள்.

3.16. தொழிற்சாலையில் சிறந்த பாதுகாப்பு செயல்களை தெரிந்து கொள்ளவும், தொழில் பாதுகாப்பில் ஆழ்ந்த பற்றுகொண்டு இயங்கச் செய்யவும் நிர்வாகத்தினர்களுக்கு தமிழக அரசு மாநில பாதுகாப்புப் பரிசுகள வழங்குகிறது. இந்தப் பரிசுகள் வழங்கும் நோக்கத்திற்காக தொழில் நிறு வனங்கள் கீழ்க்கண்ட மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

தொகுதி—அ. 10 இலட்சம் மனித நேரத்திற்கு குறைவில்லாமல் வேலை செய்த தொழிற்சாலைகள்.

தொகுதி—ஆ.5 மற்றும் 10 இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்.



தொகுதி—இ. 2 முதல் 5 இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்.

3.17. கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் செயலில் உள்ளது.

திட்டம்—1. முந்தைய ஆண்டை ஒப்பு நோக்குகையில், விபத்து விகிதத்தை மிக அதிகமாக குறைத்து காண்பிக்கும் தொழிற்சாலைக்கு இந்தப் பரிசினை வழங்குதல்.

திட்டம்—2. அதே வகைப்பட்ட மற்ற தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும்போது நிறையிட்ட அலைவு எண் வீதத்தை (Lowest weighted frequency rate) அந்த ஆண்டில் மிகக் குறைத்து காண்பிக்கும் தொழிற் சாலைக்கு இந்த பரிசினை வழங்குதல்.

திட்டம்—3. பரிசுக்குரிய ஆண்டில் விபத்தின்றி அதிக மனித நேரம் செயல்புரிந்த தொழிற்சாலைக்கு வழங் குதல்.

3.18. இந்தத் தொழிற்சாலைகள் மேலும் 10 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. (நூற்பு, சிமெண்ட், பொறியியல் மற்றும் பல).

3.19. விபத்து தவிர்க்கும் நிலைகள், உற்பத்தித்திறன் அதிக மாக்குதல் மற்றும் தொழிலில் திறமைகளைக் காட்டுதல் போன்றவற்றின் சீரிய முறையில் பங்கு கொள்ள தொழிலாளர் களை ஊக்கப்படுத்த சிரம்வீர் பரிசுகள் வழங்கப்படுகிறது. பாதுகாப்புப் பற்றிய கருத்துக்கள், அதிக உற்பத்தி, தொழிலில் சிரத்தை மற்றும் வேலை செய்யும் முறைகளில் புதிய கண்டு பிடிப்பு, முன்னேற்றம், சேதம் மற்றும் விபத்துக்களைக் குறைத்தல் ஆகியவற்றிற்கான கருத்து எடுத்துக் கூறும் தொழிலாளர்களுக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது.

3.20. மாநில பாதுகாப்புப் பரிசுகள்—கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் தேர்வு பெற்ற நிர்வாகத்தினர்களுக்கு வழங்கப் பட்டது.

| வருடம். | கேடயம். | சான்றிதழ். |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 1984 .. .. .. .. | 72 | 183 |
| 1985 .. .. .. .. | 75 | 202 |
| 1986 .. .. .. .. | 70 | 178 |

1984, 1985, 1986 ஆம் ஆண்டில் ரூ. 19,500-க்கு 63 சிரம்வீர் பரிசுகள் ரொக்கப் பரிசாக தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

### அழுத்த இயந்திரங்கள் சோதனை.

3.21. தமிழ்நாட்டில் 12,400 அழுத்த இயந்திரங்கள் உள்ளது. தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அழுத்த இயந்திரத்தையும் தகுதியுள்ள நபர்களால் கால முறைதோறும் முழுமையாக ஆராய்ந்து அதன் பாதுகாப்பாக வேலை செய்யும் தன்மைக்கு தகுதிச்சான்று வழங்கவேண்டும் என 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 1950ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தொழிற்சாலை ஆய்வகத்துறை இப்பணியினை தாமே செய்து வருகின்றனர். அழுத்த இயந்திரங்களை சோதனை செய்ய சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1988 ஆம் ஆண்டில் சோதனை செய்யப்பட்ட கலன்களின் விபரம் கீழ் வருமாறு:—

| | |
|---|---|
| புறம் .. .. .. | 9,680 |
| அகம் .. .. .. | 318 |
| 'ஹைடிரோஸ்டேடிக்' .. | 2,419 |
| மொத்தம் — | 12,397 அல்லது 12,400 |

இந்த நோக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூ. 10,67,232.

### 4. சுகாதார பராமரிப்பு முறை.

3.22. கடும் விபத்து தடுப்புப் பிரிவுடன் (Major Accident Hazard Control Cell) இணைந்துள்ள தொழிற்சாலை துப்புரவு சோதனைக் கூடத்திற்கு அறுவை சிகிச்சை மருத்துவர் பொறுப்பிலுள்ளார். இவ் ஆய்வகத் துறையில் சென்னை, கோவை, வேலூர், சேலம் திருச்சி, சிவகாசி, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய 8 இடங்களில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர் பணியாற்றுகின்றனர்.

3.23. 1988 ஆம் ஆண்டு அறுவை சிகிச்சை மருத்துவரால் 53 தொழிற்சாலைகள் ஆய்வுகளும் 10 தொழிற்சார்ந்த சுகாதார ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழிற்சாலை சட்டத்தின்கீழ் சான்றளிக்கப்பட்ட மருத்துவர்களாக நியமிக்கப்பட்டுள்ள உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் தொழிற்சார்ந்த நோய்கள் பரவக்கூடிய அபாயகரமான தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களை பரிசோதித்துள்ளனர். 12,456 தொழிலாளர்கள் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய நாட்டு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தொழிற்சாலை



துப்புரவு சோதனை கூடத்திற்கு நவீன சோதனைத் தளவாடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்த நவீன இயந்திரங்களினால் குளோரின், சல்பர் — டை — ஆக்ஸைட், ஹைட்ரஜன் சல்பைட், கார்பன் மோனாக்ஸைட், கார்பன்—டை—சல்பைட், அமோனியா போன்ற நச்சுப்பொருள்களினால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் உடல் மற்றும் மனக்கேடுகளை பரிசோதித்து கண்டுபிடிக்கப்படுகிறது. இரைச்சல் மற்றும் வெப்ப அழுத்தத்தினால் தொழிலாளர்களுக்கு ஏற்படுகிற உடல் உபாதைகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 1988ஆம் ஆண்டு 179 இரத்த மாதிரிகள், 173 சிறுநீரக மாதிரிகள், பலதரப்பட்ட தொழிலைச் சார்ந்த 53 தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்களிடமிருந்து சேகரித்து இரத்தம் மற்றும் சிறுநீர் வேலையின் தன்மையினால் ஏற்படும் மாறுபாட்டை அளவிடப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களின் பணிகள் வருமாறு:—

| | |
|---|---|
| (1) நடப்பு ஆண்டில் 1988 பார்வையிடப்பட்டுள்ள தொழிற்சாலைகள். | 1,596 |
| (2) அபாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பரிசோதிக்கப்பட்ட எண்ணிக்கை. | 12,456 |
| (3) நடப்பு ஆண்டில் சான்றளிக்கப்பட்டவை—1988. | |
| (i) அபாயத் தொழில் .. .. | 12,074 |
| (ii) இளம் வயதினர் .. .. | 9,682 |
| (iii) சிற்றுண்டி விடுதி .. .. | 3,237 |
| (4) வசூலிக்கப்பட்ட பரிசோதனைக் கட்டணம் .. .. | ரூ. 3,14,407.50 |

### 5. உற்பத்தித் திறன் முறைகள்.

3.24. உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக இணைத் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வர் தலைமையின் கீழ் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வர் அலுவலகத்தில் ஒரு உற்பத்தித் திறன் பிரிவு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு ஆலோசனை நல்கும் அமைப்பாக உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், அதிக ஆதாரங்களை பின்பற்றுதல், வீணாவதை நீக்குதல், கால ஆய்வு, இயக்க ஆய்வு நடத்துவது மூலம் பணி கோட்பாடுகளை வரையறுத்தல் போன்ற பணிகளை இக்குழு கவனித்து வருகிறது. இக்குழு உற்பத்தித் திறன் பற்றி 6 பயிற்சி வகுப்புகளும் 3 கருத்து அரங்குகளும் நடத்தியுள்ளன. 240 தொழிலாளர்களும், 90 மேற்பார்வையாளர்களும் இப்பயிற்சியால் பயனடைந்துள்ளார். இந்த உற்பத்தித் திறன் குழு புழலிலுள்ள சதர்ன் இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் தொழிற்சாலையில்

வேலைப்பகுப்பாய்வு நிர்ணயம் செய்ய ஆராய்ந்து உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை தெரிவித்துள்ளது. இதே போன்று காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை லிமிடெட் என்ற தொழிற்சாலையில் பாழாக்குவதை குறைப்பதற்கான குறியீட்டை நிர்ணயிப்பதற்கான ஆரம்ப கட்ட கணக்கெடுப்பு நடைபெற்றுள்ளது.

3.25 தமிழக அரசால் மாநில உற்பத்தித் திறன் பரிசுத் திட்டம் நிறுவி 1988-ஆம் ஆண்டு பரிசுகள் வழங்கப்பட்ட விபரம்:

| ஆண்டு. (1) | | முதற்பரிசு கேடயம். (2) | 2-ம் பரிசு சான்றிதழ். (3) |
|---|---|---|---|
| 1985—86 | .. .. | 17 | 14 |
| 1986—87 | .. .. | 12 | 7 |

தொழிலாளர் நலப்பணிகள்—தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம்.

3.26. சிவகாசிப்பகுதியில், குழந்தைத் தொழிலாளர் தேசிய திட்டம் அமுல் படுத்தப்படுகிறது.

3.27. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு.—

(i) தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர்கள் பணிபுரிவதைத் தடுத்தல்.

(ii) கிராம வேலைவாய்ப்பு பெருக்குத் திட்டம் (R.L.E.G P.), ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் (I.R.D.P.), தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டம் (N.R.E.P.). ஆகிய வற்றின் மூலம் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரிய தடுக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் குடும்பங்களில் வருமானத்தை உயர்த்துதல்;

(iii) குழந்தைகளுக்கு முறைசாராக் கல்வி மற்றும் தொழில் கல்வி அளித்தல்;

(iv) குழந்தைகளுக்கு சிறந்த முறையில் சுகாதாரப் பாதுகாப்பு அளித்தல்.

(v) அப்பகுதியில் வாழும் மக்களின் பொதுவான மற்றும் சமூக விழிப்புணர்ச்சியை அதிகப்படுத்துதல்;

3.28. இத்திட்டத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு ஆகும் மொத்த செலவு ரூ. 827.38 இலட்சம் ஆகும். இத்திட்டத்திற்கு மைய அரசும் உதவுகிறது.





3.29. 20 தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் 1,400 குழந்தைகளுக்கு 8 தொண்டு நிறுவனங்கள் மூலம் தொழிற்கல்வி அளிக்கத் துவங்கப்பட்டுள்ளது.

3.30. நிலையம் ஒன்றுக்கு 25 குழந்தைகள் வீதம் 100 முறைசாரா கல்வி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. இக்கல்வி நிலையங்களில் பயிலும் குழந்தைகளுக்கு, மதிய உணவு வழங்கப் படுகிறது. இச்செலவை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது.

தொழிலாளர் விபத்து ஆயுள் ஈட்டுறுதித் தொகுதித் திட்டம்.

3.31. 1—7—1986-லிருந்து காமராசர் மாவட்டத்திலுள்ள தீப்பெட்டி-பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் பயன்கருதி, தமிழக அரசு தொழிலாளர் விபத்து ஆயுள் ஈட்டுறுதித் தொகுதித் திட்டத்தை அறிமுகப் படுத்தியது. பின்னர் வடாற்காடு மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டங்களிலுள்ள இதே தொழிற்சாலைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம், ஈட்டுறுதி செய்யப் பட்டவர்களுக்குப் பார்வை அல்லது கை, கால்கள் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப் பட்டுள்ளது. ஈட்டுறுதி செய்யப்பட்டவர்கள் உண்மையில் வேலை செய்து கொண்டிருக்கையில் விபத்து ஏற்பட்டுள்ளவர் களுக்கு என்று வரையறுக்காமல் விபத்துக்கான ஈட்டுறுதித்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தால் 14 வயது முதல் 65 வயது வரையிலான வயதுடைய தீப்பெட்டி—பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பயனடைவர். ஆண்டுதோறும் ரூ. 7.00 வீதம் ஒவ்வொரு தொழிலாளியிடம் பிரிமியத் தொகை வசூலிக்கப்படுகிறது. தொழிலாளர்கள் தொடர்பாக தொழிலதிபர்கள் பிரிமீயத் தொகையை செலுத்த வேண்டும். பின்னர், தொழிலாளர்களின் ஊதியங்களிலிருந்து அச்தொகையைப் பிடித்துக் கொள்ள வேண்டும். ஆனால் சாதாரணமாக இச்செலவினத்தை தொழிலதிபர்களே ஏற்றுக்கொள்கின்றனர்.

3.32. இத்திட்டம், தேசிய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. 31—12—1988-ல் காமராசர், சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி, வட ஆற்காடு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் இத்திட்டத்தின்கீழ் 31,083 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி அளித்தல்.

3.33. போபாலில் நடந்த துக்ககரமான விபத்துக்குப்பின் இந்திய அரசு தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் உடல் நலம் ஆகியவை குறித்து உள்ள பல தொழிலாளர்கள் நலச் சட்டம் பிரிவுகளை மேலும் கடுமையானதாக மாற்ற விரும்பியது

1989 ஏப்ரல் 20

அவ்வாறு மாற்ற விரும்பிய தொழிலாளர்கள் நலச் சட்டங்களில் தொழிற்சாலை சட்டமும் ஒன்றாகும். தொழிலாளர்களின் உடல் நலனை பாதுகாக்கவும், அபாயகரமான விளைவுகளினால் உடல் நலம் பாதிக்கப்படும் நிலைமை இருப்பின் அதனின்று பாதுகாத்துக்கொள்ள உயரிய பாதுகாப்பு நடைமுறைகளை சேர்த்தும், தொழிற்சாலை சட்டத்திற்கும் 1987-ஆம் ஆண்டு இந்திய அரசு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்தது. தொழில் பாதுகாப்பு என்ற குறிக்கோளை விரிவுபடுத்தி தொழிற்சாலைக்குள் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை மட்டும் அல்லாமல், அத்தொழிற்சாலைகளின் சுற்றுப்புறத்தில் குடியிருக்கும் பொதுமக்களின் நலனையும், பாதுகாப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பனதயும் திருத்தச் சட்டத்தில் இடம் பெற்றது.

3.34. நம் மாநிலத்தில் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் இயங்கும் ஆறு பகுதிகளை அடையாளம் கண்டுள்ளோம். அவையாவன: மணலி, நெய்வேலி, கடலூர், ராணிப்பேட்டை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களாகும். இந்த இடங்களை பொறுத்தவரை அபாயகரமான உற்பத்திமுறை கையாளும் தொழிற்சாலைகளுக்கு தொழிற்சாலைக்குள் விபத்து ஏற்படாமல் தடுக்கும் முறைகளும், அவ்வாறு விபத்து ஏற்பட்டுவிட்டால், அதனை சமாளிக்கும் முறைகள் உள்ள நடைமுறை திட்டங்களும் (On Site Plan) தொழிற் சாலையை சுற்றியுள்ள பகுதியில் எந்தவிதமான பாதிப்பு ஏற்படும்போது மக்களை பாதிப்புக்கு உள்ளாக்காமல் பாதுகாப்பாக வெளியேற்றும் திட்டம், பாதுகாப்பு நடைமுறைகள் (Off Site Plan) ஆகியவை தீட்டப்பட வேண்டும்.

சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டம் மற்றும் பெரும் விபத்து தடுப்பு பிரிவும் (The testing and safety divisions and major Accident Hazard Control Cell)-ம் இணைந்து இத்திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன. ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் அபாயகரமான உற்பத்தி முறைகளை கையாளும் தொழிற்சாலைகள் (Hazardous Process Industries) பொறுத்தவரை மாவட்ட அளவில் அவசரகால நிலைமையை சமாளிக்க ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கவும், சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்ட அலுவலர்கள் இணைந்து செயல்படுகிறார்கள். அபாயகரமான இரசாயனப் பொருள்களை மூலப் பொருளாக கொண்டு செயல்படும் 59 தொழிற்சாலைகள் இம்மாநிலத்தைப் பொறுத்தவரை அடையாளம் காணப்பட்டுள்ளது. சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்ட அலுவலர்கள், தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிர்வாக மட்ட அலுவலர்களுக்கு, தொழிற்சாலையில் பல்வேறு மட்டத்தில் கையாள வேண்டிய பாதுகாப்பு முறைகளை கற்பிக்க பயிற்சி



1989 ஏப்ரல் 20

வகுப்புகள் நடத்தி வருகிறார்கள். 332 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் இந்த ஆண்டில் நடைபெற்று அதன் மூலம் 10,000 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

அதிக விபத்துக்கள் நடக்கும் தொழிற்சாலைகளை தேர்ந்து எடுத்து அத்தொழிற்சாலைகளைப் பொருத்தவரை 43 பாதுகாப்பு ஆய்வுகள் (Safety Surveys) நடத்தப் பெற்று அதன் முடிவுகள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுப்பப்பட்டன. 22 பாதுகாப்பு பற்றிய நூல்களும் (Safety Manuals) 26 பாதுகாப்பு சுவரொட்டிகளும் இத்துறையால் வெளியிடப்பட்டன. மேற்கண்ட நடைமுறைகளை இத்துறை மேற்கொண்டதால் 1987-ம் ஆண்டில் 17,145 விபத்துக்களாக இருந்தது 1988-ம் ஆண்டில் 14,301 விபத்துக்களாக குறைந்துள்ளன. விபத்துக்களின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு. | மரண விபத்து. | மரணம் இல்லாத விபத்து. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1986 | 57 | 18,444 |
| 1987 | 83 | 17,062 |
| 1988 | 52 | 14,249 |

14362

இரசாயனத் தொழிற்சாலைகள் குறித்த பணிக்குழு (Task force on Chemical Industry).

3.35. போபாலில் நிகழ்ந்த துயரத்திற்குப் பின்னர், மாநில தொழிலாளர் செயலாளர்கள் கூடி ஆபத்து விளைவிக்கும் தொழில் பிரிவுகளை அடையாளம் காணவும், நடைமுறையில் உள்ள பாதுகாப்பு நிலைகளை கண்டறியவும், ஒவ்வொரு நிலையிலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்கவும் ஒவ்வொரு மாநிலத்திலும் பணிக்குழு (Task force) ஒன்றை நியமிக்க முடிவு செய்தனர். இதன்படி டாக்டர் சாந்தப்பா அவர்கள் தலைமையின் கீழ் குழு ஒன்றை தமிழக அரசு அமைத்து தனது முடிவான அறிக்கையை அரசுக்கு கொடுத்தது.

3.36. அறிக்கையின் பரிந்துரைகள் மற்றும் கருத்துரைகள் மீது அரசு நடவடிக்கை மேற்கொண்டு அனைத்து பரிந்துரைகள் மீதும் செயல்படுத்தியதற்கான அறிக்கை நிர்வாகத்தினரிடமிருந்து பெறப்பட்டது.

3.37. பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கு மாநில அளவில் உயர் மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு (State Level High Power Tripartite Safety Committee) ஒன்றினை அமைத்தல்

D

V211,31'N89
N89.11

இக்குழுவின் பரிந்துரைகளில் ஒன்றாகும். இது மாநிலத்தின் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய கொள்கைகள் வகுக்கும் மாநில அளவிலான முத்தரப்பு தலைமையமைப்பாகும்.

3.38. மற்றொரு பரிந்துரையானது, மாநில அளவில் வல்லுநர் குழு/பணிக்குழு (State Level Expert Committee/Task Force) ஒன்றை அமைப்பதாகும். தற்போதுள்ள இரசாயன மற்றும் கேடு விளைவிக்கும் தொழிற்சாலைகளில் போதுமான பாதுகாப்பு நிலைகளை மதிப்பிடவும், அன்றாடம் எற்படும் பிரச்சினைகள் மற்றும் பெரும் இன்னல்களை தவிர்க்கவும், தகுந்த பாதுகாப்பு நிலைகளை செயல்படுத்த கருத்து தெரிவிப்பது இக்குழுவின் பணியாகும்.

3.39 மேற்கூறப்பட்ட இரு குழுக்களும், தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வர் பணி அமைப்பில் உறுப்பினர் செயலாளர் கட்டுப்பாட்டின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–4.

### 1952 ஆம் ஆண்டு தொழிலர்ளர் வருங்கால வைப்புநிதி பல்வகை விதித்துறைகள் சட்டம்.

இச்சட்டத்தின் விதித்துறைகள் 1988 ஆம் ஆண்டு முடிவில் 173 தொழிலகங்களுக்கு/தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன. இந்த சட்டத்தின் கீழ் மூன்று திட்டங்கள், அதாவது 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டம், 1971 ஆம் ஆண்டு குடும்ப நல ஒய்வூதியத் திட்டம், 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைந்த பாதுகாப்பு நிதித்திட்டம் ஆகியவற்றின் கீழ் தொழிலாளர்களுக்கு, முறையே வருங்கால வைப்பு நிதி, குடும்ப நல ஓய்வூதியம்' காப்புறுதி ஆகியவை வழங்கும் திட்டங்கள் செயலில் உள்ளன.

4.2 ஆய்வின் கீழ் உள்ள இவ்வாண்டில் புதிய தொழில்கள் தொழில் நிறுவனங்கள் எதுவும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவில்லை.

### II. நிறுவனங்களையும் / சந்தாதாரர்களையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வருதல் (தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டம், 1952)

4.3 1988, டிசம்பர் மாத இறுதிவரை இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நிறுவனங்கள், சந்தாதாரர்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | விலக்களிக்கப் பட்டவை. | விலக் களிக்கப் படாதவை. | மொத்தம். |
|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை | 453 | 19,540 | 19'993 |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை. | 40,66,459 | 13,76,673 | 17,83,132 |



4.4 1988 ஆம் ஆண்டில் 1,321 நிறுவனங்களும், 1.47 இலட்சம் சந்தாதாரர்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

4.5 31-7-1988 வரை, இத்திட்டத்தின்கீழ் தொழிலதிபர்கள் ஒவ்வொரு தொழிலாளிக்கும் மற்றும் தொழிலாளர்களுக்கும் செலுத்திய சந்தாத் தொகை, தொழிலாளர்களின் அடிப்படை ஊதியம், அகவிலைப்படி, (உணவுப் படி உட்பட) மற்றும் பணி தொடர்நிலைப்படி ஆகியவறறில் 6 1/4 சதவீதமாக இருந்தது. 50 மற்றும் அதற்குமேல் நபர்கள் உள்ள தொழிற்சாலை1தொழிற் நிறுவனங்கள் மற்றும் 131 குறிப்பிட்ட வகை தொழிற்சாலைகள் / தொழிற் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு, சந்தாத் தொகை 8 சதவீதம் ஆகும்,

4.6 இந்த வைப்பு நிதியை நிர்வகிக்கும் செலவானது, மொத்த வைப்பீட்டுத் தொகையில் 0.65 சதவீதம் (1-10-1986-க்கு முன்னால் 0.37 சதவீதம்) வீதம் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்து திரட்டப்படும் தொகையில் இருந்து செலவிடப்படுகிறது. இத்திடடத்தின் கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள், வைப்பீட்டுத்தொகையாக மொத்த ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யும் தொகையில் 0.09 சதவீதம் வீதம் ஆய்வுத் தொகையாக செலுத்தவேண்டும்.

4.7 உறுப்பினர்களின் கணக்கிற்கு. 3 சதவீத வட்டியிலிருந்து வட்டி வீதத்தை அரசு அவ்வப்பொழுது உயர்த்தி வருகிறது. 1988—89-ஆம் ஆண்டு விகிதம் 11.8 வட்டி சதவிகிதம் ஆகும்.

,8 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி பல்வகை விதித்துறைகள் சட்டம் திருத்தப்பட்டு, 1-8-1988—ல் மேற்படி திருத்தம் நடைமுறைக்கு வந்துள்ளது. மேலும் சில திருத்தங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

4.9 முன்பு இருந்தவாறு இந்திய அரசிற்குப் பதிலாக பிரிவு 1 (4)-ன் கீழ், தன்னிச்சையாக இத்திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான (Voluntary Coverage) அறிவிக்கை வெளியிடுவதற்கான அதிகாரம் மத்திய தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையருக்கு வழங்கப்பட்டுளளது. பிரிவு 2 (பி)-ன் கீழ் காணும் ''அடிப்படை ஊதியம்'' என்னும் தொடரின் விளக்கம் தொழிலாளர்களின் விடுமுறைக்கால பணிக்கான ஊதியம் மற்றும் அவர்களின் விடுப்புக்கால ஊதியம் ஆகியவையும் சேர்ந்ததாகும் என தெரிவுபடுத்தப்பட்டுள்ளது.

4.10 சட்டத்தின் பிரிவு 6-ன்கீழ் செலுத்தப்பட வேண்டிய சந்தா தொகை 6 1/4 சதவிகிதத்தில் இருந்து 8 1/3 சதவிகிதம் ஆக 1—8—1988-ல் உயர்த்தப்பட்டுள்ளது. அடிப்படை ஊதியம், அகவிலைப்படி, அமர்த்துப்படி (Retaining Alloware) சலுகை

விகிதத்தில் அளிக்கப்படும் உணவிற்கு ஈடான தொகை ஆகியவற்றைச் சேர்த்து சந்தா தொகை நிர்ணயிக்கப்படும். திருத்தப்பட்டச் சட்டத்தின்படி 10 சதவிகிதம் விகிதத்தில் சந்தா தொகை அளிக்கப்பட வேண்டும் என்று இருப்பினும், 1-8-1988-க்கு முன்னர் 8 1/3 விகிதத்தில் சந்தா தொகை செலுத்தி வந்த நிறுவனங்களுக்கு அதே விகிதத்தில் தொடர்ந்து செலுத்தலாம். உயர்த்தப்பட்டச் சந்தா தொகை எந்த நாளில் இருந்து செலுத்தப்பட வேண்டும், எந்தெந்த நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் செலுத்த வேண்டும் என்பது பற்றி அறிவிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை.

4.11 புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்களில் 2 தொழிலாளர்கள் உள்ளவை, 50 தொழிலாளர்கள் உள்ளவை என்கிற வேறுபாடு அகற்றப்பட்டு, எல்லா நிறுவனங்களுக்கும் சீரான முறையில் அமுல் படுத்த 1-8-1988 முதல் வகை செய்யப்பட்டுள்ளது, அதன்படி அனைத்து நிறுவனங்களும் அவை நிறுவப்பட்டு 3 ஆண்டுகள் முடிந்தவுடன் இச்சட்டம் பொருந்த வகை செய்யப்பட்டுள்ளது.

4.12 மத்திய மற்றும் மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் அல்லது அவற்றின் நிறுவனங்களுக்கும் அல்லது மத்திய மற்றும் மாநில அரசுகளின் சட்டங்களின்படி நிறுவப்பட்ட நிறுவனங்களுக்கும் அவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் சில சலுகைகள் பெற்று வந்தால் இச்சட்டம் பொருந்தாமல் இருக்க சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

## III. 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வு ஊதியத் திட்டம்.

4.13 59 வயது நிரம்பிய தொழிலாளர்கள், தவிர அனைத்துத் தொழிலாளர்கள் மற்றும் சட்டத்தின் கீழ் 1-3-1971 அல்லது அதற்குப் பிறகு விலக்களிக்கப்பட்டு புதிதாகச் சேர்க்கப்பட்ட தொழிலாளர்கள் அவர்கள் வைப்பு நிதி திட்டத்தில் சேர்க்கப்பட்ட நாள் முதல் இத்திட்டத்தின் கீழ் கட்டாயமாக அங்கத்தினர்களாகச் சேர்க்கப்படுவார்கள். வருங்கால வைப்புநிதி திட்டத்தின் கீழ் 28-2-1971 அன்று அங்கத்தினர்களாக இருந்த அனைவருக்கும் இத்திட்டத்தின் கீழ் சேருவதற்கு விருப்பம் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டது

9.14 இறந்தவரின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் அளிக்கப்படும் உதவித் தொகையை அதிகரித்து மத்திய அரசு இத்திட்டத்தை திருத்தியமைத்துள்ளது. அதன்படி, 1-4-1988 முதல் ரூ. 225 முதல் ரூ. 750 வரையில் குடும்பநல ஓய்வூதியமாக மாதா மாதம் அளிக்கப்பட்டு வருகிறது அதேபோன்று ஓய்வு மற்றும் திரும்பப் பெறும்பணத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் தொகையும்



அதிகரிக்கப்பட்டுள்ளது. நிதியில் அவரின் உறுப்பினர் நிலை மற்றும் அவர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் அடிப்படையிலும் ரூ. 110 முதல் ரூ. 19,825 வரையில் 1-4-1988 முதல் இத்திட்டத்தின் கீழ தொகை வழங்கப்பட வேண்டும்.

4.15 1988 டிசம்பர் 31 ஆம் நாளின் முடிவில் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள சந்தாதாரர்களின் எண்ணிக்கை 14.45 இலட்சங்கள் ஆகும்.

4.16 இத்திட்டத்தின் கீழ் அங்கத்தினர்களாகச் சேருவதற்கு தனியாகச் சந்தா தொகை ஏதும் செலுத்தப்படவேண்டியதில்லை. தொழிலாளர்களும் மற்றும் வேலையளிப்பவர்களிடத்திலிருந்து பெறப்படும் வருங்கால வைப்புநிதி தொகையில் இருந்து மொத்த சம்பளத்தில் 1 1/6 சதவிகிதம் ஈடான தொகை இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட நிதியில் சேர்க்கப்படுகிறது. ஒவ்வொரு சந்தாதாரரின் சார்பிலும் மத்திய அரசு இதே விகிதத்தில் நிதிக்கு தொகை செலுத்தி வருகிறது. ரூ. 2,500 வரையில் மாத சம்பளம் பெறும் சந்தாதாரர்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின்படி சந்தாத் தொகை செலுத்த வேண்டும்.

4.17 இந்நிதி பராமரிப்பிற்கு ஆகும் மொத்த செலவையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும்.

## IV. 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம்.

4.18 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம், தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அங்கத்தினர்கள் அனைவருக்கும் பொருந்தும். தொழிலாளர்களிடமிருந்து சந்தா எதுவும் பிடித்தம் செய்யப்படுவதில்லை என்பது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். ஆனால், தொழிலதிபர்கள் தாம் வேலைக்கமர்த்தியுள்ள இத்திட்டத்தில் அங்கத்தினராக உள்ள ஒவ்வொரு தொழிலாளருக்கும் அவருடைய மொத்த ஊதியத்தில் 0.5 சதவீதத்தை சந்தாத் தொகையாகச் செலுத்த வேண்டும். அதேபோல் மைய அரசும் மொத்த ஊதியத்தில் 0.25 சதவீதத்தை செலுத்த வேண்டும். இருப்பினும் தொழிலாளிக்கு செலுத்த வேண்டிய சந்தா, அவர்கள் வாங்கும் மாதச் சம்பளம் ரூ, 2,500 வரை என வரையறுக்கப்பட்டுள்ளது.

4.19 தொழிலதிபர்களால் மொத்த ஊதியத்தில் வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து 0.01 சதவீதத்தை நிதி பராமரிப்புக்காக செலவிடப்படும். விதிவிலக்களிக்கப்பட்ட நிறுவனங்கள், அவர்களால் வசூலித்த மாத ஊதியத்தில் 0.02 சதவீதத்தை நிர்வாகச் செலவுக்காக செலுத்த வேண்டும் (1989 ஜனவரி 1-ம் நாள் முதல் 0.05 சதவீதம்). மைய அரசும் நிர்வாக செலவுக்காக 0.05 சதவீதம் செலவிடும்.

## V. கேட்பு/வசூல்/நிலுவை.

4.20 1988 ஆம் ஆண்டு இம்மூன்றுத் திட்டங்களில் கேட்பு/வசூல்/நிலுவை ஆகியவை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| (1) | கேட்பு. (2) | வசூல். (3) | நிலுவை. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (ஏ) தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தாத் தொகைகள். | 12,169.12 | 11,415.89 | 753.23 |
| (பி) தொழிலாளர் குடும்ப ஓய்வூதியச் சந்தாத் தொகைகள். | 2,306.22 | 2,260.22 | 46.00 |
| (சி) தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதி சந்தாத் தொகைகள். | 333.08 | 310.42 | 22.66 |
| **(டி) நிர்வாக கட்டணங்கள்—** | | | |
| (i) 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டம். | 539.88 | 516.73 | 23.15 |
| (ii) 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம். | 33.60 | 28.78 | 4.82 |
| **(இ) ஆய்வுக் கட்டணங்கள்—** | | | |
| (i) 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டம். | 54.45 | 54.45 | இல்லை. |
| (ii) 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம். | 13.24 | 13.24 | இல்லை. |



## VI. வருங்கால வைப்புநிதியின் நிலுவையின் நிலைமை மற்றும் கடன்கள் வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

4.21. 1988 டிசம்பர் 31 ஆம் நாள் நிலவரப்படி இம்மூன்றுத் திட்டங்களில் நிலுவையில் உள்ள வருங்கால வைப்பு நிதியின் நிலை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (i) தொழிலாளர் வருங்கால வைப்புநிதி சந்தாத் தொகைகள் (கணக்கு எண் 1). | 753.23 |
| (ii) தொழிலாளர் குடும்ப ஓய்வூதியச் சந்தாத் தொகைகள் (கணக்கு எண் 1). | 46.00 |
| (iii) தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதி சந்தாத் தொகைகள் (கணக்கு எண் 21). | 22.66 |
| **(4) நிர்வாகக் கட்டணங்கள்—** | |
| (ஏ) 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் (கணக்கு எண் 2). | 23.15 |
| (பி) 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம் (கணக்கு எண். 22). | 4.82 |
| **(5) ஆய்வுக் கட்டணங்கள்—** | |
| (ஏ) 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் (கணக்கு எண் 2). | இல்லை. |
| (பி) 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம் (கணக்கு எண் 22). | இல்லை. |

4.22. மேற்சொன்ன ரூ. 753.23 இலட்சத்தில், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிலுவையில் ரூ. 352.10 இலட்சம் பின் வரும் வகைப்பட்ட நிறுவனங்களில் முடங்கிக் கிடக்கின்றன:—

| (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | (ரூபாய் இலட்சத்தில்.) (3) |
|---|---|---|
| (எ) தேசிய துணி ஆலை நிறுவனம் நிர்வாகம் மேற்கொண்ட நலிந்த துணி ஆலைகள். | 10 | 78.62 |
| (பி) கலைக்கப்படும் நிறுவனங்கள் | 21 | 40.86 |
| (சி) உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்து தடையாணை பெற்றுள்ள நிறுவனங்கள். | 154 | 74.00 |
| (டி) மூடப்பட்டுள்ள நிறுவனங்கள் | 37 | 158.62 |
| மொத்தம் .. | 222 | 352.10 |

4.23. தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிலுவையை வசூலிக்க பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கமும் தேசிய துணி ஆலை நிறுவனங்களில் நிலுவையில் உள்ள தொழிலாளர் வருங்கால வைப்புநிதியை வசூலிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அமுல்படுத்துவதில் இச்சட்டம் 1-8-1988 முதல் மிகவும் கடுமையாக்கப்பட்டு அபராதத் தொகையும் தண்டனையும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 5.

### மாநிலத் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்:

இம்மாநிலத்தில் தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின் சக்தியைப் பயன்படுத்துகின்ற 10 பேரும் அதற்கு மேற்பட்டும், தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் மின் சக்தியைப் பயன்படுத்தாத 20பேர் அல்லது அதற்குமேல் தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் இத்திட்டம் பொருந்தும். புதிய துறைகளில் 20-ம் அதற்கு மேலும் தொழிலாளர்கள் உள்ள கடைகள், உணவகங்கள், பத்திரிக்கை நிறுவனங்கள், திரையரங்குகள் உள்பட திரைப்பட நிறுவனங்கள், தனியார் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. முதலில் 1,000 ரூபாய்க்கு மேற்படாமல் மாத ஊதியம் பெறும் காப்புறுதி செய்து கொண்ட



தொழிலாளர்கள், தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டத்தின்கீழ் பயன்பெற்று வந்தனர். பின்னர், இந்த ஊதிய உச்சவரம்பு 27-1-1985 முதல் ரூ. 1,600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம், பின்வரும் பயன்களுக்கு வகை செய்கிறது.:—

| | |
|---|---|
| (1) மருத்துவ உதவி- மருத்துவப் பொருட்களாக வழங்கப்படுகிறது. | |
| (2) உடல் நலமின்மைக்கான உதவி | |
| (3) தற்காலிகமாக ஏலாமையுற்றோருக்கு உதவி, | |
| (4) நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி | பணமாக |
| (5) பேறுகால உதவி | அளிக்கப் |
| (6) இறுதிச் சடங்குகளுக்குரிய செலவுத்தொகை | படுகிற. |
| (7) நிரந்தரமாக ஏலாமையுற்றோருக்கு உதவி | |
| (8) உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி (குடும்பக் கட்டுப்பாடு). | |
| (9) சார்ந்துள்ளவர்கள் நல உதவி | |

5.2. நீட்டிக்கப்பட்டுள்ள பகுதிகளில் காப்புறுதி செய்து கொண்டுள்ளவர்களின் குடும்ப நபர்களும் முழு மருத்துவ வசதி பெறத் தகுதி பெறுபவர்கள் ஆவர்.

5.3. இத்திட்டத்தின் மூலம் காப்புறுதி செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| (அ) இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 6,22,000 |
| (ஆ) காப்புறுதி செய்துகொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை. | 6,82,000 |
| (இ) இதில் அடங்கிய குடும்பங்களின் (காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்கள்) எண்ணிக்கை. | 6,82,000 |
| (ஈ) பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை. | 26,42,160 |

5.4. மருத்துவ வசதிக்காகச் செலவிடப்படும் மொத்தத் தொகையை மாநில அரசும், தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகமும் 1:7 என்று ஒத்துக்கொள்ளப்பட்ட வீதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. இக்கழகம் மருத்துவச் செலவிற்காக செலவிடப்படும் மொத்தத் தொகைக்கு உச்சவரம்பு நிர்ணயித்துள்ளது. 1-4-1988 முதற்கொண்டு தற்போதுள்ள உச்சவரம்பு, தொழிலாளரின் குடும்பம் ஒன்றுக்கு ஆண்டு ஒவ்வொன்றுக்கு ரூ. 190 ஆகும். காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் முழு மருத்துவ வசதி),

5.5. 1-4-1988 முதல் மேற்சொன்ன உச்ச வரம்பிற்கு மேல், ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஆண்டொன்றுக்கு மருந்துகள், மருத்துவப் பொருட்கள் செலவிற்காக ரூ. 30-க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 70-க்கு மேற்படாமல் தொகை அனுமதிக்கப் படுகிறது.

5.6. தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் அயன்புரம் (சென்னை), கலைஞர் கருணாநிதி நகர் (சென்னை), மதுரை, கோயம்புத்தூர், வேலூர் (வட ஆற்காடு மாவட்டம்), சேலம், சிவகாசி ஆகிய இடங்களில் ஒவ்வொன்று வீதம் ஏழு தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளும் 135, நிலையான மருந்தகங்களும், நடமாடும் மருந்தகங்களும் 2, பயன்பாட்டு மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய 7 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை வருமாறு:—

| | | படுக்கைகள். |
|---|---|---|
| 1. | அயன்புரம், சென்னை | 616 |
| 2. | கலைஞர் கருணாநிதி நகர், சென்னை | 234 |
| 3. | மதுரை | 309 |
| 4. | கோயம்புத்தூர் | 515 |
| 5. | வேலூர் (வடஆற்காடு மாவட்டம்) | 50 |
| 6. | சேலம் | 50 |
| 7. | சிவகாசி | 50 |

5.7. 1988-89 ல் இத்திட்டம் கீழ்க்கண்ட பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது:—

1. கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம்.
2. புதிய தொழில் வளாகம், மறைமலைநகர், செங்கை அண்ணா மாவட்டம்.
3. பேகம்பர் பகுதி, திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்.
4. விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம்.
5. அம்மாபேட்டை, சேலம் மாவட்டம்.
6. நாகூர் பகுதி, தஞ்சை மாவட்டம்.
7. வேம்பக்கோட்டை வருவாய் கிராமம், சாத்தூர், காமராஜர் மாவட்டம்.
8. நகரி, மதுரை மாவட்டம்.
9. கே. சாத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
10. மடத்துக்குளம் பகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், கோவை மாவட்டம்.
11. மயிலாடுதுறை பகுதி, தஞ்சை மாவட்டம்.



5.8. மதுரையில் உள்ள தொழிலாளர் காப்புறுதி நடமாடும் மருந்தகத்தை மாற்றி, திருமங்கலம் மற்றும் திருபுவனம் ஆகிய இரண்டு இடங்களில் தொழிலாளர் காப்புறுதி நிலையான மருந்தகங்கள் அமைக்க ஆணை இடப்பட்டது. ஆகஸ்டு 1988 முதற்கொண்டு ஒரு மண்டல நிர்வாக மருத்துவ அலுவலரின் அலுவலகம் சேலத்தில் இயங்கி வருகிறது.

## அத்தியாயம் 6.

### சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்:

அமைப்பு முறையின் கீழ் வராத தொழிலாளர் நலனைக் கருதி, கீழ்க்காணும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் தமிழ் நாட்டில் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

1. ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு ஊதிய சிறப்புத் திட்டம்
2. விபத்து உதவித் திட்டம்.
3. தனி நபர் விபத்து ஈட்டுறுதி சமூகப் பாதுகாப்புத் திட்டம்.
4. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிலாளர்களுக்கான விபத்து உதவி திட்டம்.

### I. ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவிச் சிறப்புத் திட்டம்:

இத்திட்டம், சிறிதளவு, ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோர் நலனைக் கருதி, 1984 ஆம் ஆண்டில் மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் இரு பகுதிகள் அடங்கும். முதல் பகுதி, ஆயுள் ஈட்டுறுதிக்கு உத்தரவாதம் அளிப்பதாகும். இரண்டாம் பகுதி ஓய்வுக்காலப் பயன் பெறுவது பற்றியதாகும். ஆயுள் ஈட்டுறுதிப் பகுதி, ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் உடனுழைப்புடன் செயற்படுத்தப்படுகிறது. பணி ஓய்வுக் காலப் பயன்கள் கணக்கு மற்றும் கருவூல இயக்குநர் மூலம் மாநில அரசால் செயற்படுத்தப்படுகிறது.

6.2. இத்திட்டத்தில் 18 வயது முதல் 55 வயதுவரை உள்ள மேற்சொன்ன தொழிலாளர்கள் சேரலாம். அவர்கள் மாதந்தோறும் ரூ. 10-ஐ கிராம நிர்வாக அலுவலரிடம் செலுத்தி வர வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் திங்களில் இருந்து மார்ச்சு முடிய உறுப்பினர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

6.3. உறுப்பினர்களிடமிருந்து ஆண்டுதோறும் வசூலிக்கப்படும் ரூ. 120-லிருந்து ரூ. 45 பிரீமியமாக ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு ஆயுள் ஈட்டுறுதி திட்டத்தை நிறைவேற்ற செலுத்தப்படுகிறது. மீதியுள்ள ரூ. 75 பணி ஓய்வுகாலப் பயனடையும் உறுப்பினர்களுக்காக கருவூலத்தில் சேமிக்கப்படுகிறது.

6.4. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள உறுப்பினர் ஒருவர் இறக்க நேர்ந்தால் அந்த தொழிலாளரின் நியமனதாரருக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 5,000 வழங்கும். அதனுடன் அவ் வுறுப்பினர் செலுத்திய சந்தாத் தொகையைப் பொறுத்து 8 சதவீத கூட்டுவட்டியுடன் அரசும் ஒரு மொத்தத் தொகையை இறந்த உறுப்பினர்களின் நியமனதாரருக்கு வழங்கும். 58 வயதை நிறைவு செய்த உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் செலுத்திய சந்தாத் தொகையின் அளவிற்கேற்ப, ஒரு மொத்தத் தொகையை ஓய்வூதியப் பயனாகப் பெறுவார்கள்.

2. விபத்து உதவித் திட்டம்:

6.5. அரசால் 1984 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய திட்டங் களில், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், 2.5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருக்கும் சிறு விவசாயிகள், கிராமக் கை வினைஞர்கள் ஆகியோர் பணியில் ஈடுபட்டிருக்கும் போது எதிர் பாராத விதமாக இறந்தாலோ அல்லது உடல் ஊனமுற்றாலோ அவர்களுக்கு உதவும் வகையில் கொண்டுவரப்பட்ட விபத்து உதவித் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5,000 முதல் ரூபாய் 10,000 வரை கீழ் கண்டவாறு வழங்கப்படுகிறது:—

| | | ரூபாய். |
|---|---|---|
| (1) விபத்தில் உயிரிழக்க நேரிட்டால் | .. | 10,000 |
| (2) இரண்டு உறுப்பினை அல்லது இரண்டு கண்களை இழந்தால். | .. | 10,000 |
| (3) ஒரு உறுப்பினை அல்லது ஒரு கண்ணை இழந்தால் | .. | 5,000 |

6.6. இத்திட்டத்தின் மூலம் பயனடைவோரிடமிருந்து பிரியமோ அல்லது சந்தவோ வசூலிக்கப்படுவதில்லை. வட்டாட்சி யர்கள் விசாரணை அலுவலர்களாக இத்திட்டத்தில் நியமிக்கப் பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், மாநில அரசு குறித்த நபர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து நிவாரண நிதி வழங்க ஆணைகள் பிறப்பிக்கிறது. இத்திட்டத்தின்கீழ், அரசு இதுவரை 403 குடும்பங்களுக்கு ரூபாய் 36,12,000 வழங்கியுள்ளது.

3. தனிநபர் விபத்து ஈட்டுறுதி சமூகப் பாதுகாப்புத் திட்டம்.

6.7. இத்திட்டம் மைய அரசின் திட்டமாகும். இத்திட்டம் மாநில விபத்து உதவித் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டம் முதற்கட்டமாக தர்மபுரி, கன்னியாகுமரி, மதுரை, வடஆற்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, திண்டுக்கல், காயிதே மில்லத், காமராஜர், பசும்பொன் தேவர் திருமகன் ,சேலம், தென்னாற்காடு, மற்றும் நீலகிரி ஆகிய 13 மாவட்டங்களுக்கு 15—6—1987-ல் விரிவாக்கப் பட்டது. இத்திட்டம் விரிவுபடுத்தப்படாத ஏனைய ஏழு மாவட்டங்களுக்கும் 15—8—1988 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. தி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் இத்திட்டம் இம்மாநிலத்தில் அமுலாக்கப்படுகிறது. உறுப்பினர் களுக்குரிய பிரிமியத்தை மத்திய அரசு செலுத்துகிறது. மாநில அரசு மைய அரசுடன் கலந்தாலோசித்த பிறகு தனி நபர் விபத்து ஈட்டுறுதி சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை மாநில அரசின் விபத்து உதவித் திட்டத்துடன் இணைந்து ஆனால் அதே சமயத்தில் இத்திட்டங்களுக்கே உரிய தனித் தன்மையுடனும் ஒன்றுக்கொன்று முரண்படாமலும், செயல்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. மாநில அரசின் திட்டத்தின்கீழ் உதவி பெறத் தகுதியில்லாதவர்கள், மைய அரசின் திட்டத்தின் கீழ் உதவி பெறலாம். யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் 31—12—1938 முடிய 77 கோரிக்கைகளைப் பெற்று அவற்றில் 12 கோரிக்கைகளை தீர்த்து வைத்த வகையில் ரூபாய் 1,56,000 வழங்கி உள்ளது. 13 கோரிக்கைகளுக்கு நிவாரணம் வழங்க மறுத்துள்ளது. 12 கோரிக்கைகள் இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் நிலுவையில் உள்ளது.



6.8. மேற்சொன்ன மூன்று திட்டங்களிலும் கூறப்பட்டுள்ள அனைத்து வகையான தொழிலாளர்களுக்கும் மேலும் பாரவூர்தி (Tr..ck) தானியியங்கி மூவுருளி ஓட்டுநர்கள், கார் ஓட்டுநர்கள் (தனியார்), டாக்சி மற்றும் பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் கட்டிட கட்டுமாணப் பணியாளர்களுக்கும் பொருந்தும் வகையில் ஒரு பொதுவான திட்டம் கொண்டுவருவது பரிசீலனையில் உள்ளது.

4. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிலாளர்களுக்கான விபத்து ஈட்டுறுதி திட்டம்:

6.9. இத்திட்டம் பற்றிய விவரங்கள் மேலே பத்தி 3,31-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 7.

வேலை வாய்ப்புப் பணி :

இரண்டாம் உலகப் போருக்குப் பின் படைக்கலைப்பு செய்யப் பட்டதால் தோன்றிய நெருக்கடியான கால கட்டத்தில்தான் இந்தியாவில் வேலை வாய்ப்புப் பணி செயல்படத் தொடங்கியது. இராணுவத்திலிருந்து மிகுந்த எண்ணிக்கையில் விடுவிக்கப்பட விருந்த போர் வீரர்களுக்கும், இராணுவத்தில் பணியாற்றியவர் களுக்கும் மறுவாழ்வு அளிப்பதற்கென ஒரு தனியான அமைப்பு தேவை என உணரப்பட்டதால் நாட்டில் பல இடங்களில் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் படிப்படியாக தோற்றுவிக்கப்பட்டன. 1946 ஆம் ஆண்டு வரை வேலை வாய்ப்பு அலுவலகங்களின் தேவையானது படைக்கலப்பு செய்யப்பட்ட இராணுவத்தின

ருக்கும் மற்றும் இராணுவப் பணி முடிந்து விடுவிக்கப்பட்ட போர் வீரர்களுக்கு மட்டுமே என்றிருந்தது, பின்னர் அதன் செயற் பரப்பு படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு 1948-ன் தொடக்கத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் எல்லா வகையினர்க்கும் பணி புரியத் தக்கவாறு மாற்றியமைக்கப்பட்டன. பின்னர் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் நிர்வாகக் கட்டுப்பாடானது 1—11—1956 முதல் இந்திய அரசிடமிருந்து அந்தந்த மாநில அரசுக்கு மாற்றப்பட்டது. அவ்வாறு மைய அரசிடமிருந்து மாநில அரசுக்கு இந்த அமைப்பு மாறிய பிறகு தமிழ்நாட்டிலிருந்த வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 1963 வரை தொழிலாளர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்தன. 1963-இல் அதுவரை தொழில்துறையின் கட்டுபாட்டில் இயங்கி வந்த தொழிற் பயிற்சி நிலையங்களும், வேலை வாய்ப்பு அலுவலகங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை என்ற பெயரில் ஒரு புதிய துறை உருவாக்கப்பட்டு தனியான இயக்குநரின் கீழ் அமைக்கப்பட்டது.

2. வேலை வாய்ப்பு அலுவலகங்கள்:

7.2. வேலை தேடுவோரில் எல்லா வகையினருக்கும் உதவி செய்வதற்கேற்ப தமிழ்நாட்டில் மொத்தம் 43 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஆறு துணை வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தொழில் நுட்ப வகையினர்க்கு ஐந்தும், உடல் ஊனமுற்றோர்க்கு ஒன்றும் தொழில் மற்றும் நிர்வாக நிலை மனுதாரர்களுக்கு ஒன்றும் ஆக மொத்தம் ஏழு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்களும் சென்னை, மதுரை மற்றும் அண்ணாமலை நகர் ஆகிய நகரங்களில் தலா ஒவ்வொன்றாக மொத்தம் மூன்று பல்கலைக் கழக வேலைவாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டு மையங்களும் அடங்கும்.

7.3. 1987 மற்றும் 1988ஆம் ஆண்டுகளில் இவ்வேலை வாய்ப்பு அலுவலகங்கள் ஆற்றிய முக்கியமான பணிகள் பற்றிய விபரங்கள் ஒப்பிடப்பட்டுக் கீழே அளிக்கப்பட்டுள்ளன:—

| | | 1-1-1987 முதல் 31-12-1987 வரை. | 1-1-1988 முதல் 31-12-1988 வரை |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | பதிவு செய்தோரின் எண்ணிக்கை. | 5,74,549 | 5,27,036 |
| 2 | அறிவிக்கப்பட்ட காலியிடங்கள். | 66,222 | 62,686 |
| 3 | பணியில் அமர்த்தப்பட்டோர் | 47,799 | 54,388 |



| | | 1-1-1987 முதல் 31-12-1987 வரை | 1-1-1988 முதல் 31-12-1988 வரை |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 4 | வேலை வாய்ப்பகங்களைப் பயன்படுத்திய வேலை யளிப்போர். | 18,439 | 19,202 |
| 5 | டிசம்பர் 31 ஆம் நாளில் வேலை வாய்ப்பகங்களின் பட்டியலில் காத்திருந்தவர்களின் எண்ணிக்கை. | 24,79,765 | 26,07,092 |

3 தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை:

7.4. தமிழ்நாட்டில் தொழில், அறிவியல், பொறியியல், மேலாண்மை மற்றும் மேற்பார்வை வகையினர் முதலான உயர் கல்வி கற்றவர்கள் வேலைவாய்ப்பு அளிக்கப்படுவதற்கேற்ப இவ்வலுவலகத்தில் பதிவு செய்யப்படுகின்றனர். மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகள் போன்ற தொழில் சார்ந்த கல்வி கற்றவர்களுக்குத் தகுதியான வேலை வாய்ப்புகளைத் தேடுவதற்கேற்ப இந்த அலுவலகம் பொது மற்றும் தனியார் துறைகளில் முதல் இடங்களை வகிக்கும் (Leading Employers) வேலையளிப்போருடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளது. 1-1-1988 முதல் 31-12-1988 வரையிலான கால அளவில் இந்த அலுவலகம் ஆற்றிய பணிகள் தொடர்பான புள்ளி விபரங்கள் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | 1-1-1987 முதல் 31-12-1987 வரை. | 1-1-1988 முதல் 81-12-1988 வரை. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | பதிவு செய்யப்பட்ட மனுதாரர்களின் எண்ணிக்கை. | 18.257 | 23,452 |
| 2 | பணியில் அமர்த்தப்பட்டோர் | 2,908 | 2,378 |
| 3 | டிசம்பர் 31 ஆம் நாளில் பதிவேட்டில் காத்திருப்போரின் எண்ணிக்கை. | 64,227 | 69,527 |

4 உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்:

7.5. பார்வையற்றோர், செவிப்புலன் குறைந்தோர் மற்றும் உறுப்பு நலம் குறைந்தோர் போன்ற உடல் ஊனமுற்ற மனுதாரர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதில் உதவுவதற்கேற்ப

சென்னை அண்ணா நகரில் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்
ஒன்று இயங்கி வருகிறது. இது மட்டுமன்றி, மதுரை, கோயம்
புத்தூர், திருச்சி, சேலம், தஞ்சாவூர், நாகர்கோவில், காஞ்சிபுரம்,
திருநெல்வேலி மற்றும் கடலூர் ஆகிய 9 இடங்களில் உடல்
ஊனமுற்றவர்களுக்காக மொத்தம் 9 சிறப்புப் பிரிவுகளும்
இயங்கி வருகின்றன. மேற்குறித்த அலுவலகங்கள் உடல்
ஊனமுற்றோரைப் பதிவு செய்வது மட்டுமன்றிப் பொது மற்றும்
தனியார் துறைகளைச் சார்ந்த வேலையளிப்போருடன் நெருக்க
மாக தொடர்புகளை ஏற்படுத்திப் பேணுவதின் மூலம் உடல்
ஊனமுற்றோருக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளைத் தேடி கண்டறி
கின்றன. 1-1-1988 முதல் 31-12-1988 வரையுள்ள கால
அளவில் உடல் ஊனமுற்றோரின் பதிவு மற்றும் பணியில் அமர்த்
தப்பட்டோர் பற்றிய புள்ளி விவரங்கள் முந்தைய ஆண்டுடன்
ஒப்பிடப்பட்டுக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | 1—1—1987 முதல் 31—12—1987 வரை. | | |
|---|---|---|---|
| | பதிவு செய்தோர். | பணியில் அமர்த்தப் பட்டோர். | பதிவேட்டில் காத்திருப்போர். 31-12-1987ல்* |
| (1) | (2) | (3) | (4) |
| பார்வையற்றோர் .. | 303 | 9 | 2,120 |
| செவிப்புலன் குறைந்தோர் | 232 | 19 | 1,534 |
| உறுப்பு நலம் குறைந்தோர் | 4,539 | 1,137 | 24,849 |
| மொத்தம் .. | 5,074 | 1,165 | 28,523 |

| | 1—1—1988 முதல் 31—12—1988 வரை. | | |
|---|---|---|---|
| | பதிவு செய்தோர். | பணியில் அமர்த்தப் பட்டோர். | பதிவேட்டில் காத்திருப் போர். 31-12-1988ல்* |
| (1) | (5) | (6) | (7) |
| பார்வையற்றோர் .. | 270 | 13 | 2,284 |
| செவிப்புலன் குறைந்தோர் | 279 | 30 | 1,794 |
| உறுப்பு நலம் குறைந்தோர் | 4,696 | 1,257 | 26,119 |
| மொத்தம் .. | 5,245 | 1,300 | 30,197 |

*காலாவதியானவை நீங்கலாக.



7.6. பட்டயம் பெற்றோர் மற்றும் தொழில் பயிற்சி
நிலையங்களில் பயிற்சி பெற்ற கைவினைஞர் போன்ற
தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களைப் பணியமர்த்துவதைச்
சிறப்பாகக் கவனிப்பதற்கேற்பவும் அவர்களைப் பொது
மற்றும் தனியார் துறைகளில் தகுந்த பணிகளில் அமர்த்து
வதற்காகவும் நந்தனம் (சென்னை), திருச்சி, மதுரை. கோயம்
புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் தொழில் நுட்
பத் தகுதி பெற்றவர்களுக்கெனத் தனியான வேலை வாய்ப்பு
அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

5. வேலை நிலவர தகவல் திட்டம்:

7.7. வேலை நிலவர தகவல் திட்டமானது கட்டாய
காலியிட அறிவிக்கைச் சட்டம் 1959 இன் கீழ் வகுக்கப்பட்ட
விதிமுறைகளின் அடிப்படையில் செயற்படுத்தப்படுகிறது.
இந்தச் சட்டத்தின் கீழ் அமைந்த விதிமுறைகளின்படி
பொதுத்துறையில் உள்ள எல்லா நிறுவனங்களும் தனியார்
துறைகளில் 25 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைப்
கொண்டுள்ள அனைத்து நிறுவனங்களும் எந்த வேலை வாய்ப்
பகத்தின் அதிகார எல்லைக்குள் தங்கள் நிறுவனம் அமைந்
துள்ளதோ அந்த வேலை வாய்ப்பகத்திற்குத் தங்கள் நிறு
வனங்களில் தோன்றும் காலியிடங்களை அறிவிக்க வேண்டும்.
இதோடு, ஒவ்வொரு காலாண்டிலும் தங்கள் நிறுவனங்களில்
உள்ள மொத்த பணியாளர்கள், அந்த காலாண்டில்
தோன்றிய மொத்த காலியிடங்கள், நிரப்பப்பட்ட பணி
யிடங்கள் மற்றும் பணியாளர்கள் கிடைக்கப்பெறாத பதவிகள்
இன்னபிற விவரங்களைக் குறிப்பிட்ட படிவங்களில் அந்த
நிறுவனங்கள் வேலைவாய்ப்பகங்களுக்கு அளிக்க வேண்டும்.
பொதுத்துறையில் உள்ள எல்லா நிறுவனங்களிலிருந்தும். தனி
யார் துறையில் 25 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்
களைக் கொண்டுள்ள எல்லா நிறுவனங்களிலிருந்தும் வேலை
வாய்ப்பு நிலையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய தகவல்கள்
காலாண்டு இடைவெளிகளில் சேகரிக்கப்படுகின்றன. இவ்வாறு
சேகரிக்கப்படும் தகவல்கள் மைய மற்றும் மாநில அரசுகளுக்கு
தங்களுடைய நலத்திட்டங்களை வகுப்பதற்காக அளிக்கப்படு
கின்றன. இந்தத் தகவல்கள், வேலை வாய்ப்பு நிலவரம்
எந்தப் போக்கில் உள்ளது என்பதை ஆய்வதற்காகச் சேகரிக்
கப்படுகின்றன.

6. வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுதல் வேலைவாய்ப்பு
அறிவுரை வழங்குதல்.

7.8 வாழ்க்கைத் தொழிலைத் திட்டமிடுவதன் அவசி
யம் பற்றிய விழிப்புணர்வை வேலை தேடுவோரிடையே
ஏற்படுத்துவதற்காகவும் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு
செய்துள்ள வேலை தேடுவோரின் பயனுக்காகத் தொழில்

மற்றும் பயிற்சி குறித்த தகவல்களைப் பகுத்து வைப்பதற் காகவும் தமிழ்நாட்டில் மொத்தம் 19 வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இந்தப் பிரிவு களால் மாணவர்கள் மற்றும் வேலை தேடுவோரின் பயனுக்காக வாழ்க்கைத் தொழிலைத் தெரிந்தெடுப்பதற்காகவும், பயிற்சிக்கான வாய்ப்புகளை அறிந்துகொள்வதற்காகவும் ஏற்ற வகையில் பயனுள்ள தகவல்கள் அடங்கிய ''காலாண்டு வழி காட்டும் செய்திச் சிற்றேடுகள்'' தயார் செய்யப்பட்டு வெளி யிடப்படுகின்றன.

7,9. வாழ்க்கைத் தொழிலுக்குத் திட்டமிடுவது பற்றி பல்கலைக்கழக மாணவர்களிடையே பரப்புவதற்கேற்பவும் அவர்கள் தங்கள் வாழ்க்கைத் தொழிலைச் சரியாகத் தெரிவு செய்வதற்கு உதவுவதற்கேற்பவும் பல்கலைக்கழக வேலை வாய்ப்பு தகவல் மற்றும் வழிகாட்டு மையங்களாலும், வாழ்க் கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகளாலும் வாழ்க்கைத் தொழில் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

7. பழங்குடியினர்க்கான சிறப்பு வாழ்க்கைத் தொழில் வழி காட்டும் நிலையங்கள்:

7.10. பழங்குடியினத்தைச் சார்ந்த மனுதாரர்களுக்கு வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பணியைச் செய்வதற் காகவும் அவர்களுக்குப் பொருத்தமான காலியிடங்களைக் கண்டறிந்து பரிந்துரைப்பதற்காகவும் உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்) மற்றும் சங்கராபுரம் (தென் ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களில் பழங்குடியினர்க்கான சிறப்பு வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் நிலையங்கள் இரண்டு இயங்கி வருகின்றன.

8. வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம்:

7,11. படித்துவிட்டு வேலைவாய்ப்பின்றி வாடும் இளைஞர் களின் இடர்பாட்டைத் தணிப்பதற்கேற்ப வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்கும் திட்டம் ஒன்றைத் தமிழ் நாடு அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. அந்த திட்டத்தின்படி வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பதிவேட்டில் 5 ஆண்டு களுக்கு மேலாகக் காத்திருக்கும் வேலை தேடுவோரில் 9 வகை யினருக்கு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. அந்த நிவாரணத் தொகையானது பட்ட தாரிகளுக்கு மாதந்தோறும் ரூ. 100 என்ற வீதத்திலும் புகுமுக வகுப்பு/பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 75 என்ற வீதத்திலும், பள்ளியிறுதி வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 50 என்ற வீதத்திலும் மூன்றாண்டு களுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் தொடங்கிய 1—7—1980 லிருந்து இதுவரை 2,48,758 மனுதாரர்கள்



பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் இதுவரை மொத்தம் ரூ. 33.49 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை மூன்று மாதத்திற்கு ஓர் முறை தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகள் மூலம் வழங்கப்படுகிறது.

7.12. 30—11—1988 முதல் இத்திட்டம் பார்வையற்ற வர்களுக்காக தளர்த்தப்பட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓர் ஆண்டே ஆகியிருந்தாலும் அவர்கள் நிவாரணம் பெற முடியும். மேலும் இந்நிவாரணம் 5 ஆண்டு களுக்கு கிடைக்கும்.

9. சுய வேலை வாய்ப்பு ஊக்க பிரிவுகள்.

7.13. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள மனுதாரர்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கு உதவி செய்வதன் மூலம் அவர்களிடையே சுய தொழிலை ஊக்குவிப்பகேற்ப வேலூரிலும், கோயம்புத்தூரிலும் மைய அரசின் நிதி உதவியுடன் இரண்டு சுய தொழில் ஊக்கப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு பிரிவுகளும் சேர்ந்து இதுவரை 3,593 மனுதாரர்களுக்கு உதவி செய்துள்ளது. அதன் பயனாய் நாட்டுடமையாக்கப் பட்ட வங்கிகளால் மொத்தம் ரூ. 3.88 கோடி சுய தொழில் தொடங்குவதற்காகக் கடனாக வழங்கப்பட்டுள்ளது

11. தொழில் பயிற்சி நிலையம்/தொழிற் பயிற்சிப் பள்ளி சான்றிதழ் பெற்றவர்களுக்கான சுய தொழில் திட்டம்.

7.14. தொழில் பயிற்சி நிலையம்/தொழில் பயிற்சிப் பள்ளி சான்றிதழ் பெற்றவர்களின் சுய தொழில் தொடங்குவதற்கு உதவி புரிவதற்கான திட்டம் தேர்ந்தெடுத்த ஆறு இடங்களில் (கோயமுத்தூர், திருச்சி, சேலம், மதுரை, கடலூர் மற்றும் வேலூர்) அரசால் ஒப்பளிக்கப்பட்டு 1988—ல் செயல் படுத்தப்பட்டது. அதற்கான கடன்தொகை நாட்டுடமை யாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து பெற்று தரப்பட்டது. அதற்குத் தேவையான ஊக்குவித் வதாகையானது ரூ. 2,000 அல்லது கடன் தொகையில் நான்கில் ஒரு பங்கு ஆகிய இவ்விரண்டிலும் எது குறைவானதோ அது) அரசு நிதியிலிருந்து வழங்கப்படு கிறது. ஒரு தொழிலுக்கான பெருமக் கடன் தொகையானது ரூ. 10,000 ஆகும். இந்தத் திட்டத்தின் கீழ் 363 தொழில் நுட்பத் தகுதி பெற்ற மனுதாரர்களுக்குக் கடன் தொகையாக வங்கிகளில் மொத்தம் ரூ. 27.75 இலட்சமும் ஊக்குதவித் தொகையாக மாநில அரசால் ரூ. 6.12 இலட்சமும் வழங்கப் பட்டுள்ளது.

12. வீட்டு சேவை மையங்கள் நிறுவுதல்:

7.15. தொழில் நுட்ப தகுதி பெற்ற இளைஞர்களிடையே சுய தொழிலை ஊக்குவிப்பதற்காகவும் சென்னையில் வாழ் வோருக்கு மிகவும் தேவையான வீட்டு சேவைகளை வழங்கு

வதற்கேற்பவும் மின் பணியாளர் ஒருவர், குழாய் பழுது பார்ப்பவர் ஒருவர், தச்சர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட வீட்டுச் சேவை மையங்கள் சென்னையில் முக்கியமான ஒன்பது இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இந்த மையங்களில் பணி புரியும் தொழில் நுட்பப் பணியாளர்கள் பல்வேறு வீடுகளில் பழுது பார்க்கும் பணியை செய்கின்றனர். அதன் மூலம் அவர்கள் ஒவ்வொருவரும் நாள் ஒன்றுக்குச் சுமார் ரூ. 25 முதல் ரூ. 35 வரை ஈட்டுகின்றனர். இது போன்ற வீட்டு சேவை மையங்கள் மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, வேலூர் மற்றும் ஈரோடு நகரங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 66 தொழில் நுட்பப் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 13. ஆதி திராவிடர்-பழங்குடி இனத்தைச் சார்ந்த மனுதாரர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள்.

7.16. பல்வேறு தேர்வு முகமை நிறுவனங்களால் நடத்தப் பெறும் போட்டித் தேர்வுகளின் ஆதி திராவிடர்/பழங்குடி இனங்களைச் சார்ந்த மனுதாரர்கள் போட்டியிட்டுத் தேர்ச்சி பெறுவதற்கு உதவும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையானது அவர்களுக்காக சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்தும் முனைப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இத்தகைய வகுப்புகள், வங்கிப் பணியாளர் தேர்வாணையம், பொறுப்பு அலுவலர் (Probationary Officer) எழுத்தர் நிலைப் பதவிகளுக்கான நடத்திய தேர்வுகள், பணியாளர் தேர்வாணையம் நடத்தும் கீழ்நிலை எழுத்தர்/மேல்நிலை எழுத்தர் பதவிகளுக்காக நடத்திய தேர்வுகள் மைய அரசு பணியாளர் தேர்வாணையம் உதவியாளர் நிலைப் பதவிகளுக்காக நடத்திய தேர்வுகள் மற்றும் குடிமைப் பணிகள் முதனிலைத் தேர்வுகள், இந்திய பொது காப்பீட்டுக் கழகம் நடத்திய எழுத்தர் நிலைத் தேர்வு, பணியாளர் தேர்வாணையத்தின் சுருக்கெழுத்தர் தேர்வு, இந்திய ரிசர்வ் வங்கி நடத்திய எழுத்தர் நிலைத் தேர்வு மற்றும் 1988—89-ல் தமிழ் நாட்டில் உள்ள பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கைக்காக நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வு ஆகியவற்றில் கலந்துகொண்ட மேற்குறித்த இனங்களைச் சேர்ந்த மனுதாரர்களுக்காக நடத்தப்பட்டன. மேற்குறித்த தேர்வுகளில் போட்டியிடுவதற்காக இந்தத் துறை நடத்திய பயிற்சி வகுப்புகளில் 4189 ஆதிதிராவிடர்-பழங்குடி இனங்களைச் சார்ந்த மனுதாரர்கள் கலந்து கொண்டனர்.

## 14. புதிய திட்டங்கள்.

7.17. 1989—90 இல் செயல்படுத்துவதற்காகப் பின்வரும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(i) வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கான கட்டடங்களைக் கட்டுதல்.





7.18. வேலை தேடுவோரும் பிற பொதுமக்களும் தங்கள் வேலை வாய்ப்பு தொடர்பான பல்வேறு பணிகளுக்காக வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு தினமும் வருகின்றனர். தற்போது இந்த வேலை வாய்ப்பு அலுவலகங்கள் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. அந்தக் கட்டடங்கள் குடியிருப்பதற்கு ஏற்றனவாகக் கட்டப்பட்டுள்ளதால், வேலை வாய்ப்பு அலுவலகங்கள் கவனித்து வருகின்ற பல்வேறு பணிகளுக்கு அக்கட்டடங்கள் பொருத்தமானவையாக இருப்பதில்லை. எனவே, பின்வரும் இடங்களில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களின் வளாகத்திற்குள் வேலை வாய்ப்பு அலுவலகங்களை அமைப்பதற்கான கட்டடங்களைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது :—

கடலூர்.

தஞ்சாவூர்.

மதுரை.

கோயம்புத்தூர்.

தூத்துக்குடி.

இந்தத் திட்டத்திற்கு ஆகும் மொத்த மதிப்பீடு ரூ. 77.24 இலட்சமாகும். அதில் 1989—90 ஆம் ஆண்டிற்கு அடையாளத் தொகையாக ரூ. 0.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வேலை வாய்ப்பு அலுவலகங்கள் தங்களுக்கான சொந்தக் கட்டிடத்தில் இயங்கினால் பொதுமக்களுக்கு மேலும் சிறப்பாக சேவை செய்ய ஏதுவாகும்.

## (ii) வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு 12 இழுப்பறைகள் கொண்ட 79 இருப்பு நிலைப் பேழைகளை வழங்குதல்.

7.19. வேலைவாய்ப்பகங்களில் வேலைவாய்ப்புத் தேடுவோரின் முழுமையான தன்விவரங்களும் (Bio-data) தொடர்புடைய பிற விவரங்களும் 'பதிவேட்டை' என வழங்கப்படும் உறை வடிவில் அமைந்த படிவங்களில் பதிவு செய்யப்படுகின்றன. இந்தப் பதிவட்டைகள் நடப்புப் பதிவேடுகளில் அடுக்கி வைக்கப்படுகின்றன. இந்தப் பதிவட்டைகள் பாதுகாப்பாகவும் நாளது தேதி வரையிலான முழு விவரங்களுடனும் பேணப்படுதல் வேண்டும். இந்தப் பதிவட்டைகளை மனுதாரர்களைத் தேர்வு செய்வதற்கும், பரிந்துரைப்பதற்கும் வேலையற்றோருக்கான நிவாரணம் அளிப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் மற்றும் புதுவிவரங்களைச் சேர்பபதற்கும் பலராலும் கையாளப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன என்பதால் அவற்றைப் பாதுகாப்புடன் வைப்பது அவசியமாகும். அது முடியாமற் போனால், வேலை வாய்ப்பகங்கள் தமக்கு அறிவிக்கப்படும் காலியிடங்

களுக்கு மனுதாரர்களை நியாயமான முறையில் பரிந்துரைப்பது இயலாமற் போகும். ஒவ்வோர் அலுவலகத்திலும் போதிய எண்ணிக்கையில் நிலைப் பேழைகள் இல்லாததன் காரணமாக இந்தப் பதிவு அட்டைகள் மிகுந்த எண்ணிக்கையில் தரையிலும், மேஜைகளின் மேலும் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. எனவே, 1989–90-ல் வேலை வாய்ப்பகங்களுக்கு 12 இழுப்பறைகள் கொண்ட 79 இரும்பு அட்டவணை நிலைப் பேழைகள் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 2.95 இலட்சம் ஆகும்.

(iii) பொருத்துவதற்கு எளிதான துணைப் பாகங்களுடன் கூடிய 12 காட்சிப் பலகைகளை வேலைவாய்ப்பகங்களுக்கு வழங்குதல்:

7. 0. மாணவர்களும், வேலைதேடுவோரும் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டுதல் பற்றி அறிந்து கொள்வதற்கேற்ப எல்லா வேலைவாய்ப்பகங்களிலும் வாழ்க்கைத் தொழில் வழி காட்டும் பிரிவுகள் இயங்கி வருகின்றன. அவை தொழில்கள் மற்றும் பயிற்சி வாய்ப்புகள் பற்றிய தகவல்களை வேலை வாய்ப்பு அலுவலகங்களை நாடி வருவோர்க்கு அளிக்கின்றன. அதோடு, மேற்குறித்த பிரிவுகள், மனுதாரர்கள் தங்கள் வாழ்க்கைத் தொழிலைச் சரியாகத் தேர்வு செய்து கொள்வதற்கு ஊக்குவிப்பதற்காகக் 'கூட்டு வழிகாட்டுதல் (group guidance) திட்டங்களை நடத்துகின்றன. இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகள், மையப் பகுதியில் அமைந்துள்ள பள்ளிகளில் வாழ்க்கைத் தொழில் கண்காட்சிகளை நடத்துகின்றன, 15 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் 'பணி உலகம்' (World of work) பற்றி அறிந்து கொண்டு அதன் பயனாய் அவர்களுடைய உள் மனதில் வாழ்க்கைத் தொழில் பற்றிய உணர்வு விழித்தெழுவதற்கேற்ப இந்தக் கண்காட்சிகளுக்கு வருகை தருமாறு அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இவ்வாறான வாழ்க்கைத் தொழில் கண்காட்சிகளை நடத்தும்போது வாழ்க்கைத் தொழில் தகவல் விளம்பரத் தட்டிகள் மற்றும் விளக்கப்படங்கள் போன்ற பொருள்கள் காண்பவர்களின் கவனத்தைக் கவரும் வகையிலும் அவர்களுடைய உள்ளத்தில் நீங்காமல் பதியத் தக்க வகையிலும், பகட்டாகவும், எழிலுடனும் காட்சிக்கு வைக்கப்பட வேண்டியுள்ளன. காட்சிப் பலகைத் தாங்கிகள் இல்லாததால், இந்த வரைபடங்கள் தற்போது கயிற்றில் தொங்கவிடப்பட்டோ, சுவர்களில் ஒட்டப்பட்டோ, மேஜை மீது வைக்கப்பட்டோ காட்சிக்கு வைக்கப்படுகின்றன. இந்த முறைகளைப் பின்பற்றுவதால், ஒரு கண்காட்சிக்காக பெரும் செலவில் தயார் செய்யப்பட்ட வரைபடங்கள் அடுத்த கண்காட்சிகளுக்குப் பயன்படாமல் போகின்றன. மேலும் கயிற்றில் தொங்கவிட்டும், சுவர்களில் ஒட்டியும் காட்சிக்கு வைக்கப்படும் வரைபடங்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் இருப்பதில்லை. எனவே, 1989-90-ஆம்



ஆண்டில் ரூ. 48,000 செலவில் ஒவ்வொரு மண்டல அலுவலகத்திற்கும் 'ஈ டி.ஏ.' காட்சிப் பலகைகள் என வழங்கப்படும் 12 கட்டு காட்சிப் பலகைகள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பயனாய் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் வாழ்க்கைத் தொழில் கண்காட்சிகளை நடத்தும்போது வாழ்க்கைத் தொழில் விளம்பரப் பொருளகளைக் காட்சிக்கு வைப்பதற்கு இந்தப் பலகைகளை பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். இந்தப் பலகைகள் பிரித்தெடுப்பதற்கும் இடம் விட்டு இடம் தூக்கிச் செல்வதற்கும் எளிதானவை.

(iv) அஞ்சல் முத்திரையிடும் (Franking) பொறிகளை வழங்குதல்.

7. 21. அஞ்சல் மூலமாக மனுதாரர்களுக்கு அனுப்பப்படும் பேட்டி அழைப்புக் கடிதங்கள் முறையாக அஞ்சலிடப்படுகின்றனவா என்பது பற்றி உறுதி செய்துகொள்வதற்கேற்பவும் அவை சரியாகப் பட்டுவாடா செய்யப்படுவது பற்றி உறுதிப் படுத்திக் கொள்வதற்கேற்பவும், அதுமட்டுமின்றி தற்போது கையால் அனுப்புகை செய்யப்படும் நடைமுறையில் காணப்படும் குறைபாடுகளைக் களைவதற்கேற்பவும் 1989-90 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 70,000 செலவில் 7 வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அஞ்சல் முத்திரையிடும் பொறிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

15. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமாக எழுத்தர் பதவிகளுக்கு ஆள் எடுப்பதற்கு தற்போதுள்ள தடையை விலக்குதல்.

7.22. 1983 வரை தமிழ்நாடு தேர்வாணைய ஆளுகைக்கு உட்பட்ட இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்தர் போன்ற பதவிகளில் ஏற்படும் தற்காலிகக் காலியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் நிரப்பப்பட்டு வந்தன. 1984-இல் தற்காலிக காலியிடங்களை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் நிரப்புவதற்கு அரசு தடை விதித்தது. ஆகவே தற்காலிக காலியிடங்கள் கூட தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வழியாக மட்டுமே நிரப்பப்பட்டு வருகிறது. இந்த நடைமுறையானது வேலை வாய்ப்பு அலுவலகங்கள் தம்மிடம் பதிவு செய்துள்ள மனுதாரர்களுக்கு வேலைவாய்ப்புகளுக்கான பேட்டி கடிதங்களை அனுப்புகின்ற வாய்ப்பைப் பெருமளவு குறைத்து விட்டது. மேலும் பொதுக் கல்வித் தகுதியுடைய மனுதாரர்கள் வேலை வாய்ப்பு அலுவலகங்களிலிருந்து வேலை வாய்ப்புகளுக்கான பேட்டிக் கடிதம் பெறுவதற்குக் காத்திருக்க வேண்டிய இயல்பான கால அளவானது 10லிருந்து 14 ஆண்டுகளாக உயர்ந்து விட்டது. வேலை வாய்ப்பகங்களின் வாயிலாகப் பணியில் அமர்த்தப்படுவோரின் எண்ணிக்கை 1983 வரை ஆண்டு ஒன்றுக்கு 75,000 என்ற எண்ணிக்கையிலிருந்து 1988-இன் இறுதியில் 54,000 எல்லா

கையினருக்கும் ஆகக் குறைந்து விட்டது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரர்கள் அரசுத் துறைகளால் ஈர்த்துக் கொள்ளப்பட்ட பின்னரே, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் இளநிலை உதவியாளர் பதவிகளில் ஏற்படும் தற்காலிக பணியிடங்களை நிரப்புவதற்கான தடை அரசு விலக்கும். அதன் பின் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பதிவேடுகளில் காத்திருக்கும் மூப்புடைய மனுதாரர்கள் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவிகளில் நியமனத்தின் பேட்டிகளை பெறுவதற்கு வாய்ப்பு அதிகமாகும்,

16. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 'கம்ப்யூட்டர்' முறையைக் கொண்டு வருதல்.

7.23. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள வேலை தேடுவோருக்கும் வேலையளிப்போருக்கும் திறமையாகவும் விரைவாகவும், புகாருக்கு இடமின்றியும் சேவை புரிவதற்காகவும், மனுதாரர்களை உடலுழைப்பின் மூலம் தேர்வு செய்யும் தற்போதைய நடைமுறையில் எதிர்கொள்ளப்படும் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்காகவும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 'கம்ப்யூட்டர்' முறையைப் புகுத்தும் திட்டம் தமிழ்நாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. சென்னை நகரில் இரண்டு அலுவலகங்கள். கோயம்புத்தூரில் ஒன்று, திருச்சிராப்பள்ளியில் ஒன்று என மொத்தம் 4 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 'கம்ப்யூட்டர்' அமைப்பதற்காக அரசு ஏற்கனவே ரூ. 17.33 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இதில் மைய அரசிடமிருந்து பெறப்பட்ட ரூ. 3.68 இலட்சமும் அடங்கும். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 'கம்ப்யூட்டர்' முறையைப் புகுத்த ஆகும் செலவில் ஓர் பகுதியை ஏற்பதன் மூலம் மைய அரசு இத்திட்டத்தை ஊக்குவிக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள எஞ்சிய வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கம்ப்யூட்டர்கள் வைபபதற்கு ரூ 104.33 இலட்சம் செலவாகும் என கணக்கிடப்படுகிறது. அதில் ரூ 15.53 இலட்சத்தை இந்திய அரசு தன்னுடைய பங்காக வழங்கும். எஞ்சிய வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கம்ப்யூட்டர் வைக்கும் திட்டத்தைப் படிப்படியாக அமல்படுத்தலாம் எனவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 8.

### கைவினைஞர் பயிற்சித் திட்டம் :

தமிழ்நாட்டில் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள வசதிகளின் விரிவாக்கத்தால் 6 முதல் 11, 11 முதல் 14 மற்றும் 14 முதல் 17 வயதுள்ள குழந்தைகள் கல்வி பயில அதிக எண்ணிக்கையில் பள்ளிகளில் சேர்கின்றனர். தொடர்ச்சியான பொருளாதார மற்றும் சமூக மாற்றத்தினை உறுதி செய்ய



கல்வி முறை ஒரு முக்கியமான பங்கினை வகிக்க வேண்டும். மாணவர்கள் பொதுக்கல்வியை முடித்தபின் உயர்கல்வி படிக்கவோ அல்லது வேலை தேடவோ எண்ணுவர்.

8.2. பொருளாதார நெருக்கடி காரணமாக உயர்கல்வி பெற வாய்ப்பில்லாத நலிவுற்ற மக்களின் குழந்தைகளுக்கு கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழான வாழ்க்கை கல்வி பயிற்சி முறை வாய்ப்பளிப்பதாக உள்ளது. தொழில் பயிற்சி நிலையங்களில் அளிக்கும் கைவினைஞர் பயிற்சி முழுவதும் இலவசமாக இருக்கின்றது. ஆகவே இத்திட்டம் நலிவுற்ற மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம் என்று கருதலாம். அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் கைவினைஞர் பயிற்சித் திட்டம் தொழிற் சாலைகளின் தேவைகளை நிறைவடையச் செய்கிறது. அரசினர் தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெற்ற கைவினைஞர்கள் பல்வேறு விதமான தொழில் சாலைகளில் மிகுந்த அளவில் வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர்.

8.3. தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் 44 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. 5 மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களும், ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு சிதம்பரத்தில் ஒன்றும், மலைவாழ் மக்களுக்காக தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரத்தில் ஒன்றும் இதில் அடங்கும். 45 தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அனைத்து 44 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 15,116 மாணவர்களும் 800 மாணவியர்களும் பயிற்சியிலுள்ளனர். ஆண்டுதோறும் சுமார் 10,000 பயிற்சியாளர்கள் வெற்றிகரமாக பயிற்சி முடித்து வெளியேறுகின்றனர். தேசிய வாழ்வியல் பயிற்சி திட்டத்துடன் இணைக்கப்பட்ட 175 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் இயங்குகின்றன. அவை 11,918 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும் தமிழ்நாட்டில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 155 தனியார் தொழிற் பள்ளிகளும் உள்ளன. இவைகளில் 52 தொழிற் பள்ளிகள், ஆசிரியர் சம்பளம் மற்றும் பயிற்சி செலவு ஆகியவைகளுக்கான செலவில் 75 விழுக்காடு செலவு தொகையை அரசு மானியமாக பெற்று வருகின்றன.

8.4. வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சித் திட்டம் ஒன்றும் அம்பத்தூர், கோயம்புத்தூர் மற்றும் ஒசூர் ஆகிய மூன்று அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் செயல்பட்டு வருகிறது. தொழிற் சாலைகளில் பணிபுரிந்து வருகின்ற தொழிலாளர்கள் நவீன நுண்ணிய தொழில் நுட்பம் கொண்ட இயந்திர சாதனங்களை இயக்க மற்றும் பராமரிக்கத் தக்கவாறு அவர்களின் தொழில் திறனை உயர்த்திக் கொள்வதுடன் நாளது வரையிலான மாற்றங்களை அறிந்து கொள்ளவும் இப்பயிற்சித் திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டம் தொழில் நிறுவனங்களால் வெகுவாக

பாராட்டப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். இத்திட்டம் அம்பத்தூரில் 1978-லும் கோயம்புத்தூரில் 1982-லும் ஓசூரில் 1988-லும் ஆரம்பிக்கப்பட்டது. இதுகாறும் 4,282 தொழிலாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்றுள்ளனர்.

8.5. தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்துள்ள முன்னாள் பயிற்சியாளர்கள் மற்றும் புதியதாக பயிற்சி பெற உள்ளவர்கள் ஆகியோருக்கு பயிற்சி வசதிகள் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் "தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம்" அமுலாக்கப்பட்டு வருகிறது. 1961 ஆம் ஆண்டு தொழிற்பழகுநர் சட்டம் இம்மாநிலத்தில் 1963 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது 13,275 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

8.6 தொழிற்சாலைகள் அதிகம் உள்ள இடங்களான அம்பத்தூர், வடசென்னை, கிண்டி, கோயம்பத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, மேட்டூர் அணை மற்றும் ஒசூர் போன்ற இடங்களிலுள்ள 8 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகிறது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட தொழிற்பிரிவுகளின் கருத்தியல் அறிவை வளப்படுத்திக் கொள்ள இத்திட்டம் வழிவகை செய்கிறது.

8.7 கிராமப்புற இளைஞர்கள் தாமாகவே வேலை வாய்ப்பு அமைப்புகளை உருவாகிக் கொள்ளும் வகையில் 20 தொழில்களில் சுயவேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம் 9 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் முழுநேர பயிற்சியாகவும் 23 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பகுதி நேர பயிற்சியுமாக அளிக்கப்பட்டு வருகிறது. இதுகாறும் இத்திட்டத்தினால் 9,898 கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி நிலையங்களில் தற்போது 993 இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

8.8 இதுபோன்ற அதிக அளவுடைய பயிற்சி திட்டங்களை அமுலாக்குவதற்காக 1889-90 ஆம் ஆண்டிற்கான மாநில வரவு-செலவுத் திட்டத்தில் தொடரினச் செலவாக ரூ 978.09 இலட்சமும், தொடரா இனச் செலவாக கட்டிடம், இயந்திரம் மற்றும் தளவாடங்களுக்காக ரூ. 5.9 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. (பகுதி 1 திட்டம்).

8.9. 1989-90 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படவுள்ள புதிய திட்டங்களில் முக்கியமான திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



(i) பயிற்சியை மேம்படுத்த உலக வங்கி நிதி உதவித் திட்டம் :

உலக வங்கி உதவியுடன் தொழிற் பயிற்சி நிலையங்களை 5 ஆண்டு கால கட்டத்தில் (1989-90 முதல் 1994-95 முடிய) ரூ. 2,174.41 இலட்சம் செலவில் நவீனப்படுத்தவும், அபிவிருத்தி செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கான மொத்த செலவில் 50 விழுக்காடு மத்திய அரசு உதவியாக அளிக்கும். மாநில அரசு எஞ்சிய 50 விழுக்காடான ரூ. 1,037.202 இலட்சத்தை ஏற்றுக்கொள்ள இசைவு அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழக அரசு நடத்தும் தொழில் பயிற்சி நிலையங்களில் கீழ்க்கண்ட திட்டங்கள் அமுலாக்கப்பட உள்ளன;—

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலுள்ள பழமையான இயந்திரங்களை மாற்றவும், மற்றும் பற்றாக்குறையான இனங்களில் இயந்திரங்கள் வாங்குதலும் .. | 1,241.56 |
| 2. | இயந்திரங்களை பழுது பார்க்கவும், பராமரிக்கவும்; ஆறு பராமரிப்பு மையங்களும் மாநில அளவிலான ஒரு பணிமனையும் ஏற்படுத்த செலவு .. | 77.42 |
| 3. | தற்பொழுதுள்ள 38 தொழிற் பயிற்சி நிலையங்களில் வருப்பறை போதனா முறையை மேம்படுத்தும் வகையில் விளக்கப்பட சாதனங்கள் அமைக்கச் செலவு .. | 45.60 |
| 4. | தற்போதுள்ள 16 தொழிற்பயிற்சி நிலையங்களில் 2 புது தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக விரிவுபடுத்தும் திட்டத்திற்கு .. | 291.04 |
| 5. | இரசாயனம், தோல் மற்றும் உணவு தயாரித்தல் தொழில்களின் அடிப்படைப் பயிற்சிக்காக இரு ஆதார பயிற்சி மையங்கள் ஏற்படுத்துதல் செலவு. .. | 105.00 |
| 6. | சென்னையில் மூன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும்—ஆக 4 தொடர் அறிவுரை மையங்கள் கூடுதலாக நிறுவுவதன் மூலம் தொழிற்பழகுநர் பயிற்சி திட்டத்தில் முன்னேற்றம் ஏற்படுத்த செலவு. .. | 107.40 |

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 7. ஓசூர் மற்றும் கோயம்புத்தூரில் வாழ்வியல் மேம்பாட்டுத் திட்டத்தை விரிவாக்கும் திட்டத்திற்கு செலவு. .. | 70.10 |
| 8. சேலம், திருச்சி, கோயத்புததூர், மதுரை மற்றும் சென்னையில் மேலும் 5 மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்குவதற்கு செலவு. .. | 205.81 |
| 9. சென்னையில் (தலைமையிடத்தில்) உலக வங்கி திட்டங்கள் அமுல்படுத்துவதை கையாள '' திட்ட நிருவாகப் பிரிவு '' ஒன்றை அமைக்கும் செலவு .. | 30.69 |
| மொத்தம் .. | 2,174.41 |

மேற்குறிப்பிட்டவாறு பல்வேறு திட்டங்களை மத்திய அரசின் உதவியுடன் அமுலாக்கப்படுவதால் 31 தொழில் பயிற்சி நிலையங்களிலுள்ள பழமையான இயந்திரங்கள் மாற்றப்படுவதுடன் அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் வழங்கப்படாமலுள்ள இயந்திரங்கள் தளவாடங்கள் வழங்கப்படும். ஆறு இயந்திர பராமரிப்பு பிரிவுகள் அமைப்பதன் மூலம் இயந்திர பராமரிப்பு முறையில் முன்னேற்றம் ஏற்படும். மாநில அளவிலான ஒரு பராமரிப்பு பணிமனை ஒன்று துவங்கப்படுவதன் மூலம் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள இயந்திரங்களை முழுதும் பிரித்து பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்படும். பாட போதனை முறையில் முன்னேற்றம் உண்டாக்குவதற்காக திரைப்படம் காட்டும் கருவி, தொலைக்காட்சி சாதனங்கள் மற்றும் தொடர்புடைய இதர கருவிகள் 38 தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்படும். தற்போதுள்ள பயிற்சி நிலையங்களில் 16-ஐ மேலும் விரிவாக்க ஒவ்வொன்றிலும் இரு புதிய தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் 1,504 பேர் கூடுதலான பயிற்சி பெறுவர். மகளிருக்காக மேலும் 5 தொழிற் பயிற்சி நிலையங்கள் திறக்கப்படுவதால் மகளிருக்கான தொழிற் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை 5-லிருந்து 10 ஆக உயரும் தற்போது 800 பெண்கள் பயிற்சி பெறுகின்றனர். இனி கூடுதலாக 480 மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்படும். 1989–90 ஆம் ஆண்டிற்கான உலக வங்கி திறன் மேம்பாட்டு திட்ட உதவியின் கீழ் ரூ. 12.90 இலட்சம் செலவில் சேலத்தில் ஒரு மகளிர் தொழிற் பயிற்சி நிலையம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. தலைமையிடத்தில் திட்டப் பணிகளை மேற்கொள்வ



தற்காக திட்ட நிர்வாக பிரிவு ஒன்றையும் ரூ. 8.19 இலட்சம் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு இவ்விரு திட்டத்திற்கான தொகையை 1989–90 ஆம் ஆண்டின் அரசின் பங்காக ரூ. 10,545 இலட்சங்களை ஒதுக்கியுள்ளது.

**(ii) பிளாஸ்டிக் தொழில் பிரிவை அறிமுகம் செய்தல் :**

நாட்டில் எண்ணெய் வளம் மிகுதியாகக் காணப்படுவதைத் தொடர்ந்து பிளாஸ்டிக் உற்பத்தியும் அதைப் பயன்படுத்துதலும் வளர்ந்துள்ளது. பிளாஸ்டிக் தொழிலுக்குத் தேவைப்படும் மனித ஆற்றலை உருவாக்க கிண்டி தொழிற் பயிற்சி நிலையத்தில் பிளாஸ்டிக் பதப்படுத்துதல் பிரிவைத் துவங்க அரசு உத்தேசித்துள்ளது, இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 15.06 இலட்சமாகும். இதில் தொடரா இனச் செலவு ரூ. 15.00 இலட்சமும், தொடரினச் செலவு ரூ. 0.06 இலட்சமும் அடங்கும். மத்திய அரசின் மூலமாக, இயந்திரங்கள் மற்றும் தளவாடச் செலவில் 60 விழுக்காடான ரூ. 9.00 இலட்சமும் இத்திட்டத்திற்கு நிதி உதவி கிடைக்கும். மாநில அரசு 40 விழுக்காடு செலவுடன் தொடரினச் செலவையும் ஏற்கும். மாநில அரசின் பங்குச் செலவான ரூ. 6.06 இலட்சத்தில் 1989–90ஆம் ஆண்டிற்கான செலவுக்கு ரூ. 4.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இப்புதிய தொழிற் பிரிவில் துவக்கக் காலத்தில் 32 பயிற்சியாளர்கள் ஆண்டுதோறும் பயன்பெறுவார்கள்.

**(iii) சென்னை–கிண்டி மகளிர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டுதல் :**

சென்னை தியாகராய நகரில் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வந்த மகளிர் தொழிற் பயிற்சி நிலையம் கிண்டி தொழிற் பயிற்சி நிலைய வளாகத்திற்கு மாற்றப்பட்டது. மகளிர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு தனியாக கட்டிடம் கட்டுவது அவசியமானது என்பதை அரசு கருதியதால் ரூ. 42 இலட்சம் செலவில் கட்டிடம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. 1989–90 ஆம் ஆண்டிற்கான செலவு ரூ. 22.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 9.

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.

இந்நிறுவனம் இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இதனுடைய அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 50 இலட்சமும் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 20 இலட்சமும் ஆகும். இது 6–7–1979 முதல் தீவிரமாகச் செயல்படத் தொடங்கியது.

**9.2. இந்நிறுவனத்தின் முதன்மையான அலுவல்கள் வருமாறு:**

(1) வெளிநாடுகளில், குறிப்பாக மேற்கு ஆசியா நாடுகளில் வேலை தேடும் இந்தியர்களுக்கு வேலை தேடித் தருவது;

(2) இந்தியாவில் பயனுள்ள திட்டங்களுக்காக அயல்நாடுகளில் உள்ள இந்தியர்களின் சேமிப்பில் ஒரு பகுதியைத் திரட்டுவது;

(3) இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் கூட்டாக தொழில்களை அமைத்தல்; மற்றும்

(4) இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஊக்குவித்தல். தற்சமயம் வெளி நாடுகளில் வேலைவாய்ப்பினை தேடும் அப்பாவி மக்களை வேலை தேடித் தருவதாக வாக்களித்து பணம் பறித்து ஏமாற்றும் தனியார் நிறுவனத்திடமிருந்து பாமர மக்களை காப்பாற்றி செயல்திறம் பெற்ற இந்தியர்களுக்கு வெளிநாடுகளில் வேலை தேடித்தரும் பணியில் இந்நிறுவனம் முக்கியமாக கவனம் செலுத்தி வருகிறது.

9.3 இந்நிறுவனம் தொழில் நுட்பம் தெரிந்து மற்றும் ஓரளவே தொழில் திறன் பெற்று வெளிநாடுகளில் வேலை தேடுபவர்களை பதிவு செய்து கொள்கிறது. இந்நிறுவனம் 1988–80 வரை 3,553 நபர்களுக்கு பல்வேறு 'மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பினைத் தேடித் தந்துள்ளது.

ஆரம்ப காலத்திலிருந்து இதுவரை இந்நிறுவனத்தால் வெளிநாட்டில் வேலையிலமர்த்தப்பட்டவர்கள் குறித்து ஆண்டுவாரியான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| 1979–80 | 36 |
| 1980–81 | 70 |
| 1981–82 | 317 |
| 1982–83 | 213 |
| 1983–84 | 354 |
| 1984–85 | 432 |
| 1985–86 | 1,505 |
| 1986–87 | 104 |
| 1987–88 | 212 |
| 1988–89 | 310 |
| மொத்தம் – | 3,553 |



9.4. இந்நிறுவனம், வேலைவாய்ப்பிற்கான தேவைகளைப் பற்றிய விவரங்களை அயல்நாட்டு தொழிலதிபர்கள் சென்னைக்கு வரும்போது நேரில் தொடர்பு கொண்டு பெறுகிறது. அயல் நாட்டு வேலையளிப்பவர்களுடன் நேரடியாகவும், கடிதத்தின் மூலம் தொடர்பு கொள்கிறது. மேலும் வெளிநாடுகளிலுள்ள ஆட்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் முகவர்களுடன் தொடர்பு கொண்டு இந்தியர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கிறது. ஈராக், ஈரான் நாடுகளுக்கிடையே நடந்த போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து, அதிக அளவில் இனி நபர்களைத் தேர்ந்தெடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியும் என இந்நிறுவனம் நம்பிக்கை கொண்டுள்ளது. அயல்நாடுகளில் இந்தியருக்கு வேலைத் தேடித் தரும் பணியுடன் தன் செயலை பல்திறப்படுத்தும் நோக்கத்துடன் பாஸ்போர்ட் (passport) பெறுவதற்கும், வெளிநாட்டிலிருந்து வரும் பிரயாணிகளுக்கு வசதி செய்து தருதல் போன்ற பிற வேலைகளில் ஈடுபடுவதற்கான ஆரம்ப கட்ட பணிகளை செய்து வருகிறது.

## அத்தியாயம் 10.

### கோரிக்கை 58 பலவகை மூலதனச் செலவு.

### 4250. ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள்—

### 203 வேலைவாய்ப்பு.

1989–90 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்த பகுதி—1, திட்டத்தின் மூலதனச் செலவாக ரூ. 5.91 லட்சங்கள் கீழ்க்கண்ட துணைத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் விடுதி கட்டிடம் கட்டுதல்:**

தற்போது 28 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் நிலையான விடுதி கட்டிடங்கள் உள்ளன. 1986–87 ஆம் ஆண்டில் தேனி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் விடுதி கட்டிடம் கட்ட அரசு அனுமதி வழங்கியது. கட்டிடமும் முழுமையாக கட்டப்பட்டுள்ளது. இங்கு மேலும் அதிகமான பயிற்சியாளர்களுக்கு விடுதி வசதி அளிப்பதற்காக இக்கட்டிடத்தில் இரண்டாம் அடுக்கு கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கென 1989–90 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டில் ஒரு அடையாளத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இல்லாத தளவாடங்கள் கொள்முதல் செய்தல் :**

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கென தர நிர்ணயப்படி, முன்னர் வழங்கப்படாத தளவாடங்களை கொள்முதல் செய்வதற்காக ரூ. 21.00 லட்சம் 1986–87 ஆம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்டது. இத்தொகை படிப்படியாக செலவிடப்பட்டு வருகிறது. 1989–90 ஆம் நிதியாண்டில் ரூ. 0.76 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்:**

1986–87ஆம் நிதியாண்டில் இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன. 1989–90ஆம் நிதியாண்டில் இத் தொழில் பயிற்சி நிலையங்களுக்கு இன்னும் பெறவேண்டிய இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக 3.79 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. தற்போதுள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனமாக்குதல்:**

கோவை மற்றும் ஒசூர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ''வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தின்'' கீழ் கருவிகள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக 1989-90 நிதியாண்டிற்கு ரூ. 1.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. ஸ்ரீமூலராமவர்மா தொழிற் பயிற்சி நிலையம், நாகர்கோவில்:**

1987-88ஆம் நிதியாண்டில் இந்நிலையத்திற்கு பற்றாக் குறையாக உள்ள கருவிகள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்காக ரூ. 3.00 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டிருப்பதில், 1989-90ஆம் நிதியாண்டில் இன்னும் பெற வேண்டிய தளவாடங்களுக்காக ரூ. 0.05 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.]

பொன். முத்துராமலிங்கம்,
அமைச்சர்—செய்தி மற்றும்
தொழிலாளர் நலம்.



## இணைப்பு—1.

### தொழிற் தகராறுகள்.

| விவரம். | 1987 (1987 சனவரி முதல் நாளிலிருந்து 1987 டிசம்பர் 31-ம் நாள் வரை). | 1988 (1988 சனவரி முதல் நாளிலிருந்து 1988 டிசம்பர் 31-ம் நாள் வரை). |
|---|---|---|
| (1) | (3) | (3) |
| (அ) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை. | 1,929 | 1,875 |
| (ஆ) இந்த ஆண்டில் வரப்பெற்ற புகார்கள்/எழுந்த தொழிற் தகராறுகளின் எண்ணிக்கை | 8,611 | 8,186 |
| (இ) முந்தைய ஆண்டுகளின் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை. | 1,0540 | 10,061 |
| (ஈ) சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 8,665 | 8,577 |
| (உ) தொழிலாளர்கள் நீதி மன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதி மன்ற தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 1,284 | 1,347 |
| (ஊ) நடுவர் நீதி மன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 4 | 5 |
| (எ) ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை. | 1,875 | 1,484 |

## இணைப்பு—2(i).

1988ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும்.

| விவரம். | 1987 (1987ஆம் ஆண்டு சனவரி முதல் நாளிலிருந்து 1987 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாள் முடிய). | 1988 (1988ஆம் ஆண்டு சனவரி முதல் நாளிலிருந்து 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாள் முடிய). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 234 | 211 |
| 2. வீணான உழைப்பு நாட்கள் | 33,32,335 | 21,23,646 |

## இணைப்பு—2(ii).

1988—ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்துத் தீர்வு காணப்பட்ட வழிமுறைகள்,

| | | |
|---|---|---|
| (1) நேரடிப்பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காணப் பட்டவை. | .. | 35 |
| (2) தாங்களாகவே முன்வந்து வேலை தொடங்கியவை. | .. | 6 |
| (3) தொழிலாளர் நலத் துறை அலுவலர்களாலும், அரசாலும் தீர்த்து வைக்கப்பட்டவை | .. | 146 |
| (4) மூடப்பட்டவை .. .. | .. | 7 |
| (5) தீர்ப்பு வழங்கப்பட்டது .. | .. | .. |
| (6) ஆண்டு இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை. | .. | 17 |



## இணைப்பு 2(iii).

(1) தொழில் வாரியாக ஏற்பட்ட வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள்:

| தொடர் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை. | | ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | இழந்த உழைப்பு நாட்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | 1987 | 1988 | 1987 | 1988 | 1987 | 1988 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. துணி நெசவு | 19 | 97 | 64,568 | 21,101 | 19,15,430 | 9,20,842 |
| 2. பொறியியல் | 32 | 38 | 15,465 | 9,308 | 4,48,004 | 4,59,623 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 4 | 5 | 1,347 | 724 | 10,338 | 33,900 |
| 4. புகையிலை, பீடித்தொழில் | .. | .. | .. | .. | .. | .. |
| 5. மலைக்தோட்டங்கள் | 19 | 14 | 1,536 | 7,331 | 3,42,769 | 1,31,196 |
| 6. ஏனையவை | 60 | 57 | 19,561 | 19,013 | 6,15,794 | 5,78,085 |
| மொத்தம் .. | 134 | 211 | 1,02,477 | 58,477 | 33,32,335 | 21,23,646 |

## இணைப்பு 3.

| திர்ப்பு வழங்குதல். | திர்ப்புக்கு அனுப்பப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1987 | 1988 | திர்ப்புகள் வழங்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1987 | 1988 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| அ) சென்னை தொழில் நடுவர் மன்றம் .. | 155 | 104 | 97 | 77 |
| ஆ) தொழிலாளர் நீதி மன்றங்கள் .. | 1,129 | 1,291 | 914 | 785 |
| இ) நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டவை .. | 4 | 1 | 2 | 1 |
| ஈ) தொழிலாளர் நீதி மன்றங்கள், முன்பு 33-சி (2) ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப்பட்டவை. | 2,461 | 2,367 | 1,768 | 1,305 |

தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-3சி (1)ஆம் பிரிவின் கீழ் பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்கான அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள்:—

| ஆண்டு. | இனங்களின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. பை. |
| 1987 .. .. .. | 2 | 16,815 78 |
| 1988 .. .. .. | 3 | 76,413 30 |



## இணைப்பு—4.

பல்வேறு தொழிலாளர் நலச் சங்கங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்.

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். | ஆண்டு தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. | இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டவை. | முடிக்கப்பட்டவை. | தண்டனை அளிக்கப் பட்டவை. | விடுதலைப் பெறப் பட்டவை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| (1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 3,747 | 4,048 | 3,530 | 3,279 | 9 |
| (2) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம். | 13,815 | 34,523 | 33,377 | 32,945 | 34 |
| (3) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | 1,813 | 2,774 | 2,776 | 2,297 | 3 |
| (4) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம். | 197 | 345 | 278 | 253 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *(5) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம். | 77 | 240 | 220 | 215 | 1 |
| *(6) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம். | 3,472 | 6,218 | 6,122 | 6,037 | 18 |
| (7) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் | 48 | 82 | 89 | 83 | 5 |
| *(8) 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல். | 928 | 1,444 | 1,0,3 | 1,059 | 3 |
| *(9) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 2,157 | 2,907 | 3,043 | 3,095 | 13 |
| *(10) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 82 | 121 | 129 | 128 | .. |
| *(11) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம். | 63 | 212 | 202 | 202 | .. |
| | 30 | 17 | 21 | 1 | 10 |
| *(12) 1986 ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர்கள் (தடை செய்தல் மற்றும் ஒழுங்கு படுத்துதல்) சட்டம். | 2 | 5 | 3 | 3 | |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| *(13) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம். | 2 | 5 | 3 | 3 | |
| (14) 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் ஏனைய செய்தித்தாள் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் பல்வகை விதித்துறைகள்) சட்டம். | 1 | .. | .. | | |
| *(15) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம். | 3 | 3 | 1 | 1 | .. |
| *(16) 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம். | 6 | 7 | 5 | 5 | .. |
| *(17) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப் படுத்துதல்) சட்டம். | 2 | 10 | 7 | 7 | .. |

## இணைப்பு-4—தொடர்ச்சி

பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்:—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். | தள்ளுபடிக்கப் பட்டவை. | திரும்பப் பெறப்பட்டவை. | தள்ளிவிடப் பட்டவை. | முடிவுப் பெறாமல் உள்ளவை | பெறப்பட்ட அபராதத் தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | ரூ. |
| (1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 10 | 226 | 6 | 4,265 | 9,91,694.00 |
| (2) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம். | 91 | 307 | .. | 14,961 | 14,54,547.00 |
| (3) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | 13 | 63 | .. | 1,811 | 2,35,375.00 |
| (4) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம். | 24 | .. | .. | 264 | 57,940.00 |
| *(5) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டம். | .. | 4 | .. | 97 | 39,725.00 |
| *(6) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம். | 16 | 51 | — | 3,572 | 2,14,093.00 |
| (7) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம். | 1 | .. | .. | 41 | 13,440.00 |
| *(8) 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 1 | 10 | .. | 1,299 | 1,21,121.00 |
| *(9) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 16 | 9 | .. | 2,021 | 4,20,010.00 |
| *(10) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | .. | 1 | .. | 74 | 15,025.00 |
| (11) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம். | .. | .. | .. | 73 | 32,265.00 |
| *(12) 1986 ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர்கள் (தடை செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம். | .. | .. | .. | 26 | 75.00 |
| *(13) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம். | .. | .. | .. | 4 | 500.00 |

| | | | |
|---|---|---|---|
| (14) 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் ஏனைய செய்தித்தாள் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் பல்வகை விதித்துறைகள்) சட்டம். | .. .. .. | 5 | 100.00 |
| *(15) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம். | .. .. .. | 8 | 13,225 |
| *(16) 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம். | .. .. .. | 5 | 1,250.00 |
| *(17) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப் படுத்துதல்) சட்டம். | .. .. .. | | |

(*)—தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகம் இருபாலருக்குமான விவரங்கள்.



## இணைப்பு 5.

தொழிலாளர் நல சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவை பற்றிய விவரம்:—

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அமர்த்திக் கொள்ளப் பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட உரிம பதிவுத் தொகை. | |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | |
| அ. அமைப்பு ரீதியான தொழில்கள்:— | | | | |
| 1. 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்:— | | | | |
| 1987 .. .. .. | 13,971 | 8,13,270 | 1,08,01,259 | 00 |
| 1988 .. .. .. | 14,649 | 8,16,032 | 1,20,03,269 | 00 |
| 2. 1951-ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்:— | | | | |
| 1987 .. .. .. | 537 | 93,197 | இதற்கு அவசியமில்லை. | |
| 1988 .. .. .. | 543 | 93,266 | இதற்கு அவசியமில்லை. | |
| 3. 1961-ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்:— | | | | |
| 1987 .. .. .. | 1,612 | 79,199 | 1,06,916 | 70 |
| 1988 .. .. .. | 1,626 | 77,687 | 1,51,435 | 80 |

(ஆ) அமைப்பு ரீதியில்லாத தொழில்கள்:—

1. 1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணிநிலைமைகள்) சட்டம்:—

| (1) | (2) | (3) | (4) | |
|---|---|---|---|---|
| 1987 .. .. .. | 1,353 | 10,461 (வீட்டிலிருந்து பணி புரிவோர் 2 இலட்சம்). | 33,692 | 50 |
| 1988 .. .. .. | 1,416 | 11,839 (வீட்டிலிருந்து பணிபுரிவோர் 2 இலட்சம்.) | 52,028 | 00 |

2. தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம்:—

| | | | |
|---|---|---|---|
| 1987 .. .. .. | 2,51,532 | 2,73,857 | இதற்கு அவசியமில்லை. |
| 1988 .. .. .. | 2,82,247 | 2,81,774 | இதற்கு அவசியமில்லை. |

3. தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு உணவு நிறுவனங்கள் சட்டம்:—

| | | | | |
|---|---|---|---|---|
| 1987 .. .. .. | 25,489 | 55,073 | 4,21,737 | 75 |
| 1988 .. .. .. | 26,107 | 75,491 | 3,830,962 | 65 |



இணைப்பு 6.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் ஆய்வாளர்கள் ஆய்வு செய்த விவரம்:—

| சட்டத்தின் பெயர். | முறையான ஆய்வு. | விடு முறை ஆய்வு. | சிறப்பு ஆய்வு. | திடீர் ஆய்வு. | இரவு நேர ஆய்வு. | சோதனை ஆய்வு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 22,722 | 1,270 | 3,389 | 557 | 940 | 3,566 |
| பதிவு பெறாத தொழிற்சாலைகள் ஆய்வு. | 4,659 | .. | .. | .. | .. | .. |
| தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | 3,97,551 | 51,737 | 6,809 | 15,728 | 20,910 | .. |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம். | 67,246 | 701 | 464 | 499 | 89 | .. |
| 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம். | 3,981 | 156 | 171 | 182 | .. | 347 |
| 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள், பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் பல்வகை விதித்துறைகள்) சட்டம். | 73 | .. | 7 | .. | .. | .. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல் மற்றும் நீக்குதல்) சட்டம். | 2,151 | .. | ... | ... | — | — |
| *1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய /பண்டிகை விடுமுறைகள்) சட்டம் | 1,74,033 | 2,152 | 1,894 | 776 | 35 | ... |
| 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம். | 1,886 | 159 | 33 | 112 | ... | .. |
| *1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம். | 58,498 | 59 | 182 | 201 | ... | .. |
| *1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம். | 93,865 | 144 | 136 | 268 | ... | ... |
| 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைகள்) சட்டம் | 2,256 | 3 | 10 | 15 | .. | .. |
| *1938 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சட்டம். | 729 | 18 | .. | 30 | ... | .. |
| *1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 14,987 | 49 | .. | 10 | — | .. |
| *1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டம். | 12,617 | .. | — | — | 6 | .. |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| *1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம். | 22,786 | 49 | 20 | 23 | .. | .. |
| *1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி சட்டம். | 22,986 | .. | .. | .. | .. | .. |
| *1986 ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்தல்) சட்டம். | 311 | .. | .. | .. | .. | .. |
| *1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம். | 10,697 | 49 | .. | .. | ... | .. |

* தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகம் இருபாலாரும் செய்த ஆய்வுகள்.

## இணைப்பு 7.

**(அ) பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் துறை அலுவலர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்:**

| தொடர் எண்ணும் விவரங்களும். | தமிழ்நாடு உணவகங்கள். | | தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | | பணிக்கொடை வழங்க சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1987 | 1988 | 1987 | 1988 | 1987 | 1988 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகள். | 21 | 3 | 123 | 54 | 797 | 524 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 21 | 31 | 159 | 126 | 1,699 | 1,325 |
| 3. வழக்குகளின் மொத்த எண்ணிக்கை. | 42 | 34 | 282 | 180 | 2,496 | 1,849 |
| 4. நடப்பாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 39 | 25 | 228 | 138 | 1,972 | 1,253 |
| 5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 3 | 9 | 54 | 42 | 524 | 596 |



## இணைப்பு 7—தொடர்ச்சி.

**(ஆ) தொழிலாளர் துணை ஆணையாளர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்:**

| விவரங்கள். | தொழிலாளர் இழப்பீட்டு சட்டம். | | ஊதியம் வழங்கல் சட்டம். | | பணிக்கொடை வழங்கல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1987 | 1988 | 1987 | 1988 | 1987 | 1988 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 398 | 515 | 325 | 917 | 51 | 371 |
| 2. இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 1,261 | 1,106 | 1,199 | 1,643 | 442 | 185 |
| 3. மொத்தம் .. .. | 1,659 | 1,621 | 1,524 | 2,560 | 493 | 556 |
| 4. இவ்வாண்டில் முடிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 1,144 | 1,200 | 607 | 1,677 | 122 | 532 |
| 5. ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 515 | 421 | 917 | 883 | 371 | 24 |

## இணைப்பு—8.

1—1—1988 முதல் 31—12—1988 வரையில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் செயல்படுத்திய நலத் திட்டங்களில் விவரங்கள்.

| | 1987–88 | 1988–89 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மொத்த நல மையங்கள் : | | |
| (அ) (தையற்பயிற்சி நிலையம் உள்பட). | 55 | 62 |
| (ஆ) மொத்த பயிற்சியாளர்கள். | 2,019 | 2,600 |
| கிண்டர் கார்டன் பள்ளி : | | |
| (அ) மொத்த மையங்கள் | 50 | 52 |
| (ஆ) பயன்பெற்ற குழந்தைகள் | 1,477 | 1,600 |
| குழந்தைகள் காப்பங்கள் : | | |
| (அ) மொத்த காப்பகங்கள் | 2* | 1** |
| (ஆ) பயனுள்ள குழந்தைகள் | 50 | .. |
| படிப்பகங்கள் : | | |
| (அ) மொத்த படிப்பகங்கள் | 14 | 17 |

* மகளிர் மன்றம் மூலம் ஒரு காப்பகம் நடத்தப்படுகிறது. மற்றொன்று தொழிலாளர் நல மையமாக மாற்றப் படுகிறது.

** மகளிர் மன்றம் மூலமாக நடத்தப்பட்டு வருகிறது.



## இணைப்பு—9.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் செயல்படுத்திய ஏனைய திட்டங்கள் :

| | 1987–88 | 1988–89 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகையை கொடுத்தல் : | | |
| 1. பயன் பெற்றவர்கள் | 2,232 | 3,769 |
| 2. ஒப்புதல் அளித்த தொகை | 1,28,257.00 | 2,25,475.00 |
| தொழிலாளர் குழந்தைகளுக்குத் தட்டச்சு சுருக்கெழுத்துப் படிப்புக் கட்டணங்கள் ஈடு செய்தல் : | | |
| 1. பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | 964 | 958 |
| 2. ஒப்புதல் அளித்த தொகை. | 1,07,568,00 | 1.08,912.00 |
| பாடநூல் உதவித் தொகை : | | |
| 1. பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | 6,481 | 6,521 |
| 2. ஒப்புதல் அளித்த தொகை. | 2,49,423.90 | 2,61,531.55 |

சமச் சடங்கிற்குரிய செலவுகள் :

| | | |
|---|---|---|
| 1. பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | 703 | 884 |
| 2. ஒப்புதல் அளித்தத் தொகை. | 1,44,000.00 | 2,65,200.00 |

உடல் ஊனமுற்றவர்களுக்குச் செயற்கை உறுப்பு வழங்குதல் (மூன்று சக்கர வண்டி உட்பட)—

| | | |
|---|---|---|
| 1. பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | 15 | 9 |
| 2. ஒப்புதல் அளித்தத் தொகை. | 16,966.60 | 12,895.00 |

காது கேட்கும் கருவி வழங்குதல் :

| | | |
|---|---|---|
| 1. பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | 72 | 39 |
| 2. ஒப்புதல் அளித்தத் தொகை. | 36,183.00 | 20,137.00 |



## இணைப்பு-10

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் வழங்கிய உதவித் தொகைகள்.

| | 1987–88 | 1988–89 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பொறியியல் பட்டப்படிப்பு— | | |
| பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | 67 | 164 |
| ஒப்புதல் அளித்த தொகை | 67,000.00 | 1,64,000.00 |
| பொறியியல் பட்டப்படிப்பு— | | |
| பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | 289 | 241 |
| ஒப்புதல் அளித்த தொகை | 1,73,400.00 | 1,44,600.00 |
| மருத்துவப் பட்டப்படிப்பு— | | |
| பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | 30 | 94 |
| ஒப்புதல் அளித்த தொகை | 30,000.00 | 94,000.00 |
| மருத்துவப் பட்டப்படிப்பு— | | |
| பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | 11 | 43 |
| ஒப்புதல் அளித்த தொகை | 6,600.00 | 19800.00 |

1989 ஏப்ரல் 2

| | | |
|---|---|---|
| **சட்ட பட்டப்படிப்பு—** | | |
| பயன்பெற்றவர்கள் எண்ணிக்கை. | 10 | 25 |
| ஒப்புதல் அளித்த தொகை | 10,000.00 | 25,000.00 |
| **வேளாண்மை பட்டப்படிப்பு—** | | |
| பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | .. | 12 |
| ஒப்புதல் அளித்த தொகை | .. | 12,000.00 |
| **தொழிற்பயிற்சி கல்வி—** | | |
| பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | 87 | 161 |
| ஒப்புதல் அளித்த தொகை | 26,100.00 | 1,79,100.00 |
| **மேல் நிலைக்கல்வி—** | | |
| பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை. | 76 | 170 |
| ஒப்புதல் அளித்த தொகை | 38,000.00 | 85,000.00 |



1989 ஏப்ரல் 20

### கோரிக்கை எண் 44.

### எழுது பொருள்-அச்சுத் துறை 1989–90.

### எழுது பொருள் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

எழுது பொருள்-அச்சுத் துறை முதலில் 1831-ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசிதழ்களை மட்டுமே அச்சிடுவதற்காக 10 தொழிலாளர்களுடன் தொடங்கப்பட்டது. பின்னர் அது வளர்ச்சி அடைந்து கடந்த ஆண்டுகளில் சீராக வளர்ந்து மாவட்டங்களில் 8 அச்சகங்களைக் கொண்டு விளங்குகின்றது.

எழுது பொருள்-அச்சுத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அச்சகங்கள் பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன:—

1. அரசு மைய அச்சகம்,
   வள்ளலார் நகர், சென்னை.
2. அரசு கிளை அச்சகம்,
   உயர்நீதி மன்ற வளாகம், சென்னை.
3. அரசு கிளை அச்சகம்,
   சூளை, சென்னை.
4. அரசு கிளை அச்சகம்,
   புதுக்கோட்டை.
5. அரசு கிளை அச்சகம்,
   திருச்சிராப்பள்ளி.
6. அரசு கிளை அச்சகம்,
   சேலம்.
7. அரசு கிளை அச்சகம்,
   விருத்தாசலம்.
8. அரசு கிளை அச்சகம்,
   மதுரை.

மேற்கூறிய பிரிவுகளைத் தவிர எழுது பொருள்-அச்சுத் துறை இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் எழுது பொருள்-அச்சுத் துறையின் எழுது பொருள் பிரிவும், அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும் செயல்படுகின்றன.

பணியாளர் நிருவாகம், தொழில் உறவுகள், பொது நிருவாகம், பொருட்களின் மைய நிருவாக அமைப்பு, எந்திரங்கள் வாங்குதல், அச்சகப் பிரிவுகளுக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்தல், மாநிலத்திலுள்ள அரசுத் துறைகள் அனைத்திற்கும் தேவைப்படும் எழுது பொருள்கள்,

1989 ஏப்ரல் 20

தட்டச்சுப் பொறிகள், படிப் பெருக்கிகள், கணக்கீட்டுப் பொறிகள் முதலியவற்றைக் கொள்முதல் செய்து வழங்குதல் போன்ற பணிகள், தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்குத் துறைத் தலைவர், அரசுப் துறை நிறுவனங்கள் ஆகியவை ஒப்படைக்கும் அச்சுப் பணிகள் மந்தனத் தனி அறிக்கைகள், விதிக்கோவைகள், நடைமுறை நூல்கள், வாக்குச் சீட்டுகள், வினாத் தாள்கள் போன்ற மிகவும் இரகசியத் தன்மை வாய்ந்த இனங்கள் வரையறுத்த, வரையறுக்கப்படாத படிவங்களை அச்சிடுதல் ஆகிய பணிகள் எழுது பொருள்-அச்சுத் துறையின்கீழ் வருகின்றன.

எழுது பொருள்-அச்சுத் துறை இயக்ககம், அனுமதிக்கப்பட்ட 2?4 பணியாளர்களைக் கொண்டு, மேற்கூறிய அச்சுப் பிரிவுகள் பணிபுரிவதைக் கண்காணிக்கும் தலைமை அமைப்பாகும். இத்துறை இயக்குநர், எழுது பொருள்—அச்சுத் துறை தொடர்பான பணிகளில், பொது மேலாளர், பணி மேலாளர், துணைப் பணி மேலாளர், உதவிப் பணி மேலாளர், ஏனைய தொழில் நுட்பப் பணியாளர் ஆகியோரின் உதவியுடன் தமிழ்நாடு மாநில அரசுக்கு ஆலோசகராகவும் செயல்படுகிறார்.

மாவட்டங்களில் மாவட்ட அரசிதழ்களை அச்சிடும் பணியைக் கிளை அச்சகங்கள் கவனித்து வருகின்றன. உயர்நீதி மன்றத்திற்குரிய அன்றாட வழக்குப் பட்டியல்களையும், சட்ட அறிக்கைகளையும் அச்சிடும் பணி, சென்னை, உயர்நீதி மன்றத்திலுள்ள கிளை அச்சகம் அச்சிட்டு வருகிறது. 1987—88 ஆம் ஆண்டில் செய்த பணிக்கால செலவு, இலவசமாக வெளியிடப்பட்ட வெளியீடுகளின் மதிப்பு, செய்த அரசுப் பணிக்கு அனுமதிக்கப்பட்ட பட்டுத் தொகை ஆகியவை மொத்தம் ரூபாய் 8 கோடியாகும்.

(1) அரசு மைய அச்சகம், சென்னை:

இது, பணி மேலாளர் கட்டுப்பாட்டின்கீழ் மொத்தம் 3,488 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றுப் பணியில் செயல்பட்டு வருகிறது. இவ்வச்சகத்தில் அச்சிடும் எந்திரங்கள், புத்தகம் கட்டும் எந்திரங்கள், அச்சுக் கோர்க்கும் எந்திரம், போட்டோ கம்போசிங் எந்திரம், பிளாக் தயாரிப்புப் பிரிவு, ரப்பர் முத்திரைப் பிரிவு ஆகியவை முழு அளவில் உள்ளன.

தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு மாநிலக் கணக்குத் துறைத் தலைவர், பொதுத் துறைக் கழகங்கள் ஆகியவை ஒப்படைக்கும் அச்சுப் பணிகளின் பெரும்பான்மைப் பணியையும், வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், வினாத் தாள்கள், வரையறுத்த வரையறுக்கப்படாத சில படிவங்கள் போன்ற மிக இரகசிய இனங்கள் ஆகியவற்றையும், அரசு மைய அச்சகம் அச்சிடுகிறது.



1989 ஏப்ரல் 20]

1988 ஆம் ஆண்டில் மைய அச்சகம் செய்து முடித்த சில முக்கிய பணிகள் வருமாறு—

| | | நகல்கள். |
|---|---|---|
| 1. | சிறப்பு சேம நிதி—பணித் தொகை தொடர்பான படிவங்கள். | 10,00,000 |
| 2. | ஒய்வூதிய கணக்கீட்டுப் படிவங்கள். | 50,000 |
| 3. | ஆசிரியர் தினக் கொடிகள் (மூவகை) | 14,62,000 |
| | குழந்தைகள் தின பேருந்து, திரைப்பட இலவச அனுமதிச் சீட்டு, | 65,000 |
| | தோரண வாயில் (நான்கு வெளியீடுகள்). | 88,000 |
| 4. | திடீரென்று தோன்றும் நோய்கள் பற்றிய அறிக்கை. | 50,000 |
| 5, | தொழிலாளர் சேம நல நிதிப்படிவங்கள் (நான்கு இனங்கள்). | 2,66,000 |
| 6, | குடும்ப அட்டைகள் | 50,94.000 |
| 7. | அஞ்சல் வழிக் கல்வி (7 இனங்கள்) | 1,27,500 |
| 8. | தேர்வுத் தாள்கள் | 4,29,000 |
| 9. | அடுத்த நிகழ்ச்சி குறித்த பள்ளி இறுதிச் சான்றிதழுடன் வழங்கப்படும் குறிப்பு, | 5,20,000 |
| 10. | வேலையற்றோருக்கு வழங்கப்படும் இடருதவி தொடர்பான விண்ணப்பங்கள். | 2.00,000 |
| 11. | தொழில் கல்விச் சான்றிதழ்கள் | 4,95,000 |
| 12. | அரசுத் தேர்வுகள் சம்பந்தப்பட்ட அறிவுரைகள், படிவங்கள். | 37,00,000 |
| 13. | தேர்தல் சம்பந்தப்பட்ட சிறு நூல்கள் (5 இனங்கள்). | 2,14,000 |
| 14. | மேலுறைகள் (27 இனங்கள்) | 14,65,000 |
| 15. | சட்டப்படியில்லா படிவங்கள் (9 இனங்கள்) | 23,88,600 |
| | சட்டப்படிக்கான படிவங்கள் (40 இனங்கள்) | 9,24,000 |
| 16. | வாக்காளர் பட்டியல் (306 இனங்கள்). | 19,450 |
| 17. | வேளாண்மை கணக்கெடுப்புப் படிவங்கள் (9 இனங்கள்). | 7,58,000 |
| 18. | காவல் துறைப் படிவங்கள் (10 இனங்கள்) | 6,12,000 |
| | உள்ளீட்டுப் படிவங்கள் (3 இனங்கள்) | 6,50,000 |

| | | நகல்கள் |
|---|---|---|
| 19. | கருகலைப்பு சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களும் படிவங்களும் (7 இனங்கள்). | 59,60,000 |
| 20. | மது, சொந்த பயனுக்காக அனுமதிச்சீட்டு. | 2,00.000 |
| 21, | தொழில் உற்பத்தி சீர்திருத்தப்படிவங்கள். | 6,00,000 |
| 22. | நில நிருவாகம் சம்பந்தப்பட்ட படிவங்கள் (12 இனங்கள்). | 5,63,700 |

23. சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலுக்கான வாக்கு சீட்டுகளை அச்சிடுதல்,

இந்த அச்சகத்தில் ஒய்வறை ஒன்று உள்ளது. தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவர் சிற்றுண்டிச் சாலை ஒன்றை நடத்துகிறார். பணிபுரியும் மகளிரின் குழந்தைகளைப் பணி நேரங்களில் கவனித்துக் கொள்ள குழந்தைகள் காப்பகம் ஒன்றும் உள்ளது.

(2) அரசு கிளை அச்சகம், ரூளை, சென்னை :

இந்த அச்சகம், அனுமதிக்கப்பட்ட 680 பணியாளர்களுடன் மூன்று முறை மாற்றுப் பணியில் செயல்படுகிறது. இந்த அச்சகம், முக்கியமாக, தமிழ்நாடு அரசுத் தேர்வாணைக்குழு காவல் துறை, மருத்துவத் துறை, வணிக வரித்துறை ஆகிய துறைகளின் அச்சுப் பணியை மேற்கொள்கிறது.

தொழிலாளர் நல உதவி அலுவலர் ஒருவர், இக்கிளை அலுவலகத்தின் நலனைக் கவனிக்கிறார்.

(3) சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள அரசு கிளை அச்சகம்:

இக்கிளை அச்சகம், அனுமதிக்கப்பட்ட 24[illegible] பணியாளர்களுடன் மூன்று முறை மாற்றுப் பணியில் செயல்படுகிறது.

இவ்வச்சகத்தின் முக்கியப் பணி உயர்நீதி மன்றத்திற்குரிய தினசரி வழக்குப்பட்டியல்களை அச்சிட்டு வழங்குவதும், இந்தியச் சட்ட அறிக்கைகளை அச்சிடுவதும் ஆகும்.

பின்வரும் அலுவலகங்கள் தொடர்பான பணிகள், 1988 ஆம் ஆண்டில் இவ்வச்சகத்தில் மேற்கொள்ளப்பட்டன:—

1. மாநிலக் கணக்குத் துறைத் தலைவரின் சுருக்கத் தொகுப்பு ஒருங்கிணைந்த மாற்றுப் பதிவுபேரேடு.

2. செட்டில்மெண்ட் இயக்குநர் 'ஏ' பதிவேட்டு பணி.

3. தேர்வுகள் இயக்குநர்—விடைத்தாள்.



4. சிறைத் துறைத் தலைவர்—சிறைத் துறைப் படிவங்கள்.

5. கிங் நிலைய இயக்குநர்—நோய்த் தடுப்பு மருந்து பெயர்ச் சீட்டுகள்.

6. தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம்—ஆண்டு அறிக்கை தேர்வாளருக்கு அறிவுரைகள்.

ஒவ்வொன்றும், 1,16,875.00 ரூபாய் வீதத்தில் கலைமணி பிராண்ட் ஹாண்ட்ஃபெட் சிலிண்டர் அச்சிடும் எந்திரங்கள் இரண்டு 1988-89 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

(4) அரசு கிளை அச்சகம் புதுக்கோட்டை:

இக்கிளை அச்சகம் 254 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது. பொதுவாக கீழ்க்குறிப்பிட்டுள்ள அச்சுப்பணிகள் இக்கிளை அச்சகத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. ஆதி திராவிட நலத்துறை படிவங்கள், பிற்பட்டோர் நலத் துறைப் படிவங்கள், பதிவுத் துறைப் படிவங்கள் கருவூல கணக்குகள் துறைப்படிவங்கள், பொதுப்பணித் துறை படிவங்கள், உயர்நீதிமன்றத்திற்கான படிவங்கள், மீன்வளத் துறைப் படிவங்கள், தேசியக் கல்விக்கடன் உதவித் தொகை படிவங்கள் போன்ற வழக்கமான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் இவ்வச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

இவற்றுடன் சென்னை, செங்கை-அண்ணா, நீலகிரி, வட ஆற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், பசும்பொன்தேவர் திருமகன், காமராஜர், தருமபுரி, கோயம்புத்தூர், சிதம்பரனார் மாவட்டங்களின் அரசிதழ்களும் இக்கிளை அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

(5) அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி:

இக்கிளை அச்சகம், 1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு அரியமங்கலம் தொழிற்பேட்டையில் நான்கு வாடகைக் கட்டிடங்களில் (182 பணியாளர்களுடன்) இயங்கி வருகிறது. இக்கிளை அச்சகம் தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரசுத் துறைகளுக்கும் அன்றாட பணிக்குத் தேவைப்படக்கூடிய 43 பொது படிவங்களையும் பதிவேடுகளையும் அச்சிட்டு வழங்கி வருகிறது. இதைத் தவிர பொதுப்பணித் துறையிலுள்ள காவேரி . மேல் அணைக்கட்டு நுழைவுச் சீட்டுகள், தலைமைச் செயலக உள் துறைக்குத் தேவையான வார மற்றும் ஆண்டு அட்டவணைகள் 'ஏ' பதிவேடுகள், விவசாயத்துறை ஆண்டறிக்கை, கருவூலக் கணக்கு படிவங்கள், வேளாண்மை பொருள் விற்பனைச் சங்கம் மற்றும் வேளாண்மைத்துறை மாத வெளியீடான நீரும் நிலமும் என்ற இதழ் முதலானவைகள் இவ்வாண்டுல் அச்சிடப்பட்டன.

(6) அரசு கிளை அச்சகம், சேலம்:

இவ்வச்சகம் 132 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்தில் பின்வரும் பணிகள் இவ்வாண்டில் மேற் கொள்ளப்பட்டன:—

1. தமிழ்நாடு கருவூல விதிக்கோவை படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அனைத்தும் அச்சிடப்பட்டு தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

2. சேலம், பெரியார் மாவட்ட அரசிதழ்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டன.

3. இதைத்தவிர திருச்செங்கோடு தொகுதிக்கான வாக்காளர்
பட்டியல்கள் (5 பாகங்கள், அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.
மேலும் கருவூலத் துணைக் கணக்கு பதிவேடுகள் 11
தொகுதிகளும்) விற்பனைவரி படிவங்கள் 10 இனமும், சேலம்
விற்பனை குழுவிற்கான 7 வித படிவங்களும் அச்சிடப்பட்டு
வழங்கப்பட்டுள்ளன. நில அளவை நிலப்பதிவேடுகள் துறைக்
குத் தேவையான 'ஏ' பதிவேடுகள் அச்சிடும் பணியையும் இவ்
வச்சகம் மேற்கொண்டு வருகிறது.

ஒரு கையால் இயக்கப்படும் சிலிண்டர் லெடடர் பிரஸ் அச்சிடும் இயந்திரம் கலைமணி ரூ. 1,16,825.00 என்ற விலையில் இவ்வச்சகத்திற்காக 1988-ல் வாங்கப்பட்டது.

(7) அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்:

இவ்வச்சகம் 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு அதன் சொந்தக் கட்டிடத்தில் 211 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறை மாற்றுப் பணிகளில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்தில் பொதப் பணித்துறை, நீதித்துறை, வேலை
வாய்ப்பு அலுவலகம். வேளாண்மை, தொழில் மற்றும் வணிகம்
வனம், கால்நடை பராமரிப்பு, கூட்டுறவு, தீயணைப்புத் துறை
கள், தேசிய மாணவர் படை மற்றும் புள்ளியியல் துறை
மருத்துவத் துறை, காவல் துறை ஆகியவற்றிற்குத் தேவைப்
படும் நிர்ணயிக்கப்பட்ட படிவங்கள் அச்சிடப்படுகின்றன.
மேற்சொன்னதைத் தவிர, தென்ஆற்காடு மாவட்ட அரசிதழ்
(ஆங்கிலம் மற்றும் தமிழ்) அச்சிடப்படுகின்றது. மற்றும் நில
அளவை நிலப் பதிவேடுகள் துறைக்குத் தேவையான 'ஏ' பதி
வேடும், பொதுப் பணித் துறை அட்டவணை வீதங்களும் அச்
சிடப்படுகின்றன. இயக்குநர் அலுவலகம் ஒப்படைக்கும் ஏனைய
இனங்களும் இந்த அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.



(8) அரசு கிளை அச்சகம், மதுரை:

இக்கிளை அச்சகம் 1976 ஆம ஆண்டு துவங்கப்பட்டு நன்
முறையில் வடிவமைக்கப்பட்டு இதன் சொந்தக் கட்டிடத்தில்
இயங்கி வருகிறது. இதில் 355 பணியாளர்கள் பணியாற்றுகின்றன

இவ்வச்சகத்தில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன :—

1. வருவாய்த் துறை படிவங்கள் (R.F. குரூப்).
2. போக்குவரத்துத் துறை (மோட்டார் வண்டிகள் சட்டம்),
3. பத்திரப் பதிவுத் துறை படிவங்கள் (ப.ப. II-20).
4. கருவூல கணக்குகள் இயக்குநர் (D.T.E. குரூப்).
5. காவல் துறை படிவங்கள் (கா. பி. 60, 62).
6. தமிழ்நாடு கருவூல விதிக்கோவை.
7. நீலம் மற்றும் வெள்ளை விதைக் கொடிகள்.
8. மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு உரிமங்கள் (10 வகை).
9. மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை II) அறிக்கை (வணிகஞ் சார்ந்தவை நூல்கள்).
10. மாநில கணக்குத் துறைத் தலைவர் நிதி ஒதுக்கீடு கணக்கு குறித்த நூல்கள்.
11. மாநில கணக்குத் துறைத் தலைவர் நிதி கணக்குகள்.
12. மாநில கணக்குத் துறைத் தலைவர் (சிவில்) அறிக்கை.
13. குடும்ப அட்டைகளுக்கான 'இ' படிவங்கள்.
14. குடும்ப அட்டைகள்.
15. மாதாந்திர தாள் நாட்காட்டி.
16. மூன்று மாத நாட்காட்டி.
17. அட்டவணைப் படிவங்கள் (ஐந்து வகைகள்).

2. எழுதுபொருள் பிரிவு :

எழுதுபொருள் அச்சுத் துறையிலுள்ள எழுதுபொருள்
பிரிவு' எழுது பொருள்களையும், தட்டச்சு இயந்திரங்கள்,
படிப்பெருக்கிகள், கணக்கிடும் பொறிகள் முதலியவற்றையும்
கொள்முதல் செய்து தமிழ்நாட்டிலுள்ள அரசு அலுவலகங்கள்
அனைத்திற்கும் வழங்கும் மைய முகவரமைப்பாக, இயங்கி
வருகிறது. இந்த எழுது பொருட்கள் அரசு அலுவலங்கள்
அனைத்திற்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

1–4–1988 முதல் 30–11–1988 வரையிலான காலத்தில் ரூ. 4,55,81,808.35 அளவிற்கு எழுது பொருள்கள் வாங்கப் பட்டன. மத்திய அரசின் உதவி பெறும் அல்லது அரசு பொறுப் பேற்கும் திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு அவை முன் கூட்டியே உரிய தொகை செலுத்துவதன் பேரில் எழுது பொருட்கள் வழங்கப்படுகின்றன.

3. எழுதுபொருள் கொள்முதல் ;

காகிதம், அட்டை, தட்டச்சு பொறிகள், படிப்பெருக்கிகள், கதர் மற்றும் கைத்தறி துணிகள், அச்சகம் மற்றும் சிறைச்சாலை தயாரிக்கும் பொருட்கள் நீங்கலாக ஏனைய எல்லா எழுது பொருட்களும் ஆண்டுதோறும் ஒப்பந்தப் புள்ளிகள் கேட்டு வெளி அங்காடியில் வாங்கப்படுகின்றன.

4. காகிதம் மற்றும் அட்டைகள் கொள் முதல் :

காகிதம் மற்றும் அட்டைகள் போன்றவைகள், புதுடெல்லியில் உள்ள வழங்கல் விற்பனைத் தலைமை இயக்குநர் விலை வீத ஒப்பந்த அடிப்படையில் செய்யும் ஒதுக்கீட்டின் பேரில் பல காகித ஆலைகளில் இருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன.

வழங்கல் விற்பனை தலைமை இயக்குநரின் விலை வீத ஒப்பந்தத்தின்கீழ் வராத சிறப்பு வகைக் காகிதம் மற்றும் அட்டைகள் போன்றவைகள் வெளி அங்காடியில் வெளிப்படை யாக ஒப்பந்தப் புள்ளிகளில் வரம்பிற்குட்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தனி ஒப்பந்த புள்ளிகள் கோருவதன் மூலம் ஆணையர் மற்றும் செயலர், பொதுப் பணித் துறை அவர்களை தலைவ ராகவும், எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநர் மற்றும் துணைச் செயலர், நிதித் துறை ஆகியவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட சிறப்புக் கொள்முதல் குழுவின் ஒப்புதல் பெற்று கொள்முதல் செய்யப்படுகின்றன.

5. அரசு வெளியீடு விற்பனை நிலையம், சென்னை :

சென்னை, அண்ணாசாலை, அரசு வெளியீடு விற்பனை நிலையம் மற்றும் கிளை விற்பனை நிலையம் (உயர் நீதிமன்ற வளாகம்) ஆகிய இவ்விரண்டும் உதவி இயக்குநரின் கட்டுப் பாட்டின்கீழ் 57 பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இவை சட்டங்கள், விதிகள், விதிக் கோவைகள், நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப் பதிவேடுகள் போன்ற அரசு வெளியீடுகளை விற்பனை செய்து வருகின்றன. இந்திய அரசு வெளியீடுகளுக்கும் முகவரமைப்பாக செயல்படுகிறது. இந்த வெளியீடுகள், கமிஷன் அடிப்படையில், இம்மாநிலம் முழுவதிலும்



உள்ள அனுமதி பெற்ற 44 முகவர்கள் மூலமும் விற்கப்படு கின்றன. 1–4–1988 முதல் 30–11–1988 வரையிலான கால அளவில் இந்த அரசு வெளியீடு விற்பனை நிலையத்தின் விற்பனை அளவு வருமாறு :—

| | | ரூபாய். |
|---|---|---|
| (1) | அரசு அலுவலகங்களுக்கு இலவசமாக வழங்கிய வெளியீடுகள் மதிப்பு. | 17,291.75 |
| (2) | மாநில அரசு மற்றும் மைய அச்சு வெளியீடுகளின் விற்பனை மதிப்பு. | 14,09,137.50 |
| (3) | உயர் நீதிமன்ற வளாகத்தில் இருக்கும் அரசு கிளை விற்பனை நிலையத்தின் மாநில மற்றும் மைய அரசு வெளியீடுகளின் விற்பனை மதிப்பு. | 90,848.70 |

6. பணியாளர்களின் வசதிகள் :

(1) குடியிருப்புகள் :

சென்னையிலுள்ள தண்டையார்பேட்டையில் பணியாளர் களுக்கென 300 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 104 குடியிருப்புகள் 'எ' வகையிலும்' 96 குடியிருப்புகள் 'பி' வகை யிலும், 100 குடியிருப்புகள் 'சி' வகையிலும் உள்ளன. இந்த வீடுகளில் மின் விசிறி, கம்பி வலைகள் பொருத்தப்பட்டுள்ள துடன் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும் தெரு விளக்கு வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

(2) தொழிலாளர் நலம் :

தொழிலாளர் நல அதிகாரியும் சுகாதார ஆய்வாளரும், குடியிருப்போரின் நலன்களைக் கவனித்து வருகின்றனர். தொழிலாளர்களின் குறைகளைக் கேட்டறிந்து களைவதற்காக தொழிலாள நல அதிகாரி, சென்னை, வெளியூர்களிலுள்ள இத்துறைப் பிரிவுகளுக்கு நேரிடையாகச் சென்று வருகிறார். சுகாதார ஆய்வாளர் நகரில் உள்ள எல்லாப் பிரிவுகளுக்கும் அடிக்கடி சென்று நன்முறையில் சுகாதார வசதிகள் பராமரிக்கப் படுகின்றனவா என்பதை மேற்பார்வையிடுகின்றார். கொசுத் தொல்லையை ஒழிக்கவும், சுகாதாரம் நல்ல முறையில் பராமரிக் கப்படவும் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஓய்வு அறை, சிற்றுண்டி அறை, மிதிவண்டி நிறுத்துமிடம், வானொலிகள் ஆகியவற்றுடன் பிரிவு அளவில் வகுப்புகள் நடத்தும் அறைகள் ஆகியவை அமைக்கப்பட்டு தொழிலாளர்கள் தொடர்ந்து இவ்வசதிகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

(3) மருந்துவ வசதி :

அரசினர் மைய அச்சகத்திலுள்ள மருந்தகத்தைச் சார்ந்த மருத்துவ அலுவலர் வாரம் ஒருமுறை எழுது பொருள் இயக்ககம், உயர் நீதிமன்றக் கட்டிட கிளை அச்சகம், எழுது பொருள் கிடங்கு கிளை அச்சகம், ஆணைக்காரன் தோட்ட கிளை அச்சகம் ஆகியவற்றிற்குச் சென்று பார்வையிடுகிறார். பணியாளர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் மைய அச்சகத்தில் உள்ள மருந்தகத்தில் நாள்தோறும் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றது.

(4) பன், தேநீர், பால் இலவசமாக வழங்குதல் :

அரசு மைய அச்சகம், அதன் கிளை அச்சகங்கள் அனைத்திலும் பணிபுரியும் எல்லா பணியாளர்களுக்கும் பன், தேநீர் இவற்றிற்கு பதிலாக ரொக்கமாக ஒரு நபருக்கு மாதம் ரூ. 20 வீதம் படி வழங்கப்படுகின்றது. மேலும் உலோகப் புகையினால் உடல் நல இன்னல்களுக்குட்படக்கூடிய பணியாளர்களுக்கு முன்னர் நாள் தோறும் 250 மில்லிலிட்டர் பால் வழங்கப்பட்டதற்குப் பதிலாக ஒரு நாளைக்கு 0.60 பைசா ஒவ்வொரு பணியாளருக்கும் வழங்கப்படுகின்றது. இத்துடன் இலவசமாக பல்வகை ஊட்டச் சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன. இரவு நேர முறைப் பணிப் படி ரூ. 2.50 என்ற வீதத்தில் வழங்கப்படுகின்றது. 7 நாள் வார ஈட்டுப்படியாக சென்னை அரசினர் மைய அச்சக வரவு செலவுத் திட்ட இரகசியப் பிரிவிலும், பரம இரகசிய பிரிவிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முறையே ரூ. 12, ரூ. 15 ஆகவும் வழங்கப்படுகின்றன.

(5) தொழிலாளர் நல நிதி :

எழுது பொருள் அச்சுத் துறையில் அந்தந்த பொழுதுபோக்குச் சங்கங்களுக்குத் தொழிலாளர் நல நிதியிலிருந்து விளையாட்டுகள், நலப் பணிகள் ஆகியவற்றிற்காக நிதி வழங்கப்படுகின்றது. மேலும், இந்த நிதியிலிருந்து பணியாளர்களுக்கு சுதந்திர தின விழா, ஆயுத பூசை முதலிய விழாவினைக் கொண்டாடவும் தொகை வழங்கப்படுகிறது.

தொழிலாளர் நல நிதியில் பங்குத் தொகை செலுத்தும் தொழிலாளர்கள் தங்களுடைய குழந்தைகளின் பள்ளிப் பாடப் புத்தகங்களுக்காகும் செலவை சென்னை-6, தொழிலாளர் நல வாரியத்திடமிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஈடு செய்து திரும்பப் பெறுகின்றனர்.

(6) சீருடைகள் :

இத் துறையின் தொழிலாளர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது இதுவரை 1,728 தொழிலாளர்களுக்கு சீருடைகள் வழங்கப்



பட்டுள்ளன. மேலும் இதுவரை சீருடை வழங்கப்படாதவர்களுக்கு சீருடை வழங்குவதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

(7) தொழிலாளர் நல நிதி:

தொழிலாளர் இறக்க நேரிடின் அவருடைய குடும்பத்தினருக்கு உடனடி நிவாரணமாக ரூ. 100 இந்த நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இதைத் தவிர தொழிலாளர் நலவாரியத்திலிருந்து இந்தத் தொழிலாளர்களின் சட்டப்படிக்கான வாரிசுதாருக்கு ரூ. 200 வழங்கப்படுகிறது.

(8) நலத் திட்டங்கள்:

பெண்கள் துணை வருவாய் பெற உதவும் வகையில், ஒரு நலத்திட்டமாக புத்தகம் கட்டும் வேலைகள், கோடிடுதல், மேலுறை தயாரித்தல் ஆகியன சென்னை மாநகரில் உள்ள காவல் துறை நலப்பிரிவுகள், பட்டினப்பாக்கம் மகளிர் மன்றம், சென்னை நகரிலுள்ள ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கம் போன்ற சமூக நல அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

(9) தொழிற்பழகுதல்:

1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் வெவ்வேறு வகைத் தொழில்களின் கீழ் 257 தொழில் பழகுவோரும் பதவிகளின் குறுகிய கால பட்டயக்கல்வி சான்றிதழ் பெற்ற 45 பேரும் அச்சகப் பிரிவுகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இத் தொழில் பழகுவோர் சென்னை மாநகரிலும், வெளியூர்களிலும் உள்ள அரசு அச்சகங்களிலும் பணிபுரிய நியமிக்கப்படுகின்றனர்.

(10) கூட்டுறவுச் சங்கம்:

சென்னை மைய அச்சகத்தில் இயங்கிவரும் தமிழ்நாடு அரசு அச்சகம் எழுதுபொருள் துறை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 2,753 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அதன் பங்கு மூலதனம் 31.28 இலட்சமாகும். உறுப்பினர்களுக்கு இச் சங்கத்தின் மூலம் 1987-88-ல் 3.72 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. ஆனால் 1986-87-ல் இச் சங்கத்தின் மூலம் 3.48 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. இச் சங்கம் 1987-88-ல் ரூ. 5.87 இலட்சம் நிகர லாபம் ஈட்டியது. 1986-87 ல் ரூ. 5.13 இலட்சம் நிகர லாபம் ஈட்டியது. அதன் உறுப்பினர்களுக்கு 12 சதவீதம் ஆதாயப் பங்கு தொகை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

(11) கூட்டுறவுப் பண்டகசாலை:

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத் துறை கூட்டுறவு பண்டகசாலை உணவுப் பொருள் பங்கீட்டு ஏற்பாட்டின்கீழ் வரும் பொருட்கள் உட்பட இன்றியமையாத பண்டங்களை நியாய விலையில் பணியாளர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம் பயனுள்ள வகையில் பணியாற்றி வருகிறது. தற்போது 1,790 உறுப்பினர்களுடன் ரூ. 36,910.00 பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ளது. இது அரசிடம் இருந்து பங்கு மூலதன உதவியாக ரூ. 22,500.00 பெற்றுள்ளது. பங்கீடு அட்டைகள் வைத்திருக்கும் 548 பேருக்கு பங்கீடு பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தொழிலாளர் நலன் கருதி 3 முதல் 6 சதவீதம் மட்டுமே ஆதாயம் கிடைக்கும் வகையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அதிகப் பட்சமாக மாதமொன்றிற்கு ரூ. 200 வரை பொருட்களை உறுப்பினர்கள் கடனாக வாங்கும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. பண்டகசாலை நடப்பாண்டில் ரூ. 2,517.19 இலாபம் ஈட்டியது.

(12) அரசு அச்சகக் குழு:

இது அச்சகப் பிரிவு தொழிலாளர்களால் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு ஆகும். இக்குழு உறுப்பினர்கள் எவரேனும் இறக்க நேரிடின் அவருடைய குடும்பத்திற்கு தேவையான அவசர உதவிகளைத் தொடர்ந்து செய்து வருகிறது. இக் குழுவில் 31-12-1989-ல் உள்ளபடி 3,099 உறுப்பினர்கள் உள்ளனர் 1988ஆம் ஆண்டில் இறந்துபோன அரசு அச்சகக் குழுவின் 60 உறுப்பினர்கள் வாரிசுதாரர்களுக்கு ரூ. 52,800.00 வழங்கப்பட்டுள்ளது.

அச்சகத்தின் செயல்திறனை மேலும் பெருக்குதல்:

(அ) தளவாடங்களும் இயந்திரங்களும்:

1988—89 ஆம் ஆண்டில் அச்சகத்தின் 8 பிரிவுகளுக்கும், அண்ணாசாலையிலுள்ள வெளியீடுகள் விற்பனைப் பிரிவிற்கும் சேர்த்து 7,31,084.23 ரூபாய் மதிப்புள்ள தளவாடங்கள், இயந்திரங்கள் அறைக்கலன்கள் வாங்கப்பட்டன. திருச்சிராப் பள்ளிக்கு அருகிலுள்ள துவாக்குடியில் புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. ரூ. 20'24 இலட்சம் செலவிலான இக் கட்டுமானப் பணி முடியும் தருவாயில் உள்ளது. இக்கட்டிடம் 1989—90 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) நவீனப்படுத்துதல்:

வள்ளலார் நகரிலுள்ள அரசு அச்சகம் தற்போதுகூட கையினால் அச்சுக்கோர்க்கும் பழைய தொழில் நுட்ப உத்தியையே தொடர்ந்து பின்பற்றி வருகிறது. சில பணிகள்



மோனோ, லைனோ இயந்திரங்களின் மூலம் அச்சுக்கோர்க்கப் படுகின்றன. தற்போது அச்சிடும் துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. விரைந்து பணியை முடிக்கவும், அச்சிடும் தரத்தை மேம்படுத்தவும், அனைத்து வழிகளிலும் பணியை நேர்த்தியாக நிறைவேற்றவும் இந்தத் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் வசதி செய்கின்றன.

தற்போது வெளிச்சந்தையில் கிடைக்கும் நவீன எந்திரங்களைக் கொண்டு, ஓரளவிற்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தக் கருதப்பட்டுள்ளது. தொடக்கத்தில், சென்னை-79, அரசு மைய அச்சகத்தில் ஒரு டெக்ஸ் டாப் பப்ளிஸிங் எந்திரமும், ஒரு ஆப்செட் அச்சு எந்திரமும் நிறுவுவதற்குக் கருதப்பட்டுள்ளது. மேலும் பல நவீன எந்திரங்களை நிறுவும் திட்டம் வருங்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

டெக்ஸ் டாப் பப்ளிசிங் எந்திரமும் நிறுவப்படுவதால், அது ஒரே நேரத்தில் எந்திரத்திற்கு சில கட்டளைகளைப் பிறப்பிப்பதன் மூலம் தமிழ், ஆங்கில அச்சுகள் இரண்டையும் ஒரே நேரத்தில் அச்சுக்கோர்க்க இயலும். நெருக்கமான வட்டத்தகட்டில் கோக்கப்பட்ட செய்தியை நினைவில் வைத்துக் கொள்ளும் வகையில் இந்த டெக்ஸ் டாப பப்ளிசிங் எந்திரம் வடிவமைக்கப் பட்டுள்ளது. அச்சுக் கோக்கப்பட்ட விவரம் தாளில் பார்வைப் படிவத்தில் தெளிவாகத் தெரிவதற்கு முன்னரே எந்திரம் இயக்குபவரின் எதிரில் தெரியும். தெளிவாகவும் நேர்த்தியாகவும் உள்ள அச்சுக்கோக்கப்பட்ட செய்தியின் பார்வைப்படியை ஒப்புதலுக்காக வைக்க இயலும், நினைவுத் தட்டுகளில் வைக்கப்பட்டுள்ள அச்சுக் கோக்கப்பட்ட செய்திகளை மீண்டும் கேட்டுப் பெறுவதன் மூலம் திருத்தங்கள் ஏதும் செய்யப்பட வேண்டியிருப்பின் அவ்வாறே தேவையானவற்றை சேர்க்க முடியும். சம்பந்தப்பட்ட துறைகளின் விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில், புதிதாக அச்சுக் கோப்பதற்குப் பதிலாக அச்சு வகை, அளவு, வரிகளுக்கு இடையிலான இடைவெளி ஆகியவற்றை மாற்றும் வசதிகள் இதில் உள்ளன. தேவையற்ற திருத்தங்கள் மற்றும் புதிய திருத்தங்கள் நீக்கப்படும். படங்கள், நிழற்படங்கள் முதலியவற்றைச் சேர்க்கும் வசதிகள் உள்ளன. மொத்தத்தில், லேசர் அச்சு எந்திரத்திலிருந்து வெளிவரக்கூடிய பார்வைப்படி, அச்சிலிருந்து வரக்கூடிய படியின் உண்மையான பதிப்பாக இருக்கும். டெக்ஸ் டாப் பப்ளிஸர் எந்திரத்தை அறிமுகப்படுத்துவதால், தற்போது விலை மதிப்புள்ள உலோக அச்சு எந்திரங்களின் மீது செய்யப்படும் அதிக முதலீட்டை முற்றிலும் நீக்கிவிட இயலும். வரி அச்சு, தனி அச்சு எந்திரங்களை இயக்குவதற்குத் தேவைப்படும் உதிரி பாகங்கள் இங்கிலாந்திலிருந்து அவ்வப்போது வாங்கப்படுகின்றன. மேற்சொன்ன எந்திரத்தின் மூலம் அந்நியச் செலாவணி பெரும் அளவுக்கு மிச்சமாகும். மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பவியல் ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தனியார் துறையில் உள்ள அச்சக உரிமையாளரும் பிற மாநிலங்களில் உள்ள அரசு

அச்சகங்கள் ஆகியவற்றிற்கும் இது அனுகூலமாக உள்ளது. மேம்பாடுகளுடன் இணைந்து செயல்படுவதால் டெக்ஸ் டாப் பப்ளிஸர் எந்திரம் தற்போது வருங்காலத்திற்கு ஏற்படக்கூடிய மேம்பாடுகளுக்கு வழிவகுக்கும்.

டெக்ஸ் டாப் பப்ளிஸர் எந்திரத்தை அறிமுகப்படுத்தியதால், அச்சுத் தொழில் நுற்பவியலிலும் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டியுள்ளது. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டுள்ள பழைமையான இயந்திரங்களின் மூலம் தற்போது நடைபெற்று வருகின்ற அச்சுப்பணி, தன்னுடைய செயல் திறனையும் உழைக்கும் கால அளவையும் இழந்துவிட்டது. இந்த எந்திரங்களின் மூலம் கிடைக்கும் பயனும் மிகக் குறைவாக உள்ளது. வெளிநாடுகளில் உள்ள உற்பத்தியாளர்கள்கூட எழுத்து அச்சு முறையைப் பழைமையானது என்று கருதி, 'ஆப்செட்' அச்சு முறைக்கு மாறிவிட்டனர். அச்சு எந்திரத் தயாரிப்பாளர்கள் சிலர், வெளநாடுகளிலுள்ள தங்களுடைய முதன்மைத் தயாரிப்பாளர்களின் உடனுழைப்புடன் அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துவதற்காக இந்தியாவிலேயே 'ஆப்செட்' அச்சு எந்திரங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

ஆப்செட் அச்சு எந்திரங்கள் டெக்ஸ் டாப் பப்ளிஸர் எந்திரத்துடன் இணைந்து செயல்பட்டு, பல வண்ணங்களில் தரமுள்ள உற்பத்திப் பொருள்களை வெளிக்கு கொணர்கின்றன. பல வண்ணப்படங்களை எளிதாகவும் உரிய நேரத்திலும் தரம் குறையாமல் அச்சிடமுடியும். பணியில் வகை மற்றும் தன்மையைப் பொறுத்து அச்சிடப்பட்ட தாள்களை ஒரு வண்ணம், இரு வண்ணம், மூன்று வண்ணம் அல்லது நான்கு வண்ணங்களில் அச்சிடக்கூடிய அச்சு எந்திரங்களும் உள்ளன. தொடக்கத்தில், இதில் பற்றாக்குறை காரணமாக ஒரு சமயத்தில் ஒரு வண்ணத்தில் அச்சிடக்கூடிய 'ஆப்செட்' அச்சு எந்திரத்தை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இனிமேல் ஒரு சமயத்தில் பல வண்ணங்களில் அச்சுப் பணியைச் செய்யும் மேலும் பல ஆப்செட் அச்சு எந்திரங்களை நிறுவுவதற்கு இது வழிவகுக்கும்.

டெக்ஸ் டாப் பப்ளிஸர் எந்திரம் வாங்குவது தொடர்பாக ரூ. 3 இலட்சமும், தேவையான துணைப் பாகங்களுடன் ஆப் செட் அச்சு எந்திரம் வாங்குவது தொடர்பாக ரூ. 11 இலட்சமும் செலவாகும்.

தற்போது நவீனப்படுத்தப்பட்ட முறையினால், பொருட்களின் உற்பத்தித் தரத்தை உயர்த்தவும், அச்சகம் கையாளுகின்ற பல்வேறு பணிகளை உரிய நேரத்தில் செய்து முடித்து வழங்கவும் இயலும். நவீனப்படுத்துவது பற்றி இவ்வளவு நாட்களாகத் தீவிரமாகச் சிந்திக்கவில்லை. பழைய எந்திரங்களுக்குப் பதிலாக புதிய எந்திரங்கள் இனி வாங்கப்படும்.



ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் :

திட்டப் பணிகள், திட்டத்தில் சேராத பணிகள் குறித்து ஏற்பட்ட செலவு பற்றிய விவரங்கள் கீழே இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

பொது:

பணியாளர்களின் குறைகளைக் கேட்டு, அவற்றை போக்கும் பொருட்டு, எழுது- பொருள் அச்சுத் துறை இயக்குநரும் எழுது பொருள் அச்சுத்துறை இணை இயக்குநரும் நேரம் ஒதுக்கியுள்ளனர்.

பொன். முத்துராமலிங்கம்,
செய்தி-தொழிலாளர் நலத் துறை,
அமைச்சர்.

## இணைப்பு

### ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் (1985–1990).

| திட்டத்தின் பெயர். | ஏற்பட்ட செலவு. | | | | | 1989–90 ஆம் ஆண்டு மூலதனச் செலவு. |
|---|---|---|---|---|---|---|
| | 1985–86 | 1986–87 | 1987–88 | 1988–89 | மொத்தம். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
| 1. நவீன தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி திறனைப் பெருக்குதல். | | | | | | |
| சென்னை, அரசினர் மைய அச்சகம் (ரூ. 13.00 இலட்சம்) | .. | .. | .. | .. | .. | .. |
| மதுரை, அரசினர் கிளை அச்சகம் (ரூ. 12.00 இலட்சம்) | .. | 10.29 | 0.36 | 0.04 | 10.69 | .. |
| 2 திருச்சி, அரசினர் கிளை அச்சகத்திற்காகக் கட்டிடங்களைக் கட்டுதல் (ரூ 2(.24 இலட்சம்) | | 10.00 | [illegible].06 | 3.94 | 20.00 | .. |
| மைய அச்சகம், பிரிவுகள், ஆகியவற்றிற்குப் பணியாளர்கள் ரூ. 4.50 இலட்சம்) | .. | .. | .. | .. | .. | .. |
| 3 சேலம் கிளை அச்சகத்தை விரிவாக்குதல் (ரூ. 13.00 இலட்சம்) | .. | .. | .. | 5.50 | 5.50 | .. |
| சூளை, அரசினர் கிளை அச்சகத்திற்குக் கட்டிடம் கட்டுதல் (ரூ. 2.01 இலட்சம்) | .. | .. | .. | .. | .. | .. |

1989 ஏப்ரல் 20]

| திட்டத்தின் பெயர். (1) | ஏற்பட்ட செலவு. 1985–86 (2) | 1986–87 (3) | 1987–88 (4) (ரூபாய் இலட்சத்தில்) | 1988–89 (5) | மொத்தம். (6) | 1989–90 ஆம் ஆண்டுக்கு மூலதனச் செலவு. (7) |
|---|---|---|---|---|---|---|
| 4 திருச்சி, கிளை அச்சகத்தை விரிவாக்குதல் (ரூ. 11.99 இலட்சம்) | .. | .. | .. | .. | .. | .. |
| 5 திருச்சி, கிளை அச்சகத்தை விரிவாக்குதல் | .. | .. | .. | .. | .. | .. |
| 6 சென்னை, அரசு வார் மைய அச்சகத்தை நவீனப்படுத்துதல் | .. | .. | .. | .. | .. | 14.00 |
| திட்ட மொத்தம் | .. | 20.29 | 6.42 | 9.48 | 36.19 | 14.00 |
| 7 திட்டத்தில் சேராதவை. | 19,15.30 | 15,85.16 | 18,17.13 | 21,74.42 | 74,92.01 | .. |
| மொத்தம் .. | 19,15.30 | 16,05.45 | 18,23.55 | 21,83.90 | 75,28.20 | .. |



1989 ஏப்ரல் 20]

## இணைப்பு III.

மானியக் கோரிக்கை எண் 47.

### செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை; விளக்கக் குறிப்பு 1989–90.

ஒரு வளரும் சமுதாயத்தில், மக்களின் வாழ்க்கைத் தரத்தை
மேம்பாடடையச் செய்ய வேண்டும் என்ற அரசின் முயற்சியில்
ஒருங்கிணைந்தோர் பகுதியாக சமூகக் கல்வியும் மக்களின் பங்
கேற்பும் அமைகின்றன இந்த வகையில்தான் செய்தி மக்கள்
தொடர்புத் துறையின் பணி முக்கியத்துவம் பெறுகிறது. அர
சின் கொள்கைக ளையும் வேலைத் திட்டங்களையும் விளக்கிச்
சொல்வதோடு மட்டும் அதன் பணி நின்றுவிடுவதில்லை. மக்க
ளாட்சியின் அடித்தளத்தையும் சமூக இலட்சியங்களையும் வலுப்
படுத்துவதும் அதன் பணியாக அமைகின்றது. மக்கள் தொடர்பு,
செய்தி அறிவிப்புச் சாதனங்கள் மூலம் இந்தத் துறை செய
லாற்றுகிறது. எல்லா வகையான மக்கள் தொடர்பு செய்தி
அறிவிப்புச் சாதனங்களை இந்தத் துறை பயன்படுத்தி அரசின்
கொள்கை மற்றும் திட்டப் பணிகளை மக்களுக்கு அறிவிக்
கிறது. அதே நேரத்தில் மரபு வழியான மக்கள் தொடர்புத்
சாதனங்கள் மூலமும், உள்ளூர் மக்களின் ஆற்றலையும் பயன்
படுத்திக் கொள்கிறது. எல்லா வசதி வாய்ப்புகளையும் ஒருங்
கிணைத்து, அனைத்து மக்கள் தொடர்புச் சாதனங்களையும்
பயன்படுத்தி, மக்களுக்குச் செய்திகள் சொல்லி, கல்வி அறிவு
ஊட்டி, விளக்கமளித்து, மகிழ்ச்சியூட்டி அரசின் வளர்ச்சிப் பணி
களில் மக்கள் தொடர்ந்து பங்கேற்று வருமாறு செய்து வரு
கிறது:

**பத்திரிக்கைத் தொடர்பு:**

இத்துறை பத்திரிகைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு
பொது முக்கியத்துவம் வாய்ந்த அரசின் செய்திகளையும், நிழற்
படங்களையும் பத்திரிககளுக்கு அளித்து வருவதுடன் அமைச்
சர்களுக்கும், முக்கிய பிரமுகர்களுக்கும் செய்தியாளர் கூட்டங்
களையும் ஏற்பாடு செய்கிறது. மாவட்டங்களில் உள்ள செய்தி
மக்கள் தொடர்பு அலுவலர்கள் பத்திரிகைத் தொடர்பு அலு
வலர்களாகப் பணியாற்றுகிறார்கள்.

அரசின் வளர்ச்சித் திட்டங்களைப் பத்திரிகையாளர்கள் நேர
டியாகப் பார்த்துத் தெரிந்து கொள்ளும் பொருட்டு மாவட்டங்
களுச்குப் பத்திரிகையாளர்கள் பயணங்களையும் இத்துறை ஏற்
பாடு செய்கிறது. சென்ற ஆண்டு இத்துறை இரு பயணங்களை
நடத்தியது. தருமபுரி, சேலம், வட ஆற்காடு ஆகிய மாவட்
டங்களுக்கு ஒரு பயணமும், திருநெல்வேலி-கட்டபொம்மன்,
சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களுக்கு இன்னொரு பயணமும்
நடத்தப்பட்டன. மாவட்டங்களுக்கு உள்ளேயும் இம்மாதிரி

பயணம் மதுரை, பசும்பொன் தேவர் திருமகன், திண்டுக்கல்—காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில் 1988 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன,

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று செய்திகள் சேகரிக்கவும், படங்கள் எடுக்கவும் அயல்நாட்டு நிருபர்கள், அயல் நாட்டுத் தொலைக்காட்சி, வானொலிக குழுக்கள், அதுபோலவே இந்தியாவில் வெளி மாநிலங்களில் இருந்து வரும் பத்திரிகையாளர்களுக்கும் இத்துறை தேவையான வசதிகளைச் செய்து தருகிறது.

இத்துறை, திங்களுக்கு இருமுறை ''வளரும் தமிழகம்'' என்ற தலைப்பில் அனைத்திந்திய வானொலி மூலம் தொடர் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கிறது. அமைச்சர்கள், அரசு செயலாளர்கள். துறைத் தலைவர்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டு தங்கள் துறையின் முக்கியத்துவம், முன்னேற்றம் பற்றி எடுத்துரைக்கின்றனர். தொலைக்காட்சி நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு பின்வரும் வளர்ச்சிப் பணிகள் பற்றி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கும் இத்துறை ஏற்பாடு செய்கிறது.

(1) பொது விநியோக முறை; (2) குடிநீர் விநியோகம்; (3) சுற்றுப்புறச் சூழல் தூய்மைப் பாதுகாப்பு; (4) தொழில் துறைச் சலுகைகள்; (5) தொழில் வளர்ச்சியில் அரசுத் தொழில்கள், தொழில் நுட்ப நிலையங்கள் ஒத்துழைப்பு; (6) வேளாண்மை உற்பத்தி.

## தமிழ்நாட்டில் வானொலி தொலைக்காட்சி விரிவாக்கம்:

இந்திய அரசு 7 ஆவது திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்குப் புதிய வானொலி நிலையங்களையும், தொலைக்காட்சி ஒளி பரப்பு நிலையங்களையும் அனுமதித்துள்ளது. இத்திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக இந்த வானொலி நிலையங்களும், தொலைக்காட்சி நிலையங்களும் அமைய வேண்டிய இடங்களைத் தேர்ந்தெடுப்பது, அவைகளை மத்திய அரசிடம் ஒப்படைப்பது ஆகியவை சம்பந்தமாக தமிழ்நாடு அரசு வேகமான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

## தொலைக்காட்சி நிலையங்களுக்கான இடம்:

மதுரையில் தொலைக்காட்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்காக கே. கே. நகரில் வீட்டுவசதி வாரிய வளாகத்தில் 4 ஏக்கர் நிலத்தை ரூ. 66.79 இலட்சம் செலவில் தமிழ்நாடு அரசு தொலைக்காட்சி அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளது.





இந்திய அரசு பின்வரும் இடங்களில் குறைந்த சக்தி தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களைக் கூடுதலாக நிறுவ விரைவுத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

(1) வாணியம்பாடி, (2) திருவண்ணாமலை, (3) திருப்பத்தூர், (4) காஞ்சிபுரம், (5) விழுப்புரம், (6) திண்டிவனம், (7) தஞ்சாவூர், (8) திண்டுக்கல், (9) தூத்துக்குடி, (10) திருச்செந்தூர், (11) இராமேஸ்வரம், (12) உதகமண்டலம், சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் 1–7–1988–ல் இரண்டாவது அலை வரிசை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## அனைத்திந்திய வானொலி நிலையங்கள் :

உதகமண்டலத்தில் ஜிம்கானா கிளப் அருகில் 4.5 ஏக்கர் அரசு நிலம், வானொலி நிலையம் ஏற்படுத்த வானொலி நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் ''சிப்காட்'' தொழில் வளாகத்தில் 37.90 ஏக்கர் நிலம் வானொலி நிலையத்திற்கான ஒலிபரப்பி அமைப்பதற்காக வானொலி நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை கிண்டியில் வெங்கடாபுரத்தில் நீண்ட குத்தகைக்கு நில உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வானொலி நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இடத்தில் தேசிய அலை வரிசை நிலையம் அமைக்கப்படும்.

கொடைக்கானலில் எப். எம். (F. M.) வானொலி நிலையம் அமைப்பதற்காக பிரெஞ்சு நிலப்பகுதியில் 1.25 ஏக்கர் முதல் 1.50 ஏக்கர் வரை நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் வானொலி நிலைய அதிகாரிகள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை, அவர்கள் தங்களுக்கு 3 ஏக்கர் நிலம் வேண்டுமென்று கேட்கிறார்கள். இது பரிசீலனையில் உள்ளது.

## பத்திரிகையாளர் ஓய்வூதியம் :

இந்தத் துறை பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தை 1987 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தி வருகிறது. ஓய்வுபெற்று வறுமையில் வாடும் பத்திரிகையாளர்களுக்கு இத்திட்டத்தில் மாதம் ரூ. 250 அளிக்கப்பட்டு வந்தது. இதுவரை 9 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 4 பேரின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்மையில் இந்த ஓய்வூதியத்தை ரூ. 250 லிருந்து ரூ. 400 ஆக உயர்த்தி அறிவித்ததையொட்டி அதற்கான ஆணை 1–3–1989 முதல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[1989 ஏப்ரல் 20

பத்திரிகையாளர்களுக்கு அங்கீகாரம் :

இந்த ஆண்டு 200 பத்திரிகையாளர்களுக்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் இலவச பேருந்து பயணச் சீட்டு, 50 சதவிகித இரயில்வே சலுகை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் வாடகைக் குடியிருப்பு ஒதுக்கீடுகளில் முன்னுரிமை தவணைமுறை விற்பனைக்கான வீட்டு வசதித் திட்டத்தில் 3 சதவிகித ஒதுக்கீடு ஆகிய வசதிகளைப் பெறுகிறார்கள்.

மாவட்டங்களில் சுமார் 250 செய்தியாளர்களுக்கு இலவசப் பேருந்துச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

புகைப்படப் பிரிவு:

இத்துறையின் புகைப்படப் பிரிவு நவீன கருவி வசதிகளுடன் தலைமைச் செயலகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்தப் புகைப்பட சேவை வசதியை படிப்படியாக எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை. இப்பொழுது புகைப்படக்காரர் தலைமைச் செயலகத்தில் 7 பேரும், நீலகிரி, பெரியார், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், சிதம்பரனார் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒருவர் வீதமும் உள்ளனர்.

விழாக்கள், பிரமுகர்கள் வருகை ஆகியவற்றின்போது இத்துறை புகைப்படங்கள் எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்புகிறது. மாவட்டங்களில் உள்ள புகைப்படக்காரர்கள் இவ்வாறே படங்கள் எடுத்து உள்ளூர் பத்திரிகைகளுக்கு அளிக்கிறார்கள்.

விளம்பரங்கள் :

அரசின் பல்வேறு துறைகளும், அரசின் பொறுப்பில் உள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவையும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும் ஒருமுகப்படுத்தப்பெற்று, இத்துறையின் வாயிலாக பத்திரிகைகளுக்கு வழங்கப்படுகின்றன. அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும், பொது மக்களுக்கு விளக்கும் முறையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையே பல விளம்பரங்களைத் தானே வடிவமைத்துத் தயாரித்து வெளியிடுகிறது.

கள விளம்பரம்:

சமூகக் கல்வியை மேம்படுத்தவும், அரசின் அனைத்து நலப் பணிகளிலும் மக்கள் பங்கு கொண்டு ஒத்துழைப்பை நல்கவும் ஏற்ற வகையில் கள விளம்பரப் பணிகள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.



[1989 ஏப்ரல் 20

இத்துறையைச் சார்ந்த மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் கீழ் 77 திரைப்படக் கருவி இயக்குபவர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் சராசரி 20 திரைப்படக் காட்சிகள் நடத்தித் தொலை தூரத்தில் உள்ள கிராம மக்களும் அரசின் திட்டங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவுகின்றனர். வில்லுப்பாட்டு, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் மூலமும், பொதுக் கூட்டங்கள், சிறிய பொருட்காட்சிகள் மூலமும், சிறுசேமிப்பு, குடும்பநலம், தீண்டாமையினால் வரும் தீங்குகள் பற்றியும் மக்களுக்கு இத்துறை எடுத்துரைத்து வருகின்றது.

பல்துறை விளக்கப் பணி விழா:

மத்திய மாநில அரசுகளின் பல்வேறு மக்கள் தொடர்புப் பிரிவுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக இந்திய அரசு உருவாக்கியுள்ள விளம்பர ஒருங்கிணைப்புக் குழு ஒவ்வொரு மாதமும் சென்னையில் கூடுகிறது. இக்கூட்டத்தில், 20 அம்சத் திட்டத்தின் கீழும், இதர கள விளம்பரத் திட்டத்தின் கீழும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் ஆய்வு செய்யப்பட்டு அக்கூட்டத்தின் பரிந்துரைகளின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சென்ற ஆண்டு தமிழ்நாடு அரசின் ஆதரவில் இம்மாதிரி இரண்டு கூட்டங்கள் சென்னையில் நடைபெற்றன.

அரசின் வளர்ச்சிப் பணிகள், அவற்றால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் ஆகியவை கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் மக்களுக்கு திரைப்படக் காட்சிகள், சிறு கண்காட்சிகள் ஆகியவற்றின் மூலமும் விளக்கச் சொல்லப்படுகின்றன. இந்த விளம்பரப் பிரிவுகள் மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் இயங்குகின்றன. 1988 ஜூலை மாதத்தில் பெருந்தலைவர் காமராசரின் பிறந்த நாளையொட்டி விருதுநகரில் ஏழு நாட்களுக்கு பல்துறை விளக்கப் பணி விழா ஒன்று நடத்தப்பட்டது.

விழாக்கள்:

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை மக்களுக்கு நினைவூட்டவும், மாபெரும் தலைவர்களின் மகத்தான தியாகங்களை மக்களுக்கு முக்கியமாக இளைய சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லவும், பிறந்தநாள் விழாக்கள், நினைவு விழாக்கள் போன்றவை இத்துறையால் நடத்தப்படுகின்றன.

நேரு நினைவு நூற்றாண்டு விழா:

பண்டித ஜவகர்லால் நேரு நூற்றாண்டு விழாவுக்கான தேசிய அமலாக்கக்குழு, தமிழ்நாட்டில் நேரு நூற்றாண்டு நினைவு விழாவை 1988 நவம்பர் 14-இல் தொடங்கி 1989 நவம்பர் 14 வரை ஓர் ஆண்டு முழுவதும் நடத்துவதற்கான திட்டங்களை

வகுக்குமாறு மாநில அரசைக் கேட்டுக்கொண்டது. இந்த வகையில் மத்திய அரசு கொடுத்த வழிகாட்டி நெறிகளின்படி குழந்தைகளின் உடல்நலம் பேணல், அவர்களின் உடல், உள்ளம் வளம்பெற தேவையான வசதிகளைச் செய்து தருதல், சமூக பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்டுள்ள மக்களின் அடிப் படைத் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் ஏற்பாடு போன்ற திட்டங்கள் வகுக்கப்பட்டு, இந்த நூற்றாண்டு விழா ஆண்டில் அவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

பொருட்காட்சிகள்:

பொருட்காட்சிகளின் மூலம் அரசின் பல்வேறு வேலைத் திட்டங்களுக்கும் விரிவான விளம்பரங்கள் கிடைக்கின்றன. மக்களுக்கு செய்திகள் தெரியவும் விளக்கங்கள் கிடைக்கவும் வேலை வாய்ப்பும், பொழுது இனிமையாகக் களிக்க வாய்ப்பு கிடைக்கவும் இப்பொருட்காட்சிகள் உதவுகின்றன.

செய்தி மக்கள் தொடர்புத்துறை 1978ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் அரசு பொருட்காட்சி களை நடத்தி வருகிறது. சுமார் 3 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை இப்பொருட்காட்சிகளுக்கு மக்கள் வருகை தருகின்றார்கள்.

இதுவரை இத்துறை கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஈரோடு. வேலூர், திண்டுக்கல், கடலூர் ஆகிய இடங்களில் 50 பொருட்காட்சிகள் நடத்தி யுள்ளது. இந்தப் பொருட்காட்சிகளின் மூலமாக. அதில் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்கள் பங்கேற்பு ஆகிய அமைப்பு கள் சம்பந்தமாக ஏற்பட்ட எல்லாச் செலவுகளும் போக நிகர மாக ரூ. ?.44 கோடி அரசுக்கு இலாபம் கிடைத்துள்ளது. இந்தியாவிலேயே மாநில அரசுத்துறை ஒன்று இம்மாதிரி பொருட்காட்சிகளை நடத்தி அரசுக்கு இலாபம் ஈட்டித் தருவது இந்தத் துறை ஒன்று மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்டத் தலைநகரங்களில் இம்மாதிரி பொருட்காட்சிகளை நடத்துவதோடு புதுடெல்லியில் நடத்தப்படும் வர்த்தகச் சந்தைகள், பொருட்காட்சிகளிலும் இத்துறை தமிழ்நாடு சார்பில் கலந்து கொள்கிறது. மாநில அரசு அரங்குகளில் காட்சிப் பொருள் களை சிறந்த முறையில் அமைந்திருந்தமைக்காக தமிழ்நாடு அரசு அரங்கு 2-வது சிறந்த அரங்காகத் தெரிந்தெடுக்கப்பட்டு பரிசும் சான்றிதழும் பெற்றது.

தேசிய ஒற்றுமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் ஆண்டு தோறும் நடைபெறும் விழாவில் " Phool-Walon-Ki-Sair " இத்துறையும் பங்கேற்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில் அலங்கார ஊர்திகள் அணிவகுப்புக்கும் இத்துறை ஏற்பாடுகளைச் செய்கிறது.





இத்துறையின் கீழ் உள்ள அனைத்து நினைவகங்கள் அரங் கங்கள் ஆகியவற்றின் பராமரிப்புப் பணியை செம்மையுற கவனிப்பதற்காக இத்துறையின் பொருட்காட்சிப் பிரிவில் உள்ள பொறியியல் பிரிவை வலுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்திய வர்த்தகச் சந்தை நிறுவன அமைப்பு மாதிரியில் தமிழ்நாடு அரசின் சார்பில் பொருட்காட்சிகள் நடத்துவதற்காக வர்த்தகச் சந்தை அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் கருத்துருவும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

கலைவாணர் அரங்கம், சென்னை:

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்கம் சீர்வளி வசதி பெற்ற அரங்கம். அரசு விழாக்கள், தனியார் விழாக்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை இங்கே நடைபெறு கின்றன. அரசுத் துறைக்கு சலுகைக் கட்டணத்தில் அரங்கம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த அரங்கத்தில் நவீன ஒலி பெருக்கி வசதியும் உண்டு. மேற்கூரையையும், குளிர்சாதன வசதியையும் ரூ. 12 இலட்சம் செலவில் புதுப்பிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இந்த அரங்கத்தில் வர்த்தகத்திரைப்படங்களை மீண்டும் திரையிடுவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

அண்ணா கலையரங்கம், வேலூர்:

வட ஆற்காடு மாவட்டம், வேலூர் அண்ணா கலையரங்கத்தில் அரசு விழாக்களும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. திரைப்படக் காட்சிகளும் தினசரி நடத்தப்படுகின்றன, திரைப் படங்கள் நடத்துவது, வாடகைக் கட்டணம் ஆகியவற்றின் மூலம் 1988–89 இல் அரசுக்கு ரூ. 0 35 இலட்சம் வருமானமாகக் கிடைத்தது.

மாவட்ட தலைநகரங்களில் கலையரங்கம் செய்தி அரங்கங் களைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலணையில் இருந்து வருகிறது.

நினைவகங்கள்:

செய்தி மக்கள் தொடர்புத்துறை பின்வரும் நினைவகங்களைப் ராமரித்துவருகிறது.

1. வள்ளுவர் கோட்டம்
2, அண்ணா சதுக்கம்
3. காமராசர் இல்லம், சென்னை.
4. இராசாசி நினைவகம்.
5. காமராசர் நினைவாலையம், சென்னை.
6. காந்தி மண்டபம், சென்னை.
7. பாரதி மணி மண்டபம், எட்டயபுரம்.
8, வ.உ.சி. இல்லம். ஒட்டப்பிடாரம்.

9. காந்தி மண்டபம், கன்னியாகுமரி.
10. காமராசர் இல்லம், விருதுநகர்.
11. பெரியார்—அண்ணா நினைவகம், ஈரோடு.
12. வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி.
13. இராசாசி இல்லம், தொரப்பள்ளி.
14. அண்ணா நினைவகம், காஞ்சிபுரம்.
15. செய்குத்தம்பி பாவலர் நினைவகம், நாகர்கோயில்

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அங்காடிப் பகுதி சிற்றுண்டிச் சாலை, பயணிகள் பேருந்து நிற்குமிடம், தோரண வாயிலை எழிலோங்கச் செய்யும் புல்வெளி அமைப்பு ஆகியவற்றை உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் வ.வே.சு. ஐயர் வாழ்ந்த இல்லம், நினைவகமாக மாற்ற வாங்கப்படவுள்ளது. சென்னை திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம், கன்னியாகுமரி மாவட்டத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வாழ்ந்த இல்லம் ஆகியவற்றை வாங்கி அவற்றை நினைவகங்களாகப் பராமரித்து வருவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது. கன்னியாகுமரியில் உள்ள காந்தி மணி மண்டபத்தில் சீரமைப்புகள் செய்வது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. திருப்பூரில் ரூ. 5 இலட்சம் செலவில் திருப்பூர் குமரனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பும் பணியை இத்துறை மேற்கொண்டுள்ளது. இதற்கான நிலம் திருப்பூர் நகராட்சியால் வழங்கப்பட்டு கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

தமிழரசு:

''தமிழரசு'', தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்படும் அரசின் இதழாகும். அரசின் கொள்கைகள், வளர்ச்சிப் பணி நடவடிக்கைகள் பல்வேறு திட்டச் சாதனைகள் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்கிறது. தமிழ் இதழ் திங்களிருமுறை 43,000 படிகளும், ஆங்கில இதழ் திங்களொருமுறை 3,500 படிகளும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. தனிப்பட்ட முகவர்கள் ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலமும், சந்தாதாரர்களுக்கு நேரடியாகவும் 'தமிழரசு' படிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

வெளியீடுகள்:

தமிழரசு அலுவலகத்திலுள்ள 'வெளியீட்டுப் பிரிவு' அரசின் திட்டங்களையும், நல வளர்ச்சிப் பணிகளையும் விளக்கிடும் கையேடுகள் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றை வெளியிட்டு வருகிறது. அரசின் திட்டங்களை மக்களுக்கு விளக்கிச் சொல்லி அவற்றின் சிறப்பான செயலாக்கத்திற்கு மக்களின் நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் பெறுவதே நோக்கமாகும்.



மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடறிந்த கவிஞர்கள், எழுத்தாளர்கள், கலை உலகப் பெருமக்கள் ஆகியோரிடமிருந்து எழுத்தோவியங்களை, தமிழரசு பொங்கல் மலர் போன்ற சிறப்பு வெளியீடுகளுக்குப் பெற்றுத் தரும் பணியையும் இப்பிரிவு அவ்வப்போது மேற்கொள்கிறது.

தமிழரசு அச்சகம் :

தமிழரசு அச்சகத்தில், 'தமிழரசு' தமிழ் இதழும் (திங்களிருமுறை), 'தமிழரசு' ஆங்கில இதழும் (திங்களொருமுறை) அச்சிடப்படுகின்றன. இவ்வச்சகத்தில் அச்சிடப்படும் ஏனைய இதழ்கள் வருமாறு:—

1. திட்டம் (திங்களிருமுறை)—மத்திய அரசு வெளியீடு.

2. உழைப்பவர் உலகம் (திங்கள் இதழ்)— தொழிலாளர் நலத்துறை வெளியீடு.

3. திருக்கோயில் (திங்கள் இதழ்)—இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு.

4. தமிழகக் கல்வி (காலாண்டு இதழ்)—கல்வித்துறை வெளியீடு.

5. தமிழர் விளையாட்டு மடல் (திங்கள் இதழ்)—விளையாட்டு, இளைஞர் பயிற்சித்துறை வெளியீடு.

வழக்கமான இந்த அச்சுவேலைகள் தவிர, அழைப்பிதழ்கள், அரசின் சாதனைகளை விளக்கும் சிறு வெளியீடுகள், மடிப்பேடுகள், கையேடுகள் ஆகியவைகளும் தமிழரசு அச்சகத்தில் அவ்வப்போது அச்சடிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு திரைப்படம், தொலைக்காட்சி பயிற்சி நிலையம்:

நம்நாட்டிலுள்ள தலை சிறந்த இரண்டு பயிற்சி நிலையங்களில் இந்நிலையமும் ஒன்று. மற்றது, புனேயிலுள்ள இந்தியத் திரைப்படப் பயிற்சி நிலையம் ஆகும். திரைப் படத் தயாரிப்பின் எல்லாப் பிரிவுகளிலும், தொலைக்காட்சி தொடர்பான பாடங்களிலும், இந்நிலையம் பயிற்சியளிக்கிறது. தேர்வுகள் நடத்தி வெற்றிபெறும் மாணவர்களுக்குப் பட்டயங்கள் வழங்குகிறது. திரைப்படம் என்னும் செய்திச் சாதனத்தின் அளவற்ற ஆற்றலை மக்கள் உணர்ந்து பாராட்டச் செய்வதும், அந்தத் துறையில் வேலை வாய்ப்பு, ஆராய்ச்சி ஆகியவற்றை உருவாக்குவதும் இந்நிலையத்தின் நோக்கமாகும்.

தற்போது, தமிழ்நாடு திரைப்படம் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பாடத் திட்டங்கள் உள்ளன:—

| பாடத் திட்டம். (1) | கால வரையறை, (ஆண்டுகள்) (2) | ஒவ்வோராண்டும் அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1 இயக்குதல், திரைக்கதை எழுதுதல். | 3 | 10 |
| 2 திரைப்படப் பதிவு .. .. | 3 | 15 |
| 3 ஒளிப்பதிவு, ஒலிப் பொறியியல் .. | 3 | 10 |
| 4 படச்சுருள் கழுவுதல் .. .. | 3 | 10 |
| 5 படத் தொகுப்பு .. .. | 3 | 10 |
| 6 நடிப்பு (சான்றிதழ் பெறும் பயிற்சி.) | 1 | 20* |

(*) மாணவர்கள் 10 பேர்—மாணவியர் 10 பேர்.)

164 மாணவர்கள் பல்வேறு பிரிவுகளில் தற்போது பயில்கின்றனர். இந்தியாவிலேயே இப்பயிற்சி நிலையத்தில்தான், படச்சுருள் கழுவுதல் பயிற்சியும், நடிப்புப் பயிற்சியும் அளிக்கப் படுகின்றன.

திரைப் படமெடுக்கும் அரங்குகளும், இந்நிலையத்திலுள்ள கருவிகளும் தனிப்பட்ட தயாரிப்பாளர்களுக்கு வாடகைக்கு விடப் படுகின்றன. இந்த ஏற்பாட்டின்படி வருவாய் கிடைப்பதுடன் தாங்கள் பயிலும் இடத்திலேயே முனைப்பான பயிற்சிபெற மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது.

இந்நிலையத்தில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி பெறும் மாணவர் கள், இந்தியா முழுவதுமுள்ள பொதுத் துறையிலும், தனியார் துறையிலும், குறிப்பாகத் தொலைக்காட்சி நிலையங்களிலும், திரைப்படத் தொழிலிலும் வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள். 1988 கல்வி ஆண்டில், இந்நிலையத்தின் பழைய மாணவர் களாகிய திரு. ஸ்ரீராம், செல்வி அர்ச்சனா ஆகிய இருவரும் முறையே சிறந்த திரைப்படப் பதிவாளராகவும், சிறந்த நடிகை யாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய விருது பெற்றார்கள்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு:—

தமிழ்நாடு திரைப் படப் பிரிவு, அரசின் ஆக்கப் பணிகள், அரசு விழாக்கள், முக்கிய நிகழ்ச்சிகள், செய்திச் சுருள் ஆகியவை பற்றி கருத்து விளக்கப் படங்களையும் தயாரிக்கிறது. மத்திய அரசு திரைப்பட வெளியீட்டுப் பிரிவின் மூலம், இந்தத் தயாரிப்பு களை மாநிலம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் திரையிடு வதற்காக வெளியிடப்படுகின்றன. இந்தச் செய்திச் சுருள்



படங்களிலிருந்து எடுக்கப்படும் 35 மி.மீ. பிரதிகள், மாநிலம் முழு வதுமுள்ள எல்லாத் திரையரங்குகளுக்கும் அனுப்பப்பட்டுத் திரை யிடப்படுகின்றன. 16 மி.மீ. பிரதிகளும் எடுக்கப்பட்டு, அவை, மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும், செய்தி மையங்களுக்கும், கள விளம்பரப் பணிக்காக அனுப்பப்படுகின் றன. 1986 நவம்பர் முதல் எல்லாச் செய்திப் படச் சுருள்களும் வண்ணத்தில் தயாரிக்கப்படுகின்றன. இதுவரை 342 செய்திப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு வளர்ச்சிப் பணிகளையும், நலப் பணிகளையும் பற்றிய கருத்து விளக்கப் படங்களையும் அரசின் மற்ற துறை களுக்காகவும், பொதுத்துறை நிறுவனங்களுக்காகவும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரித்து வருகிறது. இதுவரை தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 86 கருத்து விளக்கப் படங்களைத் தயாரித் துள்ளது.

வீடியோ தயாரிப்பு அரங்கம் ஒன்றும் இத்திரைப்படப் பிரிவில் இயங்கி வருகிறது. அது வீடியோ செய்திச் சுருள் களையும் கருத்து விளக்கப் படங்களையும் தயாரிக்கிறது. இவை சிக்கனமானவை என்பதோடு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வருபவையாகவும் உள்ளன. இதுவரை 125 வீடியோ செய்திப் படங்களும், 5 வீடியோ கருத்து விளக்கப் படங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

செய்திச் சுருள் தயாரிப்புக்கான செலவு ஆண்டுக்குச் சராசரி 35 இலட்சம் ரூபாய் ஆகிறது. கருத்து விளக்கப் படங்களுக்கான செலவை அந்தந்தத் துறைகளே ஏற்கின்றன. தமிழ்நாடு திரைப் படப் பிரிவு மத்திய அரசு செய்திப் பிரிவின் வாயிலாக செய்திச் சுருள்களையும், கருத்து விளக்கப் படங்களையும் தமிழகத் திரை யரங்குகள் வெளியிடுவதன் மூலம் ஆண்டுக்குச் சராசரி வருமானப் பங்காக ரூபாய் 20 இலட்சம் பெறுகிறது. 1987–88 ஆம் ஆண்டில், மத்திய அரசின் செய்திப் பிரிவிடமிருந்து தமிழ்நாடு திரைப்படப் பிரிவு ரூ. 35.75 இலட்சம் இவ்வாறு பெற்றது.

தமிழ்நாடு திரைப் படப் பிரிவு, தான் தயாரிக்கும் நிகழ்ச்சி களையும் கருத்து விளக்கப் படங்களையும் சென்னை தொலைக் காட்சி நிலையத்தின் ஒத்துழைப்புடன் ஒளிபரப்பச் செய்து வருகிறது.

தமிழ்நாடு திரையரங்குக் கழகம்:

தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப் பட்ட அரசுத் தனி நிறுவனமாக 1972 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. தமிழ்நாட்டில் பல பகுதி நிலைத் திரையரங்குகளைக், கட்டவும் அவற்றை நிலையான திரையரங்குகளாக மாற்றவும் டூரிங் தியேட்டர்கள், திறந்த வெளித் திரையரங்குகள் கட்டவும், திரைப் படக் கருவிகள் வாங்கவும் நிதி உதவி அளிப்பது இக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும். பகுதி நிலைத் திரையரங்கு

கள் கட்டவும் நிலையான திரையரங்குகளாக மாற்றவும் இக் கழகம் இதுவரை கடன் வழங்கியுள்ளது. இக் கழகத்துக்கு அரசு முழுவதுமாக செலுத்திய மூலதனம் ரூ. 35 இலட்சம் ஆகும். மேலும் ரூ. 15 இலட்சம் நீண்ட காலக் கடனாக அரசு அளித்துள்ளது. (1988 மார்ச் 31 வரை ரூ. 14 இலட்சம் திரும்பச் செலுத்தப்பட்டுள்ளது).

80 பேர்களுக்கு மொத்தம் ரூ. 92.03 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இன்றுவரை 79 பகுதி நிலைத் திரையரங்குகள் படங்களைத் திரையிட தொடங்கியுள்ளன. கடன் பெற்ற 80 பேரில் 41 பேர், தங்கள் கடன் தொகைகளை முழுவதும் செலுத்திவிட்டார்கள். எஞ்சியுள்ள 39 கடனாளிகளில் 29 பேர் மீது சிவில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த 29 சிவில் வழக்குகளில் 17 வழக்குகள் தமிழ்நாடு திரையரங்குக் கழகத்துக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளன. ஏனைய வழக்குகளின் விசாரணை பல்வேறு சட்டங்களில் இருந்து வருகிறது.

பகுதிநிலைத் திரையரங்கம் ஒன்றை ஏற்காட்டில் அமைக்க, ஏற்காடு நகரியத்துக்குக் கழகம் ரூ. 2.80 இலட்சம் கடன் வழங்கியுள்ளது. ஏற்காடு நகரியம் இதுவரை ரூ. 4.03 இலட்சம் திருப்பிச் செலுத்தியுள்ளது. இத்தொகையில் 2–2–1989 வரையுள்ள ரூ. 1.59 இலட்சம் வட்டியும் அடங்கும்.

**1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டமும் 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) விதிகளும்:—**

தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலோருக்கு, குறிப்பாக மத்தியதர மக்களுக்கும் பொழுதுபோக்கு ஆதாரமாகத் திரைப்பட தொழில் அமைவதுடன் ஊராட்சிகள், நகராட்சிகள், அரசாங்கம் ஆகியவற்றுக்கு வருவாய் தரும் ஆதாரமாகவும் உள்ளது. திரையரங்குகள் அதிகரிக்கவும் திரைப்படத் தொழிலின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்திடவும் விதிகளும் விதிமுறைகளும் எளிமையாக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக இம்மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களிலும். மாநகரங்களிலும் நல்ல வசதியான திரையரங்குகள் பெருமளவில் கட்டப்பட்டுள்ளன. மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடன் எளிதில் தீப்பிடிக்கும் கூரைகளை நீக்கி, தீப்பிடிக்காத மேற்பகுதிகளை அமைத்திடவும், பிற பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றிடவும் ஏற்ற வகையில் டூரிங் திரையரங்குகள் கட்டுவதற்கான முன் நிபந்தனைகள் வகுக்கப்பட்டுள்ளன. இக்கொள்கையின் விளைவாக டூரிங் திரையரங்குகள் கட்டும் செலவு வெகுவாக உயர்ந்துள்ளது திரையங்குகளின் உரிமையாளர்களி பொதுவான கோரிக்கையைக் கவனமுடன் ஆய்ந்து, அவர்களின் உரிமங்களின் கால அளவு 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் திரைப்படம் பார்க்கச் செல்லும் பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகளும் பாதுகாப்பும் இருத்தல் வேண்டும் என்று கண்டிப்புடன் அரசு அறிவித்துள்ளது. திரையரங்குகளில் கள்ளச் சந்தையில் நுழைவுச் சீட்டுகள் விற்பனையைத் தவிர்க்க, உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்குத் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நுழைவுச் சீட்டுகள் விற்பனையில் திரையரங்கு உரிமையாளர்களும் கள்ளச்சந்தை விற்பனைக்கு உடந்தையாக இருந்தால் கடும நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளது.



இம்மாநிலத்தின் அட்சிமொழியாகிய தமிழ்ப் பேசும் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இம்மாநிலத்திலுள்ள திரைப்பட அரங்குகள், ஆண்டில் ஒன்பது மாதங்களுக்கு மேற்படாத கால அளவிற்காவது தமிழ்த் திரைப்படங்களைத் திரையிட வேண்டும் என்று சட்டம இயற்றப்பட்டுள்ளது.

ஆபாச திரைப்பட விளம்பரங்கள் அதாவது சுவரொட்டிகள், பேனர்கள் முதலியவற்றைத் தடுத்திடும் பொருட்டு, திரைப்பட விளம்பரச சாதனங்களைத் தணிக்கை செய்யவும், சட்டமியற்றவும், போக்குவரத்திற்குத் தடையும், ஊறும் ஏற்படுத்தும் வகையில் சாலைப்புறங்களில் விளம்பரங்கள் செய்வதை முறைப்படுத்த அல்லது தடுக்கவும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

குளிர்சாதன வசதியுள்ள திரையரங்கும்ளில் குளிர்சாதன வசதி அளிக்கப்படாதது திரைப்படம் பார்ப்பவர்களின் உடல் நலத்தைப் பாதிப்பதுடன் உரிமம் பெற்றவர்களின் ஏயாற்று நடவடிக்கையும் ஆகும். உரிமம் வழங்கும அதிகாரிகளுக்கு, குளிர்சாதன வசதியுள்ள திரையரங்குகளில் திடீர் சோதனை நடத்தி அங்கு குளிர்சாதன வசதி உரிய முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து அவ்வாறு இல்லையெனில் அத்தகைய திரையரங்குகளின் உரிமைதாரர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 31-12-1988இல் உள்ளவாறு தமிழ்நாட்டில் 2,613 திரை அரங்குகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1,308 திரையரங்குகள் நிரந்தரமானவை. இவற்றில் குளிர்சாதன திரையரங்குகள் 109, குளிர்சாதனம் செய்யப்படாத திரையரங்குகள் 1,199.

**தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தொலைகாட்சியில் வீடியோ ரிக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் :—**

வீடியோ ஒழுங்கீனமாகப் பயன்படுத்துவதைத் தடுக்க தமிழக அரசு, தமிழ்நாடு வீடியோகேசட் ரிக்கார்டர்கள் மூலம் தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டம் 1984 மற்றும் விதிகளை இயற்றியது. வீடியோ நூலகம் நடத்துபவர்களுக்கு இச்சட்டத்தின்படி உரிமம் பெற வேண்டும்.

சட்டத்தையும் அதன் கீழ் உள்ள விதிகளையும் மீறுபவர்களுக்கு தண்டணை விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. சட்டத்தையும் அதன் கீழ் உள்ள விதிகளையும் முழுமையாகச் செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னை காவல் துறை ஆணையருக்கும் தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. 31–12–1983 இல் உள்ளவாறு தமிழ்நாட்டில் 1,965 வீடியோ நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. வீடியோ தியேட்டர் இயங்குவதற்கு உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை.

### 1989–90 ஆம் ஆண்டுக்கான செய்தி விளம்பரத் திட்டங்கள்.

1989–90 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:—

**வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவு வளாகம்:**

இந்த வளாகம் கேரள அரசு அன்பளிப்பாக வழங்கியுள்ள 91 சென்ட் நிலப்பரப்பில் அமைக்கப்படும். தந்தைப் பெரியாரின் வெண்கலச் சிலை, கேரளத்தின் புகழ்பெற்ற தலைவர்களின் பெயர்களைக் கொண்ட நினைவுத்தூண், ஒரு நூலகம், பூங்கா ஆகியவை இந்த நினைவகத்தில் இடம் பெறும். இதன செலவு மதிப்பீடு ரூ. 15 இலட்சம்.

**மெரினா கடற்கரையில் எம்.ஜி.ஆர். நினைவகம்:**

முன்னாள் தமிழக முதல்வர், காலஞ்சென்ற டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் மெரினா கடற்கரையில் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தில் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நினைவகம் ஏற்படுத்தப்படும். நினைவகத்துக்கான திட்டங்களும், மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும், 1989 ஆம் ஆண்டு ஏப்ரலில், பணி தொடங்க ஒப்பளிக்கப்படும்.

**கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை:**

கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறைக்கருகே உள்ள சிறிய பாறையில் திருவள்ளுவப் பெருமாளின் திருவுருவச்சிலை ரூ. 432 இலட்சம் செலவு மதிப்பீட்டில் நிறுவப்படும். கடற்கரையை வடமேற்காக நோக்கியபடி 45 அடி உயரப் பீடத்தின் மேல் 75 அடி உயரத்தில் இச்சிலை செம்பால் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

**அண்ணா சதுக்கத்தில் மேம்பாடுகள்:**

அண்ணா சமாதியின் நுழைவாயில், நடைபாதை, சமாதியைச் சுற்றியுள்ள பகுதி ஆகியவற்றுக்குக் கருப்புக் கற்களாலும், கற்பலகைகளாலும் தளமிடுதல், பழைய சங்கிலி வேலிக்குப்



பதிலாகப் புதிய சங்கிலி வேலி போடுதல், கூடுதலாக விளக்கு வசதி செய்தல் போன்ற செப்பனிடுதல், மேம்பாட்டுப் பணிகள ரூ. 7.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி:**

காரைக்குடியில் கண்ணதாசன் மணிமண்டபம் ரூ. 22 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளது.

**வீடியோ தயாரிப்புப் பிரிவை வலுப்படுத்துதல்:**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவோடு இணைந்துள்ள வீடியோ தயாரிப்புப் பிரிவுக்கு வலு சேர்க்கும் வகையில், புதிய 'யு' மேடிக் படப்பிடிப்புக் கருவியும், இதர கருவிகளும் வாங்கவும், இவற்றைக் கையாளப் புதிய பணியாளரை அமர்த்தவும் ரூ. 3.50 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மாவட்டங்களுக்கு வீடியோ—படம் காட்டும் கருவிகள்.

ரூ. 5 இலட்சம் செலவில் மாவட்ட விளம்பர பிரிவுகளுக்காக 4 வீடியோ படம் காட்டும் கருவிகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### திரைப்பட மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையத்துக்குக் கருவிகள் வாங்குதல்.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பபட்டுள்ள பாடத் திட்டத்துக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் ரூ. 1.50 இலட்சம் செலவில் கூடுதலாகக் கருவிகள் வாங்கப்படும்.

### குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்ப்படங்களுக்கு ஊக்குவிப்புத் திட்டம்—சிறந்த திரைப்படங்களுக்குப் பரிசுகள்.

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமிக்க தமிழ்ப்படம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்படும் நிதி உதவி ரூ. 1.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. சிறந்த தமிழ்ப்படங்களுக்கும், குழந்தைகள் படங்களுக்கும் பரிசு வழங்கும் திட்டம் 1984 முதல் நிறுத்தப்பட்டிருந்தது. இப்பொழுது மீண்டும் 1983-84 ஆம் ஆண்டு முதல் முன் தேதியிட்டுச் செயல்படுத்தப்படும். இதற்காக ரூ. 17 இலட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

செய்தி விளம்பரச் செலவு:

கோரிக்கை எண். 47 இன் கீழ், கடந்த 4 ஆண்டுகளாக திட்டம், திட்டம் அல்லாத இனங்களில் செலவிடப்பட்ட செய்தி விளம்பரச் செலவு விவரம் வருமாறு:—

| | நிகர செலவுத் தொகை. | | |
|---|---|---|---|
| | திட்டம். | திட்டமல்லாதது. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1985–86 .. | 19.84 | 259.04 | 278.88 |
| 1986–87 .. | 16.56 | 340.80 | 357.36 |
| 1987–88 .. | 29,75 | 344.92 | 374.67 |
| 1988–89 .. | 5.83 | 407.65 | 413.48 |



## இணைப்பு IV.

### மானியக் கோரிக்கைக் எண். 47.

### சுற்றுலாத் துறை.

### கொள்கைவிளக்கக் குறிப்பு.—1989–90.

நாட்டின் ஒற்றுமையையும் ஒருங்கிணைப்பையும் பன்னாட்டு நட்புறவையும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் தன்மையையும் சுற்றுலா வளர்க்கிறது. சமூக, பொருளாதாரத் துறைகளில் பல்வேறு பயன்களை சுற்றுலா அளிக்கிறது. நேரடியாகவும் பிற வகைகளிலும் பெருவாரியான வேலை வாய்ப்பை அளிக்கும் உலக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தொழிலாக இன்று சுற்றுலா திகழ்கிறது. மிகவும் தேவையான அந்நியச் செலாவணியை சுற்றுலா ஈட்டித் தருகிறது.

**உலக சுற்றுலா அரங்கில் இந்தியாவின் இடம்:**

இந்தியாவில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பல இருந்த போதிலும் உலக சுற்றுலா அரங்கில் இந்தியா இனி மேல்தான் இடம்பெற வேண்டியுள்ளது. 1987 ஆம் ஆண்டில் உலக நாடுகளுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 355 மில்லியன் ஆகும். இதில் இந்தியாவிற்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 11,63,774 ஆகும். இது 0.33 சதவீதம் ஆகும். 1986–87 ஆம் ஆண்டில் உலக நாடுகளுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் மூலம் கிடைத்த வருவாய் 127,828 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும். இதில், இந்தியாவிற்குக் கிடைத்த வருவாய் 1141.90 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும். இந்தப் புள்ளி விவரங்களைக் கொண்டு பார்த்தால், பன்னாட்டு சுற்றுலாவில் இந்தியாவின் பங்கு இன்னும் மிகச் சொற்பமாகவே உள்ளது. வெளிநாடுகளில் பெரும் நகரங்களில் இந்திய விழாக்களை நடத்துவதன் மூலமும் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் உலக சுற்றுலாவில் இந்தியாவின் பங்கைக் கணிசமான அளவிற்கு உயர்த்த ஒருமுகப்பட்ட தொடர்புடைய முயற்சிகள் தேசிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நம் நாட்டின் தென் பகுதியில் தமிழ்நாடு, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த மாநிலமாகத் திகழ்கிறது. இங்கு, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த தனித்தன்மை கொண்ட பல்வேறு இடங்கள் உள்ளன. இந்தியாவிற்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளில் சுமார் 25 சதவீதத்தினர் தமிழ்நாட்டிற்கு வருகை தருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 3,18,600 வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் வருகை தந்தனர். 1988 ஆம் ஆண்டில் 3,62,030 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர். உள்

[1989 ஏப்ரல் 20

நாட்டு சுற்றுலாப் பயணிகளில் 1987 ஆம் ஆண்டில் 4,97,14,835 பேர் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தனர். 1988 ஆம் ஆண்டில் 5,15,59,070 பேர் வருகை தந்தனர்.

**சுற்றுலாவின் முக்கியத்துவம் :**

நம் நாட்டைப்போன்ற பல மொழி பேசக்கூடிய பல்வேறு கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்கள் வாழும் நாட்டில் உள்நாட்டுச் சுற்றுலாவின் பங்கு குறித்து மிகுதியாக வலியுறுத்திக் கூற இயலாது. நாட்டு ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கு சுற்றுலாவைப் போல் திறன்வாய்ந்த சாதனம் வேறு எதுவும் இல்லை. எனவே, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டிற்கு வருகை தருவதும், உள்நாட்டுச் சுற்றுலாவும் நமக்கு சம அளவில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

**தேசிய சுற்றுலாக் கொள்கையை வகுக்க வேண்டியதன் அவசியம் :**

சுற்றுலா என்பது, தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தொழிலாகும். இது குறிப்பிட்ட ஒரு மாநில அல்லது வட்டார எல்லைகளுக்குள் மட்டும் அடங்கக் கூடியதன்று. நம் நாட்டில் சுற்றுலாத் தொழில் சமநிலையிலும் முறையாகவும் வளர்ச்சி பெற மாநில அரசுகளும் மத்திய அரசும் ஒருங்கிணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்வது தவிர்க்க இயலாததாகும். தேசிய சுற்றுலா கொள்கையை உருவாக்க தேசிய வளர்ச்சிக் குழுவின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று சுற்றுலாக் குறித்த தேசியக் குழு தெரிவித்த (1988 மே), பரிந்துரை பாராட்டத்தக்கதாகும். நம் நாட்டில் இதுவரையில் கவனிக்கப் படாமல் விடப்பட்டிருந்தவையும், சுற்றுலாப் பயணிகளை கவரத்தக்கவையுமான இடங்களைப் பாதுகாக்கவும் இந்தியாவின் ஒருசில இடங்களுக்கு மட்டுமே சுற்றுலாப்பயணிகள் செல்வதை விடுத்து நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் சுற்றுலாப் பயணிகள் செல்கின்ற அளவிற்கு கருத்தை உருவாக்கவும் ஏற்ற வகையில் தேசியக் கொள்கையானது வகுக்கப்பட வேண்டும். இத்தகைய ஆரோக்கியமான, புதிய கொள்கை, இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் முன்னதாகவே எடுத்துக் கூறுவதை இன்றியமையாததாக்கு வதுடன், தேவையான அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்குத் தேவைப்படும்போது, தனியார் துறையின் முதலீடுகளை உரிய தொலை நோக்குடன் திட்டமிடவும் உதவும். இத்தகைய சூழ்நிலையில் நென்னிந்தியா, அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு, இந்திய சுற்றுலா வரைபடத்தில் உரிய இடத்தைப் பெறும் அந்நாள் வெகு தொலைவில் இல்லை என்று தமிழ்நாடு திட்ட வட்டமாக நம்புகிறது. இந்தியாவை சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமியாக்குவதில் தமிழ்நாடு தன் பங்கை நிச்சயமாக ஆற்றும்.



1989 ஏப்ரல் 20]

**தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா வள வாய்ப்புகள் :**

வெளிநாட்டிலுள்ள சுற்றுலாப் பயணிகள் வருகை குறித்து, இந்திய அரசு நடத்திய ஆய்விலிருந்து 58 இடங்கள் மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்கள் என்று தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய 11 சுற்றுலாத் தலங்களைத் தன்னகத்தே கொண்டு ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு முன்னணியிலுள்ளது. சென்னை, மதுரை, இராமேஸ்வரம், திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம், மாமல்லபுரம், கன்னியாகுமரி, த்ஞ்சாவூர், கோயம்புத்தூர், நாகப்பட்டினம், கொடைக்கானல் ஆகியவை இந்த 11 இடங்களாகும். இது ஒன்றே தமிழ்நாட்டில் வெளிநாட்டினரைக் கவரும் சுற்றுலாத் தலங்கள் செறிந்துள்ளன என்பதைக் காட்டுகிறது. இவற்றைத் தவிர நமது நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க புண்ணிய தலங்கள், மலை வாசஸ்தலங்கள், கடற்கரைகள், அருவிகள், வனவிலங்குகளின் சரணாலயங்கள் ஆகியவையும் உள்ளன. தமிழ்நாடு, அதன் கைத்தறி கைவினைப் பொருட்கள், கருநாடக இசை, நாட்டியம், நாட்டுப்புற கலைகள் ஆகியவற்றிற்கும் பெயர் பெற்றது. தமிழ்ா பண்பாடு மரபின் தனிப்பட்ட சிறப்புத் தன்மைகள் என்னவெனில், அவை நன்கு பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றதே என்பதேயாகும். இவ்வாறெல்லாம் இருந்த போதிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாட்டின் பங்கு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை.

**சுற்றுலா வளம் குறித்த ஆய்வு :**

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் தனித்தன்மை கொண்ட எந்தவொரு பகுதியும், அதன் வளத்தை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தவும், அதன் கவரும் தன்மையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும் அப்பகுதி முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும். எனவே, வெளிநாட்டு, நமது நாட்டு உள்ளூர் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கவனத்தில் கொண்டு இத்துறையின் மாறிவரும் போக்கிற்கு ஏற்ப மாநிலத்தின் எதிர்காலத் தேவையை மதிப்பிடு செய்ய தமிழ்நாட்டில் சுற்றுலா வளம் குறித்த ஆய்வு நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் மாநிலம் முழுவதற்குமான தொலைநோக்கு பெருந் திட்டம் ஒன்றினைத் தயாரித்து எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. பெருந்திட்டத்தைத் தயாரிக்கும் போது அந்தந்த சுற்றுலா மையத்தின் உயிரின வாழ்க்கைச் சூழலைப் பாதுகாத்துப் பராமரிப்பது குறித்து சிறப்பான முறையில் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் :**

தேசிய பன்னாட்டு, சுற்றுலா அரங்கில் இடம் பெறும் வகையில் உரிய தொலைநோக்குத் திட்டத்துடன தமிழ் நாட்டின் சுற்றுலா மேபாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு முன்னிறுத்

தப்பட வேண்டும். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் புதிய ஏற்பாடுகளைச் செய்வதுடன், தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையிலும் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். தற்போதுள்ளவற்றை நிலை நிறுத்திப் பாதுகாப்பதும் அதே அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவே தமிழ்நாடு அரசின் முயற்சிகள் இந்த நோக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன.

சுற்றுலாவை வளர்ச்சியடையச் செய்தற்கான கொள்கை :

தமிழ்நாட்டில் சுற்றுலாவை வளர்ச்சியடையச் செய்வதற்கான கொள்கையை வகுக்கையில் கீழ்க்காணும் வழிகாட்டும் கோட்பாடுகள் நினைவிற்கொள்ளப்படுகின்றன.—

1. உயிரின வாழ்க்கைச் சூழல் சமன்பாடு, சுற்றுச் சூழல் ஆகியவற்றிற்கு ஊறு நேராவண்ணம் சுற்றுலா மையங்களிலும் அடிப்படை வசதிகளை அதிகப்படுத்த வேண்டியதன் தேவை.

2. மக்களிடையே சுற்றுலா குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு உள்ளூர் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மேம்படுத்துதல், வளர்ச்சியடைச் செய்தல்.

3. தனியார் துறை முதலீடு செய்ய முன்வராத சுற்றுலா மையங்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் (மாநில அரசு நிறுவனம்) மேம்படுத்துதல்.

4. தங்குமிட வசதி, போக்குவரத்து, அதுதொடர்பான துறைகளில் ஏற்படும் வருங்காலத் தேவையை முன்கூட்டியே அறிந்து குறுகிய கால, நீண்ட காலத் தேவைகளை நிறைவு செய்ய நடவடிக்கைகள் எடுத்தல், சுற்றுலாத் தொழிலில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவித்தல்.

இந்த கொள்கைகளுக்கு இணங்க தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுலாத் தொழில் :

தமிழ்நாட்டில் சுற்றுலா ஒரு தொழிலாக, 1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அறிவிக்கப்பட்டது. இம்மாநிலத்தில் சுற்றுலாவை ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சுற்றுலாத் துறைக்கு அளிக்கப்பட வேண்டிய அனுகூலங்கள், சலுகைகள் ஆகியவற்றைக் கண்டறிவதற்கு அமைக்கப்பட்ட குழு, அதன் பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது. இந்தப் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.





சுற்றுலாவிற்கான திட்ட நிதி ஒதுக்கீடு :

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985—1990) சுற்றுலாத் துறைக்கு ரூ. 5.00 கோடி, நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரையிலும் மாநிலத் திட்டத்தின் கீழ் ரூ. 199.67 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட தொகை ரூ.147.98 இலட்சமாகும். மத்திய அரசு அளித்த நிதியுதவி சுமார் ரூ. 4.00 கோடியாகும்.

எந்தவொரு பகுதியிலும் நிறைவேற்றப்படும் சுற்றுலா வளர்ச்சிப் பணியும் நாட்டின் வளர்ச்சிப் பணியில் ஓர் அங்கமாகும். இந்தியாவைப் போன்றதொரு பெரிய நாட்டில் சுற்றுலா வளர்ச்சி என்பது ஒரு எளிதான காரியமல்ல. மாநில அரசுகளிடம் நிதிப்பற்றாக்குறை காணப்படுகிறது. தேவைக்கேற்ற பெரிய அளவில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள மாநில அரசுகளால் இயலவில்லை. எனவே, மாநில அரசுகளுக்கு பெருமளவில் நிதியுதவியளிப்பதற்கு மத்திய அரசு முன்வரவேண்டும். எனவே, சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயற்படுத்தத் தேவையான நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசை நாம் கேட்டு வருகிறோம்.

தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை, மத்திய அரசு சுற்றுலாத் துறையின் நிதியுதவியுடன் ரூ. 1.80 கோடி செலவிலான திட்டப் பணிகளை நிறைவேற்றி வருகிறது. இவற்றில் சுற்றுலா இல்லம் (யாத்ரி நிவாஸ்) காஞ்சீபுரம் (ரூ. 40.05 இலட்சம்) பல்லவபுர சுற்றுலாத் தொகுதி, காஞ்சீபுரம் (ரூ. 20.00 இலட்சம்) மாமல்லபுரத்தில் நிலச் சீரமைப்பு செய்து அழகுபடுத்தல் (ரூ. 16.00 இலட்சம்) முட்டுக் காட்டில் நீர் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தல் (ரூ. 7.00 இலட்சம்) திருக்கழுககுன்றம், திருத்தணி ஆகிய இடங்களில் சாலையோர வசதிகளை ஏற்படுத்துதல் (ஒவ்வொன்றிற்கும் ரூ. 5.00 இலட்சம் வீதம்) பழவேற்காட்டில் படகுகள் வசதி செய்து கொடுத்தல் (ரூ. 3.00 இலட்சம்) சிதம்பரத்தில் சுற்றுலா வசதிகளை ஏற்படுத்தல் (ரூ. 12.00) இலட்சம்) பிச்சாவரத்தில் உணவக கட்டிட தொகுதி கட்டுதல் (ரூ. 8.00 இலட்சம்) கன்னியாகுமரியில் கடற்கரையோர குடில்கள் கட்டுதல் ரூ. 18.50 இலட்சம் (குற்றாலத்தில் உணவக கட்டிடம் கட்டுதல்) (ரூ. 7.00 இலட்சம் திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டையில் ஒளி வெள்ள விளக்கு வசதிகளை ஏற்படுத்தல் (ரூ. 6.00 இலட்சம்) இராமேஸ்வரத்தில் சுற்றுலா வரவேற்பு நிலையம் ஏற்படுத்தல் (ரூ. 20.00 இலட்சம் (உதகமண்டலத்தில் ஏரியில் படகுவசதி செய்து கொடுத்தல்) ரூ. 5.00 இலட்சம்) முதுமலை வன விலங்கு உய்விடத்தைச் சுற்றிப் பார்க்க இரண்டு சிறிய பேருந்துகள் வாங்கி வழங்குதல் (ரூ. 3.00 இலட்சம்) மலையேறு சாதனங்கள் வாங்கி வழங்குதல் (ரூ. 5.00 இலட்சம்) ஆகியவை அடங்கும்.

மேற்சொன்ன திட்டப் பணிகளுடன் மாநில அரசு, மாநிலத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூ. 2.17 கோடி செலவாகக்கூடிய திட்டப்பணிகளை நிறைவேற்றி வருகிறது. இவற்றில் மாமல்லபுரத்தில் திறந்த வெளி அரும் பொருட்காட்சியகம் அமைத்தல் ரூ. 27.00 இலட்சம், மாமல்ல புரத்தில் சுற்றுலா அலுவலகக் கட்டிடம் கட்டுதல், ரூ. 4.00 இலட்சம்) முட்டுக்காடு மேம்பாடு (ரூ. 5.00 இலட்சம்) பிச்சாவரம் மேம்பாடு (ரூ. 15.00 இலட்சம்), கன்னியாகுமரியில் ஓய்வில்லம் கட்டுதல் (ரூ. 13.00 இலட்சம்), திருச்செந்தூரில், துயிற்கூடம் கட்டுதல் (ரூ. 25.00 இலட்சம்), திருச்சிராப்பள்ளியில் இளைஞர் விடுதி ஏற்படுத்தல் (ரூ. 10.00 இலட்சம்), இராமேஸ்வரத்தில் சுற்றுலா வசதிகளை ஏற்படுத்தல் (ரூ. 22.00 இலட்சம்), மண்டபத்தில் இடவசதிகளை ஏற்படுத்தல் (ரூ. 40.00 இலட்சம்), கொல்லிமலையில் இளைஞர் விடுதி ஏற்படுத்தல் (ரூ. 5.00 இலட்சம்) ஒகேனக்கல்லில் தொங்கு பாலம் அமைத்தல் (ரூ. 10.00 இலட்சம்) பூம்புகாரில் சுற்றுலா வசதிகளை ஏற்படுத்தல் (ரூ. 6.00 இலட்சம்)' கொடைக்கானல் அருகே உள்ள ஊத்து மேம் பாடு ரூ. 3.00 இலட்சம்) உதகமண்டலத்தில் சுற்றுலா வசதிகளை ஏற்படுத்தல் ரூ. 10,00 இலட்சம்) (நீலகிரியில் காட்சிமுனைகளை மேம்படுத்தல் (ரூ. 10.00 இலட்சம்) கோத்தகிரியில் இளைஞர் விடுதி கட்டுதல் (ரூ. 6.00 இலட்சம்), குன்னூரில் இளைஞர் விடுதி கட்டுதல் ரூ. 18.70 இலட்சம்) ஆகியவை அடங்கும்.

ஸ்ரீரங்கம், பாபநாசம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள குளியல் துறைகளில் சுற்றுலா வசதிகள் செய்து கொடுத்தல் கன்னியாகுமரி, விவேகானந்தர் நினைவுப் பாறையில் ஒளி வெள்ள விளக்குகள் அமைத்தல், கன்னியாகுமரிக்கும் விவேகானந்தர் நினைவு பாறைக்குமிடையே படகு வசதி செய்து, கொடுப்பதற்காக படகுகள் வாங்குதல், மதுரை வண்டியூர் தெப்பகுளத்தில் உணவக கட்டிடம் கட்டுதல் ஆகியவற்றிற்காக மத்திய அரசு 1988–89 ஆம் ஆண்டிற்கு ரூ. 68.37 இலட்சம், வழங்கியுள்ளது. 1988–89 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு நிதியுதவி பெறும் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகளுக்காக மாநில அரசு பங்குத் தொகையாக மாநில அரசு ரூ. 20.55 இலட்சம் வழங்கியுள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

ஏழாவது திட்ட காலத்தில் மலைப்பகுதி மேம்பட்டுத் திட்டத்தின் கீழ் சுற்றுலா துறைக்காக ரூ. 50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டு வரை செய்யப் பட்டுள்ள செலவு ரூ. 21.50 இலட்சமாகும். குன்னூரில் இளைஞர்விடுதிகட்ட 1988–89 ஆம் ஆண்டிற்குரூ. 15.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றுலா திட்டப்பணிகளை பொதுப் பணித்துறை, வனத்துறை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் போன்ற பல்வேறு அமைப்புகள், மாவட்ட ஆட்சியரின்





மேற்பார்வையின்கீழ் நிறைவேற்றி வருகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்படும் திட்டப் பணிகள், நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும் தொடர்பானவை யாகும். நீலகிரி மாவட்ட ஆட்சியரின் பரிந்துரைகளின் அடிப் படையில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1989–90 ஆம் ஆண்டில் மேற்கொள்வது பற்றி பரிசீலிப்பதற்காக பின் வரும் திட்டங்கள், திட்டமிடல்-வளர்ச்சித் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண்ணும் திட்டப்பணியின் பெயரும். (1) | நிதி ஒதுக்கீடு. (2) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. உதகமண்டலத்தில் படகு இல்லவளாகத்தைச் சுற்றி மலர் தோட்டம் அமைத்தல். | 2.00 |
| 2. படகுத் துறைகள் அமைத்தல் | .. 5.00 |
| 3. படகுக்குழாம் பகுதியை அழகுபடுத்தலும் வண்டிகள் நிறுத்த இடவசதி செய்து கொடுத்தல் | 2.00 |
| மொத்தம் | .. 9.00 |

பூம்புகார் சுற்றுலா மையம் மேம்படுத்தல்:—

தமிழர்களின் பழம்பெருமையை படம் பிடித்துக் காட்டு வதற்காக ரூ. 75 இலட்சம் செலவில் 1973 ஆம் ஆண்டில் பூம்புகார் சுற்றுலா மையம் ஏற்படுத்தப்பட்டது. இது தஞ்சாவூர் மாவட்டத்தில் கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. மாநிலத்திலுள்ள மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய முக்கிய மான சுற்றுலா மையங்களில் இதுவும் ஒன்றாகும். இச்சுற்றுலாத் தலம் கடல் அரிப்பினால் பாதிக்கப்படக்கூடும் என்ற அச்சம் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. கூடுதலாகக் குடில்கள், துயிலுமிடங்கள் கட்டுதல், நீச்சல் குளம் அமைத்தல், வேலி போடுதல், உள் சாலைகளுக்கு விளக்குப் போடுதல், சாலைகளை அகலப்படுத்தி பழுதுபார்த்தல், பல்வேறு நினைவுச் சின்னங்களைப் புதுப்பித்து, மாற்றியமைத்தல் போன்று இங்கு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்குத் தோராயமாக ரூ. 60 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டது. வல்லுநர்கள் தயாரித்த மதிப்பீடுகளின் படி கடல் அரிப்பிலிருந்து நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்ப தற்காக சுமார் 400 மீட்டர் நீளத்திற்கு கூழாங்கற் பாறைகளைக் கொண்டு சுவர் கட்டுவதற்கு மேலும் ரூ. 50 இலட்சம் ஆகும். இவ்வாறாக பூம்புகார் சுற்றுலா மையத்தை பாதுகாத்து, மேம் படுத்துவதற்கு மொத்தம் ரூ. 110 இலட்சம் தேவைப்படுகிறது.

பூம்புகார் சுற்றுலா மையத்தில் சில மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. 5.95 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. இதில் தற்காலிகப் பாதுகாப்பு நடவடிக்கையாக 'இலஞ்சி' மன்றத்திற்கு அருகே மணல் மூட்டைகளைப் போடுவதற்கு ரூ. 85,000 செலவிடப்பட்டுள்ளது. இது தவிர பூம்புகார் சுற்றுலா மையத்தை பாதுகாப்பதற்கும், மேம்பாட்டுப் பணிகளைச் செய்வதற்கும் நடப்பாண்டில் ரூ. 50 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

புத்த நினைவுச் சின்னங்கள் அமைந்துள்ள ஓர் இடம் என்ற முறையில் கூடுதல் முக்கியத்துவம் பெற்றுள்ள இடமாக இது இருப்பதாலும், பெரும் செலவு ஏற்படும் என்பதாலும் இந்த இடத்தைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் ரூ 50.00 இலட்சம் வழங்குமாறும், புத்த மையமாக இந்த இடத்தை மேம்படுத்துவதற்கும், அருங்காட்சியகம் ஏற்படுத்துவதற்கும் ஒலி–ஒளிக் காட்சிகள் அமைப்பதற்கும் அல்லது ஒளி விளக்குகள் அமைப்பதற்கும், உணவகக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் ரூ. 50 இலட்சம் வழங்குமாறும் நாங்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மாவட்ட சுற்றுலா மையம்:

உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு மாவட்ட சுற்றுலா மையத் திட்டத்தை வகுத்துள்ளது. மாநில அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள் தங்கள் உபரி நிதியிலிருந்து ஒவ்வொரு மையத்திற்கும் உதவி அளிக்கின்றன. இது, தவிர இத்திட்டத்தை நிறைவேற்று வதற்காக உள்ளூர் ஆதாரங்களிலிருந்தும் நிதிகள் திரட்டப் படுகின்றன. இம்மையங்களுக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை அதாவது குடிநீர் வசதி, உடை மாற்றும் அறைகள், கழிப்பறைகள், துயில் கூடங்கள், வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள், ஓய்வறைகள், சிற்றுண்டிச் சாலைகள் ஆகிய வசதிகள் செய்து கொடுப்பது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

மாவட்ட சுற்றுலா மையங்களாக மேம்படுத்துவதற்காக இம்மாநிலத்தில் 30 இடங்களை அரசு தெரிந்தெடுத்துள்ளது. 1983–84 முதல் 1988–89 வரை 17 மையங்களில் இத்திட்டம் குறித்து, ரூ. 49.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப் பாண்டில் இத்திட்டத்திற்காக அடையாள நிதியொதுக்கம் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.

வட்டக்கோட்டையை மேம்படுத்தல் :

கன்னியாகுமரிக்கு வடக்கில் சுமார் 8 கி.மீ. தொலைவில் கிழக்குக் கடற்கரை சாலையில் அமைந்துள்ள வட்டக்கோட்டை வருங்காலத்தில் ஒரு முக்கியமான அனைத்து நாட்டு கடற்கரை மகிழ்விடமாக வளர்ச்சி பெறும் வாய்ப்பிருக்கிறது. அமைதியான





சூழ்நிலையையும், தென்னந்தோப்புகளையும் அழகிய கடற்கரையையும் கொண்டுள்ள இவ்விடத்தை, விடுமுறை நாள் பொழுது போக்கிடமாக மேம்படுத்துவதற்குப் பெரிதும் வாய்ப்புகள் உள்ளன. இவ்விடத்தில் 1989–90-ல் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

தரங்கம்பாடி மேம்பாடு :

தஞ்சாவூரிலுள்ள தரங்கம்பாடி ஒரு காலத்தில் டச்சுக்காரர்களின் குடியேற்றப் பகுதியாக இருந்தது. அவ்வாறு குடியேற்றப் பகுதியாக இருந்ததன் நினைவுச் சின்னத்தை இன்றும் அங்கு காணலாம். மேலும், இங்குள்ள சூழ்நிலை சுகாதார அமைப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருப்பதால், இவ்விடம், சுகாதாரம்-கடற்கரை உல்லாச இடமாக புகழ் வாய்ந்ததாகவும் உள்ளது. இங்குள்ள பழைய ஆளுநர் மாளிகை மிகச் சிறந்த சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இம்மாளிகையை மேம்படுத்தி, புதுப்பித்து, அழகுபடுத்துவதற்காக, 1989-90 ஆம் ஆண்டில் ரூ. 3.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

''தமிழ்நாடு ஓட்டலின் தரத்தை உயர்த்தல்''

சுற்றுலா மேம்பாட்டுப் பணியில் மிக முக்கியமான அம்சம், ஓட்டல் பணியாகும். தமிழ்நாட்டிலுள்ள நாம் இதனை நன்கறிவோம். எனவே, இத்துறையில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து இடங்களிலும், போதுமான அளவுக்கு உணவு, தங்கும் வசதிகளைச் செய்து தரும் நோக்குடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டது. இந்நோக்கம், பெருமளவு எய்தப்பட்டுள்ளது. எனினும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தன்னுடைய ஓட்டல்களில் வகை செய்துள்ள பணி வசதிகள், அனைத்து நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யும் அளவுக்கு உயர்த்தப்படலாமென நாங்கள் கருதுகிறோம். இந்நோக்குடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல், மதுரை, கொடைக்கானல், உதகமண்டலம், கன்னியாகுமரி ஆகிய இடங்களிலுள்ள ஓட்டல்கள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்துவதற்கு ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சாலையோர வசதிகள் :

சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு, சாலை பயணிகளுக்கு சாலையோர வசதிகளுக்கு வகை செய்வது இன்றியமையாத் தேவையாகும். சாலையில் நீண்ட தூரம் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகள், நீண்ட பயணத்தினால் ஏற்பட்ட களைப்பை சிறிது நேரம் போக்கிக் கொள்ள விரும்புவர். சாலையோர மோட்டல்களை அமைப்பது சுற்றுலாப் பயணிகளின் இத்தேவையை நிறைவு செய்கிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், உளுந்தூர்ப்பேட்டை, இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் இத்தகைய உணவகங்களை ஏற்கனவே நடத்தி வருகின்றது. இன்னும் நான்கு முக்கியமான இடங்களில் சாலையோரச் சிற்றுண்டி அகங்களை அமைக்கத் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, நாம் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி கோரக் கருதியுள்ளோம்.

**சுற்றுலாப் புள்ளி விவரங்கள் :**

உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் புள்ளி விவரம் குறித்த செயற்குழுவின் அறிக்கையில் கண்டுள்ள வழிமுறைக் குறிப்பு களின்படி, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் குறித்தப் புள்ளி விவரங்களை இத்துறையிலுள்ள புள்ளி விவர பிரிவு சேகரிக் கின்றது. இது தவிர, மத்திய அரசின் சுற்றுலாத் துறை விற்பனை வசதி ஆராய்ச்சி பிரிவின் உடன் உழைப்பு இப்பிரிவு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களையும் தொகுக்கின்றது. மாவட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை அட்டவணைப்படுத்தி பகுப்பாய்வு செய்யும் பொருட்டும், சுற்றுலாவின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு ஆய்வுகள் நடத்தும் பொருட்டும்; இட பிரிவுக்கு, புள்ளிவிவர உதவி ஆய்வாளர்கள் உதவிப் பணிகளுக் கான இரு பதவிகளை ஏற்படுத்த இத்துறை உத்தேசித்தது.

**ஓட்டல்களை வகைப்படுத்துதல் :**

ஒரு நட்சத்திரத் தகுதி பெற்ற ஓட்டல்கள், இரு நட்சத்திரத் தகுதி பெற்ற ஓட்டல்கள் ஆகியவற்றை வகைப்படுத்துவதற்காக, மாநில அரசால் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசு ஓட்டல் வகைப்படுத்தும் குழு, 1986–87 ஆம் ஆண்டிலிருந்து ஓட்டல்களை ஆய்வு செய்து, வகைப்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. மத்திய அரசு, சுற்றுலாத்துறை, மாநில அரசுகளின் சுற்றுலாத் துறைக்கு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்ததைத் தொடர்ந்து இப்பணி மேற்கொள்ளப்பட்டது. இடவசதி, சுற்றுலாவின் முக்கிய பிரிவாகும். எனவே, தனியார் துறையில் நட்சத்திரத் தகுதி பெற்ற ஓட்டல்களையும், நட்சத்திரத் தகுதி பெறா ஓட்டல்களையும் தொடங்க நாங்கள் ஊக்குவிக்கிறோம். சுற்றுலாத்துறை, ஒரு நட்சத்திரத் தகுதி பெற்ற இரு நட்சத்திரத் தகுதி பெற்ற ஓட்டல்கள், தொடர்ந்து வகைப்படுத்தி, தனியார் ஓட்டல்கள் ஆகியவற்றை அமைக்க நிதியுதவி பெறுவதற்காக, துறையில் ஓட்டல்களை நிதி நிறுவனங்களுக்குப் பரிந்துரை செய்கிறது. தகுதியுள்ள இனங்களை

**உணவுக் கலை நிறுவனம் :**

மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் இணையாகப் பேற்கும் துவாக்குடி திருச்சிராப்பள்ளி, உணவுக்கலை பொறுப் 1–10–1981 அன்று நிறுவப்பட்டது. நிறுவனம் உதவியுடன், கண்காணிப்புக் குழுவினால் நிருவாகக் குழுவின் கண்காணிக்கப்படும்



தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனமாக, 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. 1–10–1986-லிருந்து இந்நிறுவனத்தின், தொடரினச் செலவு தொடரா இனச் செலவுக்குரிய நிதிப் பொறுப்புகளை தமிழ்நாடு அரசு ஏற்கிறது.

இந்நிறுவனம், பின்வரும் பிரிவுகளில் முழு நேர ஓராண்டு சான்றிதழ் பயிற்சி வகுப்பினை நடத்தி வருகிறது.

(அ) ஓட்டல் வரவேற்பு—கணக்கு வைத்து வருதல்.

(ஆ) சிற்றுண்டியகம்—நிலையப் பணி

(இ) ரொட்டித் தயாரிப்பு—இனிப்புப் பண்டம் தயாரிப்பு.

(ஈ) சமையல்

(உ) ஓட்டல் பராமரிப்பு.

இந்நிறுவனம், ரொட்டி, தயாரிப்பு, சமையல் இல்லப் பரா மரிப்பு ஆகிய துறைகளில் இல்லத்தரசிகளுக்கு இரு திங்களுக்குப் பகுதி நேர பயிற்சி வகுப்புகளையும் நடத்துகிறது. உணவு தயாரிப்பு-பணி என்ற பொருள் குறித்து தென்னக இரயில்வே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முதலிய துறைகளின் பணி யாளர்களுக்கு குறுகிய கால நினைவுகூர் பயிற்சி அளிக்கப் படுகிறது.

**மலையேற்றப் பயிற்சி திட்டம் :**

இன்றைய இளைஞர்களிடையே மலையேற்றம், இயற்கை வளங் காணுதல் ஆகியவற்றில் ஆர்வம் அதிகரித்துள்ளது. சுற்றுலாத்துறை, குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை, மலை யேற்றம், கடற்கரை ரயில் நடத்தல், சைக்கிள் விடுதல் போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து வருகிறது. இந்நிகழ்ச்சிகளில், பொதுமக்களும்—குறிப்பாக இளைஞர்களும் பெருமளவில் பங்கு கொள்வதுடன் பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களும் பங்கு கொள்கின்றனர்.

இந்திய இளைஞர் இல்லங்கள் சங்கத்தின் ஒருங்கிணைப்புடன் நீலகிரி (உதகமண்டலம்), பழனி மலை, கொடைக்கானல், பாபநாசம், குற்றாலம், ஏலகிரி மலை போன்ற இடங்களிலும் ஏனைய இடங்களிலும் மலை ஏற்றப் பயிற்சித் திட்டம் நடத்தப் பட்டது.

**சுற்றுலாத் தகவல் :**

இம்மாநிலத்தில் மொத்தம் 11 சுற்றுலா அலுவலகங்கள் உள்ளன. மேலும், புது டில்லி, கல்கத்தா, பம்பாய், ஆகிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சுற்றுலா தகவல் மையங்கள் உள்ளன. முக்கிய ரயில் சந்திப்புக்கள் விமான நிலையங்கள் போன்றவற்றில் சம்பந்தப்பட்ட சுற்றுலா அதிகாரி களின் கட்டுப்பாட்டின் கீழ் 11 சுற்றுலாத் தகவல் மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

*1989 ஏப்ரல் 20*

**சுற்றுலா வளர்ச்சியும் விளம்பரமும் :**

சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவில் கவரும் வகையில்
அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக திட்டமிட்ட
மேம்பாட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலொழிய அரிதாகக்
கிடைக்கக் கூடிய வளங்களை பயன்படுத்தி பெருஞ்செலவில்
செய்யப்படும் அடிப்படை வசதிகள் அனைத்தும் வீணானதாகி
விடும். எனவே, ஆக்கபூர்வமான மேம்பாட்டுப் பணியும்,
பிரச்சாரத் திட்டமும், தீட்டப்பட்டு நிறைவேற்றப்படுகிறது.

மேற்சொன்ன அணுகுமுறையைக் கருத்தில் கொண்டு,
சுற்றுலாப் பயணிகளுக்கான விவரக் குறிப்புகள், புகைப்
படங்கள், ஸ்லைடுகள், திரைப்படங்கள், வீடியோக்கள் போன்ற
பல்வேறு பிரச்சார உத்திகளை இத்துறை கொண்டு வந்துள்ளது.
மேற்சொன்னவை தவிர, பிரச்சாரக் காரியங்களுக்காக, செய்தித்
தாள், பத்திரிகை ஆகியவற்றையும் இத்துறை திறம்பட பயன்
படுத்தி வருகிறது. சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காக,
வண்ண விளம்பர முகாம்களையும் இத்துறை நடத்துகிறது.
இதற்கு சுற்றுலாப்பயணிகளிடம் பெருமளவு வரவேற்பு கிடைத்
துள்ளது. இனிவரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் தொடரப்படும்.

பயண வர்த்தகர்களை அழைப்பது, சுற்றுலாத் துறையின்
மற்றொரு முக்கியமான நடவடிக்கையாகும். இத்திட்டத்தின்
கீழ், பயண முகவர்களையும், பயணக் குறிப்புப்படமெடுப்பவர்
கள், வீடியோ எடுக்கும் குழுவினர் ஆகியோரை நமது விருந்தினர்
களாக அழைத்துச் சென்று, நமது மாநிலத்தில் உள்ள உளம்கவர்
இடங்களையும் செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகளையும்
நேரடியாகக் காண்பதற்கு வகை செய்வதன் மூலம் அவர்கள்
நேரில் கண்டு மகிழ்ந்தவற்றையும், அவர்களுக்கு ஏற்பட்ட
அனுபவத்தையும் குறிப்பிட்டு கட்டுரைகள், புகைப்படங்கள்,
வீடியோ படங்கள்/திரைப்படங்கள் மூலம் தெரிவிப்பதை, நம்
மாநில சுற்றுலாத் தலங்களுக்கு அளிக்கப்படும் மிகப் பெரிய
பிரச்சாரமாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

**மாநில அளவிலான சுற்றுலா ஆலோசனைக் குழு :**

அரசின் சுற்றுலா வளர்ச்சிக் கொள்கையை வகுப்பதற்காக,
தமிழ்நாடு அரசு, மாநில அளவிலான சுற்றுலா ஆலோசனைக்
குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. சுற்றுலா வளர்ச்சியுடன்
தொடர்புடைய அலுவலர்கள், அலுவலர்களல்லாத ஏனையவர்கள்
அடங்கிய இக்குழு இம்மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சியை மேம்
படுத்தும் வகையில் திட்டங்களை வடிவமைத்து நிறைவேற்றவும்
உதவுவதோடு, பல்வேறு அரசுகள், அரசு சார்பற்ற சுற்றுலா
முகவமைப்புகளை ஒருங்கிணைக்கும் ஒரு அமைப்பாகவும் செயல்
படும்.



*1989 ஏப்ரல் 20*

**செலவினை விருந்தினர் ஏற்கும் திட்டம்.**

இந்திய அரசு, சுற்றுலா வளர்ச்சித் துறை கேட்டுக் கொண்டதற்கிணங்க, சென்னையில் செலவினை ''விருந்தினர் ஏற்கும் திட்டம்'' பிரபலமாகியுள்ளது. தமிழ்நாட்டில் தங்கும் இட வசதி பற்றாக்குறை உள்ள இடங்களில், குறிப்பாக வளர்ந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு, ஏனைய முக்கியமான சுற்றுலா மையங்களில் இத் திட்டத்தை அறிமுகப்படுத்தக் கருதப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம். இங்கு சுற்றிப் பார்க்க வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், இந்தியக் குடும்பங்களோடு சேர்ந்து வாழும் அனுபவங் களைப் பெறுவதுடன், நம் நாட்டுப் பண்பாட்டு கலாசார பாரம்பரியத்தையும் அவர்கள் நன்கு புரிந்து கொள்ளவும் வாய்ப் பளிக்கும்.

**புகார் பிரிவு :**

சுற்றுலாப் பயணிகளின் குறைபாடுகளைக் கவனித்து உடனடி நிவாரண நடவடிக்கை எடுக்கும் வகையில், சுற்றுலா இயக்கத் திலுள்ள புகார் பிரிவு வலுப்படுத்தப்பட்டுள்ளது. புகார்கள் வரப்பெறும் போதெல்லாம், விரிவாக விசாரணை செய்து தேவை யான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**தமிழ்நாடு சுற்றுலா ளர்ச்சிக் கழகம் :**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாவை மேம் படுத்தும் முக்கிய நோக்கத்துடன் 1971 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. இக் கழகம் கடந்த பல ஆண்டுகளாக தனது வளர்ச்சிப் பணிகளை விரைவாக விரிவுப்படுத்தியுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வழங்கும் போக்குவரத்து வசதிகளும் தங்கும் வசதிகளும், தமிழ்நாட்டை சுற்றிப் பார்க்கும் சுற்றுலாப் பயணிகளிடையே நல்ல வரவேற்பை தந்துள்ளன. தற்போது இக் கழகம், அனைத்து முக்கிய சுற்றுலா மையங்களிலும் தங்கும் இடவசதி மற்றும் உணவு வசதி ஆகியவற்றை அளிப்பதுடன், தற்போதுள்ள ஓட்டல்களில் உள்ள வசதிகளையும் மேம்படுத்தி வருகிறது.

இக்கழகம், தனது ஓட்டல்களின் தரத்தைப் படிப்படியாக உயர்த்தி வருகிறது. தற்போது இக்கழகத்திற்கு 9 நட்சத்திர ஓட்டல்களும், நட்சத்திர வகையில்லாத 5 ஓட்டல்களும் உள்ளன.

இக்கழகம், 1987–88 ஆம் ஆண்டில் பின்வரும் பிரிவுகளைத் தொடங்கியுள்ளது.

[1989 ஏப்ரல் 20

கோத்தகிரி, சென்னை, ஏலகிரி ஆகிய இடங்களில் இளைஞர் இல்லங்கள், கொடைக்கானலிலும், ஏலகிரியிலும் படகு இல்லம், தெரிந்தெடுக்கப்பட்ட ஏனைய மையங்களில் இளைஞர் இல்லங் கள்.

சாலை வழியாக நீண்ட தூரம் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகளுக்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், (1) இராணிப்பேட்டை, (2) உளுந்தூர்பேட்டை மற்றும் (3) கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் ஹோட்டல்களை நடத்தி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பின்வரும் இடங்களில் படகு இல்லங்களை நடத்தி வருகிறது:—

(1) உதகமண்டலம், (2) ஏற்காடு, (3) பிச்சாவரம், (4) முட்டுக்காடு, (5) கொடைக்கானல், (6) வண்டியூர் கண்மாய் (மதுரை) மற்றும் (7) ஏலகிரி.

சுற்றுலாப் பயணிகள், தூரத்து இயற்கைக் காட்சிகளை நன்கு பார்க்க இயலும் வகையில், சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் தொலைநோக்கிக் கருவியை அமைத்துள்ளது. கொடைக்கானல், ஏற்காடு, உதகமண்டலம் ஆகிய இடங்களில் தொலை நோக்குக் கருவி இல்லங்கள் செயல் படுகின்றன.

இக்கழகம், 1988–89 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை மேற் கொண்டுள்ளது:—

1. மாமல்லபுரத்தில் இயற்கை காட்சிகளை உருவாக்குதல்.

2. முட்டுக்காட்டில் நீர் விளையாட்டு வசதிகளை மேம் படுத்துதல்.

3. பிச்சாவரத்திலும் குற்றாலத்திலும் உணவகம் கட்டு தல்.

4. சிதம்பரத்தில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல்.

5. பழவேற்காட்டில் படகு விடும் வசதிகள்.

1989-90 ஆம் ஆண்டில், ரூ. 13 கோடி மதிப்பீட்டு செலவில் பல புதிய திட்டங்களை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இதில், மாமல்லபுரத்தில் நட்சத்திர ஓட்டல்கள், கடற்கரை ஓய்விடங்கள் கட்டுதல், நீர் விளையாட்டு வசதிகள் செய்து தருதல் மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு மையங்களின் இல்லங்கள், சாலையோர இல்லங்கள், இளைஞர் இல்லங்கள் கட்டுதலும் அடங்கும். சுற்றுலாப் பயணிகளுக்கு மேலும் பல வசதிகளை அளிப்பதன் மூலம் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் காவிரி ஆற்றின் மேல் அணைக்கட்டில் அமைந்துள்ள முக்கொம்பு என்ற இடத்தை ஒரு சிறந்த சுற்றுலா மையமாக மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது.



1989 ஏப்ரல் 20]

போக்குவரத்து:

இக் கழகத்தின் அடுத்த முக்கியமான பெரும்பணி சுற்றுலா பயணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை அளிப்பதேயாகும். இக்கழகம் காஞ்சிபுரம்-திருக்கழுக்குன்றம்-மாமல்லபுரம், திருப்பதி ஆகிய ஊர்களுக்கு அன்றாடம் சுற்றிப் பார்க்கும் பயணத்தையும், தமிழ்நாடு முழுவதும் ஏழு நாட்களில் சுற்றிப்பார்க்கும் பயணத் தையும், தென்னிந்திய சுற்றுலாப் பயணத்தையும். வார இறுதி நாட்கள் பயணத்தையும், அறுபடை வீடு, மூகாம்பிகை, மந்திராலயம் போன்ற இடங்களுக்கு திருக்கோயில் பயணத்தையும், புனித யாத்திரை பயணத்தையும் சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலமான மாணவர் சுற்றுலாப் பயணத்தையும் இக்கழகம் நடத்தி வருகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏழு சீர்வளி வசதி செய்த பேருந்துகள் உட்பட 25 சொகுசு பேருந்துகளை தற்போது இயக்கி வருகிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு பேருந்து களையும், கார்களையும் கழகம் வாடகைக்கு விடுகிறது. ''தமிழக சுற்றுலா பயணங்கள்'' என்ற பெயரில் இக்கழகம் பயண முகவரமைப்புப் பணியையும் மேற்கொள்கிறது. 1988-89-ல் ஐந்து சிறிய சீர்வளி வசதிகளை செய்து பேருந்துகளை வாங்கி தன் வசமுள்ள பேருந்துகளின் எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டது. 1989–90ல் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட சொகுசுப் பேருந்துகள் அனைத்தையும் எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக நவீன வசதி களுடன் கூடிய புதிய பேருந்துகள் வாங்கக் கருதப்பட்டுள்ளது. வட இந்திய மாநிலங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் புதிய பயணங்கள் அண்மையில் மேற்கொள்ளப்படுகின்றன.

சுற்றுலாப் பொருட்காட்சித் திடல்:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருடாந்திர நிகழ்ச்சிகளில் ஒன்று. சென்னை போர் நினைவுச் சின்னம் எதிரே தீவுத் திடலில் அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி நடத்தி வருவதாகும். புதுடெல்லியில் நடத்தப்படும் அனைத்து நாடுகள் பொருட்காட்சிக்கு அடுத்தபடியாக இந்தியாவில் நடத்தப் படும் இரண்டாவது பெரிய பொருட்காட்சி இதுவேயாகும். இது 30,000 பேருக்கு ஆறு மாதங்களுக்கு, வேலைவாய்ப்பு அளிக் கிறது. சிறுவர் பூங்கா, தோட்டக்கலைக் கண்காட்சி, உணவுப் பொருள் கண்காட்சி, புத்தகக் கண்காட்சி மற்றும் பல்வேறு மாவட்டங்களில் பண்பாடுகளை விளக்கும் கண்காட்சி ஆகியவை இந்தக் கண்காட்சில் முக்கிய அம்சங்களாகும். இத்துடன், நாள் தோறும் நாடகங்களும், கிராமிய நடனங்களும் நடத்தப்படு கின்றன. திறந்தவெளி திரைப்படங்களும் காட்டப்படுகின்றன. 1987 ஆம் ஆண்டில் உத்தேச நிரந்தரக் கண்காட்சிக்காக, பல நிரந்தரமான நிகழ்சிகள் சேர்க்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் மனதாலும், உடலாலும் மேம்பாடடையும் பொருட்டு, சிறுவர்

களுக்கான விடையாட்டுப் பொருட்களை அமைப்பதன் மூலம் நிரந்தரமாக சிறுவர் உல்லாச உலகமொன்றும் உள்ளது. பொது மக்கள் ஓய்வெடுப்பதற்காக தீவுத்திடலில் அதிக அளவில் புல்வெளி அமைக்கப்பட்டுள்ளது. திறந்தவெளி கலையரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இது நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், திருமண வரவேற்பு நிகழ்ச்சிகள் ஆகிய வற்றுக்கு வாடகைக்கு விடப்படுகிறது. மேற்சொன்ன மேம்பாடு களுடன், நிரந்தர சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. சோடியம் ஆவி விளக்குகள் போடப்பட்டுள்ளன. நிரந்தர சுற்றுச்சுவர் கட்டும் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது.

நிதிநிலை

கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 7 கோடியாகும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2.79 கோடியாகும். 1971-72 ஆம் ஆண்டில் ரூ. 4.58 இலட்சமாக இருந்த வியாபாரத் தொகை, 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 498 இலட்சமாக அதிகரித்தது.

இதில், போக்குவரத்து பேருந்துகள் மூலம் கிடைக்கப்பெற்ற ரூ. 122 இலட்சமும், ஓட்டல் மூலம் கிடைக்கப்பெற்ற ரூ. 323 இலட்சமும் அடங்கும். இக்கழகத்திற்கு 1988-89 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 658 இலட்சம் வியாபாரத் தொகை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மாமல்லபுரத்திலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சொத்துக்களை மீளப் பெறுதல்.

தமிழ்நாடு டூரிசம் இண்டர் நேஷனல் ரிசாட்ஸ் என்ற கூட்டு நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டிருந்த மாமல்லபுரத்திலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான பெட்ரோல் பங்க் உட்பட கடற்கரை வளாகம் மற்றும் முகாமிடத்தை திரும்ப தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமே ஏற்று நடத்துவதற்கான ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. அதன்படி மேற்குறிப்பிட்ட சொத்துக்களை எடுத்துக்கொண்டு சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய அங்குள்ள ஓட்டலை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வருகிறது.



## இணைப்பு V.

### மானியக் கோரிக்கை எண் 12.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை—விளக்கக் குறிப்பு.

1989-90,

அறிமுகம்:

ஆலயங்களின் பராமரிப்பு, அவற்றின் நிர்வாகம் மற்றும் அவற்றைச் சார்ந்த அறக்கட்டளைகளின் நிர்வாக நெறிமுறைகள் ஆகியவைகள் செவ்வனே நடைபெறுவதை பேணிக் காத்து கண்காணிப்பது அரசின் ஒரு தலையாய கடமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது, 1925 ஆம் ஆண்டுக்கு முன் இந்து சமய அறநிலையங்கள் மற்றும் கட்டளைகளின் நிர்வாகத்தை கட்டுப்படுத்தி கண்காணிக்கும் பொருட்டு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1925 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டம் 1-ன் படி ஒரு தலைவரும் அவருடன் இரண்டு முதல் நான்கு ஆணையர்களும் அடங்கிய இந்து சமயக் கட்டளை வாரியம் (Hindu Religious Endowment Board) ஒன்று நிறுவப்பட்டு, இந்து சமய கோயில்கள், மடங்கள் முதலியவை கண்காணிக்கப்பட்டன. 1925ஆம் ஆண்டு சட்டத்தை நீக்கி இன்னொரு சட்டம் 1927ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. அதன் பிறகு பல திருந்தச் சட்டங்கள் 1927 முதல் 1951 வரை உருவாயின.

2. 1940-ல் தனி அதிகாரி ஒருவர் (திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர்) வாரியத்தின் நிர்வாக முறைகளில் உள்ள குறைபாடுகளை நீக்கி வாரியத்தை சீர்படுத்தி அமைக்க நியமிக்கப்பட்டார். அவர் வாரியத்திற்குப் பதிலாக அரசே இப்பொறுப்பை ஏற்று நடத்தலாம் என்று கருத்து தெரிவித்தார். இந்நிர்வாகம், மேலும், சீரான முறையில் செயல்படுவதற்கும் அதன் நிதியைப் பெருக்குவதற்கும், எவ்விதம் திருத்தியமைக்கலாம் என்று பரிந்துரை செய்ய 1942-ல் உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. பா. வெங்கட்ரமணராவ் நாயுடு தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவும் பல பரிந்துரைகளில் ஒன்றாக, இந்து சமய கட்டளை வாரிய நிர்வாகத்தினை மாற்றி மாநில அரசு நிர்வாகமாக அமைத்தல் நல்லது என்று பரிந்துரை செய்தது. இந்தப் பரிந்துரையை ஏற்றுக்கொண்டும், அன்றுவரை அமுலில் இருந்த பல்வேறு சட்டங்களைத் தொகுத்தும் ஒரு தொகுப்புச் சட்டத்தை 1951ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இயற்றியது. மேலும். இச்சட்டம், விரிவாக திருத்தி அமைக்கப்பட்டு தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்ளைகள் சட்டமாக வெளியிடப்பட்டு, 1960ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

[1989 ஏப்ரல் 20

**சமய நிறுவனங்கள்:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தின் மீது தற்பொழுது 34,811 அறநிலையங்கள், சமண சமயக் கோயில்கள் முதலியன உள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| திருக்கோயில்கள் .. .. .. | 32,773 |
| மடங்கள் .. .. .. .. | 56 |
| மடத்துக் கோயில்கள் .. .. .. | 55 |
| குறிப்பிட்ட கட்டளை .. .. .. | 1,721 |
| அறக்கட்டளை .. .. .. | 189 |
| சமண சமயக் கோயில்கள் .. .. .. | 17 |
| கூடுதல் | 34,811 |

திருக்கோயில்கள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவைகள் கீழ் வருமாறு:—

| வகைப்பாடு. | எண்ணிக்கை. |
|---|---|
| (i) பட்டியலில் சேராத திருக்கோயில்கள் அதாவது ஆண்டு வருமானம் ரூ. 10,000-க்கும் கீழ். | 32,974 |
| (ii) ஆண்டு வருமானம் ரூ. 10,000 முதல் ரூ. 49,999 வரை வரும் பட்டியலில் சேர்ந்த திருக் கோயில்கள். | 1,469 |
| (iii) ஆண்டு வருமானம் ரூ. 50,000 முதல் ரூ. 99.999 வரை வரும் பட்டியலில் சேர்ந்த திருக் கோயில்கள். | 166 |
| (iv) ஆண்டு வருமானம் ரூ. 1,00,000 மற்றும் அதற்கு மேல் வருமானம் வரும் பட்டியலில் சேர்ந்த திருக் கோயில்கள். | 202 |
| மொத்தம் .. | 34,811 |

ரூ. 2,000-த்திற்கு மேல் ஆண்டு வருமானம் உள்ள திருக் கோயில்கள் பங்களிப்புத் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணத் தொகை ஆகியவைகளை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு செலுத்த வேண்டும். மேற்கண்ட இனங்களின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு வருமானமாக ரூ. 3 கோடி கிடைக்கிறது. ரூ. 2,000-த் திற்குக்கீழ் ஆண்டு வருமானம் வரும் திருக்கோயிலுக்கு பங்களிப்பு தொகை மற்றும் தணிக்கை கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இதன் மூலம் 17,455 திருக்கோயில்கள் பயன் அடைகின்றன. இதன் மூலம் இந்து சமய அறநிலையத்துறைக்கு ஆண்டுக்கு ரூ. 4.5 இலட்சம் வருவாய் பாதிப்பு ஏற்படுகிறது.



1989 ஏப்ரல் 20]

**2. நிர்வாக அமைப்பு:**

இந்து சமய அறநிலையத்துறை ஒரு ஆணையரின்கீழ் செயல் படுகிறது. இவர் துறையின் பொது நிர்வாகம் மற்றும் நடை முறைகளுக்கு பொறுப்பாளர் ஆவார். இவருக்கு உதவியாக இணை ஆணையாளர்கள். துணை ஆணையாளர்கள், நேர்முக உதவியாளர்கள், மற்றும் உதவி ஆணையாளர்கள் ஆகியவர்கள் உள்ளனர். இவர்கள் தவிர திருவாரூரில் ஒரு உலோகத் திருமேனி பாதுகாப்பு மையம் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர்கள் பல்வேறு பதவி தரத்தில் உள்ளனர். இவர்கள் அனைவரும் இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் மற்றும் அதன் விதிகளின்படி பணிகளை செயல்படுத்துகிறார்கள்.

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான திருவாபரணங்களை யும் மற்றும் விலை உயர்ந்த பொருட்களையும் ஆய்வு செய்து மதிப்பிடும் பணியை கவனிக்க உதவி ஆணையாளர் பதவித் தரத்தில் எட்டு நகை சரிபார்க்கும் அதிகாரிகள் அவர்களுக்குரிய துணை பணியாளர்களுடன் உள்ளனர்.

தலைமையகத்தில் பொறியியல் பிரிவு ஒன்று உள்ளது. இப் பொறியியல் பிரிவில், மேற்பார்வைப் பொறியாளர் ஒருவரின் தலைமையில் கோட்டப் பொறியாளர் ஒருவரும் தேவையான தொழில் நுட்ப அலுவலர்களும் உள்ளனர். இவர்கள் சமய நிறு வனங்களின் திருப்பணி மதிப்பீடுகளை தயாரித்தும் மற்றும் அப்பணிகளையும் இதர கட்டிட வேலைகளையும் மேற்பார்வை யிட்டும் கவனித்து வருகின்றனர்.

ஆணையர் அலுவலகத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்தில் திருக்கோயில் நிலங்களுக்காக தனி அலுவலர் ஒருவரும், மாவட்டங்களில் தனி வட்டாட்சியர் நான்கு பேரும் உள்ளனர். இவர்கள் திருக்கோயில் நிலங்களை ஆய்வு செய்தல் அடிப்படைப் பதிவேடுகள் தயாரித்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றனர். ஒரு தனி வட்டாட்சியர் மற்றும் அவருடைய துணை பணியாளர்கள், சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலின் சொத்துக்களை கண்டறியும் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரு கின்றனர்.

இந்து சமய அறநிலையத் துறையைச் சேர்ந்த தனி வருவாய்ப் பிரிவு 10,526 திருக்கோயில்களின் நிலங்கள் குறித்து ஆய்வு செய்து விவரங்களை சேகரித்துள்ளது. குறிப்பாக சிதம்பரம், அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்குப் பாத்தியப்பட்ட 187.28 ஏக்கர் நஞ்சை நிலம் மற்றும் 247.39 ஏக்கர் புஞ்சை நிலத் தினை துறையின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது.

தலைமை அலுவலகத்தில் துறையின் அனைத்து வரவு செலவு கணக்குகளை கவனிக்க கருவூலம் மற்றும் கணக்குத் துறையைச் சார்ந்த ஒரு முதுநிலை கணக்கு அலுவலரும், அவருக்கு உதவியாக ஒரு உதவி கணக்கு அலுவலரும் மற்றும் தேவையான பணியாளர் களும் உள்ளனர்.

[1989 ஏப்ரல் 20

சமய நிறுவனங்களை தணிக்கை செய்யவும் மற்றும் கணக்குகளை சரிபார்க்கவும் இந்திய அரசின் தமிழ்நாடு மாநில தணிக்கை அலுவலகத்தைச் சார்ந்த கணக்கு அலுவலர் ஒருவர் தலைமை தணிக்கை அலுவலராகக் கொண்டு ஒரு தணிக்கைப் பிரிவு செயல்பட்டு வருகிறது:—

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை எட்டுக் கோட்டமாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. அவற்றின் நிர்வாக வரம்பு கீழே தரப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1 | துணை ஆணையர், சென்னை | உதவி ஆணையர், சென்னை<br>உதவி ஆணையர், காஞ்சிபுரம். |
| 2 | துணை ஆணையர், தஞ்சாவூர் .. | உதவி ஆணையர், தஞ்சாவூர்.<br>உதவி ஆணையர், நாகப்பட்டினம். |
| 3 | துணை ஆணையர், மயிலாடுதுறை .. | உதவி ஆணையர், கும்பகோணம்,<br>உதவி ஆணையர், கடலூர். |
| 4 | துணை ஆணையர், திருச்சிராப்பள்ளி | உதவி ஆணையர், புதுக்கோட்டை.<br>உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி |
| 5 | துணை ஆணையர், மதுரை .. | உதவி ஆணையர், மதுரை.<br>உதவி ஆணையர் இராமநாதபுரம். (இருப்பு) மதுரை. |
| 6. | துணை ஆணையர், திருநெல்வேலி. | உதவி ஆணையர், திருநெல்வேலி,<br>உதவி ஆணையர், நாகர்கோயில். |
| 7. | துணை ஆணையர், கோயம்புத்தூர். | உதவி ஆணையர், கோயம்புத்தூர்,<br>உதவி ஆணையர், ஈரோடு. |
| 8. | துணை ஆணையர், சேலம். | உதவி ஆணையர், சேலம்.<br>உதவி ஆணையர், தர்மபுரி.<br>உதவி ஆணையர், வேலூர். |



1989 ஏப்ரல் 20]

**செயல் அலுவலர்கள்:**

தற்போது 1 முதல் 4 வரையிலுள்ள நிலையில் 472 செயல் அலுவலர்கள் 1,819 திருக்கோயில்களில் பணிபுரிந்து வருகின்றார்கள். அவர்கள் விவரம் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| நிலை—1 | .. | .. | 45 |
| நிலை—2 | .. | .. | 117 |
| நிலை—3 | .. | .. | 172 |
| நிலை—4 | .. | .. | 138 |

மேற்படி நிலைகள் தவிர ஆண்டு வருமானம் ரூபாய் 20 லட்சம் மற்றும் அதற்கு மேல் வருமானம் உள்ள 20 திருக்கோயில்களில் இணை ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் செயல் அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

3. திருமடங்களின் மேற்பார்வையில் உள்ள திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர்கள் நியமனம் குறித்து:

திருமடங்களின் மேற்பார்வையில் உள்ள திருக்கோயில்களின் நிர்வாக குறைபாடுகளை களையும் பொருட்டு சட்ட விதிமுறைகளின்படி மேற்படி திருக்கோயில்களுக்கு செயல் அலுவலர்களை நியமிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மேல் ஒரு சில ஆதீனகர்த்தர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். சென்னை உயர்நீதிமன்றம் 5–3–1986 தேதியில் மேற்கண்ட நீதிப் பேராணைகளை ஏற்று தீர்ப்பளிக்கையில், அடியிற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது:—

“அதாவது சட்ட விதிமுறைப்படி செயல் அலுவலர் நியமனம் முறைக்கு நோட்டீஸ் கொடுத்து ஆட்சேபணைகளை பெற்று அதனைப் பரிசீலனை செய்து நீதிபதிக்குழு கொடுத்துள்ள வழிமுறைகள்படி தீர்ப்பெடுத்து மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

இத்தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 55 திருக்கோயில்கள் திருமடங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. மேலும் திருவாடுதுறை திருமடத்தின் கீழ் 13 கட்டளைகள் அல்லது குறிப்பிட்ட கட்டளைகளும், தருமபுரம் திருமடத்தின் கீழ் 4 கட்டளைகள் அல்லது குறிப்பிட்ட கட்டளைகளும் நிர்வகிக்கப்படுகின்றன.

4. மடங்களின் நிர்வாகம்:

மடங்களின் நிர்வாகத்தில் முறைகேடுகள் நடந்ததை அரசின் கவனத்திற்கு கொணர்ந்ததின் தொடர்ச்சியாக மடங்களின் நிர்வாகத்தினை மேற்பார்வையிட தமிழ்நாடு அரசு 1–10–1980 முதல் ஒரு துணை ஆணையர், ஒரு கோட்ட

தணிக்கை அதிகாரி, 2 ஆய்வாளர்கள் மற்றும் தணிக்கை அதிகாரிகள் ஆகியவர்களை நியமித்துள்ளது. மடங்களின் நிர்வாகத்தினை மேற்பார்வையிட துணை ஆணையருக்கு எல்லா அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இது வரை 44 மடங்கள், 40 மடங்களைச் சேர்ந்த திருக்கோயில்கள் மற்றும் 16 குறிப்பிட்ட கட்டளைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த மாநிலத்தில் 3,886 திருக்கோயில்கள் மற்றும் குறிப்பிட்ட கட்டளைகள் பரம்பரை அறங்காவலர் நிர்வாகத்தின் கீழும், 633 திருக்கோயில்கள் குறிப்பிட்ட வகுப்பினர் நிர்வாகத்தின் கீழும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அறங்காவலர் பதவி குறித்தும், இலாகாவின் அறங்காவலர் நியமன உரிமை குறித்தும், 1,277 திருக்கோயில்களின் வழக்குகள் நீதிமன்றங்களின் நிலுவையில் உள்ளன. தற்போது 29,015 திருக்கோயில்கள் மற்றும் குறிப்பிட்ட கட்டளைகளுக்கு அறங்காவலர் நியமனம் செய்யும் அதிகாரங்களை செலுத்தி, அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள்.

**5. தணிக்கைப் பிரிவு :**

தணிக்கைப் பிரிவில் தலைமை தணிக்கை அலுவலரைச் சேர்த்து 341 பணியாளர்கள் உள்ளனர்.

தணிக்கைத் தடைகளை துரிதமாக முடிக்கும் பொருட்டு இணை ஆணையர் மற்றும் தலைமைத் தணிக்கை அலுவலர் மட்டத்திலும், துணை ஆணையர் மற்றும் மண்டல தணிக்கை அலுவலர் மட்டத்திலும், உதவி ஆணையர் மற்றும் உதவி தணிக்கை அலுவலர் மட்டத்திலும், கூட்டுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அந்த கூட்டுக் கூட்டங்களில் தணிக்கை தடைகள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் முன்னேற்றம் கவனிக்கப் படுகிறது.

இணை ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் செயல் அலுவலரால் நிர்வகிக்கப்படும் திருக்கோயில்களில் தணிக்கை ஆட்சேபணைகளை சீராய்வு செய்யவும், முடிக்கவும், ஆணையர் மற்றும் செயலாளர், வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, துணைச் செயலாளர், நிதித் துறை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மற்றும் தலைமை தணிக்கை அதிகாரி, அறநிலையத் துறை ஆகியவர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு இதுவரை ரூ. 1.52 கோடி சம்பந்தப்பட்ட 5,835 தணிக்கை தடைகளை முடித்துள்ளது.

இணை ஆணையர் மற்றும் துணை ஆணையர் செயல் அலுவலர் நிலையில் உள்ள திருக்கோயில் நிர்வாகத்தின் முன்னேற்றத்தையும், கணக்குகளையும் சரிவரப் பேண மண்டல தணிக்கை அலுவலர் நிலையில் முதுநிலை கணக்கு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



**6. திருக்கோயில் பணியாளர்கள் :**

இத்துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் சுமார் 47,776 பணியாளர்கள் பலதரப்பட்ட பணியில் பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்களுக்கு பணமாகவும், தானியமாகவும் அல்லது இரண்டுமாக சேர்த்து ஊதியமாகக் கொடுக்கப் படுகிறது. இணை ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் உள்ள செயல் அலுவலர்கள் திருக்கோயில்களில் சுமார் 4,166 பணியாளர்கள் பணி புரிகின்றனர்.

முதுநிலை திருக்கோயில்களில் பணிபுரியும் ஊழியர்களின் 125 ஊதிய விகிதங்களை ஒருங்கிணைத்து 20 ஊதிய விகிதங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இந்த 20 ஊதிய விகிதங்கள் இணை ஆணையர்/துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அந்தஸ்தில் உள்ள செயல் அலுவலர் திருக்கோயில் பணியாளர்களுக்கு மட்டும் 1-4-1986 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட திருத்திய ஊதிய விகிதம் பிற திருக்கோயில் பணியாளர்களுக்கு பொருந்தாதாகையால், அத்திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ. 20 கருணைக் கொடையாக வழங்க இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையருக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

திருக்கோயில் பணியாளர் குடும்ப நல திட்டம் 1–7–1982 முதல் அமுல்படுத்தப்பட்டது: இந்தத் திட்டம் மேலும் சீராக்கப்பெற்று ஒரு புதிய திட்டம் 1987-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ரூ. 100-க்கு மேல் ஊதியம் பெறும் திருக்கோயில் பணியாளர்களிடம் மாதம் ஒன்றுக்கு ரூ 2 சந்தாவாகப் பெற்று அதனை ஆணையர் பெயரில் வங்கியில் செலுத்தி அதன் மூலம் பணியில் இறக்கும் திருக்கோயில் ஊழியர்களின் குடும்பத்திற்கு ரூ. 10,000 வீதம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 118 திருக்கோயில் சிப்பந்திகளின் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

திருக்கோயில்களில் பணிபுரியும் ஓதுவார்களுக்கு ஓய்வூதியம் கொடுக்க புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு 15-4-1988 முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி திருக்கோயில்களில் 20 ஆண்டு பணிபுரிந்த மற்றும் 60-வது வயதில் பதவி ஓய்வு பெற்ற திருக்கோயில் ஓதுவார்களுக்கு மாதம் ரூ. 250 ஓய்வூதியம் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதுவரையில் இந்தத் திட்டத்தின் கீழ் 58 ஓதுவார்கள் பயனடைந்துள்ளனர்.

மேலே கூறப்பட்ட பயன்கள் தவிர, திருக்கோயில் சிப்பந்திகள் கீழ்க்கண்ட சலுகைகளையும் பெற்று வருகின்றனர்.

(1) திருக்கோயில் சிப்பந்திகள் இறக்கும்போது, அவர் குடும்பத்திற்கு ரூ. 250 பொதுச் செலவுக்காக கொடுக்கப்படுகிறது. அந்தத் தொகை அவர்களுக்கு கொடுக்கவேண்டிய பாக்கியில் சரி செய்யப்படுகிறது. முதுநிலை திருக்கோயில்களின் சிப்பந்திகளுக்கு ஒரு மாத சம்பளம் மற்றும் அகவிலைப்படியும், அல்லது கருணைத் தொகை ரூ. 1,000 இதில் எது குறைவோ அதனை அவர்கள் திருவிழாக் காலங்களில் செய்யும் அதிகப்படியான வேலைக்காக கொடுக்கப்படுகிறது.

(2) அரசு சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் திருவிழா முன்பணம் போல ரூ. 500 அல்லது 2 மாத சம்பளம் இதில் எது குறைவோ அது கொடுக்கப்படுகிறது. இந்த முன் பணம் 10 தவணைகளில் பிடிக்கப்படுகிறது.

(3) புயல் காற்று அல்லது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டால் அந்த இடங்களில் வசிக்கும் திருக்கோயில் சிப்பந்திகளுக்கு வட்டியில்லாமல் ரூ. 400 முன் பணமாக பத்து தவணைகளில் பிடித்தம் செய்துகொள்வது போல் கொடுக்கப்படுகிறது.

(4) திருக்கோயில் பணியாளர்களுக்கு திருமண முன் பணம் வட்டியுடன் தவணை முறையில் பிடித்தம் செய்து கொள்வது போல் கொடுக்கப்படுகிறது.

7. ஆலய நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் :

இம்மாநிலத்தில் உள்ள அறநிலையங்களுக்கு சுமார் 6.11 இலட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. இவைகளின் மூலம் ஆண்டுக்கு ரூ. 2.21 கோடி வருமானம் வரவேண்டும். மற்றும் தானியமாக 7.59 லட்சம் குவிண்டால் வரவேண்டும். ஆலய நிலங்கள் 1,04,277 குத்தகைதாரர்களுக்கு குக்தகைக்கு விடப்பட்டுள்ளன. குத்தகைதாரர்கள் ஒழுங்காக குத்தகையை செலுத்துவதில்லை. இந்த இனங்களிலிருந்து ரூ. 34.88 கோடி குத்தகை பாக்கியாக வரவேண்டி உள்ளது. வருவாய் நீதிமன்றத்தில் வழக்காடப்பட்ட 2,162 வழக்கில் பணமாக ரூ. 5,67,367.99-ம் மற்றும் 61.76 குவிண்டால் தானியமாகவும் அடங்கிய 781 வழக்குகள் முடிந்துள்ளன. திருக்கோயில்களுக்குச் சொந்தமாக உள்ள வீட்டு மனைகள் மற்றும் கட்டிடங்கள் மூலம் வரவேண்டிய ஆண்டு வருமானம் ரூ. 1.71 கோடியாகும்.

8. திருக்கோயில்கள் செப்பனிடுதலும், திருப்பணிகளும் :

திருக்கோயில்கள் செப்பனிடுதல் மற்றும் திருப்பணி வேலைகள் ஆலய நிதி மற்றும் நன்கொடை மூலமும் அரசு மான்யம், ஆணையரின் பொதுநல நிதி மற்றும் ஆலயங்களின் உபரிநிதி ஆகியவற்றின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. 1987 ஆம் ஆண்டில் குலம் மற்றும் ஆலயத் திருப்பணி வேலைகளுக்காக



68 திருக்கோயில்களுக்கும், 1988 ஆம் ஆண்டில் 67 திருக்கோயில்களுக்கும் அரசு மான்யம் வழங்கப்பட்டது. மேலும் 1988-ல் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் கட்டுவதற்கு ரூ. 5,08,000 வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இனங்கள் தொடர்பாக செலவு செய்யப்பட்ட தொகையின் விவரம் வருமாறு:

| | | 1987<br>ரூ. | 1988<br>ரூ. |
|---|---|---|---|
| திருக்கோயில்கள் திருப்பணி | .. | 34,03,400 | 36,38,700 |
| திருக்குளத் திருப்பணிகள் | .. | 9,96,300 | 4,40,000 |

1987 மற்றும் 1988 ஆம் ஆண்டு இதர மாநில மற்றும் வெளிநாடு திருக்கோயில் திருப்பணிக்காக அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், மதுரை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில், திருச்செந்தூர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில், பழனி மற்றும் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில், திருத்தணி ஆகிய திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து நிதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

1. 16 உற்சவர் சிலைகள் .. அருள்மிகு மீனாட்சி திருக்கோயில், ஹூஸ்டன், அமெரிக்கா. ரூ. 48,660.

2. அருள்மிகு முருகன் திருக்கோயில் ரூ. 3,00,000. திருப்பணி, புதுடில்லி.

திருச்செங்கோட்டில் மலையடிவாரத்திலிருந்து அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலுக்கும், அருள்மிகு செங்கோட்டு வேலவர் ஆலயத்திற்கும் ரூ. 61.06 இலட்சத்தில் 2.55 கி.மீ. தூரத்திற்கு மலைப்பாதை ஒன்று 1988-ல் போடப்பட்டுள்ளது.

தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலின் கல்காரத்தில் 171 அடி உயரத்தில் 9 நிலைகள் கொண்ட கோபுரப் பணி ரூ. 90 இலட்சத்தில் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இக்கோபுர வேலைகள் முடியும் தருவாயில் உள்ளன.

மேற்கண்ட திருப்பணி வேலைகள் தவிர மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் சார்பாக ரூ. 93 இலட்சத்தில் 4 மாடி அங்காடி ஒன்றும், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பாக ரூ. 35.5 இலட்சத்தில் 2 மாடி அங்காடியும் கட்டப்பட்டு வருகின்றன.

9. திருக்கோயில்களுக்குச் சொந்தமான விக்கிரகங்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் பாதுகாத்தல் குறித்து நடவடிக்கை :

திருட்டுக்களை தவிர்க்க முன்னாள் இராணுவத்தினர் திருக்கோயில்களில் காவலர்களாக நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. உதவி ஆணையர்/துணை ஆணைய

மற்றும் இணை ஆணையர் நிலையில் உள்ள செயல் அலுவலர் நிர்வாகத்தின்கீழ் உள்ள திருக்கோயில்களில் ''திருடர்கள் எச்சரிக்கை கருவி'' (Burglar Alarm) வைக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் தமிழ்நாடு அரசால் வல்லுநர் குழு ஏற்படுத்தப்பட்டு, அக்குழு திருக்கோயில்களின் நகைகள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்கள் வைக்கப்படும் பாதுகாப்பு அறைகள், நகைகள் மற்றும் இதர விலையுயர்ந்த பொருட்களை அடிக்கடி நேரிடையாக சென்று பார்த்து ஆய்வு செய்து வருகிறது. பணத்தட்டுப்பாட்டால் ''திருடர்கள் எச்சரிக்கை கருவி'' வைக்க முடியாத திருக்கோயில்களில் விழிப்புப் பதிவு கடிகாரங்கள் (Tell-Tale clocks) வைக்க ஆலோசனை கூறப்பட்டு அவைகளை இரவுக் காவலர் சரியானபடி இயக்குகிறாரா என்பதை அடுத்த நாள் சரிபார்த்து, தவறு செய்யும் திருக்கோயில் பணியாளர் மீது நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திருவாரூரில் விக்கிரக பாதுகாப்பு மையம் ஒன்று விக்கிரக பாதுகாப்புக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பொறுப்பை ஒரு உதவி ஆணையர் வகித்து வருகிறார். 1988-ம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை பல கோயில்களிலிருந்து இம்மையத்தில் 1,340 விக்கிரகங்கள் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திருக்கோயில் நிர்வாகியும் பழம்பொருள் மற்றும் புதைபொருள் சட்டம், 1972 பிரிவு 12-ன்கீழ் விக்கிரகங்களை மாநில புதைபொருள் துறையினரிடம் பதிவு செய்யும்படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 1,773 திருக்கோயில்கள் சம்பந்தப்பட்ட 9,959 விக்கிரகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பத்தூரில் உள்ள அருள்மிகு விஸ்வநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான விலை மதிப்பிட இயலாத நடராஜர் சிலை 1976-ம் ஆண்டில் களவாடப்பட்டது. அது 1982 ஆம் ஆண்டில் லண்டனில் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தச் சிலையை மீட்பதற்காக வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதனை திரும்பப் பெறுவதற்கான தீவிர முயற்சிகளை மத்திய அரசும் மாநில அரசும் மேற்கொண்டன. லண்டன் உயர்நீதிமன்றம் நமக்குச் சாதகமாக தீர்ப்பளித்துள்ளது. நம் நாட்டின் பண்பாட்டு மரபுரிமையின் ஒரு பகுதியான அரிய சிலைகள், கலைப் பொருட்கள், வெளிநாடுகளுக்கு கடத்தப்படுவதைத் தடுக்கும் முயற்சியில் மேற்சொன்ன தீர்ப்பு ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகப் பாராட்டப்பட்டது. திருக்கோயிலின் சிலைகளைக் கேட்டுப் பெறுவதற்கு திருக்கோயிலின் தெய்வத்திற்கு உரிமை உண்டு என்பதையும் இத்தீர்ப்பு உறுதிப்படுத்துகிறது. மேற்படி நடராஜர் சிலை களவு செய்யப்பட்டதினால் நாம் அடைந்த சேதங்களுக்காக கேட்கப்பட்ட இழப்பு தொகை குறித்த முடிவும், இறுதித் தீர்ப்பும் விரைவில் அளிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் நடராஜர்



சிலையை இந்தியாவுக்குத் திரும்ப கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

விக்கிரக திருட்டை தவிர்க்கும் பொருட்டு கிராமங்களில் உள்ளூர் பெரிய மனிதர்கள், முன்னாள் இராணுவத்தினர், உள்ளூர் காவல்துறை அதிகாரி, பிர்க்கா வருவாய் ஆய்வாளர் மற்றும் இராக்கா ஆய்வாளர் கொண்ட ஒரு விழிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த விழிப்புக் குழுவின் வேலையை சீராய்வு செய்ய மாவட்ட ஆட்சியர் மற்றும் இராக்கா துணை ஆணையாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## 10. திருமண மண்டபங்கள் மற்றும் பக்தர்களுக்கான வசதிகள் :

திருக்கோவில்களைச் சேர்ந்த திருமண மண்டபங்கள் 113 உள்ளது. இவைகளில் வசூலிக்கப்படும வாடகைகள் திருமண மண்டபம் உள்ள இடத்தினையும் பொது மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகளையும் கருத்திற்கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. பக்தர்களின் உபயோகத்திற்காக 58 ஓய்வு விடுதிகள், 231 குடில்கள், 951 அறைகள் ஆகியவை 14 திருக்கோயில்களினால் கட்டப்பட்டுள்ளன. தவிர சேவார்த்திகளுக்கு உயர்ந்த ரக பிரசாதம் திருக்கோயில் பிரசாதக் கடையிலேயே கொடுக்கவும், சேவார்த்திகளுக்கு திருக்கோயில் சரித்திரம் மற்றும் அவைகளின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ள ஏதுவாக வழிகாட்டி நியமனமும் செய்யப்பட்டுள்ளது.

## 11. தமிழ்நாடு திருக்கோயில் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் :

ஒருகால பூஜை கூட நடத்த முடியாத ஆலயங்களில், ஒருகால பூஜையாவது நடைபெற வழிவகை செய்யும் பொருட்டு ஆலயங்களின் உபரி நிதியைக் கொண்டு ரூ. 5 கோடிக்கு ஒரு நிலையான வைப்பு நிதி 1984-ல் ஏற்படுத்தப்பட்டது. மேற்காணும் நிலையான வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியில் இருந்து ஒருகால பூஜை கூட நடத்த வசதியற்ற ஆலயங்களுக்கு ஒருகால பூஜை நடத்துவதற்கு நிதி உதவி வழங்கப்பட்டது இது வரை 2,144 திருக்கோயில்களுக்கு ரூ. 90.47 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது மேலும், தஞ்சாவூர் பெரிய திருக்கோயிலுக்கும் மற்றும் திருவாரூர் விக்கிரக பாதுகாப்பு மையத்திற்கும் முறையே ரூ. 5 இலட்சம் மற்றும் ரூ. 60,000 நிலையான வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் பெறப்படும் வட்டியிலிருந்து நித்தியப்படி பூஜைக்கு கொடுக்கப்பட்டு வந்தது. இந்த நடைமுறை 1987 ஆம் ஆண்டு மாற்றப்பட்டது. மாற்றப்பட்ட திட்டத்தின் கீழ் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ. 25,000-க்கு ஒரு நிலையான வைப்பு நிதி ஏற்படுத்தி அதில் கிடைக்கக்கூடிய வட்டியை ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடப்பெற்ற

திருத்தலங்களுக்கு ஒருகால நித்தியப்படி பூஜைக்கு உதவியாக கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன முதற்படியாப் 12 திருத்தலங்களுக்கு, ரூ. 5 இலட்சம் முதலடு செய்யக பட்டுள்ளது. இந்த திட்டம் தவிர ஆண்டு வருமானம் ரூ. 2,000-க்கு குறைவான வருமானம் வரும் திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜை செய்வதற்கு ரூ. 2,500 கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டம் அமுலுக்கு வந்த பின்னர் 765 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. இதன் மொத்த செலவு ரூ. 19.13 இலட்சம். இந்த நிதியிலிருந்து கிடைத்த வட்டி ரூ. 140 இலட்சம் வங்கியில் நிலையான முதலீடாக வைக்கப்பட்டுளளது.

## கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணி உதவி நிதி :

நலிவுற்ற கிராம திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்யும் பணிக்காக பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக் கோயில் உபரி நிதியில் இருந்து 1 கோடி ரூபாய் நிதி மாற்றம் செய்து நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வைப்பு நிதியில் இருந்து கிடைக்கும் வட்டயிலிருந்து நலிவுற்ற கிராம திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ. 10,000 வழங்கப் படுகிறது. இதுவரையில் 48.88 இலட்சம் ரூபாய் செலவில் 458 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன.

## ஆலய ஊழியர்கள் நல்வாழ்வு நிதி :

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் உபரி நிதியில் இருந்து 1 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, 1984-ல் நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்த வைப்பு நிதியில் இருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து கல்வி, மருத்துவம், மற்றும் திருமணச் செலவுகள் ஆகியவைகளுக்கு திருக்கோயில்களில் சொற்ப ஊதியம் பெறும் சிப்பந்திகளுக்கு உதவியாக வழங்கப் படுகிறது. இவை தவிர திருக்கோயில் ஊழியர்களின் சம்பள பாக்கியும் வழங்கப்படுகிறது. இது வரையில், 7,363 திருக் கோயில் சிப்பந்திகள் பயனடைந்துள்ளனர். இதன் மொத்த செலவு ரூ. 57.78 இலட்சம். பயனடைந்த திருக்கோயில்களின் எண்ணிக்கை 2,172.

## 12. ஆணையர் பொது நல நிதி :

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 97 ஆம் பிரிவின் கீழ் இந்து சமய அறக்கட்டளைகள் பொது நல



நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமய நிறுவனங்கள் தங்கள் உபரி நிதியிலிருந்து அளித்த தொகையினைக் கொண்டும் கோயில்களை செப்பனிடவும், காப்பாற்றவும், அவைகளின் கட்டிடங்களையும், ஓவியங்களையும் பாதுகாக்கவும், அனைத்து எல்லா சமய அறநிலையங்களுக்கும் அல்லது ஒரு குறிப்பிட்ட அறநிலையத்திற்குப் பொதுவாக உள்ள சமய நெறிகளைப் பரப்பவும் மற்றும் 1959 ஆம் ஆண்டின் இந்து சமய அறநிலைய சட்டத்தின் 66 (i)—ம் பிரிவின் கீழ் சொல்லப் பட்டிருக்கும் கருத்துக்களை செயல்படுத்தவும் வேறு எவரும் மனமுவந்து அளிக்கும் தொகையைக் கொண்டும் இந்நிதி ஏற் படுத்தப்பட்டுள்ளது. 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 8,31,373.10 மற்றும் ரூ. 58,80 மேற்கண்ட நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டுள்ளது.

## 13. திருக்கோயில்களால் நடத்தப்படும் பள்ளிகள், கல்லூரிகள் அனாதை இல்லங்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் :

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகளின் நன்மையை மட்டும் கருத்திற் கொள்ளாமல், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் முதலியவைகளை ஏற்படுத்தி, நிர்வகித்து சமுதாய பணிகளையும் கோயில்கள் செய்து வருகின்றன. பள்ளிகள் மற்றும் கல்லூரி நிறுவனங்களின் விவரம் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| கல்லூரிகள் .. | .. | .. | 5 |
| மேல்நிலைப்பள்ளிகள் | .. | .. | 5 |
| உயர்நிலைப்பள்ளிகள் | .. | .. | 15 |
| நடுநிலைப்பள்ளிகள் | .. | .. | 5 |
| ஆரம்பப்பள்ளிகள் | .. | .. | 3 |
| மெட்ரிகுலேஷன் பள்ளி | .. | .. | 1 |
| நாதஸ்வர தவில் பள்ளிகள் | | .. | 3 |
| சுத்த வைத்தியசாலை | .. | . | 19 |
| அன்பு இல்லங்கள் | .. | .. | 29 |
| தொழில்நுட்ப பயிலகம் | .. | .. | 2 |

## 14. கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் :

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம் கன்னியாகுமரி தேவஸ்வம் காரியம் என அழைக்கப்படுகிறது. திருவாங்கூர் கொச்சி தேவஸ்வம் வாரியத்தின் கீழ் இயங்கி வந்த திருக்கோயில்கள் 1956 ஆம் ஆண்டு மாநிலங்கள் சீரமைப்பு சட்டம் வந்த பிறகு தமிழ்நாட் டுடன் இணைக்கப்பட்டன. இந்த தேவஸ்வம் தமிழ்நாட்டுடன் இணைந்த போது ரூ. 13.7 இலட்சம் அரசு மானியமாக வழங்கப் பட்டு, தொடர்ந்து அதே போல் வழங்கப்பட்டு வருகிறது.

53-9—53

இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம் 1–11–1956 முதல் 31–3–1960 வரை ஆணையரின் நேரிடை நிர்வாகத்தில் இருந்து வந்தது. தமிழ்நாடு சட்டம் 30/59 அமுலுக்கு வந்த பிறகு கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் என்கிற அமைப்பு 1–4–1960 முதல் ஏற்படுத்தப்பட்டு அதன் கீழ் மேற்படி வாரியம் ஒழிக்கப்பட்டு, அனைத்து திருக்கோயில்களும் தமிழ்நாடு சட்டம் 22/59–ன் கீழ் கொண்டு வரப்பட்டது.

மேற்படி தேவஸ்வம் 490 ஆலயங்களை கொண்டது. இதற்கு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் சட்டப்பிரிவு 45–ன் கீழ் நியமனம் செய்யப்பட்ட உதவி ஆணையர் பணிநிலையில் உள்ள செயல் அலுவலர் பொறுப்பு வகிக்கிறார். துணை ஆணையர், திருநெல்வேலி, இதற்கு தக்கார். அரசியல் சட்டத்தின்படி மேற்படி 490 கோயில்களைப் பராமரிக்க மான்யமாக அரசால் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 13.70 லட்சம் கொடுக்கப்படுகிறது.

மேற்கண்ட திருக்கோயில் சிப்பந்திகளை மூன்று வகைகளாக கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்:—

| | | |
|---|---|---|
| 1. | கருவூலத்திலிருந்து சம்பளம் பெறும் கணிப்பாளர் உள்பட அரசுப் பணியாளர்கள். | 90 |
| 2. | திருக்கோயில்களிலிருந்து சம்பளம் பெறும் பணியாளர்கள். | 14 |
| 3. | கண்டின்ஜென்சிஸ் பணியாளர்கள் | 1,061 |
| | மொத்தம் .. | 1,165 |

இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களின் ஆண்டு வருமானம் ரூ. 33 இலட்சம்.

15. திருக்கோயில் இதழ் வெளியீடு :

இந்து சமய அறநிலையத்துறை 'திருக்கோயில்' என்னும் இதழை மாதந்தோறும் வெளியிடுகிறது. இதில் சமயம், திருக்கோயில்கள் போன்றவைகளைப் பற்றிய ஆன்மிக நெறி கட்டுரைகளும் மற்றும் பல வரலாறுகளும் இடம் பெறுகின்றன.

அர்ச்சகர்கள், சாஸ்திரம், ஆகமம் மற்றும் பூஜைகள் செய்யும் முறை மற்றும் மந்திரங்கள் ஆகியவற்றில் தேர்ச்சி பெற புத்தொளி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இம்மாதிரி வகுப்புகளில் பயிற்சி அடைந்தவர்களின் விபரம் :—



| | திருக்கோயில்களின் பெயர் (1) | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|---|
| (1) | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம் .. | 81 |
| (2) | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம் .. | 57 |
| (3) | அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு .. | 60 |
| (4) | அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை .. | 58 |
| (5) | அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு. .. | 60 |
| (6) | அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி | 100 |

தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம், சைவ சித்தாந்தம் வைணவம், நன்னெறி, திருக்கோயில்களில் தொழும் முறை ஆகியவைகளில் பயிற்சி அளிக்கும் பொருட்டு கோடை வகுப்புகள் திருக்கோயில்களுக்குச் சொந்தமான பள்ளிகளில் நடத்தப்படுகின்றன.

1986–87 ஆம் ஆண்டில் 13 திருக்கோயில்களில் கோடை கால வகுப்புகள் நடத்தப்பட்டன.

16. முடிவுரை :

தமிழ்நாடு முழுவதும் அமைந்துள்ள சமய நிறுவனங்களின் மேற்பார்வை, கட்டுப்பாட்டுக்கு இந்து சமய அறநிலையத் துறை முதன்மை பொறுப்பு வகிக்கிறது. திருக்கோயில்கள், அதன் சொத்துக்கள் ஆகியவை உரியவாறு நிர்வகிக்கப்படுவதற்கும், அங்கு பூஜைகளும், திருவிழாக்களும் முறையாக நடைபெறுவதற்கும், இத்துறை பொறுப்பாக உள்ளது. அந்தந்த திருக்கோயில்களில் கடைப்பிடிக்கப்படும் மரபுகள் வழுவாது பின்பற்றப்படுகின்றன. பழமை வாய்ந்த திருக்கோயில்களின் கட்டிடக் கலையழகைப் பாதுகாப்பதில் இத்துறை தீவிர கவனம் செலுத்துகிறது. திருக்கோயில்களின் திருப்பணிக்கும், திருக்கோயில் கட்டிடக்கலையின் பழமையான கலையம்சம் பாதுகாக்கப்படவும் அனுபவம் வாய்ந்த ஸ்தபதிகளின் பணி பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. திருக்கோயில்களில் பூஜைகளும் திருவிழாக்களும், ஆகம முறைப்படி நடைபெறுகின்றன என்பதை உறுதி செய்யும் பொருட்டு நமது அர்ச்சகர்களுக்கு ஆகமங்கள், தாந்தரிக சாஸ்திரங்கள் ஆகியவற்றின் அடிப்படை கோட்பாடுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

சமயத் தலைவர்கள், மடாதிபதிகள் தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய திருக்கோயில் வழிபாடு ஆகியவற்றிற்காக தங்களை அர்ப்பணித்துக்கொண்டுள்ள அறிஞர் பெருமக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர், இந்து கோயில்கள் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும், கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாக்கவும், நிதி ஆதாரங்களை பெருக்கவும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து 3 திங்கள் கால அளவுக்குள் அறிக்கை ஒன்றை அளிக்கும் வகையில், ஐந்து உறுப்பினர் கொண்ட இந்து சமய அறநிலையத்துறை ஆக்கப்பணி ஆலோசனைக் குழு ஒன்றை அரசு 1989 மார்ச்சில் அமைத்துள்ளது. வணிகவரி மற்றும் அறநிலையத்துறை அரசு ஆணையர் செயலாளரை அமைப்பாளராகக் கொண்ட இக்குழுவில் பின்வரும் நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்:—

1. தவத்திரு குன்றக்குடி அடிகளார்.
2. நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார்.
3. திருவரங்கம் திருமலை ஐயங்கார்.
4. திரு. ஜெயசெந்தில்நாதன்.
5. திருமதி இராதா தியாகராஜன்.

திருக்கோயில்களிலும சமய நிறுவனங்களிலும் இறைவனை வழிபட அமைதியான மனதுக்கு இசைவான ஒரு சூழ்நிலையை பொது மக்களுக்கு ஏற்படுத்தித் தருவதும், அன்றாட பூஜைகள் முறையாக நடைபெறுவதையும், திருக்கோயில்களை நன்கு பராமரித்து அவற்றின் கட்டிடக் கலையம்சப் பேரழகை பாதுகாப்பதையும் உறுதி செய்வதும் இந்து சமய அறநிலையத்துறையின் முக்கிய நோக்கங்களாகும்.



## இணைப்பு VI
### சின்கோனாத்துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1989–90 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டம்.

கோரிக்கை எண் 25 சின்கோனா மற்றும் 56 முலதனச் செலவு.

1. முன்னுரை:—

1.1. தமிழ்நாடு அரசின் வணிகத்துறையான சின்கோனாத் துறை 1950 ஆம் ஆண்டு வரை மலேரியாவைக் குணப்படுத்த உதவும் கொய்னாப் பொருட்களை மட்டும் தயாரித்து வந்தது. கொய்னாப் பொருட்களின் தேவை குறைந்தாலும், அடிக்கடி அதன் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்தும், மருந்து மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிடுவதிலும், பல்வேறு இயற்கை நறுமண எண்ணெய்களைத் தயாரிப்பதிலும், தனது நடவடிக்கைளை விரிவுப்படுத்திக் கொண்டது. இத்துறை கடந்த 128 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. வணிக அடிப்படையில் இத்துறை இயங்கி வந்தாலும், மலைப் பகுதிகளில் வசிக்கும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்கு முக்கியத் துவத்தை அளித்து வருகிறது.

1988 டிசம்பர் 31 ஆம் தேதியில் இத்துறையில் 1,720 நிரந் தரத் தொழிலாளர்களும், 282 தற்காலிகத் தொழிலாளர்களும் ஆக மொத்தம் 2,002 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர் பருவகால பணிகளுக்கேற்ப தற்காலிக தொழிலாளர்கள் பணியில மர்த்தப்படுவர். இத்துறை தயாரிக்கும் பொருட்களுக்குத் தேவை யான மூலப் பொருட்கள் நீலகிரி, கோயமுத்தூர், மாவட்டத்தி லுள்ள ஆனைமலை மற்றும் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத் தில் உள்ளகொடைக்கானல் தாலுக்காவில் மேல் பழனிமலை ஆகிய இடங்களில் உள்ள இத்துறையின் தோட்டங்களிலேயே பயிரிடப் படுகின்றன. கோயமுத்தூர் மாவட்டம் ஆனைமலையிலுள்ள தொழிற்சாலையில் கொய்னாப் பொருட்களுக்கான மூலப்பொருட் களும், நீலகிரி மாவட்டம், நடுவட்டத்திலுள்ள தொழிற்சாலை யில் வாசனை எண்ணெய் பொருட்களுக்கான மூலப்பொருட்களும் பதனிடப்படுகின்றன. நறுமணப் பொருட்களுக்கான தைலங்கள் தோட்டங்களில் உள்ள கலங்களில் வடிக்கப்பட்டு, அதன் பிறகு அவ்வாறு வடிக்கப்பட்ட கச்சா எண்ணெய் நடுவட்டத்தில் உள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலம் தொழிற்சாலையில் சுத்தி கரிப்பு செய்து, தரக் கட்டுப்பாட்டுடன் விற்பனைக்கு அனுப்பப் படுகின்றது.

1.2, துறையின் தொழிலாளர்களின் பெரும்பான்மையோர் ஆதி திராவிடர்கள். (Adi-Dravidars, Scheduled Caste) பின் தங்கிய வகுப்பினர் (Backward Classes) ஆவர் என்பதைக் குறிப்பிடுவதில் இத்துறை பெருமையடைகிறது

சின்கோனாத் துறையின் நடவடிக்கைகள் இரு பெரும் பிரிவுகளாந் வகைப்படுத்தப்படுகின்றன. ஒரு பிரிவு மலேரியா நோயைத் தடுத்து உயிர்காக்க பயன்படுத்தப்படும் குனைன் சல்பேட் மருந்தையும், மற்றொரு பிரிவு, வணிக ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைத் தயாரிக்கிறது. மருந்து மற்றும் நறுமணத் தைல வகைத் தாவரங்களைப் பயிரிடும் பணியை 1950 ஆம் ஆண்டு முதல் இத்துறை மேற்கொண்டுள்ளது. துறையின் பணிகளைப் பலதிறப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துறை பள்ளி மாணவர்கட்கு இலவசமாக பல்பொடி வழங்க சத்துணவுத் திட்டத்தின் கீழ் பற்பொடி தயாரித்து கிராமப்புறக் குழந்தைகளுக்கு வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

2. தயாரிப்பு :

சின்கோனாப் பொருட்கள்.

2.1. அயல்நாடுகளின் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுத் தேவைகளுக்கேற்ப கொய்னாப் பொருட்களின் விற்பனை அமைந்துள்ளது இரண்டாம் உலகப் போரின்போது, இப்பொருட்களுக்கான தேவை அதிகமாக இருந்தது. போர் முடிந்ததும் இப்பொருட்களுக்கான தேவை குறைந்துவிட்டது. ஆனால் 1960 ஆம் ஆண்டிற்கும், 1970ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இப்பொருட்களின் தேவை அதிகரித்தது. உலக நாடுகளில் கொய்னாப் பொருட்களின் விற்பனை சீராக அதிகரித்து வரும் நிலையில் நம் நாட்டில் மலேரியா நோய் மீண்டும் தோன்றி பரவி வருவதால், இந்திய அரசு 1978 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் கொய்னாப் பொருட்களின் வெளிநாட்டு ஏற்றுமதிக்கு தடை விதித்தது. மாநில அரசு பலமுறை வேண்டியதற்கிணங்க, 1978–79, 1979–80; 1980–81; 1981–82, ஆண்டுகளில் மத்திய அரசு இப்பொருட்களை ஓரளவிற்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்தது. ஆனால் இத்தகைய கொய்னாப் பொருட்கள் தடையேதுமின்றி நிலையாக கிடைக்க வேண்டுமென்று அனைத்து நாடுகளும் கருதுவதால், இவற்றை ஏற்றுமதி செய்வதற்கு திடீரென்று தடை விதிக்கப்பட்டதன் காரணமாக நீண்டகாலமாக நிலவிய அனைத்து நாடுகளுக்கான விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டது, மேலும்தொடர்ந்து ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்ட காலத்தில், அனைத்து நாடுகளிலும். விற்பனை செய்ய இயலாததால், அதன் விளைவாக ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வது கடினமாகிவிட்டது. அதன் பின்பு மத்திய அரசு கொய்னாப் பொருட்களை ஏற்றுமதி செய்வதின் பேரிலிருந்த தடையை நீக்கி, ''பொது அனுமதியின்'' பேரில் ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்துள்ளது.



2.2 விற்பனை செய்யப்பட்ட கொய்னாப் பொருட்களின் அளவு மற்றும் அவற்றின் மூலம் கிடைத்த வருவாய் ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு:—

| ஆண்டு. (1) | விவரம். (2) | அளவு. (3) (கிலோ கிராமில்) | வருவாய் (4) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1985–86 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை .. (கொய்னா சல்பேட் மற்றும் உப பொருட்கள்) *(2,300 கிலோ—ரூ. 2.30 இலட்சம்.) | 3,174* | 8.84 |
| | வெளிநாட்டு விற்பனை குனைன் சல்பேட்) | 3,000 | 26.45 |
| | மொத்தம் .. | 6,174 | 35 29 |
| 1986–87 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை .. (குனைன் சல்பேட்) | 734 | 5,29 |
| | வெளிநாட்டு விற்பனை | 2,500 | 20.82 |
| | மொத்தம் .. | 3.234 | 26.11 |
| 1987–88 (உள்ளபடி) | உள்நாட்டு விற்பனை .. | 5.26 | 5.43 |
| | வெளிநாட்டு விற்பனை | 6,000 | 57.25 |
| | மொத்தம் .. | 6,521 | 62.68 |
| 1988–89 (மதிப்பிடப்பட்டது) | உள்நாட்டு விற்பனை .. | 1,000 | 12,32 |
| | வெளிநாட்டு விற்பனை | 1,400 | 12,84 |
| | மொத்தம் .. | 2,400 | 25.16 |
| 1989–90 மதிப்பிடப்பட்டது) | உள்நாட்டு விற்பனை | 1,000 | 12.32 |
| | வெளிநாட்டு விற்பனை | 4,000 | 45.48 |
| | மொத்தம் .. | 5,000 | 57.80 |

2.3. விலையை நிர்ணயிக்கும் பணியானது, தொழில்களின் உற்பத்தியை மதிப்பிடலும், விலையை நிர்ணயித்தலும் மெய்யும் குழுவின் ஆய்விற்குபின் கொய்னா பொருட்களின் விறபனை விலை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டது.

| பொருட்களின் பெயர். (1) | உற்பத்தி விலை. (2) | இந்திய அரசு நிர்ணயித்துள்ள விலை. (3) |
|---|---|---|
| | (விலைகள் கிலோ கிராம் ஒன்றிற்கு) ரூ. | ரூ. |
| 1. குனைன் சல்பேட் | 1,865.00 | 1,232.00 |
| 2. குனிடின் சல்பேட் .. | உற்பத்தி இல்லை. | 2,892.00 |
| 3. குனைன் ஹைட்ரோ குளோரைடு | 2,060.00 | .. |
| 4. சின்கோனா பெப்ரிப்யூஜ் .. | 277.80 | .. |

மைய அரசு இரு மாறுபட்ட விலையை, அதாவது மேற்கு வங்க சின்கோனாத் துறைக்கு கொய்னாப் பொருட்களின் விற் பனை விலையை அதிகமாகவும், தமிழ்நாடு சின்கோனாத் துறைக்கு கொய்னாப் பொருட்களின் விற்பனை விலையை குறைவாகவும் நிர்ணயித்துள்ளது.

தற்சமயம், இதய சிகிச்சைக்கு மருந்தாகப் பயன்படும் குனிடின் தேவை அதிகரித்து வருகிறது என்ற அறிகுறிக் தென் படுகிறது. தேவைப்படும் பெருமளவிலான குனிடின், கொய்னா சல்பேட்டிலிருந்து மட்டுமே தயாரிக்கப்படுகிறது, குனைன் உப்பு கள் சாராயம் மற்றும் சாராயமில்லாத மதுபானங்களில் ஒரு கூட்டுப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே எதிர்காலத்தில் பெரும்பாலும் கொய்னா சல்பேட்டின தேவை தொடர்ந்து இருக்குமென தோன்றுகிறது. கொய்னா பொருட் கள் உற்பத்தியின்போது கிடைக்கப்பெறும் துணைப் பொரு ளான சின்கோனா பெப்ரிப்யூஜிலிருந்து சுத்தமான 'சின்கோனிடின் தயாரிக்கும் பணி முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள்:

2.4. (அ) மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் விற்பனை வாயிலாக இத்துறை குறிப்பிடத் தகுந்த வருவாயை ஈட்டி வரு கிறது. மேற்குறிப்பிடப்பட்ட வருவாய் சீராக வளர்ந்து வருவ தோடு, இந்தியாவில், மேற்கண்ட தைலங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் சின்கோனாத் துறையும் ஒரு முக்கிய நிறுவன மாக விளங்குகிறது.



(ஆ) சின்பிரஸ் மற்றும் சினோரமா போன்ற வாசனை திரவிய பொருட்களின் தேவை அதிகாரித்துக் கொண்டே வருகிறது. மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் தேவை மக்களிடையே ஒரே சீராக இருந்துவருவதோடல்லாமல், இத்துறையில் தயா ரித்து விற்பனை செய்யப்பட்டு வரும் மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் உயர்ந்த தரத்தைச் சேர்ந்ததாகும்.

(இ) மருந்து மற்றும் நறுமணத் தைல விற்பனை மூலம் 1986–87 ஆம் ஆண்டு முதல், இத்துறைக்கு கிடைத்த வரு வாயின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1986–87 (உள்ளபடி) .. .. .. | 65.08 |
| 1987–88 (உள்ளபடி) .. .. .. | 64.77 |
| 1988–89 (எதிர்பார்க்கப்படுகிறது) .. | 81,88 |
| 1989–90 (எதிர்பார்க்கப்படுகிறது) .. | 81.88 |

2. துறையில் தயாரிக்கப்படும் பொருட்களின் விவரங்கள் பின்வருமாறு:

| பொருட்களின் பெயர். (1) | 1986–87 (உள்ள படி). (2) | 1987–88 (உள்ள படி), (3) | 1988–89 (திருத்திய (மதிப்பீடு. (4) | 1989–90 (திட்ட மதிப்பீடு). (5) |
|---|---|---|---|---|
| | | (அளவுகள் கிலோகிராமில் | | |
| 1. யூகப்லிப்டஸ் தைலம் | 6,030 | 4,076 | 6,000 | 6,000 |
| 2. ஜெரேனியம் தைலம் | 3.283 | 2,783 | 3.020 | 3,000 |
| 3. யூகலிப்டஸ்சிட்ரிபோ டோரா தைலம். | 4,831 | 4,565 | 6,000 | 5,000 |
| 4. ஜாவா சிட்ரோ நெல்லா தைலம் | 4.158 | 3,230 | 7,500 | 4,000. |
| 5. ரோஸ்மேரி தைலம் | 85 | 86 | 125 | 100 |
| 6. ஒசிமம் கிராட்டிசிமம் தைலம். | 21 | 44 | 35 | 20 |
| 7. பச்சோலி தைலம் | 1 | .. | 12 | 12 |
| 8 தொடபெட்டா மிஸ்ட் | 9 | 15 | 15 | 15 |
| 9. சினோரமா .. | 9 | 15 | 15 | 15 |

1989 ஏப்ரல் 20

| பொருட்களின் பெயர். (1) | 1986–87 (உள்ள படி). (2) | 1987–88 (உள்ள படி). (3) | 1988–89 (திருத்திய மதிப்பீடு). (4) | 1989–90 (திட்ட மதிப்பீடு) (5) |
|---|---|---|---|---|
| | | (அளவுகள் கிலோகிராமில்) | | |
| 10 சினோமாஸ் .. | 46 | 33 | 25 | 25 |
| 11 சின்ஸ்பிரே (லிட்டர்களில்) .. | 300 | 270 | 250 | 250 |
| 12 சின்பிரஷ் (ஆயிரம் லிட்டர்களில்) | 102 | 125 | 150 | 150 |
| 13 டயஸ்ஜெனின் .. | 185 | 893 | 1,500 | 1,500 |
| 14 கஃபீன் .. | .. | 1,331 | 2,500 | 2,500 |
| 15 கற்பூரத் தைலம் | 163 | 15 | 250 | 100 |
| 16 கற்பூர வில்லைகள் (எண்கள் ஆயிரத்தில்) | 350 | 29 | 200 | 200 |

2.5. இத்துறையில் தயாரிக்கப்படும் இந்த இயற்கை கற்பூரம் மிக நல்ல தரத்தை சேர்ந்ததுடன் மருத்துவத் தயாரிப்பிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

3. மலைத் தோட்டங்கள்:

பல்வேறு உற்பத்திப் பொருட்களைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களைப் பெற இத்துறையின் மலைத் தோட்டங்களில் அப்பயிர்களைப் பயிரிடுவதற்கு பல்வேறு பணிகளை இத்துறையே மேற்கொண்டுள்ளது. 1988 டிசம்பர் 31 ஆம் நாளன்று 1967 ஹெக்டேர் பரப்புள்ள சின்கோனா நிலங்களையும், மற்றும் 1,645 ஹெக்டேர் பரப்புள்ள மருந்து மற்றும் நறுமணத் தைல வகைப் பயிர்கள் கொண்ட நிலங்களையும



1989 ஏப்ரல் 20

கொண்டுள்ளது.
இத்துறை தனது நேரடி மேற்பார்வையில்
இவற்றின் விவரம் பின்வருமாறு:

| பயிர்கள். (1) | நீலகிரி. (2) | கோவை மாவட்டத்திலுள்ள ஆனைமலை (3) | திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள கொடைக்கானல். (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|
| | | (நிலப்பரப்பு ஹெக்டேர்களில்.) | | |
| சின்கோனா .. | 507 | 1,460 | .. | 1,967 |
| மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் | 877 | 527 | 241 | 1,645 |
| மொத்தம் .. | 1,384 | 1,987 | 241 | 3,612 |

மலைத் தோட்டத் திட்டங்கள்:

1986–87 மற்றும் 1987–88 ஆகிய ஆண்டுகளில் சின்கோனா புதியதாகப் பயிரிடப்படவில்லை. கொய்னாப் பொருட்களின் தேவை பெருகி வருவதன் அடிப்படையில், 1988–89 ஆம் ஆண்டில் 102 ஹெக்டேர் நிலப்பரப்பில் சின்கோனா பயிரை இத்துறை சாகுபடி செய்தது. 1989–90–ல் 100 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1987–88 ஆம் ஆண்டில் ஜெரேனியம், யூகலிப்டஸ் சிட்ரியோடாரா, ஜாவா சிட்ரோனெல்லா போன்ற நறுமண வாசனை தைலப் பயிர்களை 100.55 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிர் செய்யப்பட்டது. 1988–89 ஆம் ஆண்டில் அப்பயிர்கள் 49.54 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டது. 1989-90 ஆம் ஆண்டில் 75 ஹெக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர்கள் சாகுபடி செய்யப்படும்.

5. ஆராய்ச்சி:

அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடிய மருந்து, நறுமணத் தைலப் பயிர்களையும், அனைய மருந்து மற்றும் நறுமண செடி வகைகளை வளர்க்கும் முறைகளை மேம்படுத்துவதிலும் மற்றும் நோய் தாக்குதலை சமாளிக்கும் வகையிலும், ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சின்கோனா மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் ஆகியவற்றைக் குறித்து முறையான தீவிர ஆராய்ச்சிகள் நடத்த ஆராய்ச்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

## 6. தொழிளாலர் நலன் :

6.1 தொழிலாளர்கள் இத்துறையில் உற்பத்திப் பணிகளில்
பெரும் பங்காற்றி வருகின்றனர். மலைத் தோட்டங்கள் அமைக்
கும் திட்டங்கள் ஆகியவை செவ்விய வகையில் செயல்படுவதில்
நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு
நிலவுவதற்கும், தொழிலாளர் நலனைக் காப்பதற்கும் அதிக
கவனம் செலுத்தப்படுகிறது. ஆடவர், மகளிர் ஆகிய இருபால்
தொழிலாளர்களுக்கும் சமமான ஊதியம் வழங்கப்படுவதோடு,
விலைவாசி புள்ளியின் அடிப்படையில் அகவிலைப்படி வழங்கப்படு
கிறது. வயது வந்த தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு கூலியாக
ரூ. 14.75 (ரூபாய் பதினான்கு மற்றும் பைசா எழுபத்தைந்து
மட்டும்) வழங்கப்படுகிறது. 1,281 தரமான தொழிலாளர்கள்
குடியிருப்புகள் தற்போதுள்ள தொழிலாளர்களுக்கு வேண்டி
யுள்ளது. இதனை கருத்திற் கொண்டு புதிய குடியிருப்புகளைக்
கட்டுவது மற்றும் பழைய குடியிருப்புகளைப் புதுப்பித்தல்
போன்ற பணிகளை முறையாக மேற்கொண்டு முடிக்கப்பட்டு
வருகிறது. தரமான தொழிலாளர் குடியிருப்புகள் கட்டும் பணி
மாநிலத் திட்டப் பணிகளின் கீழ் தொடங்கப்பட்டது. 1987–88
ஆம் ஆண்டின் இறுதி வரையில் மொத்தம் 561 தரமான தொழி
லாளர் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. அவற்றின் விவரங்
கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1976–77-ம் ஆண்டு இறுதி வரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள். | 141 | |
| 1977–78 முதல் 1987–88 வரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள். | 420 | 561 |
| 1988–89 ஆம் ஆண்டில் குடியிருப்புகள் கட்டும் பணியில் உள்ளவை. | | 85 |
| 1989–90 ஆம் ஆண்டு முதல் கட்டப்பட உள்ள குடியிருப்புகள். | | 635 |
| மொத்தம் .. | | 1,281 |

1987–88 ஆம் ஆண்டு இறுதி வரை 329 தொழிலாளர்
குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்
தின் கீழ் 1989–90 ஆம் ஆண்டில் 191 தொழிலாளர் குடியிருப்பு
கள் மற்றும் 21 பணியாளர் குடியிருப்புகளுக்கு மின்வசதி
அளிக்க ரூ. 3.60 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இதுவரை 561 தரமான தொழிலாளர் குடியிருப்புகளை இத்
துறை கட்டி முடித்து மேலும் நடப்பு நிதி ஆண்டில் 85 குடி
யிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. புதிய தொழி
லாளர் குடியிருப்புகளில் மின்வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர்





ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு
ஆண்டும் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு
தொழிலாளர் குடியிருப்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.
ஆண்டு பழுது பார்க்கும் பணிகள் (Annual Repairs) அல்லா
மல், தொழிலாளர் குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுது பார்க்கும்
பணிகள் (Special Repairs) குடியிருப்புகளில் உள்ள பழு
தடைந்த பொருட்களை புதுப்பித்தல் போன்ற பணிகளும் சால
வாரியாக மேற்கொள்ளப்படுகிறது.

6.2. பல்வேறு பிரிவுகளில் உள்ள துறையில் மருந்தகங்கள்
மற்றும் ஆனைமலைப் பிரிவிலுள்ள அனைத்து வசதிகளுடன்கூடிய
அரசு மருத்துவமனை ஆகியவற்றின் வாயிலாக மருத்துவ வசதி
களும் இத்துறையின் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரு
கின்றன. நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் உள்ள அரசு மருத்துவ
மனையில் சின்கோனா தொழிலாளர்களுக்கென்றே 5 படுக்கை
கள் தனியாக ஒதுக்கப்பட்டு உள்ளன. ஊராட்சி ஒன்றியங்களி
லுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவ
பிரிவு தொழிலாளர்களுக்குத் தேவையான நல்வாழ்வு மருத்துவ
வசதிகளைச் செய்து கொடுக்கின்றன. ஆனைமலை மற்றும்
நீலகிரியில் நோயாளிகளை மருத்துவமனைகளுக்குக் கொண்டு
செல்ல நோயாளி ஊர்தியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

6.3. அரசு சின்கோனாத் தோட்டங்களில் உள்ள குழந்தை
கள் காப்பகத்தில் சேர்க்கப்பட்டுள்ள இத்துறையின் தொழிலாளர்
களது குழந்தைகளுக்கு தொழிலாளர் நல சட்டப்படி உணவளிக்கப்
பட்டு வருகிறது.

6.4. தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை செய்யும்
இடத்திலேயே தினமும் இலவச தேநீர் வழங்கப்படுகிறது.

6.5. இத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு
தொழிலாளர் நலன் சட்டங்களும் அவற்றின் கீழ் வரும் விதி
களும் பொருந்தும். ஆண்டுதோறும் பணியாளர்கள் ஊதியம்
மற்றும் தொழிலாளர்களின் தினக்கூலி சம்பளத்துடன் கூடிய
விடுப்பு. பேறுகால சலுகைகள் சம்பளத்துடன் கூடிய நோய்க்
கால விடுப்பு, ஓய்வுக்கால நன்கொடை வருங்கால சேமநல
நிதியில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு அரசு சந்தாத் தொகை
அளித்தல், கம்பளியும் (Rugs) மற்றும் மழைக் கம்பளியும்
(Rain comblies) அளித்தல், இலவச வீட்டு வசதி அளித்தல்
போன்ற சலுகைகளுக்காக துறையின் மொத்த செலவிலிருந்து
60 விழுக்காடு செலவு செய்யப்படுகிறது. தொழிலாளர் நலச்
சட்டப்படி கட்டப்பட வேண்டிய தொழிலாளர் குடியிருப்புகளும்
தற்போதுள்ள குடியிருப்புகளை புதுப்பித்தல் மற்றும் பாதுகாக்கப்
பட்ட குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகள் மாநில திட்டப் பணி
களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1989 ஏப்ரல் 20

1989 பொங்கல் பண்டிகையின்போது அனைத்து நிரந்தர தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 400 என்ற அளவில் கருணைத் தொகை (Ex-gratia amount) இத்துறையால் வழங்கப்பட்டது.

7. துறையின் நிதி நிலைமை:

அயல் நாட்டுச் சந்தைகளில் கொய்னாப் பொருட்கள் விலை ஏற்ற இறக்கம், ஏற்றுமதி விற்பனைக்கு மத்திய அரசு விதித்த தடை ஆகியவற்றின் விளைவாக இத்துறையின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. 1986–87 ஆம் ஆண்டில் மூல தனத்தின் மீதான வட்டித் தொகை ரூ. 202.75 இலட்சங்கள். செலுத்தப்பட்ட பிறகு ரூ. 103.24 இலட்சங்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1987–88 ஆம் ஆண்டில் மூலதனத்தின் மீதான உயர்ந்தபட்ச வட்டித் தொகை ரூ. 224.86 இலட்சங் கள் செலுத்தப்பட்ட பிறகு ரூ. 218.29 இலட்சங்கள் (சென்னை மாநில கணக்கரால் ஆய்வு செய்யப்பட வேண்டிய 1987–88 ஆம் ஆண்டின் அமைந்த படிவக் கணக்குகளின்படி) இழப்பு ஏற்படும். குறிப்பிட்ட நிதியாண்டில் புதிய துறைக்கு கள் கட்டுவதற்கு கருவிகள் மற்றும் தளவாடங்கள் கட்டிடங் கள், வாகனங்கள் முதலியவற்றை வாங்குவதற்காக மரச்சாமான் படும் வருவாய் மற்றும் மூலதனச் செலவுத் செலவிடப் தைய ஆண்டின் துறையின் வருவாய் மற்றும் தொகைகள் முந் யுடன் சேக்கப்பட்டு அமைந்த படிவக் மூலதன தொகை பிக்கப்படுகின்றன. அந்த மொத்த கணக்குகளில் காண தொகைக்கு அரசால் அனுமதிக்கப்படும் மூலதன கணக்குத் தொகை செலுத்தப்படுகிறது. இந்த விகிதாசாரப்படி வட்டித் அளவில் வட்டித் தொகை செலுத்த முறைப்படி மிக அதிக வேண்டியிருந்தது.

மேற்குறிப்பிடப்பட்ட முறையை மாற்றியமைக்க கருத்துரு சமர்ப்பித்து அரசு விரிவான ஆய்வுக்குப் அரசுக்கு பிப்ரவரித் திங்களில் குறிப்பிட்ட நிதியாண்டில் பின் 1989 வருவாய் செலவுத் தொகைக்கு மட்டும் வட்டித் செலவிடப்படும் ஆணை பிறப்பித்துள்ளது. இந்த புதிய தொகை செலுத்த ஆம் ஆண்டில் ரூ. 65 இலட்சங்கள் முறைப்படி 1988–89 டும வட்டித் தொகையாக விதிக்கப்படும். (மதிப்பிடப்பட்டது) மட் துறையின் மொத்தச் செலவில் 21 விழுக்காடுகளாகும். வட்டித் தொகை 1988இல் ஏற்பட்ட இழப்புத் தொகையான ரூ. 218.29 இலட் சத்துக்கெதிராக ரூ. 79.54 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) 1987– 1988–89 இல் இழப்பு ஏற்படும்.

1989–90 இல் மூலதனத்தின் மீதான வட்டி ரூ. 67.11 இலட் சங்கள் (மதிப்பிடப்பட்டது) என விதிக்கப்பட்டு அவ்வாண்டின் இழப்புத் தொகை ரூ. 87.43 இலட்சங்கள் (மதிப்பிடப்பட்டது) என்று மதிப்பிடப்படுகிறது.



1989 ஏப்ரல் 20

1988 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31 ஆம் நாளின்படி நிலையான சொத்துக்கள் ரூ. 17.95 கோடி. பண்டகசாலை இருப்புக்கள் முடிக்கப்பட்டப் பொருட்கள் நடைபெற்றுவரும் பணிகள் தேய்மான நிதி, இலாப நட்டக் கணக்கு சில்லறை கடன்கள் ஆகியவற்றின் வாயிலாக ரூ. 6.55 கோடி உட்பட இத்துறையின் சொத்துக்களின் மதிப்பு ரூ. 24.50 கோடியாகும்.

இத்துறையின் நிர்வாகம் கடந்த சில ஆண்டுகளாக நல்ல நிலைமையில் இல்லை. 1979–80 வரை இத்துறையின் திரண்ட லாபம் ரூ. 1.47 கோடியாகும். மேற்கண்ட லாபமாகிய ரூ. 1.47 கோடி படிப்படியாக குறைந்து நஷ்டம் ஏற்பட்டு தற்போது 1980–81 ஆம் ஆண்டிலிருந்து 1986–87 வரை இத்துறையின் திரண்ட நஷ்டமானது ரூ. 2.68 கோடியாகவும், 1987–88 மற்றும் 1988–89 ஆண்டுகளின் மதிப்பிடப்பட்ட நஷ்டமானது ரூ. 2.98 கோடியாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே இத்துறையினை நன்கு நிர்வகிப்பதற்காக ஒரு தனியான கழகமாகவோ அல்லது தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் ஒரு அங்கமாகவோ செயல்படுத்தலாமா என அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

8. இத்துறையின் வளர்சித் திட்டங்கள் :

8.1 குனிடின் சல்பேட், சின்கோனிடின் தயாரித்தல், தேயிலை கழிவிலிருந்து "கஃபீன்" தயாரித்தல் போன்ற பணிகள் இத்துறையின் அண்மைக்கால முக்கியச் சாதனைகளாகும். குடும்ப நலத் திட்டத்திற்காகத் தயாரிக்கப்படும் கருத்தடை மாத்திரைகளில் உள்ள "கார்டிசான் ஸ்டிராய்டு ஹார்மோன்" போன்ஸ் வற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொருளான "டயறஜெனின்" என்ற பொருளை ஆனைமலையில் உள்ள தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது. சொசுக்களை விரட்டும் "சினோமாஸ்" என்ற களிம்பையும், "சின்ஸ்ப்ரே" என்ற தெளிப்பான் மருந்தையும் தயாரித்து விற்பனை செய்தல், "சினோரமா" "தொட்டபெட்டா மிஸ்ட்" ஆகிய வாசனைத் திரவியங்களைத் தயாரித்தல் போன்ற இன்றியமையாத பணிகள் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

8.2 (அ) கொய்னா பொருட்களின் தேவையைக் கருத்திற் கொண்டு ஆனைமலையிலுள்ள கொய்னா தொழிற்சாலையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட சின்கோனாப் பட்டைப் பதனிடப்படும் பணி 1987 சனவரி முதல் மீண்டும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. துறையின் தோட்டங்களிலிருந்து கொய்னாப் பொருட்கள் தயாரிக்கத் தேவையான சின்கோனாப் பட்டை என்னும் மூலப்பொருள் போதுமான அளவு கிடைக்கப்பெறாத தால் கொய்னாப் பொருட்கள் தயாரிப்புப் பணி தொழிற்சாலையில் முழு அளவில் நடைபெற இயலவில்லை. எனவே, வெளி

நாடுகளிலிருந்து சின்கோனாப் பட்டையை இறக்குமதி செய்து தொழிற்சாலைப்பணி முழு அளவில் இயங்க வேண்டும் என்ற கருத்து ஆய்வில் உள்ளது.

(ஆ) நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார், சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டங்களில் உள்ள கிராமியப் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பற்பொடி வழங்குவதற்காக பற்பொடி தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது,

(இ) 1988-89 ஆம் நிதியாண்டில் பற்பொடி தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்வதன் மூலமாக வருவாய் ரூ. 18.00 இலட்சங்கள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்துறையில் தயாரித்து விநியோகம் செய்யப்படும் பற்பொடியின் தரம் மிக உயர்ந்த ரகமாகும்.

8.3. மேற்கூறிய அபிவிருத்திப் பணிகள் யாவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டப் பணிகளின் கீழ் அமுலாக்கப்பட்டு வருகின்றன:—

மாநிலத் திட்டப் பணிகள் :

1. சின்கோனாப் பயிரை முனைப்பு சாகுபடி மற்றும் பதியன் முறையில் பயிரிடுதல்.

2. மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகள் வாணிப முறையில் பயிரிடுதல்.

3. மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடி வகைகளின் வளர்ச்சிக்காக முனைப்பு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

4. தொழிற்சாலையில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக தொழிற்சாலைக்குத் தேவையான கருவிகள் வாங்குதல்.

5. நீலகிரி மாவட்டத்தில் கிராமிய தொழிற்பிரிவுகளில் ஒன்றாக சின்கோனா துறையில் தேயிலைக் கழிவிலிருந்து "கஃபீன்" தயாரித்தல்.

8.4. மத்திய அரசின் நிதியுதவியுடன் இயங்கி வந்து தற்போது மாநிலத் திட்டப்பணிக்கு மாற்றப்பட்டத் திட்டங்கள்:

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

(1) இத்திட்டத்தின் கீழ் ஜாவா சிட்ரோனல்லக புல் பயிரிட்டு அதனின்று தைலம் எடுக்கும் பணி செயல்படுத்தப்படு



கிறது. 1983-84 ஆம் ஆண்டு வரை 80 எக்டேர் நிலப்பரப்பில் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

(2) டயஸ்கோரியா பயிரிடுதல் மற்றும் அதிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 3 டன் டயஸ்ஜெனின் தயாரித்து பதப்படுத்துவதற்கு தொழிற்சாலை நிறுவுதல். 1987–88 ஆம் ஆண்டு வரை 125.60 ஹெக்டேர் நிலப்பரப்பில் டயஸ்கோரியா பயிரிடப்பட்டுள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் 5 எக்டேர் நிலப்பரப்பில் டயஸ்கோரியா பயிரிடப்பட்டுள்ளது. வரும் 1989–90 ஆம ஆண்டில் இப்பயிர் 5 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்படும் ஸ்டிராய்டு தொழிற்சாலையில் இதுவரை 1,098 கிலோ கிராம் டயஸ்ஜெனின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

(3) திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்டம் கொடைக்கானல் தாலுக்கா மேல்பழனிமலைப் பகுதியில் உள்ள பேரிஜம் மற்றும் பெருமாள் மலை (பெரும்பள்ளம்) ஆகிய இடங்களில் ஜெரேனியம் பயிரிடுதல். மொத்தம் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் விவரங்கள் வருமாறு:

(1) பெருமாள் மலை .. 201 ஹெக்டேர்.

(2) மேல் பழநிக்குன்று (பேரிஜம்) 40.25 ஹெக்டேர்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஜெரேனியம் தோட்டங்கள் பராமரிக்கப்பட்டு எண்ணெய் தயாரிக்கப்படுகின்றன. பெருமாள் மலைப் பகுதியில் ஏற்கனவே, ஜெரேனியம் பயிரிடப்பட்டு, அதன் ஆயுட்காலம் முடிந்த 5 ஹெக்டேர் நிலப்பரப்பில் மீண்டும் 1988–89 ஆம் ஆண்டில் ஜெரேனியம் பயிரிடப்பட்டது.

9. திட்டப் பணிகளின் கீழ் செலவிடப்பட்டுள்ள மொத்த தொகையின் விவரம் வருமாறு:—

| ஆண்டு. | மாநிலத் திட்டப் பணிகள். | மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சங்களில்). | | |
| 1986–87 (உள்ளபடி) .. .. | 61.21 | 2.03 | 0.06 | 53.32 |
| 1987–88 (உள்ளபடி) .. .. | 60.06 | 1.92 | .. | 61.98 |
| 1988–89 (திட்ட மதிப்பீடு) .. | 56.34 | 2.20 | .. | 58.44 |
| 1988–89 (திருத்திய மதிப்பீடு) .. | 49.35 | 2.22 | .. | 51.57 |
| 1989–90 (திட்ட மதிப்பீடு) .. | 48.71 | 2.28 | .. | 50.99 |



10. வரவு–செலவுத் திட்டம்:

| விவரங்கள். | 1987–88–இல் உள்ளபடி. | 1988–89 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1988–89 திருத்திய மதிப்பீடு. | 1989-90 (வரவு-செலவுத்திட்ட-மதிப்பீடு). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சங்களில்) | | |
| கோரிக்கை எண். 25. | | | | |
| சின்கோனா 2407 மலைத் தோட்டங்கள் நெறிமுறைப்படுத்துதல் .. | 21.41 | 19.71 | 22.75 | 31.17 |
| மலைத் தோட்டங்கள் (நீலகிரி மற்றும் ஆனைமலை) .. .. | 80.36 | 69.62 | 75.56 | 71.74 |
| தொழிற்சாலைகள் (மருந்து மற்றும் நறுமணத்தைலத் தொழிற்சாலை, நடுவட்டம் அரசு கொய்னாத் தொழிற்சாலை, ஆனைமலை) .. .. | 31.86 | 36.33 | 36.27 | 36.10 |
| விற்பனை .. .. .. | 2.98 | 3.02 | 2.99 | 3.02 |
| திட்டங்கள் (ஆராய்ச்சித் திட்டங்கள், மாநிலத் திட்டங்கள்) .. .. | 81.28 | 82.67 | 80.26 | 80.28 |
| வட்டி .. .. .. .. | 2,53.45 | 2,00.00 | 2,42.41 | 2,25.00 |
| மொத்தம் .. .. .. | 4,71.34 | 4,11.35 | 4,60.24 | 447.31 |
| கோரிக்கை எண். 56. | | | | |
| 4407. மூலதனச் செலவுக் கட்டிடங்கள் | 10.41 | 5.00 | .. | 3.60 |
| இயந்திரத் தளவாடங்கள் .. | 0.87 | 2.00 | 2.00 | 2.00 |
| மொத்தம் .. .. .. | 11.28 | 7.00 | 2.00 | 2.00 |
| பெருமொத்தம் .. .. .. | 4,82.62 | 4,18.35 | 4,62.24 | 4,52.91 |

## இணைப்பு-VII

### தமிழ்நாட்டில் வீட்டுவசதி.

### 1989—90'

### மானிய கோரிக்கை எண். 33.

### வீட்டு வசதி.

மூன்னுரை:—

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்களது திறனுக்கு ஏற்ற குடியிருப்புகளை அமைத்துத் தருவதே அரசின் வீட்டுவசதிக் கொள்கையாகும். இதற்சென பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள், 'வீடுகள்/மேம்படுத்தப்பட்ட மனைகளை ஏற்படுத்தித் தர ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இது தவிர, பல்வேறு சமூக நலப் பிரிவு மக்களையும் தங்கள் வீடுகளை கட்டிக்கொள்ள ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலம் நிதியுதவி பெற்றுத் தருவதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படுகின்றன. வீடு கட்டும் துறையில் பொது நிறுவனங்கள் ஈடுபடுந்து வீடுகள் மற்றும் மனைகளின் பொதுவான விலை நிலையை தனியார் துறையிலும் கட்டுப்படுத்த உதவுகிறது,

மேற்சொன்ன கொள்கையை நிறைவேற்றும் முகத்தான் கீழ்வரும் மிக முக்கியமான நடைமுறைகளை அரசு நிர்ணயித்துள்ளது:—

(அ) பல்வேறு வருமான வரம்பு உள்ளவர்கள், பயன் பெறும்வகையில், வீடுகளையும், மனைகளையும், ''உடனடி விற்பனை'' மற்றும் ''தவணை முறை விற்பனை'' அடிப்படையில் உருவாக்கித் தருவது.

(ஆ) நிலங்களை மேம்படுத்தி அத்தியாவசியமான அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டுமனைகளை ஏற்படுத்துவது.

(இ) தனிப்பட்டவர்களே தங்கள் தேவைக்கு ஏற்றவாறு வீடுகளை கட்டிக் கொள்ளத் தேவையான நிதி உதவிகளை நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்று உதவுவது.

(ஈ) குடிசைப் பகுதிகளை அகற்றி, அப்பகுதிகளில் அடுக்கு குடியிருப்புகளை அமைத்து குடிசைவாழ் மக்களுக்கு மறு வாழ்வளிப்பது.

(உ) குடிசைப்பகுதிவாழ் மக்கள் தங்கள் குடியிருப்புகளை மேம்படுத்திக்கொள்ள மேம்பாட்டுக் கடனுதவி அளிப்பது.

(ஊ) நகர்ப்புற மற்றும் கிராமப்புற வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது உறுப்பினர்கள் வீடு கட்டிக்கொள்ளத் தேவையான கடனுதவியை அளிக்கத்தக்க நிதி ஆதாரங்களுக்கு வழிவகை செய்து கொடுப்பது.



(எ) அரசு ஊழியர்களுக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கென வீடுகளைக் கட்டுவது.

(ஏ) வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்கள் தங்களுக்குத் தேவையான வீடுகளை அமைத்துக் கொள்ளும் வகையில் அரசு உதவி செய்வது.

மேற்கூறப்பட்ட திட்டங்கள் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட கீழ்வரும் மூன்று பொது நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன:—

(1) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.

(2) தமிழ்நர்டு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

(3) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள.

### தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.

திட்டமிட்ட வீட்டுவசதித் திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு 1961-ம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் உருவாக்கப்பட்டது. மேம்படுத்தப்பட்ட மனைப் பிரிவில் தேவையான வசதிகளுடன், குறைந்த, நடுத்தர மற்றும் உயர் வருமானப் பிரிவினரான அனைத்து சமூக பிரிவினரும் வீடு களைப் பெற வேண்டும் என்ற நோக்கில் வீட்டுவசதி வாரிய செயல்முறை வகுக்கப்பட்டுள்ளது.

நகரங்களில் பல்வேறு விதமான வீட்டுவசதி திட்டங்களை பெருமளவில் உருவாக்கி சுமார் 1 64,010 வீடுகளை தமிழ்நாடு முழுவதிலும் வாரியம் ஏற்படுத்தி உள்ளது. 55 சதவீதம் வீடுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கும், 45 சதவீதம் வீடுகள் மத்திய வருவாய் பிரிவு மற்றும் உயர்தர வருவாய் பிரிவினருக்கும் உருவாக்குவதே வாரியத்தின் தற்போதைய கொள்கையாகும். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அதன் துவக்க காலத்திலிருந்து 31-12-1988 முடிய பல்வேறு வருமான வரம்பு அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

### குறைந்த வருவாய் பிரிவினருக்கான வீட்டுவசதி திட்டங்கள்.

ஆண்டு வருமானம் ரூ. 8.401—க்கும் ரூ. 18,000—க்கும் இடையேயுள்ள பிரிவினருக்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு குடியிருப்பின் உச்ச வரம்பு விலை ரூ. 30,000 ஆகும்.

தவணை முறை நிபந்தனைப்படி ஒதுக்கீடுதாரர்கள் முதல் கட்டமாக 1/3 பங்குத் தொகையைச் செலுத்தி எஞ்சிய விலையை 15 வருடங்களில் மாதத் தவணைகளில் செலுத்தலாம். ஹட்கோவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நிதியுதவியின் வட்டி வீதப்படி இந்திட்டத்திற்கு வட்டி விகிதம் 8.5 சதவீதம் முதல் 9 சதவீதம் வரை மாறுபடுகிறது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 29,997 வீடுகள் 31-12-1988 முடிய கட்டியுளளது. மேலும் ரூ. 100 இலட்சம் அரசு உதவியுடனும் மற்றும் ஹட்கோ நிதி உதவியுடனும் 1989-90 ஆண்டிற்கு6,884 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

## நடுத்தர வருவாய் மற்றும் உயர் வருவாய் பிரிவினருக்கான வீட்டு வசதி திட்டங்கள்

நடுத்தர வருவாய் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டங்களை ரூ. 18,001 முதல் ரூ. 30,000 வரை ஆண்டு வருமானம் பெறுபவர்களின் நலனுக்காக செயற்படுத்தி வருகின்றன. இப்பிரிவின் கீழ் கட்டப்படும் பிரிவு I (எம்.ஐ.ஜி.1) மற்றும் பிரிவு II (எம்.ஐ.ஜி. 2) குடியிருப்பின் உச்சவரம்பு விலை முறையே ரூ. 60,000 மற்றும் ரூ. 1,00,000 ஆகும். இப்பிரிவின் கீழ் கட்டப்படும் எம்.ஐ.ஜி. I மற்றும் II ஆகிய குடியிருப்பின் விலையில் 30 சதவீதம் முன்வைப்புத் தொகையாகவும், மீதத் தொகை 13 ஆண்டுகளில் (இரு ஆண்டு திட்ட காலம் நீங்கலாக) 11 சதவீதம் மற்றும் 12½ சதவீதம் வட்டி விகிதத்தில் மாதத் தவணைகளில் ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து பெறப்படும்.

உயர்வருவாய் பிரிவினருக்கான வீட்டுவசதி திட்டங்களை ரூ. 30,000-க்கு மேல் ஆண்டு வருமானம் பெறுபவர்களின் நலனுக்காக செயற்படுத்தி வருகின்றன. இப்பிரிவின் கீழ் கட்டப்படும் குடியிருப்பின் உச்சவரம்பு விலை ரூ. 2,50,000 ஆகும். இப்பிரிவின் கீழ் கட்டப்படும் குடியிருப்பின் விலையில் 30 சதவீதம் முன்வைப்புத் தொகையாகவும், மீதத்தொகை 13 ஆண்டுகளில் (இரு ஆண்டு திட்ட காலம் நீங்கலாக) 13½ சதவீதம் வட்டி விகிதத்தில் மாதத் தவணைகளில் ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து பெறப்படும்.

31-12-1988 வரை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 33,931 வீடுகள் நடுத்தர வருவாய் பிரிவு மற்றும் உயர்தர வருவாய் பிரிவுகளுக்காகக் கட்டியுள்ளது. 1989-90-ம் ஆண்டிற்கு 3,352 நடுத்தர வருவாய் பிரிவு வீடுகளும் 1,972 உயர் தர வருவாய் பிரிவு வீடுகளும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1989-90 ஆம் ஆண்டு ரூ. 743 இலட்சங்கள் செலவு செய்ய வாரியம் திட்டமிட்டுள்ளது.





## தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், சென்னை பெருநகர் உட்பட, மற்ற நகர்புறங்களான, கோவை, மதுரை சேலம், திருச்சி, வேலூர், தூத்துக்குடி, திருப்பூர், திருநெல்வேலி, ஈரோடு ஆகிய நகரங்களில், மக்கள்தொகை பெருக்கம் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு உலக வங்கியின் உதவியுடன் வீட்டுமனை மற்றும் பணிக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 246.41 கோடியாகும். இத்திட்டம் 1988-ம் ஆண்டு முதல் 1992-ம் ஆண்டிற்குள் நிறைவேற்றப்படும். 1989-90-ம் ஆண்டில் 38 கோடி ரூபாய் செலவில் அரசின் உதவித் தொகையான ரூ. 7 கோடியுடனும், நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (ஹட்கோ) மற்றும் வீட்டுவசதி வாரியத்தின் சுழல் நிதியிலிருந்தும் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1989-90-ம் ஆண்டில் 10,841 மனைகள் அபிவிருத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகை வீட்டு வசதி திட்டம்

தமிழக அரசுப் பணியாளர்களுக்கு மாநிலத் தலைநகர் மற்றும் மாவட்ட, கோட்ட வருவாய் பிரிவு தலைமையிடங்களில் வாடகைக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசிற்காக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இத்திட்டத்தை நிறைவேற்றுவதுடன் கட்டிடங்களின் பராமரிப்பையும் கவனித்துக்கொண்டு வருகிறது. இக்கட்டிடங்கள் அரசுக்குச் சொந்தமானவை 31-12-1988 வரை இத்திட்டத்தின் கீழ் 20,164 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 1989-90-ம் ஆண்டில் ரூ. 700 இலட்சம் செலவில் 1,012 வீடுகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## நிலம் கையெடுப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

நிலம் கையெடுப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் முன்னதாகவே, பெரிய அளவில் நிலத்தை கையெடுப்பு செய்வதன் நோக்கம் நியாயமான விலையில் வீட்டுவசதிக்கு நிலம் கிடைக்க வகை செய்வதும், நிலத்தின் விலையை நிலை நிறுத்தவும் மற்றும் வளரும் நகர்புறங்களின் நெருக்கடியை குறைப்பதும் ஆகும்.

இத்திட்டத்திற்காக 1989-90-ம் ஆண்டிற்கு ரூ.1400 இலட்சம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் செலவு செய்ய உத்தேசித்துள்ளது. இதில் ரூ. 150 இலட்சம் அரசு உதவியுடனும் எஞ்சிய தொகையை வாரியம் பிறவழிகளின் மூலம் பெற்று செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

### வீட்டு வசதி திட்டங்களுக்கு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழக (HUDCO) நிதியுதவி

வீட்டுவசதித் திட்டங்களுக்கென பல்வேறு வீட்டுவசதி நிறுவனங்களிலிருந்து பெறும் கடனுதவியிற் "அட்கோ" வின் பங்கு மிகவும் முக்கியமானதும், கணிசமானதும் ஆகும். அட்கோ கடனுதவி, அரசு உத்திரவாதத்தின் அடிப்படை அல்லது வாரியச் சொத்துக்களை அடமானம் வைப்பதின் மூலம் பெறப் படுகிறது.

### தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

1971 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் துவங்கப்பட்டது. இந்த வாரியத்தின் முக்கிய குறிக்கோள் சென்னை மாநகரில் உள்ள குடிசைப் பகுதிகளை சீரான முறையில் அகற்றுவதாகும். 1971ஆம் ஆண்டில் சமூக பொருளாதார ஆய்வு நடத்தியதன் மூலம் 1202 குடிசைப் பகுதிகளை வாரியம் கண்டறிந்தது. சுகாதார மற்ற சுற்றுப்புறச் சூழலில் 87,210 குடிசைகளில் 1,63,804 குடும்பங்கள் சென்னை நகரில் வசித்து வருவது கண்டறியப் பட்டது.

இந்த வாரியம் கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது:—

1. குடிசைப்பகுதி மாற்று திட்டம்.
2. விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.
3. உலகவங்கி உதவியுடன் சென்னை புற நகர் அபி விருத்தி திட்டம்.
4. பெருமளவு வீட்டுவசதி திட்டம்.
5. தமிழ்நாடு புறநகர் அபிவிருத்தி திட்டம்.
6. நடைபாதை வாசிகளுக்கான திட்டம்.
7. சமுதாய வளர்ச்சித் திடடம்.
8. வீடற்றோர்க்கு வீடு வழங்கும் திட்டம் மற்றும்

### தன்னிறைவு வீட்டுமனை திட்டம் குடிசை பகுதி மாற்று திட்டம்

அரசிடமிருந்து பெறும் மான்யம் மற்றும் ஹட்கோவிடமிருந்து பெறும் கடன் தொகையையும் கொண்டு குடிசை மாற்றுப் பணிகள் நிவேற்றப்படுகின்றன. இத்திட்டம் குடிசை பகுதிகளை அகற்றி, அப்பகுதிகளில் பலமாடி குடியிருப்புகளை கட்டுவதாகும். இவ்விதம் கட்டப்படும் குடியிருப்புகள் அந்த



குடிசைப்பகுதியில் முன்னர் வசித்தவர்களுக்கே ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இந்த ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து குறைந்த வாடகைத் தொகை அல்லது தவணை முறை விற்பனை திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட தொகை வசூலிக்கப் படுகிறது. 1970-க்கு முன்னர் சென்னை மாநகராட்சி/நகர அபிவிருத்தி டிரஸ்ட்/தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்ட 7,191 குடியிருப்புகளை வாரியம் தனது பொறுப்பில் ஏற்றுக்கொண்டு, கட்டுமானப் பணியை வருடந்தோறும் தொடர்ந்து டிசம்பர் 1988 முடிய 48,928 குடியிருப்புகளை ரூ. 48.64 கோடி செலவில் கட்டி முடித்துள்ளது. இத்திட்டம் சென்னையைத் தவிர மற்ற நகர்புறங்களான. ஈரோடு, கும்பகோணம் மற்றும் மதுரை நகர்களில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. 1989–90ஆம் ஆண்டில் ரூ. 2.5 கோடி செலவில் 1,000 குடியிருப்புகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் 1977-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1983–84-லிருந்து சென்னை மாநகரம் தவிர மற்றும் 63 நகரங்களிலும், வாரியப்பணிகள் விரிவுபடுத்தப்பட்டன. பத்து குடும்பங்களுக்கு ஒரு பொது கழிப்பிடம், இருபது குடும்பங்களுக்கு ஒரு குடிநீர்க் குழாய், நாற்பது மீட்டருக்கு ஒரு விளக்கு வீதம் வீதிகளில் விளக்கு போடுதல், மற்றும் சாலைகள், கழிவுநீரேற்றுக் குழாய் அமைத்தல், பொதுவிடங்களில் செயற்கை நீருற்று அமைத்தல், நிலத்தடி நீர்க்கிணறு மற்றும் ஆழ்கிணறுகள் அமைத்தல் என ஒரு குடும்பத்திற்கு ரூ. 1,250-க்கு மிகைப் படாமல், இத்திட்டத்தின்கீழ் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. டிசம்பர் 1988 வரை ரூ. 741.38 இலட்சங்கள் செலவிடப் பட்டதில் 87,648 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. 1989-90 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு கோடி செலவில் 8,000 குடும்பங்கள் பயனடையும்.

### உலகவங்கி உதவியுடன் சென்னை புறநகர் அபிவிருத்தி திட்டம்

இத்திட்டம் உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படும் ஒன்றாகும். இத்திட்டத்தின் இரண்டாவது பகுதி 1981 ஆம் ஆண்டில் தொடங்கி 1987–88 ஆம் ஆண்டு முடிவுற்றது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

(அ) திட்டப்பகுதிகளில் தகுதியுடையவர்களுக்கு நிலம் வழங்குதல்.

(ஆ) திட்டப்பகுதிகளை மேம்படுத்தி, அடிப்படை வசதிகளை அமைத்தல்.

(இ) திட்டத்தினால் பயன்பெறும் குடிசைவாசிகளுக்கு வீடு மேம்படுத்தும் கடன் வழங்குதல்.

பகுதி 1-ன் கீழ் ரூ. 46.82 கோடிகளும், பகுதி 2—ன் கீழ் ரூ. 73.90 கோடிகளும், உலக வங்கியிடமிருந்து தமிழக அரசு பெற்றுக்கொண்டு, சென்னை பெருநகர் அபிவிருத்திப் பணிகளுக்காக செலவு செய்துள்ளது. இந்நிதி உதவியில், குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகளுக்காக பகுதி1-ன் கீழ் ரூ. 6.03 கோடிகளும், பகுதி 2-ன் கீழ் ரூபாய் 27.80 கோடிகளும் அடங்கும் பகுதி 1-ன் கீழ் 77 குடிசைப் பகுதிகளில் வசிக்கும் 24,862 குடும்பங்களும், 1981—ல் தொடங்கி 1988 மார்ச் மாதத்தில் முடிவுற்ற பகுதி 2—ன்கீழ் 59,938 குடும்பங்களும் பயனடைந்துள்ளன.

### பெருமளவு வீட்டுவசதி திட்டம்.

இத்திட்டம், மேற்குறிப்பிட்ட விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டு திட்டத்தில் உள்ளது போன்று குடிசைப்பகுதிகளில் உள்ள வீடுகளை மேம்படுத்துதல் மற்றும் குடிசைப்பகுதிகளில் அபிவிருத்தி செய்தல் போன்ற அம்சங்களைக் கொண்டுள்ளது. ரூ. 3,500-க்கும் குறைவான வருடாந்திர வருமானம் உடைய குடிசைப்பகுதி குடும்பத்திற்கு வீடு அபிவிருத்தி செலவினத்திற்காக, அரசு மான்யமாக ரூ. 1,500 வழங்கப் பட்டது. குடிசைப்பகுதி மேம்பாட்டிற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ. 1,400 வீதம் அரசு மான்யமாக கணக்கிடப்பட்டு வழங்கப் பட்டது.

31—12—1988 வரை ரூ. 2,071.95 இலட்சங்கள் செலவில், மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 91.864 குடும்பங்களும், குடிசைப்பகுதி அபிவிருத்தி பணிகளுக்காக செலவிடப்பட்ட ரூ. 1,120.54 இலட்சங்களில் 50,922 குடும்பங்களும் பயன டைந்துள்ளன.

### தமிழ்நாடு புறநகர் அபிவிருத்தி திட்டம்.

இத்திட்டம், உலகவங்கி உதவியுடன், திட்ட நிர்வாக குழு மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் ஆகியவற்றின் மேற்பார்வையில் நிறைவேற்றப்படும் பணியாகும். இத்திட்டம், ரூ. 5 கோடி மதிப்பீட்டில் 23,000 குடும்பங்களை பயனடையச் செய்யும் இலக்குடன், 1988—89-ல் துவங்கப்பட்டுள்ளது. 1989—90-ல் ரூ. 8.20 கோடி செலவில், சென்னை மாநகரம் மற்றும் மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி உட்பட 9 புறநகர்ப் பகுதிகளிலும் வசிக்கும் 20,300 குடும்பங்களை பயனடையச் செய்ய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. திட்ட மதிப்பீடான ரூ. 8.20 கோடியில் ரூ. 204 இலட்சங்கள் நிலக்கிரயத்திற்காகவும், ரூ. 526 இலட்சங்கள் அபிவிருத்திப் பணிகளுக்கெனவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இத்திட்டத்தின் குறிக்கோள் சென்னை புறநகர் அபிவிருத்தித் திட்டத்தின் குறிக்கோளை ஒத்துள்ளது. தமிழ்நாடு புறநகா அபிவிருத்தி திட்டத்திற்காக ஒதுக்கப்பட ருக்கும் ரூ. 820 இலட்சங்களில் ரூ. 50 இலட்சங்கள் தமிழக அரசு கடனாகவும், ரூ. 50 இலட்சங்கள் மானியமாகவும், ரூ. 200 இலட்சங்கள் ஹட்கோவிலிருந்து பெறும் கடனாகவும், ரூ. 200 இலட்சங்கள் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் நிதிகளிலிருந்து திரட்டியும், மீதமுள்ள ரூ. 320 இலட்சங்களுக்கு வழிவகை செய்ய திட்ட நிர்வாகக் குழு அரசுடன் கலந்தாலோசித்து நடப்பாட்டில் முடிவு செய்யும்.

### நடைபாதைவாசிகளுக்கான திட்டம்.

இப்புதிய திட்டம் சென்னை நகரில் வசிக்கும் நடைபாதை வாசிகளுக்கு தேவையான குடியிருப்பினை தக்க இடங்களில் மத்திய அரசு மற்றும் ஹட்கோ நிதி உதவியுடன் ஏற்படுத்துவதாகும். மேற்படி திட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### சமுதாய வளர்ச்சித் திட்டம்.

சென்னை புறநகர் அபிவிருத்தி திட்டத்தில் ஒரு கூறாக துவக்கப்பட்ட இத்திட்டம், தற்போது குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் நிரந்தர பணிகளில் ஒன்றாகி விட்டது. குடிசைப் பகுதிகளில் உள்ள மக்களுக்குக் கல்வி போதனையுடன் தகுதியுள்ள இளைஞர்களுக்கு போதிய தொழில் நுட்ப பயிற்சி அளித்து அவர்களின் வருமான ஈட்டிற்கும் வழிவகை செய்ய இத்திட்டம் செயல்படுகிறது.

1987—88 ஆம் ஆண்டு வரையில், 6,393 நபர்கள் இத்திட்டத்தில் பயன் அடைந்துள்ளார்கள். நடப்பு ஆண்டில் ரூ. 8.00 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் டிசம்பர் 1988 வரையில், 318 நபர்கள் ரூ. 4.40 இலட்சம் செலவில் பயன் அடைந்துள்ளார்கள்.

### வீடற்றோருக்கு வீடு வழங்கும் திட்டம் மற்றும் தன்னிறைவு வீட்டுமனை திட்டம்.

தவணை முறை திட்டத்தில், முழு செலவையும் வசூல் செய்யும் அடிப்படையில் இத்திட்டங்களை குடிசைப்பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டங்களுக்கான நிதி உதவியை, ஹட்கோவிடமிருந்து கடனாக வாரியம் பெறுகிறது. இக்கடனை வாரியமே திரும்பச் செலுத்துகிறது. 1987—88 ஆம் ஆண்டில் ரூ. 2.32 கோடி செலவில், மதுரை பெரியார் நகர் பகுதியில் 2,010 இரட்டை குடியிருப்புகளை வீடற்றோருக்கு வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் வாரியம் கட்டி முடித்துள்ளது. டிசம்பர் 1988 முடிய 953 மனைகள் ரூ. 46.79 இலட்சம் செலவில் தன்னிறைவு வீட்டுமனை திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

## வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள்

### கிராமப்புற வீட்டுவசதித் திட்டம்

கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் வீட்டுவசதித் தேவை யினை நிறைவேற்ற நிதி உதவி அளித்துவரும் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், அரசு ஏற்கும் பொது நிறுவனங்களில் ஒன்றாக விளங்கி வருகின்றன. கூட்டுறவுத் துறையில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மாநிலத்தில் ஒரு அமைப்பாக இருந்து மகர்ப்புற மற்றும் கிராமப்புற வீட்டுவசதித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

இம்மாநிலத்தில் பணியாற்றி வந்த 104வட்ட மற்றும் கோட்ட கிராமப்புற வீட்டுவசதிச் சங்கங்கள், சென்னை மாவட்டத்தைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் ஒரு வட்டத்திற்கு ஒரு வட்டார கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் என்ற அடிப்படையில் 165 வட்ட கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டது. இத்தகைய 165 வட்ட கூட்டுறவு சங்கங்கள் மூலம் கிராமப்புற வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 165 வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள அனைத்தும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், சென்னை-7 உடன் இணைந்து, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திடமிருந்து நிதி வசதி பெற்று சங்க உறுப்பினர்களுக்கு கடன் உதவி செய்து வருகின்றன. கிராமப் புறங்களில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரில் மாத வருமானம் ரூ. 700-க்கு உட்பட்டவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் கட்ட கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் அரசிட மிருந்தும் மற்றும் அரசின் பொறுப்புறுதியின் பேரில் ஹட்கோவிட மிருந்தும் கடன் உதவி பெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கட்டப்பட்டுவரும் வீட்டின் மதிப்பு சமவெளிப்பகுதியில் ரூ.8,000 ஆகவும், மலைப்பகுதி மற்றும் இராமேஸ்வரம் தீவுகளில் ரூ.10,000 ஆகவும உள்ளது. இதற்கு கீழ்க்கண்ட வகையில் நிதி வழங்கப்படுகிறது:—

| | சமவெளிப் யகுதி, ரூ. | மலைப் பகுதி. ரூ. |
|---|---|---|
| (அ) அட்கோ நிறுவனத்திடமிருந்து கடன் .. .. | 4,000 | 4,000 |
| (ஆ) அரசு கடன் .. .. | 2,000 | 3,500 |
| (இ) பயனீட்டார்களின் பங்கு (உழைப்பு மற்றும் பொருள்கள் மூலம்) | 2,000 | 2,500 |
| மொத்தம் .. | 8.000 | 10,000 |



தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மூலம் வீடு கட்டித்தரும் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புறுதித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வீடு கட்டி தரப்படுவதானால் 1985-86 ஆம் ஆண்டு முதல் இத் திட்டத்தின் வாயிலாக ஆதிதிராவிடர் அல்லாதவர்களுக்கு கடன் உதவி வழங்க முடிவெடுக்கப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்தின் மூலமாக ஆதிதிராவிடர் அல்லாத பொருளாதாரத்தில் நலிவுற்றவர் என கருதப்பட்டவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 5,000 வீடுகள் வீதம் 25,000 வீடுகள் கட்டித் தர கடன் உதவி அளிக்க அரசு உத்தரவிட்டது. ஏழாவது ஐந் தாண்டு திட்ட காலத்தில், அதாவது 1985-86 ஆம் ஆண்டு முதல் 31-12-1988 முடிய (இயல்பானமற்றும் பெருமளவு வீடு கட்டும் திட்டங்களின்கீழ்) 58,815 வீடுகள் கட்டப்பட்டன.

1988-89 ஆம் ஆண்டில் இயல்பான திட்டப்படி 5,000 வீடுகளும், பெருமளவு வீடுகட்டும் திட்டப்படி 16,750 வீடுகளும் கட்கிவ்தற்கான நிதி உதவி அரசினால் அளிக்கப்பட்டுள்ளது. மேற் குறிப்பிட்ட வீடுகளில். 390 வீடுகள் மலைப்பகுதிகளில் கட்டப்பட உள்ளன. இத்திட்டத்திற்காக மொத்த முதலீடு ரூ. 1,747.80 இலட்சம் ஆகும். இதில் 1,310.85 இலட்சம் கடனாக பயனீட் டார்களுக்கு வழங்கப்படவுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.436.95 இலட்சம பயனீட்டார்கள் உழைப்பாகவோ பொருளாகவோ ஈடு செய்துகொள்ள வேண்டும். மாநில அரசு இத்திட்டத்தை நிறை வேற்ற ரூ. 440.85 இலட்சம் கடனாக இணையத்திற்கு வழங்கி உள்ளது. அட்கோவிலிருந்து இணையம் ரூ. 870 இலட்சம் கடன் பெற பொறுப்புறுதி அளித்துள்ளது.

1989-90 ஆம் ஆண்டில் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு இயல்பான திட்டப்படி 5,000 வீடுகள் கட்டவும், பெருமளவு வீடுகட்டும் திட்டத்தின்கீழ் 20,000 வீடுகள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது

வட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் கிராமப் பகுதிகளில் இதுவரை பொருளாதாரத்தில நலிந்த பிரிவினருக்கு மட்டுமே நிதி உதவி அளித்துவந்துள்ளன.

கிராமப் பகுதியில் வசிக்கும் மற்ற பிரிவினர்கள் குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர்) கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் புதிய வீடு கட்ட நிதி உதவி பெற முடியவில்லை. அவர்களின் தேவைகளை நிறைவேற்ற நடப்பு ஆண்டு முதல் (1988–89) புதிய திட்டம் துவங்கப்பட்டுள்ளது. அதன்படி குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ. 20,000 வரை யிலும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூ. 36,000 வரையிலும் கட்டிடத்தின் வடிவமைப்பு மற்றும் திருப்பிக்கொடுக்கும் சக்திக் கேற்ப புதிய வீடுகட்ட கடன்வழங்கப்படும். இதற்கான நிதி அட்கோ

விடமிருந்து அரசு பொறுப்புறுதியின் அடிப்படையில் பெறப்படும். முதல் கட்டமாக 4,950 வீடுகள் கட்ட ரூ. 1,283.28 இலட்சங்கள் அட்கோவினால் வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற வீட்டுவ்சதித் திட்டம்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் நகர்ப்புற வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அச்சங்கங்களின் உறுப்பினர் களுக்கு வீடுகள் கட்டுவதற்கு கடனாக நிதி உதவி அளித்து வரு கிறது. மேற்படி கடனுதவி வழங்க கூட்டுறவு வீட்டுவசதி இணையம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடனுதவி பெறு கிறது இதுவரை இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் ரூ. 166.92 கோடி கடனாகப் பெற்றுள்ளது. இதில் நடப்பாண்டில் (1988-89) பெற்ற தொகை ரூ. 15 கோடியும் அடங்கும். நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு பயனீட்டார்களின் வருமானத்தை பொறுத்து ரூ. 10,000 முதல் ரூ. 1,00,000 வரை கடனுதவி வழங்கப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிக் கூட்டுறவு இணையம் அதன் துவக்க காலத்தில் இருந்து (1959 ஆம் ஆண்டு முதல்) 31-12-1988 வரை ரூ. 279.04 கோடி அளவுக்கு 1,04,211 வீடுகள் கட்டுவதற்கு நிதி உதவி அளித்துள்ளது.

1989–90 ஆம் ஆண்டில் நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் 8,000 வீடுகள் கட்ட ரூ. 36 கோடி அளவிற்கு கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. கிராமப்புறத்தில் உள்ள குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர்களுக்கு வட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் கடன் வசதி தொடர்ந்து அளிப்பது, அட்கோவிடமிருந்து கிடைக்கும் நிதியுதவி யினைப் பொறுத்துள்ளது.

வீடுகட்ட முன்பணம்.

அரசு ஊழியர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணியைச் சேர்ந்த அலுவலர்கள் வீடு கட்ட / மனை வாங்க / அதில் வீடு கட்ட / அல்லது கட்டிய வீடு / அங்கணம் வாங்க, கட்டப்பட்டு வரும் வீடு/ அங்கனம் வாங்க, திருப்பிச் செலுத்தும் தகுதிக்கேற்ப, ரூ. 2,50,000 வரையிலும் மேலும் வீட்டை விரிவுபடுத்த/மேம் படுத்த திருப்பிச் செலுத்தும் தகுதிக்கேற்ப ரூ. 1,00,000 வரை யிலும், மொத்த உச்ச வரம்பு ரூ.2,50,000-க்குட்பட்டு முன்பணம் வழங்கப்படுகிறது.

1988–89 ஆம் ஆண்டில் டிசம்பர் 1988 முடிய, கீழே குறிப்பிட்ட படி இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது.

அனைத்திந்தியப் பணி அலுவலர்கள் ரூ. 21.71 இலட்சம்.

பிற அரசு ஊழியர்கள் ரூ. 1,937.89 இலட்சம்.

ஊராட்சி ஒன்றியப்பள்ளிஆசிரியர்கள் ரூ. 123.68 இலட்சம்.



1989–90 ஆம் ஆண்டு, வரவு–செலவு திட்டத்தில், இத்திட்டத் திற்கு ரூ.1,415 இலட்சம் கீழே குறிப்பிட்டவாறு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

அனைத்திந்திய பணி அலுவலர்கள் ரூ. 35 லட்சம்

பிற அரசு ஊழியர்கள் ரூ.1,300 இலட்சம்.

ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள் ரூ. 80 இலட்சம்.

இருபது அம்சத் திட்டம்.

இருபது அம்சத் திட்டம், கிராமப்புற மக்களுக்கு வீட்டுமனை யும் வீடு கட்ட நிதி வசதியும், பொருளாதாரத்தில் நலிவுற்றோ ருக்கு வீட்டு வசதியும், குடிசைப் பகுதியில் சுற்றுப்புறத்தை மேம் படுத்துதலும் கட்டாயத் தேவை என்பதை வலியுறுத்துகிறது.

## இணைப்பு.

### தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்—சாதனை விவரம்.

| விவரம். | குறைந்த வருவாய் பிரிவினருக்கான குடியிருப்பு. | நடுத்தர மற்றும் உயர் வருவாயினருக்கான குடியிருப்பு. | தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு. | குடிசைப் பகுதி மாற்றுக் குடியிருப்பு. | தொழிலாளர் மலிவு வாடகைக் குடியிருப்பு. | பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் குடியிருப்பு. | காவலர் குடியிருப்பு.† | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. 1060-61 ஆம் ஆண்டு முதல் 5-ஆம் ஐந்தாண்டுத் திட்டம் முடிய(1979-80) கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 12,974 | 8,164 | 1,073 | 14,956 | 2,494 | 9,046 | 657 | 59,022 |
| 2. 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை, (1980–85). | 10,891 | 11,917 | 4,733 | 4,576 | 636 | 21,656 | 2,479 | 56,888 |
| ஏழாவது திட்டம் (1985–90) | | | | | | | | |
| 3. 1985–86 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 2,514 | 4,741 | 2,310 | 432 | .. | 5,803 | .. | 15,800 |
| 4. 1986–87 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள். | 959 | 4,333 | 674 | .. | .. | 10,034 | .. | 16,000 |
| 5. 1987–88 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள். | 1,339 | 2,587 | 700 | .. | .. | 11,674 | .. | 16,300 |
| 6. 1988–89 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் (31-12-1988 முடிய). | 1,320 | 2,189 | 1,016 | 96 | .. | 4,280 | .. | 8,901 |

* தற்போது இத்திட்டம் தொடரப்படவில்லை.

† ஏழாவது திட்டத்தில் காவலர் குடியிருப்புத் திட்டம் காவலர் வீட்டுவசதி நிறுவனத்தால் செயற்படுத்தப்படுகிறது.

## இணைப்பு VIII.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### வனத்துறை 1989–90

நாடு முழுவதிலும் விறகுமரம், தீவனம், தடிமரம் போன்றவைகளின் தேவை மென்மேலும் அதிகரித்து வருவதாலும், பாதுகாப்புக்குத் தேவைப்படுவதைக் காட்டிலும் குறைந்த அளவிலான மற்றும் பழங்கால முறைப் பாதுகாப்பு அமைப்புகளின் காரணமாகவும், வன நிலப்பகுதியினை வனம் சாராத இதர காரணங்களுக்காக உபயோகப்படுத்தி வந்ததன் காரணமாகவும், காடுகள் கடும் அழிவிற்கும் தரந்தாழ்த்தலுக்கும் உட்படுத்தப்பட்டு, மிகவும் குறைந்து வந்துள்ளன. மக்கள் தொகைப்பெருக்கம் தான் இவ்வாறான அழிவுக்கு முக்கிய காரணமாகும். தேசீய வனக் கொள்கை 1988–ன் அடிப்படையில் பின்வரும் நோக்கங்களை முதன்மையாகக் கொண்டு வன வளத்தைப் பராமரித்தல், காத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற அபிவிருத்திப் பணிகளை செயற்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

(1) இயற்கைச் சூழலின் சமநிலையைப் பாதுகாத்தலும், தக்கவைத்தலும், ஆகிய பணிகளின் மூலம் சுற்றுச் சூழலின் தன்மையை மீட்டு சீரான நிலையில் பராமரித்தல்.

(2) குறிப்பாக, நாட்டில் உள்ள வேறுபட்ட உயிரின வாழ்க்கைப் பிரிவுகள் மற்றும் உயிரினம் தோன்றுதற்குரிய வளம் நிறைந்துள்ள இயற்கைக் காடுகளின் தாவர, உயிரினச் சூழலை பாதுகாப்பதன் மூலம் நமது பாரம்பரியம் மிக்க இயற்கை செல்வத்தை பாதுகாத்தல்.

(3) ஆறு, ஏரி மற்றும் நீர்தேக்க பகுதிகளில் ஏற்படும் மண் அரிப்பு மற்றும் காடுகள் அழிப்பினைத் தடுத்தல்.

(4) மிகுந்த அளவு காடு வளர்ப்பு மற்றும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டங்களின் மூலம் நாட்டிலுள்ள வனப் பரப்பில் அடர்ந்த மரச் சூழலை மிகுதிப்படுத்துதல்,

(5) கிராமப்புற மற்றும் மலைவாழ் மக்களின் விறகுமரம், தீவனம், தடிமரம் மற்றும் இதர காடுபடு சிறு பொருட்களின் தேவையை நிறைவு செய்தல்.

(6) பெண்களும் இணைந்து பங்கேற்கும் வகையில் மக்கள் சக்தி இயக்கத்தை மிகுதியாக்கி மேற்காண் இலக்குகளை எய்துவதுடன் தற்போதுள்ள காடுகளைச் சார்ந்துள்ள நிலையினைக் குறைத்தல்.



### 2. வனப்பரப்பு

2.1. தமிழ்நாடு வனத்துறையின் வயது நூற்றாண்டுகளுக்கும் மேலாகும். தமிழ்நாட்டின் நிலப்பரப்பு 1,30,057 சதுர கி.மீ.' அதில் 22,552 ச.கி.மீ. வனப்பரப்பாகும். தேசீய வனக் கொள்கையின்படி நாட்டின் மொத்த பரப்பளவில் குறைந்தபட்சம் 33 சதவீதம் அளவு வனப்பரப்பாக அமைய வேண்டும். ஆனால், தற்போதுள்ள வனப்பரப்பளவு சுமார் 17.34 விழுக்காடாகும். 31–3–1988 இறுதியில் 18,691 ச.கி.மீ. பரப்பளவு ஒதுக்குக் காடுகளாகவும், 3,247 ச.கி.மீ. பரப்பளவு ஒதுக்கு நிலமாகவும், 614 ச.கி.மீ பரப்பளவு தரம் பிரிக்கப் பாத காடுகளாகவும் உள்ளன.

2·2. தென்னாற்காடு, மதுரை. காமராசர், திண்டுக்கல் காயிதே மில்லத் நீலகிரி மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள சில ஜாகிர், ஜமீன் நிலங்களை ஒதுக்குக் காடுகளாக அறிவிக்கை செய்யும் பணி நடந்து வருகின்றது. 1987–88 முதல் 1988-89 வரையிலும் நிலப்பரப்பை வனப்பரப்புக்குள் கொண்டு வர மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் 1979–90ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன;—

| ஆண்டு. | இலக்கு. | சாதனை (பரப்பளவு அறிவிக்கை செய்யப்பட்டது.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1987–88 .. | 20,000 எக்டேர் .. | 22,496 எக்டேர் |
| 1988–89 .. | 25,000 எக்டேர் .. | 29,483 எக்டேர் |
| 1989–90 .. | 25,000 எக்டேர் | .. |

2.3. வனப் பாதுகாப்புச் சட்டம் 1980 அக்டோபரில் நடைமுறைக்கு வந்தது முதல் 3,118.121 எக்டேர் வனப் பரப்பை 124 இனங்களில் வனம் சாராத தவிர்க்கமுடியாத தேவைகளான அணைக்கட்டு, மின்வழி தொடர்பு, நீர் வழங்குதல் போன்ற நோக்கங்களுக்கு மாற்றிப் பயன்படுத்த அனுமதி கோரி மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டன. அவற்றுள் 86 இனங்களுக்கு மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டன. 15 இனங்கள் நிராகரிக்கப்பட்டன. தற்போது 23 இனங்கள் மைய அரசின் பரிசீலனையிலுள்ளன.

### 2. சுற்றுச்சூழல் மேம்பாடு பசுமை செயலாக்கம் நகர கிராமப்புற மரம் வளர்ப்பு.

3.1. இயற்கையை வழிபடுதல் மற்றும் பேணுதல் ஆகியவை தொன்றுதொட்டு நம் இந்தியப்பண்பாடு மற்றும் பாரம்பரியத்துடன் இணைந்துள்ளதாகும். உயிரின வாழ்க்கைப் பாதுகாச்

பானது. குறுகிய சுயநல நோக்கத்திற்கு அப்பாற்பட்டதும் மனித இன இயற்கைச் சூழலையும் அவற்றின் உயிர்வாழ்தலையும் சார்ந்துள்ளதுமான முக்கியத்துமிக்கதாகும். நில, நீர், தாவர, உயிரினங்களின் தொடர்ந்த பராமரிப்பு உபயோகத்தின் மூலமாகவே அனைவருக்கும் உயிர்வாழவும், பாதுகாப்பிற்கும் ஏற்ற சூழலைப் பெறமுடியும். அடிப்படை உயிரின் வாழ்க்கை முறை அனைத்தும் ஒருங்கிணைந்தாகக் கருதப்படுவதுடன் நிலையாக சீர்படுத்தப்பட்டு மாறாத தன்மையுடன் பராமரிக்கப் படவேண்டியதுமாகும். இயற்கைச் சூழலின் சீரான நிலையினை உறுதி செய்யும் நோக்குடன் கீழ்க்கண்ட சுற்றுச்சூழல் மேம் பாட்டுத் திட்டங்கள் நடப்பு நிதியாண்டிலிருந்து செயற்படுத் தப்பட்டு வருகின்றன;—

(அ) இயற்கைச் சூழலை மேம்படுத்தும் வகையில் வேலூர் மண்டலம் பள்ளிகொண்ட ஒதுக்குக் காட்டில் 1000 எக்டேர் பரப்பளவில் எட்டு லட்சம் ரூபாய் செலவில் வான்வழி விதை தூவல் திட்டம் செயற்படுத்தப்பட்டு அதன் பயனை ஆய்ந்து அறிந்துகொள்ள தீவிர கண்காணிப்பிலிருந்து வருகிறது. இந்த புதிய முன்னோடி திட்டம் பாராட்டையும் இந்திய அரசு, மற்ற அரசு துறைகள் மற்றும் மேல்நாட்டு வல்லுநர்கள், வான ஊர்தி பிரிவினர் ஆகியோரின் கவனத்தையும், அதன் ஆய்வு மற்றும் செயல்முறையில் முன்னேற்றம் செய்வது குறித்து விமானத்துறையின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. மேலும் இத் திட்டம் வரும் ஆண்டில் 5,000 எக்டேர் பரப்பளவில் வட ஆற்காடு மாவட்டத்தில் தொடர்ந்து செயற் படுத்தப்பட உள்ளது.

(ஆ) நகர்ப்புறங்களில் மரம் வளர்த்து பெரிய நகரங் களின் சுற்றுச் சூழலை அபிவிருத்தி செய்தல். இத்தகைய திட்டங்கள் மேம்படுத்தப்பட்ட நுட்பங்களையும் தரத்தையும் கொண்டு பெரிய அளவில் வரும் ஆண்டுகளில் செயற்படுத்தப் படும்.

3.2. நமது அரசு நீலகிரி, ஆனைமலை, பழநிமலை மற்றும் தமிழ்நாட்டில் மேற்குமலைத் தொடரின் தென் பகுதி களிலும் வனப்பரப்பை மேம்படுத்த நூற்று இருபது கோடி ரூபாய் மதிப்பீட்டில், 81,000 எக்டேர் பரப்பளவில் காடு வளர்க்கவும் ஐந்து ஆண்டுகளில் செயற்படுத்த ஒரு திட்டத்தை தயாரித்துள்ளது. தீவனம், விறகுமரம், புகையற்ற அடுப்பு வழங்குதல், கிராமப்புற மக்களின் வருவாயை பெருக்க தேன் கூடுகள் வழங்குதல், கால்நடையை நன்கு பராமரிக்க மையங்கள் அமைத்தல் போன்ற இதர சமூக மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் காடுகள் மேலும் அழிக்கப்படுவதையும் தரங்குன்றி வருவதையும் தடுப்பதும் இத்திட்டத்தில் அடங்கி யுள்ளன. எனினும் நிதிப் பற்றாக்குறை மற்றும் செயல்படுத்து வதிலுள்ள இடையூறுகள் காரணமாக எநூற்று நான்கு லட்சம்



ரூபாய் அளவில் 4,000 எக்டேர் பரப்பளவில் முன்னோடித் திட்டமாக செயற்படுத்த கருத்துரு ஒன்று இந்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

4 வன வருவாய் மற்றும் செலவினங்கள்.

4.1. வனங்களின் முக்கிய வருவாய் இனங்களின் மூலமாக 1987-88-ல் கிட்டிய, 1988–89 மற்றும் 1989.90-ல் எதிர்பார்க்கப் படுகின்ற வருவாய் விபரங்கள் பின்வருமாறு:

| வரிசை எண்ணும் விபரமும். (1) | 1987–88 (சரியான வரவு). (2) | 1988–89 (எதிர்பார்ப்பு). (3) | 1989–90 (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | | |
| 1 சந்தன மரம் | 15.60 | 13.00 | 16.00 |
| 2 தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்கள் வழங்கல். | 7.34 | 6.80 | 8.30 |
| 3 காடுபடு சிறு பொருட்கள் | 0.77 | 0.69 | 0.70 |
| 4 வனப் பண்ணைத் தோட்டங்கள் | 4.84 | 5.00 | 7.00 |
| 5 மூங்கில், முந்திரி, சவுக்கு மற்றும் மென்மரத் தோட்டங்கள். | 8.89 | 4.86 | 5.00 |
| மொத்தம் .. | 37.44 | 30.35 | 37.00 |

4.2. 1987–88-ல் செய்த செலவு ரூ. 43.83 கோடி. 1988-89-ல் ரூ. 40.60 கோடி செலவிடப்படுமென்று எதிர்பார்க்கப்படு கிறது. 1989–90-ல் நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 43.6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

5, வன உற்பத்தித் தோட்டங்களின் மூலம் வருவாய்.

5.1. கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாகவே, வனத் துறை உற்பத்தி சார்பு கொண்ட பல வனத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. 1987–88 வரை தொழில் மற்றும் சமூக ரீதியாக வனப் பொருட்களைப் பயன் படுத்துபவர்களின் தேவைக்கென ஒதுக்குக் காடுகளில் சுமார் 4 இலட்சம் எக்டர் பரப்பில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. மேலும் ஒதுக்குக் காடுகளுக்கு வெளியேயும் சுமார் 3.57 இலட்சம் எக்டேர் பரப்பு, பசுமையான மரங்கள் சூழ்ந்த தன்மை கொண்டதாக மாற்றப்பட்டுள்ளது.

5.2. மரம் சார்ந்த தொழிற்சாலைகளின் தேவையும்' வணிக ரீதியில் வனப் பொருட்களின் தேவையும் அதிகரித்து வருகிற வேகத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில், வணிக பொருட்களுக்கான வனத் தோட்டங்களை எழுப்புவது சாத்தியமற்றதாக உள்ளது. எனினும், சுற்றுப்புறச் சூழ்நிலைகளின் தன்மைகளை அனுசரித்து, உற்பத்தியின் அளவு ஏறக்குறைய தற்போதைய நிலையிலேயே தொடரச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது வரை சுமார் 1.04 இலட்சம் எக்டர் பரப்பிற்கு, மிலாறு, கற்பூரம், தைல வகைகள், ரப்பர் முதலான வணிகப் பொருட் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. அதாவது, மொத்த வனப் பரப்பில் சுமார் 4.9 சதவீதம் பகுதியில் மட்டுமே இத்தகைய வணிகப் பொருட் தோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய தோட்டங்களை எழுப்புவதற்காக செய்யப்பட்ட முதலீடுகள், இவற்றை விற்பனை செய்ததன் மூலம் ஈட்டப்பட்ட வருவாய் ஆகியவற்றின் ஒப்புநோக்கு வரைபடங்களை கடைசியில் காணலாம்.

## 5.3. மூலப் பொருட்கள் வழங்குதல்.

காகிதம், ரயான் என்னும் செயற்கை நூல், தோல் பதனிடும் டானின் போன்ற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் தங்களுக்குத் தேவையான மூலப் பொருட்களுக்கு காடுகளை நம்பியிருக்கின்றன. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் முக்கிய மூலப் பொருட்கள் யூகலிப்டஸ் குலோபுலஸ், கிராண்டிஸ், ஹைப்ரிட், தோல் உரிக்கப்பட்ட மிலாறு மரம், மூங்கில், மிலாறு பட்டை, ஈத்தல், தனுக்கு, லெமன் கிராஸ் முதலியனவாகும்.

5.4. ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் டன் மூலப் பொருட்கள் இந்தத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 1987-88 ஆம் ஆண்டில் மூலப் பொருட்களை விற்பனை செய்ததின் மூலம் கிட்டிய வருவாய் ரூ. 7.34 கோடியாகும். (இது வனத்துறையின் மொத்த வருவாயில் 20 விழுக்காடு),

5.5. 1988–89-ஆம் ஆண்டில் 2.13 இலட்சம் டன் மூலப் பொருட்கள் வழங்குவதன் மூலம் 8.00 கோடி ரூபாய் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் 2.50 இலட்சம் டன் மூலப் பொருட்கள் வழங்குவதன் மூலம் சுமார் ரூ. 8.30 கோடி வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

5.6. அரசு நிர்ணயித்த நியாய விலைப்படி தொழிற்சாலைகளுக்குத் தேவையான வன மூலப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. வன மூலப் பொருள் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மூலப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், சந்தனமரம், சூழ்மரம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருவாயை அதிகரிக்க, அவற்றின் விலை கொள்கையை சீரமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.



## 5.7. விறகு மர உற்பத்தி:

தமிழகத்தில் ஆண்டுக்கு சுமார் 8 மில்லியன் டன் அளவு எரி மரங்கள் தேவையென கணக்கிடப்பட்டுள்ளது. இதில் ஒரு சிறு பகுதி மட்டுமே வனங்களின் மூலமாக பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. வனப் பண்ணைத் தோட்டங்களின் மூலம் கிடைத்த விறகு மர அளவும் வருவாயும் கீழே தரப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | மகசூல். | கிடைத்த வருவாய். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மெட்ரிக் டன்னில்.) | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1985–86 .. .. | 91,713 | 109.00 |
| 1986–87 .. .. | 1,90,264 | 340.00 |
| 1987–88 .. .. | 5,50,000 | 484.00 |
| 1988–89 .. .. | (மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன.) | 530.00 |

## 5.8. சந்தன மரம்.

சந்தன மரங்கள் இயற்கையாக வட ஆற்காடு, தர்மபுரி, சேலம், பெரியார் மற்றும் கோவை மாவட்டங்களின் மலை மற்றும் பீடபூமி பகுதிகளில் மிகுதியாகவும், நீலகிரி, தென் ஆற்காடு மற்றும் திருச்சி மாவட்டங்களில் குறைந்த அளவிலும் வளர்கின்றன. பட்டுப்போன சந்தன மரங்கள் மட்டுமே வெட்டிச் சேகரிக்கப்படுகின்றன. இவ்வாறு சேகரிக்கப்படுகின்ற மரங்கள் சந்தன மரக் கிடங்கிற்குக் கொண்டு வரப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டபின் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. சந்தன மர விற்பனை மற்றும் விற்பனையின் மூலம் கிடைத்த வருவாய் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

### சந்தன மர விற்பனை.

| ஆண்டு. | விற்கப்பட்ட சந்தன மரங்களின் அளவு. | வருவாய். | ஒரு மெட்ரிக் டன்னுக்கு சராசரி விலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (மெட்ரிக் டன்னில்.) | (இலட்சம் ரூபாய்.) | (ஆயிரம் ரூபாய்.) |
| 1982 .. .. | 1,947 | 658.2 | 33.8 |
| 1983 .. .. | 1,907 | 691.6 | 36.3 |

| ஆண்டு. | | | விற்கப்பட்ட சந்தன மரங்களின் அளவு. | வருவாய். | ஒரு மெட்ரிக் டன்னுக்கு சராசரி விலை. |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) (மெட்ரிக் டன்னில்.) | (3) இலட்சம் ரூபாய்.) | (4) (ஆயிரம் ரூபாய்.) |
| 1984 | .. | .. | 2,000 | 811.4 | 40.6 |
| 1985 | .. | .. | 2,089 | 1,331.8 | 63.7 |
| 1986 | .. | .. | 1,919 | 1,501.0 | 78.1 |
| 1987 | .. | .. | 1,691 | 1,901.9 | 112.4 |
| 1988 | .. | .. | 1,032 | 1,196.5 | 115.8 |

குறிப்பு.—இந்திய அரசின் ஏற்றுமதிக் கொள்கை மற்றும் வருமான வரி விதிப்பின் காரணமாக குறைந்த அளவிலான சந்தன மரங்கள் மட்டுமே ஏலத்தில் கேட்கப்பட்டன.

5.9. காடுபடு சிறு பொருட்களின் விற்பனை மற்றும் வருவாய்·

காடுபடு சிறு பொருட்களின் உற்பத்தி, மற்றும் சேகரிப்பு வெறும் வணிக நோக்கத்தில் மட்டும் செய்யப்படுபவை அல்ல. கிராமப் புறங்களிலும், வனப் பகுதிகளிலும் வாழும், சமூக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பின் தங்கியுள்ள மக்களின் மேம்பாட்டுக்காவும், காடுகளில் இரண்டறக் கலந்து வாழும் பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகவும் பயன்பட வேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடன்தான் இந்த காடுபடு பொருட்கள் சேகரிக்கும் உரிமை விற்பனைக்கு விடப்படுகின்றன. காடு களிலிருந்து, மரப் பொருட்களையும், புளி, கறிவேப்பிலை, கடுக்காய், பிரம்பு முதலான காடுபடு சிறு பொருட்களையும் குத்தகை அடிப்படையில் சேகரித்துக் கொள்ளும் உரிமம், ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடி மக்களுக்காக நடத்தப்படும் கூட்டுறவு சங்கங்களுக்கு நர்ணயிக்கப்பட்ட நியாயவிலையைவிட 10 விழுக்காடுகள் குறைவான விலைக்கே குத்தகைக்கு விடப்படு கிறது. மேற்படி கூட்டுறவு நிறுவனங்கள் இந்த சலுகையைத் தவறுதலாகப் பயன்படுத்துவதைக் கண்டறிய நேரிட்டால் வெளியாருக்கு பொது ஏலம் மூலமாக குத்தகைக்கு விடுவதோ அல்லது துறை மூலம் சேகரிப்பதோ அனுமதிக்கப்படு கிறது. 1987—88 இல் காடுபடு பொருட்களின் விற்பனை மூலம் ரூ. 76.8 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டது. கடந்த சில ஆண்டுகளில், தர்மபுரி, சேலம், வட ஆற்காடு மற்றும் தென் ஆற்காடு மாவட்டங்களில் உள்ள புளியன் தோட்டங்களில் பண்ணை நிர்வாக முறையில் தீவிரமான வன இயல் செயற்பாடு களைப் பின்பற்றி வருகிறோம். இதன் விளைவாக, எதிர் காலத்தில் புளியன் தோட்டங்களின் வாயிலாகக் கிட்டும் வருவாய் வெகுவாக உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



6. மாநில திட்டப் பணிகள்.

6.1. நிதி ஒதுக்கீடு:

வனப்பாதுகாப்பு மற்றும் வன அபிவிருத்தி நோக்கம் கொண்ட பல்வேறு வன அபிவிருத்தித் திட்டங்களை, மாநில திட்டப் பணிகளின்கீழ், அரசு செயல்படுத்திவருகிறது. 1987-88ல் ரூ.2,136.62 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இது தவிர, 1987–88-ல் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரு. 503.63 இலட்சம் செலவிடப்பட்டது. 1988-89 ஆம் நிதியாண்டில், ரூ. 2,189.30 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டது. இதில், பிப்ரவரி 1989வரை ரு, 1,854.00 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. 1989-90 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,384.88 இட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.2. நிர்ணயிக்கப்படுள்ள பணி இலக்கு:-

1981-88, 24,845 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்பபப்பட்டுள்ளன. 1988-89இல் 29,400 எக்டேர் பரப்பிற்கு தோட்டங்கள் எழுப்ப இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் பிப்ரவரி 1989 வரை 24,900 எக்டேரில் தோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1989-90 இல் 26,000 எக்டேர் ரப்பில் வனத் தோட்டங்கள் எழுப்ப உத்தேசிக்கப் டுள்ளது.

ட
19 முன்னேற்ற திட்டங்கள் குறித்து சில முக்கிய விளரங்கள்
டா

த ல்வேறு திட்டப்டணிகளின் கீழ் 1988—89 இல் செய்யப்பட ஆற செலவு மற்றும் 1989-90 க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விபரங்கள் பின்வருமாறு:

6
செல
பட்ட.

மர

மரம்

வரி

தொகு

பொழு
7

| திட்டம். (1) | 1988-89ல் எதிர்பார்க்கப்படுகிற சாதனை. பணி (எக்டேரில்) (2) | நிதி (ரூ. லட்சத்தில்) (3) | 1989-90-க்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அளவு. பணி (எக்டேரில்) (4) | நிதி (ரூ. லட்சத்தில்) (5) |
|---|---|---|---|---|
| 1. முந்திரி தோட்டங்கள் .. | தோ. 80<br>தீ.க.ப. 500 | 7.20 | தோ. 90<br>தீ.க.ப. 360 | 7 05 |
| 2. கூழ்மர தோட்டங்கள் .. | தோ. 2,310<br>தீ.க.ப. 2,419 | 131.73 | தோ: 2,145<br>தீ.க.ப. 400 | 131.85 |
| 3. தேக்குமர தோட்டங்கள் .. | தோ. 262<br>தீ.க.ப. 40 | 12.10 | தோ. 520<br>வ.தோ. 10 கி.மீ. | 10.91 |
| 4. மென்மரத் தோட்டங்கள் .. | தோ. 110 | 4.61 | தோ. 105 | 4.19 |
| 5. மிலாறு தோட்டங்கள் .. | இ.ம. 1,200<br>அ.கு. 1,300 | 12.96 | இ.ம. 1,240<br>அ.கு. 1,300 | 12.04 |
| 6. விறகு மர தோட்டங்கள் .. | தோ. 4,000 | 145.30 | தோ. 4,700 | 145.18 |
| 2. சந்தனமரத் தோட்டங்கள் | வ.ஊ. 295 | 44.46 | வ.ஊ. 295 | 38.04 |
| மொத்தம் .. | தோ. 7,962<br>தீ.க.ப. 740<br>வ.ஊ. 295<br>அ.கு. 1,300 | 358.36 | தோ. 8,600<br>தீ.க.ப. 760<br>வ.ஊ. 295<br>அ.கு. 1,300 | 349.30 |

அ.கு.—அடர்த்தி குறைத்தல்.
வ.தே.—வரிசை தோட்டங்கள்.
இ.ம.— இயற்கை மறு உற்பத்தி.



1989 ஏப்ரல் 20]

6.4. சிடா நிதி உதவியுடன் செயல்படும் சமூகக் காடுகள் திட்டம்:

6.4.1. சமுதாய நிலங்களில காடுவளர்க்கும் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. 1960-ம் ஆண்டு முதலே காப்புக்காடுகளுக்கு வெளியே கிராமப்புறங்களிலும், தரிசு நிலங்களிலும் காடு வளர்க்கும் திட்டம் வனப்பண்ணை திட்டம் என்ற பெயரில் செயல்பட்டு வந்தது. 1970-ம் ஆண்டுவாக்கில் தேசிய விவசாய குழுவின் இடைக்கால பரிந்துரையின்படி வன விஸ்தரிப்பு திட்டம் கலப்பின தோட்டங்கள் மற்றும் கிராமப்புற தோட்டங்கள் ஆகிய இதர திட்டங்களும் உள்ளூர் மக்களின் பங்கு கொண்டு இருப்பிலுள்ள நிலங்களில் செயலபடுத்தப்பட்டு வந்தது.

9.4.2 சமூக நலக் காடுகள் திட்டம் கட்டம் 1:

மாநிலத்தில சமூகக்காடு வளர்ப்புத் திட்டங்களை தீவிரமாக்க வேண்டியதன் முக்கியத்தை உணர்ந்து 1981-ல் 70 விழுக்காடு ஸ்வீடன் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவன உதவியுடன் மேற்காண் திட்டங்களனைத்தையும் ஒருங்கிணைத்து, கிராமப்புற மக்கள் பெருக்கத்திற்கு தேவைப்படும் விறகு, மூங்கில், சிறு மரங்கள், கால்நடை தீவனம், புல், பழங்கள், எண்ணெய்வித்து மற்றும் காடுபடு சிறு பொருட்கள் ஆகியவற்றை ஈடுசெய்யும் சீரிய நோக்கத்துடன் சமூகநலக் காடுகள் திட்டம் செயலபடுத்தப்பட்டது. இதன் முதல் கட்டம் 5 ஆண்டுகளில் ரூ. 45 கோடி செலவில 1981-86 வரை செயல்படுத்த திட்டம் வரையப்பட்டது. இரண்டாம் கட்டப்பணிக்கான 5 ஆண்டுகளுக்கு திட்டம் தயாரிப்பதற்கு காலம் தேவைப்பட்டதால் இது 1988 ஏப்ரல் வரை தொடரப்பட்டது.

6.4.3. முதலாம் கட்டப் பணிக்காலத்தில் ரூ. 57.10 கோடி செலவில கீழ்க்காண் காடுவளர்ப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மரம் வளர்ப்பு ஊக்கத் திட்டம் | 50.86 மிலலியன் செடிகள். |
| மரம் வளர்ப்பு நீட்டிப்புத் திட்டம் | 131.33 மிலலியன் செடிகள். |
| வரிசைத் தோட்டங்கள் | 8.819 கி.மீ. |
| தொகுப்பு தோட்டங்கள் | 140363 எக்டேர் |
| பொழுதுபோக்குக் காடுகள் | 0.79 மில்லியன் செடிகள்; |

6.4.4. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணி:

சிடா உதவி பெறும் சமூகநலக் காடுகள் திட்ட இரண்டாம் கட்டப்பணி தமிழ்நாட்டில் 1988–89 முதல 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாநில அரசு ஒப்புதலளித்தபின் மத்திய அரசும் ஏற்றுக்கொண்டு இந்திய மற்றும் ஸ்வீடன் அரசுகளுக்கிடையே 25-10-1989–ம் தேதியன்று ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது,

வனத்துறையின் சமூகநலக் காடுகள் பிரிவால் மட்டும் செயல் படுத்தப்பட்ட முதல் கட்டம் போலல்லாமல், இரண்டாவது கட்டம் வனம், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டுத்துறை ஆகிய மூன்றும் இணைந்து செயற்படுத்தப்படும். சமூகக்காடுகள் கட்டம் 2-ஐ செயல்படுத்துவதன் மேற்பார்வை மற்றும் கண் காணிப்பு ஆகியவை வனத்துறையின் பொறுப்பாகும்.

வன முகப்புத் தோட்டங்கள், தரிசுநில மேம்பாடு, வறண்ட நிலங்களில் வேளாண்மை காடுகள் வளர்த்தல், மரபட்டா உரிமம் வழங்குதல் ஆகிய சில புதிய நோக்குத் திட்டங்கள் சமூக நலக் காடுகள் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் செயல்படுத்தப் படவுள்ளன.

6.4.5. இந்த திட்டத்திற்கு 1988-89 முதல் 1992–93 வரையான 5 ஆண்டு காலத்திற்கு 85,40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டம் வனச் சொத்துக்களை ஏற்படுத்தவும் அவற்றை பராமரிக்கவும் உள்ளூர் மக்களை ஊக்குவித்து, அவர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துவதையும் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. அவை வருமாறு:

(அ) கிராம மக்களிடையே மரத்தோட்ட வளர்ப்புத்திறனை ஏற்படுத்துதல்.

(ஆ) வேளாண்மைக் காடு வளர்ப்பு திட்டத்தை கடைபிடித்து அதன் மூலம் விவசாய நிலங்களின் உற்பத்தியைப் பெருக்குதல்.

(இ) பொது மக்களின் அன்றாட அடிப்படைத் தேவையான விறகு, கால்நடை தீவனம், சிறுமரம், பசுந்தாள் உரம், பழவகைகள், எண்ணெய்வித்துக்கள் ஆகியவற்றைப் பெருக்குதல்.

(ஈ) சுயவேலை வாய்ப்பை அளித்தல்,

(உ) சமுதாய காடுகளில் வன உற்பத்தி மற்றும் தேவையான நாற்றங்கால் வளர்த்தலை கிராம மக்களிடையே பரவலாக்குதல்

(ஊ) பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு உதவியளித்தல.

(எ) இயற்கைச் சூழலை மேம்படுத்தி சுற்றுச்சூழலை மாற்றியமைத்தல்.



6.4.6. இத்திட்டத்தின் கீழ் 1987-88ல் 1,077.67 லட்ச ரூபாய் செலவிடப்பட்டது. 1988-89-ல் 1050.66 லட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1989–90-ம் ஆண்டிற்கு 1,266.16 லட்ச ரூபாய் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

6.5. மத்திய அரசு சார்பு திட்டம்-ஊரக விறகு மர உற்பத்தி மற்றும் இமயமலை சாராத பகுதிகளில் மரம் வளர்ப்புத் திட்டம் :

கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விறகு பற்றாக் குறையைப் போக்கவும் உற்பத்தி திறனை பெருக்கவும் இதர பிரச்சினைகளைத் தீர்த்து பாதுகாப்பு அளிக்கவும், இம்மாநிலத்திலுள்ள கிராமத்தரிசு நிலங்களிலும், வளர்ச்சி குறைந்த காடுகளிலும், கடற்கரை பகுதி நிலங்களிலும் சாலைகள், கால்வாய்கரைகள், குளங்கள், ரயில்வழித்தடங்கள் முதலியவற்றின் ஓரமாக உள்ள நிலங்களிலும் விறகு மரத்தோட்டம் எழுப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முதல மூன்று வருடங்களில் வேலை மற்றும் நிதி இலக்குகளில் ஏற்பட்ட முன்னேற்றமும், அடுத்து இரண்டு ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம் குறித்த விபரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வரிசை எண் மற்றும் பொருள். | சாதனை, 1985–86 முதல் 1987–88 வரை. | குறியீடு, 1988–89 | குறியீடு, 1989–90. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பணிகள் : | | | |
| 1. தொகுதி தோட்டங்கள் (எக்டேர்) | 10,909 | 4000 | 4000 |
| 2. வரிசை நடவு தோட்டங்கள் (கி.மீ.) | 619 | 15 | 15 |
| 3. மரக்கன்றுகள் விநியோகம் (லட்சம்) | 334.70 | .. | .. |
| நிதி (முழுமதிப்பு) (ரூபாய் இலட்சத்தில்) | 392.09 | 147.22 | 167.56 |

6.6 இதர சமூகக் காடுகள் திட்டங்கள் :

6.6.1. இத்திட்டத்தின்கீழ் (1) தரம் குன்றிய காடுகளில் மீண்டும் தோட்டங்கள் எழுப்புதல், (2) தேசிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள், (3) கடலோரக்காடு வளர்ப்புத்

திட்டங்கள் முதலியவை செயற்படுத்தப்படுகின்றன. காடுகளின் உற்பத்தித் திறனை பெருக்கவும், விறகு எரிபொருள், தடி மரம் முதலியவற்றின் பற்றாக்குறையைப் போக்கவும், தரம் குன்றிய காடுகளில் எரிபொருள் விறகு தோட்டங்கள் மற்றும் மரத் தோட்டங்கள் வளர்க்கும் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1987–88ஆம் ஆண்டு வரை 9,554 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பும் பணியும். இதன் தொடர்பாக ரூ. 254.34 இலட்சம் செலவும் செய்யப்பட்டுள்ளது. 1988–89ஆம் ஆண்டிலும் இத்திட்டம் ரூ. 101.00 இலட்சம் முதலீட்டில் தொடரப்பட்டுள்ளது. 1989–90ஆம் ஆண்டிற்கு ரூ. 125.64 இலட்சத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6.6.2. தேசிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் :

இந்த புதிய திட்டத்தின் கீழ் 1987–88 ஆம் ஆண்டு முதல் விறகு மர தோட்டம் மற்றும் கால்நடைகளுக்குத் தேவையான தீவனத் தோட்டங்களும் எழுப்பப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்காகும் செலவை ஸ்வீடன் நாட்டு நிதி உதவியுடன் செயற்படுத்தப்படும் சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் கணக்கிட அரசு ஆணை வழங்கியுள்ளது.

6.6.3. இத்திட்டத்தின்கீழ் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு வரும் திட்ட வேலைகளைத் தவிர 1989–90ஆம் ஆண்டிற் கான பகுதி-2 திட்டத்தின் கீழ், செங்கற்பட்டு மாவட்டத்தில் மரங்கள் அழிந்துபட்ட மலைப் பகுதிகளில் 750 எக்டேர் பரப்பில் ரூ. 25.25 இலட்சம் செலவில் தோட்டங்கள் எழுப்பும் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. உற்பத்தித் திறனை பெருக்கும் வகையில் இத்திட்டத்தின்கீழ் பதியன்போடும் முறையிலும், செடிகளை ஒட்டவைத்து தோட்டம் எழுப்பும் முறையிலும் பல்வேறு தொழில் நுட்பத்தின் அடிப்படையில் தோட்டங்கள் எழுப்பவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த தொழில் நுட்பத்தின் அடிப்படையில் இத்திட்டத்தினை செயல்படுத்த தோட்டக் காவலராக பணியாற்றும் பணியாளர் களில் 100 பேரை தேர்ந்தெடுத்து பயன்படுத்திக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை செயல்படுத்த 1989-90 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ரூ. 3.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.7.1. காடுபடு சிறு பொருள் தோட்டங்கள் :

அரசின் வருவாயை பெருக்கும் வகையில் காடுபடு சிறு பொருள்களை விளைவிக்கும் புளி, கடுக்காய், சீக்காய் முதலிய தோட்டங்கள் எழுப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை பண்ணை மேலாண்மை அடிப்படையில் கீழ்க் கண்ட மூன்று பகுதிகளாக பிரித்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

(1) எண்ணெய் வித்துக்கள் பண்ணை.
(2) புளியன் பண்ணை
(3) பழப் பண்ணை





இத்துடன் தொகுப்புத் தோட்டம் மற்றும் வரிசை நடவுத் தோட்டம் எழுப்புதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.100.00 இலட்சம் செலவில் 3,500 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்ப வகை செய்யப்பட்டுள்ளது. ஏழாவது திட்ட காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் மொத்தம் 3,279 எக்டேர் பரப்பில் தொகுப்புத் தோட்டங்களும், 296 கி.மீ. வரிசை நடவு தோட்டங்களும், 1,259 எக்டேர் பரப்பில் தீவிர பண்படுத்தும் பணியும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த முதல் மூன்று ஆண்டுகளில் ரூ. 149.39 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து செயல்பட்டு வரும் திட்டப் பணிகளைத் தவிர 1988–89ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலமோர் எஸ்டேட்டில் கிராம்பு தோட்டம் எழுப்பும் பணி செயற்படுத்தப் பட்டு வருகிறது. 1987–88ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 56.81 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டு 1988–89ஆம் ஆண்டு ரூ. 72.79 இலட்சத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1989–90ஆம் ஆண்டில் தொடர்ந்து இத்திட்டத் தை செயல்படுத்த ரூ. 62.23 இலட்சம் நிதி ஒதுக்கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

6.7.2. பொதுமக்கள் நாற்றங்கால் திட்டம் :

பயன்தரத்தக்க நீர்நில வளமுடைய விவசாயிகளை மரம் வளர்க்கும் பணியில் ஈடுபட ஊக்குவிக்கவும், அதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தவும் ''பொது மக்கள் நாற்றங்கால்'' என்ற மத்திய அரசு உதவி பெறும் திட்டம் 1987–88ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு செயற் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஒரு நாற்றங்கால் விவசாயி வனத்துறையின் தொழில் நுட்ப ஆலோசனையுடன் மண், நீர், தட்பவெப்ப நிலைக்கு சாதகமானதும் உள்ளூர் மக்களின தேவையை நிரப்பக்கூடியதுமான மர இன வகை களைத் தேர்வு செய்து நாற்றங்கால் வளர்க்க வேண்டும். நாற் றங்கால் எழுப்புவோர் சந்தை நிலவரப்படி செடிகளுக்கு விலை நிர்ணயம் செய்து விற்கலாம். அவர்களுக்கு நல்ல தரமுள்ள செடி ஒன்றுக்கு ரூ. 0.45 பைசா வீதம் உதவித் தொகை வழங்கப்படும். அவர்களால் விற்க முடியாத மீதியாக உள்ள செடிகளை வனத்துறை நடுவதற்கு விலை ஏதுமின்றி எடுத்துக் கொள்ளும்.

இத்திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு ரூ. 117.50 இலட்சம் 1987–88 முதல் 1989–90 வரை மூன்று ஆண்டு களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. 1987–88 மற்றும் 1988–89 வரை இத்திட்டத்தின் கீழ் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்ட ரூ. 27.59 இலட்சம் செலவில் வளர்க்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 62.00 இலட்சம் கன்றுகளாகும். 61.77 இலட்சம் மரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

6.8.: இயற்கை பாதுகாப்பு திட்டம் மற்றும் வன உயிரின பாதுகாப்பு திட்டம்.

6.8;1. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வன உயிரின உய்விடங்களில் அபிவிருத்தி வேலைகள் செயற்படுத்துவது இந்த திட்டத்தின் நோக்கமாகும். மேலும் மத்திய அரசு நிதி உதவி பெறும் திட்டங்களின் மூலமும், மாநில அரசு திட்டத்தின் மூலமும் வன உயிரின உய்விடங்களில் பல்வேறு தாவரம் மற்றும் விலங்கின் இயற்கையான சூழலை ஏற்படுத்தும் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏழாவது ஐந்தாண்டு திட்ட ஒதுக்கீடு தொகையான ரூபாய் 420 லட்சத்தில் முதல் மூன்று ஆண்டுகளில் மட்டும் 6,61.98 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

6.8:2 வன உயிரின உய்விடங்களின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் (மைய அரசு நிதி உதவியுள்ள திட்டங்கள் உள்பட) செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

| (1) | 1987–88 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீடு. (2) | 1988–89 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு. (3) | 1989–90 ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீடு. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 1 இயற்கை யாதுகாப்பு திட்டம். | 42.31 | 48.05 | 46.75 |
| 2 கடல் உயிரின பூங்கா அமைத்தல். | .. | .. | .. |
| 3 அறிஞர் அண்ணா உயிரின பூங்கா. | 166.20 | 100.81 | 100.26 |
| 4 சிங்கவால் குரங்கு சரணாலயம் அமைத்தல் (மத்திய அரசு உதவியுடன்). | 1.66 | 4.00 | 4.00 |
| 5 கோடியக்கரை வன உயிரின உய்விட அபிவிருத்தி திட்டம் (மத்திய அரசு உதவி பெறும் திட்டம்). | 1.32 | 2.30 | 2.70 |
| 6 முதுமலை வன உயிரின உய்விட அபிவிருத்தி திட்டம் (மத்திய அரசு உதவி பெறும் திட்டம்). | 3.57 | 3.50 | 3.50 |
| 7 முதலைப் பண்ணை அமைத்தல் (மத்திய அரசு உதவி பெறும் திட்டம்). | 1.21 | 1.12 | 1.16 |
| 8 நீலகிரி வரையாடு (முகுர்தி) வன உயிரின உய்விட திட்டம் (மத்திய அரசு உதவி பெறும் திட்டம்). | 1.48 | 1.75 | 176. |
| 9 முண்டந்துறை வன உயிரின உய்விட அபிவிருத்தி திட்டம் (மத்திய அரசு உதவி பெறும் திட்டம்). | 0.14 | 4.50 | 8.75 |
| 10 இந்திரா காந்தி வன உயிரின உய்விட அபிவிருத்தி திட்டம் (மத்திய அரசு உதவி பெறும் திட்டம்). | 3.01 | 2.00 | 2.00 |
| 11 கிண்டி தேசிய பூங்கா அபிவிருத்தி திட்டம் (மத்திய அரசு உதவி பெறும் திட்டம்). | 2.32 | 2.00 | 2.00 |
| | 223.22 | 170.03 | 172.88 |



**6.9. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா :**

6;9.; 1.—வண்டலூரில் நவீனமான உயிரியல் பூங்காவினை 510 எக்டேர் பரப்பில் 7 கோடி ரூபாய் செலவில் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் முதல் கட்ட வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. இரண்டாவது கட்ட வேலைகள் முன்னேறி வருகின்றன. வேலைகள் யாவும் முடிக்கப்பட்டவுடன், இந்த உயிரியல் பூங்கா நம் நாட்டில் மட்டுமின்றி தென்கிழக்கு ஆசியாவிலேயே பெரிய விலங்ககங்களில் ஒன்றாக அமையும். ஒரு சஃபாரி (Safari) பூங்காவினை இந்த உயிரினப் பூங்காவில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

6.9 : 2.—பலவித விலங்கினங்களும், பறவையினங்களும், அயல்நாடுகளிலிருந்தும் நம் நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும் வரவழைக்கப்பட்டு இப்பூங்காவில் வைக்கப்பட்டுள்ளன. விரிவான மற்றும் இயற்கை சூழலில் இப்பூங்கா அமைக்கப்பட்டமையால் சில விலங்கினங்கள் இப்பூங்காவிற்கு வந்த பின் தன் இனத்தைப் பெருக்கியுள்ளன. சமீபத்தில் நீர் யானை குட்டி ஒன்று இங்கு பிறந்தது. மிருகக் காட்சி சாலையில் இவ்வாறு குட்டி பிறந்தது ஒரு அதிசய நிகழ்ச்சியாகும்.

6.9 : 3.—தற்போது 392 விலங்குகள் (57 வகைகள்) 416 பறவைகள் (103 இனங்கள்) மற்றும் 97 ஊர்வன (21 வகைகள்) ஆகியவை இப்பூங்காவில் நன்கு பராமரிக்கப்பட்டு வளர்ந்து வருகின்றன.

6.9:4.— இப்பூங்கா அதிகமாக மக்கள் கூட்டத்தினை ஈர்த்து வருகிறது. சென்ற ஜனவரி 1988 முதல் டிசம்பர் 1988 வரை இப்பூங்காவிற்கு சுமார் 8.06 இலட்சம் பேர் வருகை தந்துள்ளனர். இதன் மூலம் ரூபாய் 10.41 இலட்சம் வருவாய் கிட்டியுள்ளது. பார்வையாளர்கள் வசதிக்காக 4 மின் கலத்தினால் இயங்கும் வாகனங்கள் ரூபாய் 7.1 இலட்சம் செலவில் வாங்கப்பட்டன.

இவற்றைப் பார்வையாளர்கள் பயன்படுத்திய வகையில், 1987–88-ல் ரூபாய் 2.61 இலட்சம் வசூலாயிற்று. 1988–89 ஆம் ஆண்டில் பிப்ரவரி 1989 வரை ரூ. 2.41 இலட்சம் வசூலாகி இருக்கிறது.

6.9: 5.—1987–88–ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூபாய் 166.20 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1988–89 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 100.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1989–90 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்டத்தில் ரூ. 100.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படடுள்ளது. இந்த உயிரியல் பூங்காவை ஒரு கவர்ச்சிகரமான பூங்காவாக மாற்றுவதற்கு எல்லா துரித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 6.31. நீலகிரி உயிரினச் சூழல் பாதுகாப்பு :

6.10 : 1. உயிரின பாதுகாப்புத் திட்டம் என்ற இந்நாளைய புதிய கொள்கை செயலாக்க முறை பரந்த பாரம்பரியமிக்க உயிரினச் சூழலை பாதுகாக்கும் முயற்சியில் ஓர் அங்கமாகும் மேற்கு மலைப் பகுதியின் புவியியலில் உள்ள உயிரினங்களின் முழுமையான தன்மையினைப் பாதுகாக்க வன இயல் பாதுகாப்பு திட்டம் அக்டோபர் 1980-ல் முதலில் நீலகிரிப் பகுதிக்காகத் தயார் செய்யப்பட்டது.



6.10.2. நீலகிரி வன உயிரின இயல் பாதுகாப்புத் திட்டமானது தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களின் பகுதிகளையும் கொண்டதாக செப்டம்பர் 1986 இல் அறிவிக்கை செய்யப்பட்டது. நீலகிரி வன உயிரின பாதுகாப்புத் திட்டம் மூன்று தென் மாநிலங்களின் 5,520 சதுர கி.மீ. வனப் பரப்பினைக் கொண்டுள்ளது. இதில் தமிழகம் மிகுதியான வனப் பரப்பை, அதாவது 2,538 சதுர கி.மீ. பரப்பினைக் கொண்டுள்ளது. இதனில் உள்மைய பகுதியாக 274 சதுர கிலோ மீட்டரும், கையாளும் வனப் பகுதியாக (Manip lation Zone) 2,082 சதுர கி. மீட்டரும், சுற்றுலா பகுதியாக 66 சதுர கி. மீட்டரும், முன்னிலை மீட்புப் பகுதியாக 116 சதுர கிலோ மீட்டரும் அமைந்துள்ளன. முதுமலை, சத்தியமங்கலம், ஈரோடு நீலகிரி வடக்கு, நீலகிரி தெற்கு மற்றும் கோவை வனக் கோட்டம் பகுதிகளை உள்ளடக்கிய நீலகிரி, கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் இப்பகுதி அடங்கும்.

6.10.3 1987-88 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல் படுத்த ரூ. 25.50 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. 1988-1989 ஆம் ஆண்டில் ரூ. 58.00 இலட்சம் அளவில் இத் திட்டத்தினை செயல்படுத்த பல்வேறு பணிகளை உள்ளடக்கிய செயல் திட்டம் வடிவமைத்து மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசு இச் செயல் திட்டத்தினை நடைமுறைப்படுத்த ரூ. 25.00 இலட்சம் விடுவித்துள்ளது.

## 6.11 தேசிய கடல்வாழ் உயிரின பூங்கா :

மன்னார் வளைகுடாவின் வன உரினச் சூழல் பாதுகாப்பு திட்டமானது தற்போது மத்திய அரசின் விருப்பத்திற்கு ஏற்ப மாநில வனத்துறையில் தலைமை வன உயிரின காப்பாளரின் கீழ் இயங்கும் வன உயிரின பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த தேசிய கடல்வாழ் உயிரின பூங்காவானது 21 தீவுகளைக்கொண்ட மன்னார் வளைகுடாவிலுள்ளது. இவற்றுள் நான்கு தீவுகள், சிதம்பரனார் மாவட்டத்தின் கிழக்கு கடற்கரை பகுதியையும் மற்ற 17 தீவுகள் ராமநாதபுரம் மாவட்டத்தின் தெற்கு பகுதிகளை உள்ளடக்கிய கடற்கரை தீவுகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. அரசாணை எண் 226, நாள் 3—3—1980 இல் தேசீய கடல் வாழ் உயிரின பூங்காவாக அறிவிக்கை, பிரிவு 35 (1) வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 4072 இன் படி உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த 21 தீவுகளின் மொத்தப் பகுதி 623.12 எக்டேர்களாகும்.

6.11.2. இத்திட்ட செயலாக்கத்திற்காகவும், பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும் பெருந்திட்டம் ஒன்று விரைவில் தயார் செய்யப்பட உள்ளது. ரூ. 535.47 இலட்சம் களுக்கான ஒரு செயல் திட்ட வடிவு தயார் செய்யப்பட்டுப் பரிசீலனையிலுள்ளது.

[1989 ஏப்ரல் 20

## 6.12. களக்காடு—முண்டந்துறை புலிகள் பாதுகாப்பகம்:

6.12.1. இந்த புலிகள் காப்பகம் பராமரிப்பிற்கு தொடரா செலவினங்களுக்கு 100 விழுக்காடும் மற்றும் தொடரும் செலவினத்தில் மைய அரசினால் அனுமதி அளிக்கப்படும் இனங்களுக்கு 50 விழுக்காடு உதவியும் மைய அரசிடமிருந்து கிடைக்கும். மைய அரசு, களக்காடு-முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் செயலாக்கத்திற்கு சில பதவிகளை உருவாக்க ஒப்புதல் அளித்துள்ளது.

6.12.2. 1988–89 ஆம் ஆண்டில் திட்ட செயலாக்கத்திற்கு ரூ. 19.81 இலட்சங்கள் மைய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் தொடரா செலவினமாக ரூ. 14.40 இலட்சங்கள் 100 விழுக்காடு மைய அரசின் உதவி கூடியதாகவும், மீதமுள்ள ரூ. 5.41 இலட்சங்கள் தொடரும் செலவினம் 50:50 என்ற விகிதத்தில் மைய மற்றும் மாநில அரசினால் பகிர்ந்து கொள்ளப்படும். களக்காடு வன உயிரின பகுதியில் நிலம் கையகப்படுத்துவதற்காக ரூ. 80.00 இலட்சங்கள் மைய அரசு நிதி உதவி செய்துள்ளது. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 150.00 இலசட்ம் அளவில் புலிகள் காப்பகத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 6.13. பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம்:

6.13.1. மாநிலத்திலுள்ள காட்டுப் பகுதிகளில் மொத்தம் 5.20 இலட்சம் பழங்குடியினர் வசித்து வருகின்றனர். மாநிலத்தின் முழுவதிலும் பழங்குடியினர் வசித்த போதிலும் பழங்குடியினர் துணைத் திட்டப் பகுதி என்று ஐந்து மாவட்டங்கள் மட்டும் இந்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பழங்குடியினர் திட்டப் பகுதி மாவட்டங்களான திருச்சி, தென் ஆற்காடு, வட ஆற்காடு, தர்மபுரி மற்றும் சேலம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் மொத்தம் 2.10 இலட்சம் பழங்குடி மக்கள் உள்ளனர். இவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தும் வகையிலும், காட்டுப் பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கும் வகையிலும், தோட்டங்கள் எழுப்புதல், பழைய தோட்டங்களை பராமரித்தல், பழைய சாலைகளை பராமரித்தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், விடுதி கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் கிராம காடுகள் திட்டம் என்ற தலைப்பின் கீழ் சந்தன மர எஸ்டேட் திட்டம் போன்ற பல வகையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தோட்டங்கள் எழுப்பும் வேலைகளைத் தவிர ஐந்து பழங்குடி கிராம நலக் காடுகள் சந்தன எஸ்டேட் பண்ணைகள் இந்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன.



1989 ஏப்ரல் 20]

இத்திட்டத்தின் கீழ் 42 பழங்குடியினர் கிராமங்களில் வசிக்கும் 2,062 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இதனால் 2.85 இலட்சம் மனித நாட்கள் வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறுகிறது

6.13.2. இத் திட்டத்தின் வேலை மற்றும் நிதி இலக்குகள் சாதனைகள் கீழே தரப்பட்டுள்ளன:—

| | 1987–88 சாதனை. | 1988–89 உத்தேசம். | 1989–90 இலக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 வேலை— | | | |
| தோட்டம் எழுப்புதல் (எக்டேரில்). | 838 எக். | 471 எக். | 670 எக். |
| சாலைத் தோட்டம் (கி. மீட்டரில்). | 31 கி.மீ. | 54 கி.மீ. | 40 கி.மீ. |
| தீவிரப் பண்படுத்தும் பணிகள் (எக்டேரில்). | 625 எக். | 100 எக். | .. |
| 2. நிதி (ரூபாய் இலட்சத்தில்.) | 125.22 | 146.13 | 112.94 |

6.13.3. மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நலப் பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:—

(அ) பயிரிடுவதற்காக 1,990 எக்டேர் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன.

(ஆ) வேலூர், தர்மபுரி, திருப்பத்தூர், சேலம் ஆகிய வனப் பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர் தங்களுடைய கால்நடைகளை மேய்ச்சல் நிலங்களில் இலவசமாக மேய்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வனத்துறையில் தொழிலாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். தகுதியுடைய பழங்குடியினர், வனப் பணியாளர், வனக் காப்பாளர், வனக் காவலாள், யானைப் பாகன், காவடி போன்ற அரசுப் பணிகளில் இத்துறையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(இ) பழங்குடியினருக்காக 16 தொடக்கப் பள்ளிகளையும், ஒரு மேல்நிலைப் பள்ளி, மற்றும் ஒரு உயர்நிலைப்பள்ளியையும் வனத்துறை நடத்தி வருகின்றது. இப் பள்ளிகளில் மொத்தம் 2,395 மாணவர்களும், 109 ஆசிரியர்களும் உள்ளனர். தற்சமயம் பழங்குடியினர் நலனுக்காக இரண்டு உயர்நிலைப் பள்ளி விடுதிகளும், எட்டு ஆரம்பப் பள்ளி மாணவர் விடுதிகளும், வட ஆற்காடு மாவட்டத்தில் செயல்பட்டு வருகினறன. இந்த பத்து விடுதிகள் மூலம் மொத்தம் 750 பழங்குடி மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

(ஈ) டாப்சிலிப்பில் உள்ள மருத்துவமனை ஒரு உதவி மருத்துவர் தலைமையில் இதர மருத்துவப் பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. முதுமலையிலுள்ள மருத்துவ மனை, மருந்தாளுநர் மற்றும் ஒரு பகுதி நேர ஊழியரின் உதவி யுடன் செயல்பட்டு வருகிறது.

(உ) பழங்குடியினருக்கு பயனளிக்கும் வகையில் 19 தொழி லாளர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காடுபடு சிறுபொருட்கள் இக்கூட்டுறவு சங்கங்களுக்கு 10 சதவீதம் சலுகை விலையில் குத்தகைக்கு விடப்படுகின்றன.

(ஊ) தமிழ்நாடு அரசு சத்துணவு திட்டத்தின் கீழ் 5 வயது முதல் 15 வயது வரையிலும் பயிலும் 2,395 பழங்குடியினரின் பிள்ளைகளுக்கு வனத்துறையால் நடத்தப்படும் எல்லாப் பள்ளி களிலும் சத்துணவு வழங்கப்படுகிறது. பள்ளி சீருடைகள், எழுது பலகைகள் மற்றும் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

(எ) பழங்குடியினரின் குடிசைத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களான மூங்கில், பிரம்பு மற்றும் சிறிய மரங்கள் முதலியன சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. மேலும் விவசாயம் செய்வதற்குத் தேவையான சிறிய மரம், விறகு மற்றும் வனப் பொருட்கள் இலவசமாக பழங்குடியினருக்கு வழங்கப்படுகின்றன.

(ஏ) காப்புக் காட்டிற்குள் பழங்குடியினர் தங்களது நிலங் களின் உடைமையை மாற்ற அனுமதிக்கப்படுவதில்லை.

(ஐ) பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் அவர்கள் வாழும் பகுதிகளில், இத்துறையினரால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன:—

1. தோட்டங்களை வளர்த்தல்—வருடத்திற்கு சுமார் 1,000 எக்டேர்.

2. பழங்குடியினரின் பகுதிகளில் சாலை போடுதல்—வருடத்திற்கு சுமார் 5 முதல் 10 கி.மீ. வரை.

3. பள்ளிக் கட்டிடங்கள், ஆசிரியர்களுக்கு மற்றும் பாதுகாப்பு வனப் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல்—வருடத்திற்கு 5 முதல் 10 வரை குடியிருப்பு இல்லங்கள் களும் ஒன்று அல்லது இரண்டு பள்ளிக் கட்டிடங்களும்.

## 7. மண் நீர்வளப் பாதுகாப்பு:

7.1.1. வனத்துறையில் செயல்படுத்தப்படும் நீர்ப் பிடிப்பு பகுதி பாதுகாப்பு மற்றும் காடு வளர்ப்பு பணிகளை காப்புக் காடுகளுக்குள் உள்ள 14 முன்னுரிமை நீர் பிடிப்புப் பகுதிகளில் மேற்கொள்வதற்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1985—90) 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



7.1.2. வைகை மண்வளப் பாதுகாப்புத் திட்டம்:

வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஏற்படும் மண் அரிப்பைக் குறைப்பதற்கு பல்வேறு மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். வைகை அணையில் தாழ்வான, நீரில் மூழ்கும் பகுதிகளில் வண்டல் படிவதையும், மண் அரிப்பையும் தடுக்கவும், காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் சாதனை விவரங்கள் மற்றும் 1989-90 ஆம் ஆண்டு இலக்குகளின் விவரம் வருமாறு:—

| | 1987–88. | | 1988–89. | | 1989–90. | |
|---|---|---|---|---|---|---|
| | வேலை இலக்கு. | நிதி. | வேலை இலக்கு. | நிதி. | வேலை இலக்கு. | நிதி. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | (எக்டேர்) | (ரூபாய் இலட்சத் தில்) | (எக்டேர்) | (ரூபாய் இலட்சத் தில்) | (எக்டேர்) | (ரூபாய் இலட்சத் தில்) |
| தோட்டம் எழுப்புதல். | 255 | 20.79 | 200 | 28.72 | 225 | 28.72 |
| சூழியல் நிலை நிறுத்துதல். | .. | .. | 400 | .. | 400 | .. |

[1989 ஏப்ரல் 20

7.1.3. மேட்டூர் மண்வளப் பாதுகாப்புத் திட்டம்:

மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்க நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மண்
அரிப்பைத் தடுப்பதும், வண்டல் படிவதைக் குறைப்பதும், இத்
திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இப்பகுதியில், காடு
வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏராளமான
தரிசு நிலங்கள் உள்ளன.

வேலை இலக்கு—எக்டேரில் நிதி—(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1987-88 | | 1988-89 | | 1989-90 | |
|---|---|---|---|---|---|---|
| | வேலை இலக்கு | நிதி | வேலை இலக்கு | நிதி | வேலை இலக்கு | நிதி |
| தோட்டங்கள் எழுப்புதல். | 1220 | 67.77 | 1000 | 65.10 | 1000 | 66.27 |

7.1.4. பொன்னையாறு மண்வளப் பாதுகாப்புத் திட்டம்:

பொன்னையாறு நீர்த்தேக்கப் பகுதியில் காடு வளர்ப்பு
மற்றும் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுவதே
இத்திட்டத்தின் நோக்கமாகும். 1987-88-ல் தர்மபுரியில் புதிய
கோட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, ஆரம்ப வேலைகளுக்காக,
13.40 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ·1988-89 ஆம்
வருடத்தில் இத்திட்டத்தின் கீழ் 35.13 இலட்சம் ரூபாய் செலவில்
726 எக்டேர் நிலப்பரப்பில் காடு வளர்ப்பு பணிகளும், மண்வளப்
பாதுகாப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
1989-90 ஆம் வருடத்தில் ரூபாய் 32.85 இலட்சம் ரூபாய்
செலவில் 400 எக்டேர் நிலப்பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள்
மற்றும் மண்வளப் பாதுகாப்பு பணிகளையும் மேற்கொள்ள
உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

8.1. நீலகிரி மாவட்டத்தில், வருவாய்த்துறை பதிவேடு
களின்படி மொத்த நிலப்பகுதியில் சுமார் 55 விழுக்காடு வனப்
பரப்பிலுள்ளது. ஆனால், வானிலிருந்து எடுக்கப்பட்ட நிழற்
படம் மற்றும் நில அளவையின்படி, இயற்கை மற்றும் நிலையான
மரங்கள் அடர்ந்த வனப்பரப்பு மிகக் குறைவானதாக உள்ளது.
நிலையான பசுமைச் சூழலை அதிகமாக்குவதுடன், அதனை
சீர்செய்து இயற்கை வனச் சூழலில் மனிதனுடைய தலையீட்டினை
தவிர்ப்பதும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் இரு முக்கிய
நோக்கங்களாகும், ஆகையினால், ஏழாவது திட்ட காலத்தில்
மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வனமேம்பாட்டுத்
திட்டங்கள் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு செயற்படுத்
தப்பட்டு வருகின்றன.



1989 ஏப்ரல் 20]

8.2. வனத்துறையில் பல்வேறு காடு வளர்ப்பு திட்டத்தின்கீழ்
பொட்டல் சரிவுகளில் செம்மரம் மற்றும் அதன் தொடர்புடைய
மரங்கள் வளர்த்தல், மரஞ்சூழ்ந்த பசுமை கானகத்தை தக்க
வைத்தல் மற்றும் இயற்கை இனங்களுடன் சேர்ந்த அன்னிய மர
வகைத் தோட்டங்களை எழுப்புதல் போன்ற பணிகள் மேற்
கொள்ளப்பட்டுள்ளன. 1987-88-ல் ரூபாய் 151.53 இலட்சம்
அளவில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. 1988-89 ஆம்
ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள செலவு ரூபாய் 160.01 இலட்ச
மாகும்.

8.3. தொடர்ந்து செயற்படுத்தப்பட்டுவரும் அனைத்து
திட்டங்களும் 1989–90 ஆம் ஆண்டில் ரூபாய் 200.01 இலட்சம்
செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மிக முக்கிய
மான நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

500 எக்டேர் பரப்பளவில் மீண்டும் காடு வளர்த்தல், 225
எக்டேரில் செம்மரத் தோட்டம் எழுப்புதல், 40 எக்டேரில்
நடுத்தர பசுமையான காடுகளின் மரச்சூழலை காத்து தக்க
வைத்தல், 20 எக்டேர் பரப்பளவிற்கு அன்னியவகை இயற்கை
செடிகளைக் கொண்டு தோட்டம் எழுப்புதல், 150 எக்டேர்
பரப்பளவில் கம்பிவலை வேலி அமைத்து, அருகிவரும் மரவகை
இனங்களையும் காடுகளையும் பாதுகாத்தல், மண் மற்றும் நீர்
வனப்பாதுகாப்பிற்கென 24 தடுப்பு அணைகள் (check dams)
கட்டுதல், ஆக்கிரமிப்பிலிருந்து வனப்பரப்பைப பாதுகாக்க 1,000
எல்லைக் கற்கள் அமைப்பது ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட
வுள்ளன.

9. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்:

வனத் திட்டங்கள், (1) உயிரின வாழ்க்கைச் சூழல் அமைப்பை
பாதுகாக்க உதவும் வகையில் இயற்கை சூழலின் மாறாத
தன்மையை சமநிலையில் வைக்கவும், அதன் வளத்தை பெருக்கு
வதையும், (2) மனித குலத்தின் ஊடுருவல் செயல்களால் நிகழும்
இயற்கை மற்றும் சுற்றுச் சூழலில் நிகழும் பாதகங்களை சரிப்
படுத்துவதும், (3) உயிரினச் சூழல் தன்மையைப் பேணுதலும்,
(4) இயற்கை சூழலைப் பாதுகாத்து பேண வேண்டியதன்
அவசியத்தை மக்கள் உணரச் செய்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்து
வதையும், (5) ஆறுகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், நீர் வளத்தை
அதிகரிக்க பசுமைச் சூழலை மேம்படுத்தித் தக்க வைத்தலையும்,
முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வன மேம்பாட்டிற்கு
ரூபாய் 471.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வைகை நீர்ப்பிடிப்புப் பகுதியில் மண் அரிப்புக்கு உட்பட்டு
பயன்படாமலிருக்கும் வரண்ட சரிவு பகுதிகளில் மண்வளப்பணி
களும் புதிய தோட்டங்களும் உருவாக்கப்பட்டு, தொடர்ந்து
பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

1987-88-ல் இத்திட்டம் ரூபாய் 136.81 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. 1988-89-ல் வனத் திட்டங்களுக்காக ரூபாய் 190 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, 1989-90-ல் இப்பணிக்கு ரூபாய் 190 இலட்சம் நிதி ஒதுக்கீடு செயயப்பட்டு உள்ளது.

10. புதிய 20 அம்ச திட்டம்—மரம் வளர்ப்பு.

தமிழக அரசு வனத்துறை, கிராமப்புற ஏழை மக்களையும், நலிந்த பிரிவினரையும்மேம்படுத்துவதற்காக புதிய இருபது அம்ச திட்டத்தை தீவிரமாக செயல்படுத்தி வருகின்றது.

புதிய 20 அம்ச திட்டத்தின் இனம் 16-ன்படி, பொது மக்களின் முழுமையான ஈடுபாட்டுடன் அதிக அளவில் மரங்கள் வளர்ப்பதும், வன வளத்தை பெருக்குவதும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். மலைச்சாதி மற்றும் பழங்குடியினரின் பாரம்பரிய உரிமைகள் காக்கப்படவும், கிராமப்புற மற்றும் உள்ளூர் மக்களுக்கு எரிபொருள், காடுபடு பொருட்கள் எளிதில் கிடைப்பதற்கு ஏதுவாகவும், மலைக் குன்றுகள், தரிசு நிலம் மற்றும் கடலோரப் பகுதிகளில் பொருத்தமான பசுமை மரங்களை வளர்த்து அவற்றை விளை நிலங்களாக்குவதும், முக்கிய நோக்க மாகும். இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலிருந்து 1987-88-ம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டு, பின்வரும் அளவில் மரம் நடும் வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

| இனவிவரம். | 1981-82 முதல் 1987-88 வரை. |
|---|---|
| 1. காடுவளர்ப்பு திட்டத்தின்கீழ் நடப்பட்ட மரக் கன்றுகள். (எண்ணிக்கை இலட்சத்தில்). | 9,622.12 |
| 2. சமூக காடு வளர்ப்பு (நடப்பட்ட பரப்பு எக்டேரில்). | 2,627.23 |
| 3. வனப்பண்ணை திட்டத்தின்கீழ் பொதுமக்கள்/ நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மரக் கன்றுகள் (எண்ணிக்கை இலட்சத்தில்). | 2,576.70 |

1983-88-ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு குறியீடு அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| விவரம். | அலகு. | 1988-89 குறியீடு. |
|---|---|---|
| வனவளர்ப்பில் புதிய முயற்சிகள் | | |
| (1) நடப்படவேண்டிய மரக்கன்றுகள் | (இலட்சம்) | 900 |
| (2) நடப்படவேண்டிய பரப்பின் அளவு | (ஆயிரம் எக்டேர்). | 36 |



1988-89 ஆம் ஆண்டில் 28—2—1989 வரை கீழ்க்கண்டவாறு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| (1) நடப்பட்ட மரக்கன்றுகள் .. | (இலட்சம்) | 1,097.72 |
| (2) நடப்பட்ட பரப்பின் அளவு .. | (எக்டேர்) | 44,732 |

1989-90 ஆம் ஆண்டிற்கு வனத்துறையினால் நடப்பட வேண்டிய மரக்கன்றுகளின் எண்ணிக்கை 1,080 இலட்சம் என்று குறியீடு அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் மொத்த இலக்கு 2,700 இலட்சம் மரக்கன்று வளர்த்தல்.

11. வனகழகங்கள்.

11.1. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், திருச்சி:

11.1.1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 13–6–1974 அன்று ரூ. 2.00 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் துவக்கப்பட்டது. இதுவரை ரூ. 72.05 இலட்சம் மூலதனம் செலுத்தப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும் தமிழக அரசால் செலுத்தப்பட்டுள்ளது.

11.1.2. இக்கழகத்தின் நிதியாண்டு ஜூலை முதல் தேதியிலிருந்து அடுத்த ஆண்டு ஜூன் முடியும் வரையிலான காலமாகும். 30–6–1988 வரையிலான நிதியாண்டு கணக்கை கழகம் முடிவு செய்துள்ளது.

11.1.3. இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் 73,232.606 ஹெக்டேர் வனப்பகுதி, குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கழகம் 31–12–1988 வரை கீழ்க்கண்ட தோட்டங்களை எழுப்பியுள்ளது:—

யூகலிப்டஸ் ஹைபிரிட் 27305.65 எக்டேர்.

யூகலிப்டஸ் கமால்டூ லென்சிஸ் 14,481.40 எக்டேர்.

முந்திரி 4,573.09 எக்டேர்.

சவுக்குத் தோட்டங்கள் 1,670.80 எக்டேர்.

பலவகை தோட்டங்கள் 3,171.43 எக்டேர்.

சுபாபுல் 254.22 எக்டேர்.

[1989 ஏப்ரல் 20

11.1.4. 1788–89 ஆம் ஆண்டின் இலக்கு மற்றும் சாதனை விவரங்கள்:—

| (1) | இலக்கு (2) | சாதனை. (3) |
|---|---|---|
| | எக்டேரில் | |
| 1 யூகலிப்டஸ் கமால்டு லென்சிஸ் தோட்டங்கள். | 4,609.00 | 3,986.57 |
| 2 சவுக்கு தோட்டங்கள் .. | 270.00 | 222,32 |
| 3 பல்வகை தோட்டங்கள் | 1,400.00 | 997.43 |
| முந்திரி புதியன் பண்ணைகள் .. | 123.00 | 26.64 |
| 5 முந்திரி பகுதிகளில் தீவிர பண்படுத்தும் பணி மேற்கொள்ளுதல். | 6,403.66 | 6,172.43 |

11.1.5. 1989–90ம் நிதியாண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு

| | |
|---|---|
| யூகலிப்டஸ் கமால் லென்தஸ் தோட்டம் .. | 2'322 |
| சவுக்கு தோட்டங்கள் .. | 280 |
| முந்திரி தோட்டங்கள் .. | 407 |
| பல்வகை தோட்டங்கள் .. | 200 |
| தீவிர பண்படுத்தும் பணி .. | 5,465 |

11.1.6. தெக்குபட்டில் உள்ள சந்தன மர உற்பத்தி தொழிற்சாலை 1–12–1984 முதல் குத்தகை அடிப்படையில் வனத்துறையிலிருந்து இக்கழகத்திற்கு மாற்றப்பட்டது. 30–6–1988 அன்று முடியும் ஓராண்டு காலத்தில் 1,247 கிலோ சந்தன மர எண்ணை உற்பத்தி செய்யப்பட்டது ஆனால் இதற்குரிய உற்பத்தி திறன் வருடத்திற்கு 18 டன் ஆகும். இவ்வாண்டில் தொழிற்சாலையின் மொத்த செலாவணி ரூ. 68 இலட்சமாகும். இத்தொழிற்சாலை 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இயங்கவில்லை. 9–3–1988 முதல் ஏற்பட்ட இழப்பின் காரணமாக தொழிற்சாலையில் உற்பத்தி நிறுத்தப் பட்டது. தெக்குபட்டிலுள்ள தொழிற்சாலை மீண்டும் திறக்கும் கருத்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது,

11.1.7. மதுரையிலுள்ள அரக்கு தொழிற்சாலையும் வனத்துறையிலிருந்து இக்கழகத்திற்கு குத்தகை அடிப்படையில் மாற்றப்பட்டதாகும். இத்தொழிற்சாலை ஆல்கஹால் சம்பந்தப் பட்ட பிக்சர் வார்னிஷ், தின்னர், செல்லாக் க்ளுப்ரென்ச் பாலிஷ் முதலானவற்றையும் ஆல்கஹால் சம்பந்தப்படாத பொருட்களான தேன், அரக்கு போன்றவற்றையும் தயாரித்து வருகிறது. 30–6–1988 வரை முடிவுற்ற ஆண்டில் ரூ. 56.00 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது 1986–87-ல் இவ்விற்பனை ரூ. 34.44 இலட்சமாக இருந்தது.



1989 ஏப்ரல் 20]

11.1.8. 1987–88-க்கான வரவு மற்றும் செலவு, 1988–89க் கான திருத்திய மதிப்பீடு, 1989–90க்கான திருத்திய நிதிநிலை மதிப்பீடு ஆகிய விபரங்கள் பின்வருமாறு:—

| வருடம். (1) | வருவாய். (2) | செலவு. (3) | இலாபம். (அல்லது) நஷ்டம். (4) |
|---|---|---|---|
| | | ரூபாய் இலட்சத்தில்) | |
| 1987–88 (சரியான தொகை). | 444.55 | 410.19 | (+) 34.36 |
| 1988–89 (திருத்திய மதிப்பீடு). | 248.02 | 311.35 | (—) 63.33 |
| 1989–90 (நிதிநிலை மதிப்பீடு) | 379.98 | 358.49 | (+) 21.49 |

11.2. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம், பொருளாதார நிலை, எதிர் கால மேம்பாட்டுக்கான வளர்ச்சி வாய்ப்புகள்:

11.2.1. இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையே உருவான சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தத்தை அடுத்து இந்தியா வில் குடியேறிய இந்திய வம்சாவழியினரின் மறுவாழ்வுக்காக தமிழக அரசு செயல்படுத்திய பல திட்டங்களில் நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தோட்டங்கள் உற்பத்தி செய்யும் திட்டம் முக்கியமான ஒன்றாகும். இத்திட்டம் 1968–ல் ஆரம்பித்து 31–3–1976 வரை வனத்துறையால் செயற் படுத்தப்பட்டது. 1–4–1976 முதல் இது ஒரு கழகமாக மாற்றப் பட்டு தனியே இயங்கி வருகிறது.

11.2.2. அகதிகளின் மறுவாழ்வு:

இதுவரை 2325 குடும்பங்கள் இக்கழகத்தில் தொழிலாளி களாக பணிபுரிகிறார்கள்.

11.2.3, தேயிலை தோட்ட உற்பத்தி:

2,760.20 எக்டேர் பரப்பு கொண்ட தேயிலை தோட்டங் களை இக்கழகம் பராமரித்து வருகிறது.

11.2.4. உற்பத்தி மற்றும் விற்பனை:

இக்கழகத்தின் கீழ், சேரங்கோடு, சேரம்பாடி கூனூர் மற்றும் பாண்டியார் ஆகிய நான்கு இடங்களில் தேயிலை தொழிற்சாலைகள் உள்ளன.

[1989 ஏப்ரல் 20

11.2.5. தேயிலை உற்பத்தியும், ஏலத்தில் ஈட்டப்பட்ட வருவாய் விவரமும்.

| வருடம். | அறுவடை செய்யப் பட்ட பசுமை தேயிலை. | உற்பத்திச் செய்யப் பட்ட பதனிட்ட தேயிலை. | பெறப் பட்ட தொகை. | விலை கி லாவிற்கு ஆர்த்த டாக்ஸ். | சி.ட்டி.சி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (கிலோ இலட்சத்தில்). | | (ரூபாய் இலட்சத்தில்). | ரூ. | ரூ. |
| 1986—87 | 213.98 | 50.10 | 1,034.12 | 23.64 | 21.01 |
| 1987–88 | 279.98 | 56.32 | 1,150.72 | 22.46 | 19.95 |
| 1988–89 (ஜனவரி 1989 வரை)— | .. | 27.22 | 595.98 | .. | .. |

11.2.6. ஆண்டு வாரியாக இலாபம் (+) நட்டம் (—) வருமாறு

| வருடம். | வருவாய். | செலவு. | நிகர லாபம் (+) நட்டம் (—) | மொத்த லாபம் (+) நட்டம் (— |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1986—87 | 1,097.17 | 1,054.81 | (+) 92.36 | (—) 89.96 |
| 1987—88 | 1,222.88 | 1,176.13 | (+) 46.70 | (—) 43.26 |
| 1988—89 ]ஜனவரி 1989 வரை) | 595.93 | 693.89 | .. | .. |

11.2.7 தொழிலாளர்களுக்கு கூலி மற்றும் இதர வசதிகள் :—

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் தனது தொழி லாளர்களுக்கு 1–1–1989 முதல் ரூ. 20.38 தினக் கூலியாக வழங்கி வருகிறது.

வேலையில் இருக்கும் பெண்களின் குழந்தைகள் பராமரிப்ப மையங்கள் 8 (எட்டு) நிறுவப்பட்டுள்ளன. அனைத்து தேயிலை தோட்டங்களுக்குமாக சேர்த்து 9 நிரந்தர மருத்துவ மனைகள் பராமரிக்கப்படுகின்றன. நோயுற்ற பணியாளர்களை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்வதற்காக 7 ஆம்புலன்ஸ்] வண்டி களும் கழகத்தில் உள்ளன,



1989 ஏப்ரல் 20]

11.2.8. வருங்கால அபிவிருத்தி திட்டங்கள், புதிய திட்டங்கள்

உற்பத்தி பெருக்கத்திற்காக கழகம் இரு புதிய திட்டங் களை உருவாக்கியுள்ளது.

மண் வளத்தைப் பெருக்கவும், மண் வளப் பணிகளை மேற் கொள்ளவும் நீர்ப்பாசன வசதிகளின் மூலம் உற்பத்திப் பெருக்கத் திற்கு வழி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 77.19 இலட்சம் செலவில் உற்பத்தி பெருக்கத்திற்காக, 285 எக்டேர் பரப்பில் நீர்த்தெளிக்கும் பாசன முறையை கடைப்பிடிக்கவும் 693 எக்டேர் பரப்பில் மண்வளப் பணிகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பகுதி–1. திட்டத்தின்கீழ் தற்போதுள்ள கோட்டங்களை முழுமையாக பயன்படுத்தும் நோக்குடன் 1,000 எக்டேர் பரப் பளவில், ஊடு பயிராக நான்காண்டு காலத்தில் ரூ. 100.23 இலட்சம் செலவில் மிளகு உற்பத்தி செய்ய இத்திட்டம் உரு வாக்கப்பட்டுள்ளது.

11.3. அரசு ரப்பர் கழகம், நாகர்கோயில்.

11.3.1. கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களின் கீழ் 1960 முதல் 1979–80 வரை சுமார் 4,785.7 எக்டேர் பரப்பில் ரப்பர் பயிர் செய்யப்பட்டுள்ளது. 30–9–1984 வரை தமிழக வனத்துறையின் கீழ் அரசு துறையாக இருந்து வந்த இத்தோட்டங்கள் 20–8–1984 அன்று 1956-ம் வருட கம்பெனிகள் சட்டத்தின் கீழ் தனி கழகமாக பதிவுச் செய்யப் பட்டு இயங்கி வருகிறது.

11.3.2. ரப்பர் பால் மற்றும் ஈரக் கழிவு முதலானவை சேகரிக்கப்பட்டு கீரிப்பாறை மற்றும் பெருஞ்சாணியில் உள்ள ரப்பர் தொழிற்சாலைகளுக்கு பதப்படுத்துவதற்காக அனுப்பப் படுகின்றன, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு விடுமுறை தினங்கள் தவிர மற்ற எல்லா நாட்களிலும் ரப்பர் பால் சேகரிக்கும் பணி நடைபெறுகின்றது. பெருஞ்சாணி ரப்பர் தொழிற்சாலை யில் விரிப்பு ரப்பர் ( sheet rubber) மட்டுமே தயாரிக்கப்படு கின்றன. கீரிப்பாறை ரப்பர் தொழிற்சாலையில் பதப்படுத்தப் பட்ட ரப்பர் பால், ரப்பர் விரிப்பு, இ.பி.சி. வகைகள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. கீரிப்பாறை ரப்பர் தொழிற்சாலையில் பதப்படுத்தப்பட்ட ரப்பர் பால் தயாரிப்பிற்காக நான்கு ரப்பர் பால் தயாரிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. மைலார் கோட்டத்தில் ரப்பர் பால் தயாரிக்கும் தொழிற்கூடம் கட்டும் பணி முடிவுற்றுள்ளது.

11.3.3. உலர்ந்த ரப்பரின் மொத்த உற்பத்தி மற்றும் விற்பனை வருமாறு:—

| வருடம். | | | உற்பத்தி அளவு (மெட்ரிக் டன்னில்). | விற்பனை அளவு (மெட்ரிக் டன்னில்). |
|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) |
| 1986–87 | .. | .. | 2,359 | 2,376 |
| 1987–88 | .. | .. | 2,678 | 3,076 |
| 1988–99 | .. | .. | 2,750 | 2,633 (டிசம்பர் 1988 வரை) |

குறிப்பு.—முந்தைய ஆண்டுகளின் இருப்பு அடுத்த ஆண்டின் தொடக்க இருப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

11.3.4. ஆண்டு வாரியாக லாப நஷ்ட விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| வருடம். | | | ரப்பர் விற்பனையின் மூலம் வருவாய். | செலவு | லாபம் (+) அல்லது (நஷ்டம் (—) |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1987–88 | .. | .. | 361.91 | 346.02 | (+) 15.89 |
| 1988–89 (திருத்திய மதிப்பீடு) | .. | .. | 500.33 | 448.59 | (+) 51.94 |
| 1989–90 (மதிப்பீடு). | .. | .. | 530.73 | 509.10 | (+) 21.63 |

11.3.5. இக்கழகத்தில் தொழிற்சாலை பணியாளர்கள் மற்றும் தினக் கூலி பணியாட்கள் உட்பட மொத்தம் சுமார் 2,560 தொழிலாளர்கள் பணியில் உள்ளனர். தொழிலாளர்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்கள் 1988–89 ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டன. இவ்வகையில் மொத்த செலவினம் ரூ. 27.50 இலட்சமாகும். இக்கழகம் ஆரம்பமானபோது





வழங்கப்பட்ட கூலி விவரங்களும் தற்போதைய கூலி விவரங்களும் பின்வருமாறு:—

| | வரிசை எண் மற்றும் விவரம். | 1-10-1884 அன்றைய தினக் கூலி. | தற்போதைய தினக் கூலி. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| | | ரூ. பை. | ரூ. பை. |
| 1 | தொழிற்சாலை பணியாளர்கள். | 20.87 | 27.41 |
| 2 | பால்வடிப்பவர்கள் | 20.42 | 26.91 |
| 3 | களப்பணியாளர்கள் | 20.12 | 26.41 |

11.3.6 தொழிலாளர் நலவாழ்வு வசதிகள்:—

அரசு ரப்பர் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கூலியுடன் கூடிய விடுப்பு மருத்துவ வசதிகள், பேறுகால படிகள், பொழுதுபோக்கு சங்கங்கள், குழந்தைகள் பாதுகாப்பகம் குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி, குடிநீர் வழங்குதல் ஆகிய வசதி வழங்கப்படுகின்றன.

11.3.7 அரசு ரப்பர் கழகத்தின் பள்ளிக்கூடங்களில் பயிலும் குழந்தைகளுக்கு தமிழக அரசின் சத்துணவுத் திட்டம் அமுல் படுத்தப்படுகிறது.

11.3.8 இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் சித்தார் மற்றும் குத்தியார் கோட்டங்களில் ரப்பர் பயிரிடப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இது வரை 285 அகதிகளின் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

11.3.9 1988—89 ஆம் ஆண்டில் 31—12—1988 வரை தொழிலாளர்கள் நலவாழ்வு வசதிகளுக்காக மட்டும் ரூ. 45.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1989—90 ஆம் ஆண்டில் இவ்வகையில் ரூ. 66.74 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது

அதன் விவரம் வருமாறு:—

| | 31–12–88 வரை செலவு. | 1989–90ல் உத்தேச செலவு |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| போனஸ் | 20.38 | 21.85 |
| தொழிலாளர் வசதிகள் | 11.99 | 25.21 |
| மருத்துவமனை, பள்ளிக்கூடம், குழந்தைகள் காப்பகம், பொழுதுபோக்கு சங்கங்கள் பராமரிப்பு, | 1.41 | 2.75 |
| தொழிலாளர் சேமநல நிதி | 11.28 | 16.93 |
| | 45.06 | 66.74 |

[1989 ஏப்ரல் 20

11.3.10. பரளியார், மைலார் மற்றும் மருதம்பாறை கோட் டங்களில் மூன்று ஆரம்ப பள்ளிகூடங்களும், குத்தியார், கீரிப் பாரை மற்றும் சித்தார் கோட்டங்களில் மூன்று நடுநிலைப் பள்ளிக் கூடங்களும் இயங்குகின்றன. இப்பள்ளிக் கூடங்களில் பயிலும் 887 மாணவர்கள் தமிழக அரசின் சத்துணவு திட்டத்தால் பயன் பெறுகின்றனர்.

11.3.11 கீரிப்பாரையில் 10 படுக்கைகள் கொண்ட தோட்ட மருத்துவமனையும் சித்தாரில் 6 படுக்கைகள் கொண்ட தோட்ட மருத்துவமனையும் ஆக இரு மருத்துவமனைகள் உள்ளன. இது தவிர 7 மருந்தகங்களும் உண்டு.

11.3.12. பொது:—

ரப்பர் விற்பனையில் இடைத் தரகர்களை தவிர்ப்பதற் காகவும், அதிக விலை பெறுவதற்காகவும், ரப்பர் தேவைப்படும் தொழிற்சாலைகளுக்கும், அதிக அளவில் ரப்பர் தேவைப்படும் தனியாருக்கும் நேரடியாக ரப்பர் மூலப் பொருட்களை விற்பனை செய்ய கருதப்பட்டுள்ளது.

12. நமது வனச் செல்வங்களின் இயற்கை பாரம்பரியத்தை பாதுகாத்தல்.

12.1. தற்போதைய வனப்பரப்பை அதிகரிக்கின்ற அதே நேரத்தில், இருக்கின்ற வனப்பகுதிகளை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய ஒரு முக்கியமான காலக் கட்டத்தில் நாம் இருக்கிறோம். பரந்துள்ள வனப்பகுதிகள் அபாய மிக்கதாக உள்ளதாலும், வனப்பாதுகாப்பிலும், வனச் செல்வங் களைப் பாதுகாப்பதிலும், ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்குப் போதுமான அளவிற்கு சாதகமான வசதிகள் இல்லாததாலும், வனப்பாதுகாப்பு ஒரு சவாலான பணியாகவும், மிகவும் ஆபத்து நிறைந்ததாகவும் உள்ளது. சமூக விரோதிகள் வனப்பொருட் கள் கடத்தலை ஒரு லாபகரமான வியாபாரமாக்கிக்கொண்டு ஈடுபட்டுள்ளனர். திருட்டு, வனப்பொருட்கள் கடத்தல், வன விலங்குகள் வேட்டை ஆகியவை வெகுவாகப் பெருகிவிட்டன. இது போன்ற சட்ட விரோதமான காரியங்களில் வழக்கமாக ஈடு படுகின்றவர்கள் கிட்டதட்ட முறையில் அச்சுறுத்தும் வண்ணம் செயல்படுகின்றனர். வனவிலங்கு வேட்டை யாடுபவர்கள் வன அதிகாரிகளிடமிருந்து தப்பிக்க பல வழிகளை கையாளுகிறார்கள் இது போன்ற காரியங்களை அவர்கள் முன்கூட்டியே திட்டமிட்டு செயல்படுகின்றனர். இத்தகையோர் எந்தவிதமான விளைவுக்கும் தயாராக உள்ளதுடன் வனப்பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருப்ப வரை கொடிய ஆயுதங்களால் தாக்கவும் அஞ்சுவதில்லை. சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகளையொட்டி, இது போன்ற வன்முறை சம்பவங்களை வனத்துறையினர் அடிக்கடி சந்திக்க



[1989 ஏப்ரல் 20

வேண்டியிருக்கின்றது தற்போதைய வன நிர்வாகமும், வனப் பாதுகாப்பு முறைகளும் 100 ஆண்டுகளுக்கு மேலாகப் பின்பற்றப் பட்டு வருகின்ற பழைய முறையாதலால், இவ்வாறு கடத்தல் மற்றும் வேட்டை போன்ற குற்றங்களில் ஈடுபடுபவரைத் தடுக் கவோ, கட்டுப்படுத்தவோ, எதிர்த்து போராடவோ, போதுமான உபகரணங்கள் இல்லை. வனப்பொருட்கள் கடத்தல், வன விலங்கு வேட்டையாடுதல் போன்ற குற்றங்களை செய்பவர்களிட மிருந்து மட்டுமல்லாமல் வனப்பகுதிகளை ஆக்ரமிப்போரிட மிருந்தும் வனத்தைப் பாதுகாக்க வேண்டியுள்ளது.

12.2 இந்தக் குறைபாடுகளை களைவதற்காக வனப்பாது காப்பு முறைகள் அனைத்தையும் வலுபடுத்த படிப்படியாக திட்டங்கள் வகுக்க கருதப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, 1989–90—ல் 60 வனக்காப்பாளர்களையும், 60 வனக்காவலாளிகளையும் நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள அபாயம் மிகுந்த மற்றும் விரிவான பீட்டுகளை மிகச் சிறப்பான முறையில் பராமரிக்கும் முக்கிய பொறுப்பை மேற்படி பணியாளர்கள் செய்வார்கள்.

13. சட்டவடிவமைப்பு

13.1 இந்த மாநிலத்தில் வனங்களைப் பாதுகாக்கவும் மேலாண்மை செய்யவும் கீழ்க்கண்ட சட்டங்களை நிறைவேற்றி யுள்ளது.

(1) தமிழ்நாடு வனச்சட்டம், 1882.

(2) தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949

(3) தமிழ்நாடு மலைப்பகுதிகள் (மரங்கள் பாதுகாப்பு) சட்டம் 1955.

13.2. 1979 ஆம் ஆண்டில் சில விலை உயர்ந்த மர இனங் களை சில நோக்கங்களைக் கருத்தில் கொண்டு அட்டவணைப் படுத்தப்பட்ட மரங்களாக அறிவிக்கை செய்து தமிழக அரசு சட்டம் எண். 45/79 என்ற சட்டத்தை உருவாக்கியது. தமிழ் நாட்டின் வனங்களிலிருந்து இந்த அட்டவணைப் படுத்தப்பட்ட மரங்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டே இத்திட்டம் அமுலாக்கப்பட்டது. குறிப்பாக காப்புக் காடுகளிலிருந்து கள்ளத்தனமாக மரங்களை வெட்டி அகற்றும் குற்றங்களைத் தடுப்பதற்கு தமிழ்நாடு வனச் சட்டம் 1882-ல் போதிய விதிகள் இல்லாததை கருத்தில் கொண்டும், அதிலுள்ள சில தடைகளை நீக்குவதன் பொருட்டும் சட்டம் எண் 45/79-ல் அட்டவணைப்படுத்தப்பட்ட மர சம்பந்தமான எந்த குற்றங் களுக்கும் கடுமையான தண்டனைகளை உள்ளடக்கி அரசு இதை உருவாக்கியது. இச்சட்டத்தின்படி அட்டவணைப்படுத்தப்பட்ட மர சம்பந்தமான குற்றங்கள் செய்யப்பட்டால் அவர்களை ஜாமீ னில் விடப்படாத மற்றும் பிடியாணையின்றி கைது செய்வதற்

குரிய வழக்காக தீர்மானிக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்
தண்டனை விதிப்படி வழக்கமாகக் குற்றங்களைச் செய்யும் குற்ற
வாளிகளுக்கு அதிக பட்சமாக ரூபாய் 10,000 அபராதமும், அதிக
பட்ச சிறை தண்டனையாக 5 வருடமும் தண்டனை வழங்கப்
படும். மேலும் இச்சட்டத்தின்படி, அட்டவணைப்படுத்தப்பட்ட
மர சம்பந்தமாக பதிவு செய்யப்படும் வழக்குகளைனைத்தும்
தேவையான சட்ட முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டு
வழக்கு மன்றத்தில் வழக்காடப்பட வேண்டுவனவாகும்.

13.3 அரசு காடுகளில் கள்ளத்தனமாக அட்டவணைப்படுத்
தப்பட்ட மரங்களைக் கடத்தல் செய்தால் கடுமையான
தண்டனை வழங்கத் தக்க விதிகளை இச்சட்டம் கொண்டிருந்
தாலும் வழக்கு மன்றங்களில் தற்போது இவ்வழக்கு நடத்து
வதற்குத் தாமதமாவதாலும், குறைந்த அபராதங்களே வழங்கப்
படுவதாலும், இவ்வழக்குகள் திறம்பட வழக்கு மன்றத்தில் நடை
முறைப்படுத்தப்படுவதில்லை. மேலும் கள்ளத்தனமாக மரங்களை
வெட்டுவதைத் தடை செய்வதில் தவிர்க்க முடியாத சில இடர்
பாடுகளை வன அதிகாரிகள் சந்திக்க வேண்டியுள்ளது. உதாரண
மாக 1973-74-லிருந்து 1987-88 ஆம் ஆண்டு வரை கண்டு
பிடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட சந்தன மரக் குற்றங்கள்
இன்னமும் நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளன. இது போன்ற
நிலுவையில் இருப்பதற்குக் காரணம், அட்டவணைப்படுத்தப்
பட்ட மரக் குற்றங்களின் மீது ஒரே மாதிரியான சட்ட நட
வடிக்கை எடுப்பதேயாகும். மேலும் நீதிமன்றத்தில் அளவிட
முடியாத காலதாமத்தினால், முடிவில் குற்றங்களை விரைவாக
வும், சரியாக நிரூபிக்க முடியாமலும், ஆகிவிடுகிறது. மாறாக
கடத்தல்காரர்களையும், குற்றவாளிகளையும் ஜாமீனில்வெளியே
விட்டு விடுவதால் அவர்கள் மறுபடியும் அதே கடத்தலில் தீவிர
மாக ஈடுபட ஏதுவாகிறது.

13.4 இதேபோன்று துறையினரால் எதிர்கொள்ளப்படும்
தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் அரசின் கவனத்திற்குக்
கொண்டு வரப்பட்டு, இந்த அட்டவணைப்படுத்தப்பட்ட மரக்
குற்றங்களை செய்வதற்கு பயன்படும் வாகனங்கள் மற்றும்
கருவிகள் ஆகியவற்றைக் கைப்பற்றிப் பறிமுதல் செய்வதற்கு வன
அதிகாரிகளுக்கு அதிகாரம்வழங்கும் சட்டத்திருத்தத்தை 1882ஆம்
ஆண்டின் தமிழ்நாடு வனச் சட்டத்திற்கு கொண்டுவர திருத்த
மசோதா ஒன்று பரிசீலனையிலுள்ளது.

மேலும் இதே போன்ற குற்றங்களை எல்லாம் நீதி மன்றத்தில்
வழக்காடுவதற்குக் கொண்டு செல்வதற்கு பதிலாக அக்குற்றங்
களை இழைத்தவர்களிடமிருந்து வன அதிகாரிகளே அபராதத்
தினைப் பெற்றுக் கொண்டு விடுவிக்கும் குற்றமாக கொள்வதற்கு
வழிவகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற வனக்
குற்றங்களை செய்பவர்களிடமிருந்து அபராதம் பெற்றுக்கொண்டு
விடுவிக்கும் முறையினால் குற்றங்களை விரைவாக முடிக்க இது
ஒரு சிறந்த வழியாகும். தமிழ்நாடு வனச்சட்டம் 1882-ல் அட்ட



வணைப்படுத்தப்பட்ட மரப்பட்டியலைத் தொடர்ந்து வருங்
காலத்திலும் அமுல் செய்வது குறித்து கடந்த கால அனுபவத்தை
யும் நடவடிக்கைகளையும் கருத்திற்கொண்டு ஆலோசிக்கப்படும்.
மேலும் தமிழ்நாடு வனச்சட்டம் 1882-ல் உள்ள தப்பிக்கும்
வழிகளை நீக்குவதை கருத்தில் கொண்டு, இச்சட்டத்தில் உள்ள
டக்கியுள்ள சில விதிகளை திருத்துவதற்கு முழுமையான மசோதா
வடிவில் திருத்தம் கொண்ட மசோதா ஒன்றை வடிவமைக்க தீர்
மானிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் அரசின் பரிசீலனையில்
உள்ளது.

13.5 தமிழ்நாடு தனியார் காடுகள் (பாதுகாப்பு) சட்டம்
1949 மற்றும் தமிழ்நாடு மலைப்பகுதிகள் (மரப் பாதுகாப்புச்)
சட்டம் 1955:- தனியார் காடுகள் தாறுமாறாக அழிக்கப்படு
வதைத் தடுக்கவும், அக்காடுகளின் வாடிக்கையான நடைமுறை
களிலும் முறையான உரிமைகளிலும் தலையிடுவதைத் தடுப்பதற்
கும் மற்றும் பல நோக்கத்திற்காகவும் இச்சட்டம் (தமிழ்நாடு
தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம்) நிறைவேற்றப்பட்டது.
இச்சட்டத்திற்காக மாவட்ட ஆட்சியாளரால் இம்மாநில தி
லுள்ள 2 ஹெக்டேர் பரப்பிற்கு மேற்பட்டுள்ள நிலங்களைக்
கொண்ட தனியார் காடுகளை வனங்களாக மாவட்ட அரசிதழில்
அறிவித்துள்ள இடங்களனைத்தும் இச்சட்டத்தின் விதிகளுக்கு
பொருந்தும்.

13.6. தமிழ்நாடு மலைப்பகுதிகள் (மரப்பாதுகாப்பு) சட்டம்
1955.

இச்சட்டம் காடுகளை அழிவிலிருந்தும் மண் அரிப்பிலிருந்தும்
காக்கவும் மற்றும் மலைப் பகுதிகளுக்கே உரிய சிறப்பு இயல்பு
களைப் பாதுகாக்கவும் நில அமைப்பு இயற்கை சூழ்நிலை மற்றும்
சுற்றுப்புறச் சூழ்நிலை அழிவிலிருக்து பாதுகாக்கும் பொருட்டும்
தமிழ்நாடு மலைப் பகுதிகள் (மரப் பாதுகாப்பு) சட்டம் நிறை
வேற்றப்பட்டுள்ளது.

13.7. வனக்குற்ற புலனாய்வு பிரிவு

முக்கியமான வனக் குற்றங்களை புலனாய்வு செய்யவும்
வனச் செல்வங்கள் கடத்தலை தடுக்கவும் குற்ற புலனாய்வுத்
துறையின் ஒரு பிரிவு 1983-84ல் வனத்துறையில் அமைக்கப்
பட்டது. ஜூன் 1984 முதல் ஒரு காவல்துறை துணைத்தலைவர்
(ஏப்ரல் 1986-ல் காவல்துறை தலைவராக பதவி உயர்த்தப்
பட்டது), இரண்டு காவல் கண்காணிப்பாளர் மற்றும் 50
சார்நிலை பணியாளர்களுடன் இக்குழு அமைக்கப்பட்டு இயங்கி
வருகிறது. 1—4—1988 முதல் 31—12—1988 வரையிலும்,
ரூ. 19.58 லட்சம் மதிப்புள்ள வனப் பொருட்கள், 64 வழக்கு
களில் கைப்பற்றப்பட்டன. இதில் சந்தன மரத்தின் மதிப்பு
மட்டும் ரூ. 11.58 லட்சமாகும். பாம்புத் தோல்களின் மதிப்பு
ரூ. 5.62 லட்சமும் மற்றும் இதர பொருட்கள் மதிப்பு ரூ. 2.68
லட்சமும் அடங்கும். குறைந்த மதிப்புள்ள சிறு குற்றங்கள்

வனத்துறைக்கு புலனாய்வு மற்றும் மேல் நடவடிக்கைக்கு மாற்றப்பட்டன. அதைப் போலவே முதன்மை வனத்துறைத் தலைவர் 34 வனக் குற்றங்களை புவனாய்வு செய்ய இந்த பிரிவுக்கு மாற்றியுள்ளார். 18 குற்றங்கள் வழக்கு விசாரணையிலும், 16 குற்றங்கள் புலனாய்விலும் உள்ளன.

13.8 தகவல் தொடர்பு அமைப்பை நவீனமாக்குதல்

பாதுகாப்பு பணிகளை மேலும் சிறப்பாக செய்யவும், வனச் செல்வங்களை பாதுகாக்கவும், யானை வேட்டை, சந்தன மரங்கள் வெட்டுகள் முதலியவைகளை தீவிரமாக கட்டுப்படுத்தவும், உடனுக்குடன் தகவல்கள் தெரிவிக்கவும், ஒருங்கிணைந்த செய்தி தொடர்பு அமைப்பு (உயர்வேக மின் அலை தொடர்பு வசதி) ஒவ்வொரு கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி முதல் கட்டமாக 18 உயர்வேக மின் அலை தொடர்பு வசதி சுமார் ரூ. 16.46 லட்சம் செலவில் நீலகிரி மாவட்டத்தில் 1986–87-ல் நிறுவப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக சுமார் ரூ. 4.96 லட்சம் செலவில் 7 நிலையான (static station) நிலையங்கள் தர்மபுரி, சேலம் மற்றும் ஒசூர் கோட்டங்களில் 1988-ல் நிறுவப்பட்டுள்ளன. மேலும் மூன்றாவது கட்டத்தில் விலை மதிப்புள்ள வனச் செல்வமான சந்தன மரங்கள் நிறைந்துள்ள வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது குன்றுகளில் நிறுவவேண்டி பரிசீலனையிலுள்ளது. இதே போல் நாளடைவில் படிப்படியாக மற்ற வனப் பகுதிகளிலும் உயர் வேக மின் அலைத் தொடர்பு வசதி விரிவு படுத்தப்படவுள்ளது.

13.9 சந்தன மரக் கடத்தல்

சந்தனம் மிகுந்த விலை மதிப்புள்ள வனப் பொருளாகும். உயர்ந்த விலை மதிப்பின் காரணமாக சந்தன மரக் கடத்தல் பெருகி வருகிறது. 1988-89-ல் ஜனவரி 1989 வரை ரூ. 113.33 லட்சம் மதிப்புள்ள 1.3 மெட்ரிக் டன் எடையுள்ள சந்தன மரங்கள் கடத்தப்பட்ட 541 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டன. இக்குற்றங்களில் கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 1,174. மேலும் 106 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

13.10. குற்றங்கள் கண்டுபிடித்தது

1988—89 ஆம் ஆண்டில் ஜனவரி 1989 முடிய 23,699 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 26.35 லட்சம் இணைக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. 1,262 குற்றவாளிகள் மீது வழக்குத் தொடரப்பட்டது.

41. பாராட்டுக்குரிய சேவை புரிந்த வனக் களப்பணியாளர்கள்.

14.1. 26—1—1989 அன்று நடைபெற்ற குடியரசு தினவிழாவில், வன செல்வத்தைக் காப்பதற்கு, வீரச் செயல் புரிந்து உயிர்நீத்த திரு. வி. சிதம்பரம், வனச்சரகருக்கு அண்ணா நினைவு பரிசு வழங்கப்பட்டது.



14.2. இந்திய அரசும் மேற்குறிப்பிட்ட கடமையைச் செய்து வீரமரணம் அடைந்த திரு. வி. சிதம்பரம் சரகரின் வீரத்தை கௌரவிக்கும் வகையில் "சௌர்ய சக்ரா" விருது வழங்கியுள்ளது.

14.3 கடத்தல், வேட்டையாடுதல், திருட்டு வெட்டுக்கள் போன்ற சமூக விரோத சக்திகளினால் வனச் சொத்துக்களுக்கு ஏற்படும் ஆபத்திலிருந்து விலை மதிக்க முடியாத வனச் செல்வங்களை பாதுகாக்க எத்தகைய முயற்சியும் விட்டு வைக்கப்படுவதில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் வனச் சிப்பந்திகள், பழிபாவங்களுக்கு அஞ்சாத, சட்டத்தை மதிக்காத குற்றவாளிகளிடமிருந்து வனச் செல்வத்தை காப்பதில் தங்கள் உயிரையும் பணயம் வைக்க நேர்ந்துள்ளது. 1988-ல் 3 வனக் காப்பாளர்களும், ஒரு வனக் காவலரும் கடத்தல்காரர்களால் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டார்கள்.

14.4. ஊழியர்கள் தாக்குதலுக்குட்படுதல், காயமேற்படுதல் போன்றவை பொதுவான நிகழ்ச்சியாகியுள்ளது. கடந்த வருடம் இரண்டு சரகர்கள், 5 வனவர்கள் உட்பட 25 அதிகாரிகள் தாக்குதலுக்குட்பட்டு காயமடைந்தனர். கொள்ளையர்கள் மற்றும் கடத்தல்காரர்களால் களப்பணியாளர்கள் இரக்கமற்ற முறையில் கடுமையான தாக்குதலுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் இத்தகைய கடும் கைகலப்பில் வனச் சிப்பந்திகளுக்கு உடல் ஊனம் மற்றும் இயங்கா நிலைமையும் ஏற்படுவதுண்டு. சமீப ஆண்டுகளில் இதுபோன்ற 17 நிகழ்வுகளில் வனச் சிப்பந்திகள் மிருகத்தனமாக தாக்கப்பட்டதில் இரண்டு களப்பணியாளர்கள் உடல் ஊனமுற நேர்ந்துள்ளது.

15. வரவு-செலவு மதிப்பீடு:

துறையின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு பற்றிய விவரங்கள் கீழ் வருமாறு:

| கணக்குத் தலைப்பு விவரங்கள். | கணக்குகள் 1987-88. | திட்ட மதிப்பீடு 1988-89: | திருத்த மதிப்பீடு 1988-89. | திட்ட மதிப்பீடு 1989-90. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. 2059. பொது பணிகள் | 0.38 | 0.50 | 0.50 | 0.50 |
| 2. 2225-ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஏனைய பிற்பட்ட வகுப்பினர் நலன் | 12.35 | 11.10 | 12.83 | 12.21 |
| 6. 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும். | .. | 0.01 | 0.01 | 0.01 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 4. 2402. மண்வள நீர்வளப் பாது காப்பு. | 42.35 | 52.37 | 57.43 | 58.15 |
| 5. 2406. காடு வளர்ப்பும் வன விலங்கும். | 2,231.33 | 1,742.17 | 1,783.22 | 1,880.74 |
| 6. 2407. மலைத் தோட்டங்கள். | 1.01 | 1.32 | 1.55 | 1.40 |
| 7. 2415. வேளாண்மை ஆராய்ச்சி கல்வி. | 22.51 | 29.64 | 26.36 | 27.86 |
| 8. 2551. மலைப் பகுதிகள். | 40.69 | 68.60 | 55.47 | 55.20 |
| 9. 4235. சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு. | 6.92 | .. | .. | ... |
| 10. 4402. மண்வள நீர்வள பாதுகாப்புக் குறித்த மூலதனச் செலவு. | 100.23 | 114.55 | 112.92 | 94.37 |
| 11. 4406. காடு வளர்ப்பு, வன விலங்கு குறித்த மூலதனச் செலவு. | 1,670.30 | 1,960.26 | 1,642.11 | 1,863.93 |
| 12. 4407. மலைத் தோட்டங்கள் குறித்த மூலதனச் செலவு. | 7.16 | 5.65 | 30.65 | 5.65 |
| 13. 4415. வேளாண்மை ஆராய்ச்சி— கல்வி குறித்த மூலதனச் செலவு. | 19.43 | 22.10 | 20.00 | 33.10 |
| 14. 4551. மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு. | 228.34 | 300.86 | 317.19 | 332.62 |
| மொத்தம் .. | 4,383.00 | 4,309.13 | 4,060.24 | 4,365.74 |





16. முடிவுரை.

16.1 பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளை மண்ணின் வளத்தை முழுமையாக சரியான அளவில் பயன்படுத்தி மனித நலத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே பொதுவான நறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

16.2 மனித குலம் வாழும் உரிமை மட்டுமின்றி தொல்லை ன், நோய் மற்றும் ஏமாற்றங்களற்ற தரமான வாழ்க்கையைப் பெற உரிமையுடையது. நல்ல தரமான வாழ்க்கை அமைய வேண்டுமானால் மனித இனத்தைச் சூழ்ந்துள்ள இயற்கைச் சூழல் மநிலை, சுற்றுச் சூழல் ஸ்திரத்தன்மை ஆகிய அம்சங்களை நிகவும் சார்ந்துள்ளது.

16.3 இந்திய அரசு வகுத்துள்ள தேசிய வனக் கொள்கை 988-ன் முக்கிய அம்சங்களைப் பின்பற்றி, சுற்றுச்சூழல் ஸ்திரத் தன்மையை திறமையுடன் நிர்வகிக்கும் நோக்கத்தை எய்துவதுடன் இயற்கை வளங்களான காடுகளின் பயனைத் தொடர்ந்து பெற்று ஏழை எளியோர் வாழவும், அவர்கள் வாழ்க்கை நிலையை உயர்த்தவும் உதவும் வகையில் நமது அரசு முழு முயற்சியுடன் செயல்படும்.

144362
D
V 211,3...
N89...